T.11222

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று
மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

இருபதாந்தொகுதி.

VOL-XX.

பத்திராதிபர்:—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்
பதிப்பு.
1921–1922.

செந்தமிழ்

இருபதாந்தொகுதியின் உள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அசதிக்கோவை:—	ஸ்ரீமத். P. C. புன்னைவனநாதமுதலியாரவர்கள்.	கஉங
அந்தணரென்போர்யாவர்?:—	,, T. V. சாமிநாதையரவர்கள் B A, L T.,	உஉஉ
அநுதாபக்குறிப்பு:—	பத்திராதிபர்	கசள, ஙஙஅ, சகள
அல்குல்:—	ஸ்ரீமத். ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளையவர்கள்.	கஉடு
ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:—		ஙஐஅ
எண்ணெழுத்திகழேல்:—	ஸ்ரீமத். T. V. சாமிநாதையரவர்கள் B.A., L.T.,	கடுள
ஐயினுஃ:—	,, சி. சிவசங்கரையரவர்கள்	ஙஙள
ஐயினுவுக்குவிடை:—	,, K. G. சேஷையரவர்கள்	ஙகக
கெடு	,, சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள்.	ஙகூச
ஒரு குறிப்பு:—	உதவிப்பத்திராதிபர்	உஎங
கெடு	ஸ்ரீமத். பண்டித-மயில்வாகனமவர்கள்	சஙஐ
ஒருதிருத்தம்:—	உதவிப்பத்திராதிபர்	ககசு
ஒருவிளம்பரம்:—	ஸ்ரீமத். R. வேங்கடாசலம்பிள்ளையவர்கள்.	கூடு
ஓரையாீக்கம்:—	,, T. N. அப்பனையங்காரவர்கள்.	ஙகூஉ
கடவுட்பிரார்த்தனைக் கவி:—	,, V. P. சுப்பிரமணிய முதலியாரவர்கள்.	ஐ ஙஙள
கந்தியார்:—	பெயர்விழையான்	ககசூ
கலித்தொகைஐயாீக்கம்:—	ஸ்ரீமத். சே. சிவஞானம்பிள்ளையவர்கள்.	ஙஉச
கவித்தன்மை:—	,, சி. கணேசையரவர்கள்	உஎகூ
களப்பாள்கள்:—	,, தி. ந. சுப்பிரமணியம் அவர்கள்.	ஙடுசு
களப்ரரும் சங்ககாலமும்:—	,, K. G. சங்கரையரவர்கள்	சசக
காக்கைசிறுபாடினியனார்:—	பெயர்விழையான்	டுடு
கிலத்து (பரிசில்விடை):—	உதவிப்பத்திராதிபர்	டுஙஉ
கிழவோனெனலுஞ்சொன் முடிபு:—	ஸ்ரீமத். ம. ந. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள்.	கஙஙஉ
முனனதன் எதிருரை:—	பத்திராதிபர்	கஙஙஉ

கீதாஞ்சலி:— ஸ்ரீமத். R. R. குணரத்நம் B.A. அவர்கள். உகஅ

குமாரசுவாமிப்புலவர்:— ,, சு. கந்தையபிள்ளையவர்கள். கசள

ஷெ ,, சி. கணேசையரவர்கள். கருங

குறும்பூர்ச்சாசனங்கள்:— ,, ஆ. மா. சடகோபராமாநுஜாசாரியர், கசுச, உச0

கூட்டுறவுப்பண்டசாலே:— ,, K. C. வீராசாகவையரவர்கள் M.A. L.T. சுச

கேசவப்பெருமாள்வண்ணம்:— உதவிப்பத்திராதிபர். க0

கோனசீமைத்திராவிடப் பிராமணர்கள்:— ஸ்ரீமத். K. C. வீராசாகவையரவர்கள் M A., L.T. சஅக

சிருங்கேரிமடம்:— ,, R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L. கசுஉ

சிற்சராய்ச்சி:— பெயர்விழையான் நி0ங

சோதிடக்குறிப்புகள்:— ஸ்ரீமத். R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L., ங்கூ

சோழன்மணக்கிள்ளி:— ,, சோமசுந்தரதேசிகரவர்கள் சங

ஷெ ,, T. N. அப்பனையங்காரவர்கள் க0க

தமிழ்க்கல்விவளர்ச்சி:— ,, சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள். ங்சநி

தமிழ்மொழிக்கு வடமொழி செவிலித்தர்யாகுமா?:— ,, சு. இராஜையனரவர்கள் ங்கூள

தமிழ்வரலாறு:— ,, K. S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள். க

தமிழ்வரலாறு (முற்பாகம்):— பத்திராதிபர் கூசு

தமிழ்வரலாறு (பிற்பாகம்-முற்பகுதி):— ஷெ உஉக

தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:— ங்கஉ

தனித்தமிழ்ப்பரீக்ஷாவிதி:— கஉள

தனிப்பாடல்:— ஸ்ரீமத். V. P. சுப்பிரமணியமுதலியாரவர்கள். அஅ

திருமூருகாற்றுப்படையாராய்ச்சி:— ஸ்ரீமத். சு. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் உசநி

தொல்காப்பிய ஆராய்ச்சி:— ,, K. S. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள். உசுநி, சகுச

தொல்காப்பியப்பொருளதிகார ஆராய்ச்சி:— பத்திராதிபர். கஅச

நடராஜையரவர்கள்:— ஸ்ரீமத். R. நிம்மப்பையரவர்கள். ங்கூஎ

நந்திக்கலம்பகம்:— ,, T. R. கோபாலஸாமியவர்கள். ங்கூச

நல்லந்துவனர் சோதிடப் பொருத்தமும் காலமும்:— ,, சோமசுந்தரதேசிகரவர்கள். கஅஉ

பஞ்சசித்தாந்திகா:— ,, R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L. நிஉ, ககள

பல்காப்பியனர்:— பெயர்விழையான். க0ள

பல்காயனர்:— ஷெ க0அ

பல்லவர்கோயில்கள்:— ஸ்ரீமத். தி. நா. சுப்பிரமணியம் அவர்கள். களசு, கஅசு, உருரு, உஅள

பழந்தமிழ்நூற்சொல்:— ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ருக

பாணினீயலகுதீபிகை:— ,, S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L. ருகரு, சஉக

பிந்துமதி:— ,, T. N. அப்பனைய்ங்காரவர்கள். சஅரு

பிழைதிருத்தம்:— பத்திராதிபர். கரிரு, உகள

புத்தகமதிப்புரை:— பத்திராதிபர். சஅ, கஉரு, கரிரு, உளரு, ருசo, சகரு

புரூரவசரிதை:— உதவிப்பத்திராதிபர். ககக, கசஉ, கரூரு உஉசு, உஅரு, ருகள, ருரிள, சளசு

புலவர்சம்மானம்:— ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். சகரு

பூஞ்சோலைகாவலன்:— ,, பண்டித-மயில்வாகனமவர்கள். ருoக

பெரியபுராணச்செய்யுட் டொகை யாராய்ச்சி:— ,, சோமசுந்தரதேசிகாவர்கள். ருஉக, சகரூ

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 21-ம் வருடக்கொண்டாட்டம் உதவிப்பத்திராதிபர். சசரு

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் இருபத்தோராம் வருடக் கொண்டாட்ட மங்களவாழ்த்து:—

ஸ்ரீமத். சே. ரா. சுப்பிரமணியக்கவிராயவர்கள். சரிச

,, கூ. நல்லசிவன்பிள்ளைபவர்கள் சரிச

,, M. K. M. அப்துல்காதிறுராவுத்தரவர்கள். சரிசூ

,, நா. கனகராஜையரவர்கள் சரிள

,, சர்க்கரை இராமசாமிப்புலவரவர்கள். சசுஉ

,, K. S. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள். சசுரு

,, ஆ. சு. ஷ்ப பாலசுப்பிரமணியஐயரவர்கள். சசுரி

,, தரு. ஞா. சண்முகத்தம்பிரான் அவர்கள். சசுசூ

மதுரைத்தமிழ்ச்சங்கநிர்வாகஸபைத்தீர்மானங்கள்:— சள, உளரி, ருசரு சகஅ, சசுள

மலேனன்மணியம்:— ஸ்ரீமத். S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L., கூள

கை பத்திராதிபர் உகள

முத்திநெறி:— ஸ்ரீமத். ப. சி. சிவப்பிரகாசம்பிள்ளை யவர்கள். உசுகூ, நுஎடு

மேற்றிசைச்செல்வம்:— ,, பண்டித-மயில்வாகனமவர்கள் நுஅக, சசுகூ

யாப்பருங்கலக்காரிகை யுரைத்திருத்தம்:— ,, சி. கணேசையரவர்கள் நுறo

யாப்பறிபுலவோர்நீப்பரு விருந்து:— பெயர்விழையான் களக

வடசொல்:— ஸ்ரீமத். சி. கணேசையரவர்கள் உளள

வடமொழிதென்மொழி:— ,, வ. மு. இரத்தினேசுவரைய ரவர்கள். அச

வடமொழி முதுமொழியன்று:— ,, சி. கணேசையரவர்கள். சஅஅ

வரவேற்புச்செய்யுள்:— திருவங்தைவாசல் கூஅ

விஞ்ஞானதீபம்:— ஸ்ரீமத். பண்டித-மயில்வாகனம் அவர்கள். சநுக

விளம்பரம்:— நுசுசு

வேள்விக்குடிச்செப்பேடுகள்:-ஸ்ரீமத் K. G. சங்கரையரவர்கள் உoடு

வேள்விக்குடிச்செப்பேடுகளில் காணப்படும் பாண்டிய வம்சம்:— ,, ஷ சசநு

ஸம்ஸ்கிருதவ்ருத்தமஞ்ஜரி:- ,, R. S. நாராயணஸ்வாமிஐயரவர்கள் B.A., B.L., நுநுநு, நுசுள

இத்தொகுதியில் வெளிவந்தநூல்கள்:—

(முற்றுப்பெற்றவை)

1. இராமோதந்தம்:—ஸ்ரீமத் அ. முமாசுவாமிப்பிள்ளைபவர்கள். பகுதி-நு

2. பழமொழிமூலமு முரையும்:— (இரண்டாம்பகுதி—இரண்டாவது நூறு.) } பத்திராதிபர். பகுதி-நி,ள

(முற்றுப்பெறாதது)

1. கூடற்புராணம்:— உதவிப்பத்திராதிபர். பகுதி-அ, கூ, கo, கக, கஉ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஎ.] தர்மதி-ஹெ கார்த்திகை-மீ [பகுதி க.
Vol. XX. November—December—1921. No. 1.

தமிழ்வரலாறு*

செய்யுளுறுப்பு:—இனி யாப்பிலக்கணம் எனப்படுவதை ஆராய்வாம். தொல்காப்பியரியற்றிய செய்புளியலுக்குப் பிறகியாய் இக்காலத்துப் பெரும்பாலும் கற்கப்படுவது அமிதசாகர் இயற்றிய யாப்பருங்கலக்காரிகையே. தொல்காப்பியர் வனட்பினையும் இருபத்தாறு உறுப்புக்களையும் செய்யுளியல் முதற்சூத்திரத்திற் கூறுகின்றனர். "யாப்பியல் வகையின்—ஆறு தலையிட்ட அந்நா லிலந்தும்" என்ற சூத்திரத்திற் சொல்லியிருப்பது அதைக் காட்டும். யாப்பருங்கலக்காரிகையுடையார் வனப்பொடு செய்யுளுக்குப் பதினேராறுப்புக்கொண்டனர்.

> "எழுத்துப் பதின்மூன் றிரண்டசை சீர்முப்ப தேழ்தலையைந்
> திழுக்கி லடிதொடை நாற்பதின் மூன்றைந்து பாவினமூன்
> றெழுக்கிய வண்ணங்கள் நூறெண்ப தொண்பொருள் கோளிருமூ
> வழுக்கில் விகாரம் வனப்பெட்டி யாப்புள் வகுத்தனவே"
>
> (யாப்பருங்கலக்காரிகை.)

இவற்றில், தொல்காப்பியர் உறுப்பு எனக் கொண்டவை* எழுத்து, சீர், பாவினம், பொருள்கோள், விகாரம் என்பன அவர் செய்யுளுறுப்பெனக் கொள்ளாதவை. "மாத்திரை யெழுத்திய லசைவகை யெனு" என்னும் செய்யுளியல் முதற்சூத்திரவுரையில் பேராசிரியர் தலையைப் பற்றிச் சொல்லுவதாவது:—"மற்று யாத்தசீரேயடியாப்பென்ற தென்னை? தலையென்பதோருறுப்புப் பிறர் வேண்டுபவாலெனின், இவருஞ் சீரது தொழிலே தலையெனவேண்டுப, தலைத்தலிற் றலையாதலானும் வேறு

* இது ராவ்பஹதூர் கே. எஸ். ஸ்ரீநிவாஸ பிள்ளையவர்கள் எழுதிப்புத்தகமாக அச்சிட்டுவரும் தமிழ் வரலாற்றின் முதற்பாகத்திடையே யுள்ள தொருசிறு பகுதி.

பொருளெனவேண்டாரென்பது; என்றூர்க்கு அசையின்றிச் சீருமில்லை. சீரின்றி அடியுமில்லையாம்பிறவெனின், அற்றன்று, உறுப்பும் உறுப்பு டைச்செய்யுளும்போல அவை கொள்ளப்படும்; தனியென வேறொன்றின் மையான்....." என்பது. நச்சினர்க்கினியர் சொல்வது,—"இவ்வாசிரி யர் தனியை உறுப்பாகக்கொள்ளாதது என்னையெனின்:—தனியாவது சீரினதுதொழிலாய்ப் பாக்களின் ஓசையைத்தட்டு இருசீரிணைந்ததாகும்; அவ்வாறிணைந்த இருசீரினையும் ஆசிரியச்செல்லாம் இருசீர்க்குறளடியென அடியாகவே வகுத்துக்கொண்டாராதலின், தனியென வேறோருறுப்பின் றும் * * * *." என்பது. இனத்தைப்பற்றித் தனியே எழுதுவதால் ஈண்டு ஒன்றும் விவரிக்கவில்லை. தொல்காப்பியர் பொருளையும் பொருள் கோளையும் வெவ்வேறாகக்கொண்டு பொருள்கோளைச்சொல்லதிகாரத்தின் பாற்படுத்தினர். "நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று - அவை நான் கென்ப மொழிபுண ரியல்பே" என்னும் எச்சவியல் எட்டாஞ்சூத்தி ரம் இதை விளக்கும். விகாரத்தை எழுத்ததிகாரத்தின்பாற்படுத்தினர். விகாரத்தைச் செய்யுளுறுப்பென்றல் பொருந்தாதென்பது அவர் கொள் கைபோலும்! யாப்பருங்கலக்காரிகையுடையார் விகாரத்தோடு வகை யுளி, வாழ்த்து, வசை, குறிப்பிசை முதலியவற்றையுங் கூட்டிக்கூறினர். வகையுளி என்பது சேலகிடுவதில் ஒரு பேதம். அது சீரின்பாலடங் கும். வாழ்த்து வசை குறிப்பிசையென்பன தொல்காப்பியர் செய்யு ளுறுப்பெனக்கொண்ட பொருளில் அடங்கும். வனப்பு என்று காரிகை யுடையார் கூறுவது பாவின்பால் அடங்குமென்னலாம். இவைகளைத் தொல்காப்பியர் செய்யுளியலிற் சொல்லுகின்றனர். ஆயினும் உறுப் பெனக் கொள்ளவில்லை. காரிகையுடையார் தொல்காப்பியரோடொப்ப உறுப்பெனக் கொண்டவைகளிலும் வேறுபாடு காணப்படும். உதாரண வாய்பாட்டால் நேர் நிரை நேர்பு நிரைபு என நான்கசைகொண்டனர், பிற்காலத்தார் பலர் நேர் நிரை யென்னும் இரண்டசையேகொண்டனர்.

இனி, செய்யுளுறுப்பெனப்படும் பாவினத்தை ஆராய்வாம். செய் யுள் என்பது பாச்செய்யுள், உரைச்செய்யுள், நூற்செய்யுள் என மூவ கைப்படும். தொல்காப்பியர் பாச்செய்யுள் என்றது அகவற்பா, வஞ்சிப்பா, வெண்பா கலிப்பா என்பனவாம். தாழிசை, துறை, விருத்தம் என் னும் இனம் அதில் அடங்காது எனக்கொண்டனர். பேராசிரியர் "அவ் வியலல்லது பாட்டாங்குக் கிளவார்" (செய்—அசு) என்னுஞ் சூத்திர

வுரையில் "அல்லதூஉம் மாணாக்கன் இதன் முதனூல் செய்த ஆசிரியன் பண்ணுந் திறனும் பகுத்தானைக் கண்டு இவற்றையும் பாவும் இனமு மாகப் பகுத்தான்கொல் என்று ஐயுறுமைவிலக்கி இயல்நூலுள் அவ் வாறு கூறிற்றிலன் எனச் சொல்லினுன்" என்றும் "அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே" (செய்-ஈடு) என்னுஞ்சூத்திரவுரையில் தலையிடை கடைச்சங்கத்தாரும் பிறசான்றோரும் நாற்சீரடியான்வரும் ஆசிரியமும் வெண்பாவும் கலியுமே பெரும்பான்மையுஞ் செய்தார்; வஞ்சிப்பா சிறு வரவிற்றெனக் கொள்க" என்றும் எழுதியிருப்பது 'அகத்தியர் தொல் காப்பியர் இருவர்க்கும் இனம் உடன்பாடன்று' என்றுகொள்வது அவ ரதுகொள்கை என்பதைக் காட்டும். நச்சினர்க்கினியர் " இழுமென் மொழியான் விழுமியது நுவலினும் " (செய்-உஈ அ) என்னும் சூத்திர வுரையில், "சிந்தாமணி முதலியன பாவிற்கினமாகிய துறையும் விருத்த மும் பற்றிச்செய்தனவென்பார்க்கு அப்புலவர் செய்யுட்செய்கின்றகாலத் திற்குநூல் தொல்காப்பியமாயவாறும், அவர் இனம் கொள்ளாதவாறும், அவ்வினங்கள்தாம் இலக்கணக் குறைபாடையவாறும் கொச்சகம்போற் சிறப்பின்மையும் முன்னர்விளங்கக் கூறியவற்றைக்கொண்டும் பின்பு செய்தநூல்கள் முன்புசெய்தசெய்யுட்கு விதியாகாதவாறுங்கொண்டு மறுக்க. பின்னோர் தாம்செய்த நூல்கட்கு அவை உதாரணமாகக்காட் டலின் அச்செய்யுள் அந்நூல்கட்கு முன்னியவாறும் உணர்க. இனித் தொல்காப்பியனுரை யொழிந்த ஆசிரியர் பதினெருவருட் சிலர் இனமும் கொண்டார். அதுபற்றி யாப்பருங்கலம் முதலியவற்றினும் இனம் கொண்டார் என்பார்க்கு அவர்கள் அகத்தியனுர்க்கு மாறுக நூல் செய்தவ ராவர். அவை வழிநூலெனப்படாவென்று மறுக்க" என்றும், " ஆவ் வியல் பல்லது பாட்டாங்குக் கிளவார் " (செய்-அசு) என்னும் சூத்திர வுரையில் "ஆங்கு" என்றது அகத்தியனே. * * *. முதனூலாசிரியர் இசைக்குப் பண்ணுந் திறனும் பகுத்தாற்போல, இயற்குப் பாவும் இன மும்பகுத்தார்கொல் என்னும் ஐயம் நீக்குவதூஉ மாம். இவர் கருத் தால் சான்றோரும் இனம் கொள்ளாராயினர்" என்றும், சீவகசிந்தாமணி "மூவா முதலா வுலகமொருமூன்றுமேத்த" என்னும் கடவுள்வாழ்த்துச் செய்யுள் உரையில், " இனி இத்தொட்நிலைச்செய்யுளை இனமென்ப. அந்நூல்கள் இனமென்று காட்டிய உதாரணங்கள் தாம் அவர் சேர்த்த அவ்வப்பாக்கட்கே இனமாகாது ஒழிந்தபாக்கட்கும் இனமாதற்கு ஏற்ற வானும், துறையை விருத்தமாகவும் தாழிசையை விருத்தமாகவும் ஓது

தற்கு அவை ஏற்றமையானும் "மூவாமுதலா" என்னுங்கவிமுதலியன தாழம்பட்ட ஓசையான் விருத்தமாயும், சீர்வரையறையானும் மிகத் துள்ளிய ஓசையானுந் துறையாகியும் கிடத்தலின் இதனை விருத்தக் கலித்துறையெனல்வேண்டும்; அது கூறவே துறையும் விருத்தமும் எனப் பகுத்தோதிய இலக்கணம் நிரம்பாதாமாகலானும் இனம் என்றல் பொருத்தமின்று. இச்செய்யுட்களின் ஓசை வேற்றுமையும் மிக்கும் குறைந்தும்வருவனவுங் கலிக்கே யேற்றலின் கொச்சகமென்றடங்கின" என்றும் எழுதியிருப்பது அவர்கொள்கையும் போசிரியர் கொள்கையோ டொத்ததே என்பதைக்காட்டும். "தரவின் றுகித் தாழிசை பெற்றும்" (செய்-கசசு) என்னும் சூத்திர வுரையிற் போசிரியர் நச்சினர்க்கினிய ரிருவரும் இனம் கோடற்குரியதன்றென்று விரிவாய் எழுதியிருக்கின்ற னர். இன்னும் பல இடங்களிலும் எழுதியிருக்கின்றார்கள்.

அவர்கள் சொன்னதற்கு மாறாய் உரையாசிரியர் எனப் பெயர்பெற்ற இளம்பூரணர் இனத்தையொப்புக்கொண்டு தொல்காப்பியர் சூத்திரம் செய்திருப்பதாய்ச் சொல்வர். "பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்-பாட்டி னியல பண்ணத்தி யியல்பே (கஅ0) "அதுவே தானும் பிசி பொடு மானும்" (கஅக) "அடிநிமிர் கிளவி யீரா றுகும்" (கஅஉ) என் னும் செய்புளியற் சூத்திரங்களின் உரையில், பின்கண்டவாறு எழுதி யிருக்கின்றனர். அது "பண்ணத்தி பகுதிபடுமாறுணர்த்துதல் நூத லிற்று. பண்ணத்தி எனினும் பாவினம் எனினும் ஒக்கும் * * * * இதனுட் சொல்லியது இருசீரடிமுதலிய எல்லா அடிகளாலும் மூவடிச் சிறுமையாக ஏறிவரும் பாவினம் என்றவாறும். பன்னிரண்டாவன: ஆசிரியம், வஞ்சி வெண்பா கலியெனச் சொல்லப்பட்ட நான்கு பாவினுந் தாழிசை துறை விருத்தமென்னும் மூன்றினத்தையு முறஓப் பன்னி ரண்டாம். அவற்றுள், தாழிசையாவது: ஆசிரியத்தாழிசை, வஞ்சித் தாழிசை, வெண்டாழிசை, கலித்தாழிசை என நான்காம். துறைபாவது: ஆசிரியத்துறை, வஞ்சித்துறை, வெண்டுறை, கலித்துறை என நான் காம். விருத்தமாவது: ஆசிரியவிருத்தம், வஞ்சிவிருத்தம், வெளிவிருத் தம், கலிவிருத்தம் என நான்காம்" என்பது. இச்சூத்திரங்கட்கு நச்சி னர்க்கினியர் உரை கிடைத்திலது. போசிரியர் இளம்பூரணர்க்கு முற்றும் மாறாய் எழுதுகின்றனர். பண்ணத்தி என்பதைப் பாவினம் என்று பொருள்படுமென்று அவர் கொள்ளவில்லை. காக்கைபாடினியர்

அவிநயர் முதலிய சிலர் இனத்துக்கு இலக்கணநூல் அமைத்தனரேனும், அக்காலத்துச் சான்றோர் ஒருவரும் இனம் இயற்றியதாகத்தெரியவில்லை. இப்பொழுதுள்ள சங்கச்செய்யுட்களில் இனத்தைக் காண்கிலோம். பிற்காலத்தார் இயற்றியன பெரும்பான்மை இனங்களே. கம்பராமாயணம் வில்லிபுத்தூரார்பாரதம் பெரியபுராணம் முதலிய புராணங்கள் காவியங்கள் முதலியன இனங்களால் ஆயவை. சங்கத்திறுதிக்காலத்துக்குப் பலநூற்றாண்டுகளுக்குப் பின்னரே இனம் தோன்றின. அவ்வாறுதோன்றியவற்றில் மிகப்பழைமன தேவாரமும் நாலாயிரப்பிரபந்தமும். சங்ககாலத்தில் மருந்துக்கும் ஆகப்படாத இனம் இக்காலத்துத் தமிழ் இலக்கியங்களில் நிறைந்திருக்கிறது. சங்ககாலத்துக்குப்பின்னர் யாப்பிலக்கணநூல் எழுதிய அனைவரும் இனம் கொண்டனர். அவர் நூலெழுதியகாலத்திருந்த இலக்கியத்தை நோக்கிப்போலும்.—சிலர் தாம் செய்த இலக்கணநூலையே இனத்தில் அமைத்தனர். இவை காலத்தின் மகிமை.

ஓசை:— அடி, கட்டளையடியென்றும் சீர்வகையடியென்றும் இரண்டாம். எழுத்தைக் கணக்கிடுவதனலாகும் அடி கட்டளையடி. சீரைக் கணக்கிடுவதனலாகும் அடி சீர்வகையடி. செய்புளியலில் "நாலெழுத்தாதி யாக ஆறெழுத் — தேறிய நிலத்தே குறளடி யென்ப" (சூசு) முதலிய சூத்திரங்கள் கட்டளையடியைச் சொல்லுவன. சான்றோர் முற்காலத்துக் கட்டளையடியாற் செய்புள் இயற்றினர். பிற்காலத்து அது மாறியது. "ஆங்ஙனம் விரிப்பி னளவிறக் தனவே" (செய்—டுக) என்னும் சூத்திரவுரையில், போசிரியர் "இந்நூல் செய்தகாலத்துத் தலைச்சங்கத்தாரும் இடைச்சங்கத்தாரும் அவ்வாறு கட்டளையடியாற் பாவின்றுவரச் செய்புள் செய்தாரென்பது இச்சூத்திரங்களாற் பெறுதும்" என்றும் நச்சினர்க்கினியர் "இந்நூல் செய்தகாலத்தில், தலைச் சங்கத்தாரும் இடைச்சங்கத்தாரும் கட்டளையடிபாவின்றுவரச் செய்புள்செய்தாரென்பது இச்சூத்திரங்களாற் பெறுதும்.—பின்பு கனிச்சங்கத்தாருக்கு அஃது அரிதாதலின், சீர்வகையடிபாடிலச் செய்புள்செய்தாரென்றுணர்க" என்றும் எழுதியிருப்பது இதை விளக்கும். கட்டளைக்கலித்துறை என்னும் பெயர் கலிப்பாவினமாகிய துறைக்குவாய்ந்தது அதனடியிலுள்ள எழுத்தைக்கணக்கிடுவதனல் அறியப்படும். கட்டளையடி பாடின்ற காலத்துச் சீர் பாடிலில்லையாதலால், தளையென்று அக்காலத்

துக் கொண்டனர் என்பதற்கில்லை. இங்கு, பாவகையை எவ்வாறு அறிந்தனர் என்னும் வினு எழும். ஓசையைக்கொண்டு என்பது அதற்கு விடையாம். ஓசையாவது என்ன வெனில்? "மாத்திரை யெழுத்தியலசைவகை யெனு" என்னுஞ் செய்யுளியல் முதற்சூத்திரவுரையில், போசிரியர் "பாவென்பது சேட்புலத்திருந்தகாலத்தும் ஒருவன் எழுத்துஞ் சொல்லும் தெரியாமற் பாடமோதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்னசெய்யுள் என்று உணர்தற்கேதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை" என்றும், நச்சினார்க்கினியர் பாவென்றது இவ்வுறுப்புக்களையுடைத்தாய்ச் சேட்புலத்திருந்து சொல்லும் பொருளுந் தெரியாமல் ஒருவன் கூறியவழியும் இஃது என்ன செய்யுள் என்று அறிவதற்கேதுவாகிப் பரந்துபடச்செய்வதோர் ஓசையை" என்றும் எழுதியிருப்பது ஓசை இன்னதென்பதை விளக்கும். எழுத்தும் சொல்லும் தெரியாமல் என்று ஈண்டுக்கூறியது சீரும் தளையும் அறியக்கூடாமையைச் சுட்டும்; சீரை அறிந்தாலன்றித் தளையைப் பெறுமையால்.— இதனால், தளை வேறு; ஓசை வேறு; ஒன்று பிறிதொன்றுகாது என்பது வெளி. அவ்வோசை அகவலோசை, செப்பலோசை, துள்ளலோசை, தூங்கலோசை என நான்காய் விரியும். இவ்வோசையை விகற்பிப்பது எளிதன்றென்பது போசிரியர் ஓசையைப்பற்றிச்சொல்லுமிடத்து "இன்னோரன்ன பிறவும் பெரிதும் எஃகு செவியும் நுண்ணுணர்வு முடையார்க்கன்றி யுணரலாகா" என்றும், நச்சினார்க்கினியர் "இவ்வாறே பிறவும் வகுத்துணர்த்தல் அத்துறை போயினார்க்கே தெரிவதாம்" என்றும், யாப்பருங்கலவிருத்தியுடையார் "செப்பலிசையனவெண்பா" என்னும் சூத்திரவுரையில் "இவ்வோசை விகற்பமெல்லாம் வல்லார்வாய்க் கேட்பினல்லது காட்டலாகாவென்றறிக" என்றும், வீரசோழியவுரையுடையார் "நெடிலடிநான்கவை" (யாப்பு-கஅ) என்னும் செய்யுள் உரையில் ஓரிடத்து "ஓசையாவது செவிப்புலனே கருவியாக அறிவதென்பது எல்லார்க்கும் உடம்பாடாதலாம்" என்றும், வேறோரிடத்தில் "அன்றியும் வடநூற்புலவர்க்கு ஓசையூட்டுகவென்பதில்லையெனக்கொள்க.—மேலும்அவர் பயில்வார்க் கரிதாக நூலைப் பெருக்குவதுஞ்செய்து அப்பெருமையில் யாப்புக்களையடக்கமாட்டாதே மிக்குங் குறைந்தும்வரினும் ஒருபுடைஒப்புமைநோக்கி யொழிந்தவுங் கொளல்என்று சூத்திரஞ்செய்தமையாலே யடங்கவுஞ் செய்திற்றிலர்; பயில்வார்க் கெளிதாகச்சுருங்கவுஞ் செய்திற்றிலர்; யாப்பதிகாரத்தினுற்

பயனும் செய்யுளுக்கு ஒரு பெரிய ஏதுவேயாதலால், குற்றம் என்க" என்றும் சொல்லியிருப்பதனால் விளங்கும். இக்காலத்தார் பலர் தலை யைக் கருவியாகக்கொண்டு பாக்களை விகற்பிக்கின்றனர்; அவர் வட மொழிவழக்கையும் பின்கண்ட சூத்திரங்களையும் தமக் காதாரமென்பரோ? சூத்திரங்கள்:—

"வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
எந்திசைச் செப்பல் என்மனார் புலவர்"

"இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
தூங்கிசைச் செப்ப லென்மனார் புலவர்"

"வெண்சீ ரொன்றலு மியற்சீர் விகற்பமும்
ஒன்றியபாட்டே யொழுகிசைச் செப்பல்"

"நேர்நே ரியற்றளை யான்வரு மகவலும்
நிரைநிரை யியற்றளை யான்வரு மகவலும்
ஆயிரு தளையுமொத் தாகிய அகவலும்
எந்தல் தூங்கல் ஒழுகல் என்ரு
வாய்ந்த நிரனிறை யாகு மென்ப"

"வெண்டளை தன்றளை யென்றிரு தன்மையின்
வெண்பா இயலது வெண்கலி யாகும்"

என்பவை போல்வன.

ஓசைக்கும் தலைக்குமுள்ள வேறுபாட்டைப் போசிரியர் நச்சி னார்க்கினியர் இருவரும் "அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி" (செய்—கக) என்னும் சூத்திரவுரையில் விரிவாய்க் காட்டியுள்ளார். இளம் பூரணரும் "அவ்வியல் பல்லது பாட்டாங்குக் கிளவார்" (செய்—அசு) என்னும் சூத்திரவுரையில் அதை வரைந்திருக்கின்றனர். நூல் என்னும் அடுத்த தலைப்பின்கீழ் அதை எழுதியிருக்கின்றேன். மேற் சொல்லியவற்றால் ஓசையுணர்வினது இன்றியமையாமையும், அவ்வுணர் வில்லாதார் தலையறிவைக்கொண்டு ஓசையுணர்வின் இன்மையை நிரப்ப முயல்வதும் புலனாகும்.

நூல்:—தொல்காப்பியர்காலத்து நூல் என்னும் சொல் உணர்த் திய பொருளுக்கும் இக்காலத்து அது உணர்த்தும் பொருளுக்கும் வேறுபாடு பெரிது. ஆசிரியர் மரபியலில் நூலுக்கு இலக்கணம் கூறிய சூத்திரம் பின்வருமாறுள்ளது. அது,

"ஒத்த சூத்திர முரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
யீரைங் குற்றமு மின்றி நேரிதின்
மூப்பத் திருவகை யுத்தியொடு புணரின்
நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்"

என்பது, பேராசிரியர் இச்சூத்திரவுரையில், "சூத்திரமும் காண்டிகை யும் உரையும் என மூன்றும் அவற்றோடு குற்றமின்மையும் உத்திவகை யுங் கூட்ட நூலிலக்கணம் ஐந்தாயின" என்று எழுதியிருப்பதும் இதை விளக்கும். அடியிற் கண்ட செய்புளியற்சூத்திரங்களும் ஈண்டுக் கவனிக்கத்தக்கன.

"அவற்றுள், நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலு முடிவு மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
யுண்ணின் றகன்ற வுரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே" (கசுஎ)

"அதுவே தானு மீரிரு வகைத்தே" (கசுஅ)

"ஒருபொரு ணுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த வோத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்
றுங்னே மாபி னியலு மென்ப" (கசுக)

மேற்கண்டவற்றுற் சூத்திரத்தாலாயது நூலென விளங்கும். "மேற்கிளந்தெடுத்த" (எ0) என்னும் மரபியற்சூத்திரவுரையில், "பல சூத்திரந்தொடர்ந்து நூலாகி" என்று பேராசிரியர் எழுதியிருப்பது இதனை வற்புறுத்தும். "பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே–யங்கதம் மூதுசொல்லல்வேழ் நிலத்தும்" (எசு) என்னும் செய்புளியற் சூத்திர வுரையில் நச்சினார்க்கினியர் "பாட்டுச்செய்புள், உரைச்செய்புள், நூற்செய் புள் எனத் தமிழ்நாட்டார் வழங்கியவாறே பெயர்பெறும்" என்று எழுதி யிருப்பது பாச்செய்புள்வேறு நூற்செய்புள்வேறு என்பதைக் காட்டும். நூற்செய்புள் என்று சொல்லப்படுவது சூத்திரம். பாச்செய்புளுக்கு ஓசையுண்டு. உரைச்செய்புள் நூற்செய்புள்கட்கு ஓசையில்லை. "பாட் டிடைவைத்த குறிப்பினானும்" (களஉ) என்னும் செய்புளியற் சூத்திர வுரையில், பேராசிரியர், "சூத்திரம் பாட்டெனப்படாவோ எனின், படா; பாட்டும் நூலும் உரையும் என வேறோதினமையின்" என்றும், நச்சி னார்க்கினியர், "சூத்திரம் பாட்டெனப்படா; பாட்டும் உரையும் நூலு மென வேறோதலின்" என்றும் எழுதியிருப்பது சூத்திரத்தினாலது நூலென்பதையும், சூத்திரம் பாவினின்றும்வேறு என்பதையும் விளக்

கும். "சிதைவெனப் படுபவை" (க0அ) என்னும் மரபியற்சூத்திர வுரையில், "சூத்திரச்செய்யுள்" என்றும், "ஒத்தகாட்சி" (ககக) என்னும் அவ்வியற்சூத்திரவுரையில், "இவையும் நூற்கண்ணன்றி யொழிந்த செய்யுட்கு வருங்கால் விலக்கப்படுதலும்" என்றும் பேராசிரியர் கூறியிருப்பதும் இவ்வேறு பாட்டைக் காட்டும். "அவ்வியல்பல்லது பாட்டாங்குக் கிளவார்" (அசு) என்னும் செய்யுளியற் சூத்திரவுரையில் இளம்பூரணர் எழுதியிருப்பது ஈண்டுக் கவனிக்கத்தக்கது. அது, மேற்சொல்லப்பட்ட ஓசைவகையாலல்லது பாட்டாங்குக் கூறு என்றவாறுயிற்று. பாட்டாங்குக்கூறலாவது ஓசைபொழிந்து சிருந் தீயும் படக்கூறல். அவ்வாறு சொல்லுங்கால் பாட்டாங்காகாதென்பதூஉம், அடியுந் தொடையும் பெற்றுவந்ததாயினும் நூலின்பாற்படுதல் உரையின்பாற்படுதல் என்பதூஉங் கூறியவாறும். அது வருமாறு:—

"ஐவகை யடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில வாகி
யறுநூற் றிருபத் தைந்தா கும்மே" (செய்--டுல)

"என்பது ஆசிரியப்பாவிற்குரிய இலக்கணமுடைத்தாயினும் ஓசையின்மையான் ஆசிரிய மெனப்படாது நூலெனப்படுமென்று கொள்க" என்பது. மேலும், இவரே "பாட்டிடை வைத்த குறிப்பினானும்" (கஎங) என்னும் செய்யுளியற் சூத்திரவுரையில், "பல சொற்றொடர்ந்து பொருள்காட்டுவனவற்றுள் ஓசை தழீஇயவற்றைப் பாட்டென்றார். ஓசையின்றிச் செய்யுட்டன்மைத்தாய்வருவது நன்னூலெனப்பட்டது. அவ்வகையின்றிச் செய்யுட்டன்மைத்தாய் வருவது நூலெனப்பட்டது" என்று எழுதியிருப்பது இதை நன்குவிளக்கும். பிற்காலத்து நன்னூலாரும், "நூலினியல்பே நுவலின்" என்னும் சூத்திரத்தில், தொல்காப்பியர் சொன்னதைத் தழுவியே நூலுக்கு இலக்கணம் கூறினர். அச் சூத்திரத்தில், "சூத்திரங் காண்டிகை விருத்தி யாகும்" என்னுஞ் சொற்கள் குறிப்பிடத்தக்கவை. இலக்கணவிளக்கநூலுடையாரும், "நூலெனப் படுவது நுவலுங்காலே" (எஉ) என்னும் பாட்டியற்சூத்திரத்தில், தொல்காப்பியரைத் தழுவி நூலிலக்கணஞ் சொல்லப்புகுந்து, அச்சூத்திரத்தில் "ஒருபொருணுதலிய சூத்திரத்தானும்" என்று சொல்லியிருப்பது மேற்சொல்லியதை வற்புறுத்தும். மேலும் அவரே, அவ்வியல்

"எஞ்சிய இலக்கண மெல்லாஞ் சொல்லின்" என்னும் முதற் சூத்திரத்தில், "பாட்டினியலும் நூலினியலும்" என வேறுபடுத்திக்காட்டி நூலுக்கும் பாட்டுக்கும் வெவ்வேறாக இலக்கணமும் அமைத்தனர். மயிலைநாதருள்ளிட்ட சில உரையாசிரியர்கள் பாரதம், நாலடிநானூறு, களவியல், சிந்தாமணி, சூளாமணி போல்வனவற்றை அகத்தியம் தொல்காப்பியத்தோடொப்ப நூல் என்றனர். நச்சினார்க்கினியர் சிந்தாமணி போல்வனவற்றைத் தொடர்நிலைச்செய்யுளென்பதேயன்றி நூலென்னார். உரையாசிரியர் பலர் இடைச்சங்கம் கடைச்சங்கம் இவற்றிற்குநூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்று சூத்திரத்தானவற்றைச் சொல்லிப் பாச்செய்யுளின் வேறுபடுத்தியே கூறுகின்றனர். களவிய லுரையுடையாரும் அடியார்க்குநல்லாரும் இவ்வாறுப்பினர். கிரந்தம் என்னும் வடசொல்லைப் புத்தகம் என்னும் பொருளில் உபயோகப்படுத்துவது போல நூல் என்னும் சொல்லை இக்காலத்துத் தமிழர் உபயோகிக்கின்றனர். ஓசையோடுகூடிய வஞ்சிப்பா, கலிப்பா; தனிநிலைச்செய்யுட்கள் முதலியவற்றையும், ஓசை பெறுத முப்பத்திரண்டு பதுமைக் கதை மதனகாமராஜன்கதைபோன்ற உரைநடைகளையும் இக்காலத்தார் நூல் என்கின்றனர். தொல்காப்பியர் முதனூல், வழிநூல் என நூல் இரண்டுவகைய தென்றனர். பிற்காலத்தார் அவ்விரண்டனோடு புடைநூல் அல்லது சார்புநூல் என ஒன்றைக்கூட்டி நூல் மூன்று வகையதென்றனர்.

பாட்டியல்:—சங்ககாலத்து அகத்தியர் பாட்டியல், பரணர்பாட்டியல், பன்னிருபாட்டியல் முதலிய பாட்டியல்நூல்கள் இருந்தன என்பர். பன்னிருபாட்டியல் இப்பொழுதுளது. நவநீதப்பாட்டியல் என்றும் ஒரு நூலுளது. பிற்காலத்து வெண்பாப்பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், வரையறுத்தபாட்டியல் இலக்கணவிளக்கப்பாட்டியல் போன்ற நூல்கள் உண்டாயின. பன்னிருபாட்டியலிற் சாதகம் என்னும் பாட்டைச் சொல்லுமிடத்து,

"தோற்றிய சாதகஞ் சாற்றுங் காலைப்
பற்றிய கலியுகத் தற்ற யாண்டிற்
றிருந்திய சகாத்தமு மாண்டும் பொருந்திய
ஞாயிறும் பக்கமும் மேய வாரமும்
இராசியு மன்னுற மொழிதற் குரிய"

என்னுஞ் சூத்திரம் காணப்படுகிறது. சகாத்தத்தைச்சொல்லியிருப்பது சாலிவாகனசகாத்தமாயிருத்தல்வேண்டும். தமிழ்நாட்டில் வேறுசகாத்தம் வழக்கிலிருந்ததாகத் தெரியவில்லை. ஆதலால் கி. பி. 78-ம் ஆண்டுக்குப்பிறகு இந்நூல் இயற்றப்பட்டிருத்தல்வேண்டும். இதை இயற்றியோர் சங்கப்புலவரில் பரணர், சீத்தலையார், அவிரையனர், கல்லாடனர், பொய்கையார் முதலியோராதலால், இது, சங்கத்திறுதிக்காலமாகிய கி. பி. மூன்றும்நூற்றாண்டின் முற்பருதிக்குமுந்தி இயற்றப்பட்டிருத்தல்வேண்டும். வெண்பாப்பாட்டியல் நேமிநாதரால்இயற்றப்பட்டது. இப்புத்தகத்தைப்பற்றிப் பிற்பாகம் மூன்றுங்காலப்பகுதியிற் சொல்லியிருப்பதைப்பார்க்க. சிதம்பரப்பாட்டியலுடையார்சரித்திரத்தை நாலாங்காலப்பகுதியிற் பார்க்க. இலக்கணவிளக்கமுடையார்சரித்திரமும் அப்பகுதியினதே. பலவகைப்பாட்டுக்களின் இலக்கணங்கூறும்நூல் பாட்டியல் எனப்படும். சங்ககாலத்திருந்த பாட்டின்விகற்பங்களுக்கும் பிற்காலத்துப் பாட்டுவிகற்பங்களுக்கும் பல வேறுபாடுகள் உள. பன்னிருபாட்டியல் முதல் ஒவ்வொரு பாட்டியலிலுமுள்ள விகற்பங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதனால் அவை விளங்கும். வேறுபாடுகளிற் சிலவற்றையே யாண்டுக் குறிக்கின்றேன். பன்னிருபாட்டியலிற் பெருங்காப்பியம் காப்பியம் என்னும் பெயர்கள் காணக்கிடையா. இக்காலத்துப் பன்னிருபாட்டியற்பதிப்பில் ஒருமூலையில் காப்பியம் என்னுஞ்சொல் காணப்படுகிறது. அடியார்க்குநல்லார் நச்சினார்க்கினியர் இருவரும் அச்சொல் அதிற் காணப்படிற் குறிப்பிட்டிருப்பரென்பது திண்ணம். தொடர்நிலைச்செய்யுள் என்னும் பெயர் உளது. பன்னிருபாட்டியலில் அதற்குச் சொல்லியிருக்கும் இலக்கணத்திற்கும் பிற்காலத்துப் பாட்டியல்களிற் காணப்படும் இலக்கணத்திற்கும் சில பேதங்கள் உள. பிற்காலத்தார் தொடர்நிலைச் செய்யுளைப் பெருங்காப்பியம் காப்பியமெனப் பிரித்தனர். சிலர் தொடர்நிலைச்செய்யுள் என்னும் பெயரையே சொல்லாது பெருங்காப்பியம் காப்பியம் இவற்றுக்கு இலக்கணங்கூறினர். சிலப்பதிகாரத்திற்குக் காவியம் என்னும் பெயரிட்டு நியாயம் எழுதினர் அடியார்க்குநல்லார். அதை மறுத்து எழுதினர் நச்சினார்க்கினியர். நச்சினார்க்கினியர் சிந்தாமணி சிலப்பதிகாரம்போல்வனவற்றைத் தொடர்நிலைச்செய்யுள் என்பர். காப்பியம் அல்லது பெருங்காப்பியமென்னார். புராணமென்பது இக்காலத்துச் சொல்லப்படுமியல்பிற் சங்ககாலத்திலிருந்ததாகத் தெரியவில்லை. பன்னிருபாட்டியலில் அப்பெயர் இல்லை. சிதம்பரப்பாட்டியலில் உளது.

இலக்கணவிளக்கநூலுடையார் பாட்டின்விகற்பங்களைத்தொடர்நிலைச்செய்யுள், தனிநிலைச்செய்யுளின்விகற்பங்களாயமைத்து இலக்கணம் கூறினர். அவர், அணியியலில் "அவற்றுட்—பெருங்காப்பியமே காப்பியமென்றுங்—கிரண்டா வியலும் பொருட்டொடர் நிலையே" (அ) என்று சூத்திரித்திருப்பதை நோக்கப் பன்னிருபாட்டியலிற்சொல்லிய பாட்டின்விகற்பங்களெல்லாம் பெருங்காப்பியம் காப்பிய மென்பதில் அடங்குமென்பது அவர்கருத்தென விளங்கும். பிற்காலத்தார் பாட்டின்விகற்பத்தைப் பிரபந்தமென்றனர். அவ்விகற்பத்தைப் பெருக்கி 96 என வரிப்பர். நூலாயிரப்பிரபந்தத்துக்கு அப்பெயர்வாய்ந்தது பிற்காலத்துவழக்குப் பற்றிப்போலும். சங்ககாலத்துச்செய்யுளுக்குக் காப்பியம், பிரபந்தம் என்னும் பெயர் அக்காலந்து வழங்கியதாகத் தெரியவில்லை.

செய்யுளியல் பொருளதிகாரத்தின்பாற்படுவதேன்? தொல்காப்பியர் செய்யுளுறுப்பு முப்பத்துநான்கில், பொருள் ஒன்று என்றனர். செய்யுளுறுப்பென அவர் கூறிய எட்டுவனப்பும் பொருளன்றே? "மாத்திரை யெழுத்திய லசைவகை யெனுஅ' என்னும் முதற்சூத்திரவுரையில் பேராசிரியர் "மற்றுச் செய்யுளுறுப்பு ஈண்டோதினுர் செய்யுள் யாண்டோதுப எனின், அறியாது கடாயினுய், உறுப்பென்பன உறுப்புடைப்பொருளின் வேறெனப்படா; பொருளெனப்படுவன உறுப்பே; அவற்றதீட்டத்தினை முதலென வழங்குப வாகலான் உறுப்பினையே சொல்லியொழிந்தார்" என்று கூறியவற்றால், செய்யுளுறுப்பெல்லாம் பொருள் என்பதும் உறுப்பும் உறுப்புடைப் பொருளாகிய செய்யுளும் வேறெனப்படாவென்பதும் விளங்கும். பொருளோ உறுப்பாயுடையதற்கு இலக்கணங் கூறுமிடம் பொருளதிகாரத்தைத் தவிர்த்து வேறு யாதாயிருத்தல் இயல்புடைத்தாம். 'வாழ்த்து வகை முதலியபொருள்கள் இன்னின்னபாவில் அமைக்கப்படவேண்டுமென்று விதிப்பதற்குப் பொருளதிகாரமே இடமன்றே? இலக்கணவிளக்கநூலுடையாருஞ் "பொருட்கிடஞ் செய்யு ளாதலி னதனைத்—தெரிப்பது மதனது திறனெனல் வரையார்" (அணி—2) என்றதும் இக்கருத்தேபற்றி எனக் கொள்க.

இச்செய்யுளியலில் வேறுபாடு பலவுளவேனும் ஈண்டுச்சிலவற்றையே காட்டினேன்.

இதுநிற்க, முற்காலத்தார் நிகழ்ந்த சரித்திரங்களைத் தாம் அறிந்த வாறு கூறினர். பிற்காலத்தார் அவற்றைத் திரித்தும் பெருக்கியும் குறைத்தும் கூறுவர். முற்காலத்துச் செய்யுட்களில் தன்மையணி அல்லது சுபாவோக்தியலங்காரம் என்னும் பொருள்கள் பெருகிக் கிடக் கின்றன. பிற்காலத்தார் செய்யுட்களில் அதிசயோக்தியின்பெருக்கத் தையே பார்க்கலாம்.

பொருளிலக்கணம்:—உரையாசிரியரெனப்படும் இளம்பூரணர் கொள்கையைத் தழுவி இதை எழுதுகின்றேன். பொருள் என்பது சொல்லினுணரப்பட்டது என முன்னமே சொல்லியிருக்கிறேன். சாதாரணமாய் உலகத்திற் பொருள் என்பதை உருவப்பொருள் எனக் கொள்ளுகிறார்கள். ஈண்டுப் பொருள் என்பது அது மட்டுமன்று. வினையையும் பண்பையும் உணர்த்தும். அப்பொருள் முதல் கரு உரி என மூவகைப்படும். முதற்பொருள் நிலனும் காலமும் என இரு வகைப்படும். நிலன் என்பது இடம். காலம் இடம் என்பவற்றை ஆங்கிலேயர் டைம் அண்டு ஸ்பேஸ் என்பர். இவ்விரண்டின் தோற்ற மும் ஈறும் மனதிற் கெட்டாதனவாம். முதலிற் காலத்தை எடுத்துக் கொள்ளுவோம். நமக்குமுன் தோன்றியவர் யாவர்? அவர்க்குமுன் யாவர்? அவர்க்குமுன் யாவர்? என நெடுக விசாரித்துக்கொண்டுபோனால் இந்த உலகம் உற்பத்தியானகாலத்தை யெட்டியதாக வைத்துக்கொள்ளுவோம். உலக உற்பத்திக்குமுன் இருந்ததென்ன? அதற்குமுன் இருந்ததென்ன? அதற்குமுன் இருந்ததென்ன? என்று விசாரித்துக் கொண்டுபோனால் முடிவு ஏற்படாது. காலத்தின்தோற்றம் நம் மனத்திற் கெட்டாத தெனத்தெரியும். அவ்வாறே நமக்குப் பிற்காலத்து இருக்கப்போவ தென்ன? அதற்குப்பிறகு இருக்கப்போவதென்ன? அதற்குப்பிறகு என்ன? என நெடுக விசாரித்துக்கொண்டுபோனால் முடிவு ஏற்படாது. காலத்தின் ஈறும் மனத்திற்கெட்டாததெனத் தெரியும். இடத்தையும் இதுபோலவே நாமிருக்குமிடத்திலிருந்து ஒவ்வொருபக்கத்திலும் அப் பாலுள்ளது என்ன? அதற்கப்பால் என்ன? அதற்கப்பால் என்ன? என நெடுகவிசாரித்துக்கொண்டுபோனால் அதற்கும் தோற்றமும் ஈறும் மனத்திற்கெட்டாததெனத் தெரியும். ஈண்டிய இரண்டுபொருளும் முதற் பொருளிற் றோன்றுவனவாம். காலத்திலும் இடத்திலும் தோன்றாத பொருள் இல்லை. தோற்றமும் ஈறும் அறியவொண்ணாத பொருளுக்கு

இலக்கணம் சொல்ல இயலாதாகையால், தொல்காப்பியர் இடத்திற்குத் தமிழ்நாட்டையும் காலத்துக்கு ஒருயாண்டையும் எடுத்துக்கொண்டு இலக்கணம் கூறினர். விசாலித்துப் பரந்தஇடத்தையுடைய இந்த வுலகத்தின் ஒருபகுதியாகிய தமிழ்நாட்டிற்குச்சொன்ன இலக்கணமே மற்றப் பகுதிகளுக்கும் பெரும்பாலும் பொருத்தும். அவ்வாறே ஒருயாண்டுக்குச் சொன்னது பிறகாலத்துக்குமாம். கருப்பொருளாவது இடத்தினும் காலத்தினும் தோன்றும்பொருள். அவை, "தெய்வ முணவே மாமரம் புட்பறை–செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ–அவ்வகை பிறவுங் கருவென மொழிப" (தொல். பொருள் அகத்–கஅ) என்பதனால் விளங்கும். மக்களும் கருப்பொருள் ஆவர். உரிப்பொருளாவது மக்கட்குரிய பொருள். திணை ஒழுக்கம் உரிப்பொருள் என்பன ஒருபொருட்கிளவியாம். உரிப்பொருளைத் "திணைக்குரிப்பொருளே" (தொல். பொருள். அகத்–கச) என்று தொல்காப்பியர் சொல்லியிருக்க, மக்கட்குரிப்பொருள் என்ப தென்னை யெனின், மக்கட்குரிய வொழுக்கத்தைத் திணையென்றாகலின் அது பொருத்தமுடையதேயாம் என்க. மேற் சொல்லியதனானே உலகத்துப்பொருள் எல்லாம் முதல், கரு, உரி என்னும் பகுப்பில் அடங்கும். தொல்காப்பியர் தமிழ்மக்களின்பொருட்டு இலக்கணம் சொல்லப்புகுந்தாராதலின், பொருளதிகாரத்தில் அக்காலத்திலுள்ள தமிழ்மக்களது ஒழுக்கம் அல்லது திணைக்கு இலக்கணம் சொல்வதை மேற்கொண்டனர். தமிழ்மக்கள் ஒழுக்கத்தை அகம் புறம் என இரண்டாகப் பிரித்தனர். அதாவது உள்ளொழுக்கம் வெளியொழுக்கம் என. அறம் பொருள் இன்பம் வீடு என்பன உரிப்பொருளில் அடங்கும். வடநூலார் இவற்றைத் தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் என்பர். இவற்றுள், இன்பமே காமம் எனப்படும். ஆசிரியர் தொல்காப்பியனும், திருவள்ளுவனும் காமம் என்னும் மொழியையே கொண்டனர். தொல்காப்பியர்காலத்திருந்த தமிழ் மக்கள் ஒழுக்கத்தை அவர் பதினான்காகப்பகுத்து அவற்றில் அகவொழுக்கமாகிய அகத்திணைக்கு ஏழும் புறவொழுக்கமாகிய புறத்திணைக்கு ஏழும் ஆக அமைத்தனர். அகத்திணையேழில், காமத்தையும், புறத்திணையேழில் ஒழிந்த அறம், பொருள், வீட்டையும் விரித்தனர். அவற்றுள் வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லாநிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படுவதன்றாகலான், புறத்தில் வீடுபேற்றிற்குரிய வானப்பிரத்த

சன்னியாசிகளியல்புங் கூறினர். இன்பம் காரணமாகப் பொருள்தேடுதலானும், பொருளானே அறஞ்செய்யலானும் இன்பத்தைக்கூறும் அகத்திணையியலை முன்வைத்துப் பொருளையும் அறத்தையும் கூறும் புறத்திணையியலைப் பின்வைத்தனர். இன்பம் அல்லது காமத்தை ஒரு தலைக்காமம், ஒத்தகாமம், பொருந்தாக்காமம் என மூன்றுகப்பகுத்தனர். அகத்திணையியலில், கைக்கிளை என்பது ஒரு தலைக்காமம். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் திணைகள் ஒத்த காமம். இவற்றைக் களவியலில் இறைபனர் அன்பின் ஐந்திணை என்றனர். பெருந்திணையென்பது பொருந்தாக் காமம். இவற்றில் ஒத்தகாமமே சிறப்புடையதாகலின் நிலத்தை ஐந்தாகப்பிரித்து, அன்பினைந்திணைக்கும் திணைக்கு ஒவ்வொன்றாக நிலத்தை அமைத்தனர்; அவ்வாறு அமைத்தநிலத்தில் அவ்வொழுக்கம் பெரும்பான்மை நடைபெற்றமையால். குறிஞ்சிமுதலாக மேற்கூறிய ஐந்திணைகளையே, புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல் ஊடல் என்றனர் என்பது உரையாசிரியர் "அகமாவது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடலெனவும், கைக்கிளை பெருந்திணை எனவும் எழுவகைப்படும்" என அகத்திணையியல் முதற்சூத்திரவுரையில் எழுதியிருப்பதால் விளங்கும். அறம் பொருள் இன்பம் வீடு என விகற்பித்துக்கூறினுரேனும் அவை ஒன்றோடொன்று விரவியேநிற்கும். "அகத்திணையாவது அறத்தின்வழாமலும் பொருளின்வழாமலும் இன்பத்தின்வழாமலும் இயலல்வேண்டும்" என்று உரையாசிரியர் "அடியோர் பாங்கினும்" (அகத்–உரு) என்னும் சூத்திரவுரையில் எழுதியிருப்பதாலும் அதை அறியலாம். மேலும் கற்பியலில் தலைவனையும் தலைவியையும்பற்றிச்சொல்லுமிடத்து,

> "காமஞ் சான்ற கடைக்கோட் காலை
> ஏமஞ் சான்ற மக்களொடு தவன்றி
> அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
> சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (நிக)

என்று சூத்திரம் செய்திருப்பதும் நான் சொன்னதை ஆதரிக்கும். அகத்திணையை அகத்திணையியல், களவியல், கற்பியல் என்னும் இயல்களில் தொல்காப்பியர் சொன்னர். தலைவனும் தலைவியும் பிறரறியாமல் தனித்துக்கூடும்வழக்கம் பெரும்பாலும் அக்காலத்துத் தமிழர்களுக்குள் நடைபெற்றது. அது யாழோர்கூட்டம் அல்லது காந்தர்வவிவா

கத்தை யொத்தது. பிறர் அறிந்தாலும் அல்லது பெற்றோர் தலைவி யைக் கொடுக்கப்பெற்றாலும் அது கற்பெனப்படும். அக்காலத்து மணம் நிகழ்வதற்கு மந்திரத்தோடு சடங்குகளில்லை. களவொழுக்கத் தால் நேரிடும் தீங்குகள் வாராமற்காக்க ஆரியர் அவைகளை அமைத்தன ரென்பது, "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்—ஐயர் யாத்தனர் கரணமென்ப" (கற்பியல்–சு) என்னுஞ் சூத்திரத்தால் விளங்கும்.

புறத்திணையும் உரிப்பொருளில் அடங்குமென்று சொல்லியிருக் கிறேன். புறத்திணையியலிற் சொல்லப்பட்ட புருஷார்த்தமும் காமத் தொடுவிரவிய என்பது பின்கண்ட பன்னிருபடலச்சூத்திரத்தால் விளங் கும். அது,

"ஆன்ற சிறப்பி னறம்பொரு ளின்பமென
மூன்றுவகை நுதலிய தலக மவற்றுள்
அறனு மின்பமு மகலா தாகிப்
புறனெனப் படுவது பொருள்குறித் தன்றே" என்பது.

புறத்திணை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்பகுதி என எழுவகைப்படும். அவையாவன: நிரைகோடல், பகைவயிற்சேறல், எயில்வளைத்தல், இருபெருவேந்தரும் ஒருகளத்துப் பொருதல், வென்றி, நிலையாமை, புகழ்ச்சி என்பனவாம். இவற்றை அகத்திணையாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந் திணை, கைக்கிளை இவற்றிற்கு முறையே புறன் என்பர். வீடுகூற இய லாதாயினும் வீடுபேற்றுக்குக் காரணமாகிய "நாலிருவழக்கிற் றுபதப் பக்கம்" (புறத்–20) "காமநீத்தபால்" (புறத்–உக) முதலியவற்றை இவ் வியலிற் கூறினர். "நாலிருவழக்கிற் றுபதப்பக்க" மாவது:—

"நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
சோர்சடை தாழச் சுடரோம்பி — யூரடையார்
கானகத்த தொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி" (புறப் - வெண் - வாகை - கசு)

என்பது. காமநீத்தபாலாவது ஆசையை அறவிடுத்தல். அது,

"காமம் வெகுளி மயக்க மிவைமூன்றின்
சாமங் கெடக்கெடு நோய்" (குறள் - மெய்யுணர் - கo)

என்பது.

பொருளதிகாரத்தில் அகத்திணையைச் சொல்லும் மூன்று இயலையும், புறத்திணையைச்சொல்லும் ஒரு இயலையும் இதுவரை சொன்னேன். ஒழிந்த ஐந்தியல்களில் பொருளியலில் அகம் புறம் என இரண்டினையும் பற்றிவரும் பொருளியல்பும்; மெய்ப்பாட்டியலில் அகம் புறம் என்னும் இருபொருட்கண்ணும் குறிப்புப்பற்றி நிகழும் மெய்ப்பாடும், உவமவியலில் வடிவும் தொழிலும் பண்பும் பயனும்பற்றி உவமிக்கப்படும் உவமியல்பும், செய்புளியலில் மூவகைச் செய்புளியல்பும், மரபியலில் வழக்கிலக்கணமும் ஆசிரியர் உணர்த்தினர். பிற்காலத்தில் அகத்திணையைச் சொல்லும் இறையனாகப்பொருள், நாற்கவிராஜநம்பி அகப்பொருள் விளக்கம், புறத்திணையைச் சொல்லும் ஐயனரிதனரியற்றிய புறப் பொருள்வெண்பாமாலை முதலியனவும், ஐந்திலக்கணமும் சொல்லப் பல நூல்களும் உண்டாயின முற்காலத்திருந்த அகவொழுக்கமும் புற வொழுக்கமும் பெரும்பான்மை மாறின. களவுப்-புணர்ச்சி ஓதுகோடல் முதலியன இக்காலத்துக்கு முற்றும் பொருந்தாதவை. பண்டைச் செய்புள்களையறிவதற்கு அகத்திணையிலக்கணமும் புறத்திணையிலக்கணமும் பயன்படும். இக்காலத் தொழுக்கம் பலவற்றுக்குப் பண்டையிலக்கணம் பயன்படா. தொல்காப்பியர் ஒத்தகாமத்திணைகளை ஐந்தாகப் பிரித்தனரேயன்றி அவைகளைப் பிரித்துத் துறைகூறிற்றிலர். பிற்காலத்தார் சிலர் அகத்திணைத்துறைகளை 400 ஆக்கினர். சிலர் 600 ஆக்கினர். ஒருவர் 900ம் ஆக்கித் தமிழ்நாவலர் சரிதையில் முற்றுப்பெறுவதன்முன் காலஞ்சென்றனர். பன்னிருபாட்டியலுடையார் அகப்பொருட் கோவையைப் பாட்டின் பிரிவுகளில் ஒன்றாக்கினர். துறைவிவரம் கூறிற்றிலர். சங்ககாலத்துச் செய்புள்களிலெல்லாம் ஐந்திணையே கூறப்பட்டுள்ளன. துறைப்பகுப்புக்களைக் காணோம். புறத்திணைக்குத் துறைப்பெயர் வகுத்தனர்.

எழுத்தும், சொல்லும்:—எழுத்திலக்கணம் சொல்லிலக்கணங்களிலுள்ள வேறுபாடுகளையெல்லாம் எழுதுவதானால் ஒருபுத்தகமாகும். சிலவற்றையே யிண்டிக் காட்டுகின்றேன்,

1. தொல்காப்பியம். இயற்றியகாலத்து, சு, சை, சௌ என்னும் எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வாவாவென்பது "சகரக் கிளவியு மவற்றே ரற்றே—அ, ஐ, ஔ வெனு மூன்றலங் கடையே" (தொல்,

எழுத்-மொழி-உரு) என அவர் சூத்திரஞ்செய்ததனால் தெரிகிறது. இவை சங்கத் திறுதிக் காலத்துக்குமுன்னரே வழக்கில் வந்துவிட்டன. சங்கம் என்னும் மொழியே அதற்கு ஒரு சான்றும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலியவற்றில் ச, சை என்னும் எழுத்துக்களை முதலாகவுடையமொழி பல காணப்படுகின்றன. செளந்தரபாண்டியன் என்பதுபோலச் சௌ என்னும் எழுத்தை முதலாகவுடைய மொழிகளும் இக்காலத்துப் பலவுள.

2. உண்ணும், செய்யும் என்னும் பெயரெச்சப்பொருளில் உண்மன, செய்ம்மன என முற்காலத்து வழங்கியன இக்காலத்து ஒழிந்தன.

3. இயற்பெயரைப்பின்னும் சிறப்புப்பெயரை முன்னும் வைத்து, 'முனிவன் அகத்தியன்' என்றாற்போல முற்காலத்து வழங்கியன இக்காலத்து இடம் மாறின.

4. திசைச்சொல்லிலக்கணம் தொல்காப்பியர்சொன்னதினின்றும் முற்றும் மாறியது.

5. அதோளி, இதோளி, உதோளி, குயின், அழன், புழன் என்னும் பழையமொழிகள் வழக்கிற் கழிந்தன.

6. கி. பி. பத்தாம்நூற்றாண்டில் தமிழ் எழுத்துக்களின் உருவம் மாறியது. அதற்குமுன் இருந்தது வட்டெழுத்தெனப்படும்.

தமிழின் அபிவிருத்தி:—முதன்முதல், உள்ளதமிழ்ச்செய்யுள்களை இறந்துபடாமற் பாதுகாப்பது தமிழரின் பெருங்கடமையாம். செய்யுள் எனின பாற்செய்யுள், உரைச்செய்யுள், பாச்செய்யுள் என்னுமிவை. இவற்றுள், பிற்காலத்தார் செய்தனவிற் போற்றற்குரியனவோ என்பது ஆராய்தற்பாலது. முற்காலத்துச் சான்றோர்செய்த அரிய செய்யுள்கள் இறந்தனபோகவுஞ்சிலவற்றிற்பல பலபெரியோர்களின் கன்முயற்சியால் அச்சில் வெளிவந்துள்ளன. ஆதரிக்கும் வள்ளல்கள் உளரேல் மற்றவை யும் இதுகாறும் வெளிவந்திருக்கலாம். அச்சிட்டபுத்தகங்களை மேல்நாட் டார்போல விலைகொடுத்து வாங்குவோர் பல்லாயிரவர் இந்நாட்டில் இருப் பினும் வெளிவந்திருக்கலாம். வங்காட்டில் ரவீந்திரநாதர் என்னும் உலகமெங்கணும் புகழ்பெற்ற மகாகவியொருவர் இருப்பது யாவருமறிந் ததே. அவர் எழுதிய புத்தகமொன்று ஜர்மனிதேசத்தில் உலகப்

பெரும்போரால் அத்தேசத்தார் எல்லாநாடியும் ஒடுங்கியிருக்கும் இக் காலத்தில், ஒருபதிப்பில் முப்பதுலக்ஷம்பிரதி அச்சிடப்பட்டனவெனத் தெரிகிறது. மேல்நாடுகளில் விலைக்குவாங்கிப் புத்தகம்படிப்போர் தொகைப் பெருக்கத்துக்கு இது சான்றும். மெகாலே என்று ஆங்கிலப் புலவரொருவர் பல ஆண்டுகளுக்குமுன் இருந்தார். அவர் ஆங்கில நாட்டுச்சரித்திரம் எழுதியதைவிற்றதொகையைப் பெறுவதற்கு ஒரு தடவையில் நான்கு லக்ஷரூபாவுக்குச் செக்குக் கொடுத்தாரென்று அவர் சரித்திரத்தில் எழுதியிருக்கிறது. மேல்நாடுகளில், புத்தகம் எழுதிப் பெரும்பணக்காரரானோர் அநேகர். நமதுநாட்டில் அவ்வாறு படிப்போர் தொகை மிகவுங்குறைவு. அருமையானபண்டைநூல்களை உலகத்துக்குப் பயன்படுமாறு பெருமுயற்சிசெய்து அச்சிட்டு வெளியிட்ட சில சான்றோர் தாம் அதற்குச்செலவிட்டபணமும் கிடைக்கப்பெறாதுவருந்துகின்றனர். நமதுநாட்டில் தமிழ்க்கல்வியைப் பெருக்குவதில் இக்குறை தீரும். தமிழறிஞர்பலரது இடுக்கணும் தொலையும். அதைப் பெருக்குவது தமிழரது முக்கியகடமை யென்பதில் ஐயமென்னை? உள்ள தமிழ்க்கல்வி இழந்துபோகாமல் இருப்பதற்கும் அதை நிறைவேற்றவேண்டியது அவசியமன்றே? அது பரவி விருத்தியடைவதற்கு நாம் கைக்கொள்ள வேண்டிய உபாயங்களை எனக்குத் தோன்றியவரை பின் எழுதுவேன்.

தமிழ்மொழி மிக்க மேன்மையையும் அகற்சியையும் உடையதாயினும் சிலகுறைகளை புமுடையதென்பதை மறுத்தற்கில்லை. அம்மொழியைச் சான்றோர், வழக்கு செய்யுள் என இரண்டாகப்பகுத்தனர். வழக்கென்பது உலகவழக்கு. பின்கண்ட நன்னூற்சூத்திரம் இதை விளக்கும். அது,

> "இலக்கண முடைய திலக்கணப் போலி
> மரூஉவென் றிரு மூவகை யியல்பும்
> இடக்க ரடக்கல் மங்கலங் குழூஉக்குறி
> எனுமூத் தகுதியோ டாறும் வழக்கியல்" (பெயரியல்–೩೦)

என்பது. இச்சூத்திரவுரையில், சங்கரநமச்சிவாயப்புலவர், "இயற்சொல் லாகிய உலகவழக்கையும் திரிசொல், திசைச்சொல், வடசொல்லாகிய செய்யுள்வழக்கையும்" என்று எழுதியிருப்பது கவனிக்கத்தக்கது. "யார்க்குந்–தம்பொருள் விளக்குந் தன்மையவியற்சொல்" (நன்-பெய-சசு)

என்றதனுல் உலகவழக்கென்பது பெரும்பான்மை பேச்சுவழக்கென்று பொருள்படும். மரபியலில் தொல்காப்பியர் "வழக்கெனப் படுவ துயர்ந் தோர் மேற்றே-நிகழ்ச்சி யவர்கட் டாக லான" (கூஉ) ஏன்று சூத்திரஞ் செய்திருப்பதைக்கொண்டு வழக்கென்பதற்கு வேறுபொருள் கூறுவாரு முளர். செய்யுளென்பது "பாட்டு உரை நூல்" என மூவகைப்படும். செய்புளிலக்கணத்தை நன்னூலார் பின்கண்டசூத்திரத்திற் கூறுகின்ற னர். அது,

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்புள்" (பெயரியல்-கக.)

என்பது. செய்புள் அறிஞர்களாற் புனைபப்படுவது. அது பெரும்பா லும் எழுத்திலமைக்கப்படும். நூற் செய்யுள், பாச்செய்புளிரண்டும் தமிழில் மிகுந்திருக்கின்றன. ஆயினும் நூலிற் சில மாறுதல்கள் செய்ய வேண்டியன வளவென்று நினைக்கிறேன். உரைச்செய்புள் அல்லது உரைகடை தமிழில் முற்காலத்தில் அதிகமில்லை. சூத்திரங்களுக்கும் பாச்செய்புளுக்கும் அவைகளின் பொருளைவிளக்கிச் சில வுரையாசிரியர் கள் எழுதியன வள. தொல்காப்பியர்,

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றொழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
முவகை நடையே நான்கென மொழிப" (கஎச)

என்று செய்புளியலிற் சொல்லிய சூத்திரவுரையில் உரையாசிரியர்கள் "பாட்டிடைவைத்த குறிப்பினானும் என்பது ஒருபாட்டினை இடை யிடை கொண்டுநிற்குங் கருத்தினன் வருவன....அவை தாடிப்யாத் திரையும் சிலப்பதிகாரமும் போல்வன" எனறும், "பாவின்றொழுந்த கிளவியானும் என்பது பாட்டின்றிச் சூத்திரத்திற்குப் பொருளொழுது வனபோல்வன" என்றும், "பொருளொடு புணராப் பொய்ம்மொழியானும் என்பது ஒருபொருளின்றிப் பொய்பட்டத் தொடர்ந்துசொல்லுவன; அவை ஓர் யானையும் குரீஇயும் தம்முள் நட்பாடி இன்புழிச்சென்று இன்னவாறு செய்தனவென்று ஆவற்குக்கியைபாப் பொருள் படத்

தொடர்நிலைபான் ஒருவனுழை ஒருவன்கற்று வரலாற்றுமுறையான் வரு கின்றன" என்றும், "பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் என் பது பொய்யெனப்படாது மெய்யெனப்பட்டும் நகுதற்கேதுவாகுந் தொடர்நிலை .... அவையாவன சிறுகுரீஇபுரையும் தந்திரவாக்கியமும் போல்வன" என்றும் எழுதியிருப்பதால் முற்காலத்தில் தொடர்நிலைச் செய்யுள்களுட் பாட்டுக்களுக்கிடையிடையே விடயங்களும், சூத்திரங் களுக்குப்பொருளும், பொய்க்கதையும், வேடிக்கைக்கதையும், உரைநடை யில் எழுதப்பட்டன என்பது விளங்குகிறது. ஆங்கிலம், பிரான்சு, ஜேர்மன் முதலிய மேல்நாட்டுப்பாஷைகளில், சகலசாஸ்திரங்களும் சரித் திரங்களும் மற்றுமுள்ளனவு மெல்லாம் உரைநடையில் எழுதப்படுகின் றன. பொருள்களை அழகாயும் தெளிவாயும் வன்மையுடனும் விவரிப்ப தில் அம்மொழிகளிலுள்ள உரைநடை மிகச்சிறந்தவை. தமிழிலோ மதம், ஜோசியம், வைத்தியம், பாதம், இசை, மற்றுமுள்ளகலைகள், நீதி நூல், புராணம் முதலிய யாவும் பாச்செய்புளிற் சொல்லப்படுகின்றன. அவைகளிலுள்ள திரிசொல், சந்தி, சொற்றொகுதியின் அமைவு இவைக ளாற் பொருள் எளிதிற் புலப்படுவதில்லை. கன்முய்க் கற்றுணர்ந்தோர்க் கன்றி அவை பயன்படுவது அரிது. சொற்றொடரின்பொருளைபறிவ தற்கே பெரும்பாலும் பாடம் கேட்டாகவேண்டியதாயிருக்கிறது. அவற்றிற் சொல்லியிருக்கும்விஷயம் கடினமாயிருந்தால் அதை அறி வதற்குள்ள கஷ்டம் கணி. வைஷ்ணவர்கள் மதசம்பந்தமானவிஷயங் களையும் ஆழ்வார்கள் முதலியோர் சரித்திரங்களையும் அவற்றை அறிய விரும்பும் மக்கள் எளிதில் உணரும்பொருட்டு மணிப்பிரவாள உரை நடையில் எழுதியிருக்கின்றனர். மணிப்பிரவாளம் என்பது ஆரியர், ஆருகதர், பௌத்தர், இவர்கள் தென்னாடுபோந்து வடமொழியிலுள்ள விஷயங்களைத் தமிழிற்சொல்லமுபன்றபோது உண்டாகியது. மணி என்பது முத்து. பிரவாளம் என்பது பவளம். முத்தையும் பவளத் தையும் கோத்ததுபோல வடமொழியும் தென்மொழியுங்கோத்த மொழித் தொடர் என்பது பொருள். இவற்றில் எது முத்து எது பவளம் என் பதைத் தீர்மானிப்பதில் ஆராய்பவருண்டாகுமென்பதில் ஐயமில்லை. மணிப்பிரவாளநடையைக்கைக்கொள்ளாவிட்டால் திருவாய்மொழி யியாக்கியானங்களிலுள்ள பொருள்களைச் சுத்தத் தமிழிற் புலப்படுத்த முடியுமென்று தோன்றவில்லை. மணிப்பிரவாளம் பாச்செய்புள்களிலும்

காணப்படும். இவ்விரவுமொழிக்குப் பெயர் முதலில் கி. பி. பதினே ராம் நூற்றாண்டினியற்றிய வீரசோழியத்திற் காணப்படுகிறது. அது:

"இடையே வடவெழுத் தெய்தில் விரவிய லீண்டெதுகை
நடையேது மில்லா மணிப்பிர வாளநற் றெய்வச்சொல்லின்
இடையே முடியும் பதமுடைத் தாங்கிள விக்கவியின்
முடையே துறைநற் பிரளிகை யாதி துணிந்தறியே" (அலங்-சூ0)

என்பது. மணிப்பிரவாளத்துக்கு எதுகையில்லை என்பது இவர் கொள்கை. ஆங்கிலராட்சி இந்நாட்டில் நடைபெறத்தொடங்கியபின்னர்த் தமிழ்ச்சமாசாரப்பத்திரிகைகள் தோன்றிப்பெருகுகின்றன. "செந்தமிழ்" போன்ற பத்திரிகைகளும் உண்டாயின. மொழிபெயர்ப்புக்களும் வேறு புத்தகங்களும் தமிழ் உரைநடையிலுண்டாயின. சில யாண்டுகளாய் நாவல் எனப் பெயரிய கட்டுக்கதைகள் பெருகிவருகின்றன. இவைகள் உரைநடையில் எழுதப்பட்டாலும் பெரும்பாலும் தமிழை நன்றாய்க் கற்றுணராதவர்களால் எழுதப்படுதலால் தமிழ் நன்றாயிருப்பதில்லை. இன்னும் பலதோஷங்களும் அப்புத்தகங்களிற் காணப்படும். நல்ல தமிழிற் குற்றமின்றி இயற்றப்பட்ட உரைநடைப்புத்தகங்களும் தமிழ்ப் புலவர்களால் இயற்றப்பட்டு வெளிவந்துள்ளன. ராசாங்க நடவடிக்கைத் தமிழை இவற்றோடுசேர்த்து யோசிப்பதிற் பயனில்லை. இனி, பல பல சாத்திரங்கள் சரித்திரங்கள், வேதாந்தம், மற்றுமுள்ள பலவிஷயங்கள் ஆகியவற்றைக் குற்றமற்றதும், தெளிவும் அழகும் வாய்ந்ததுமான தமிழுரைநடையில் எழுதுவதனால் தமிழ்மக்கள் பெரி தும் பயனடைவார்கள்.

இனி, உரைநடை எவ்வாறிருக்கவேண்டுமென்பதை எனக்குத் தோன்றியவாறு சொல்லுகிறேன். தமிழிலக்கணத்திற் சந்தியென்று ஒன்றிருப்பது சொற்றொடரின்பொருள் விளங்குவதற்குத் தடை. ஆங்கி லம் முதலிய மேல்நாட்டுமொழிகளிற் சந்தியில்லாதிருப்பது அவை களின் தெளிவுக்குக் காரணமாயிருக்கிறது. தமிழர் பேச்சுவழக்கிற் சந் தியை உபயோகிப்பதில்லை. அதனால் ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறிவதிற் கஷ்டம் இல்லை. உரைநடை அல்லது வாசகத்தை எழுதும் பொழுது வீணாசந்தியிலக்கணத்தைக் கைவிட்டுப் பதங்களைத் தனித் தனியே எழுதவேண்டும். யமகவந்தாதிச்செய்யுள் ஏகபாதம் முதலிய வற்றைப் பிரிப்பவரைப் பார்ப்பதனால் நான் சொல்லுவது விளங்கும்.

ஒரு செய்யுளிலுள்ள சொற்களைப் பலவகையாகப் பிரிப்பதனால் அந்தச் செய்யுள் வெவ்வேறு சொற்றொடர்களையுடையதாகிப் பலபொருள்களைக் கொடுக்கின்றது. சந்தியிலக்கணத்திற் புணர்ந்தபதங்களை இப்படிப் பிரிக்கிறதோ? அப்படிப்பிரிக்கிறதோ? என்னும் ஐயம் நீங்கும் வரை சொற்றொடரின்பொருள் விளங்காதே. இக்காலத்திற் சில ஆண்டோர் சந்தியிலக்கணத்தைவிட்டுச் சொற்களைத்தனித்தனியே எழுதிவருவதைப் பார்க்க மிகவும் ஆறுதல் உண்டாகிறது.

உரைநடையில் திரிசொற்பிரயோகத்தைத் தவிர்க்கவேண்டும். இயற்சொற்களையே பெரும்பான்மை உபயோகித்தல்வேண்டும். இலக்கணவழுப் புகாமற் காக்கவேண்டும். இழிவழக்கிலுள்ள இயற்சொற்கள் இலக்கணவழுவினாலேனும், அவைகளைத் தவிர்த்தல்வேண்டும். தமிழ்ச் சொற்கள் இருக்கப் பிறபாஷைச்சொற்களைச் சேர்ப்பது தவறேயாம். தாசில்தார், தாலூகா, ஜில்லா, சப்கோர்ட்டு, முனிசீப் கோர்ட்டு, வக்கீல் முதலிய பல சொற்கள், மகம்மதிய ராட்சிக்காலத்திலும், ஆங்கிலேய ராட்சிக்காலத்திலும் தமிழியற்சொற்கள்போல நடைபெற்றுவருகின்றன. தமிழ்மக்களியாவரும் அவற்றின்பொருளை அறிவர். அவற்றின் பொருளையுணர்த்தக்கூடிய வேறுபதங்களை அவற்றுக்குப் பிரதியாகச்சொன்னால் அறியார். உதாரணம்:—ஹைக்கோர்ட்டு என்றால் யாவரும் அறிவர். அதை உயர்தரமன்றம் என்று சிலர் எழுதுகின்றனர். அதைப்படிப்போர் அதன்பொருளையறியாது மயங்குகின்றதைப் பார்த்திருக்கிறேன். அவைகள் முதலிற் பிறபாஷைமொழிகளாயிருந்தாலும் தமிழியற்சொற்கள்போல வழங்கிவிட்டன. "கடிசொல் லில்லை காலத்துப் படினே" (எச்—டுசு) எனத் தொல்காப்பியர் சொல்லியபடி இவை தமிழியற்சொல்லேயாம். நன்னூலார் இவற்றைத் திசைச்சொல் என்பர். "ஒன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினும்—தங்குறிப் பினவே திசைச்சொல் லென்ப" (பெய—கசு) என்பது அதை விளக்கும். "ஒன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினும்" என்னும் சொற்றொடர் தொல்காப்பியர் திசைச்சொல் இலக்கணம் சொல்லும் சூத்திரத்தோடு நன்னூலார் சேர்த்தனர். இவ்வகைமொழிகளை ஆளும்பொழுது சிலசமயம் வடவெழுத்துக்களையும் ஆளவேண்டிவரும். தமிழர் அறியாத புதுவிஷயங்கள் பலவுள. ஆங்கில உரைநடைப் புத்தகங்களை எடுத்து விரித்தால் விஷயங்கள் பாராக்களாய்ப் பிரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். காமா,

புல்டாப், பாரா என்பவற்றை யுணர்த்தும் தமிழ்ப்பதம் என்னவென்று ஆராய்ந்தால், கிடைப்பதரிது. ஒரே புத்தகம் பல வால்யூம்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. வால்யூம் என்பதற்குச் சரியான தமிழ்ப் பதம் கிடைப்பதரிது. இன்னும் இவைபோல்வன பலவுள. ஆங்கிலத்தில் 'ஸென்டென்ஸ்' என்பதை வாக்கியம் என்கிறோம். வாக்கியம் என்னும் பதம் தொல்காப்பியம் நன்னூல் இவைகளிற் காணப்படவில்லை. நன்னூலார் வாக்கியத்தையும் தொடர்மொழி என்பர். புலவர்கள் வாக்கியத்தைத் தொடர்மொழி யென்றதை நான் கேட்டதில்லை.

மேல்நாட்டார் சென்ற நூற்றைம்பதாண்டுகளுக்குள், புதிதாய் அநேக விஷயங்களைக் கண்டுபிடித்து அபிவிருத்திசெய்திருக்கின்றனர். சாஸ்திரங்களின் உதவியைக்கொண்டு தொழில்களை விர்த்திசெய்து நாம் முன்னறியாத பல யந்திரங்களைச் செய்திருக்கின்றனர். அவர்கள் மேலான நிலைமையிலிருப்பதற்கு அவைகளும் முக்கியகாரணம். அவர்கள் இந் நாட்டிற் புகுவிட்ட அச்சியந்திரம் தமிழ்ப்புத்தகங்களின் பிரதிகளை அளவிறந்தனவாய் அதிசொற்பகாலத்திற் பெருக்குவதற்கு உதவியாயிருக்கிறது. பண்டைக்காலத்தில் ஓலையேட்டில் எழுதிய புத்தகத்துக்கும் அச்சுப்புத்தகத்துக்கும் உள்ளவேற்றுமையை அறியாதார் யாவர்? இதுநிற்க; அந்தச்சாத்திரங்களைத் தமிழில் எழுதவதானால் அந்தந்தச் சாஸ்திரங்களுக்குரிய பதங்களை (technical terms) தமிழ்ப்படுத்துவது எப்படி என்பதை யோசிக்கவேண்டும். பிரதிபதம் தமிழிற்கிடைப்பது அரிது. இப்படித் தங்கள் பாஷைப் பிரதிச்சொற்கள் கிடைப்பது அரிதாயிருந்ததால் ஐப்பானியர் மேல்நாட்டுப்பாஷைப்பதங்களை அப்படியே எடுத்துத் தங்கள் பாஷைச்சொற்களாக வழங்கினர். மேல்நாட்டாரோடு நாம் பழக இப்பதங்கள் ஒன்றுயிருப்பது மிகவும் பயன்படுகிறது. பிரதிபதம் கிடைப்பது அரிதாயிருந்தால் நாமும் ஐப்பானியரைப்போலச் செய்யவேண்டும்.

இக்காலத்தில் வாசகமெழுதுவோர் பலர், நாம்சொல்ல மேற்கொண்ட பொருள் பிழையறத் தெளிவாய்ச்சொல்லப்பட்டிருக்கிறதா என்பதைக் கவனியாது தாங்கள் எழுதும் உரைநடை திரிசொற்களற்று படிப்போர் மகிக்கும்வண்ணம் எழுதப்பட்டிருக்கிறதாவென்று கவனிக்கிறார்கள். படிப்போரிற் பலரும் அவ்வகுப்பினரே. அவர்கள் எழுதப்பட்டிருக்கும்

பொருளோநோக்காது சொன்னடையையே கவனிக்கின்றனர். சில தாமெழுதும் உரைநடைகளில் மேற்கோள் காட்டுமிடத்தில் 'என்றூர் பிறரும்' என எழுதுகின்றனர். அவ்வாறெழுதுவோர் தம்மாற் சுட்டப் படும் சான்றோர் இன்னாரென்றுவது, குறிப்பிட்டமேற்கோள் அச்சான் றோர் எழுதிய இன்னநூல் அல்லது பாட்டில் இன்ன இடத்திற் காணப் படுமென்றுவது எழுதுவதில்லை. தமிழோ அகன்றுபரந்த மொழி. தமிழ்ப்புலவர்களோ எண்ணிறந்தவர். சிலரியற்றிய நூலும் செய்யுளும் பலவாம். ஆதலாற் குறிப்பிட்டமேற்கோளைக் கண்டுபிடிப்பது அருமை யாகிறது. குறிப்பிட்ட புலவரோ அல்லது மேற்கோளோ இன்னார் அல் லது இன்னவை என்று சுட்டிக்காட்டினால் எழுதியவர்தாம் 'என்றூர் பிற ரும்' என்றதில் அடங்கார் என்னலாம். எழுதியவரே யொருமேற் கோளைச் சுட்டிக்காட்டினாலும் நமக்கு அது முழுதும் வேறுபொருள் தரலாம். ஆதலால் மேற்கோள்காட்டுபவர் அதை இயற்றியவரையும் மேற்கோள் உள்ள இடத்தையும் தெளிவாய்ச்சொல்லுவதே நன்றும்.

பொருள்களை விளக்கப்புகுந்த ஒருவர் 'வல்லார்வாய்க்கேட்டுணர்க' எனத் தாம் எழுதியதை முடிப்பது மிகவும் குறைபாடுடைத்தாம். அவர்செய்கை மடமை, கடிதம், படிப்போர்காலம் இவற்றை வீணாக்குவதாம்.

நான் சொல்லும் தோஷங்கள் நான் எழுதுவதில் நிறைந்திருக் தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது விடவேண்டுமென்று பிரார்த்திக் கிறேன். எல்லாரும் திருந்தும்போது நானும் திருந்துவேன். உரை நடையைப்பற்றி எழுதுவதை இந்தச்சமயம் இதனுடன் நிறுத்து கிறேன். இப்பொழுது நடைபெறும் செந்தமிழ் முதலிய பத்திரிகை களைப் பரிசோதனையுளில் நடத்தினால் எத்தனைபேருக்கு அவை பயன்படும்? 'வல்லார்வாய்க்கேட்டுணர்க' என்று நம்மவர் எழுதுவது பலமாகும்.

மேலும், தேசசரித்திரம் ஆன்றோர்சரித்திரம் முதலியவை தமிழிற் கிடையா. பலவகைச்சரித்திரங்களும் உண்மைப்பொருளை அமைத்து இயற்றப்படவேண்டும். இ. பி. எட்டாம்நூற்றாண்டுதொடங்கித் தமி ழாசர்கள் பலசெயல்களைக் கோயில் மதில் ஸ்தம்பம் முதலியவைகளிற் பொறித்திருப்பதாய்ச் சாசனபரிசோதகர்களால் தெரியவருகிறது. அவைகளிற் கலியப்தம் அல்லது சகாத்தம் கண்டிருப்பவை மிகச்சிலவே. பலவற்றில் இன்ன அரசனது ஆட்சியில் இத்தனையாவது ஆண்டு என்று

கண்டிருக்கிறது. அவ்வரசனது ஆட்சிதொடங்கியகாலம் தெரிந்தாற் கல்வெட்டிற் கண்டிருக்கிற ஆண்டு இன்னதென்று சொல்லலாம். அதைக் காட்டியிருக்கவில்லை. பலகல்வெட்டுக்களிற் சோழர்களாயிருந் தால் ராஜகேசரிவர்மன் ஆட்சியிலென்றுவது பரகேசரிவர்மன் ஆட்சியில் என்றுவது எழுதியிருக்கும். அந்த இரண்டுபட்டங்களும் சோழவமி சத்தரசருக்கு மாறிமாறி வருபவையாதலால் இன்னசோழன்காலத்துச் சாசனம் என்று கண்டுபிடிப்பது கஷ்டம். பாண்டியர்களாயிருந்தால் ஜடாவர்மன் அல்லது மாறவர்மன் என்னும் பட்டங்கள் மாறிவருவ துண்டு. சாஸனத்திற் பட்டப்பெயர்மட்டும் கொடுத்திருப்பவை பல. சாஸனபரிசோதகர்கள் இவ்வளவு கஷ்டத்திலும் தமிழரசர்கள்சரித்திரத் தையும் அவர்கள் காலத்தையும் அநேகமாய்க் கண்டுபிடித்துவிட்டார்கள். நம்மவர்கள் முழுமுயற்சியிருக்குமானால் தமிழ்நாட்டுச் சரித்திரத்தைக் கி. மு. பலநூற்றாண்டுகளுக்குமுன்தொடங்கி நாளிதுவரை கூடிய சீக் கிரத்தில் ஒருவாறு எழுதிவிடலாம் சான்றோர்கள் சரித்திரமும் அவ் வாறே. நமது நாட்டிற் சரித்திரத்தையாவது முக்கியசங்கதிகள்நிகழ்ந்த தெய்திகளையாவது எழுதிவைக்கும் வழக்கம் இல்லை. தமிழர் ஊழி என்று சொல்லுகிறார்கள். ஊழியை வரையறுத்துக்கூறுவோர் ஒருவ ரையுங் காண்கிலேன். அது, பொதுவாய் நீண்டகாலம் என்றுமட்டும் பொருள்படும். ஆரியர்கள் யுகம், சதுர்யுகம், மனுவந்தரம், பிரமகற்பம் முதலாகிய கணக்கில் சம்பவம் சொல்லுகின்றனர். அது மனத்திற் கெட்டாத நீண்டகாலத்தைக் காட்டும். சீனர், ஐப்பானியர், மேல்நாட் டார் எல்லாரும் சரித்திரங்களைக் காலக்குறிப்புடன் எழுதிவைத்திருக் கிறார்கள். நமதுநாட்டார் பலவகைச்சரித்திரங்களையும் இனியாவது எழுதிவைக்கமுயலவேண்டும். பெரியோர்கள்சரித்திரம் மிகவும் பயன் தரக்கூடியவை. ஆங்கிலேயர் புலவர்சரித்திரங்களைத் தொன்றுதொட் டுக் காலக்கிரமவரிசையிற் புலவர்காலம், சரித்திரம், அவரியற்றிய கிரந் தங்கள், சாஸ்திரங்கள், அவை ஒவ்வொன்றின் சாராம்சம், ஒவ்வொன் றின் முக்கியமானபாகங்கள், அவற்றைப்பற்றிய அபிப்பிராயங்கள் முத லிய யாவற்றையுங்கண்டு நான்கு பெரியவால்யூம் அடங்கிய புத்தகத்தை எழுதியிருக்கிறார்கள். பலவகை ஆங்கிலப்புலவர் விருத்தாந்தமுழுவதை யும் அதிற் பார்க்கலாம். காலக்கிரமமாய் இவ்வாறெழுதுவதனாற் கல்வி ஒவ்வொருவகையிலும் ஒவ்வொருகாலத்திற் பெருகினதும் சுருங்கின தும் மாறினதும் தெரியும். அர்த்தமாகாத கிரந்தம் கல்வியின் சரித்திர

ஆராய்ச்சியால் அர்த்தமாகவும் கூடும். நாம் தவறுகப் பொருள்செய் திருந்தால் இவ்வித ஆராய்ச்சியாற் சரியானபொருளை அறிந்து திருத்திக் கொள்ள ஹேதுவாகும். சிலர் புலவர்சரித்திரத்தை அகாதிக்கிரமமாக எழுத முயலுகின்றனர். சிலர் புலவர் இருந்தகாலத்தை ஆராய்வது மிகவும் குறைபாடுடையதாம் என்கின்றனர். அவர்கள் கூற்றுத் தமிழபி விர்த்திக்கு எவ்வளவு தடையைச்செய்யுமென்பதை அவர் உணரவில்லை. தமிழாராய்ச்சியிலும் தமிழ்சரித்திர ஆராய்ச்சியிலும் அதிநிபுணர்க ளான ஸ்ரீமான்கள் கோபிநாதராயர், வெங்கையர், கனகசபைப்பிள்ளை ஆகிய இவர்களைப் பாலியத்திலேயே இழந்தது தமிழரது தௌர்ப்பாக்கிய மேயாம்.

மேல்நாட்டிலுண்டாகியிருக்கும் சாஸ்திரங்கள் அல்லது கலைகளைத் தமிழில் எழுதிப்பரப்புவது அவசியமென்று முன்னமே சொன்னேன். நம்மவர்கள் அவைகளை நன்முய்க் கற்றுணர்ந்து மற்றவர்களும் அறியும் வண்ணம் எளியநடையில் தமிழில் எழுதவேண்டும். படிப்போர் படிப் படியாய்க் கற்பதற்கேற்றபடி புத்தகங்கள் அமைத்தல்வேண்டும். சில வேளை மொழிபெயர்ப்புக்களும் செய்யலாம். இவ்வாறுசெய்வதனாற் பலவகையிலும் தமிழ்மக்களின் அறிவு அபிவிர்த்தியாவதோடு விவசா யம், தொழில், வியாபாரம் முதலிய எல்லாம் அபிவிர்த்தியாகும். முற் காலத்தில் 64 கலைகள் இந்நாட்டில் இருந்தனவென்கின்றூர்கள். அவை களிற் பலவற்றின்பெயர்களைமட்டும் நாம் பண்டைப் புத்தகக்களிற் பார்க்கலாம்.

தமிழ்ப்பதங்களெல்லாம் அடங்கிய தமிழகராதி இல்லை. உள்ள அகராதிகளிற் சிலபதங்களுக்குப் பிழையான அர்த்தங்களும் காணப் படும். முற்காலத்தில் நூற்செய்யுளில் நிகண்டுகள் என்று எழுதியவை சிலவுள. அவைகளில், தமிழ்ப்பதங்கள் எல்லாவற்றையுங் காண்பது அரிது. அவற்றில் அகராதிமுறையில் எழுதப்பட்டனவும் உள. இடாலிதேசத்திலிருந்து இந்நாட்டில் வந்திருந்த வீரமாமுனிவர் என் னும் ஜெஸுஇட்பாதிரியார் (Father Beschi) முதலில் தமிழுரை நடையிற் சதுரகராதியை எழுதினர். தமிழ்ப்பதங்களெல்லாம் அடங் கியதும் அவற்றில் எல்லாப்பொருள்களும் அடங்கியதுமான தமிழக ராதியில்லாதது குறைவே. பதங்கள் ஒவ்வொருபொருளிலும் பிர

யோகிக்கப்பட்டிருப்பதற்கு உதாரணங்களும் அதிற் காட்டப்படவேண்டும். பதங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டிய எல்லாவற்றையும் எழுதி ஒருவிதக் குறைபாடுமில்லாததாய் அதை அமைத்தல்வேண்டும்.

தமிழ்நாட்டில் தமிழ்ப்புத்தகசாலைகளும் தமிழ் வாசகசாலைகளும் போதிய அளவு இல்லை. இரண்டுவருடத்திற்குமுன் யான்விசாரித்த போது தெலுங்கர் சிலர் தங்கள் சுயமுயற்சியால் 5, 6 ஆண்டுகளுக்குள் 600 புத்தகசாலைகளும் வாசகசாலைகளும் பல இடங்களில் ஸ்தாபித்தார்க ளென அறிந்தேன். தமிழர்கள் ஒவ்வொன்றும் ராசாங்கத்தார்செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பது பயனற்றதெனத்தோன்றுகிறது. வங்க நாட்டாரும் மகாராஷ்டிரதேசத்தாரும் தங்களுடையமுயற்சியால் மேலான நிலைமைக்குத் தங்கள் பாஷைகளைக் கொண்டுவந்திருக்கின்றனர். தெலுங் கர்கள் பாஷாபிவிர்த்திக்கு நன்முயற்சி செய்கின்றார்கள். நேற்றுப்பிறந்த மலையாளபாஷை அபிவிர்த்திசெய்யப்படுகிறது. இந்தப்பாஷைகளுக் கெல்லாம் முற்பட்டதும் மேன்மையுடையதுமான தமிழ், தமிழரது அசட் டையாற் குன்றியிருக்கிறது. தமிழ்மொழிபேசுவோர் 150 லக்ஷம் பேர் சென்னைபிராஜதானியில் உளரென்பது ராஜாங்கத்தாரின் பழையகணக் காற் றெரிந்தது. இப்பொழுது எங்குமுள்ளவர்களின்தொகையைக் கணக்கிட்டால் அத்தொகை 200 லக்ஷத்தையெட்டுமென்று தோன்று கிறது. தமிழபிவிர்த்திக்கென்று இவர்கள் தங்களாலியன்ற தொகையை அவர்கள் ஜன்மத்தில் ஒருதடவையிற்கொடுத்தால் சராசரி ஒருவர்க்கு ஒருரூபாவீதம் கிடைக்காதா? தமிழினிடத்து அன்புபாராட்டும் அறிஞர்களும் நாட்டிலுள்ளாரனைவரும் சேர்ந்து ஒருசபை ஸ்தாபித்து ஒத்தமனத்துடன் உழைத்தால் உயர்ந்தது ஒருவருடத்திற்குள் இது முடியும். நாடுமுழுவதையும் பங்கிட்டு ஒவ்வொருபங்கையும் ஒருவ ரிடத்திலோ பலரிடத்திலோ ஒப்படைத்து, இப்பங்கில் ஜனத்தொகை இவ்வளவு; அவர்கள் நிலைமை இன்னது; இத்தனை ரூபா சேகரித்துக் கொடுப்பது உங்கள்பொறுப்பு; என்று ஏற்பாடுசெய்யவேண்டும். 200 லக்ஷரூபா சேகரிப்பது பெரிதல்ல. எல்லாரும் முழுமனதுடன் வேலை செய்யவேண்டும். தமிழ்நாட்டில் ஜமீந்தார்களும், நிலப்பரப்பு அதிகம் உடையவர்களும், பெருத்தவியாபாரிகளும் பலர் இருக்கிறார்கள். அன் றியும், சைவ வைஷ்ணவ மதங்களைத் தமிழ்வாயிலாய்ப்பரப்புவதற்கென்று ஏற்பட்ட மடங்களும், பரோபகாரத்தின்பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டதும்

பெருவருவாயுடையதுமான தர்மஸ்தாபனங்களும், ஆலயங்களும் முதலிய பலமார்க்கங்கள் உள. சோழஅரசர்கள் காலத்தில் ஆலயங்களில் வித்தை கற்பிக்கப்பட்டது என்பது கல்வெட்டுக்களால் தெரிகிறது. தமிழர்களான நாட்டுக்கோட்டைநகரத்தார் கோயில்கட்டுவதிற் பணம் செலவழிப்பதுபோல மதாபிமானத்தைப் பரப்புவதற்கு முக்கியகாரணமாயுள்ள தமிழ்க்கல்விக்கென்று சில ஆண்டுகளுக்குக் கொடுத்துவந்தாற் பெருந்தொகை சேருமே. தமிழ்பேசுபவர்களாயும் தமிழில் அபிமானமுள்ளவர்களாயுமுள்ள மகம்மதிய, கிறிஸ்தவப் பிரபுக்கள் எத்துணையர் உளர். அமெரிக்காவிற் கல்வியபிவிர்த்திக்காகப் பெருந்தனத்தைப் பிரபுக்கள் கொடுக்கின்றனர். ரோசின் என்னெய்வியாபாரத்தால் திரண்டமுதல் குவித்திருக்கிற ராக்பெல்லர் என்பவர் கல்வியபிவிர்த்திக்காக ஒரு தடவையில் 9 கோடிரூபா கொடுத்தார். அப்படிக்கொடுக்கும் தனவந்தர் அந்நாட்டிற் பலர். இக்காலத்தில் தமிழை அபிவிருத்திசெய்துவந்த தமிழரசர்களில்லை. ராஜாங்கத்தார் ஆங்கிலேயர்; தமிழின் அருமை அறியாதவர். பிறநாடுகளில் நடப்பதுபோல நமதுநாட்டார் தங்கள் முன்னேற்றத்திற்கு வேண்டியவற்றை என் தாங்களே செய்துகொள்ளக் கூடாது. முயற்சிசெய்தால் முடியாதகாரியமும் உளதா? இரண்டு கோடிரூபாபின்வட்டித்தொகையைக்கொண்டுதமிழபிவிர்த்தியத்தாராளமாய்ச் செய்யலாமே. தமிழினிடத்து உண்மையன்போடு உழைப்போர் பலர் வேண்டும். பட்டத்திற்கும் பதவிக்கும் பாடுபடுவோர் தமிழரில் எத்துணையர் உளர்? சட்டசபையின் அங்கத்தினராக அழிக்கும் தொகை எவ்வளவு? ஒருவர் லக்ஷரூபா செலவழித்தனராம். சட்டசபை அங்கத்தினராயிருக்கப்போவதோ சில ஆண்டுகளே. அங்கத்தினராகியும் செய்யும் காரியமென்ன? ஒருதடவை ஒரு தமிழர் முனிசிபல் கௌன்சிலராகச்சுமார் 20000 ரூபா செலவழித்ததை நான் அறிவேன். மற்றொருவர் தேவஸ்தானம் கமிட்டிமெம்பராகச்செலவழித்தது 60,000 ரூபாவைவிட்டும். பட்டம் அடைவதற்குச் சிலர் அழிக்கும் தொகையைக்கேட்டால் ஒருவரைப் பிரமிக்கச்செய்யும். ஒருவர் ஒருதடவையில் 70,000 ரூபா செலவழித்தனர் என்கின்றனர். பலர் பிறர்மெச்சச்சொல்லிக்கொள்ளுவதுபோல் உண்மையான அன்பு தமிழினிடத்து வைத்திருப்பரானால் தமிழ்க்கல்வி நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் ஓங்கிப் பாவுமே. தமிழ்வித்தியாசாலைகளும், சங்கங்களும், பத்திரிகைகளும் பெருங்கணக்கினவாய் வற்படவேண்டும். புத்தகங்கள் செவ்வனே அச்சிடப்பட்டுக் கிரமமானவிலைக்கு முட்டின்றி யாவர்க்கும் கிடைக்கும் படிசெய்யவேண்டும். தமிழ்ப்புலவர்களனைவரும், தமிழ்க்கு அன்புபூண்ட செல்வவந்தர் முதலியோரும் ஆண்டுக் கொருமுறையாவது பலரும் கூடியிருந்து பாஷாபிவிருத்திக்குரியஉபாயங்களை ஆராயவேண்டும். தமிழினிடத்து உண்மையன்பும் ஒத்தமனமுமிருந்தால் தமிழ்மொழி உலகத்திலுள்ள எந்த மொழிக்கும் எவ்வகையிலும் தாழ்ந்ததன்றென்று சொற்ப காலத்திற் காட்டலாம். தமிழுக்கென்று உண்மையில் உழைத்தவர்களிற்

காலஞ்சென்ற சில பெரியோர் பெயரை ஈண்டுக் குறிக்கின்றேன். அவர்கள், ஸ்ரீமான்களான ஆறுமுகநாவலர், பாண்டித்துரைச்சாமித்தேவர், தாமோதரம்பிள்ளை, கனகசபைப்பிள்ளை என்பவராவர். இவர்கள் காலத்திற்குமுன் பலர் இருந்தனர். பாண்டித்துரையில்லாவிட்டால் இப்பொழுது மதுரையில் நிலைபெற்றிருக்கும் தமிழ்ச்சங்கமேது? செந்தமிழ்ப்பத்திரிகையேது? புத்தகசாலையேது? வித்தியாசாலையேது? சங்கத்தச்சில் வெளிவந்துள்ள புத்தகங்கள் எது? ஆறுமுகநாவலர் பொன் நிலமாதராசையை அறத்துறந்து நல்லபதவிபெறுவதை வெறுத்துத் தமிழையும் கடவுளிடத்தன்பையும் பாவச்செய்வதே பிறந்தபயன் எனக்கொண்டு இரவும் பகலும் உழைத்தனர். தம்முயற்சிக்கு நேரிட்ட இடையூறுகளை அவர் பொருட்படுத்தவில்லை. வண்ணார்பண்ணையில், சைவப்பிரகாசவித்தியாசாலையை நிலைநாட்டி அதைநடத்தக் கையிற் பொருளில்லாமல் அரிசிப்பிணைகூடையெடுத்து அதன் உதவியைக்கொண்டு நடத்தினர். சிதம்பரம் சைவப்பிரகாசவித்தியாசாலை யாரும்கொண்டாடும் படி செவ்வனே நடைபெறுகின்றது. இவர் அச்சிற்பதித்து வெளியிட்ட தமிழ்ப்புத்தகங்கள் எத்தனை? அவர் ஒருவர் முயற்சியால் தமிழ்க் கல்வி எவ்வளவு பரவியது? பல ஆறுமுகநாவலர்களை அவதரிக்கச்செய்ய வேண்டுமென்று கடவுளைப்பிரார்த்திக்கிறேன். தாமோதரம்பிள்ளை, கனகசபைப்பிள்ளை இருவரும் உத்தியோகத்திலிருந்தவராயிருந்தும் தமிழுக்கு உழைத்ததை அறியாதார் யாவர்? இவர்கள் மேகத்தைப் போல் ஒருவகைக் கைம்மாறும்வேண்டாது உழைத்தவர்களாவார்கள்.

தமிழைக்கற்றறிந்தோரெல்லாம் தமிழ்க்கல்வியைப் பரப்புவதற்கு முயலவேண்டும். சிலர், இலக்கணக்கொத்துடையார் "முற்காலத்துப் போதகாசிரியர்–மொழிகுவர் மறையார் அருமையாம் விதிகளை–வழிவழி நின்று வழங்கற் பொருட்டே" "இக்காலத்தார் என்பய னிவைந்தோ–இசைபோர் தாமு மிசையார் பூமியில்" (பாயிரம்–கக) என்று கூறியதற்கு இலக்காகின்றனர். அவர்கள் ஓழுக்கம் மாறவேண்டும். சான்றோர் ஒருவர் கூறியவார்த்தைகளை எழுதி இதை இம்மட்டில் முடிக்கின்றேன். அது, "தங்கள் சுயபாஷையின் வன்மையாகிய செல்வம் கொள்ளை போய்க்கொண்டிருக்கும்பொழுது ரோஷமாவது முயற்சியாவது இல்லாமல் வேடிக்கைபார்த்துக்கொண்டிருக்கும் அறிவீனத்தைமேற்கொண்ட நாட்டார், பிறநாதவியை நாடாது தன்முயற்சியுள்ள ஜனங்களுக்குரிய மதிப்பையும் பிரியாதையையும் இழந்துபோகிறார்கள்; நாகரீகம்பெற்ற உலகிலுள்ள நாட்டார்களிடையே தங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய அந்தஸ்தினின்றும் தாழ்த்தப்படுகிறார்கள்" என்பது.

தமிழ்மொழி தழைத்தோங்கி எல்லாத்துறைகளிலும் வளரத்தக்க ஊக்கத்தையும் முயற்சியையும் தமிழ்மக்களுக்குக் கொடுத்து எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக. சுபம். சுபம். சுபம்.

———

பழந்தமிழ்நூற்சொல்.

பழந்தமிழ்நூல்களில் வருஞ் சொற்களின் சுவரூபத்தை நிரூபித்து நிச்சயஞ்செய்தலும், அவற்றின் பொருள்களை அறிந்து நிச்சயஞ் செய்தலும் இலாகவமான காரியமல்ல. பலவகைநிகண்டுநூல்களின் பயிற்சியும், பலவகைத் தமிழ்நூல்களின் பயிற்சியும், நல்லாசிரியர்வாய்க் கேட்டலும் வேண்டும். நற்றிணை, குறுந்தொகை முதலிய நறுந்தமிழ் நூல்களிலே அருஞ்சொற்கள் எத்தனையோ வருகின்றன. அழுந்து, சேத்து, ஞண்டலை, புகவு, பாசு, மாறு முதலியன; சில சில சொற்களை நோக்குவாம்.

நற்றிணையிலே உ-ங் கவியிலே "அழுந்து பட வீழ்ந்த-பெருந் தண் குன்றத் தொலிவ ளீந்து" என்புழி "அழுந்து" என ஒரு சொல் வருகின்றது. அழுந்து என்பது ஆழம் எனப் பொருள்படும். "குண்டழுந்தொடுகயங்கள்கூறுகெம்பீரமாழம்" என்பது சூடாமணி நிகண்டு. அடித்துநின்ற வீழ்தல் என்பது கீழேபோதல் எனப் பொருள்படும். "பார்பக வீழ்ந்த" எனப் பின்னும் வரும். "அழுந்து படவீழ்ந்த" என்பது ஈந்துக்கு விசேடணம். உரைகாரர் அதற்கு "ஆழ்ந்துபடக்கிடந்த" என உரை கூறி "அழுந்துபடல்-ஆழ்ந்துபடல் (தொல். சொல். சஅஉ) "அந் நாற்சொல்லும்" என்பதன்கட்கிடந்த "காட்டல்வலிய" என்பதனால் "குறுக்கல் விரித்தலாகிய இருவகைவிகார முங் கொள்க" என்று விசேடவுரையுங் கூறினர்.

நூ-ங் கவியிலே வருஞ் சேத்து என்பதற்கு உரைகாரர் "கருங்கி" என உரை கூறினர். அப்பொருளிலேவருவது சேத்து என்பதா? செத்து என்பதா? உற்பத்தியாது? தென்மொழியா? வடமொழியா?

நு-ங் கவியிலே வரும் அற்சிரம் என்பதற்கு "முன்பனிக்காலம்" எனப் பொருள் கூறினர். முன்பனிக்காலத்தை உணர்த்துவது அச் சிரம் என்பதா? அற்சிரம் என்பதா? சிலப்பதிகாரத்திலே ஊர்காண் காதையிலே அச்சிரம் எனே வருமாறென்னே? உற்பத்தியாது? வட மொழியா? தென்மொழியா? பிங்கல திவாகரங்களிலே எங்ஙனங் கூறப் பட்டது.

நஅ-ங் கவியிலே "மெல்லம்புலம்பன்" என ஒரு சொல் வருகின்றது. அது நெய்தலிலத்தலைவன் எனப் பொருள்படும். சூடாமணி நிகண்டுந் தொல்காப்பியப் பொருளதிகாரவுரையும் அதற்குச் சான்றாகும். உரைகாரர் "மெல்லிய கடற்சேர்ப்பன்" என்றார். மெல்லிய என்பதற்குச் சான்று யாது? திருக்கோவையாருரைகாரர் எப்பொருள் கொண்டார்? புலம்பு என்பதன் பொருள் யாது?

நகூ-ங் கவியிலே "ஆண்டலைமதிலாகவும்" என்புழி வரும் ஆண்டலை என்பது ஆண்டலைப் புள்வடிவமாகச் செய்துவைத்த பொறி எனப் பொருள்படும். அது சிலப்பதிகாரத்திலே அடைக்கலக்காதையிலே வரும் "ஆண்டலையடுப்பு" என்புழி உரையாற் பெறப்படும். உரைகாரர் "அரண்டலை எனப் பாடங்கொண்டு "அரண்மிக்க" என உரையுங் கூறினர். தலை என்பது மிகுதியை உணர்த்துமா? பின்னர் "அரண்கடந்த" என்பதனோடு மாறுபடாதா?

சுஎ-ங் கவியிலே வரும் "வாற் பெருந்தடி மிளிர்வையோடு புகர் வையரிசி" என்புழி உரைகாரர் தடி என்பதற்குத் தடிந்த என்றார். தடி என்பது தசையன்றே? மிளிர்வை-"ஆணத்தின்மேலிடப்படுவது" என்றார். இதற்குப் பிரமாணம் யாது? புகர்வு-உணவு என்றார். பிரமாணம் யாது? உணவை உணர்த்துவது புகா என்பதா? புகர்வு என்பதா? புகவு என்பதா?

சநு-ம் கவியிலே வரும் "பெருநீர்விளையுளெஞ்சிறுநல்வாழ்க்கை" என்புழி பெருநீர்-கடல். இது பிங்கலநிகண்டாற் பெறப்படும். விளையுள்-விளைவு; மீன் உப்பு முதலியன. உரைகாரர், "கடனீரை விளைவயலாகக் கொள்ளுகின்ற" என்றார். இதுவும் பொருந்துமா?

எஉ-ங் கவியிலே வரும் "உயிரோரன்ன செயிர்தீர் நட்பின்" என்புழி ஓர் என்பது இன்னோரென்ன என்புழிப் போல அசைநிலையாய் வந்ததா? ஒன்று என்பது குறித்துவந்ததா? ஒன்று என்பது குறித்தற்குப் பிரமாணம் யாது? "எழுத்தோரன்ன" (தொல்) "அவற்றோரன்ன" (தொல்) என்புழிவரும் ஓர் என்பது எங்ஙனங் கொள்ளப்படும்;

இறையனாரகப்பொருளுரையிலே "வேத்துமேயோர் பரிபாடல்" என ஒரு பெயர் வருகின்றது. அதனைப் படியெடுத்துத் திராவிடப் பிரகாசிகைகாரர் இரண்டிடத்திலே வரைந்தனர். அவர்போல வேறும் பலர் பத்திரிகைகளிலே வரைந்தனர். அதனை நாம் மறுத்துரையாடி வேறுகத்திருத்தி முன்னொரு செந்தமிழில் வரைந்தாம். அந்தத் திருத்தத்தை அங்கீகரித்து அறிஞர்களாகிய செந்தமிழ்ப்பத்திராதிபர் ஸ்ரீமான் திரு. நாராயணையங்காரவர்களும், பரீக்ஷகர் ஸ்ரீமான் வி. முத்துச்சுவாமியையாவர்களும் சான்றுரை கூறினர். இங்ஙனமாகவும் பின்னும் பலர் "வேத்துமேயோர்பரிபாடல்" என்பதை அங்கீகரித்து, தமிழ் என்பதைப் பற்றித் தாம் எழுதும் புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் எழுதுகின்றார்கள். சில மாணவகர் விடைப்பத்திரத்திலும் எழுதினர். இங்ஙனமாயின்; செந்தமிழ் எங்ஙனம் வளரும்?

திராவிடப்பிரகாசிகையிலே தென்மொழி என்பதற்குக் கூறிய "அழகியமொழி" என்னும் பொருளும், எடுத்துக்காட்டுவமை என்பதற்குக் கூறிய வடமொழிப்பெயராகிவரும் "நிதர்சனம்" என்பதும், நிரையன்மாறன், கருங்கோழியும் மோசியும் என்னும் பெயர்களும், பிரகதாரணியம், ஆதிகவிராசன் என்னும் பெயர்களும், சடுதி, நிகமம் முதலிய சொற்களும் "தேவர்குறள்" என்பதிலே "முனிமொழியும்" என்பதற்குக் கூறிய முடிபும், இராமபிரானுடைய முடிசூட்டு இராமாயணத்திலே உத்தரகாண்டத்திலே என்ற கதையும், சில இரகுவம்சக் கதையும் திராவிடகோகிலம் முதலியவைகளிலே மறுத்துரையாடப்பட்டிருக்கின்றன. படிப்போர் யாவருந் தேடிப்படித்தால் திருத்தங் காணலாம். பொருந்தாது என்போர் நமது கூற்றுக்களை மறுத்துரையாடுக.

பதினெண்கீழ்க்கணக்கிலே வரும் "இன்னாநாற்பது, இனியாநாற்பது என்னும் இரண்டனுள் இனியாநாற்பது என்பது "இனியவை நாற்பது" எனவுங் கொள்ளப்படுகின்றது. இரண்டும் ஆகாரவீற்றுச் சொற்களல்லவா? இலக்கணவிளக்கநூலார் எங்ஙனம் கொண்டார்?

சிவஞானசித்தியாரிலே உ–ம், சூத்திரத்திலே எ0–ம் கவியிலே வரும் "போசயித்திரு" என்பதைப் "போகசயித்திரு" என்று வழங்கு கின்றார்கள். போசயித்திரு உண்பிப்பவன். இது போத்திரு என்பதன் பிறவினை. சிலாக்கிரயோகிகள் "ஹொஜயிதரு" என்பது வருஞ் சொன் மாலையுங் காட்டுவர். இவ்வாறுய சொற்களைத் திருத்துதல் செந்தமிழ் வளர்ச்சிக்குக் காரணமாகும் என்பது நமது கருத்தாகும். படிப்போர் தங்கருத்தையுங் கூறக்கடவர்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னகம்.

கலித்தொகை-ஐயநீக்கம்.

முன்னுரை:—'கற்றறிந்தோர்போற்றுங் கலி'த்தொகையினை நன்கு ஆராய்ந்துணர்ந்த காலஞ்சென்ற என் நண்பர் ஸ்ரீமான். S. இராதாகிருஷ்ணையரவர்கட்கு, அத்தொகையினை,'த் தொகுத்தார்', 'இயற்றினர்' ஆகிய இருவேறு பகுதியினரைப்பற்றி எழுந்த ஐயங்காரணமாகச் செந்தமிழ் 14-ந் தொகுதியில்வெளிவந்த பொருளுரைக்கு விடையாக முன்னர் இஃது எழுதப்பெற்றது. பின்னர் இவ்வாராய்ச்சிக்கு இன்றியமையாத தாயிருந்த 'கலித்தொகை ஏட்டுப்பிரதி'யினையும் என் நண்பர் 'பெயர் விழையான்' என்பாரிடமிருந்து தருவித்துக்காட்ட ஐயரவர்களின் ஐயம் நீங்கிற்று. அன்னோர் ஐயம் நீங்கவே பன்னாள் சோர்வாக விடப்பெற்ற இவ்வாராய்ச்சி பிறர்க்கும் பயன்படுமாறு கருதிச் சில நண்பர் வேண்டு கோளின்படி இப்போது வெளியிடலாயிற்று.

ஏடு:–ஐயரவர்களுக்குக் காட்டிய ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரை யுடன் முற்றிய (பூரணமான) கலித்தொகை ஏடு ஒன்று $16\frac{3}{4}$ அங்குல நீளமும் $2\frac{1}{2}$ அங்குல அகலமுமுடைய 535 பக்கங்களைக்கொண்டது. பக்கம் ஒன்றிலுக்கு வரி 11 உடையது. இற்றைக்கு 229 வருடங் களுக்குமுன்னர் [கொல்லம் அசுவதி-ம் ஆண்டு விபவ வருஷம் புரட் டாசி மாதம் 2உ] எழுதப்பெற்றது. அவ்வேட்டில், நூல் தொகுத்தார், இயற்றினர், கோப்புமுறை, நூற்பெருமை என்பவைகளைப்பற்றி அடியிற் காட்டிய பாக்கள் வரையப்பெற்றுள்ளன.

கலிகண்டார்.

1. பெருங்கடுங்கோ பாலை குறிஞ்சி கபிலன்
மருதனிள நாகன் மருத—மருஞ்சோழ
னல்லுத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி.

கலிகோப்புமுறை.

2. போக்கெல்லாம் பாலை புணர்த னறுங்குறிஞ்சி
யாக்கமளி யூட லமர்மருத—நோக்கொன்றி
யில்லிருத்தன் முல்லை யிரங்கியபோக் கோநெய்தல்
புல்லுங் கலித்தொகைகோப் பு.

கலிதொகுத்தான்.

3. நாடும் பொருள்சான்ற நல்லந் துவனுசான்
சூடுபிறைச் சொக்கன் றுணைப்புலவோர்—தேடுவோர்
கூட்டுணவே வாழ்த்தோடு கொங்காங் கலியினையே
யூட்டினன் ஞாலத் தவர்க்கு.

கலியின்பெருமை.

4. திருத்தகு மாமுனிசிந் தாமணி கம்பன்
விருத்தக் கவிவளமும் வேண்டேம்—திருக்குறளோ
கொங்குவேண் மாக்கதையோ கொள்ளேம் நனியார்வேம்
பொங்குகலி யின்பப் பொருள்.

[இவற்றுள் இரண்டாம்பாட்டுள் நான்காம் அடி 'புல்லுங்கலிமுறை கோப்பு' என்றிருப்பதாகவும், அது கொற்கைப் பிரதியிற் கண்டபாடம் எனவும் தென்னாட்டுநண்பர் ஒருவர் எனக்கு வரைந்துள்ளார்.] இந் நான்குவெண்பாக்களும் ஏட்டின் முகதலையிற் பொறிக்கப்பட்டுள்ளன. யாவரால் இவை பாடப்பட்டன என்பது ஆராய்தல்வேண்டும். இவற் றுற் கலித்தொகை 'பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல்' என்ற முறையே ஐந்திணையாகக் கோக்கப்பெற்றதென்பதும், அவ்வைந்திணை யினையும் பாடினோர் முறையே, 'பெருங்கடுங்கோ, கபிலன், மருதனிள நாகன், சோழன் நல்லுத்திரன், நல்லந்துவன்' என ஐவராவர் என்பதும் அவ்வைவருள் 'ஆசிரியன் நல்லந்துவன்' என்பார் அத்தொகைக்குரிய கடவுள்வாழ்த்துப்பாடி, அவ்வைந்திணையும் முறையாகக் கலித்தொகை என்றபெயருடன் தொகுத்தார் என்பதும் பிறவும் நன்கு புலனாகின்றன.

இனி, இந்நான்கனுள் இரண்டாம்பாட்டுக் கலித்தொகை ஒன்றற்கே உரியதாதலை அறிஞர் நன்குணர்வர், திணைநூல்களுள், பாலைத்திணையை முதலாகவைத்து யாக்கப்பெற்றதால் பிற இன்மையின். இங்ஙனமாகவும் இவ்வெண்பா சிறிதுசிறிது பாடபேதமாக இம்முறைவைப்பே தன்வைப் பாக் கொண்டதாக நாற்கவிராசநம்பியகப்பொருள்விளக்க மூல ஏட்டி லும், உரை ஏட்டினிறுதியிலும் காணப்படுகின்றது; அச்சிடப்பட்டு மிருக்கின்றது [அகப்பொருள்விளக்கம், மதுரைத்தமிழ்ச்சங்கப்பதிப்பு 187-ம் பக்கம்; களத்தூர் வேதகிரிமுதலியார்பதிப்பு 179-ம் பக்கம்]. அகப்பொருள்விளக்கநூலுடையார் தாம்கொண்ட திணைமுறைவைப் போ–'குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், என்பது. 'சொல் விரித்த நூலின்றொகை' என்ற ஈற்றடி வேறுபாட்டினைக் கொள்ளினும், இந்நேரிசை இத்தொகை ஒன்றனுக்கே யுரித்தாதலைப் பாலைநோக்கி யுணர்க. ஆகவே, அகப்பொருள்விளக்கச்சூத்திரம் வகுத்து, உரையும் எழுதினர் என்று சொல்லப்படும். நாற்கவிராசநம்பி என்பார் இருந்த பாண்டியன் குலசேகரன்காலத்திலேயே இப்பாட்டு வழங்கியிருத்தல் ஓர்க. இஃதொன்றே?

நான்காம்பாட்டாகிய 'திருத்தகுமாமுனி' என்பது சில பாடபேதங்க ளுடன் சீவகசிந்தாமணி உரையேட்டின் இறுதியிற் காணப்படுகின்றது. அச்சிடப்பட்டுமிருக்கின்றது; [சிந்தாமணி இரண்டாம்பதிப்பு 916-ம் பக்கம்] பாடபேதம் ஒருபுறமிருக்க, இஃது ஒரு பழம்பாட்டே என்பது நிறுவப்பெறும், இம்முறையான் இவ்விரண்டுபாட்டினைச் சார்ந்திருக்கும் கலித்தொகையின் தொடர்பான ஏனைய இரண்டுவெண்பாக்களும், புரா தன் ஏட்டிற் காணப்படும் விதத்தில், பழையனவாகவே நிச்சயிக்கப்படும்.

அங்ஙனமாயின் இத்தொகையினை முதன்முறையாக அச்சிற்பதிப் பித்துத் தமிழுலகிற்குப் பேருபகாரஞ்செய்த ஸ்ரீமான். சி. வை. தாமோ தரம்பிள்ளையவர்கள் இப்பாட்டுக்களைக் காட்டாமை என்னையெனின், கலித்தொகை உரைமுற்றிய பிரதி ஒன்றேனும் அக்காலத்தே அவர்க்குக் கிட்டாமையானும், 'அங்கொருபகுதியும், இங்கு சிலபகுதியுமாகக் கிடைக்கப்பட்ட' உரை அபூர்த்தியான 'சில' பிரதிகளில் இவைகாணப் படாமையானும் என்க. பூரணமான உரைப்பிரதி இன்மையால் கோர்த்த வையும் பிறவும், கலித்தொகை அன்னோர் பதிப்புரை 28–29–30–ம்

பக்கங்களை நோக்கப் புலனுகும். 'தொகுத்தார்', 'நூல்கோத்தார்', 'பாட்டால் தொகுக்கப்பட்டது' எனப் பன்முறை இத்தொகை உரையாசிரியரும், பிறநூல் உரையாசிரியரும் எழுதியிருப்பதனையும் நோக்கியுணர்க.

ஒரு தொகையாகப் பலநூல்களினின்றும் திரட்டப்பெற்ற பாக்கள் 'செய்யுட்கோவை' [இது சான்றோர் செய்யுட்கோவை' எனவும் 'அகத்திரட்டு' எனவும் வழங்கும். தொல்காப்பிய உரையாசிரியராகிய ஆசிரியர் இளம்பூரணவடிகளால் எடுத்துப் பாராட்டப்படுகின்றது.] புறத்திரட்டு, எனவழங்கப்பெற்றதொன்று, பலர்பாடிய பற்பல வகையுற்ற பாக்களுள், கலிப்பாக்களைத் தந்தொகைக்கு ஏற்பக்கொண்டு, திணைக்கு உட்படுத்தி, வரம்பிட்டு முறைபடச் செப்பஞ்செய்து, அமைத்துத் தொகுத்தார் ஆசிரியர் நல்லந்துவனுர் என்க.

இதனை, 'மதுரைத்தமிழ்ச்சங்கம்' என ஒன்று இக்காலத்து நிறீஇய சீமான் பாண்டித்துரைத்தேவர் என்பார் காசிகாண்டம் தீர்த்த மகிமை யுரைத்தவத்தியாயம் 7-ம் செய்யுளாக உள்ள–'சத்தியர்தானஞ் சம்மதம்' என்றதைத் தமது 'பன்னூற்றிரட்டு' என்னும் நூலுள், இடத்திற் கேற்றவாறு 'ஒழுக்கம்' என்னும் அதிகாரத்துப் பத்தாம்செய்யுளாக அறத்துப்பாலுள் தொகுத்து அமைத்தமை ஒப்பக் கொள்க. இங்ஙனம் தொகுத்தமைத்தலை நுண்ணறிவொடு நோக்கலே சிறப்புடைத்து. உதாரணமாகக் கலித்தொகையில்வரும் கலிவெண்பாக்கள் எட்டு; அவற்றுள் நான்குபாட்டினை, முதலாவதாக உள்ள பாலைத்திணையுள் ஆறாம் பாட்டுக்கு ஒன்றுக முறையே 6–12–18–24–என்ற இலக்கப்பாட்டாகவும், இரண்டாவதாக உள்ள குறிஞ்சித்திணையுள் முதல், இடை, கடையுள் முறையே ஒவ்வொன்றுக மூன்றுபாட்டினை 1–15–29 என்ற இலக்கப்பாட்டாகவும் வைத்தமைத்தமை காண்க.. இவற்றின் காரணம் உய்த்துணர்க. இங்ஙனம் அமையப்பெற்றவை பல. ஆசிரியத்தால் ஒவ்வோர் பகுதியைக் குறைவறப் பாடினுர் பாடல்களை ஒவ்வொருதிணையெனவுத்துத் தொகுத்தமைக்கு ஐங்குறுநூறு ஒரு சிறந்த உதாரணமாம். கலிவகையின் தொகுப்பே பற்றுக உட்கொண்டு தொகுக்கப்பெற்ற இத்தொகை, பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்ற ஐந்திணைக்கும் முறையே 35–29–35–17–33 பாக்களைக்கொண்டு எண் மொத்த அளவில் கடவுள்வாழ்த்து ஒன்று உளப்பட 150 ஆக முடிவுற்றது என்பதாம்.

அங்ஙனமாக, 'அளவிலா வியப்புடன் கலித்தொகைக்கு உரை யெழுதிய உச்சிமேற்புலவர்கோள் நச்சினர்க்கினியர் மேலேகண்ட ஐவர் பெயரையும் எங்கேயாவது சூசிப்பித்திருக்கக் கூடாதா', என் பார்க்கு, அவ்வுரையாசிரியர் இந்நூலில் ஓரிடத்தோ ! பல்வேறிடங் களிலும் இவ்வண்மையைச் சூசிப்பித்துள்ளார்; நூஞ்சுயாராயின் அவை தெற்றென விளங்கும் எனக் கூறிவிடுக்க. அவ்விடங்களுள், சில ஈண்டுக் காட்டப்படும்.

I. கடவுள்வாழ்த்து–'ஆகலின் ஈண்டு ஆசிரியர் நல்லந்துவனார் கோத்தார். [கலித்தொகை பக்கம் 6]

II. (நெய்தற்கலி, 25) 'சொல்லேச்சமும் குறிப் பெச்சமுமாகத் தம்பேரறிவுதோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுள்செய்தார்.' [கலி பக்கம் 449].

III. 'இம்முறையே கோத்தார் நல்லந்துவனார்' [கலி. இறுதி-பக்கம் 487]

IV. 'இத் தொகையில் ஒத்தாழிசை செய்தார். [கலி பக்கம் 11-வரி 14]

அற்றேல், 'ஊர்க்கானிவந்த' என்ற பாட்டுள் 'ஞாழல் முடித்தாள்' என நெய்தற் றலைவிபோலவும், 'ஊர்க்கானிவந்த பொதும்பர்' என்றதனுன் மருதத்துக் கண்டோன்போலவுங்கூறிக் குறிஞ்சிப்பொருளாகிய புணர்தனிமித்தம் (உரிப்) பொருளாக முடித்தான்' [கலித்தொகை பக்கம் 170 வரி–10–13] இதனுள், முடித்தான் என்பது யாரைச்சுட்டியது எனின், அத்திணைக்குரிய பாவியற்றிய கபிலரைச் சுட்டியது என்க. பின் அப்பாட்டின் இறுதியுரையுள் இது புணர்தல்நிமித்தமாதலிற் குறிஞ்சியுட்கோத்தார்' [கலி. பக்கம் 171-வரி 22] என்றதில், கோத்தார் என்பது ஆசிரியர் நல்லந்துவனாரைச் சுட்டியது. ஆசிரியர் நல்லந்துவனார், கபிலர்பாடிய பல பாக்களுள் தந் தொகைக்கு வரம்பாக எடுத்துக் கொண்ட 29 கலிப்பாக்களுள் ஒன்றாக உள்ள இப்பாட்டினை வேறிடம் கோவாது திணைமயக்கமுள்ளதென்னும் உரிப்பொருள் உட்கிடையாக நாட்டிக் குறிஞ்சித்திணையுள்ளேகோத்தார் என்பது அறிக. பிறவும் இவ் வாறே விளங்க எடுத்தோதின் விரியுமாதலினிவ்வளவிற் சுருக்கலாயிற்று.

சே. சிவஞானம்பிள்ளை,
சென்னை.

ஸ்ரீ:

சோதிடக்குறிப்புகள்.

(Some Astronomical Notes.)

[வராஹமிஹிரர் என்னும் வடமொழிவான நூலாசிரியர் (கி. பி. 520ல்) இயற்றிய பஞ்சசித்தாந்திகை என்னும் நூலிலிருந்து நமது தேசசரித்திரம், தமிழின்சரித்திரம், நமதுதேசத்தின் பழம்பெருமை முதலியவற்றைப்பற்றி ஆராய்ச்சி எழுத ஆதரவாகக் காணப்படும் சில குறிப்புக்கள், இங்கே பொறுக்கித் தொகுக்கப்பட்டுள்ளன. R. S. N.]

அத்யாயம் I.

3. இந்நிலைமையில், 1. பௌலிசம், 2 ரோமகம், 3. வாசிட்டம், 4. சௌரம், 5. பைதாமஹம் என ஐந்து சித்தாந்தங்களிருக்கின்றன.

இவ்வைந்தில் பௌலிசத்துக்கும் ரோமகத்துக்கும் லாடதேவர் உரை யெழுதியிருக்கின்றார்.

இதற்கு ஸுதாகரர் எழுதிய உரையில்,

(ஸூர்யன் அருணனோக்கிச் சொல்லுவது:—)

(1) பைதாமஹம், ச (2) ஸௌரம், ச
(3) வாஸிஷ்டம், (4) பௌலிஸம், ததா
(5) ரோமகம், சேதிகணிதம்
பஞ்சகம் பரமாத்புதம்.

இவற்றில், பைதாமஹம் பிரும்மாவினால் வஸிஷ்டருக்கும், வாஸிஷ்டம் வஸிஷ்டரால் பராசரர்க்கும், பௌலிஸம் புலிசமஹரிஷியால் கர்க்கரிஷிக்கும், ரோமகம் என்னால் ரோமகனுக்கும் உரைக்கப்பட்டன. ஸௌரமும் என்னால் உரைக்கப்பட்டதே.

பிராம்மண சாபத்தால் நான் யவனஜாதியிற் பிறந்தேன். ரோமகநகரில் உரைக்கப்பட்டதால் ரோமகம் என்று பெயர். என்று காணப்படுகிறது.

1/8 சகம் 427 சைத்ர சுக்லபக்ஷாதி திங்கட்கிழமை யவனபுரத்தில் அர்த்தாஸ்தமனமாகும் நேரம் முதல் வராஹமிஹிரர் வானநூல் கணனாரம்பம்.

18/21. வாரம் வழக்கிலிருந்ததென்பதைக்காட்டக்கூடிய சில் குறிப்புக்கள் உள.

3/23. மேஷமாதமுதல்தெய்தியும் துலாமாதமுதல்தெய்தியும் விஷுதினங்கள்.

3/25. மகரமாதமுதல் மிதுனமாத முடிவுவரை உத்தராயணம்.
கடகமாதமுதல் தனுர்மாத முடிவுவரை தக்ஷிணாயனம்.

4/1. (ஷஷ்டி ஸுதத்ரய) பரிதே:
வர்க்க தஸாம்ஸாத் பதம் ஸ விஷ்கம்ப:
விஷ்கம்பம் = $\frac{\text{பரிதி}}{\sqrt{10}}$
பரிதி = சக்கரவட்டம். circumference.
வர்க்கம் = square.
பதம் = மூலம் sq. root.
ஷஷ்டி ஸுதத்ரய = 360 அம்சமடங்கிய
விஷ்கம்பம் = diameter = வ்யாஸம்,

அத்யாயம் 13.

விண்மண்டலம்.

(1) பூமி உருண்டைவடிவானது. அது, காந்தத்துக்கு நடுவேயுள்ள இரும்புபோல அம்பரத்தில் தொங்குகிறது.

(2) ஸுமேரு (North pole) என்பது தேவர்வஸிக்குமிடம். குமேரு (South pole) என்பது அசுரர் வஸிக்குமிடம்.

(3) நீரிற்றோன்றும் நிழல்போலத் தேவரும் அசுரரும் பரஸ்பரம் தலைகீழாகப் புலப்படுவார்கள்.

(4) ஸுமேரு உச்சிக்குநேரே உத்தரத்ருவ முள்ளது. நக்ஷத்ரமண்டலம் அதைச் சுற்றிவருகிறது.

(7) பூமி சுற்றிவருவதாய்க் கூறுவது தவறு.

(9) சூரியன், தேவர்க்கு வலஞ்சுற்றுவதாகவும், அசுரர்க்கு இடஞ் சுற்றுவதாகவும், இலங்கைவாசிகளுக்கு நேர் உச்சியிலிருப்பதாகவும் புலப்படும்.

(10) மிதுனமாதக்கடைசியில் சூரியன் பூமத்யரேகைக்குவடக்கே 24-ம் அம்சத்தில் அவந்திக்கு நேரே உச்சியிற் புலப்படும்.

(14) பூமியின்பரிதி = circumference.
= 12 ராசிமண்டலம்
= 360 அம்சம்
= $360 \times 8\frac{8}{9}$ = 3200 யோஜனை

(17) உஜ்ஜயினியும் இலங்கையும் ஒரே துருவாம்ச (meridian)த்திலிருப்பதால் அவ்விரண்டிடத்திலும் ஒரேசமயத்திற் சூரியன் உச்சத்திற் புலப்படுவான்.

(19) ஸுமேருவுக்கும் இலங்கைக்குமுள்ளதூரம் 800 யோஜனையாகும். ஸுமேருவுக்கும் அவந்திக்குமுள்ளதூரம் $586\frac{2}{3}$ யோஜனையாகும்.

(21) உஜ்ஜயினிக்குவடக்கே $373\frac{1}{3}$ யோஜனைதூரம் சென்றால் முற்கூறிய ப்ரஹ்மண்டஸசாரங்கள் மாறிப்புலப்படும்.

(22) அங்கே பகலினளவு அறுபதுநாழிகையாகும். வடக்கே செல்லச்செல்லப் பகலினளவு அதிகமாகும். ஸுமேருவில் ஆறுமாதம் பகலாயிருக்கும்.

(23) அவந்தியிலிருந்து வடக்கே, 403-வதுயோஜனையில் தனுஸ்ஸும், மகரமும்,

(24) 482-வதுயோஜனையில் விருச்சிகம், தனுஸ்ஸு, மகரம், கும்பம் என்பனவும் புலப்படமாட்டா.

(25) $585\frac{5}{9}$வதுயோஜனையில் மூலாம்முதல் மீனம்முடியவுள்ள ராசிமண்டலத்தின்பிற்பகுதி உதயமாகவேமாட்டாது; மேஷம்முதல் கன்னிமுடியவுள்ள ராசிமண்டலத்தின்முற்பகுதி அஸ்தமிக்கவேமாட்டாது.

(26) துருவாங்கஷத்திரம், இலங்கைவாசிகளுக்கு அடிவானத்திலும், ஸுமேருவாஸிகளுக்கு உச்சியிலும், மற்ற இடங்களிலுள்ளோர்க்கு அவ்வவ்விடத்துக்குத் தக்கபடிக்கும் புலப்படும்.

(27) மேஷமாதமுதற் கன்னிமாதமுடிய ஆறுமாதம் தேவர்க்கும், தூலாமாதமுதல் மீனமாதமுடிய ஆறுமாதம் அஸுரர்க்கும் பகலாயிருக்கும்.

(29) பூமத்யரேகையிலிருக்கும் இலங்கையில் இரவும் பகலும் என்றும் (30 நா) சமமாயிருக்கும்.

(35) சந்திரன் சூரியனுக்கும் பூமிக்கும் நடுவேயிருப்பதாலும், சூரியவொளியால் அது பிரகாசமடைவதாலும் அதன் ஒருபாகம் (சூரியனுக்கெதிரேவைத்த குடம்போலப்) பிரகாசிக்கும். மற்றப்பாகம் தன் னிழலாலேயே மறைந்திருக்கும்.

(36) கண்ணுடியிற் பிரதிபிம்பிக்கும் ஒளிபோல நீர்நிறைந்த சந்திரனிடத்துப்படும் சூரியவொளி மறுபடி பிரதிபிம்பித்து நிலவாய் இருளையகற்றுகின்றது.

(39) சந்திரனுக்குமேல், புதன் சுக்கிரன் சூரியன் செவ்வாய் வியாழன் சனி-இவைகள் வரிசையாயிருக்கின்றன. இவையாவும் மேற் கேபிருந்து கிழக்கே செல்லுகின்றன.

(41) சந்திரன் பூமிக்கருகிலிருப்பதால் அதன் (வர்த்துள) வீதி குறுகியதாயிருக்கிறது. ஆதலால் அது சீக்கிரம் பூமியைச் சுற்றிவரும். போகப்போக மற்றக்கிரஹங்களின்வீதிகள் பெரியனவாயிருத்தலால் அவ்வவற்றுக்குத்தக்கபடி கிரகங்கள் சுற்றிவர அதிக காலமாகும்.

அத்யாயம் 15.

15/6. மேருவிலிருப்பவர்க்குச் சூரிய சந்திரர்தோற்றம் ஒருங்கே (ஒரேவரிசையில்) புலப்படமாட்டாது. (அதாவது அமாவாஸ்யை கிடையாது என்பதாம்)

15/11. மேருப்பிரதேசத்திற் சூரியன் அடிவானத்தைச் சுற்றிவருவதால், கிழக்கு மேற்கு என்ற திசைவித்தியாசங் கிடையாது.

15/13. மேருப்பிரதேசத்திற் பகல் ஆறுமாதம், இரவு ஆறுமாதமாதலால் நமக்கு ஒருவருஷம் அங்கு ஒருதினமாகும்.

15/14. தேவர்க்குப் பகலே அசுரர்க்கு இரவு. தேவர்க்கு இரவே அசுரர்க்குப் பகலாகும்.

15/15. ஸுமேருவிற் சூரியன் அடிவானத்தையே சுற்றிவரும். [24 அம்சத்துக்குமேலே கிளம்பாது.]

15/18. அகர்க்கணனத்துக்குத்தக்கபடி கிழமை (week days) யும் மாறும்.

15/22. பாதவர்ஷத்திற் சூரியோதயமாகும்பொழுது பத்திராசுவத்தில் நடிப்பகல்; குருதேசத்திற் சூரியாஸ்தமனம்; கேதுமாலாவில் நள்ளிரவு.

15/23. இலங்கையிற் சூரியோதயமாகும்போது லித்தபுரத்தில் அஸ்தமனம்; யமகோடியில் நடுப்பகல்; ரோமகதேசத்தில் நள்ளிரவு.

15/24. யுகாரம்பத்தில் அயனம், ரிது, மாஸம், வாரம், மேஷாதி, க்ரஹ நக்ஷத்திரங்கள், தினாரம்பம் எல்லாம் ஒருங்கே இருந்து தொடங்கும்.

15/25. சாதாரணஜனங்கள் கிழமை (week days = வாரம்) யைக் கொண்டும், அறிஞர் அதனுடன் மற்ற முறைகளைத் தழுவியும் காலகணனம் பண்ணுகிறார்கள்.

[குறிப்பு:—அகர்க்கணனம்=தினசங்கியை = Number of days வாரம் வழக்கிலிருப்பதைக் கவனிக்கவும்.]

R. S. நாராயணஸ்வாமிஐயர் B.A., B.L.,

மதுரை.

சோழன் மணக்கிள்ளி.

தென்னாட்டு மூவேந்தருள்ளே புனனாட்டரசர்களாய்க் காவிரியின் பயனெய்திவாழ்ந்தார் சோழமன்னர்களாவர். அவர்கள் தமிழ்தோன்றிய காலத் துடன்றோன்றி அரசுசெலுத்திவந்தனரென்பதன்றி, அவர்கள் பாம்பரையைக் கூறவல்ல சரித்திரங்களேனும் வேறு சாதனங்களேனும் இல்லை. புறநானூறுமுதலிய தொகைநூல்களிற்கூறப்படும் சோழர்களே வரிசைப்படுத்துவது இயலாதகாரியமாயிருக்கின்றது. இதுவரை சோழ பாம்பரையைக்குறித்து எழுதியவர்கள் காலஞ்சென்ற மே. கனகசபைப் பிள்ளையவர்கள், வித்வான் ஸ்ரீமத் மு. இராகவையங்காரவர்கள், பண்டித L. உலகநாதபிள்ளையவர்கள் ஆகிய மூவரேயாவர்.

இவருள், கனகசபைப்பிள்ளையவர்கள் தாமெழுதிய 1800 வருடங் கட்குமுந்தியதமிழர் என்னும்நூலிற் சோழபாம்பரையிற் றொடங்கியவரையில் முதல்வன்,

உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி

|

கரிகாற் பெருவளத்தான்

|

நலங்கிள்ளி

|

குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவன்

என்று பரம்பரைகாட்டி வம்சாவளியை முடிக்கின்றனர்.

சேரன்செங்குட்டுவனுரிரியராகிய வித்துவான் ஸ்ரீமத். மு. இராகவையங்காரவர்கள் தமது நூலிலே சோழபரம்பரையை விவரிக்கும்போது வெகுஜாக்கிரதையுடன் "செங்குட்டுவனம்மானையும் அம்மான்சேயையும்பற்றி யாம் ஈண்டெழுதியவற்றிற் சில புறநானூறுமுதலியவற்றைக் கொண்டு ஊகித்தனவாம்; ஆதலின் அறிஞர் அவற்றை ஏற்றபெற்றி ஆராய்ந்துகொள்ளக்கடவர்" என்று எழுதிக்கொண்டு, சோழபரம்பரையினர் இருபகுதியினராவரென்றும், அவருள் ஒருபகுதியினர் உறந்தையிலிருந்து ஆண்டனரென்றும், மற்றவர் புகாரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டனரென்றும், இருவரும் உறந்தைச்சோழரென்றும் புகார்ச்சோழரென்றும் வழங்கப்படுவரென்றும் கூறுவர். இவரது வம்சாவளி வருமாறு:—

[உறையூர்]	[புகார்]
மணக்கிள்ளி	கரிகாற்பெருவளத்தான்
|	|
காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி	கிள்ளிவளவன்
|	|
இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி	சேட்சென்னி நலங்கிள்ளி

மேலும், அவர், "செங்குட்டுவன்தாயுடன்பிறந்த அம்மானும் சோழன்மணக்கிள்ளியின்மகனுமாகிய நெடுங்கிள்ளி உறையூரை ஆண்டுவந்தனன்" என்பர்

இனி, பண்டித L. உலகநாதபிள்ளையவர்கள் சோழன்கரிகாலன் என்னும் புத்தகத்தில், பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பதிகத்தானே, நெடுஞ்சேரலாதன் சோழன்மணக்கிள்ளிமகளை மணந்து செங்குட்டுவனைப் பயந்தனன் என்று தெரிகிறது; என்பர்.

மேலும், "கரிகாலனுக்குச் சேட்சென்னிநலங்கிள்ளி, நெடுங்கிள்ளி மாவளத்தான் என ஆண்மக்கள் மூவரும் ஆதிமந்தியார் என்னும் நல்லிசைப்புலமைவாய்ந்த மெல்லியல் ஒருவரும் இருந்தனர்" என்பரேயன்றி வம்சாவளியொன்றுங் கூறார்.

சோழன்மணக்கிள்ளியென்று கூற இவர்கட்குக் கிடைத்த ஆதாரம் பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பதிகமே. அதில்,

"வடவருட்கும்வான்றேய்வெல்கொடிக்
குடவர்கோமானெடுஞ்சேரலாதற்குச்
சோழன்மணக்கிள்ளியீன்றமகன்
கடவுட்பத்தினிக்கற்கோள்வேண்டிக்
கானவில்கானங்கணியிற்போகி
யாரியவண்ணலிவீட்டி....."

என்று காணப்படுகிறது.

இதனுனே நெடுஞ்சேரலாதற்குச் சோழன்மகள் மணக்கிள்ளியென் னுங் கோப்பெருந்தேவியின்மகனுகக் கடல்பிறக்கோட்டியசெங்குட்டு வன் பிறந்தானென்பதன்றி, மணக்கிள்ளியென ஒருசோழன் இருந்தா னென்றும், அவனுக்கு ஒருபெண் இருந்தாளென்றும் கூறுதற்கில்லே.

மகாமகோபாத்தியாய ஐயாவர்களும் தாம் பதிப்பித்த சிலப்பதி காரத்திலே பதிற்றுப்பத்தினின்றும் இந்த இடத்தையே மேற்கோளாகக் காட்டும்போது....."நெடுஞ்சேரலாதற்குச் சோழன்..... மகன்" என்று சோழன் என்ற மொழிக்குப்பிறகு புள்ளியிட்டு மகன் என்று அச்சிட்டுள்ளார்கள். அக்காலத்து அந்த இடம் விளங்கிற்றில்லே போலும்.

மேலேகூறியவற்றை யுறுதிப்படுத்தப் பதிற்றுப்பத்தின் ஒவ்வொரு பதிகத்திலும்,

(1) மன்னியபெரும்புகழ்மறவில்வாய்மொழி
யின்னிசைமூரசினுதியஞ்சேரற்கு
வேளியன்வேண்மாணல்லினியீன்றமகன். (பக்-23)

(2) ஆரத்திருவிற்சேலாதற்கு
வேளாவிக்கோமான்
பதுமன்றேவியீன்ற மகன் மூன்
களங்காய்க்கண்ணிநார்முடிச்சேரல். (பக்-58)

(3) குடக்கோநெடுஞ்சேலாதற்கு வேளள்
ஆவிக்கோமான்றேவியீன்றமகன்
றண்டாரணியந்துக்கோட்பட்டவருடையை
.....ஆடுகோட்பாட்டுச்சேலாதன். (பக்-99)

(4) மடியாவுள்ளமொடுமாற்றூர்ப்பிணித்த
நெடுநுண்கேள்வியந்துவற்கொருதந்தை
யீன்றமகள் போறையன்பெருந்தேவியீன்ற மகன்
.....செல்வக்கடுங்கோ. (பக்-118)

(5) பொய்யில் செல்வக்கடுங்கோவுக்கு
வேளாவிக்கோமான்பதுமன்றேவியீன்ற மகன்
.....பெருஞ்சோலிரும்பொறை. (பக்-137)

(6) குட்டுவனிரும்பொறைக்கு மையூர்கிழாஅன்
வேண்மாளந்துவஞ்சேல்லாயீன்ற மகன்
.....இளஞ்சேலிரும்பொறை (பக்-157)

என்று காணப்படுகிறது.

(1) வெளியன்வேண்மாணல்லினியீன்ற மகன்
(2) வேளாவிக்கோமான் பதுமன்றேவியீன்ற மகன்
(3) ஆவிக்கோமான்றேவியீன்ற மகன்
(4) அந்துவற்கொருதந்தையீன்ற மகள் பொறையன்
பெருந்தேவியீன்ற மகன்
(5) வேளாவிக்கோமான்பதுமன்றேவியீன்ற மகன்
(6) வேண்மாளந்துவஞ்செல்லாயீன்ற மகன்

என்றவற்றுக்கெல்லாம் இக்கோப்பெருந்தேவிகள்பெற்றபிள்ளைகள் என்று பொருள்படுங்காலத்து, சோழன்மணக்கிள்ளியீன்ற மகன் என்பது மட்டும், சோழவம்மிசத்துப்பெண்ணை மணக்கிள்ளி என்பாள் பெற்ற மகன் என்று பொருள்பயப்பதல்லது சோழன்மணக்கிள்ளியின்மகளொருத்திபெற்றமகன் என்று பொருள்படுவது யாங்ஙனம்? கிள்ளியென்னுஞ் சொல்லைக்கொண்டு சோழனென நினைத்தனர்போலும். மணக்கிள்ளியென வொருசோழன் இருந்திருப்பனாயின் அந்துவற்கோருதந்தையீன்ற மகன் பொறையன்பெருந்தேவியீன்ற மகன் என்பதுபோலக் காணப்படுதலே அமைவுடைத்தாம். அங்ஙனமில்லாதபோது, சோழன் என்றுமாத்திரம் குறித்தற்குரிய பெருந்தகையாளனுயிருந்த ஒரு சோழன்மகளாவாள் மணக்கிள்ளியின்மகன் செங்குட்டுவன் என்று கொள்ளுதலே தகுதியாம். அன்றியும், இதுவரை வெளிவந்த சங்கத்துச் சான்றோர் செய்யுட்களிற் சோழன்மணக்கிள்ளியென ஒருவன் இருந்ததாக யாண்டும் காண்கிலேம்.

சோழன்மணக்கிள்ளி என ஒருபெயரேயில்லையாக உறந்தைச்சோழ னென்பாரே இல்லையெனத் துணிந்துகூறலாம். ஆயினும், முடிகெழு வேந்தரிருவரையும்வென்று ஒருகுடைநீழலி லாண்ட பெருஞ்சோழர்களில் ஒருசிலர் ஒரேகாலத்தில் இருவேறு ஊர்களில் ஆட்சிநடத்தியிருக்கலாமாயினும் அவர் சந்ததியினர் பரம்பரையாக அவ்வாறே ஆண்டனர் என்று கொள்வதற்குத் தகுந்த ஏது யாதும் காண்கிலேம்.

மேற்கூறியதுகொண்டு சோழன்மணக்கிள்ளியென வொருவன் இருந்தானென்பதும், உறந்தைச்சோழர் என ஒரு பகுதியினர் இருந்தனர் என்று கொள்ளுதலும் அமைவின்றும் என்பது ஒருதலை.

சோமசுந்தரதேசிகன்,
இலக்கணவிளக்கபரம்பரை,
திருவாரூர்.

1921-ஆம் நவம்பர்மீ 12உ (துர்மதிவரு ஐப்பசிமீ 27உ) காலை 10-மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகவைபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜாஜேஶ்வர ஸேதுபதிமன்னரவர்கள்—அக்கிராசனாதிபதி.
2. மகா-ன-ன-ஶ்ரீ ராவ்பகதூர் P. சுப்பராய ஐயரவர்கள், B.A.,
3. ,, T. C. ஶ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., B.L., M. L. C.,
4. ,, M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள், B.A., B.L., இவர்கள் வந்திருந்தார்கள்.

I. 1921-ஆம் ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர்மாதங்களின் வரவு செலவுகணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய அடியிற்குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) மகா-ன-ன-ஶ்ரீ S. கலியாணசுந்தரமையரவர்கள், Translator, High Court, நியாகராஜவிலாஸம், திருவெட்டீசுவரன் பேட்டை, சென்னை.

(2) ,, இ. வை. அனந்தராமையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், பிரஸிடென்ஸிகாலேஜ், திருவல்லிக்கேணி, சென்னை.

(3) ,, E. S. துரைசாமிபிள்ளை அவர்கள், Secretary Y. M. C. A., பொன்னகரம், மதுரை.

III. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகஇருந்துவிலகிக்கொள்ள வேண்டுமெனக்கோரிய அடியிற்குறித்தவர்களை விலகத் தீர்மானிக்கலாயிற்று.

(1) மகா-ன-ன-ஶ்ரீ K. ஜகதீசையர் அவர்கள் B. A. C/o Messrs K. Jagadisan & Co., திருவல்லிக்கேணி.

(2) ,, அ. சுந்தரநாதபிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருச்சி.

(3) ,, S கங்காதரையர் அவர்கள், இராமநாதபுரம்.

IV. மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் வருடந்தோறும் நடத்தப்பெறும் தமிழ்ப்பரீக்ஷகளுக்குப் பரீக்ஷகர்களைத் தெரிந்தெடுப்பதோடுகூடச் சன்மார்கம் ஶ்ரீ ராமநாதவித்யாலய மேல்வகுப்புப் பெண்மாணவர்பரீக்ஷைதட்டும் பரீக்ஷகர்களைத் தெரிந்தெடுப்பதில் அதிகசிரமம் எற்படுவதால், இவ்வருஷம் மட்டும் வித்தியாலயத்தின் ஸ்தாபகர் மகா-ன-ன-ஶ்ரீ Honourable P. இராமநாதனவர்கள் கேட்டுக்கொண்டபடி பரீக்ஷைகள்நடத்தச் சங்கத்தார் எற்பாடுசெய்வார்கள்.

V & VII. (1) சங்கம் அச்சாபீஸ் வேலைசெய்துவருவதைப் பரிசீலனை செய்து, அதன் அபிவிருத்திசம்பந்தமாகச் செய்யவேண்டிய சீர்திருத்தங்களும் இனி எடுத்துக்கொள்ளவேண்டிய உபாயமும் இன்னவென்பதைத் தெரிவிக்கும்படி மகா-ன-ன-ஶ்ரீ ராவ்பகதூர் P. சுப்பராய ஐயரவர்களையும், மகா-ன-ன-ஶ்ரீ V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்களையும் கேட்டுக்கொள்ளலாயிற்று.

(2) சங்கக்கட்டிடத்தில் ரிப்பேர்செய்யவும் நடுக்கூடத்தை வரந்தவும் மேல்மாடியில் தாழ்வாரம் இறக்கவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்புத்திட்டம் (Estimate) அங்கீகரிக்கலாயிற்று. கட்டிடவேலை ஆரம்பிக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று. கூடவேலையை மகா-ன-ன-ஸ்ரீ ராவ்பகதூர் P. சுப்பராய ஐயரவர்கள் மேற்பார்த்துக்கொள்ளவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

VI. 1921—22-ம் வருஷத்திய சங்கம் வரவு செலவு மதிப்புத்திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

VIII. நேட்டாலேச்சேர்ந்த டர்பன்நகரிலுள்ள M. K. Gandhi Libraryக்குச் செந்தமிழ்ப்பத்திரிகையைப் பாதிச்சந்தாவுக்கு அனுப்பிவரும்படி தீர்மானிக்கலாயிற்று.

B. இராஜாஜையரவேதுபதி,
அக்கிராசனாதிபதி.
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

மதுரை.
12-11—21.

புத்தக மதிப்புரை.

1. சிசுபாலசரிதம்:—இது, வடமொழியில் பிரவித்திபெற்ற மாககவியால் இயற்றப்பெற்ற சிசுபாலவதம் என்னும் காவியத்திற்சொல்லிய கதையையும், கதியையும் தழுவித் தமிழுரைநடைக்கேற்பச் சிலவிஷயங்களை விலக்கியும் கூட்டியும் மாற்றியும் இடையிடையே தொடைநயங்களமைத்துமுடையதாகத் திருத்தமான தமிழ்நடையிற் சுன்னகம் வித்துவான் ஸ்ரீமத் அ. தாமோசுவாமிப்பிள்ளையவர்களாலெழுதி அருஞ்சொற்பொருளுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. இதனால், காரியாலோசனை, தெரிந்துதெளிதல், உண்மையுரைத்தல், பெரியோரைப் பேணல், தருக்கின்மை, வறியார்க்கீதல், முதலிய விஷயங்களும் சிலவருணனைகளும் அறியலாம். நடுத்தரக்கலாசாலை மாணவர்க்குப் பாடமாகவைத்துப் பயிற்றற்குரியது. இதில், கிருஷ்ணர் என வருமிடங்களில், கிருஷ்ணன் என வழங்குதல் செவ்விதாம். இதன் விலை அணை 8. வேண்டுவோர் ஆக்கியோர்க் கெழுதிப் பெறலாம்.

2. சாணக்கியதந்திரம்:—இது, முடிகொண்டான் M. M. நாராயணஸ்வாமி ஐயாவகளால், சிறுவர் சிறுமியர்க்கும் விளங்குமாறு இனியநடையிற் சுருக்கியெழுதப்பட்டிருக்கிறது. இதன்விலை அணை 7. வேண்டுவோர் ஆக்கியோர்க் கெழுதிப் பெறலாம்.

3. உலகாகசியம்:— இது, ஸ்ரீமத் சி. து. நாராயணஸ்வாமிமுதலியாரவர்களால் ஈரோட்டிலிருந்து நாளிது தர்மதிஹ புரட்டாசிமாதமுதல் தமிழில் மாதமிருமுறைவெளிவரும் பத்திரிகையாக நடத்தப்பெற்றுவருகிறது. இதன் முதற்பகுதியிற் பல அரிய வியாசங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதில், தமிழ்ப் புலவர்சரிதமும், தமிழ்நூலாராய்ச்சியும், நவீனகதைகளும், பொதுவிஷயங்களும் பிறவும் வெளியிடப்படுமென்றும் ஒவ்வொருபகுதியும் டிம்மி 8 பக்கசைவில் 44 பக்கங்கொண்டதாய் வெளிவருமென்றும் தெரிகிறது. இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூ. 5—0—0. வெளிநாடுகளுக்கு ரூ. 6—0—0 தனிப்பிரதி அணை 4. வேண்டுவோர் முதலியாரவர்களுக்கு எழுதிப்பெறலாம்.

பத்திராதிபர்.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஅ.] தூர்மதி-ஹல மார்கழி-மீ [பகுதி உ.
Vol. XX. December—January—1921—1922. No. 2.

புலவர்சம்மானம்.

முற்காலத்திருந்த வடமொழியில்வல்ல புலவர்களையும், தென்மொழியில்வல்ல புலவர்களையும் அக்காலத்திலே ஆங்காங்கிருந்த அரசர்களும் பிறரும் வேண்டுபொருள்கொடுத்து விருப்பொடுஞ் சம்மானித்துவந்தார்கள். வடமொழியாளர்களாகிய தாநிட்டன், போஜன், ஸ்ரீஹர்ஷன், பிரதாபருத்திரன் முதலிய அரசர்கள் வடமொழிநூல்களையும் வழுவறக் கற்றப் புலவர்களுடைய தாரதம்மியங்களையும் பூரணமாய் அறிந்து கவிகளைக் கேட்டும், சுவைகளை வேட்டும் புலவர்களைச் சம்மானித்துவந்ததை அறியாதார் யாவர்?

தாநிட்கன் காசுமீரதேசவரசர்களுள் ஒருவன்; பண்டிதர்சபையிலே பாணினீயவியாகரணத்தைக் கேட்டுப் பாணினிக்குப் பலவகைச்சம்மான முஞ்செய்தவன். போஜன் மாளவதேசத்தைத் தாராநகரத்திலே அரசுவீற்றிருந்த அரசருள்ளே ஒருவன்; தனது சிற்றப்பனுகிய முஞ்சன் என்பவன் இராச்சியநிமித்தம் தன்னைக் கொல்லும்படி கொலைக்களத்திற் கொண்டுபோய் வெட்டுதற்கு நியுத்துவித்தபோது "மாந்தாதா" என ஒரு சுலோகம்பாடி முஞ்சனுக்கு அனுப்பினவன்;

சுலோகம்.

ᳬᳰᳩᳱᳱᳱ

மொழிபெயர்ப்புவிருத்தம்.

முந்தேறு கிருதயுக பூபதிமாந் தாதாவு முடிந்து போனன்
நந்தேறு கடலடைத்த செயராமச் சந்திரனு நடந்து விட்டான்
வந்தேறு குருகுலத்துத் தருமன்முதற் பலமகிபர் மடிந்து போனர்
அந்தோவிங் கிவரொடும்போ காதபுவி நின்னெடுதா னடையு மையா.

இந்தப் போஜன் தாமோதரகவி, காளிதாசநவி, சங்கரகவி முதலிய புலவர்கள் பாடிவந்த கவிகளைக் கேட்டுச் சுவைகளையும் வேட்டுச் சம்மான முஞ் செய்தவன். போஜசம்பு முதலிய நூல்களையுஞ் செய்தவன்.

ஸ்ரீஹர்ஷன் காசுமீரதேசவரசர்களுள்ளே ஒருவன்; தாவககவி செய்துவந்த இரத்தினவலி என்னும் நாடகத்தை அங்கீகாரஞ்செய்து நல்லுபகாரஞ்செய்தவன். பிரதாபருத்திரன் ஓரங்கல்நாட்டரசருள்ளே ஒருவன்; வித்தியாநாதகவிசெய்த பிரதாபருத்திரீயம் என்னும் அலங்காரசாத்திரத்தை அங்கீகரித்துத் தக்க சம்மானமுஞ் செய்தவன்; இவன் தென்மொழியிலும் கம்பநாடர்கூறிய கவிகளைக் கேட்டுச் சம்மானமுஞ் செய்தான் என்பர்.

கம்பநாடர்க்வி.

அவனிமுழு துண்டு மயிரா வதத்துட்
பவனி தொழுவார் படித்தும்—புவனி
உருத்திரா வன்னுடைய வோரங்க னெட்டிற்
குருத்திரா வாழைக் குழாம்.

வடமொழியாளர்களாகிய மன்னவர்போலத் தென்மொழியாளர்களாகிய சேர சோழ பாண்டிய மன்னவர்களும் பிறரும் தென்மொழிநூல்களைச் செவ்வனே கற்றுப் புலவர்களுடைய தாரதம்மியங்களையும் பூரணமாயறிந்து கவிகளைக் கேட்டும், சுவைகளை வேட்டும் புலவர்களுக்குச் சம்மானமுஞ் செய்துவந்தார்கள். சேரமன்னருள்ளே இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பதிற்றுப்பத்திலே இரண்டாம்பத்துப்பெற்றுக் குமட்டூர்க் கண்ணனார் என்னும் புலவர்க்குத் தக்க சம்மானமுஞ் செய்தான். சோன் செங்குட்டுவன் ஐந்தாம்பத்துப்பெற்றுப் பாணர் என்னும் புலவர்க்குப் பெரிய சம்மானமுஞ் செய்தான். பொருஞ்சோற்றுதியன் பாரதப்போர்க்கு வந்த படைத்தலைவர்க்கு வேண்டிட்டுக்கொடுத்ததன்றி முடிநாகராயர் பாட்டுங் கேட்டுச் சம்மானமுஞ்செய்தான்.

சிலப்பதிகாரம்.

ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றுது தானளித்த
சேரன் பொறையன் மலையன் றிறம்பாடிக்
கார்செய் குழலாட வாடமோ வூசல்
கடம்பெறிந்த வாபாடி யாடாமோ வூசல்.

சோழமன்னவருள்ளே கரிகாற் பெருவளவன் பட்டினப்பாலை என்னும் பாட்டுக் கேட்டுப் பத்தொடாறுநூறுபிரம்பொன் பரிசிலாக உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர்க்குக் கொடுத்தான்.

கலிங்கத்துப்பரணி.

தத்து நீர்வரால் குருமி வென்றதும்
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றுபி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்.

சோழன் கிள்ளிவளவன் இடைக்காடர் முதலிய புலவர்களுடைய பாட்டுக்களைக்கேட்டு ஏற்ற ஏற்ற சன்மானமுஞ் செய்தான். விக்கிரம சோழன் ஒட்டக்கூத்தர்பாடிய உலா என்னும் பிரபந்தங்கேட்டுத் தக்க சம்மானமுஞ் செய்தான்.

பாண்டியமன்னர்களுள்ளே கெடுஞ்செழியன் என்பவன் 'மதுரைக் காஞ்சி' என்னும் பாட்டுக் கேட்டுத் தக்க சம்மானமுஞ் செய்தான். கீரஞ் சாத்தன் என்னும் பாண்டியன் ஆமூர்கிழாருடையபாட்டைக்கேட்டு அதிகம் பரிசிலுங் கொடுத்தான். உக்கிரப்பெருவழுதி என்பவன் ஔவையாருடையபாட்டைக்கேட்டு அளவுகடந்த பரிசிலுங் கொடுத்தான்.

சிற்றரசர்களுள்ளும், பூழிநாட்டரசனாகிய நன்னன் என்பவன் பாணருடையபாட்டுக்கேட்டுப் பரிசிலும் பெரிது கொடுத்தான். அதியமான் நெடுமானஞ்சி என்பவன் ஔவையார்பாட்டுக்கேட்டு அதிகம் பரிசிலுங் கொடுத்தான். ஆஅயண்டிரன் என்பவன் மோசிகீரன்பாட்டுக்கேட்டுத் தக்க சம்மானமுஞ் செய்தனன். பிரபுக்களுள்ளே அருமன், பாரி, ஓரி, நள்ளி முதலிய பிரபுக்கள் புலவர்கள்பாட்டுக்களைக் கேட்டுப் பரிசிலுங் கொடுத்தார்கள். இப்படியே பண்டைக்காலத்திருந்த பேரரசரும் சிற்

ர்சரும் பிரபுக்களும் தமிழ்மொழியையும் புலவர்களையும் பேணிவந் தார்கள். பின்னர்ச் சடையப்பமுதலியார், வாபதியாட்கொண்டான், வேங்கடேசுவரன், சேதுபதியரசர் முதலியோருந் தமிழ்மொழியை அபி மானித்துவந்தார்கள். இப்படியே வளர்க்கப்பட்டுவந்த தமிழ்மொழி அரசர்முதலியோருடைய சம்மானமின்மையாலும், இப்பொழுதை அரச பாஷை பொருள்வரவையும் அதிகாரத்தையுங் கொடுத்தலாலும் தளர்ச்சி யடைந்து வளர்ச்சிகுன்றுவதாயிற்று.

நீதிநெறிவிளக்கம்.

இகழி னிகழ்ந்தார்ங் கிறைமக னெக்கப்
புகழினு மொக்கப் புகழ்ப—இதன்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யும்
நீர்வழிப் பட்ட புணை.

இப்பொழுதையரசரும் தமிழ்முதலிய பாஷைகளிலே வல்லவர்க்கும் சம்மானஞ் செய்வாராயினர். இப்பொழுது சென்னைமாகாணிலே மகத்து வம்பொருந்திய இளவரசர்வந்தபோது தமிழ்முதலிய பாஷைகளிலே வல்லபண்டிதர்களுள்ளும் பலர் அரசசம்மானம் பெற்றார்கள். தமிழ் மொழிப் பாண்டித்தியங் குறித்துச் சம்மானம் பெற்றோர் மஹாமஹோ பாத்தியாயர் ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையர், செந்தமிழ்ப்பத்திராதிபர் ஸ்ரீமத் திரு. நாராயணையங்கார் முதலியோர். இவர்கள் பாண்டித்திபம் உலகறிந்ததாதலின் நாம் கூறுதல் அப்பிரசித்தாசம்பந்தம் என்னும் போலியாய் முடியும்.

இப்படியே தமிழ்ப்பண்டிதர் பலரை அரசினர் சம்மானித்துவரு வாராயின், தமிழ்மொழியைப் பலரும் படிப்பார்கள். அங்கிலங்கற்போ ரும் படிப்பார். பலருந் தமிழ்மொழியைப் படித்துணர்ந்திருத்தலாலே நகைவரும் என்றஞ்சிப் புத்தகம் முதலியன எழுதுவோருந் திருத்தமாக எழுதுவர். தமிழ்மொழியுந் திருத்தம்பெற்று விருத்தியாகும்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை,

சுன்னாகம்.

ஸ்ரீ:

நிலத்து.

(பரிசில்விடை.)

பண்டைக்காலந்தொட்டு நம் தென்னாண்ட தமிழரசர்களாகிய சேர சோழ பாண்டியர்களும் கடைபெயவல்லாரும் செந்தமிழ்ச்செல்வச்சேரவேந்தரும் ஓலக்கங்கொண்டு காட்சியளிக்கும் விசேடகாலங்களில், பரிசில்விடையாக,

நாவலர் தமக்கும் நன்மொழி புணர்க்கும்
பாவலர் தமக்கும் பதக்கமும் கடகமும்
போர்வையும் பட்டும் பொன்னும் பிறவும்
முத்தப் பூணூல் அத்தகு பூணகலங்
கடகந் தோட்டொடி கையுறை யீந்து

போந்தசெய்தி கன்னபரம்பரையாலும் நூல்களாலும் அறியப்படும்.

இதனைத்தழுவிச் சென்னைச்சர்வகலாசங்கத்தார், நமது மாட்சிமை தங்கிய இளவரசர் நம் தென்னாட்டின் தலைநகரமாகிய சென்னைக்கு விஜயம்செய்த சர்வகலாசங்கமன்றத்தை (senate house.) ஓலக்கமிருந்து காட்சியளித்த சுபதினமாகிய ஜனவரிமீ 13உ வெள்ளிக்கிழமை 12 மணிக்கு மேன்மைதங்கிய இளவரசரால் தமிழ், ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய தேசபாஷைகளிற் பாண்டித்யமுள்ள இரண்டு பண்டிதர்க்கு 10000 ரூபா பெறுமானமுள்ள கடகமும், பதக்கமும், ஜோடிசால்வையும் சம்மானம்செய்து கௌரவித்தார்கள்.

அவ்விருபதின்மருள்ளும் தமிழ்ப்புலமையுடையோர், பலசங்கநூல்களையும் பிறநூல்களையும் ஆராய்ந்தச்சிட்டு உலகுச்குப்சரித்தலையே பொழுதுபோக்காகக்கொண்டு தமிழறிவை யுலகிற் பரப்பிவரும் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களும், மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப்பத்திராதிபரும் தமிழ்ச்சங்கக்கலாசாலைத்தலைமையாசிரியருமாகிய ஸ்ரீ. உ. வே. திரு நாராயணையங்காரவர்களும், திருக்குற்றாலத்தலபுராணம்பாடிய திரிகூடராசப்பன்கவிராயர்வழியினரும்

திருநெல்வேலி இந்துகலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீ. சுப்பிரமணியக்கவிராயரவர்களும், தஞ்சைக் கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும் சோழன்கரிகாலன், கன்றுங்கனியுதவும் என்ற புத்தகங்களை எழுதியவருமான ஸ்ரீமத் L. உலகநாதபிள்ளையவர் களுமாவர். இப்பெறலரும்பரிசிலளித்துத் தமிழ்ப்புலமையைக் கனப் படுத்திய நமது அரசிளங்கோவுக்கு நம்தமிழ்ப்புலவர்கூட்டம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

இவ்வாறு தேசபாஷாபண்டிதர்க்குச் சம்மானம்செய்தது தேசத் தாராற் புகழ்ந்துபாராட்டத்தக்கதாயும், தேசபாஷாபண்டிதர்களைக் காருண்ய கெவர்ண்மெண்டார் தக்கநிலைக்குக்கொணர்ந்து ஆதரிப்பார்கள் என்பதற்கு முன்அறிகுறியாயும் இருக்கிறது.

பழையவழக்கத்தைத்தழுவிய தேசபாஷாபண்டிதர்களின் ராஜ சம் மானத்தை அநுஷ்டானத்திற்கொண்டுவரமுயன்று சென்னைச்சட்டசபை யிற்பிரேரித்துச் சபையாரை அங்கீகரித்தும்படிசெய்து வெற்றிபெற்ற நம் சங்கத்தின் கெளரவகாரியதரிசி ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர் களுக்கும், சட்டசபைத்தீர்மானத்திற்கிசைந்து தேசபாஷாபண்டிதர் களைக்கெளரவிக்கமுன்வந்த சென்னைச் சர்வகலாசங்கத்தலைவர்களுக்கும், தேசபாஷாபண்டிதர்களைத்தெரிவித்து அவர்கள் திறமையையும் பெருமை யையும் கேட்டு மனமகிழ்ந்து தமது உலகோம்புந்தடக்கையால் அவர் களுக்குப் பரிசுவழங்கிய மேன்மைதங்கிய இளவரசர்க்கும் எல்லா நன்மையும் உண்டாக இறைவன் திருவருள்பாலிப்பானாக.

வாழி தமிழ்ச்சங்கம் வாழி தமிழ்ப்புலவர்
வாழி இளவரசு மன்னர்பிரான்—வாழி
மருவு தமிழ்வளர்த்து வாழியவே சென்னைச்
சருவகலா சங்கம் தழைத்து.

திரு. கி. இராமானுஜையங்கார்,
உதவிப்பத்திராதிபர்.

ஸ்ரீ:

காக்கை சிறுபாடினியனார்.



இப்புலவர் கடைச்சங்ககாலத்தவர். ஐஞ்சிறுமூழி (ஒன்பத்தாறு என்ற சங்கப்பாட்டு) நூல்ஆசிரியராகிய இடைக்காடனார்க்கு இளையவர். ஆயர்வகுப்பினர். தம் குலத்தொழிலையே மேம்படக் கொண்டுபுரியும் திறத்துடன் தமிழ்நூலறிந்து புகியனவாகப்போந்தமைந்த சில சில துறைகளை விளக்கங்கண்டு யாப்பிலக்கணநூல் ஒன்று கண்டனர் என்ப. போசிரியர்–"பிற்காலத்துக் காக்கை-பாடினியாருந் தொல்காப்பிய ரொடு பொருந்தவே நூல்செய்தாரென்பது"—என்று [தொல்-மரபி.95.] உரைகாணுமாற்றம் இப்பாடினியாரையே குறிக்கும் எனல் ஓர் ஊகம். என்னெனின் அடியிற் காண்க:—

ஆசிரியர் தொல்காப்பியனார் யாப்பிற்குத் தனி என்ற ஓர் உறுப்புத் தனிப்படக் கொடாமை வெளிப்படை. அவ்வாசிரியர்காலத்தவான காக்கைபாடினியார் ஒருவர். அக்காக்கைபாடினியார்க்கு இளையரான காக்கைபாடினியார் மற்றொருவர். அவ்விருவருக்கும் வேறுகியுள்ள் வரும் பிற்காலத்தவரும், அன்னோர்பெயரைப் பெற்றவருமாகித் தனி என்ற உறுப்பு யாப்பிற்குத் தனிப்படவேண்டி நூல்யாத்த சிறுகாக்கை பாடினியார் என்பவர்–மூன்றாமவராவர். இதனைப் போசிரியர் குறித் துள்ளார். அக்குறிப்பு வருமாறு:—

" 'இணைநூன் முடிபு தன்னூன் மேற்றே'–என்பதனாற் காக்கை பாடினியார் ஓதிய தனியிலக்கணம் ஈண்டுங் கோடல்வேண்டுமெனின் அஃதே கருத்தாயின் இவர்க்கும் [தொல்காப்பியர்க்கும்] அவர்முடிபே பற்றித் தனிதனியல்வேண்டும். அல்லதூஉம் * அவர்க்கு இளையரான காக்கைபாடினியார் தனிகொண்டிலர் என்பது இதனாற் பெற்றாம். தனி வேண்டினுர் பிற்காலத்து ஓர் ஆசிரியர் என்பது. எனின் ?

'வடக்குந் தெற்குங் குணக்குங் குடக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலதி ஞண்மை வாலிதின் விரிப்பின்'

---

* தனிகோடல் பொருளுரையாக்கொண்டு இப்போசிரியர்கூறுங்கூற்று ஒருபுறமாகக் காக்கைபாடினியார் என்னும் பெயருடையவர் ஒருவர். அன்ன வர்க்கு இளைய காக்கைபாடினியார் [இளங்காக்கைபாடினியார்] எனும் பெயரி னர் இரண்டாமவர். இவ்விருவர்காலத்திற்கும் பிற்பட்டகாலத்தவராகிய-அன் னோர் பெயர்பூண்ட-ஓர் ஆசிரியர் [சிறுகாக்கைபாடினியார்] மூன்றாமவர்-என்றல் வெளிப்படையாகத்தோன்றல் காண்க.

எனக் கூறி 'வடவேங்கடந் தென்குமரி' எனப் பனம்பாரனார்கூறிய வாற்றானே எல்லை கொண்டார் காக்கைபாடினியார். ஒழிந்த காக்கை பாடினியத்து (சிறுகாக்கைபாடினியம்) * 'வடதிசை மருங்கின் வடுகு வரம் பாகத்-தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்' எனத் தென் திசைபுங் கடல் எல்லையாகக் கூறப்பட்டதாகலான் அவர் (சிறுகாக்கை பாடினியார்) குமரியாறுள்ளகாலத்தாரல்லர் என்பதூஉம் குறும்பனைநாடு அவர்க்கு நீக்கல்வேண்டுவதனா னென்பதூஉம் பெற்றும்" [தொல்-செய் 1 பேரா-உரை] என்பது.

இதனால் தொல்காப்பியஞ்சொடுபொருந்தத் தலை என்ற உறுப்புத் தனியாகவேண்டாத காக்கைபாடினியர் இருவர், அங்ஙனம் பொருந்தாது தலைவேண்டிய சிறுகாக்கைபாடினியர் மற்றொருவர்; ஆக மூவர்தவிர நான்காமவராக இக்காக்கைபாடினியர் ஒருவர் வழங்கப்பட்டார். இவர் சிறுகாக்கைபாடினியர்காலத்திற்கும் பிற்பட்டவராவர்.

இவர் முன்னீயகாக்கைபாடினியமதத்தினைத் தழுவாது சிறு காக்கைபாடினியாரதுமுறையினைப் பெரிதும் தழுவி நூல்பாத்தவராகக் கருதப்படுகின்றார். இவ்வுண்மை,

"விருத்தம் வியன்முறை தாழிசை யென்று
பொருத்து முறைமை மறுத்தல்—விரித்துச்
சிறுகாக்கை பாடினியார் செய்த முறையே
மறுகாக்கை வைத்தார் வருத்து"

என்ற [யாப்-கல-செய்யு-3-விருத்தியுரை மேற்கோள்] கட்டுரையானும் அறியக் கிடப்பதாகும்.

இச்செய்யுளில் வரும் 'மறுகாக்கை'-யாவார் இக்கெடுத் தெழுதப்பெற்ற ஆசிரியர். இதனை ஊசிமுறியுள் ஆறைப்பொயிலான் என்பார்-'காக்கையன்பன்னாமம் [ஊசிமுறி-31] என்றதன் உரையில்-"காக்கையன் காடனுடன்பிறந்த சிறுபாடினியன்" என்று எழுதுமாற்றான் அறிக.

இவரதுகுடிப்பிறப்பு-காலம் முதலியனவற்றை இடைக்காடனார் என்ற வியாசம்நோக்கி யறிக.

பெயர்விழையான்,
தச்சநல்லூர்.

---

* இச்சூத்திரம் சிறுகாக்கைபாடினியர் செய்த நூலில் உள்ளது என்பதை, "'வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்-தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்-.....யாப்பின திலக்கண மறைகுவன் மூறையே' எனத் தெற்குக் குமரியன்றிக் கடல் எல்லையாகிய காலத்துச் சிறுகாக்கைபாடினியார்செய்தநூல்" [தொல்-மரபி-95-பேரா-உரை] எனவரும் தொடரால் அறிக.

வராஹ மிஹிரர் இயற்றிய

பஞ்சசித்தாந்திகா.

பொருளடக்கம்.

அத்யாயம்

1. காரணவதாரிகை (Introductory)
2. நக்ஷத்ராதிச்சேதம் (வாலிஷ்டமதம்.)
3. சூரிய சந்த்ர மத்யகதி (புலிசமதம்).
4. காரணத்யாயம்.
5. சசிதர்சனம் (புலிசம்).
6. சந்த்ரக்ரஹணம். ,,
7. சூரியக்ரஹணம் (புலிசம்).
8. ,, (ரோமகம்).
9. ,, (ஸூர்யஸித்தாந்தம்).
10. சந்த்ரக்ரஹணம் ,,
11. அநுவர்ணனம் ,, (Projections of eclipses).
12. பிதாமஹஸித்தாந்தம்.
13. த்ரிலோக்யஸம்ஸ்தானம் (constitution of the universe)
14. வானயந்த்ரசாஸ்த்ரம்.
15. ஜ்யோதிஷோபநிஷத் (Secrets of Astronomy).
16. க்ரஹமத்யகதி (ஸூர்ய ஸித்தாந்தம்)
17. தாரா-க்ரஹஸ்புடம்.
18. தாரா-சந்த்ர சாரங்கள்.

அத்யாயம்—1.

கரணவதாரம் (Introductory).

1/1 ஸூர்யன், வஸிஷ்டர் முதலான பூர்வ (வானூல்) ஆசாரியர்க்கும், எனது தந்தைக்கும், இந்நூலை உபதேசித்த என் குருவுக்கும் வந்தனம்.

1/2 பூர்வாசார்யருடைய மதங்களையநுசரித்து, க்ரஹ சாரங்களையும், அவற்றின் பீஜ (Corrections) ங்களையும் கூறுகிறேன்.

1/3 ஐவகைச் சித்தாந்தங்கள் உள:—

(1) புலிசம்
(2) ரோமகம் } லாடதேவரால் விளக்கப்பட்டவை.

(3) வாலிஷ்டம்.

(4) ஸௌரம்.

(5) பிதாமஹம்.

1/4 இவற்றுள், புலிசம் ஸ்பஷ்டமானது. அடுத்தது ரோமகம். ஸௌரம் ஸ்பஷ்டதரமானது. மற்ற இரண்டும் அவ்வளவு ஸ்பஷ்டமல்ல.

(5-7) இந்நூலில் விசேஷமாய்க் கூறப்படுவன:—

1. சூரியக்ரஹணம்.
2. திசை.
3. கால அளவு.
4. கர்ண (hypotenuse) மானம்.
5. சந்த்ரக்ரஹணம்—அர்க்ரஹணம்.
6. க்ரஹ ந்ருக்ஷத்ர ஸம்யோகம்.
7. தேசாந்தர (longitudinal) மானம்.
8. ஸமமண்டலம் (prime vertical).
9. சந்த்ரோதயம்.
10. வான நூல்பத்ரவர்ணனம்.
11. சங்கு நிழல் (shadow of gnomon).
12. மற்ற உபகரணங்கள்.
13. அக்ஷஜ்யா (Sine of terresteial latitude)
14. அவலம்பகம் (Sine of colatitude).
15. அபக்ரமம் (declination) முதலானவை.

1/8 இந்நூல் கணனாரம்பம்.

சகம் 428 சைத்ராசுக்லப்ரதமை திங்கட்கிழமை, யவனபுரியில் அஸ்தமனஸமயம்.

1/9 1 ஸௌரவர்ஷம் = 12 ஸௌரமீ.

228 ஸௌரமீ = 235 சாந்த்ரமீ. (synodical months)

235–228 = 7 அதிமீ.

1 சாந்த்ரமீ = 30 திதி

1/(10-16) ரோமக முறைப்படி

703 திதி=692 ஸவனதினம்+11 கூடபதினம்.

[ஸவனதினம்=சூர்யதினம்=civil day]

புலிச முறைப்படி

976 நாளுக்குப்பிறகு 1 அதிமாஸமும்

63 ,, அவமதினமும் சேர்க்கவேண்டும்.

ஸௌரமானப்படி

யுகம்	=	180000	ஸௌரவர்ஷம்
	=	2160000	,, மீ
		66389	அதி மீ
		2226389	சாந்த்ர மீ
		66791670	சந்த்ரதினம் (திதி).
		1045095	கூடபதினம்
		65746575	ஸாவன தினம்
	+	180000	ஸௌராப்தம்
		65926575	ரகூடத்ரதினங்கள்.

இதேமாதிரி ரோமக முறைப்படி

யுகம் = 2850 ஸௌர வர்ஷங்களில்,

ஸௌரமீ	=	34200
அதிமீ		1050
சாந்த்ரமீ		35250
சந்த்ரதினம்		1057500
கூடயாஹம்		16547
ஸாவனதினம்		1040953
+ஸௌரவது		2850
ரகூடத்ரதினம்		1043803

17-25 வர்ஷ-மீ-தின அதிபதிகள் நிர்ணயம்.

அத்யாயம்—2.

நக்ஷத்ராதி நிர்ணயம்.

2/2. $\frac{\text{அகர்க்கணம்} + 1936}{3031}$ ல் வரும் ஈவு = கனம்

$\frac{\text{கூ மீதம்} \times 9}{248}$ ல் வரும் ஈவு = கதி

கூ மீதம் = பதம்

குறிப்பு—

		தினம்	மீ
1.	தேவரம் (கதி)	248 =	9 (தெலுங்குமுறை)
2.	கலாநிலம் (கனம்)	3031 =	110
3.	ரஸிகா	12372 =	441
4.	வேதம்	1600984 =	1237

மீ = சாந்த்ரமீ (anamolistic month.)

2/7 சந்த்ரக்ருவம் (=Moon's longitude)$\times\frac{5}{7}$= $\frac{\text{சந்த்ரநக்ஷத்ரம்}}{= 13\frac{1}{3}^\circ}$

(சந்த்ரக்ருவம்—ரவிக்ருவம்)$\times\frac{5}{9}$=திதி= 12°

2/8 (அவந்தியில்) அகர்நிர்ணயம் —
மகராதியில் அஹர்மானம் 1591 விநாடி. அதுமுதல் கடகாதி வரை நாள் ஒன்றுக்கு 3 விநாடி கூட்டவேண்டும். அதுமுதல் மொத்தத்திலிருந்து, முறையே, 3 விநாடி கழித்துவரவேண்டும்.

2/9 அவந்தி (24°)யில் 12 அங்குலக்கோல நிறுத்திநிழல் நடுப்பகலில் வடபுறம் நிழலேயிராது; அப்போது கடகாதி. அதுமுதல் சூரியன் தெற்கே செல்லச்செல்ல, சூரியராசி ஒன்றுக்கு 2 அங்குலம் வீதம், நிழல் அதிகரிக்கும். மகராதியில் 12 அங்குலம் நிழலிருக்கும். அதுமுதல் மேற்கண்டவாறு குறையும்.

2/10 இதைமாதிரி பகல் நிழலைக்கொண்டு சூரியராசியைக் கணிக்கலாம்.

2/11 உதயலக்னநிர்ணயம்.

நடுப்பகலில் சூரியன் உச்சியிலிருப்பதால், கர்வடக்காய் நிழலிருக்கும். அப்போது உதயலக்னக்ருவம்=சூரியக்ருவம்+90° மற்றவேளைகளில், மேற்கு அல்லது கிழக்கில் நிழல் சாய்ந்திருக்கும். அதனினின்றும் உதயலக்னம் நிர்ணயிக்கலாம்.

உதயலக்னத்ருவம்

(முற்பகலில்) $= \frac{12\times3\times30^\circ}{12+\text{இஷ்டகாலநிழல்}-\text{பகல்நிழல்}}$ + ரவித்ருவம்

(பிற்பகலில்) $= 180^\circ - \frac{12\times3\times30^\circ}{12\times\text{நி}-\text{ப. நிழல்}}$ + ரவித்ருவம்

அதாவது $\frac{12\times3\times30}{12+\text{நி}-\text{ப. நிழல்}}$ என்பது இஷ்டவேளையில்

முற்பகலானல் ரவித்ருவ உதயத்ருவ வித்யாஸத்தையும், பிற் பகலானல் ரவித்ருவ அஸ்தத்ருவ வித்யாஸத்தையும் சூறிக்கும்.

2 (12-13) உதயலக்னத்ருவத்தைக்கொண்டு நிழல் நிர்ணயிக்கும் முறை.

அத்யாயம்—3.

புலிச ஸித்தாந்தம்.

3/1 ரவிமத்ய (mean longitude) கதி நிர்ணயம்.

$\frac{(\text{அகர்}\times120)-33}{43831} =$ ரவிமத்யகதி

அதனுடன் 20 அம்சம் கூட்டவேண்டும்.

[ரவி கேந்த்ரம் = ரவிமத்யம்]

3 (2-3) ரவிநிஜகதி (ரவிஸ்புடம்).

ரவி கேந்த்ரம்+20°, ராசிக்ரமத்தில்,

மே	வி	மி	க	சி	க	ராசிக்ரமம்
11,	48,	69,	69,	54	25	முதல்கண்டம்
10	48	70	71	54	25	இரண்டாம் கண்டம்
21	96	139	140	108	50	

இவைகளை முறையே, கூட்டியும் கழித்தும் கொள்ளவேண்டும்.

3 (4-9) சந்த்ரகதி நிர்ணயம்.

3 (10-12) அஹர்நிர்ணயம்.

மே.	வி.	மி.
20	$16\frac{1}{2}$	$6\frac{2}{3}$
× பலபம்	பலபம்	பலபம் (equinoctical shadow)
கன்	சி	கட
து	வீரி	தனு
மீனம்	கும்	மக

20 × பலபம் = வரும்வினுடிகள் மே, கன், து, மீனம் அஹஸ் வித்யாஸம், இவ்வாறே மற்றவைகளையும் கணிக்கவேண்டும்.

(13-15) தேசாந்தர நிர்ணயம்—(Distance in longitude)

(13) யவனபுரியிலிருந்து

அவந்தி, $7\frac{1}{3}$ நாழிகை (44°) தூரம்

காசி 9 நாழிகை (54°) தூரம்

[1 நாழிகை = 6°].

பூபரிதி = 360° = 3200 யோஜனை

∴ 1° = $\frac{800}{9}$ = $8\frac{8}{9}$ யோஜனை.]

3-16 1 நக்ஷத்திரம் = 800' = $13\frac{1}{3}$°

$$\frac{\text{ஸசித்ருவம்—ரவித்ருவம்}}{12^\circ} = 1 \text{ திதி} = 12^\circ$$

3-17 ஸூர்யன் தினகதி.

மே	வி	மி	கட	சி	கன்னி மாதங்களில்,
57'	57'	57'	57'	58'	59'
61'	61'	61'	61'	60'	59'
து	வ்ரி	த	ம	கும்	மீன மாதங்களில்

3-18 1 கரணம் = $\frac{1}{2}$ திதி = 6°

$$= \frac{\text{சசித்ருவம்—ரவித்ருவம்}}{6^\circ}$$

1 சாந்த்ரமீ = 30 திதி = 60 கரணங்கள்

3-19 ஸ்திரகரணங்கள்—

1. சகுனி = க்ருஷ்ண சதுர்த்தசி பிற்பகுதி
2. சதுஷ்பாதம் = அமா முற்பகுதி
3. நாகம் = அமா பிற்பகுதி
4. கிமஸ்துக்னம் = சுக்லப்ரதமை முற்பகுதி

சரகரணங்கள்:—மற்றவை

3-20 1. யோகம் = $\frac{\text{ஸசித்ருவம்} + \text{ரவித்ருவம்}}{27}$ = 13 $\frac{1}{3}$'

ஸசித்ரு + ரவித்ரு + 10 நக்ஷ = 180° ஆஸ்ல் வைத்ருதி

ஸசித்ரு + ரவித்ரு + 10 நக்ஷ = 360 ,, வ்யதீபாதம்

[த்ரு = த்ருவம் = longitude

10 நக்ஷத்ரம் = $133\frac{1}{3}$°.]

3-21 தக்ஷிணயனாரம்பம்
மூன் ஆயில்யமத்தியிலிருந்தது
இப்போது (505 கி. பி.) (புனர்வஸு) கடகாதியில் இருக்கின்றது. அதாவது $23\frac{1}{3}°$ பின்னடைந்திருக்கிறது.
[விஷுவதினம் $66\frac{2}{3}$ வருஷத்துக்கு 1° வீதமும்
64 ,, 1 நாள்வீதமும் (சூ. சி.)
60 ,, ,, (மற்ற ஸி) பின்னடையும்]

3-22 மூற்காலத்தில்
ஸுஸித்ருவம் + ரவித்ரு = 180° ஆனால் வ்யதீபாதம்
ஷ ,, 360° ,, வைத்ருதி

(23-24)

352° ஷ	1° சைத்ர விஷுவ		78° ஷ
		தக்ஷிணாயனாதி	91°
271°			
266° ஷ		181° துலா	164° ஷ

உத்தராயனாதி

விஷுவ

ஷ = ஷடசீதிமுகம் = 86° க்கு ஒருதடவை.
(164° + 86° =) 250° முதல் 266° வரையுள்ள அதிக விஸ்தாரம் 16° = பித்ருதினங்கள். இது சூரியகதியை யநுசரித்தது.

3-25 அயனதிகள்.—

1 வர்ஷம் = $\left\{\begin{matrix} 1. & \text{உத்தராயணம் (மகராதி) } 6\text{மீ} \\ 2. & \text{தக்ஷிணாயனம் (கடகாதி) } 6\text{மீ} \end{matrix}\right\}$ 12 மீ
= 6 ரிதுக்கள் (சிசிர ரிதுமுதல்)

3-26 ஸங்க்ராந்திபுண்யகாலமாவது
30 கலையளவுள்ள ரவிபிம்பம் அந்தந்த ராசியின் முதல் பாகையைக் கடக்கக்கூடிய நாழிகை

$$= \frac{30' \times 60}{\text{அந்தந்தமீ தினகதி}}$$

3-27 திதிவ்ருத்தி = 3 தின ஸம்பந்தமான திதி.
திதிக்ஷயம் = 3 திதி ஸம்பந்தமான தினம்.

3-28 சசிபரமவிக்ஷேபம் (Maximum latitude of the noon) = 270 கலை.

ராகுஸ்தானத்துக்கும் சந்த்ரஸ்தானத்துக்கும் உள்ள தூரம் 90 பாகைகள் ஆகுங்கால் சந்த்ரனுக்குப் பரம விக்ஷேபம் உண்டாகிறது.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.,
மதுரை.

கூட்டுறவுப்பண்டசாலை.

(ஜெயராமன்தெரு–மாலை.)

காமாக்ஷி:–மாமி, எங்காத்துக்குள்ளே கொஞ்சம் வாருங்களேன்.

மாமி:–வரேன், கொஞ்சம்வேலையிருக்கு; சாயவாத்துக்குப்போகவேணும்

கா. சிக்கிரம் போய்விடலாம்.

மா. சரி, என்னவிசேஷம்?

கா. ஒன்றுமில்லை; எங்காத்துக்காரர் மத்தியானம் தஞ்சாவூருக்குப் போயிருக்கார். ராத்திரிமட்டுக்கும் எனக்குத் துணையாகவந்து எங்காத்தில் படித்துக்கொள்ளமாட்டேளா? (கேட்களா).

மா. அதற்கென்ன, வரேன். இதுக்குக்கூட நான் உபகாரமில்லாமல் இருப்பேனே? அதென்ன, மஞ்சளா உனைத்திரிருக்கிறது. நன்னு இருக்கே. எந்தக்கடையில் வாங்கினது?

கா. பெரியதெருவிலே பலசாதாரணமனிதர்கள்சேர்ந்து (புரிசா ஸ்டோர் என்று) ஒரு பல்சரக்குச்சாலை வைத்திருக்கார்கள். அதிலே வாங்கினது; கடையில் வாங்கலை.

மா. அதென்ன அது? போஜனசாலை, பாடசாலை என்பதுபோலவா அது? பலசரக்குச்சாமான்களெல்லாம் இலவசமாகக்கொடுப்பாளா?

கா. இல்லை, மாமி. அப்படியில்லை. அது பண்டங்களெல்லாம் வைக்கப் பட்டிருக்கும் ஒரு சாலை. சாதாரணக்கடைகளில் சாமான்கள் விற் பதுபோல், அங்கேயும் அந்தச் சாமான்களை விற்கத்தான்செய்கிறார் கள். ஆனல் கடைக்காரன் எல்லாஜனங்களுக்குக்கும் தன் சாமான் களை விற்பான். இங்கே அந்தச்சாமான்களை அதில்சேர்ந்த மெம் பர்களுக்குத்தான் கொடுப்பார்கள்.

மா. ஆனல் நான்போய்க் கேட்டால் கொடுக்கமாட்டார்களா ?

கா. நீங்கள் மெம்பராயிருந்தால் கொடுப்பார்கள். மூட்டிப்போனல் ஒருமெம்பர்பேரில் எழுதிக்கொண்டு மற்றவர்களுக்குங் கொடுக்கி றார்கள்.

மா. மெம்பரென்ற லென்ன ?

கா. அது ஒரு இங்கிலீஷ்வார்த்தை. ஏதாவது ஒருகூட்டம், சபை இவைகளில்சேர்ந்த ஒவ்வொருமனுஷாருக்கும் ஏற்பட்ட பொதுப் பெயர்.

மா. ஆனல் அதில் நான் மெம்பர் ஆகலாமோ ?

கா. ஆமாம்; மெம்பராகலாம். ஸ்திரீகளும் புருஷர்களும் மெம்பராகலாம். பதினெட்டுவயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

மா. மெம்பர் ஆனல் என்ன .பிரயோஜனம் ? இந்தச்சாலையில் வாங்கு வதை மத்தக்கடையிலேதான் வாங்கிட்டுப்போகோம். மெம்பர் ஆவதற்கு என்னசெய்யணும் ?

கா. அஞ்சேகால்ரூபாய் கொடுத்து ஒரு பங்கு முதலில் எடுத்துக் கொள்ளணும். அல்லது ஒரு கால்ரூபாய் முதலில் கொடுத்துவிட்டு அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கலாம்.

மா. நன்னாச்சு. முதலில் பணம்கொடுத்து மெம்பராகணும்; அப்புறம் ஒரு காதம் கடந்து பெரியதெருவிலேபோய்ச் சாமான், வாங்கணும். அப்படியாவது கடனுவது கொடுப்பாளா ?

கா. கடன் என்பது கொஞ்சங்கூடக் கிடையாது. எல்லாம் பொக்க விலைக்குத்தான் கொடுப்பார்கள். ஆனல் உங்கள்பேரில் ஒரு நம்பர் போட்டு ஒரு சோக்கா (டோகன்) கொடுப்பார்கள். நீங்கள் சாமானுவாங் குக்குப் போகணும் என்று சொன்னீர்களே.

மா. ஆமாம், போகணும். நீ எதோ ஒரு புதுச்சமாசாரம் சொன்னியே இன்னு கேட்டுக்கொண்டிருந்தேன். கொஞ்ச நாழிகழித்துத்தான் போரேன். நி என்னவோ நம்பர் போட்டுக்கொடுப்பா என் னு சொன்னேபே; என்ன அது. லியாச்சிபம்போடாளே அதுவா?

கா. இல்லே. நம்பர் என்பதும் ஒரு இங்கிலீஷ் வார்த்தை. அதற்கு எண், இலக்கம் என்று அர்த்தம். நீங்கள் மெம்பராகச் சேரும் போது வரிசைக்கிரமப்படி உங்கள்பேருக்கு எதிரே ஒரு நம்பர் எண்ணிக்கைபோட்டு ரசீது கொடுப்பார்கள். அந்த எண்ணிக் கையையும் உங்கள் பெயரையும் நீங்கள் சாமான் வாங்கும்போதெல் லாம் ஒரு அச்சுப்போட்ட கடிதத்தில் எழுதி, வாங்கின சாமான் வகைகளையும் அவைகளின் அளவையும் விலையையும் குறிப்பிட்டு, அதை ரசீதாகக்கொடுப்பார்கள்.

மா. நம்ம மாப்பிள்ளைச்செட்டிகடையில்கூடத்தான் தரான். இதி லென்ன விசேஷம்? அவன்கூட இப்போ அச்சுக்கடுதாசி வச்சுக் கொண்டிருக்கான். முந்தியெல்லாம் ஓலைக்கணக்காயிருந்தது. பிறகு வெறுங்கடுதாசியிலே எழுதிக்கொடுத்தான். இப்பொழுது அச்சுக் கடுதாசி ஆய்விட்டது.

கா. இப்பொழுது இன்னு, எத்தனை மாசமாச்சு?

மா. அஞ்சாறு மாசமாச்சு.

கா. சரிதான். நான் நினைச்சது சரியாய்ப்போச்சு. இந்த ஸ்டோர் ஏற் பட்டு ஒருவருஷமாச்சு. இங்கே நடக்கிற நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு, உங்க மாப்பிள்ளைச்செட்டியும் நடக்க ஆரம் பித்துவிட்டான். ஆனால் இந்த இரண்டுக்கும் ரொம்ப வித்தியாசம் உண்டு.

மா. அதென்ன, அது?

கா. ஸ்டோரிலே உங்களுக்கு ரசீதுகள் கொடுக்கும்போதெல்லாம் அவை களுக்கு ஒவ்வொரு காபி எடுத்துவைத்துக்கொண்டிருப்பார்கள்.

மா. பாழும் இழவு காபி இங்கேயும் வந்துவிட்டதா?

கா. இது நம்மாங்களிலே சாப்பிடுகிற காபி யில்லை. இதுவும் ஒரு இங்கிலீஷ் வார்த்தை. இதற்கு நகல், பிரதி என்று அர்த்தம். நமக்குக் கொடுக்கும் சரீரை எல்லாவகையிலும் வித்தியாசமில்லா மல் ஒத்திருக்கிற நகலுக்குப் பெயர் அது. அவைகளை ஜாக்கி தையாய்ச் சேர்த்து வைத்திருப்பார்கள்.

மா. இதிலே என்னலாபம் நமக்கு?

கா. நம்மபேரிலே ஒருபங்கமோ அல்லது ஜாஸ்திபக்கங்களோபோட்டு ஒருபெரிய பேரேட்டுக்கைக்குப்புத்தகம் வைத்திருக்கிறார்கள். நாம் மாதாமாதம்வாங்குகிற கணக்குத்தொகைகளை அதில் பதிந்து வைப்பார்கள்.

மா. கடைபோட்டுச் சில்லரைச்சாமான்களை விற்பதற்கு இவ்வளவு படாடோபங்கள் எதற்கு? எல்லாம் வீண்செலவு. நான் போயிட்டு அப்பறம் வரேன்.

கா. நல்லது; கட்டாயமாய்வாருங்கள். நீங்கள் இப்போ என்னவோ வீண் செலவு என்று சொன்னீர்களே. அது வீண் இல்லை என்பதை ராத்திரி எடுத்துச்சொல்லுகிறேன்.

மா. சரி. (போகிறார்.)

இரவு.

மா. காமாக்ஷி, காமாக்ஷி. (கதவைத்தட்டுகிறார்)

கா. வந்துவிட்டேன், வந்துவிட்டேன்.

மா அம்மாடி, இத்தனைநாழியாச்சு ஆத்துக்காரியம் முடியறதற்கு. குழந்தைகளெல்லாம் சாப்பிட்டதோ?

கா. சாப்பிட்டாச்சு இரண்டும். இதுவரைக்கும் பக்கத்தில் படித்துக் கொண்டு தட்டிக்கொண்டிருந்தேன். இப்போதான் கண்ணைமூடித்து, நீங்களும் வந்தீர்கள்.

மா. எங்காத்திலேயும் இத்தனை நாழியாச்சு. என்பிள்ளை கச்சேரியி லிருந்து இருட்டவிட்டுத்தான் வந்தான். நீ சாயங்காலம் ஏதோ சொல்லிக்கொண்டுவந்தாயே, அதைப்பூராவும் சொல்லு. கேட்க ஆசையாயிருக்கிறது.

கா. என் கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள். எனக்குப் பிறந்தாம் மதுரையிலே. திருநெல்வேலியிலே வாழ்க்கைப்பட்டேன். எங்காத்திலே எனக்குக் காரியம் ஒண்ணும் சொல்லிக்கொடுத்துப் பழக்கிவைக்கலே. புக்காத்துக்குப் போனதும் மாமியார் சாதாரணமாக ஆத்துக்காரியங்களையெல்லாம் செய்துவந்தா. என்னைக்கூட வேலைசெய்யலே இன்னு அடிக்கடி கோச்சிப்பா. அப்பொழுது பட்டணத்தில் அவாளுக்கு வேலே. நானும் அசடாய்ச் சும்மா இருந்துட்டேன். மாமியார்காலம் ஆயிட்டது. அப்புறம் நான்தான் ஆத்துக்காரியமெல்லாம் செய்யவேண்டிவந்தது. எனக்கு என்ன சாமான் வாங்கறது, எவ்வளவு வாங்கணும், என்னவிலே என்பது ஒன்றும் தெரியாது. ஆத்துக்காரருக்கோ, ஆபீஸ்வேலே ஜாஸ்தி. அவாள் ஏதாவது வாங்கிப்போட்டால்தான் உண்டு. அப்பொழுது சம்பளம் ரூ. 80. முதல்தேதிவாங்கினசம்பளம் அஞ்சாம்தேதி ஆறும்தேதிக்குள் செலவாய்ப்போயிடும். மொத்தமாகச் சாமான் வாங்கிவைத்திருந்தாலும், அடிக்கடி அனேகசாமான்கள் தட்டிப் போயிடும். அப்போ, பக்கத்திலிருந்த கோவிந்தச்செட்டி கடையில் பற்றுவாவுவைத்துக்கொண்டு சாமான்களைக் கடனுக்கு வாங்கிவந்தோம். இப்படி வாங்கிவரும்போது, மாசக்கடைசியில் இந்தக் கடனும் ஜாஸ்தியாக ஆயிடும். ஆனால் அந்தக் கோவிந்தச்செட்டி ரொம்ப நல்லவன் எப்போ கேட்டனுப்பினாலும் சாமான் கொடுத்துவிடுவன். சிலமாசங்களில் அவனுக்குப் பூராப்பணத்தையும் கொடுக்கமுடியாமல் போயிடும். உங்களுக்குந்தான் தெரியும். பணம் எப்படிஎல்லாமோ கொஞ்சம்கொஞ்சமாகச்செலவழிந்துவிடுகிறது. ஆகக் கடைசியில் கடன்தான் ஜாஸ்தியாகிக்கொண்டுவந்தது. சம்பளம் நூறுரூபாயாக ஆச்சு. அப்போவும் கடன்தான் ஜாஸ்தியாச்சு. அப்புறம் மாசாமாசம் கொடுபடாதபணத்துக்கு வட்டியும் குட்டிபோட ஆரம்பித்தது.

மா. ஆமாம், எங்காத்திலேயும் அப்படித்தானிருக்கு. ஒருநாளும் கடன் அடைந்தபாடில்லே. நானும் எவ்வளவோ கவனமாய் இருந்து பார்க்கிறேன்,

கா. இப்பொழுது எங்களுக்குக் கடன் கிடையாது. அது எப்படி ஏற்பட்டது என்னு சொல்றேன், கேளுங்கள். ஆனல் கடன் ரொம் பப்பொல்லாதது. பாம்பு, நெருப்பு இதெல்லாம் நமக்குத்தெரிந்தே நம்மைக் கஷ்டப்படுத்தும். இந்தக் கடன் நமக்குத்தெரியாமலே பெரியதாகி நம்மைச் சித்திரவதைசெய்யும். உங்களுக்குத் தெரி யாதது ஒன்றுமில்லே. என்கதையைச் சொல்றேன். நாங்கள் பட் டணத்தில் பெரியதெருவில் குடியிருந்தோம். அங்கே சில உத் யோகஸ்தாளும் பள்ளிக்கூடவாத்தியார்களுமாகச் சேர்ந்து ஒரு மாட்டுக்கொட்டகையை ஒரு அறையாக ஏற்படுத்திக்கொண்டு முதல்முதலாக ஸ்டோர் என்ற பண்டசாலையை ஆரம்பித்தார்கள். அதனுடைய முக்யலக்ஷணங்கள் (1) கடன்வாங்குவதுமில்லே ஒருபொழுதும் கடன்கொடுப்பதுமில்லே (2) கூடியவரை மெம்பர் களின்தேவைகளே அறிந்தே சாமான்களைச் சேகரித்து அவர் களுக்கு விற்றல் (3) எஜமானனிடத்தில் நாய்களுக்கு எவ்வளவு விசுவாசம் இருக்கிறதென்று கர்ணபரம்பரையாகச் சொல்லப்படுகிற தோ அதைவிட ஜாஸ்திவிசுவாசம் மெம்பர்களுக்கு ஸ்டோரிடத் தில் இருக்கவேண்டும் (4) அக்கம்பக்கத்துக் கடைவிலேக்குக் குறைந்தாவது கொள்முதலுக்குக் குறைந்தாவது சாமான்களே விற்பதில்லே (5) ஒவ்வொருமெம்பருக்கும் ஒரே வோட்டுத்தான் உண்டு (6) ஏழை பணக்காரன், ஸ்திரீகள், புருஷர்கள், யாரும் மெம்பர் ஆகலாம் (7) சரியான அளவு நிறைகளுடன் சாமான்களே விற்றல் (8) சாமான்வாங்கியவிதப்படி லாபத்தைப் பிரித்துக் கொடுத்தல். இப்படி இன்னும் லக்ஷணங்கள் இருக்கின்றன.

மா- அம்மாடி! மணலே லேசாகக் கயிறுகத்திரிச்சிடலாம்போலிருக்கு. நீ சொல்றது செய்யமுடியாதுபோலிருக்கே.

கா. அப்படித்தான்தோன்றும். ஆனல் இவ்வகளேயெல்லாம் அங்கே நன்றாக நடத்திவருகிறார்கள். எல்லாவற்றுக்கும் மனுஷாளும் விடாமுயற்சியும் வேண்டும். நான் என் கதையைச் சொல்றேன். ஒரு நாள் எங்காத்துக்காரர் 'இனிமேல் சாமான் எல்லாம் ஸ்டோரி லே வாங்கவேண்டும்' என்று சொல்லி, அதனுடைய நடவடிக்கை களேயும் விதிகளேயும் எடுத்துச்சொன்னர். "பழைய செட்டிக்குக்

கடன் கொடுக்கவேண்டுமே; அதைத் தீர்த்துக்கொண்டாலல்லவா வேறுகடைக்குப்போகலா" மென்று சொன்னேன். "வாஸ்தவந் தான். ஆனல் நம்முடைய கடன் ஒருநாளும் அடைபடும்போலத் தோன்றவில்லையே. இனிமேல் செட்டாகக் குடித்தனம்பண்ண வேண்டும். கடனுக்கு ஒருசாமானும் வாங்கக்கூடாது. இப்படி ஸ்டோரிலேயே நம்முடைய ஆத்திச் சாமான்களை வாங்கிவந்தால், வருஷக்கடைசியில் கணக்குப்படி நமக்குக் கொஞ்சம் பணம்கிடைக் கும். அதைக்கொண்டு அவன் கடனை அடைத்துவிடலாம்" என்று சொன்னர். நானும் "சரிதான், கடனுக்குவாங்குகிறபோதெல்லாம் அவனிடத்தில் வாங்கிவிட்டு, இப்பொழுது சொக்கத்துக்கு வாங்கு கிறபோது வேறு இடத்துக்குப் போகலாமா" என்று ஆட்சேபித் தேன். அவாளும் அதை ஒப்புக்கொண்டார்கள் "ஆனல், வேறு வழியில்லையே. இப்பொழுது சொக்கத்துக்கு நம்ம செட்டியிடத் திலேயே வாங்குகிறது என்று வைத்துக்கொண்டாலும், நமக்கு ஒன்றும் திரும்பிப் பலன் கிடைக்காதே. ஸ்டோரிலே வாங்கிவந் தால், ஏதாவது நமக்கு மீதம் கிடைக்கும் என்கிற நிச்சயமிருக் கிறது" என்று திரும்பவும் சொன்னர்கள்.

மா. உங்களுக்கு அப்படி ஏதாவது கிடைத்ததோ? அதை முதலிலே சொல்லு.

கா. நாங்கள் துணிமணிகள் தவிர மற்ற சாமான்களையெல்லாம் ஸ்டோரி லேயே வாங்கிவந்தோம். முதல்வருஷத்திலே எங்களுடைய கணக் குப்படி எங்களுக்கு இருபத்தைந்து ரூ கிடைத்தது. ருசிகண்ட பூனைவிடுமா? இன்னும் ஜாஸ்தியாக அடுத்தவருஷங்களில் வாங்க ஆரம்பித்தோம். எங்களுக்கு ஜாஸ்தியாகவே மீதப்பணம் கிடைத் தது. எனக்குப் புடவை வாங்குகிறதுக்குக் கண்டுவிட்டது.

மா. தேவலையே. இவ்வளவு ரூபாய் திருப்பிக்கொடுப்பதற்கு எப்படி முடியும்? இப்படி எல்லாருக்கும் கொடுக்கவேணும். இல்லையோ? ஏதாவது கள்ளத்தனம் இருக்கவேண்டும்.

கா. அவாளவாள் எவ்வளவுரூபாய்க்குச் சாமான்வாங்கினாளோ, அதற்குத் தகுந்தபடிதான் மீதப்பணத்தை ஈவுவைத்துக்கொடுப்பார்கள். நாங்கள் முதல்வருஷத்தில் பட்டணத்து ஸ்டோரில் 800 ரூக்குச் சாமான் வாங்கினோம், ரூக்கு அரை அணுவீதம் மீதப்பணம்

கொடுத்தார்கள். எங்களுக்கு அப்படியாக நூ இருபத்தைந்து கிடைத்தது. எங்க அடுத்தாத்திலே ஒரு ராயர் இருந்தார். அவாளாத்திலே நூ 1500-க்கு வாங்கினார்கள். அதற்குத் தகுந்தபடி அவாளுக்கு நாற்பத்தேழு ரூபாய் கிடைத்தது. எங்காத்திலே ஓட்டுக்குடிக்கு ஒரு சாஸ்திரிகள் இருந்தார். அவாளாத்திலே 200 நூக்கு வாங்கினார்கள். அவாளுக்கு ஆறேகால் ரூபா கிடைத்தது. அந்த வருஷத்தில் மொத்தம் 40000 நூக்கு சாமான்கள் விற்றதாம். இப்படியாக 1250 ரூபாயை மெம்பர்களுக்குள் அவர்கள் சாமான்கள் வாங்கின விதப்படி கொடுத்தார்கள். இதிலே கள்ளத்தனம் ஒன்றுமில்லை. வேலையாட்களுக்குச் சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். எதிர்பாராத ஆபத்துக்காலங்களில் உபயோகமாக இருக்கும்பொருட்டு வருஷாவருஷம் ஒரு சேமநிதி ஒன்று சேர்த்துவருகிறார்கள். இந்த நிதியும் பெருகிக்கொண்டே வருகிறது. இதுவரையும் ஒரு ஆபத்தும் வரவில்லை.

மா. ஆனால் வருஷாவருஷம் இவ்வளவு ஆதாயம் கிடைக்குமா?

கா. நேற்று வீதிவழியாய் ஒரு திவ்யமான இரட்டைக்குதிரைவண்டி போயிற்று. குதிரை வெகு அழகாயிருந்தது; வண்டியோ நன்றாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது; வண்டிக்காரனைப்பார்த்தால் ஒரு பெரிய ராஜாமாதிரியிருந்தது; ஆனால் உள்ளே ஒரு சாதாரண மனிதர் தான் உட்கார்ந்திருந்தார். அடுத்தாத்துக்காரியை "அவர் யார் தெரியுமா" என்று கேட்டேன். "அவர்தான் இந்த ஊர் வெங்கடேசச்செட்டியார்; பெரிய மளிகைவியாபாரி" என்று சொன்னாள்.

மா. வெங்கடேசச்செட்டியா? அவனுக்கு என்ன மகாராஜன். கொள்ளைப்பணம் வரதாம். ஆத்திலே ஒவ்வொரு பொம்மனாட்டிக்கும் உயர்ந்த வைரக்கம்மல் போட்டிருக்கான். குதிரை மாடு வண்டி எல்லாம் இருக்கு.

கா. அவனுக்கு இவ்வளவுபணம் வது? எப்படிக் கிடைக்கிறது?

மா. எப்படிக்கிடைக்கிறதா? நிறையப் பணம் இருக்கிறது, முதல் போட்டு முதல் எடுக்கிறான். அவன் மளிகையில் கறுர்விலேதான். ரொக்கவிலைக்குத்தான் கொடுப்பான்.

கா. அவன் முதல் எப்படி- அவனுக்கு முதலைக் கொடுக்கிறது?

மா. பலஇடங்களிலிருந்தும் குறைந்தவிலைக்குச் சாமான்களை மொத்தமாக வாங்கிக்கொண்டுவந்து, பிறகு இங்கே அவைகளை மொத்தமாயும் சில்லரையாகவும் விற்கிறான். அவனுக்கு நிறைய லாபம் கிடைக்கிறது.

கா. சரிதான். அந்தலாபத்தை அவனுக்கு யார் கொடுக்கிறார்கள்?

மா. யாரா? சாமான்வாங்குகிறவர்கள்.

கா. அவர்கள் யார்?

மா. அவர்கள் நம்மைப்போன்றவர்கள்தான்.

கா. சரி, ஆகையினாலே அவனுக்கு அபரிமிதமான லாபத்தைக்கொடுக்கிறவர்கள் நாம். நாம் இல்லாதுபோனால், நாம் அவனிடத்தில் சாமான்களை வாங்காமல்போனால், அவனுக்கு லாபம் கிடைக்குமோ?

மா. கிடையாது. ஆனால் அவன் அதைத்தானே பிழைக்கும்வழியாய் வைத்துக்கொண்டிருக்கிறான். அவன்பிழைப்பைக் கெடுக்கலாமா?

கா. அவன் பிழைப்பை யார் கெடுக்கச்சொல்லுகிறார்கள். அவனிடத்தில் நாம் சாமான்வாங்குகிறதுமூலமாக அவனுக்கு நிறையப் பணம் கிடைக்கிறதென்றும் அதிலிருந்து பொம்மனாட்டிகளுக்கு வைரக்கம்மல்களும் குதிரைவண்டிகளும் ஏற்படுகிறது என்றும் தெரிகிறது. இல்லையா?

மா. ஆமாம், ஆமாம். அவனுக்கு நாம்தான் இரைபோடுகிறோம்.

கா. நானும் அதைத்தான் சொல்லுகிறேன். அவனைப்போலவே, சிப்பந்திகளை வைத்துக்கொண்டு, அந்த ஸ்டோர்களிலும் பல சரக்குகள் வியாபாரம்செய்து, கடைசியில் வருகிற ஆதாயத்தைச் செட்டியார்போல் ஒருவரே தனது "லாப"மாக எடுத்துக்கொள்ளாமல், யார் யார் சாமான்கள் வாங்கினதினாலே அந்த ஆதாயம் கிடைத்ததோ, அவர்களுக்குள் அவர்கள் சாமான்வாங்கினதொகைப்படி அதைப் பங்கிட்டுக்கொடுக்கிறார்கள். இது தர்மவழியல்லவா? அநியாயம் என்று ஒருவரும் இதைச் சொல்லமுடியாதல்லவா?

மா. நீ சொல்லுகிறதெல்லாம் நியாயமாகத்தான் தோன்றுகிறது. இந்த மாதிரி விஷயங்களை ஒருவரும் என்னிடத்தில் எடுத்துச் சொல்ல வில்லை.

கா. ஆகையினாலே ஸ்டோரிலே ஒரு கள்ளத்தனமுமில்லை என்று ஏற் படுகிறதா? செட்டியாயிருந்தாலும் சரி, ஸ்டோராயிருந்தாலும் சரி, இரண்டுபேருக்கும் சிப்பந்திச்செலவு, சில்லறைச்செலவு, சேதாரம் முதலியன உண்டு. ஆனால் இதுவரை செட்டியார்போன்ற வியா பாரிகளுக்கு நிறைய லாபம்வருமென்று நன்றாய்க் கவனித்திருக் கிறோம். அதேமாதிரி ஸ்டோரிலேயும், மெம்பர்கள் உண்மையா யிருந்து, தங்கள்தேவைகளையெல்லாம் அங்கேயே வாங்குவதா யிருந்தால், அங்கேயும் பெருத்த வியாபாரம் நடந்து நிரம்ப ஆதா யம் கிடைக்கும். செட்டியார்முதலிய வியாபாரிகளுடன் போட்டி போடக்கூடாது என்று அவர்கள் தங்கள் கடைகளில் எந்த விலைக் குச் சாமான்களோ விற்கிறார்களோ அதேவிலைக்குத்தான் இவர்களும் தங்கள் ஸ்டோரில் சாமான்களை வாங்குகிறார்கள். ஆகவே தாங்கள் முன்னதாகக்கொடுத்தபணத்தில் செலவெல்லாம்போக மீந்த ஆதா யத்தில், பொதுநன்மைக்கு ஒரு பாகத்தையும் க்ஷேமநிதிக்கு ஒரு பாகத்தையும் வைத்துவிட்டு, மீதப்பணத்தைத் தங்களுக்குள் பிரித்து எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

மா. தேவிலையே, வெகு அழகாக இருக்கிறது. இந்தத்தர்மவழி எப்படி ஏற்பட்டது; எங்கே உண்டாயிற்று?

கா. அது ஒரு பெரிய சரித்திரம். சொன்னால் விரியும். அதைச்சுருக்க மாக இந்த ஊர் ஸ்டோர்ப் பிரசாரசபையார் ஒரு சிறு புஸ்தகமாக அச்சுப்போட்டிருக்கிறார்கள். அதை நாளைக்குப் படித்துக்காட்டு கிறேன். வெங்கடேசச்செட்டியார் ஆதாயத்திலே என்கதையை மறந்துவிட்டோம் மணி பத்தாய்விட்டது. தூங்குவோமா?

மா. எனக்குத் தூக்கம் வரவில்லை. நீ சொன்னதையெல்லாம் நினைச்சு நினைச்சுப் பார்க்கிறேன். ரொம்ப சுலபமாக இருக்கு. ஆனால் இத்தனைநாளாக இதுவெல்லாம் புத்திக்குப்படவேயில்லை.

கா. இப்படி யாராவது எடுத்துச்சொன்னால்தானே தெரியும்.

மா. ஆமாம், வாஸ்தவந்தான். நீ வேணுமென்றால், தூங்கு.

கா. எனக்கும் தூக்கம் வரவில்லை. என்கதையைச் சொல்லிமுடித்து விடுகிறேன். ஸ்டோரிலே சாமான்கள் வாங்குகிறது என்று தீர்மானம்பண்ணி அந்தப்படி செய்ய ஆரம்பித்தோம். அப்பொழுது சாமான்களுக்கு ரொக்கக்காசுகொடுக்கவேணும் என்று ஏற்பட்டது; முதல்கேதி வாங்கின சம்பளம் 30ரு வரைக்கும் இருக்கவேணுமே என்ற கவலை உண்டாயிற்று; அதற்குத்தகுந்தபடி செலவுகளைக் குறைத்தும், கஞ்சத்தனம் பண்ணுமலும், செட்டாகக் குடித்தனம் பண்ண ஆரம்பித்தோம். மூன்றோஜனசெய்து, ஆளவுகளைத் திட்டப்படுத்திக்கொண்டு, சாமான்களைவாங்கி, சேதமில்லாமல் செலவழித்தோம். இப்படியாக, மாசக்கடைசிகளில் கடனில்லாமல் இருந்தது. அந்தப் பிசாசு தொலைந்ததும், எங்கள் மனசுக்கு ஒரு குதூகலமும் அமைதியும் ஏற்பட்டது. இரண்டாவது, ஆத்திக் காலக்ஷேபம் எப்படிச்செய்யவேணும் என்று என்புத்திக்கு நன்றாய்த்தெரிந்தது. மூன்றாவது, எங்கள்பேரில் ஸ்டோரில் ஆதாயப் பணம் மீந்துகொண்டேவந்தது என்றும் அறிந்தோம். நாங்கள் பட்டணத்தில் மெம்பராயிருந்த ஸ்டோரில் மெம்பர்களுடைய பொதுநன்மைக்காக அந்த வருஷக்கடைசியில் 20000 ரூபாய் வரை சேர்ந்திருந்ததாகச் சொன்னார்கள். அந்தப்பணத்திலிருந்து மெம்பர்களுடைய அறிவு அபிவிருத்திக்காகத் தினசரிப்பத்திரிகைகளும் மற்றப்பத்திரிகைகளும் ஸ்டோருக்கு வரவழைக்கப்பட்டு அவர்கள் வித்யாமண்டபத்தில் வைக்கப்பட்டன. எங்க ஆத்திக்காரர் தினசரி அங்கேபோய்ப் பத்திரிகைகளை வாசித்துவருவார் இது ஒரு பெரிய அநுகூலமல்லவா? இன்னும் பொதுநன்மைக்கு வேறு என்னவெல்லாமோ செய்யவேணும் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் இந்த ஊருக்கு வந்துவிட்டோம். இந்த ஊருக்கு வந்ததும் "இந்த ஊரிலே ஸ்டோர் உண்டா" என்று விசாரித்தோம். "யாரோ சில வாத்தியார்கள் சேர்ந்து ஒரு ஸ்டோர் ஒருவருஷமாக நடத்திவருகிறார்கள்" என்று சொன்னார்கள். உடனே நாங்கள் போய் விசாரித்து மெம்பராணோம். இந்த ஊரிலேயும் நாங்கள் ஸ்டோரிலேதான் சாமான்களை வாங்கிவருகிறோம். நீங்கள் சாயங்காலம் பார்த்தீர்களே, அந்த மஞ்சள் இந்த ஊர் ஸ்டோரிலே வாங்கினதுதான்.

மா. அதுதானே இவ்வளவு சமாசாரத்தையும் எனக்குத் தெரியும்படி செய்தது. நீ சொல்வதெல்லாம் பொருத்தமாயிருக்கு. நானும் என் பிள்ளையிடத்தில் சொல்லி, நாளைக்கு ஸ்டோரிலே மெம்பராகி, சாமான்களைவாங்க ஆரம்பிக்கிறேன். அடுத்தாத்து லக்ஷ்மி இதைப்பற்றி என்னமோ சொன்னாள். எனக்கு ஒன்றும் அப் பொழுது தெரியவில்லை. நாளைக்குச் சாயங்காலம் அவளைக்கூட்டிக் கொண்டுவருகிறேன். அவள் சொல்வதையும் கேட்போம்.

கா. அதற்கென்ன, கூட்டிக்கொண்டுவாருங்கள். கலங்கினால்தானே தெளியும். ஆனால் நீங்கள் நாளைக்கு அதில் ஒரு மெம்பராக ஆய் விடுங்கள்.

மா. ஆகட்டும், என் பிள்ளையை மெம்பராகச்சொல்லுகிறேன். நீ தூங்கு, நாழிகையாய்விட்டது.

பகல்.

காமாக்ஷி:—வாருங்கள் மாமி, வாருங்கள். எங்கே, லக்ஷ்மியைக் கூட்டிக் கொண்டுவருகிறேன் என்று சொன்னேனே?

மாமி:—வருவள். அவள் ஆத்துக்காரர் இப்போதான் கச்சேரிக்குப் புறப் பட்டுக்கொண்டிருக்கிறார். போனதும் கதவைச் சாத்திக்கொண்டு வரேன் என்றாள்.

கா. சரிதான். அவள் ஆத்துக்காருக்கு என்ன வேலை?

மா. முனிசீபுக்கோர்ட்டிலே சிரஸ்தார் வேலை.

கா. அப்படியா?

(லக்ஷ்மி வருகிறாள்.)

மா. வா, லக்ஷ்மி. ஏது, சீக்கிரம்வந்துவிட்டாயே.

கா. வாருங்கோ, வாருங்கோ.

ல. ஆமாம், அவள் கச்சேரிக்குப்போனதும் உடனே வந்துவிட்டேன், வெத்திலையைக்கூடக் கையில் கொண்டுவந்துவிட்டேன், சுண்ணாம்பு இருக்கோ?

கா. இருக்கு; இந்தாருங்கோ வெத்திலைச்செல்லம். அதில் வெத்திலை, பாக்கு, சுண்ணாம்பு எல்லாம் இருக்கிறது.

ல. பாக்குப்பொடி வைத்துக்கொள்வதில்லையா ?

கா. இல்லை. அதென்ன? நல்லபாக்கு, கெட்டபாக்கு எல்லாவற்றையும் போட்டு ஒன்றுப்இடித்து வாசனையைக்கலந்து செய்துவிடுகிறார்கள். அதைவிடச் சுத்தமானபாக்கை வெட்டிப்போட்டுக்கொள்வதுதான் நல்லது.

ல. இந்தப்பாக்கு நன்னாயிருக்கே. எங்கே வாங்கினது ?

மா. எங்கேயா, இவளாத்தில் ஸ்டோரிலேதான் எல்லாசாமான்களையும் வாங்குவார்கள். அங்கேதானேவாங்கினது ?

கா. அதுக்குச்சந்தேகமா ? அங்கேதான் வாங்கினது.

ல. அதென்ன ? உங்களுக்கு ஸ்டோரிலே அவ்வளவு பைத்தியம் ? இன்று காலமே அந்த மாமி உங்கள்கதையெல்லாத்தையும் சொன்னார்கள். இந்தஹோர் ஸ்டோர் விஷயங்களைப்பற்றியும் என் ஆத்துக்காரர் சொன்னார். அது எப்படியிருக்கு, பார்க்கலாமென்றுநினைத்து, நாகேசுவரன்கோவிலுக்குப் போகிறவழியில் நின்று விசாரித்தேன். முதலிலே இடம் சின்னதாயிருக்கிறது. சாமான்கள் வைக்கக்கூட இடம் காணுது. அதுக்குள்ளே அளவுகாரன், விற்பனைக்காரன், சித்தாள் எல்லாரும் நடமாடிப் பழங்கவும்வேண்டியிருக்கிறது. சாமான் வாங்குகிறவர்கள்கூட்டமும் ஜாஸ்தியாயிருந்தது. ஒருவசொருவராய்ச்சாமான்வாங்கிக்கொண்டுபோவதற்குள் விடிந்துவிடும்போலிருந்தது.

கா. வாஸ்தவந்தான்; நானும் இரண்டுநாளைக்குமுன்பு போய்ப்பார்த்தேன். அப்படித்தானிருந்தது. ஆரம்பத்தில் அப்படித்தானிருக்கும். பட்டணத்து ஸ்டோர் முதலிலே இதைவிடக் கேவலமாயிருந்தது. ஆனல் இப்பொழுது அவர்களுக்குச் சொந்தக்கட்டடங்களே பெரியதாக இருக்கின்றன. அதேமாதிரி இங்கேயும் நாளடைவில் ஸ்டோருக்கே சொந்தக்கட்டடம் ஏற்படக்கூடும் என்று நினைக்கிறேன். கூட்டம் ஜாஸ்தியாக இருந்தது என்று சொன்னீர்கள். அது நல்லதையே காட்டுகிறது. இப்படிக்கூட்டம்பெருகி, ஜாஸ்தியாகச் சாமான்கள் விற்றுமுதலானல், ஆதாயம் ஜாஸ்தியாகக் கிடைக்கும். கேஷமநிதியும், பொதுநலநிதியும் பெருகிவரும். அப்படியிருக்கவேண்டுமென்றுதான் எல்லா

ஸ்டோர்மெம்பர்களும் பிரார்த்திப்பார்கள். கொஞ்சம் பொருமை யுடனிருந்துதான் அந்தக்காலங்களில் சாமான்களை வாங்கிக் கொண்டுபோகவரும். நம்மாத்திலே, 5, 6, குழந்தைகள் இருந்து விட்டால், நாம் என்ன செய்கிறோம். ஒவ்வொன்றுத்தான் குளிப் பாட்டிச் சாதம் போடுகிறோம். ஒன்றைக் குளிப்பாட்டும்போது, மற்றவைகள் காத்துக்கொண்டிருக்கவேண்டிவரும். அதனல் அவைகள் நம்மைவிட்டு ஓடிப்போய்விடுகின்றனவா? ஸ்டோர் மெம் பர்களெல்லாரும் சகோதரர்களைக்காட்டிலும் அதிக அன்யோன்ய பாவம் உடையவர்கள். கோபித்துக்கொண்டுபோய், ஒருமெம்பர் வேறு ஒருகடையில் சாமான்களை வாங்கினல் யாருக்கு நஷ்டம்? அந்தக்கடைக்காரன் லாபத்தை அடைகிறன். நம்மூள் ஒற்றுமை யும் பொதுநலப்பிரியமும் கெடுகிறது. சற்றுமுன்னேபின்னேதா னிருக்கும். பொறுத்திருந்து சாமான்களை வாங்கிக்கொண்டு போனல் அந்தலாபம் ஸ்டோரிலேயே யிருக்கும். இதுதான் முக்கியமாக நாம் கவனிக்கவேண்டியது.

மா. நான் அப்போதேசொன்னேனே உனக்குச் சரியானபதில் காமாக்ஷி சொல்லுவள் என்னு. அவள் சொல்கிறது சொம்பசரி என்று தோன்றவில்லையா?

ல. சரிதான், சாமான்கள்வாங்குகிறதில் இவ்வளவு யோசனை இருக்கு என்னு யார்நினைக்கிறார்கள். இதுபோகட்டும் கடையிலேவிடச் சாமான்கள் ஸ்டோரிலே ஜாஸ்திவிலையாகஇருக்கு. நானும் பார்த் திருக்கேன். மற்றவர்களும் அப்படித்தான் சொல்லுகிறார்கள். அப்படி நம்முடைய பணத்தைக்கொண்டு அங்கேபோடுவானேன்; பிறகு கொஞ்சம்பணத்தை அதிலிருந்து வாங்கிக்கொள்வானேன்? லாபமாகக்கிடைக்கிறகடையில் வாங்குகிறதுதானே அவாவர்களுக்கு நல்லது.

கோ. நானும் இந்தமாதிரி அநேகர்சொல்லக் கேட்டிருக்கிறேன். அதா வது ஸ்டோர் என்பது முக்கியமாய் ஒரு கூட்டத்தாருடைய தேவைகளைக் கூடியவரை நல்லஇடங்களில்வாங்கித் திருப்திபண்ணு வதுதவிர, அந்தக்கூட்டத்தாருடைய மற்றப் பொதுநன்மைகளை யும் பலஹீதமாகக் கவனிக்கவும் அனுகூலமாக ஏற்படுகிறது;

அதாவது வியாபாரம் செய்து பொதுப்பணத்தை விருத்திபண்ண வேண்டும் முதல் முதலில் வியாபாரம்பண்ணுவதற்கு மற்ற மொத்தக்கடைகளில் அல்லது மளிகைகளில்தான் சாமான்களை வாங்கி மெம்பர்களுக்குள் விற்பனைசெய்யவேண்டும். இதற்கு ஒரு நல்ல கெட்டிக்கார யோக்கியரான மானேஜர்வேண்டும். அவர் பல இடங்களிலும் சுற்றிப்பார்த்துச் சரக்குகளைக் கவனித்து வாங்கி நஷ்டமில்லாமல் சாமான்களைச் செலவாகும்படி செய்ய வேண்டும். இதற்கு மெம்பர்களும் அடிக்கடி ஸ்டோருக்குப்போய்க் குறைகளைக் கவனித்துக் கமிட்டிமெம்பர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். அவர்கள் அவைகளை நிவர்த்திக்கமுயற்சிப் பார்கள். மானேஜர்தான் முக்கியமாய்ச் சாமான்களின்விலையை நிர்ணயிப்பது. அவர் வாங்கினகிரமப்படி அதைச்செய்கிறார். ஆனல் விலைகள் நமக்குத்தெரியாதபடி ஏறி இறங்குகின்றன. விலைகளை ஒருவழியில் அடக்குவது சிரமம். தெருவழியே சாமான்களைக்கொண்டு ஒரு வியாபாரி வருகிறான். அவன் பலவீடுகளில் ஒரே சாமானைப் பலவிலைக்குக் கொடுத்துவிட்டுப் போய்விடுகிறான். சாமான்வாங்குகிறவர்களின் முகபாக்கியத்தினலும் பேரம்செய்வதில் சாமர்த்தியம் காட்டுவதினலும் அந்தமாதிரி ஏற்படுகின்றன. இன்னும், நாம் பலசாமான்கள் வாங்கும்பொருட்டு ஒரு மளிகைக் கடைக்குப்போகிறோம் என்று வைத்துக்கொள்வோம். முதலில் ஒரு சாமான்விலையைக் கேட்கிறோம். அவன் ஒரு வீசை 3 தூ என்று சொன்னல், உடனே நாம் இரண்டுரூபாவுக்குத் தரமுடியாதா என்று மன்றாடுகின்றோம். கடைசியாய் நமக்காக, (நாம் சாமான்கள் நிறையவாங்கலந்திருப்பது முதலிய பல காரணங்களுக்காக) இரண்டரைரூபாய்க்கு அச்சாமானைத் தருகிறேன் என்று ஒப்புக்கொள்ளுகிறான். ஆனல், நாம் கடித்தமாயிருப்பதைப் பார்த்துக்கொண்டு, அடுத்தசாமான்விலையைக் கேட்கும்போது, முன்னதாகவே அதன் விலையை ஒன்றுக்கு ஒன்றரைப்பங்காகச் சொல்லுகிறான். நாம் மறுபடியும் பேரம்பண்ணப் பார்க்கிறோம். கடைசியில் கொஞ்சம் குறைத்ததில் நாம் ரொம்பச் சந்தோஷம்கொள்ளுகிறோம். ஆனல் வாஸ்தவத்தில் அவனுடைய கொள்விலைக்கும் லாபத்துக்கும் ஜாஸ்தியானபணத்தைக் கொடுத்து வந்துவிடுகி

றேம். இப்படியே மற்றச்சாமான்களிலும். இது பலசரக்குக்கடை களில்தான் என்று நினைக்கவேண்டாம். என்ன லகூஷ்மி! நான் சொல்வது உங்கள் அனுபவத்துக்குப் பொருந்தியிருக்கவில்லையா? காலையில் மார்க்கட்டு (சந்தை)க்குக் காய்கறிவாங்கப்போனாலும் அங்கேயும் அப்படித்தானிருக்கிறது. ஒரேசாமானைப் பலபேர்கள் பலவிலைக்கு வாங்கிவருகிறார்கள். இன்னும் புடவைக்கடைக்குப் போய்ப்பாருங்கள். அங்கேயும் இதேகஷ்டம்தான். செட்டியார்கள் நம்முடையநன்மைக்காகவா உடம்புதேய உட்கார்ந்துகொண்டிருக் கிறார்கள்?

மா. ஆமாம் அம்மா; புடவைக்கடைகளில் நான் எத்தனையோதடவை ஏமாந்துபோயிருக்கிறேன். நாம் எவ்வளவு முழித்துக்கொண் டிருந்தாலும், அவர்கள் நம்மை ஏமாத்திவிடுகிறார்கள்.

கா. ஆமாம். அவர்களுக்கு அதுவே தொழிலாய்ப்போய்விடுகிறது. நம் எப்போவாவது ஆடியிலே ஒருதரம் ஆவணியிலே ஒருதரம் கடைசலுக்குப் போகிறோம். ஆனால் அவர்கள் எப்போதும் அதேவேலையாய்க் கடைகளில் உட்கார்ந்து நம்மைப்போல வருகிற வர்களிடம் வியாபாரமுறைகளைக்காட்டிப் பழக்கம் முதிர்ந்திருக் கிறார்கள். ஆகையினாலே நான் சொல்வது என்னவென்றால், விலை கள் ஒருநாளும் ஒன்றுபோலிருப்பதில்லை. அவை வேறுபடப் பல பலகாரணங்களிருக்கின்றன. எது சரியானவிலை என்பதை யார் நிட்டஞ்செய்வது. அது ஒரு சிரமமானகாரியம். அப்படியே ஒருவர் அல்லது ஒருகூட்டத்தார் அதைச் செய்தாலும், மற்றெல் லாரும் அதை ஒப்புக்கொண்டு நடத்தல் அதைவிடச் சிரமமான காரியம். லகூஷ்மியம்மா! நான் ஒன்றுசொல்கிறேன்; கடைவீதி வழியாகப்போனால் ஒரேசாமானை வியாபாரம்செய்கிறகடைகள் பல இருக்கின்றன. அச்சாமானை வாங்குகிறவர்கள் அப்பக்கம் போனால், அக்கடைக்காரர்கள் அவர்களைப் பிச்சுப் பிடுங்கி எடுத்து விடுகிறார்கள். பிறகு போட்டிபோட்டு விலையைக் கொஞ்சம் குறைக்கஆரம்பிக்கிறார்கள். நாம் தயங்கிச் செய்வதுதெரியாமல் முழிக்கிறோம். கடைசியாகச் சிலசமயங்களில் ஏமாந்துவருகிறோம். ஆகையினாலே தங்கள் கொள்விலைக்கு நஷ்டம்வராதபடியே,

எவ்வளவு விலை வைக்கலாமோ அவ்வளவையையே வைத்து ஸ்டோரில் விற்றுவருகிறார்கள். இன்னொரு விஷயம் சாதாரணக்கடைகளில் தராசையும், படிக்கல்களையும், பக்கா அளவுகளையும் நாம் சோதித்துப்பார்ப்பதில்லை. ஆயிரம் மாகாணி அமபத்திரண்டரை என்ற கணக்குக் கேள்விப்பட்டதில்லையா. கொஞ்சம்கொஞ்சமாகக் கருவி வியாபாரி தனக்கு மீதம்வைத்துக் கொண்டுவிடுகிறான். அந்தமாதிரி ஸ்டோரில் இருக்கக்கூடாதென்பது ஒரு முக்கிய சித்தாந்தம். மூன்றாள்தான் எவ் ஆத்துக்காரர் இத்தலையில்நடந்த ஒருசமாசாரம் சொன்னார். சொல்கிறேன் கேளுங்கள். வழக்கமாக ஒருவர் ஒரு செட்டிகடையில் நெய் வாங்கிவந்தாராம். கடைக்காரன் அவர் கொண்டுவரும்செம்பு ரேசர் பிடிக்கிறதென்று அவர் வாங்கும் போதெல்லாம் அதுநிறைய நெய் கொடுத்துவந்தானும். சிலசமயங்களில் இவருக்காகக் கொசரும் கொடுப்பானும். கொஞ்சநாளைக்குமுன்பு, தன் சினேகருடைய வேண்டுகோளின்படி, நெய்வாங்குவதற்காக அவர் ஸ்டோருக்குப் போய்ச்சேர்ந்தாராம். ஸ்டோர்வேலைக்காரன், "சாமி! பாத்திரம் இரண்டரைச்சேர்தானே பிடிக்கிறது; பாக்கி அரைச்சேரை எதில் ஊற்றுகிறது" என்று கேட்டானும். "அவர் அது மூன்றுசேராச்சே" என்றாராம். குறுணியைக் கொட்டிக்கொட்டி அளந்தால் பதக்காகுமோ" அப்பொழுதுதான் அவ்வளவுகால மாகச்செட்டியார்கடையில் தாம் ஏமாந்துவந்ததை அறிந்துகொண்டாராம். ஆகையினாலே நான்சொல்வதென்னவென்றால் ஸ்டோரில் கூடியவரை சுத்தமானசாமான்களைச் சரியான அளவுடன் சௌகரிய மானவிலைக்கு மெம்பர்களுக்குக் கொடுக்கப் பிரயத்தனப்படு கிறார்கள். குற்றங்குறைகள் இருக்கலாம்; ஏற்றத்தாழ்ச்சிகள் இருக்கலாம். அங்கே இருப்பவர்களும் மனிதர்கள்தான். அதோடு வியாபாரப்பழக்கமில்லாமலு மிருப்பார்கள். ஆகையினாலே மெம்பர் கள் ஸ்டோரைத் தங்கள் சொந்த உக்கிராண அறையாகப் பாவித்து குற்றங்குறைகளை அந்தந்தஉத்யோகஸ்தர்களிடத்தில் சொல்லி வந்தால், அவைகள் எல்லாம் நாளடைவில் நீங்கி, ஸ்டோர் இயக்கத்தின் மேலான நன்மைக்களனும் அனுபவத்திற்குவரும்.

மா. சரமாரியாய்ப் பெய்துவிட்டாயே. இவ்வளவுதூரம் உனக்கு யார் சொல்லிக்கொடுத்தார்கள்? நீ சொல்வதெல்லாம் சரிதான். ஆதாயமில்லாதசெட்டி ஆத்தோடேபோவானு? அவனைப்போலே நாமும் நம் நன்மைக்காகப்பாடுபட்டால் அந்தஆதாயமும் நமக்குத் திரும்பி வந்துசேருகிறது; நடுவே, பொதுப்பணமும் நிறையச்சேருகிறது; அதன்மூலமாகப் பொதுவாக மெம்பர்களுக்குப் பலநன்மைகளும் செய்யக்கூடும்.

கா. நான் சொல்வதும் அதுதான். நன்றாய்ச்சொன்னீர்கள்.

ல. இப்போதான் எல்லாம் புரிந்தது. காமாகூடி சொல்லியது ஒன்றும் புதிதாயில்லையானாலும், அவைகளைக் கோத்துச் சமயத்துக்குத் தகுந்தபடி உபயோகப்படுத்தவேண்டுமில்லையா? இதெல்லாம் சரிதான். நம்ம தமிழ்நில்லக்களிலே இந்த ஸ்டோர் ஒன்றும் வளக்கவில்லையே. ஒவ்வொன்றாய் மெல்ல மறைந்துவிடுகிறதே. என்னத்தினாலே?

கா. என்னத்தினாலேயா? அப்படி ஸ்டோரை ஆரம்பிக்கிறவர்கள் அதன் உண்மையான கொள்கைகளை உணர்ந்து அதை நடத்துவதில்லை. காலத்தின்கோலத்திற்கேற்ப அவர்கள் ஸ்டோர் நடத்தவேண்டுமென்று ஆசைப்பட்டுக் கடைபியில் அதை ஒரு பற்றுவரவுக்கடைமாதிரி நடத்துகிறார்கள். கடன்கொடுத்துச் சாமான்களைக் கடனுக்கும் வாங்குகிறார்கள். இவைகளைத் தணிக்கைசெய்கிற சர்க்கார் அதிகாரிகளும் கூட்டுறவுப்பாங்கிலிருந்து கடன்வாங்கி வியாபாரம்செய்யும்படி தூண்டிவிடுகிறார்கள். சர்க்கார் அதிகாரிகளும் ஸ்டோரினுடைய முக்யலக்ஷணங்களைத் தெரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. அதனால் அநேகமாய், ஸ்டோரெல்லாம் வளப்பதில்லை. "ராசடேல் தர்மவழிகாட்டிகளின்சரித்திர"த்தை நன்றாய் வாசித்துவார்ந்தால்தான் இதை நன்கு நடத்தமுடியும்.

ல. அச்சரித்திரம் எங்கே அகப்படும்? ராசடேல் என்றால் என்ன?

கா. ராசடேல் என்பது இங்கிலீஷ்காரர் இருக்கும் இங்கிலாண்டு தேசத்திலுள்ள ஒரு கிராமம். 80 வருஷங்களுக்குமுன் அங்கே நெசவுக்காரர்கள் வேலையின்மையினாலும் முதலாளிகள்கொடுத்தி

னுலும் பரிப்பினியாலும்வருந்தி, "முயற்சியுடையாரிகழ்ச்சியடையார்" என்பதற்கிணங்கப் பலவிதத்திலும் தங்கள்துன்பங்களை நீக்க ஆலோசித்து ஆலோசித்துக் கடைசியாக அவர்களில் இருபத்தெட்டுப்பேர்வழிகள் ஒன்றுசேர்ந்து சிறுதுளியாக முதலெடுத்துக் கூட்டுறவுப்பண்டசாலை முறையைக் கண்டுபிடித்து அனுஷ்டிக்கத் தொடங்கினர்கள். அவர்கள் முளைப்பித்தவேளை நல்லவேளை, இப்பொழுது அது பெரிய ஆலவிருக்ஷம்போல நாலாபக்கங்களிலும் வேருன்றிப் பரவி முதன்மைஸ்தானத்துக்கு வந்துகொண்டிருக்கிறது. சென்றவருஷத்தில் அந்தத்தேசத்தில் 4559000 மெம்பர்கள் இருந்தார்களாம். அதாவது பத்துப்பேர்களுக்குஒருவர் கூட்டுறவுச்சாலைமெம்பராக இருக்கிறார்கள். அவர்கள் செய்த வியாபாரம் 350,000,000 பவுனுக்கு ஆகிறதாம். இது பெரிய வியாபாரமல்லவா?

ல. இதுகளெல்லாம் தமிழிலே போட்டிருக்காளா? உனக்கு எப்படித் தெரிந்தது?.

கா. ஏதோ பட்டணத்தில் ஒருமாதப்பத்திரிகையை இதுவிஷயங்களுக்காக அச்சுப்போடுகிறார்கள். ஆனால் அதில் கூட்டுறவுத்கடன், பாங்கி முதலிய விஷயங்களைப்பற்றித்தான் ஜாஸ்தியாக எழுதுகிறார்கள். கூட்டுறவு வியாபாரம் நமக்கு நல்லதைத் தரும். ஆனால் நல்லகாரியங்களுக்கு நாலாயிரம் தடங்கல்கள் என்பார்கள். அதுபோலத்தானிருக்கிறது. இங்கிலீஷ்பத்திரிகைகளில் இதுவிஷயங்களைப்பற்றி விஸ்தாரமாய் ஆராய்ந்து எழுதுகிறார்கள். அதுகளை வாசித்து நடுவே நடுவே எனக்குத் தமிழில் என் ஆத்துக்காரர் சொல்வார். இந்தப் பாழும் இங்கிலீஷ்பாஷையைவாசித்துவிட்டு நம்புருஷர்கள் தாங்களே பேசிக்கொண்டும் வாசித்துக்கொண்டு மிருக்கிறார்கள். நமக்கு இங்கிலீஷ் வேண்டாம்; தமிழிலே எல்லாவற்றையும் எடுத்து எழுதித்தரக்கூடாதா? நம்கூடப்பிறந்த பாஷையைக்கூட அவர்கள் அலக்ஷியஞ்செய்கிறார்கள். இந்தஊரிலே ஏற்பட்டிருக்கும் கூட்டுறவுப்பண்டசாலைப் பிரசாரசங்கத்தார் இந்த ராசடேல்ஃ தர்மவழிகாட்டிகளின் சரித்திரத்தைச் சுருக்கமாகத் தமிழில் போட்டிருக்கிறார்கள். அதை வாசியுங்கள். எல்லாம் நன்றாய்த் தெரியும்.

மா. எனக்கு வயசு ஆய்விட்டது. உங்களுக்குத்தான் இதெல்லாம் தெரியவேண்டும். எனக்குக்கூட ஒருபுஸ்தகம் வாங்கிக்கொடு. என் நாட்டுப்பெண்ணை வாசித்துச் சொல்லச்சொல்லுகிறேன்.

ல. எனக்கும் ஒருபுஸ்தகம் வாங்கிக்கொடு. நாழியாய்விட்டது. கச் சேரிக்கு டிபன் அனுப்பணும். வரேளா, மாமி?

கா. போகலாம் ஒரேஒருவார்த்தை. புருஷர்கள் எவ்வளவோ சிரமப் பட்டுச் சம்பாதித்துச் சாமான்களை வாங்கிக்கொண்டுவந்தாலும், நாம்தான் அவைகளைப் பக்குவப்படுத்திக்கொடுக்கவேணும். ஒரு ஸ்டோர்அல்லது பண்டசாலே மெம்பர்களுக்குச் சொந்தமானதி னாலே, ஸ்திரீமெம்பர்களாகிய நாமும் அடிக்கடி ஸ்டோருக்குப் போய்ச் சாமான்களைத் துப்பரவுசெய்யவேண்டிய வி த ங் க ளை க் காட்டிக் குற்றங்குறைகளை எடுத்துச்சொல்லித் திருத்தம்செய்ய வேண்டும். மொத்தவிலைக்குவாங்கிச் சில்லறைக்குக் கடைவிலைக்கே விற்பதனாலே, சாமான்களை நல்லதாக நல்ல நிறை அளவுகளுடன் நமக்குக் கொடுக்கமுடியும். வேலையாட்களும் நம்முடையஆட்க ளானதாலே, நாம் சுவாதீனமாக அவர்களுக்கு இவைகளையெல்லாம் எடுத்துச்சொல்லலாம். அவர்களுக்கும் நல்லசம்பளம்கொடுத்து வேலையைத் திறமையாய்ச்செய்ய இடங்கொடுக்கவேண்டும். நாமும் இந்தமுயற்சியில் பலவிதமாய் உதவிசெய்யலாம்.

மா. ஆமாம். யாருக்கு இதுக்கெல்லாம ஒழிவுநேரம் இருக்கு? நம் முடைய நன்மைபைஉத்தேசித்து இதுக்கு உ த வி செ ய் தா ல் தேவலைதான்.

ல. எனக்கும் அப்படித்தான்தோன்றுகிறது. நாழியாய்விட்டது. போவோமா?

கா. சரி, போய்வாருங்கள்; இந்தாங்கோ, லக்ஷ்மி; மஞ்சள் பாக்கு வெத்திலே எடுத்துக்கொள்ளுங்கள்.

K. C. வீரராகவையர், M.A., L.T.,
கும்பகோணம்.

வடமொழி தென்மொழி.

வடமொழி தென்மொழி ஆகிய இருமொழிகளும் பாதசண்டத் திலேவழங்கும் மொழிகளுள்ளே சிறந்த தெய்வமொழிகள் என்றே வேறுமொழிகளையும் அறிந்தோர் சொல்லுவர். வடமொழிக்குத் தேவ பாஷை, கீர்வாணம், ஸம்ஸ்கிருதம் என்னும் பெயர்களு முள. தென் மொழிக்குத் திரமிளம், திராவிடம், தமிழ் என்னும் பெயர்களு முள. வடமொழி என்பது பாதகண்டத்தின் வடபாகத் திலே வழங்கிய காரணம்பற்றி வந்தபெயர். தென்மொழி என்பதுபாதகண்டத்தின் தென்பாகத்திலே வழங்கியகாரணம்பற்றி வந்தபெயர்.

தென்மொழி என்பதற்குத் திராவிடப்பிரகாசிகைக்காரர் "அழகு டையபாடை" என்று பொருள்கூறுவர். அதனை மெய்ப்பொருள் என்று நம்பித் தக்க ஆராய்ச்சியின்மையேகாரணமாகத் தாமும் எடுத் துக்கூறுவாருமுளர். வடமொழி தென்மொழி என இரண்டும் திசை யுடத்தபெயராய் ஒன்றற்கொன்று எதிராய்நிற்றலானும், "தென்திசைத் தமிழி" என்பதுமுதலிய முன்னோர் வாக்குக்களோடு முரணுதலானும், தென்மொழி என்பதன் திசைப்பொருள்நீங்கவே வடமொழி என்பது திசைப்பொருளோடுநிற்றல் பொருந்தாமையானும், தென்மொழி தென் னாட்டிலே வழங்கப்படுதல் உண்மையானும் அப்பொருள் கொள்ளற்பால தன்று. திரமிளம், திராவிடம் என்பன ஒரேபொருளன. "எவ்வீனையு மோப்புதலாற் றிராவிடமென் றியல்பாடை" என்பதை நோக்கி அப் பொருளை அறிக.

தமிழ்ப்பாஷையின் பழமைநோக்கி "என்றுமுள தென்றமி ழியம்பி யிசை கொண்டான்" என்றார் பெரியோர். திரமிளம் என்பதினின்று திரிந்துவந்த தமிழ் என்பதற்கும் முற்கூறிய பொருளே பொருந்தும். "திரமிள என்ற ஆரியச்சொல் தமிழ் எனத் திரிந்தது" என்ற பிரயோக விவேகவுரையையும் பார்க்க.

வடமொழியோ வேதாங்களையும், வேதாங்கங்களையும், தருமசாஸ்தி ரங்களையும், தரிசனசாஸ்திரங்களையும், திரிபதார்த்தலக்ஷணங்களையும்,

நாற்பாதங்களாகிய சரியையுதலியவற்றின் அநுஷ்டானமுறைகளைக் கூறும் ஆகமங்களையும், உபாகமங்களையும், தர்க்கசாஸ்திரங்களையும், வேதாந்தங்களையும், வேறு பலவகைப்பட்ட கலைகளையு முடையது. வடமொழியிலுள்ள சொற்களும், சொன்மாலைகளும் மிக்க இனிமையும், மிக்க அழகு முடையன. பச்சிமதேசங்களிலும் படிக்கப்படும்பெருமையும் இத்தெய்வமொழிக் குண்டு.

தென்மொழியும், சங்கச்சான்றோர்செய்த அகத்தியம் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும், எட்டுத்தொகை பத்துப்பாட்டு முதலிய இலக்கியங்களையும், மற்றைச்சான்றோர்செய்த இலக்கண இலக்கியங்களையு முடையது; இலக்கணவிதிவழுவாமையு முடையது. பாண்டியர்களும் புலவர்களுங்கூடி நடாத்திய சங்கம், முதற்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என மூன்றாகும். மூன்றுசங்கங்களிலும் பலநூல்கள் செய்யப்பட்டன.

தலைச்சங்கத்திலே தலைமைப்புலவர்களாய்த் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும், குன்றமெறிந்த வென்றிவேற்கை முருகவேளும் வீற்றிருந்தனர். இவ்வுண்மை இறையனாகப்பொருளாலும், கல்லாடத்தாலும், திருப்புகழ்முதலியவற்றாலும் பெறப்படும்.

இங்ஙனமாகவும், சிலர், சிவபெருமானும் முருகவேளும் மானுடவடிவந்தாங்கிப் புலவராய்வரலாமோ? என்று வினவுகின்றனர். அவர் இருவரும் அப்படிவந்தால் என்ன? தமிழின்பெருமையைவிளக்குதற்குப் புலவர்சபையிலே வேறு எப்படி வரவேண்டும்? பண்டிக்குப் பாலூட்டுதற்கு எப்படிவரவேண்டும்? நக்கீரனைவினவ எப்படிவரவேண்டும்? சிவபிரான் களவியல்செய்தார் என்பது பொய்யா? இடைக்காடர் பிணக்குத்தீர்த்தது பொய்யா. பெரியபுராணத்துக்கு அடிபெடுத்துக் கொடுத்தது பொய்யா? கடவுள்கொள்ளும் திருவேடங்களை அறியும் ஆற்றல் யாரிடத்துண்டு?

ஈசுராநுக்கிரகத்தினால் இன்றும் என்றும் நிலவும்பெருமையுடைய தமிழ்ப்பாஷையை அந்நியதேசமொழிப்பயிற்சிமுகிழ்ப்புடைய ஒருசிலர், அத்தேசமொழியுந் திசைச்சொல்லின்பாற்பட்டதேயென்று கலந்து பேசவும் எழுதவும் தலைப்படுகின்றார்கள். இதனை முன்னே "செந்தமிழ்" தொகுதியின் ஒருபகுதியில், சுன்னாகம் வி. கு. வி. கா. மணி ஸ்ரீமத்

அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் மிகவும் சிறப்புற எடுத்து விளக்கி எழுதியிருக்கின்றார்கள். இத் தமிழ்ச்சங்கத்துள்ள வேண்டிய வித்வ சிரோமணிகளும் இயன்ற இயன்ற அளவு செந்தமிழ்முறையைப் பேச்சிலும், எழுத்திலும் கைக்கொள்ளுவார்கள் என்று சொல்லவேண்டியதில்லை. பையரே விளக்கும்.

இன்னும், தமிழ்மொழிநூல்களில் தக்க ஆராய்ச்சியுண்ட வித்வ குழாத்தினர் நற்றமிழியம்பி இசை நிறுவுகின்றனர். மஹாமஹோபாத்யாய ஸ்ரீமத் சாமிநாதையரவர்கள், சேதுசம்ஸ்தாநவித்வான் ஸ்ரீமத் ரா. இராகவையங்காரவர்கள், இச் "செந்தமிழ்"ப் பத்திராதிபர் ஸ்ரீமத். கிரு. நாராயணையங்காரவர்கள் முதலிய பெரியோர்களின் செயற்கருஞ்செயல் களைப் பின்பற்றித் தண்டமிழ்த்தொண்டர்கள் நடக்கவேண்டியது முக்கியகடமையல்லவா? தாயைப் பழிப்பவர் யாரைத்தான் பழிக்கமாட்டார்? சிலரிடத்திலே ஒரு நூற்பா அகப்பட்டுக்கொண்டது. அது பேசும் விஷயங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாகின்றது. அது, "பழைபன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையி னானே" என்பதாம். எல்லாவற்றிற்கும் இதனைக்கூறும் அறிஞர்கள் தமிழபிமானிகளா? இப்படி எழுதும் விவேகிகளால் தமிழ் வளர்ச்சிபெறுமா? பரிமேலழகர், நச்சினார்க்கினியர், சிவஞானமுநிவர் முதலிய பண்டைக்கால உரையாசிரியர்கள்செய்த அரியபெரிய நூலுரைகளைப் படிக்கவும், விளங்கிக்கொள்ளவும் வல்லமையற்ற சிலர், மேற்கூறிய பேதைவாளர்கள்செய்த நூலுரைகளைத் தங்கள் தங்கள் மனம்போனவாறே திருத்தி அச்சிடுவித்தும் வெளியிடுகின்றார்கள். இவர்கள்மதி யிருந்தவாறென்னே? போலிப்புலவர்களும், உண்மைப்புலவர்களிற் பணப்பைத்தியமுடையவர்களும் சிறப்புப் பாயிரங்கொடுத்து அன்னவர் மதிப்பை யடைகின்றார்கள். நிற்க;

வடமொழி மற்றைமொழிகள்வழங்கும்நாடுகளிலும் பரந்து வழங்குகின்றது. தமிழ்மொழிவழங்கும்நாடுகளிலே தமிழ்நூல்களிலே இரிந்தும் வீழ்ந்துகின்றது. வடமொழிநூல்கள் எங்கும் படிக்கப்படுகின்றன. தென்மொழியும், நூல்களும் வடநாடுகளிலே படித்தல் கேள்விப்படவில்லை. மகதநாட்டிலே தமிழஞ்சேரியும் இருந்தது என்பர். அரசர்கள் பலர் வடமொழிவல்லோராவர். வடமொழி பலநாட்டிற் பரவியதாயினும் தன்னிலை தவறவில்லை. வடமொழியோ தென்மொழியோ மூன்றியதெனின்; கூறுதும்.

தென்மொழியிலே வழங்கும் தேவாராதிகள் வேதத்தின்சாரமா யிருத்தலாலும், தென்மொழியில்வழங்கும் இதிகாசம், புராணம், ஸ்மிருதி, தர்க்கம், வேதாந்த சித்தாந்தங்கள், கிரியாவிதிகள் முதலியன வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருத்தலாலும், நிகண்டுக ளுள்ளேவருஞ் சொற்களுள்ளேயும், நீதிசாஸ்திரங்களுள்ளும், முக்காற் பாகம் வடமொழியிலிருந்து வருதலாலும், ஆதியிலக்கணமாகிய தொல் காப்பியத்திலே "அந்தணர்மறைத்தே" எனவும்; "அறுஞகைப்பட்ட பார்ப்பனப்பக்கம்" எனவும்; "மன்றலெட்டனுள்" எனவும் வடமொழிப் பொருள்கள் வருதலாலும், மாத்திரை, ஆனந்தம், அம்போதாங்கம், அங் கதம் முதலிய வடசொற்கள் வருதலாலும், நற்றிணை முதலிய சங்கநூல் களிலேயும், திசை, வேதம் முதலிய வடசொற்கள் வருதலாலும், மந் திரக்கிரியாவிதிகள் வடமொழியிலே இருத்தலாலும் வடமொழியே மூத்தியது என்க.

தென்மொழியிலிருந்து வடமொழிக்குச் சென்றநூல்களாக ஒன் றுங் காணப்படவில்லை. தென்மொழியினும் வடமொழியில் வாராத பொருள்கள் பலவுள. அவை, அகப்பொருள், புறப்பொருள் முதலி யனவே. அவைகளுள்ளும் சிலசிலபொருள்கள் நாடகம் மிருதி முதலி யவைகளில் வருகின்றன என்று பேரியோர் கூறுவர். வடமொழி அறி யாதவர் தெனமொழிப்பொருள்களைச் செவ்விதின் அறிந்துகோடல் கூடாதென்றே யாம் கருதுகின்றேம்.

இன்னும், புறநானூறு முதலியவைகளிலே வரும் வான்மீகர், கபிலர் முதலியோரும் ஆதிகாப்பியம், சாங்கியம் முதலியன செய்த வான்மீகமுனிவர்முதலியோரும் வேறுவேறுவர். ஆதிகாவியஞ்செய்த வான்மீகர் முதலியோர் தமிழிலும் கவிசெய்தார் என்பதற்குப் பிரமாணம் வேண்டும்.

இவைகளை இங்கே விரித்துக்கூறின் மிகவும் விரிந்துசெல்லும். வடமொழிக்குந் தென்மொழிக்கு முள்ள தொடர்ச்சியையும் தாரதம்மியத் தையும் வீரசோழியம், பிரயோகவிவேகம், இலக்கணக்கொத்து முதலியன நோக்கி அறிக.

இங்ஙனம்,

வ. மு. இரத்தினேசுவர ஐயன்.

தனிப்பாடல்.

பாமசிவன்வணக்கம்.

திருவருடம் பதநோவத் தருவருடம் போற்றேன்பெய் செங்காட் டூரேழ்
பெருவருடம் புகூஉமீண்டு வருவருடன் நிசைமுகத்துப் பிரம னுய
இருவருடன் றடிமுடிதே டொருவருடம் பரையுமையாட் ஙிந்தார் தாள்சேர்
அருவருடம் பமதை; மெய்யை மருவருடங் திடுவரவ ரளிய ரெஞ்சே.

திரு (-இலக்குமி) வருடி அம் பதம். தரு (-மரங்கள்) வருடம் (-மழை) பெருவருடம்-நீண்டஆண்டுகள். வருவர்-வருபவராகிய திரு மால். இருவர் உடன்று (-பகைத்து). ஒருவர் உடம்பு அரை (-பாதியை). சேர்-இடைவிடாது சிந்திப்பாயாக. டம்பமதை அருவரு (ப்பாயாக). மருவு.அருள்தந்திடுவர் அவர்.

பார்வதிவணக்கம்.

ஐந்திணைமயக்கமும் மகளிரால் மலர்மரம் பத்துள் ஐந்தும் அமைய இயற்றியது.

என்றுமென் றேழிவா ழுவரிமனை வாயில்காந்
தேயுமிது மீதிவர்ந்தா
டிடுதுமென் றெருபுனைக் கிளையிழீஇப் பாவைதலை
யேந்திவெஞ் சுடுகாட்டிடை

நன்றுநின் றுடியிறை புரைதியென வளைகுரவ
நாகிளங் கொம்பர்பற்றி
நன்குற வணைத்துமரு தத்துமா மீப்படரு
நறுவனத் தளைவலியச்

சென்றுகொண் ஙினையணங் தினையெனப் புன்முறுவல்
செய்தந்த மாவையெஞ்சேய்
செங்கையே லுநவுதரு வினமென்ன நோக்கிவரை
சேர்செயலே தினையென்கொலோ

ஒன்றுவெஞ் சோகநீ செய்திங் கசோகமென
வுறலென வுதைத்தாடிட
உவையெலாம் பூப்பவுள் ளுவகையூத் தருளுமுமை
யுபயசர ணம்பணிகுவாம்.

இதன்பொருள்:—உமாதேவி ஒரு சோலையிலே உலாவும்போது ஒரு புன்னைமரம் எதிர்ப்பட, இது என்தோழி இலக்குமிதேவியினது கடலாகியவீட்டை அடித்துள்ள கரையாகிய மூற்றத்திலேநின்று அவ்வீட்டு வாசலைக் காப்பதாகுமென்று அன்புபூண்டு இதன்மீ தேறியிருந்து ஊசலாடுவோமென்றுகருதி அதன் கிளையொன்றிலே வீற்றிருந்து, அருகே நின்ற குராமரத்தைநோக்கி "ஏ, குராவே நீ பாவையைத் தலைமேலேந்திச் சுடுகாட்டிலே ஆடாதின்று என் நாயகனைப் போலுள்ளாய்" என்று தன்னை யடிக்க நீண்டிருந்த அதன்கொம்பைப்பற்றி இறுகஅணைத்து, மருத நிலத்துக்குரிய மாமரத்தின்மீதே படர்ந்திருந்த முல்லைநிலத்துக்குரிய முல்லைக்கொடியை "நீ வலிந்து புருடனைத் தழுவினுப்" என்று குறுஞ் சிரிப்பாகச் சிரித்து, அந்த மாமரத்தை என் குமாரன் வேலுருவப்பெற்ற சூரனுகிய மாமரத்தின் இனமானதென்று அருளிநோக்கித் தன் பாதங் களுக்கு எட்டும்படி கிட்டநின்ற குறிஞ்சிக்குரிய அசோகமரத்தை "உன் மலர் மன்மதனுக்கு அம்பாகிக் காதலர்கள் சோகமடையும்படிசெய்தும் ஏன் நீ அசோகமென்று பேர்பூண்டிருக்கின்றாய்" என்று கோபித்து உதைத்து ஊசலாடினுள். குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தலென் னும் ஐந்திணைகளுக்கும் முறையே உரியனவாயும் மகளிரால் மலர் மரம் பத்துள் ஐந்தாயும் உள்ள அசோகு குரா முல்லை மா புன்னை யாகிய தாவரங்கள் மேற்கூறிய சோலையிலே ஐந்திணைமயக்கமாக ஓரிடத்திலே கலந்துநின்றவைகள் உமாதேவியால் முறையே உதைக்கவும் அணைக்க வும் நகைக்கவும் பார்க்கவும் ஆடவும் பெற்றதனுற் பூத்தன. இவ்வாறு பூத்ததைக்கண்டு தன் திருவுளத்தே உவகைபூத்தருளிய உமாதேவி யினது உபயபாதங்களையும் நாம் வணங்கி உய்வோமாக என்பது.

இரீஇ-இருந்து. பாவை-(1) பாவைபோலத்தோன்றும் குராமரப்பூ; (2) பாவைபோன்ற கங்காதேவி. ஆடி-(1) [தூற்றினுல்] அசைந்து; (2) நடனஞ்செய்து.

தன்கணவன்-போல்வதென்று குராவை அணைத்தவள் மாலவைத் தழுவிய முல்லையை நகைத்தது பிறர்குற்றத்தைக் காண்பதுபோலத் தம் குற்றத்தைக் காணுமை இயல்பென்பதை உணர்த்திநின்றது.

V. P. சுப்பிரமணியமுதலியார்.

திருத்தொட்டிக்கலைக்

கேசவப்பெருமாள்வண்ணம்.

குறிப்பு:—இது இற்றைக்குச் சற்றேறத்தாழ நூற்றிருபதுவருடங்கட்குமுன் னிருந்தவரும், திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீ சிவஞானயோகிகளுடைய அருமைமாணாக்கரு மொருவரும் ஆகிய தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணியமுனிவரியற்றிய பிரபந்தத்திரட்டிலிருந்து எடுத்துப் பதிக்கப்பட்டது. இது வண்ணம் பயில்வார்க்கும் இயற்றுவார்க்கும் பயன்படுமாறு இனியநடையிற் சொற்செறிவும் பொருட்டெளிவும் உடையதாய் இயற்றப்பட்டிருக்கிறது. இந்நூலாசிரியர்வரலாறு முதலியன திருவாவடுதுறைக் கோவைப்பதிப்பில் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதியிருப்பவற்றால் நன்குவிளங்கும். வண்ண இலக்கணமும் சந்தமும் கீழ்க்காட்டும் சூத்திரங்களால்* அறியலாம். வண்ணத்தில்வந்த தொங்கல்களைச்சேர்த்தால் ஒரு செய்யுளாக அமையும். அவ்வாறு இவ்வண்ணத்திறுதியில் அமைத்துக்காட்டப்பட்டிருக்கிறது. வண்ணஇலக்கணமும் சந்தமும் வருமாறு:—

வாரணப்பாவேவண்ணப்பாவே
வண்ணமொன்றுக்குப்பாதநான்கே
பாதமொன்றிற்கியல்கலையிரண்டே
கலையொருமூன்றுஞ்சீரெனத்தகுமே
சீரேதுள்ளலெனச்செப்பப்படுமே
மூதற்கலைக்கிடுவதுதெய்வச்செயலே
இரண்டற்கிடுவதுகிளைகொடைவிருது
மூன்றற்கிடுவதுபுகழும்வீரமும்
நான்கினுயகனுட்டின்வளத்தோ
டீரும்பேருமுவப்பக்கூறல்
மற்றைப்பாதிநற்றுயிரங்க
லாதியாவகப்பொருளமைந்தகிளவியின்
பாற்படப்புலவர்பான்மையின்மகிழக்
கூறலென்பகுதியுணர்ந்தோரே.

எட்டுக்கலையாயிடையிட்டெதுகையாய்க்
கட்டுக்கலைக்குமுக்கண்ணியாய்—முட்டமுட்டத்
தொங்கலுமாகித்தொடையும்பலவாகப்
பங்குபெறும்வண்ணப்பரப்பு.

இவ்வடியினுந்தனித்துமயங்கியுமிணைந்தாற்
றையசந்தமாமெனமொழிப.

மெல்லினந்தனித்துமயங்கியுமிணைந்தாற்
றன்னசந்தமாமெனமொழிப.

---

* இச்சூத்திரங்கள் சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையிலுள்ள ஓரேட்டுச்சுவடியிலிருந்தபடியே பதிக்கப்பட்டன.

நூல்.

சந்தக்குழிப்பு.

தனனதந்தன தானதந்தனன தனுதன
தனனதந்தன தானதந்தனன தனுதன
தத்தத்தனதானன தத்தத்தனதானன
தத்தத்தனதானன தத்தத்தனதானன;
தனந்தான தானதன தந்தன.

கலி-க.

திருமடந்தையை மார்பினும்பிரமா வைநாபியு
மெமதுசிந்தனை தாளினுங்குலமா லேதோளினும்
வைத்திட்டபாதனர் முத்திக்கருவாகிய
சுத்தப்பரிபூரண நித்தப்பரசேதனர்

கரைகரைந்திட மோதிவெண்டிரைபாய் பயோததி
யிடைவிடம்பொதி யாயிரம்படநா கமீமிசை
மெச்சித்துயில்சார்பவர் கச்சிப்பதிகாவலர்
சிட்டர்க்கொளியானவர் துட்டர்க்கிருளானவர்

திகழ்பொலங்கிரி மேலுறிஞ்சியமே கமேயென
வுவணனென்றொரு வாகனந்தனீ பூ ருநாரணர்
தித்தித்திடவாயா கத்துக்கரவாய்நல
கட்டித்தயிரேடுதி ரட்டித்தினும்வாயவர்
பெருந்தேவி மாதுபுணர் மொய்ம்பினர்

கலி-உ

திசைமுகன்றனை யேனையும்பரைவாழ் தபோதனர்
தமையுமுன்பணி யேவல்கொண்டுகுரு ரமாய்வெகு
திக்குக்களுமாணெ ஞத்தித்திரிராவணர்
பத்துத்தலைமாலையு மொக்கப்பிராயிட

நிருதர்தங்குல மாதர்நெஞ்சுபகீர் பகிரென
ரணகளந்தனி லேடுந்துமகா பசாசுகள்
குட்டிக்கணமோடுகை கொட்டிப்பிணம்வாயில
டக்கித்திறல்பாடிந டிக்கக்குடர்மூளைகள்

சிதறிடுத்தசை மேதைபெண்புகள்சோ ரிநீர்நினை
மொடுகுழம்பிட நீள்கவந்தமுமா டவாள்கொடு
வெட்டிச்சமராடிமுன் வெற்றித்தொடைவாகைமு
டித்துச்செயவீரர்து திக்கப்பொலிசேவகர்
பிணங்காது பேயினுயி ருண்டுளார்

கலி–ரு

குருவிளங்கிய காசைமென்றுணர்போ லுமேனியில்
விழிபதங்கம் வாய்சிவந்தழகா னசோபித
ரப்புச்சிவானம ருத்துக்கதிர்தீ நில
மெச்சத்திறையோனெனு மெட்டுத்திறமானவ

சொருகுகுஞ்சி யோர்காங்கனலோர் கைவீசுகை
யபயமொன்றினி லாடமன்றிடையா நாயகர்
வட்டச்சடைமாமுடி யத்தர்க்கொருபாலமர்
சத்திக்குமுனுகவு தித்திட்டபிரானருள்

குலவிடும்பெரு மாளரும்பெருமாள் சராசர
நிலவிடும்பெரு மாள்பரம்பரா திமூலமெ
னச்செப்பிடுமோசைசெ விக்குட்புகுதாமுன
மத்திக்கெதிர்போயப யத்தைச்செயுமாயவர்
பருந்தாடு மாழிவலை யங்கையார்

கலி–ச

குருகுவந்திரை தேர்புரம்பணை சூவேகலை
கலையுமங்கைகர் வாரிசுந்தனி லாறுதேவனி
தாய்த்திட்டிருபார்வைவி வப்புற்றிதழ்நீர்மைது
டித்துக்கனிவாயும்வெ ளுப்பைத்தாவேயுடல்

வசமழிந்திட வேர்வையும்புதிதாய் விராவிட
வறிவு நின்றிடு மாறுகண்டிதுமே மானபு
னைச்சிக்குறியாமென விச்சித்துவிகாரமி
குத்தாப்பலகாமுகர் சுற்றக்கவினர்பதி

கொடிதுடங்கிய வீதிமண்டபகூ டகோபுர
மதிலரங்குகள் கூலமம்பலமா டமாளிகை
மொய்த்திட்டளகாபுரி யொத்துப்புகழேறிய
தொட்டிக்கலிமாநக ரத்திற்பயில்கேசவர்
பயின்றேகு லாவிவளர் குன்றிலே

கலி—ரு

மருவுசுந்தர சோமமண்டலமே லதாய்முகில்
விரவுமண்டப மேவிஞ்துவினூ டுவாழ்குழு
தத்துதத்துணர்நாளுழு கிழ்ப்பக்கொடிதானவி
டத்தைத்தருநாகப டத்துக்கமுதூறிட

உபயகுஞ்சர மோர்மடங்கலிமீ துசிறமோய்
குவலயம்பக லேமலர்ந்திடவே தநாதர்ப
டைப்புக்கெதிராகவ குத்துத்தமிப்போனவ
ருத்திப்பிணைபோலவி ழித்துத்தனியேவரு

மலரணங்கர சேகருங்குயிலே குலாவிய
சிறுபசுங்கிளி யேநுஞ்சுவையே நருகிரி
செச்சைத்தளிரேயென திச்சைக்கருவேபடர்
பச்சைக்கொடிபோமதன் விச்சைக்கொடியேயரு
மருந்தாகி மேவுமட மங்கையீர்

கலி—சு

மலருமைங்கணை யாளர்சந்ததிமே வுதேரித
ரெவரிலும்பிர தானமுன்குருபீ டமேயுனை
மெத்தப்பலகோடி,த வத்துப்பபனுலணு
கப்பெற்றனன்மேலுமெ னக்குப்புகல்வேறிலை

திருவுளங்கனி வாய்மலிழ்ந்தாளு ரலாயொரு
வசனமுந்திரு வாய்மலர்ந்தருகா கவேயொரு
பிக்கச்சிறியேனைய ழைத்துக்கொருவீர்பணி
கற்பித்திடுமுழுய மிட்டப்படியேசெய

மதனசம்பிர தாயமுந்துபதே சமாமொழி
ரகசியஞ்சில பேசிநண்புறுகா மதேவரி
ருக்கைத்திரிகோணத லத்தைத்தைச்சிறிதேதெரி
சிப்பித்தருளாலுறு முத்திப்பலனேதர
மயங்காது லீலைகள் தொடங்கியே

கலை–எ

இருளடர்ந்திடை யேசுரிந்துகரே ரெனுவளர்
குழல்சரிந்தய லேகுலைந்திடவா ரமாலைதெ
றித்துப்புடையேவிழ நெற்றிப்பிறைநீள்புரு
வத்துக்கடைசாலநெ றிக்கத்துடிநேரிடை

வளையரெண்டிள வாளரம்பையினூ டுசீர்பெறு
குமுதமென்றமு தூறல்பொங்கிநி லாவவேபுள
கித்துத்திருமேனிது வட்சிப்படவால்வளை
சத்திக்கமனுலய முற்றுச்சிவமாடவு

மிருவரங்கமு மோருடம்பெனலா கநீடிய
திருவரங்கபுரேசர் தந்தசுவா னுபூதியி
தற்குச்சரியோவென மெய்ப்பித்தனுராகந
லத்தைப்பெரிதாகவி ளைத்துக்களிமீறிட
அரும்பான வார்முலைகள் பொங்கவே

கலை–அ

இருபதங்களி லேநிலம்புகலீர் கலீரென
வளறுகொண்டசு வாதுசந்தனநா னகீர்கரை
யப்பீற்குழிகூருந கத்துக்குறிரேகைப
தித்துக்குரா லோசையெ முழப்பிக்கனிதேனிறை

அமுதுகண்டொடு பால்கலந்தசொரு பமேயென
இதழ்மருங்கினி னூறிடும்பிரசா தசேடம
ளித்துக்களமோடுகை யொக்கப்பிணைவாகந
ருக்கிப்பலகாலுமி துக்கிப்புணர்போதினி

சிறுகுமன்பு விடாமலின்புறுமோ கலாகிரி
பெருகிடும்படி யேயிரங்கிடுவீ ரலா தகை
விட்டுச்சிறுபோ தத ரிக்கிற்பீனையாவியு
யத்தக்கதுவோவிரை விற்சற்றெனீயோர்தரம்
அணைந்தாலிங் நேரமுயிர் தங்குமே.

பெருந்தேவி மாதபுணர் மொய்ம்பினர்
பிணங்காது பேயினுயி ருண்டுளார்
பருந்தாடி மாழிவளை யங்கையர்
பயின்றே குலாவிவளர் குன்றிலே
மருந்தாகி மேவுமட மங்கையிர்
மயங்காது லீலைகள் தொடங்கியே
அரும்பான வார்முலைகள் பொங்கவே
அணைந்தாலிக் நேரமுயிர் தங்குமே.

திரு. நி. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராதிபர்.

ஒரு விளம்பரம்.

சிறந்த தமிழறிஞரும், கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் அன்பர்களில் ஒருவருமாகிய காலஞ்சென்ற திரு. சிங்காரவேலுமுதலியார் என்னும் பெரியாரை நினைவுகூர்தற்பொருட்டு, அவர்தம் மகனார் திரு. சி. சோம சுந்தரமுதலியாரவர்கள் ஆண்டுதோறும், தமிழ்க்கட்டுரைப்பரிசு ஒன்று இச்சங்கவாயிலாகக் கொடுத்துவர எண்ணியுள்ளார்கள்.

அங்ஙனமே இவ்வாண்டில் பங்குனித்திங்கள் உயி ஆம் நாட்களுக்குள் (2—4—22) 'தமிழ்மொழியும், தமிழ்மக்களதுயர்வும்' என்னும், பொருளடங்கிய சிறந்த கட்டுரை எழுதியனுப்புவோர்க்கு, இச்சங்கத்தினால் ரூபா பதினைந்து பரிசு அளிக்கப்படும்.

அக்கட்டுரைகள் தாளின் ஒரேபக்கத்தே தெளிவாக எழுதப்பட்டிருத்தல்வேண்டும்; சிறிது ஏறத்தாழ இருபது பக்கங்கள்கொண்டதாக இருத்தல்வேண்டும்; சங்கஅமைச்சருக்கு அனுப்பப்படல்வேண்டும்.

பரிசுபெறுதற்குரியகட்டுரை எழுதினர்பெயருடன் பத்திரிகைகளில் வெளிவரும். தற்போதுண்டு சித்திரை முற்பகுதியில் பரிசு அனுப்பப்பெறும்.

இங்ஙனம்,
R. வேங்கடாசலம்பிள்ளை,
அமைச்சன்.

கரந்தைத்தமிழ்ச்சங்கம்,
தஞ்சை.

தமிழ்வரலாறு.

(மூற்பாகம்.)

காலவரம்புகாணமுடியாத பழமைவாய்ந்து பலபடியாகப் பரந்து விரிந்த தமிழ்மொழியின்விருத்தாந்தங்களைத் தமிழறிஞடையோருட்சிலர் தம்மாலியன்றவளவு ஆராய்ந்து பலபுத்தகங்கள் எழுதிவந்திருக்கிறார்கள். தமிழ்வரலாறுனது வரைவுபடாத பெருமையுடையதாயும், இன்னும் எத்தனையோ தமிழறிஞர்ராய்தற்கு இடங்கொடுக்கத்தக்கதாயும் இருத்தலால் ஒருசிலரெழுதியதனையே முடிவுபெறத்தக்கதன்றியினும், ஒவ்வொரு தமிழறிஞரும் தாந்தாம் ஆராய்ந்தறிந்தவற்றை எழுதிவெளியிடுவது உலகிற்குப் பயன்றரத்தக்கதே. அம்முறையில், இப்பொழுது, தமிழறிஞர் சான்று தஞ்சையில்விளங்காநின்ற ராவ்பஹதூர் K. S. ஸ்ரீநிவாஸ பிள்ளையவர்கள் எழுதி அச்சிட்டுவரும் தமிழ்வரலாற்றின்முற்பாகம் புத்தகமாக வெளிவந்திருக்கிறது. அதில் தமிழ்நாட்டெல்லையும், தமிழ் நாட்டின் உட்பிரிவுகளும், தமிழ்நாடு குன்றியநிலையும், தமிழர் பிறநாட்டினின்றும் இந்நாட்டில் வந்தேறியவரல்லரென்பதும், தமிழினது தொன்மையும், மேன்மையும், பண்டைநிலைமையும், பிற்காலத்துண்டாகிய மாறுபாடுகளும், செய்புளருறுப்பு பாட்டிலக்கணவகைகளும், பாட்டியன் முறைகளும், பொருளிலக்கணநெறிகளும், எழுத்துச்சொல்லிலக்கண வேறுபாடுகளும், தமிழின் அபிவிருத்திக்குவேண்டுவனவுமாகிய விஷயங்கள்பலவும், கற்போரும் கற்றோரும் விரும்பிப்படிக்கும்படி தெளிவாய் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள், 'நூல்' 'செய்புள்' 'அணி' முதலிய விஷயங்களை ஆராய்ந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இப்புத்தகம், உயர்தரக்கல்லூரிகளில் தமிழ்கற்கு மாணவர்களுக்குப் பாடமாகவைத்துப் பயிற்றற்குரியதாயும், தமிழ்வரலாறறியவிரும்புவார்க்கு மிக்கசாதகமாயும், எழுதவிரும்புவார்க்கு வழிகாட்டியாயும் இருக்கிறது. இதன்பிற் பாகமும் விரைவில் வெளிவரக்கூடியநிலையில் வேலைநடந்துவருகிறது. பிள்ளையவர்கள், தம்வாழ்நாளை வீழ்நாளாக்காது தம் கல்வியறிவும் ஆராய்ச்சியும் உலகிற்குப் பயன்படுமாறு தமிழ்நூல்பலவற்றையும் ஆராய்ந்து இப்புத்தகம் எழுதியுபகரித்திருப்பது கொண்டாடத்தக்கது.

இதன் விலை அணா 7.

பத்திராதிபர்.

மனோன்மணீயம்.

ஒரு பிரகடனம்.

இத் தமிழ்நாடகம், திருவனந்தபுரத்தில் மஹாராஜா கலாசாலையில் தத்துவபோதகாசிரியராயிருந்து பெரும்புகழ்படைத்த ராய்பகதூர் ஆசிரியர் ஸ்ரீ சுந்தரம்பிள்ளையவர்கள் M.A., F.M.U., F.R.H.S., M.R.A.S., இயற்றியது. தமிழ்ப்பாஷையில் புராதனநாடகங்கள் இல்லையென்பது எல்லாரும் அறிந்ததேயாம். இம் 'மனோன்மணீயம்'தான் தமிழில் முதன்முதல் வெளிவந்த நாடகம். இக்காரணம் ஒன்றே தமிழ்மக்கள் அனைவரும் இதனை அன்போடு ஏற்றுக்கொள்ளுதற்குப் போதியதாகும். ஆனால் காலத்தான்மட்டுமன்றிச் சிறப்பினாலும் இந்நாடகமே இதுவரை வெளிவந்த நாடகங்கள் பலவற்றுள்ளும் முதன்மைபெறுவதாக இருக்கின்றது. இக்கருத்து, கேவலம் அபிமானத்தால் எழுந்ததன்று. நாடகத்துறையில் நன்குபயின்ற அறிஞர்கள் பிற தமிழ்நாடகங்களோடு இதனை ஒத்துநோக்கினால் மேற்கூறியதன் உண்மை யெளிதிற்புலப்படும். இந்நாடகத்துக்குரிய சிறப்பு இதமாத்திரமன்று. சென்ற 50 வருஷங்கட்கிடையில் தமிழில் வெளிவந்த நூதனகிரந்தங்களில் இம் மனோன்மணீயமே முன்னணியில் தலைசிறந்துவிளங்குகின்றது. இதனோடு ஒத்தநிலையில்தானும்வைத்துப்போற்றுதற்குரியநூல் தமிழிற் பிறிதொன்றும் இல்லை.

இத்தனை யருமைவாய்ந்த இந் நாடகம் 1891-ம் வருஷத்தில் முதன்முதற் பதிப்பிக்கப்பட்டது. பிரதிகளனைத்தும் செலவாகி யிப்போது அநேகவருஷங்களாகிவிட்டன. நானாபக்கங்களிலிருந்தும் 'மனோன்மணீயம்வேண்டும்' 'மனோன்மணீயம்வேண்டும்' என்று வந்து, கொண்டிருந்தீ கடிதங்களுக்கு அளவே யில்லை. இந்நிலையில், ஆசிரியவர்களதுபுத்திராகிய ஸ்ரீமான் நடராஜபிள்ளையவர்கள் தமது தந்தையாரது போற்றலுக்கு அறிகுறியாய் நின்று அவர்களதுதிருநாமத்தைத் தமிழுலகில் என்றும் நிலைபேறுடையதாக ஆக்குவீத்த மனோன்மணீய நாடகத்தை இரண்டாமுறை பதிப்பிக்கும்படி எனக்கு அநுமதி தந்தார்கள்.

இவ் அநுமதிப்பிரகாரம் நாடகநூல் முழுவதும் அச்சாகிவிட்டது. ஆசிரியரவர்கள் தாமே எழுதிய விவரணக்குறிப்புடன் அவசியகமான இடங்களில் வேறு பல குறிப்புக்களும் எழுதிச்சேர்த்திருக்கிறேன்.

அரும்பத அகராதியொன்றும் இப்பதிப்பிற் சேர்க்கப்பட்டுளது. தமிழ் மக்கள்யாவரும் இந்நாடகத்தை யெளிதிற் கற்றறிந்து அதன் அருமை பெருமைகளை நன்குணரவேண்டுமென்பதே எனது முழுநோக்கம்.

இப்பதிப்பினைப் பெரிதும் அழகுறச்செய்வது ஆராய்ச்சிமுறையி லெழுதிய ஆங்கில முகவுரையாகும். இதனை யெழுதியுபகரித்தவர்கள், 'மலபார் குவார்ட்டர்லி ரிவ்யூ' என்றதன்பத்திராசிரியராயிருந்தவரும் 'பீபிள்ஸ் ஒபீனியன்' என்ற வார மும்முறைப் பத்திரிகையின் பத்திரிகா சிரியரும் ஆகிய ஸ்ரீமான் K. N. சிவராஜபிள்ளையவர்கள் B.A., ஆவர். இவர்கள் ஆசிரியர் ஸ்ரீ சுந்தரம்பிள்ளையவர்களுக்குச் சிலாசாஸ பரீசோ தனை முதலியவற்றில் உடனிருந்து உதவிபுரிந்துவந்தவர்கள். ஆங்கிலம் 'தமிழ்' என்ற இருமொழியினும் பெரும் பாண்டித்யமுடையவர்கள். தத்துவசாஸ்திரத்தில் மிக்க நைபுண்ணியம்வாய்ந்தவர்கள். இவர்கள் எழுதியளித்துள்ளமுகவுரையானது மனேன்மணீயநாடகத்திற்கு எவ் வகையானும் பொருத்தமுடையதே யென்பது அதனை வாசித்தாரே யுணரவல்லார்.

ஆசிரியரவர்களது உருவப்படம் இப்பதிப்பின் முகதலையில் அமைக்கப்பட்டுளது.

S. வையாபுரிப்பிள்ளை,
ஹைக்கோர்ட்வேக்கீல்,
திருவனந்தபுரம்.

வரவேற்புச்செய்யுள்

[பள்ளிச்சிறுவர்கள் பாடுதற்கென எழுதப்பெற்றது.]

வெண்பா.

தண்ணளியின் மண்முழுதும் தாங்குந் தனிக்கவிகை
அண்ணலருள் ஜார்ஜின் அருங்குமரற்—கெண்ணுபுகழ்ச்
செல்வற்கு வேல்லினிளஞ் செம்மற்குத் தேமொழியீர்
நல்வரவு சொல்வோம் நயந்து.

குறள்வெண்செந்துறை.

பாரணிந்த பலமன்னர் பரந்த புகழ்க்குலமாம்
பாற்கடலி னுதித்தெழுந்த பாக்கியமே! வருக!

தாரணியெல் லறங்களுமே தழைத்தோங்கி வளரத்
தனிமுதலைத் தொழுதடைந்த தவப்பயனே! வருக! (1)

எல்லளமும் குளிரவொளிர் இளமதியே! வருக!
எங்கும்நிறை புகழ்மணக்கும் எழின்மலரே! வருக!
செல்லியலும் அரசர்குலக் திகழ்மணியே! வருக!
ஜியார்ஜ்மகாராஜனருள் திருமகனே! வருக! (2)

பொருளோந்தி யினியதமிழ்ப் புதுமாலை யேந்திப்
புலிராஜர் தொழுவர்; உனைக் கவிராஜர் புகழ்வர்
அருளோந்தி யெமையாளும் அரசகுலக் கொழுந்தே!
ஆதரித்தெம் திருநாட்டின் அணிகாண வருக. (3)

மந்தார முல்லை யிருவாட்சி குடமல்லி
மணங்கொண்ட பூவுலக மாதரசி ரோஜா
'வந்தாளே! வந்தாளே!! என்றுமுக மலர்ந்து
வள்ளலுனை யெதிர்கொண்டு வளங்காட்டும், ஐய! (4)

கழுகோடு தெங்குபனை காணிக்கை கொண்டுன்
கழல்போற்றக் கடற்கரையிற் காத்துநிற்கும்; அரசே!
இமையாத கண்மலர்கொண் டெழுந்து பலதருக்கள்
எக்கணமும் நின்வரவை யெதிர்பார்க்கும் அரசே! (5)

ஐயவுன்றன் வரவையெணி ஆவினங்கள் உழைத்தே
ஆயிரக்கால் மண்டபங்கள் அமைத்துவைத்த பலவே;
செய்யதிருவடி வணங்கத் தென்குமரி நங்கை
சேர்த்துவைக்கு முத்தினங்கள் செப்ப வெளிதலவே. (6)

வானெங்கி வளரிமய மலைகாண லாமே!
வற்றுத கங்கைநதி வளங்காண லாமே!
கானெங்கு மரச்சோலைக் கவின்காண லாமே!
கமலமணித் தடம்நோக்கிக் கண்களிக்க லாமே! (7)

நிறையன்ன மூண்டு; பசுங் கிளியுண்டு; பிரமன்
சித்திரக்கைக் கலம்விளக்கித் திரியுமயி லுண்டு;
நிறைநீரில் நீந்துபல நிறமீன்க ளுண்டு;
நீரில்இரை தேர்குருகு நிரையுண்டு; திகவே. (8)

ஊனுண்டு பாய்புலியும் கடுவாயு முண்டு ;
உறுபியெதிர்த் தோடிவரும் பன்றிகளு முண்டு;
மானுண்டு ; வன்கரடி மதயானை யுண்டு ;
மாவேட்டை நீயாட வனமுண்டு பலவே. (9)

படியேற்றி நிதியளக்கும் பட்டினங்கள் பலவாம் ;
பணிசிறந்த திருக்கோயில் பள்ளிகளும் பலவாம் ;
கொடியேற்றி விண்ணளக்குங் கோபுரங்கள் பலவாம் ;
குவலயமெ லாம்புகழுங் கோரிகளும் பலவாம். (10)

ஜாதிகளும் பலவாகும் ; சமயங்கள் பலவாம் ;
சாஸ்திரங்கள் பலவாகும் ; தருமங்கள் பலவாம் ;
ஓதுமொழி பலவாகும் ; உணவுடைகள் பலவாம் ;
உலகமிசை யிதுபோலும் ஒருதேசம் உளதோ ! (11)

இப்பெரிய எம்நாட்டின் நலம்பாவும் எளியேம்
எடுத்தோதுந் திறமின்றி விடுத்தோ மிங்குஐய !
ஒப்பரிய அரசகுலத் துதித்தஇளங் கோவே !
உன்னடிக்கு வந்தனங்கள் உவந்தளித்தோம் பல்வே. (12)

கம்பனன்றி யெவரேபிக் கண்காட்சி யாவும்
கவிபாலே இனிமையுறக் காட்டவல்லர் ! ஐய !
அம்புவியெ லாம்புகழும் அரசகுல விளக்கே !
அறியாஇச் சிறுமொழியும் அன்புடனேற் றருளே. (13)

வாழி வேல்ஸிள மன்னவன் வாழியே ;
வாழி நல்லறம் மாண்புடன் வாழியே ;
வாழி பாரத தாயிதம் வாழியே ;
வாழி செந்தமிழ் மாமொழி வாழியே.

திருவனந்தைவாசன்.

———o———

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஅ.] தூர்மதி-ஹூ தை-மீ [பகுதி கூ.
Vol. XX. January—February—1922. No. 3.

ஸ்ரீ:

சோழன்-மணக்கிள்ளி.

சில ஆண்டுகளுக்குமுன்னர்வெளிப்பட்ட சேரன்செங்குட்டுவன் என்னும் அரியபெரிய ஆராய்ச்சிநூலின்கண்ணே 'செங்குட்டுவன் சமகாலத்தரசர்' என்ற பகுதியில் மணக்கிள்ளியென்பானோர் சோழவரசன் குறிக்கப்படுகிறான். அன்றியும், அதிற் சங்ககாலத்தே சோழவரசர் உறந்தைச்சோழரென்றும் புகார்ச்சோழரென்றும் இருபகுதியினராய் அரசாண்டனரெனவும் கூறப்பட்டுள்ளது.

இவ்விருகூற்றுக்களிலும் குற்றமிருப்பதாக நினைத்து ஸ்ரீ-சோமசுந்தரதேசிகரவர்கள் சென்ற கார்த்திகைமாதச்செந்தமிழ்ப்பகுதியிலே தமதபிப்பிராயத்தை வெளியிட்டனர். மணக்கிள்ளியென்பது பெண்பாலுக்குரிய பெயரென்பதும், சோழன்மணக்கிள்ளியென்பதற்குச் சோழன்மகள், மணக்கிள்ளிபென்று பொருள்கொள்ளவேண்டுமென்பதும், சோழவரசர் உறையூர்ச்சோழர் புகார்ச்சோழரென இரண்டு பகுதியினராய்ப் பிரிக்கப்படுதல் தகாதென்பதுமே அவர் கொள்கைகளாகும்.

இனி, யானறிந்தவாறில், இவ்விஷயத்தில், செங்குட்டுவன் நூலாசிரியர்கொள்கைகளே தருதியுடையனவாமென்பதுபற்றிச் சில கூறுவேன்.

சோழன்மணக்கிள்ளி யென்ற பெயர் பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பதிகத்திலே வருகின்றது. அதில்,

*

"வடவ ருட்கும் வான்றேய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சே லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்"—

என்று செங்குட்டுவன் கூறப்படுகிறான். அதிலுள்ள சோழன்மணக் கிள்ளி யென்றதொடரை நோக்கும்போதே அது ஆண்பாற்பெயரென் பது யார்க்கும் புலனுகாதிராது. ஆதலின், 'செங்குட்டுவன்' நூலா சிரியரும் அங்ஙனமே கொண்டனர். மணக்கிள்ளியென்பது ஆண்பாற் பெயராகவே, 'மணக்கிள்ளியீன்றமகன்' என்பதிற் பொருள் விளக்க மெப்துமாறில்லை. ஆதலின் அவர் 'மணக்கிள்ளிமகளீன்றமகன்' என ஒருசொற் பெய்து அதனைப் பொருளொடுபொருத்திக்காட்டிச் சேரன் செங்குட்டுவனுக்குத் தந்தை நெடுஞ்சேலாதனென்றும், தாய் சோழன் மணக்கிள்ளிமகளென்றும் வெளிப்படுத்திச்சென்றனர்.

இங்ஙனமாகவும், தேசிகரவர்கள், "இதனுலே நெடுஞ்சேலா தற்குச் சோழன்மகள் மணக்கிள்ளியென்னும் கோப்பெருந்தேவியின் மகனுகக் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்பிறந்தா னென்பதன்றி, மணக்கிள்ளியென ஒருசோழ னிருந்தானென்றும் அவனுக்கொரு பெண்ணிருந்தாளென்றுங் கூறுதற் கில்லை" என்று கூறினர். அவ ருடையகொள்கைக்குமே, சோழனென்பதற்கும் மணக்கிள்ளியென்பதற்கு நிடையே மகள் என ஒருசொல் வருவித்துரைக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, இருவருடையகொள்கைக்கும் மகளென்ற ஒருசொல்லை முன்னே பின்னே வருவித்துப் பொருள்கொள்ளவேண்டியது இன்றியமையாத தாகின்றது. அங்ஙனம்செய்தலில் எதுபிரதம் பொருத்தமுடையதென்பதே ஈண்டாராய்ந்தறிய வேண்டுவதாகும்.

சங்கநூல்களிற் பலவிடங்களிலும் நலங்கிள்ளி, திருக்கிள்ளி, நெடுங் கிள்ளி, பெருநற்கிள்ளி, கோக்கிள்ளி நெடுமுடிக்கிள்ளி என்றற்றொடக் கத்துச் சோழவரசர்கள்பெயர் காணப்படுகின்றன. அவற்றுளொன்றே னும் பெண்பாலி யுணர்த்தாமையின் அவற்றோடொப்புமையுடைய மணக்கிள்ளியென்னும் பெயரும் பெண்பாலியன்றி ஆண்பாலியே யுணர் த்தவேண்டுமென்பது தெளிவாம்.

அஃதன்றியும், தேசிகரவர்கள்கொள்கைப்படி மணக்கிள்ளியென் பது சோழன்மகளையே குறிப்பதாயின், அவன் செங்குட்டுவனுடனும்

கெடுஞ்சேலாதன்மனைவியுமாகவேண்டும். ஆனால், செங்குட்டுவன்முயும் கெடுஞ்சேல: தனுடையமனைவியும் இன்னனென விளங்கக்கூறுகின்ற பிறி தொருசான்றெடி அது மாறுகொள்ளுதலின் அக்கொள்கை வலியற்றதா கின்றது.

சிலப்பதிகாரப்பதிகத்தின்றொடக்கத்தில், "குணவாயிற்கோட்டத் தரசு றந்திருந்த, குடக்கோச்சேர லிளங்கோவடிகட்கு" என்பதனுரை யிலே அடியார்க்குநல்லார், இளங்கோவை அடிகளெனக்கூறியதன்வர லாற்றை விளக்குமிடத்து, "குமரியொடுவடவிமயத்-தொருமொழிவைத் தலகாண்ட-சேலாதற்குத் திகழொளிஞாயிற் றேற்பரெடுத்தோச் சோ ழன்றன்மக ணற்சோணையின்றமக்களிருவருள் முன்னேன்" எனச் செங்குட்டுவனைக் குறிப்பிடுதலானே அவன்றந்தை கெடுஞ்சேலாதனென் பதும் தாய் நற்சோணையென்பதும் தெள்ளிதிற் புலனாகும். ஆகவே, அவன்றாய் மணக்கிள்ளியெனபது சிறிது மொவ்வாதாம்.

இதுகாறுங் கூறியவற்றால், மணக்கிள்ளியென்பது ஒரு சோழன் பெயரேயென்பதும், அவன்மகனே நற்சோணையென்றபெயருடன் செங் குட்டுவன்றாயாகவும் கெடுஞ்சேலாதனுடைய கோப்பெருந்தேவியாகவும் கருதப்படுகின்றனனென்பதும் இனிது விளங்கும்.

இனி, சோழன் மணக்கிள்ளியென ஒருவனிருந்தானெனச் சங்கநூல் களிற் பிறிதோரிடத்துங் காணப்படாததென்னையெனின், அது கடா வன்று; எனனை? மணக்கிள்ளியென்பது தேசிகவர்கள்கொள்கைப் படி பெண்பாற்பெயராயினு மதன்கண்ணு மக்குற்றந் தங்குமாதலி னென்பது. ஓரிடத்தன்றிப் பிறவிடங்களிற் காணுக எத்துணையோ பெயர்கள் சங்கநூல்களிற் காண்கிறோம்.

மிற்க, பதிற்றுப்பத்தின்பதிகங்கள் ஒவ்வோரசனையும் இன்னானின்ற மகனெனக் கூறப்புகுழியெல்லாம் பெண்பாலையுணர்த்தி, அவனின்ற மகன் எனக்கூறுதலே வழக்காறுகவுடைமைபைத் தேசிகவர்கள் தம் கொள்கைக் குற்றதுணையாகக் கருதுகிறார்கள். இஃ திருவகைக்கொள் கைக்கு மொக்கும். சோழன்மணக்கிள்ளியின்றமகனென்பது 'சோழன் மணக்கிள்ளிமக னின்றமகனெனவிரியுங்கால், சோழன்மணக்கிள்ளி மகனெனப் பெண்பாலை முன்னருணர்த்திப் பின்னர் அவனின்றமகன்

செங்குட்டுவனென அமைவுடையதாகக் காணப்படும். படவே, பதிற்றுப் பத்தின்பதிகத்தோறு மங்ஙனமாகவுள்ள வாக்கியங்களைத் தேசிகரவர்க ளெடுத்துக்காட்டுவது பயன்பெறுதாயிற்று.

சோழன்மணக்கிள்ளியின்றமகனென்னுஞ் சொற்றொடருள்ள நீலை யில் அதற்குச் 'செங்குட்டுவன்' நூலாசிரியர்கூறியதன்றிப் பிறிதொரு சிறந்தபொருள்காண்டல் எவ்வாற்றானு மியலாதாகும்.

இது நிற்க. தேசிகரவர்கள், சோழவரசரில் உறையூரையாண்டவர்க ளென்றும் புகாரையாண்டவர்களென்றும் இருபிரிவினரிருந்தனராகக் கொள்ள ஏதுவில்லை யென்றனர். 'சேரன்செங்குட்டுவன்' நூலிலேயே செங்குட்டுவன்சமகாலத்தரச ரென்ற பகுதியில் அக்கொள்கைக்குற்ற காரணங்கள் விளங்கவுரைக்கப்பட்டிருக்கின்றன.

பண்டைத்தமிழ்நூல்களைக் கருவியாகக்கொண்டு சேரசோழபாண் டியருடைய நாடுநகரங்களின்நிலையினையாராய்வார்க்குச் சோழநாட்டின் கண்ணே ஒத்தசிறப்புடன்விளங்கிய இரண்டுதலைநகரங்களிருந்தனவென் பது எளிதிற் புலப்படும். பாண்டியர்க்கு மதுரையும் சேரர்க்கு வஞ்சியும் எத்துணைசிறப்புடையனவோ, சோழர்க்குஅத்துணைசிறப்புடையன புகா ரும் உறையூருமாகிய இரண்டு தலைநகரங்களுமாகும். முடியுடைத்தமிழ் வேந்தர்மூவருடைய தலைநகரங்களையுங் கூறப்புகுந்த பழைய தமிழ் நூல்கள், அவற்றைப் புகார் மதுரை வஞ்சி யென்ற முறையிலேனும், உறையூர் மதுரை வஞ்சி யென்றமுறையிலேனுங் குறிப்பிடுதலே இதற் குப் போதியசான்றாகும். சிலப்பதிகாரக் காண்டப்பகுப்புமுறையில் மதுரை வஞ்சி இவற்றிற்கு நிகரான சிறப்புடன் சோழர்க்குரியதகரம் புகாராக அறியப்படுகின்றது. சிறுபாணாற்றுப்படையில் வஞ்சி மதுரை உறந்தையென்றமுறை காணப்படுகிறது.

> " நான்மறைக் கேள்வி நவில்குரல் லெடுப்ப
> வேம வின்றுயி லெழுத வல்லதை
> வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்
> கோழியி னெழாதெம் பேரூர் துயிலே ".

எனவரும் மதுரையைக்குறித்த பரிபாட்டினும் உறந்தையே சோழர் தலைநகராய் மதுரை வஞ்சி, இவற்றோடொப்பிடத்தக்கபெருமையுடைய தென்று விளங்குகிறது. சிலப்பதிகார வேனிற்காதையிலே,

"நெடியோன் குன்றமுந் தொடியோள்பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு
மாட மதுரையும் பீடா நறுந்தையும்
கலிகெழு வஞ்சியு மொலிபுனற் புகாரு
மரைசுவீற் றிருந்த உரைசால் சிறப்பின்
மன்னன் மாரன் மகிழ்துணை யாகிய
இன்னிள வேனில்".

என வருதலைக் கற்றார்பலரும் நன்கறிவர். அதன்கட் சேர பாண்டியர்க்கு ஒவ்வொரு தலைநகரமும் சோழர்க்கு அவற்றிற்கிடாக இரண்டு தலைநகரங்களுங் குறிக்கப்படுகின்றன. ஆக இவற்றால், சோழவரசர் புகார் உறந்தையென்னுமிரண்டையுமே சிறந்த தலைநகரங்களாகக்கொண்டு ஆட்சிபுரிந்துவந்தனரென்பது நன்குவிளங்கும். சோழர்க்கு இரண்டு தலைநகரங்களிருந்தனவாகவே சோணாடு இரண்டுராஜதானிகளாக அக் காலத்துப் பிரிக்கப்பட்டிருந்தமையும் எளிதில் ஊகிக்கப்படும்.

ஆதலினங்ஙனம் பிரிவுபட்ட இரண்டு ராஜதானிநகரங்களிலும் சோழர்குடிக்குரிய இருவேறு அரசர் நிலைபெற்று ஆட்சிபுரிந்துவந்தனரெனக்கொள்ளுதலும் நேர்மையுடையதேயாகும். "ஒரு பலவர் ஓரே வேந்தர்வம்சத்திற் பலரைப் பாடும்படிநேர்ந்ததற்கு இதுவே காரணமாகும். இவ்வாறு கொள்ளாவிடத்துப் பலவரசர் ஓரேவம்சத்தில் ஏககாலத்தில் இருந்தவராகக் காணப்பட்டுச் சரித்திரவொற்றுமைபெறுவதில் மயக்கங் கொள்ள நேரும்". (சேரன்-செங்குட்டுவன்.-பக்கம்–101).

இனி, அவ்வகை ஆட்சிபுரிந்தவர்களிற் புகார்ச்சோழர்க்கும் உறையூர்ச்சோழர்க்கும் பெரும்போர்மூண்டிருந்ததாகவும் சங்கநூல்களாலறியப்படுகின்றது.

புகாரிலிருந்தரசாண்டவர்களிற் சோழன் நலங்கிள்ளியென்பானொருவன் புலவனும் போர்வீரனுமாகச் சிறந்து விளங்கினன். (புறம் 30, 45, 47) அவன் தன் காவற்காணும் உறையூர்ச்சோழனுமாகிய நெடுங்கிள்ளியுடன் போர்கருதி உறையூரை முற்றுகையிட்டனன். 'சோழன் நலங்கிள்ளி உறையூர்முற்றியிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் கோவூர்கிழார்' பாடிச் சந்தி செய்ததாகவுள்ள புறப்பாட்டொன்று மிகுதியு மழகமைந்ததாகக் காணப்படுகின்றது.

" இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோ னல்லன்
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே, நின்னெடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேற லியற்கையு மன்றே, அதனுற்
குடிப்பொ ருளன்றுநஞ் செய்தி, கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே "

நும்முன்மாறுபடி மொவ்வொருவனும் நும்பகைவனுகிய சோனு மல்லன், செழியனுமல்லன் ; நுங்களிருவ நடைய கண்ணியும் ஆத்தியாற் செறியக்கட்டப்பட்டது; (நும்மு ளொவ்வொருவனும் சோழனே) ஆகலால் நும்முள் ஒருவீர்தோற்பினுந் தோற்பது நுங்குடியன்றே ? இருவீரும் வெல்லுதல் இயல்புமன்று ; ஆதலால் நும் குடிக்குத் தக்கதன்று நுமதுசெய்கை; நும்போன்ற வேந்தர்க்கு உடம்புபூரிக்கு மூவகையைச்செய்து மிம் மாறுபாடு ; ஆதலா லிதுதவிர்தலே நுமக்குத் தக்கது என்பதே அதன்பொருள். இதனுல் உறங்கையிலும் புகாரிலும் ஏகாலத்திலேயே இருவேறு அரசர்கள் கிலைபெற்றிருந்தனரென்பதும், இருவரும் ஒருகுடிக்குரியோரென்பதும் அவர்கள் தாயத்தாராதலிற் பகைமையுற்றிருந்தனரென்பதும், அத்தகைய பகைமையும் கல்லோரால் கனிவெறுக்கப்பட்டதென்பதும் அறியக்கிடக்கின்றன.

இதுகாறுங்கூறியவற்றுல், புகாரும் உறங்கையுமாகிய இரண்டுகரங்களிலும் ஒருவர்பின்னொருவராக ஒரேகுடிக்குரிய வெவ்வேறரசர்கள் நீண்டகாலம் ஆட்சிபுரிந்துவந்தமை யறியப்பட்டது. ஒருவர்பின் ஒருவராக அரசாண்ட பல அரசர்களையும் ஒருபரம்பரையினரெனல் தகுதியுடையதேயாகும். ஆகையாற் ' சேரன் செங்குட்டுவன் ' என்னும் புத்தகத்திற் சோழவரசர் இருபரம்பரையினராகப் பகுக்கப்பட்டமையும் பொருத்தமுடையதென்றே தோன்றுகிறது. ஆதலின் இத்தகைய இடங்களில் மிகவும் நுணுகிச்செல்லுகின்ற அந்நூலாசிரியருடைய ஆராய்ச்சியின்வன்மை தமிழறிஞர் பலராலும் பெரிதும் பாராட்டத்தக்கதன்றிப் பிறிதன்று. அவர்மாட்டுத் தமிழுலகியற்றுங் கைம்மாறு மதுவேயாகும்.

T. N. அப்பனையங்கார்,
செகதபதி ஹைஸ்கூல், மதுரை.

ஸ்ரீ:

பல்காப்பியனார்.

———o———

இவர் தொல்காப்பியனுரொடு ஒருசாலைமாணாக்காய் ஆசிரியர் அகத்தியனாரிடத்திற் கல்விபயின்ற பன்னிருவருள் ஒருவர் என்ப. இவர் செய்தநூல் பல்காப்பியம் எனப்படும். அது தொல்காப்பியத்தின் வழிநூல் எனப்படுகின்றது. இவ்வாசிரியரைப்பற்றியும் இவரது நூலைப் பற்றியும் பேராசிரியர்கூறியவை ஈண்டைக்கு வருமாறு:—

"மற்றுப் பல்காப்பியம் முதலியனவோவெனின் அவை வழிநூலே: தொல்காப்பியத்தின் வழித்தோன்றின என்பது. எண்ணே?

"கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
தோமின் றுணர்தல் தொல்காப் பியன்ற
ஞாணின் றமிழறிந் தோர்க்குக் கடனே"

என்பவாகலானும், இவ்வாசிரியர் (தொல்காப்பியர்) பல்காப்பியர் பல்காயனர் முதலாயினோரை அவ்வாறு கூறுதலானும் என்பது. என்னுர்க்குத் தொல்காப்பியம் கிடப்பப் பல்காயனர் முதலியோர் நூல்செய்தது எற்றிற்கெனின், அவரும் அவர் செய்த எழுத்தும் சொல்லும் பொருளும் எல்லாம் செய்திலர்: செய்யுளிலக்கணம் அகத்தியத்துப் பாக்குகிடந்ததனை இவ்வாசிரியர் சுருங்கச்செய்தலின் அருமைநோக்கிப் பகுத்துக்கூறினுராகலானும் அவர் தந் நிறத்துக்கேற்ப முதனூலொடு பொருந்த நூல்செய்தாராகலானும் அமையும் என்பது." [தொல். மரபி. 95. பேரா. உரை.] "அகத்தியர்வழித்தோன்றிய ஆசிரியர் எல்லாருள்ளுந் தொல்காப்பியனுரே தலைவர் என்பது எல்லா ஆசிரியரும் கூறப என்பது. எங்ஙனமோவெனின் 'கூறியகுன்றினு.....கடனே'—என்பது: இது பல்காப்பியபுறனடைச்சூத்திரம்."

[கே. கே. 94-கே. கே.] என்பனவாம்.

மேற்கூறிய இவற்றுல், தொல்காப்பியனுர் ஒருவரையே தலைவரென-அகத்தியர்வழித்தோன்றிய (ஆசிரியர்) பன்னிருவருள் ஏனையர் ஓதினர் என்பதும், அப்பன்னிருவருள் ஒருவராகிய இவ்வாசிரியரும், 'தமிழறிந் தோர்க்குக்கடன் தொல்காப்பியனை ஆணையின்படி முதனூல்கூட்டிக் குற்றமின்றி உணர்தல்வேண்டும்' எனறார் என்பதும், தொல்காப்பியனுர் கூறிய எழுத்தும் சொல்லும் பொருளும் எல்லாங்கூறுது செய்யுளிலக்கணத்தையே அவரவர் தந்நிறத்துக்கேற்ப முதனூலொடுபொருந்தப் பல்காயனர் முதலிய பதினெருவரும் கூறினர் என்பதும், அங்ஙனம் கூறினும் அவர்கூறிய நூல்களாவும் தொல்காப்பியத்தின் வழிநூலாகவே கொள்ளப்பட்டன என்பதும் பிறவும் புலனும். இவ்வாசிரியர் காலம் தொல்காப்பியனர் என்ற பொருளைநோக்கி யறிக.

பெயர்விழையான்,

தச்சனல்லூர்.

ஸ்ரீ:

பல்காயனர்.

பொதியத்தமர்ந்த மலயமாதவனெனப்படும் அகத்தியனுர்மாணவர் பன்னிருவருள் இவரும் ஒருவர் என்ப. இவரியற்றியதூல் பல்காயம் எனப் பெயருறும். அது, யாப்பருங்கலவிருத்தியுரையிலும் குணசாகரருரையிலும் பெரிதும் பாராட்டியெடுத்தாளப்பெறும் சிறப்பினையுடையது.

இவர் யாப்பிலக்கணத்தினை ஆசிரியர் தொல்காப்பியரையும், காக்கைபாடினியரையும்போலாது பகுத்துரைத்தனர் என்பர். இதனை,

> "தொல்காப் பியப்புலவர் தோன்ற விரித்துரைத்தார்
> பல்காய னர்பகுத்துப் பன்னினுர்—நல்யாப்புக்
> கற்றேர் மதிக்குங் கலைக்காக்கை பாடினியார்
> சொற்றார்த் நூலுட் டொகுத்து."

[யாப் - கலம். எழுத் - 1. விருத்தியுரை].

என்ற கட்டுரையான் அறிக.

இவர் தொல்காப்பியனுரைப்ப இயற்றமிழ்க்கு இலக்கணமாகிய எழுத்து சொல் பொருள் என்றவையெல்லாம் செய்யாது யாப்பிலக்கணமொன்றே பகுத்துச்செய்தனர் என்ப. இது, "தொல்காப்பியம் கிடப்பப் பல்காயனர் முதலியோர் நூல்செய்தது எற்றிற்கு எனின், அவரும், அவர் (தொல்காப்பியர்) செய்த எழுத்தும் சொல்லும் பொருளும் எல்லாம் ஒத்திலர். செய்புளிலக்கணம் அகத்தியத்துப் பரந்துகிடந்ததனை இவ்வாசிரியர் சுருங்கச்செய்தலின் அருமைநோக்கிப் பகுத்துக் கூறினராகலானும், அவர் தந்திறத்திற்கேற்ப முதனூலோடுபொருந்த நூல் செய்தாராகலானும் அமையும் என்பது." [தொல்-மரபி-95-பேரா-உரை] என்று பேராசிரியர் கூறியவாற்றுன் அறியப்படும்.

இனி, இக்காலத்தவர்சிலர், பல்காயனர் எனப் பெயர்பெற்ற இவ்வாசிரியருடன் பல்காப்பியர் என்ற பெயருடைய ஆசிரியரையும் ஒருவராகக்கொண்டு மயங்குவர். பல்காப்பியர் வேறு, பல்காயனர் வேறு. இருவரும் தொல்காப்பியத்தின்வழிநூலாக வேறு வேறு பல்காப்பியம்,

பல்காயம் என்ற முறையே நூல் செய்தனராவர். இன்னுரை,- "பல்காப்பியனர் – பல்காயனர் – முதலாயினர்" [தொல் - மாபி - போ - உரை] எனத் தனித்தனிகூறுமாற்றுன் அறிக.

இவ்வாசிரியர் முதலாயினர், தோல்காப்பியனரே தலைவர் என மொழிவர் என்பர் போசிரியர். இது - "அகத்தியர்வழித்தோன்றிய ஆசிரியரெல்லாருள்ளுந் தோல்காப்பியனரே தலைவர் எனபது எல்லா ஆசிரியருங் கூறுப வென்பது" [தொல் - மாபி - 94 - போ - உரை] என்றதனாற் புலனுகும்.

இவ்வாசிரியர் யாப்புறுப்பாகத் தனியென ஒன்று வேண்டியவருள் ஒருவர். இது-

"இமிழ்கடல் வரைப்பி னெல்லையின் வழாஅத்
தமிழியல் வரைப்பிற் முனிநிதி விளங்க
யாப்பிய முனே யாப்புற விரிப்பி
னெழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கோ
டிழுக்கா மாபி னிவற்றொடு பிறவு
மொழுக்கல் வேண்டி முணர்ந்திசி னேரே."

[யாப் - கலம் - எழுத் - 1 - விருத்தியுரைமேற்கோள்]

என்றதனால் அறியப்படும்.

இச்சூத்திரம் பல்காயத்தின் தலைச்சூத்திரம் என எண்ணப்படுகின்றது. இதன் நான்காம் அடி யாப்பருங்கலமுடையாரால் எடுத்தாளப் பட்டுள்ளது.*

இவ்வாசிரியர் குற்றியலுகரத்தைத் தொல்காப்பியனர்கொண்டவாறு அமைத்திலர். "ஏழிடத்து ஆய வல்லெழுத்தினையும் ஊர்ந்து உகரம் வந்தால் அதனைக் குற்றியலுகரம்"-என்பர்:- "எழுவகை யிடத்துங் குற்றியலுகரம்-வழுவினறி வருஉம் வல்லா மூர்ந்தே' என்றார் பல்காயனர் [யாப் - கலம் - எழுத் - 2 - விரு - உரை-மேற்]. என்றதனால் அறிக. இவர் கொண்ட எழுவகை யிடம்,

---

* "எழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கொ
டிழுக்கா' டையவி யாப்பெனப் படுமே"-

யாப்பருங்கலம் - எழுத்தோத்து 1 சூத்திரம்.

*"நெடிலே குறிலிணை குறிற்நெடி லென்றிவை
யோற்றெடு வருதலொடு தூற்றேற் றிறுதியேன்
றேழ்குற் றுகரக் கிடனென மொழிப"

[ஷை - ஷை - ஷை - ஷை - ஷை - ஷை] என்பதனால் அறிக.

இவர் 'அடிவகை எண்ணம்பட எடுத்நிற்றிலர்' என்பர் யாப்பருங் கலவிருத்தி [அடியோ 1 -] உரையாசிரியர்.

இன்னும், இவ்வாசிரியர் தோல்காப்பியனுர்மதத்தைத்தழுவி அசைகளே நேர் - நிரை - நேர்பு - நிரைபு என நான்காகப் பகுத்தெடுத் தோதி, நாலசைப்போதுச்சீரினையும் காக்கைபாடினியார்மதத்தினைத் தழுவி எடுத் தாட்சிசெய்தார். நாலசைகொண்டபின்னரும் நாலசைப் பொதுச்சீர்கோடல் தொல்காப்பியனுர்க்கு மாறுபாடாகும். நாலசைப் பொதுச்சீர்கொண்டு, பின்னும் நேர்பு - நிரைபு - என்னும் அசைகளையும் தழுவிக்கோடல் காக்கைபாடினியார்க்கு மாறுபாடாகும்.†

இனி, "ஆசிரி யத்தொடு வெள்ளைக் கலியும் - நேரடி தன்னு னிலை பெற நிற்கும்" "என்று பொதுவகையாற் சொல்லி ஆசிரியப்பாவே கொண்டார் பல்காயனர்" [யா - கலம் - சீரோ - 7. விரு - உரை] என வருமாற்றுன் இவ்வாசிரியரின் மதமொன்று புலனுதல் காண்க.

பன்னிருபாட்டியலுள், தாண்டகவிலக்கணஇயலைக் குறித்த மூவ ருள் விரித்துக்கூறியவர் இவரே. இவர் காலவரலாற்றினைத் தொல் காப்பியர் என்னும் ஆராய்ச்சிநோக்கி யறிக.

பெயர்விழையான்,

தச்சநல்லூர்.

---

* நெடிற்கீழும், 2 குறிலிணைக்கீழும், 3 குறில்நெடிலின்கீழும், 4 நெடி லொற்றின்கீழும், 5 குறிலிணையொற்றின்கீழும், 6 குறினெடிலொற்றின்கீழும், 7. குற்றெற்றின்கீழும் எனப் பிரித்தறிக.

ஆசிரியர் தொல்காப்பியனுரும் நன்னூலுடையாரும் சொற்புணர்ச்சியின் செய்கைநோக்கி உயிர்த்தொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர், வன்றொடர், மென்றொடர், நெடிற்றொடர் என மொழியினைப் பற்றுக்கோடாக்கொண்டு மொழிவர். [தொல் - மொழிமரபு - 3. ஷை குற்றியலு - 1. நன் - எழுத் - 39]

† தொல்காப்பியர் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்ற நால்சைகளையே கொண்டனர். நாலசைப்பொதுச்சீர்வேண்டிலர். காக்கைபாடினியர் நேர் - நிரை என்ற இருசீர்மட்டும் வேண்டி நேர்பு - நிரைபு என்பவைகளைக் கொள்ளாது நாலசைப்பொதுச்சீர்களைத் தழுவிக்கொண்டவர். [யாப் - கலம் - சீரோத்து 1. விரு - உரை - நோக்க].

ஸ்ரீ:

புரூரவசரிதை.

இந்நூல், சந்திரகுலதிலகனாகிய புரூரவசக்கரவர்த்தியின்சரித்திரத்தைச் செவ்வியசெய்யுளடையில் விரித்துரைப்பது. இதை இயற்றியவர் பெயர் காலம் முதலியவற்றை முன்பு செந்தமிழ்ப் பத்திராசிரியராயிருந்த ஸ்ரீ உ. வே. மு. இராகவையங்காரவர்கள் நன்கு விளக்கியுள்ளார்கள். (செந்தமிழ்த் தொகுதி–6 பக்கம்–81–82.) இந்நூலின் ஏட்டுச்சுவடியொன்று நம் தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையில் உள்ளது. அதில் முதலில் நகரப்படல முடிவுவரை ஓலைகள் இரு மூன்றையும் ஒடிந்து சிதைந்தும், பின்னுள்ள மற்றைப்படலங்களில் இடையிடையே பூச்சியரித்து வரிவடிவழிந்தும் இருக்கிறது. மேலும் ஒடிந்தும் பூச்சியரித்தும் அழிந்துபோகாதபடி பாதுகாக்கும்பொருட்டு ஒடிந்து சிதைந்தவைநீங்க மற்றவற்றை எட்டிலுள்ளபடியே செந்தமிழில் வெளியிட்டுவரவேண்ணி, முதலில், புரூரவா உற்பத்திப்படலம் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனைக்கண்ணுறும் அறிஞர்கள், தங்களிடம் இந்நூற்பிரதிகள் இருந்து கொடுத்துதவுவார்களாயின் இந்நூலைத் தனிப்புத்தகமாகப்பதித்துச் செந்தமிழினிறுதியிற்சேர்த்து வெளியிட அநுகூலமாயிருக்கும்.

உதவிப்பத்திராதிபர்.

புரூரவா உற்பத்திப்படலம்.

ஆழியா னந்திவரு மயனருளு மத்திரியாம்
வாழியார்க் கனசூயை வயிற்றிலுடு பதியுதித்தாங்
கூழினன் மறையனைத்து மொருங்குணர்வான் பெருங்குணத்துத்
தாழுமா கடலனைய பொன்னவன்பாற் சார்ந்தனனால். (க)

இருக்காதி மறையனைத்து மின்னளியாற் பொன்னுதவப்
பெருக்காறு புகுங்கடல்போ லுரத்தடங்கப் பெறுவாளின்
முருக்கான செந்துவர்வாய் முத்தமணி வெண்முறுவற்
குருக்காத லுறுமனைவி யுடுபதியைக் குறுகினனால். (உ)

செம்பதும மலர்பொருவுஞ் சீறடியுஞ் செறிகழலு
மம்பரந்த திருவரையு மணிதாலு மணிமார்பும்
பைம்பொனெடு வரையனைய பணைப்புயமும் வலயமும்பார்த்
தும்பரமு தொழுகுதிரு வதனமுங்கண் ணுற்றனளால். (சூ)

கண்ணுற்றுள் கண்ணுறலுங் காமுற்றுள் காமசரப்
புண்ணுற்ற நெஞ்சம் பொருமப் பொருமுற்று
ளெண்ணுற்ற கூற்ற மெதிர்ந்திடினு மீர்ந்தயிரை
யுண்ணுற்ற பார்வை யுடுபதிமேல் வீசினுள். (சா)

வீசும் விழிவலைக்குள் வீழ்த்திக் கருப்பூர
வாச மலிகுழுத வாய்த்தேன் வழங்கினவா
லாசை மதிவந் தடுக்கிலரக் காம்பனதை
நேசமுட னூற்றுது நிற்குமோ நில்லாதே. (ஞ)

காரையுங் கங்குலையும் வென்று கருங்கூந்தற்
றுரையுஞ் சந்திரனுந் தன்னந் தனியமர
ருரையு மன்றி யொருவினு ருழியின்முந்
நீரையு முண்ணு நெருப்பெனப்பொ னெஞ்சழன்றான். (சூ)

ஆரோடு மின்ன தரைத்த லழகாகா
காரோதி தன்னைக் கொணர்கடனே தென்றுணர்ந்து
வேரோடு மாமறைதேர் விண்ணோர் தொழுங்குரவன்
றூரோ டியர்ந்தபுயச் சந்திரனை வந்திரந்தான். (எ)

அன்னவனை வேண்டி யணங்கை விடுத்தியெனப்
பொன்னவன் கூற மறுத்தனனப் பொன்னவனு
மன்னவ னுன புரந்தரற்கிவ் வாறுரைப்ப
வின்ன லுழந்து கழுவோ டெழுந்தனனால். (அ)

வானவர் கோமான் வருவதறிந் தேமதியும்
தானவர் மந்திரியைச் சார்ந்தனைத்தன் சாற்றுதலு
மானவனு மஞ்சு லெனவபய மீந்தருளி
யேனை யசுரர் படையனைத்து மீட்டிடுவன். (கூ)

ஈண்டு மசுரர் படையுமிமை யோர்படையுந்
தூண்டு மமர்விளைப்ப விண்ணோர் தொலைந்திடலுங்

காண்ட மலரோனக் கலிமதியைக் கைதீண்டி
வேண்டி யருளுதலாற் றுரை தனிவிடுத்தான். (கo)

போனை யான பிரகற் பதியுநறைக்
காரார் குழலாரு முன்போற் கலந்தனரால்
வாரார்மூலியாண் மணிவயிற்றி லுடிருந்த
வேரார்ரும் பச்சை யிபாங்குழவி தோன்றிற்றே. (கக)

தோன்றிய தோன்றலினை நோக்கிச் சுரர்கு ரவி
மான்ற மகிழ்ச்சியுட னுங்குவினை யாடுதலுங்
கான்ற கலிமதியோ னுட்கசிந்து கான்மூனையைத்
தான்றனியே யேத்தி யெடுத்தகன்ரூன் றன்னுழையில். (கஉ)

புந்தி தனிமதிகொண் டேகப் பொறியிலனு
யந்தனனும் போக லருமகவை யீதியெனச்
சந்திரனு மென்கான் முனையென்று சாற்றுதலு
மூந்தி யுதித்த வொருமுதல்வ னேதுவான். (கங)

நீஷி ரிருவீரு நின்மி னெனகெடிய
காவி விழியாள் கருத்தறிவோ மென்றுசெழும்
பூவின் மபிலேயிப் புந்தியெவர்க் குற்றதென
நாவி நறுங்குழலா ணனை னவின்றிலளால். (கச)

வாயான் மொழியாள் மனக்கருத்தை யோர்ந்தெவர்க்குந்
தாயாம் பிதாமகனுஞ் சந்திரனர் மைந்தனெனத்
தேயாக் குணத்தாலுஞ் சீராலுங் கண்டுபுலன்
ரூயாப் பிரகற் பதிதனக்குச் சொல்லினன். (கடி)

மன்பதைக ளெல்லாம் வருத்தான் வகுத்தமொழி
கொன்படிவ தூண்டோ வெனமனத்திற் கொண்டருணப்
பொன்புதனைச் சந்திரன்றன் புத்திரனென் றேயழையா
வன்பினொடு விஞ்சைக் கருமையர சாக்கினன். (கசு)

அக்காலத் தயனருளு மரீசியருட் காசிபனர்
திக்காசு கவிர்த்தகதிர்ச் செல்வரையீன் றிட்டவரின்
மிக்கான விவச்சுவைவச் சுதமனுவாம் வேந்தைநல்கத்
தொக்கான விளஞாயி யவன்வயிற்றிற் ரூன்றினரர். (கள)

இளனரசு புரிந்தருளி யெவ்வரசு மினிதிறைஞ்ச
வளைபுணரி வளாகத்து மனுமுறைசெய் திருநாளில்
விளைவதனை யறியாமல் வேட்டமா டுதல்விரும்பி
யுளைவயப்போர்ப் புரவியின்மேற் சேனைகளு டன்சென்றான். (கஎ)

பனிவரையும் பொற்குடமிப் பருப்பதமு மிடதமெனுந்
தனிவரையுங் கடந்தேகிக் கந்தமா தனஞ்சார்ந்து
புனிதமுறு நீலகிரிப் புறம்போகிமாலியவா
னெனும்வரையி னெடுஞ்சார லெய்தினனவ் விகல்வேந்தன். (கஙு)

வேறு.

அவ்வ ரைப்புறத் தடவி, யாவினுங்
கைவ ரைக்குலங் கரிய மாவரி
மெய்வ ரைப்பெரும் வேங்கை செற்றனன்
றெவ்வ ரைப்பொருங் கணெசெ லுத்தியே. (உ0)

வரிவின் மன்னவன் வாளி யஞ்சியே
சுரிசெ யும்வலைச் சுற்றுமுற்ற வெங்
கரிய மாவினஞ் சுழலுங் காட்சிய
திரியு மெந்திரத் தன்மை சேருமால். (உக)

மணிபொ ரும்பொறிப் புலியின் வாயினிற்
றிணிகெ டுங்கணை சென்று பாய்வன
வணிசெய் விஞ்சையாட் டயரு வோரயக்
குணில்வி ழுங்குறுங் கொள்கை போலுமே. (உஉ)

அருண னுந்ததோ லரியகான்மூலை
வருண வம்பிஞ லஞ்சி வாவுவ
வருண னம்புலிக் கவன்ம ணப்பகை
...ருணனெதி று .... தடுக்குமால். (உங)

கான கத்தரி கடிய மாவெலாங்
கான கத்தரி கடிவதொத்தனன்
கான கந்துயல் கண்ணி சோர்தரக்
கான கந்தொறுங் காவன் மன்னனே. (உச)

மன்னு மக்கிரி வருண திக்கினி
லுன்னி வான்மிசை யோங்கி நாடொறுந்
துன்னு செங்கதிர்ப் பரிதி சூழ்வரும்
பொன்னின் மால்வரைச் சாரல் புக்கலும். (உடு)

முக்க ணுயகற் புணரு முற்றிழை
யிக்க ணெய்தினோர் பெண்மை யெய்திடத்
தக்க தென்றுமுன் னிட்ட சாபத்தான்
மைக்க ணுயிழை வடிவ மாயினன். (உசு)

அந்த வார்குழ லிளோயி னைப்புதன்
கந்த வார்பொழி லூடு கண்ணுறு
மந்த மாருதத் தேரின் மாரனம்
புந்தி னைவ னுள்ளி னுள்ளரோ. (உள)

அரிவை யும்மவ னழகு கண்டழிந்
தருகி யன்பினி லிருவ ருள்ளமும்
பெருகு தூதுசென் றேது பெற்றியான்
மருவி னருள கணைத்தும் வாழவே. (உஅ)

விளோயு மன்பினிற் புதனு மின்னிழை
யிளோயு மின்பவா ரிதியி னெய்தினாள்
வளோயும் வையமும் வானும் வாழவே
தளரு நுண்ணிடை கருப்பந் தாங்கினாள். (உக)

மூள்ள சைச்செழு முளரி நாயக
னெள்ள ருங்குலத் திறைமை பூண்டவன்
பிள்ளை மென்சொலா னுருவு பெற்றதால்
வெள்கு முள்ளமோ டொத்த மேனியே. (ஙo)

பரிதி மத்துடு பதியும் பண்டைநூற்
சுருதி சொற்றநல் லறமுந் துள்ளவே
பொருபு னற்புவி புரக்கும் பொற்புயத்
தொருத னிச்சிறு வளோயு யிர்த்தனன். (ங்க)

காவி லாதறந் தழைப்பத் தோன்றிய
காவன் மைந்தனை வியந்து கண்ணுறீஇப்

பூவி னன்முகன் புரூர வாவென
நாவி னுற்றிரு நாம நல்கினன். (கூஉ)

புரசை வாரணப் புரூர வாநெடுங்
கரைசெய் வேலரு முலகு காவலர்
மரைசெ யாசையா லாசையாசற
வுரைசெய் கேமியுங் கோலு மோச்சினன். (கூகூ)

மண்ட லீகர்தம் மகுடகோடிதாட்
புண்ட ரீகமேற் பூனேந்து போற்றிட
வண்டர் வானமு மகல மில்லெனக்
கொண்ட தன்றனிக் குடைநி ழற்றுகாள். (கூச)

ஒரு திருத்தம்.

சென்ற மார்கழிப்பகுதி (தொகுதி–20. பகுதி–2.) நச ஆம்பக்கத் திறுதியில் 'பழையவழக்கத்தை' என்று தொடங்கும் பத்தியைப் பின் வருமாறு படித்துக்கொள்ளவேண்டுகிறேன்.

பழையவழக்கத்தைத்தழுவிய தேசபாஷாபண்டிதர்களின்ஸாஜசம் மானத்தை அனுஷ்டானத்திற்கொண்டுவருமன்ற நம் சங்கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களுக்கும், அதற்கிசைந்து, தேசபாஷாபண்டிதர்களைக் கௌரவிக்கமுன்வந்த சென்னைச்சர்வகலாசங்கத்திலுள்ளவர்களுக்கும், தேசபாஷாபண்டிதர்களைத் தருவித்து அவர்கள் நிறமையையும் பெருமையையும் கேட்டு மனமகிழ்ந்து தமது உலகோம்புந்தடக்கையால் அவர்களுக்குப் பரிசுவழங்கிய மேன்மைதங்கிய இளவரசர்க்கும் எல்லாநன்மையும் உண்டாக இறைவன் திருவருள் பாலிப்பதாக.

உதவிப்பத்திராதிபர்.

வராஹமிஹிரர் இயற்றிய

பஞ்சசித்தாந்திகா.

[520-கி. பி.]

சூசை—ஆம் பக்கத்தொடர்ச்சி

4-கரணத்தியாயம்.

சில பரிபாஷைகள்.

வ்ருத்தம்=Circle.
பரிதி=Circumference.
வ்யாஸம்=Diameter (240 அங்.)
அரம்=Radius (120 ,,)
சாபம்=Arc.
ஜீவம்=Chord.
ஶரம்=Altitude of arc.
திரிஜ்யா=Arc of 90°, quadrant.
ஜ்யா=Sine.
கோஜ்யா=Cosine.
கர்ணம்=Hypotenuse of a rt. angled triangle.
கோடி=Perpendicular ,,
புஜம்=Base ,,
[த்ருவம்=Pole.]
த்ருவம்=Celestial longitude.
விக்ஷேபம்= ,, latitude.
அக்ஷம்=Latitude.
லம்பம்=Colatitude.
சங்கு / கோல்=Gnomon (12 அங்.)
அக்ரா=Amplitude.
க்ராந்தி=Declination.
க்ஷிதிஜம் / ஹரிஜம்=அடிவானம், horizon.
குஜ்யா=earth sine.
அக்ஷஜ்யா=sine of latitude.
லம்பஜ்யா=sine of colatitude.
க்ராந்திஜ்யா ,, declination.
மத்யமண்டலம்=equatorial circle.

க்ராந்திமண்டலம்=sun's ecliptic or path.

ஸமமண்டலம்=prime vertical.

திங்மண்டலம்=திசைகுறிக்கும் வ்ருத்தம்.

தினமண்டலம்=Day circle. இவ்வட்டினத்தில் சூரியன் செல்லும் வீதி.

தினவ்யாஸம்=Day Diameter.

சாதம்சம்=Zenith distance.

வ்யாஸம்=240 அங்குலம்.
அரம் =120 ,,
சங்கு = 12 ,,
} என்று இந்த ப்ரகரணத்திற் கணிக்கப்பட்டிருக்கிறது.

4/1 வ்யாஸம் $= \sqrt{\left(\frac{\text{பரிதிவர்க்கம்}}{10}\right)}$

$= \frac{\text{பரிதி}}{\sqrt{10}}$

4/2 60° ஜீவம்=அரம் (Radius).

30° ஜ்யா$= \frac{\text{அரம்}}{2}$

$= \frac{60^\circ \text{ ஜீவம்}}{2}$

க° ஜ்யா$= \frac{(\text{உக})^\circ \text{ ஜீவம்}}{2}$

$\sqrt{\left(\text{அரம்}^2 - (30^\circ \text{ ஜ்யா})^2\right)} = 60^\circ$ ஜ்யா(sine).

4/3 20° ஜ்யா கணிக்கவேண்டுமாயுல்

$$\sqrt{\left\{\left(\frac{\text{அரம்} - (90^\circ - 2\times 20^\circ)\text{ ஜ்யா}}{2}\right)^2 + \left(\frac{40^\circ \text{ ஜ்யா}}{2}\right)^2\right\}}$$

$= 20^\circ$ ஜ்யா.

$$= \sqrt{\left\{\left(\frac{\text{அரம்} - 50^\circ \text{ ஜ்யா}}{2}\right)^2 + \left(\frac{40^\circ \text{ ஜ்யா}}{2}\right)^2\right\}} = 20^\circ \text{ ஜ்யா.}$$

இவ்வாறே வேண்டிய சாப ஜ்யாக்களைக் கணிக்கவேண்டும்.

4/4. (1) அர்ம்^{2} − ஜ்யா^{2} = கோஜ்யா^{2}.

$\sqrt{(\text{அர்ம்}^2 - \text{ஜ்யா}^2)} = \text{கோஜ்யா}$.

(2) $\frac{\text{அரம்}^1}{2} = (45^\circ \text{ ஜ்யா})^2$

$\sqrt{\frac{\text{அரம்}^2}{2}} = 45^\circ \text{ ஜ்யா}.$

4/5. க எனும் சாப (arc) ஜ்யா கணிக்கும் விதம்.

(அரம்—(90° —2 க) ஜ்யா) 60=(க ஜ்யா)^2.

[இந்நூலில் அரம்=120 என்றே கணிப்பது முறை.]

க=30° என்று வைத்துக்கொள்வோம்.

$$(30^\circ \text{ ஜ்யா})^2 = \left\{120^\circ - (90 - 60^\circ) \text{ ஜ்யா}\right\} \times 60.$$

$$= (120 - 30^\circ \text{ ஜ்யா}) \times 60.$$

$$= (120 - 60) \times 60.$$

$$= 60 \times 60.$$

30° ஜ்யா = 60.

(6–15) சாபஜ்யா (Sine of arc) நிர்ணயம்.

(16–18) சந்த்ரவிக்ஷேப (latitudes) நிர்ணயம்.

4/=20—22 நிழலும் அக்ஷாம்ஸமும்.

முதன்முறை.

$$\frac{\text{விஷுவத்பகல் நிழல்} \times \text{அரம்}}{\sqrt{(\text{விஷுவத்பகல் நிழல்}^2 + \text{சங்கு}^2)}} = \text{ஸ்வதேச அக்ஷாம்ச ஜ்யா.}$$

அவந்தியில் 12 அங்குல சங்குக்கு 6 அங். நிழல்.

அரம்=120 அங். அதன் வர்க்கம்.

$$\therefore \frac{6 \times 120}{\sqrt{6^2 + 12^2}} = \text{ஸ்வதேச அக்ஷாம்ச ஜ்யா.}$$

2 ம்முறை—

இஷ்டதினப் பகல் நிழலைக்கொண்டே கணிப்பது.

$$\frac{\text{பகல் நிழல்} \times \text{சங்கு}}{\text{சாயாகர்ணம்.}} = \text{ஸ்வதேச அக்ஷாம்ஸஜ்யா.}$$

சித்திரையி முதல்தேதி 12 அங்குல சங்குக்கு 6 அங்குல நிழல்.

$$\frac{6 \times 12}{\sqrt{(\text{பகல் நிழல்}^2 + \text{கோல்}^2)}}$$

$$\frac{6 \times 12}{\sqrt{(6^2 + 12^2)}} = \text{ஸ்வதேச அக்ஷாம்ச ஜ்யா.}$$

ஷ. ஜ்யாவைக்கொண்டு அதற்குத் தக்க சாபம் அறியலாம். அதுதான் ஸ்வதேச அக்ஷாம்சம்.

$\frac{\text{நதாம்ஸஜ்யா} \times 12}{\text{அரம்}^0 - \text{நதாம்ஸஜ்யா}^1}$ = நிழல் நீளம்.

நதாம்ஸம் (Zemith distance) என்பது, சூரிய விக்ஷேபத்து (latitude) க்கும் இஷ்டஸ்தான விக்ஷேபத்துக்குமுள்ள தென்வடல் தூரம்.

12 = சங்கு அளவு.

4/23 $\sqrt{(\text{அரம்}^2 - \text{அக்ஷஜ்யா}^2)}$ = லம்பஜ்யா.

2 x லம்பஜ்யா = தினவ்யாஸம்.

4/24-25 { க்ராந்திஜ்யா = Sine of declination.
தினவ்யாஸம் = Day diameter.

	மேஷம்.	வ்ருஷபம்.	மிதுனம்.
க்ராந்திஜ்யா	$24\frac{2}{7}$	$42\frac{1}{4}$	$48\frac{5}{7}$
தினவ்யாஸம்	235	$222\frac{2}{7}$	$219\frac{1}{4}$

[அரம் = 120 என்று கணிக்கப்பட்டுள்ளது].

4/26 இஷ்டதேச சரகண்டம் (Ascensional) difference.

$\frac{\text{அக்ஷஜ்யா x க்ராந்திஜ்யா}}{\text{லம்பஜ்யா}}$ = குஜ்யா (Earth sine).

$\frac{\text{குஜ்யா x வ்யாஸம்}}{\text{தினவ்யாஸம்}}$ = சரகண்டஜ்யா.

$\frac{\text{சரகண்டசாபகலைகள்}}{3}$ = சரவிநாடிகள்.

4/27-28 $\frac{\frac{\text{சரகண்ட}}{2}\text{ஜ்யா x தினவ்யாஸம்}}{240}$ = குஜ்யா.

$\frac{\text{குஜ்யா x அரம்}}{\sqrt{(\text{குஜ்யா}^2 + \text{க்ராந்திஜ்யா}^2)}}$ = அக்ஷஜ்யா.

$90^0 - \text{அக்ஷஜ்யா}$ = லம்பஜ்யா.

{ வ்யாஸம் = 240 (Diameter)
அரம் = 120 (Radius) }

4/29. லங்காலக்ஞைதயம் = (நிரக்ஷஉதயம்).

$= \frac{\sqrt{(\text{மேஷாதிலக்னஜ்யா}^2 - \text{க்ராந்திஜ்யா}^2)}}{\text{ஷ. சாப விநாடிகள். } (1^0 = 10 \text{ வினா.})} \times \frac{\text{வ்யாஸம்}}{\text{தினவ்யாஸம்}}$

விநாடி				
278	மே.	கன்.	து.	மீ.
299	வி.	சிம்.	வ்.	கு.
323	மி.	கட.	த.	ம.

4/31. ஸ்வதேசலக்னேதயநிர்ணயம்.

	மே.	விரு.	மி.	கட.	சிம்.	கன்னி.
லங்காலக்னேதயம்	278	299	323	323	299	278விநாடி
காரி சரகாலப்பரதி	—57	—46	—19	+19	+46	+57 ,,
காசிலக்நோதயம்	221	253	304	342	345	355 ,,
	மீ.	கும்.	ம.	த.	வ்ரி.	து.

இவ்வாறே மற்ற இடங்களுக்கும் அந்தந்தச் சரகாலத்தைக்கொண்டு கணிக்க வேண்டும்.

4/32-33. ஸமமண்டல (Prime vertical) ப்ரவேசம்.

$$\frac{\text{க்ராந்திஜ்யா}}{\text{அக்ஷஜ்யா}} \times 120 \text{ (அதாவது அரம்)}$$

இந்த ஜ்யா ஸம்பந்தமான சாபத்தை வினாடியாக்கிவருவதுதான், உதயத்துக்குப் பிறகு சூரியன் ஸமமண்டலப்ரவேசம்செய்யுங் காலம்.

தக்ஷணகோளத்துக்கு இம்முறை பொருந்தாது.

4/34. அஹஸ்வ்ருத்தி.

$$\frac{\text{க்ராந்திஜ்யா} \times 240 \times \text{அக்ஷஜ்யா}}{\text{லம்பஜ்யா} \times \text{தினவ்யாஸம்}},$$

இந்த ஜ்யா ஸம்பந்தமான சாபத்தில் ஆறில் ஒருபங்கை விநாடியாக்கி வருவது அஹஸ்விருத்தியாகும்.

4/35. சங்குவிப்திகா=Sine of sun's altitude when it is on prime vertical.

$$\frac{\text{ரவித்ருவஜ்யா} \times \text{ஜினஜ்யா}}{\text{அக்ஷஜ்யா}} = \text{சங்குவிப்திகா (விநாடி)}$$

பரமக்ராந்தி ஜினஜ்யா காஷ்டாந்தம் } =Sun's greatest declination.

4/38. ஸமமண்டல (Prime vertical) ப்ரவேசம்.

திங்மண்டலக் கிழமேல்வரையுடன் சங்கு கிழல்வரை சேருங்காலமே, சூரியன், ஸமமண்டலப்ரவேசகாலம்.

திங்மண்டலம்=திசைகள் குறிப்பிட்டிவ்ருத்தம்.

4/39. அக்ரா (Amplitude)

$$\frac{\text{அரம்} \times \text{க்ராந்திஜ்யா}}{\text{லம்பஜ்யா}} = (\text{அக்ராஜ்யா})$$

அக்ரா என்பது, இஷ்டதினத்தில், உதயாஸ்தமன மண்டலத்தில், கிழமேல் வரைக்கப்பால் சூரியனிருக்கும் தூரம்.

4/40. $\frac{\text{க்ராந்திஜ்யா} \times 120}{\text{அக்ராஜ்யா}} = \text{லம்பஜ்யா}.$

90^0—லம்பசாபம்=பூ அக்ஷாம்சம்.

4/41-44. $\text{த்ரிஜ்யா} = \sqrt{(\text{அரம்}^2 - \text{சங்கு}^2)}$

$$= \sqrt{(14400 - 144)}$$

$$= \sqrt{14256}$$

$$\frac{\text{சங்குநிழல்}}{\text{சங்குஜ்யா}} = \frac{\text{த்ரிஜ்யா} \times 12}{\text{சங்குஜ்யா}}$$

4/45-47 $\frac{\text{நேரம்}}{\text{ஹ்ருதி}} = \text{ப்ரதமஜ்யா}$

$$\text{ப்ரதமஜ்யா} = \frac{12 \times 120^2}{\sqrt{(\text{நிழல்}^2 \times 12^2)} \times \text{லம்பஜ்யா}}$$

$$\text{குஜ்யா} = \frac{\text{அக்ஷஜ்யா} \times \text{க்ராந்திஜ்யா}}{\text{லம்பஜ்யா}}$$

வடகோளத்தில் ப்ரதமஜ்யா—குஜ்யா (x)

தென் ,, ,, + ,, (y)

I II

$\frac{x \times 240}{\text{தினவ்யாஸம்}}$; $\frac{y \times 240}{\text{தினவ்யாஸம்}}$ ஷ. சாபங்கள்.

உத்தரக்ராந்தியில் I+II, தக்ஷிணக்ராந்தியில் I—II — இதனால் வருவதை 6-ல் வகுத்து வரும் விநாடிகள் நேரத்தைக்காட்டும்.

4/48. நேரம் (2-ம் முறை).

$$\text{நேரநாழிகை} = \frac{2 \times \frac{\text{அஹ்மானம்}}{2}}{12 + \text{நிழல் மத்யான்ன நிழல்}}$$

$$= \frac{6 \times \text{அஹர்மானம்}}{12 + \text{நிழல்} - \text{மத்யாந்ன நிழல்}}$$

இது மூற்பகலில் சென்ற நாழிகை; பிற்பகலில் பாக்கி நாழிகை.

4/49. இஷ்ட நேர நிழல்.

$$\frac{6 \times \text{அஹர்மானம்}}{\text{நாழிகை}} - 12 + \text{மத்யான்னநிழல்} = \text{நிழல்}$$

4/50. சந்த்ர நிழல் நிர்ணயம்.

4/52-56. ஸூர்யாக்ரா (Sun's amplitude)

$$= \frac{\text{அகுஜ்யா} \times \text{பரமக்ராந்திஜ்யா}}{\text{லம்பஜ்யா}}$$

ஸூர்யத்ருவம் (Sun's longitude)

$$= \frac{\text{அக்ரஜ்யா} \times \text{லம்பஜ்யா}}{\text{பரமக்ராந்திஜ்யா}}$$

பரமக்ராந்தி = Suns greatest declination.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B.A., B.L.,
மதுரை.

ஒ

ஔவையார் அருளிச்செய்த

அசதிக்கோவை.

குறிப்பு :—அடியில்வரும் ஒன்பதுசெய்யுள்களும், காஞ்சீபுரம்-மாத்துரு பூதையரவர்களியற்றிய நந்தமண்டலசதகத்தினுரையாசிரியர் ப. திருவேங்கடம் பிள்ளையவர்களால் உரைமுடிவிற் காட்டப்பெற்றிருப்பவை. அருமையான அசதிக்கோவைச்செய்யுளி னினிமையைச் செந்தமிழறிஞர் அடையும்படி இப் பத்திரிகையாயிலாகப் பிரசரிக்கப்பட்டுள்ளன.

1. அற்றுங் கியகரத் தைவே லசதி யணிவரைமேன்
முற்று முழிழ்முலை யெவ்வாறு சென்றனண் முத்தமிழ்நூல்
கற்றுர் பிரிவுங்கல் லாதவ ரிட்டமுங் கைப்பொருள்க
ளற்று நிளமையும் போலே கொதிக்கு மருஞ்சுரமே.

2. அருஞ்சஞ் சலங்கொண்ட வைவே லசதி யகல்வரையி
னிருஞ்சஞ் சலஞ்சொல்ல வேண்டுங்கொ லோவென தன்னெமொழி
தருஞ்சஞ் சலமுந் தனிவைத்துப் போனவர் சஞ்சலமும்
பெருஞ்சஞ் சலங்கொண்டு யானிருந் தேஞ்சிரு பெண்பிறந்தே.

3. அலைகொண்ட வேற்கரத் தைவே லசதி யணிவரைமே
னிலைகொண்ட மங்கைதன் கொங்கைக்குத் தோற்றிள நீரினங்கள்
குலையுண் டிடியுண்டென் கையினி லெற்றுண்டு குட்டுமுண்டு
விலையுண் டடியுண்டு கண்ணீர் தூம்பவும் வெட்டுண்டவே.

4. அழற்கட்டு கட்டிய வைவே லசதி யணிவரையின்
மழைக்கட்டு கட்டிய மாளிகை மேலொரு மங்கைகல்லா
ஞழக்கிட் டெரியிட்டு முவ்வுழக் கிட்டெரி நாழியிட்டுக்
குழற்கட் டவிழ்த்துட னங்ஙனின் றேமயீர் கோதினளே.

5. அறங்காட் டியகரத் தைவே லசதி யகன்சிலம்பி
னிறங்காட்டுங் கஞ்சத் திருவனை யீர்முக நீண்டகுமிழ்த்
திறங்காட்டும் வேலுஞ் சிலையுங்கொல் யானையுந் தேருங்கொண்டு
புறங்காட்ட வுந்தரு மோசிலைக் காமன்றன் பூசலிலே.

6. ஆலவட் டப்பிறை யைவே லசதி யணிவரைமே
னீலவட் டக்கண்க ணேரொக்கும் போதந்த நேரிழையாண்
மாலைவிட் டெச்சுற்றி வட்டமிட் டோடி வரவழைத்து
வேலைவிட் டெக்குத்தி வெட்டுவ ளாகில் விலக்கரிதே.

7. ஆரா யிரங்கொண்ட வைவே லசதி யகன்கிரியி
னீராடப் போகு நெறிதனி யேயந்தி நேரத்திலே
சீரான குங்குமக் கொங்கையைக் காட்டிச் சிரித்தொருபெண்
போராள் பிடிபிடி யென்றே நியாயம் புறப்பட்டதே.

8. ஆய்ப்பாடி யாயர்த மைவே லசதி யணிவரையிற்
கோப்பா மிவளெழிற் கொங்கைக்குத் தோற்றிபக் கோடிரண்டுஞ்.
சிப்பாய்ச் சினுக்கரி யாய்ச்சிமி ழாய்ச்சின்ன மோதிரமாய்க்
காப்பாய்ச் சதுரங்க மாய்ப்பல்லக் காகிக் கடைப்பட்டவே.

9. ஆடுங் கடைமணி யைவே லசதி யணிவரைமே
னீடுங்கயற்கண்ணி யாடந்த வாசை நிகழ்த்தரிதாற்
கோடுங் குளமுங் குளத்தரு கேகிற்குங் குன்றகலுங்
காடுஞ் செடியு மவளாகத் தோன்றுமென் கண்களுக்கே.

ப. சிதம்பரபுன்னைவனநாதன்,
தமிழ்த்தொண்டன்.

அல்குல்.

செந்தமிழ் 19-ம் தொகுதி 6-ம் பகுதியில் திருவனந்தபுரம் ஸ்ரீமான் N. சிவராஜபிள்ளையவர்கள் "நமது காவியங்களிற் சுங்மார்க்கரசத்திற் கேதுவான கதைகளும் வருணனைகளும் மலிந்துகிடக்கின்றன." என்னும் பகுதியில் 'சைவசமய ஆசாரியர்களின் தலைவரான ஞானசம்பந்தருங் கூடப் பாண்டிமாதேவியை வருணிக்குமிடத்து, "பைபாவ——— பாண்டிமாதேவி" என்றகூறி சும்மைப் பிரமிக்கச்செய்கின்றார்' என்று எழுதியிருக்கிறார்கள். காலஞ்சென்ற ஸ்ரீமான்-சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களும் இவர்களைப் போன்றே கருதித் தாம் பிரசுரித்த கலித் தொகையில் அச்சொல் வருமிடங்களிலெல்லாம் அதனை நீக்கி வேறு சொற்களையேனும் சொற்றொடர்களையேனும் பெய்தார்கள். அன்றியும், அவர்கள் அச்சொல்லைக் கூறும்பொழுது குஞ்றொடர்ந்த அன்மொழி யென்று பிரயோகித்தார்கள்.

சொற்பொருளுணர்த்தும் தமிழ்நூல்கள் நிகண்டு முதலியனவேயாம். அவைகளில் திவாகரத்திலும் சூடாமணிநிகண்டிலும் அல்குற்பதத்திற்குப் பிரதிபதமாகக் கடிதடம், நிதம்பம் என்றிரண்டு சொற்கள் காணப்படுகின்றன. உரிச்சொல் நிகண்டில் அல்குலின் பரியாயப்பெயர்களாக அரை நிதம்பம் என்னும் இரண்டுமே காணப்படுகின்றன. பிங்கலந்தையில் மேற்கூறியவற்றோடு உபதத்முங் கூறப்பட்டிருக்கின்றது. இவைகளில் அல்குற்கும் ஜனனேந்திரியத்திற்கும் காணப்படும் பரியாய பதங்கள் வெவ்வேறும்.

இனி, பெண்களது அவயவங்களை வருணிக்கப் புகுவார்க்கு அவற்றிற்குரிய உவமைகளைக் கூறுவதாய்ப் புகழேந்திப் புலவராற் செய்யப்பட்டிருக்கும் 'உவமானசங்கிரகம்' என்னும் நூலிலும், மதுரைத் தமிழ்ச் சங்கத்து 36வது பிரசுரமாக வெளிவந்திருக்கும்' உவமானசங்கிரகம்' என்னும் நூலிலும் அல்குற்கும் ஜனனேந்திரியத்திற்கும் வேறுவேறு உவமைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

அல்குலின் பரியாயப் பெயராகிய கடிதடம் என்பது கடி, தடம் என்பன சேர்ந்ததாகியது. தடம் என்பது சரிவுப்பக்கங்களையுடைய அவயவங்களைக் குறிப்பதற்குவரும் சொல்லாம். கடி என்பது பிருஷ்டத்தின் பெயராக வடமொழியிற் காணப்படுகிறது. ஆகவே கடிதடம் என்

னுஞ்சொல் இடப்புக்குக்கீழுள்ள பின்பாகத்தைக் குறிக்கும். (கடிஞூத் திரம் என்பனவற்றிற்போலக் கடி தனித்து நின்று இடப்பையுணர்த்தி வதுமுண்டு): கலித்தொகையில் "மூவழிப்பெருஇ" என வருதலினு லும் அல்குல் இடப்பின் கீழுள்ள பின்பாகத்தையே குறிக்குமெனபது பெறப்படும். நிதம்பம் என்னுஞ் சொல்லுக்கு அமரகோசம் பெண்க ளின் இடப்புக்குக்கீழ்ப்பட்ட பின்பாகம் என்னும் பொருளைத் தருகின் றது. பச்சாத் நிதம்ப: II மனுஷ்ய வர்க்கம் 74. ஆப்டி. என்பவரும் அச்சொற்கு இடப்பும் அதன் பின்புறமும் என்றே பொருள் கொள்ளு கின்றார்.

நமது சிவராஜபிள்ளையவர்களால், பாராட்டப்படுகிற கம்பராமாயணத் தில் ராமபிரான் அநுமானைச் சீதையை நாட அனுப்பும்பொழுது அநுமான் சீதை இவள் என்று ஐயந்திரிபற அறிவதற்கு அநுகூல மாக அவளது அவயவங்களை வருணித்துக்கூறுமிடத்து அல்குலும் கூறப்பட்டிருக்கின்றது. அல்குல், கடிதடம் என்னும் பதங்கள் ஆண் மக்களை வருணிக்குமிடத்தும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. "பூந் துகில் சேரல்குல் காமரெழில் விழுங்கி" எனத் தசரதன் ராமனை நோக்கிப் புலம்புவதாகக் குலசேகராழ்வார் கூறுகின்றார். தவநிலையில் நின்ற அநுச்சுனனும் வேடவடிவங்கொண்டுவந்த சிவபெருமானும் மற் போர் செய்கின்றகாலத்தில் கடிதடத்தாலும் மற்போர் செய்தாரென்று வில்லிபுத்தூரார் கூறுகின்றார்.

உபத்தம் என்பது சமீபத்திலிருப்பது என்னும் பொருளைத்தரும் அல்குற் பதம் தமிழ்நூல்களிற் சிலவிடங்களில் இடக்கரடக்கலாக உப யோகிக்கப்படுவதுண்டு. அதுபோல வடசொற்களுள் உபத்தமும் உப யோகிக்கப்படும். இவ்வுபத்த மென்னுஞ் சொல்லும் இருபாலார் அவ யவங்களுக்கும் பொதுவாக உபயோகிக்கப்படுதல் சமயநூல்களிற் காணப்படுகின்றது.

ஒரு சொல்லின் செம்பொருளுக்கும் இடக்கரடக்கற்பொருளுக்கும் வேற்றுமைதெரிந்துகொள்ளுவது உண்மைப்பொருள்தெரிவார்கடனும். ஒரு சொல் உவமைதொடர்ந்துவருவதே அச்சொல் இடக்கரடக்கலன் றென்பதை நாம் சிறிதும் பிரமித்தற்கிடமின்றித்தெளிவுபெறக்குறிக்கும்

ஆ. சுப்பிரமணிய பிள்ளை,
பேட்டை.

மதுரைத்தமிழ்ச்சங்கம்.

தனித்தமிழ்ப்பரீக்ஷாவினு.

பிரவேசபண்டிதவகுப்பு.

பரீக்ஷகர் :—ஆ. கார்மேகக்கோனர்.

இலக்கணம் II.

சௌத்திரிஷ பங்குனிமீ 22உ (4—4—21) திங்கட்கிழமை 2—5.

(அம்சம் 60.)

I. 1. யாப்பருங்கலநூலாசிரியரும் யாப்பருங்கலக்காரிகைநூலாசிரியரும் ஒருவரேயென்பது எவ்வாதாரத்தாற் றெளிவுறுகின்றது?

2. தொல்காப்பியத்துள், பாக்களின் இலக்கணம் விரித்துரைத்திருப்பவும யாப்பருங்கலம் யாப்பருங்கலக்காரிகைபோன்ற நூல்கள் எழுந்தது எற்றிற்கு?

3. பழைய ஆசிரியருள் யாப்புச்செய்தோரெனக் காரிகையுரையிற் காட்டப்பட்ட ஆசிரியர் யார் யார்?

4. யாப்பருங்கலக்காரிகையென்பது நூலை எவ்வாற்றா னுணர்த்தும்?

5. நேரீற்றுப்பொதுச்சீர்நின்று தன்வருஞ்சீர் முதலசையோடொன்றுவது என்ன தளையாகும்? ஒன்றுதது என்ன தளையாகும்?

6. (a) "வானகச்சோலை வரையதெய்ம்மூன்வரிவருதிராயின்
ஈனைகண்டார்க்குமரியபேறு நம்மஞ்சியகன்றுபோக
யானையோதுங்கைவேலஞ்சுகதும்மை
வானரமகளிர்வெளவுதலஞ்சுதும்வாரலீயோ"

(b) "செல்வப்போர்க்கதக்கண்ணன்செயிர்த்தெறிந்தசினவாழி
முல்லைத்தார்முறமன்னர்முடித்தலையைமுருக்கிப்போய்
எல்லைகீர்வியன்கொண்மூவிடைநுழையுமதியம்போல்
மல்லலோங்கெழில்யானைமரும்பாய்க்தொளித்ததே"

இவைகள் என்ன பாக்கள்?

II. 1. அடிதோறும் தனிச்சொற்பெற்றுவந்த இன்னிசைவெண்பா விற்கும் இந்தடியான்வந்த ஒருவிகற்பப்பஃறொடைவெண்பா விற்கும் சவலைவெண்பாவிற்கும் ஒவ்வோருதாரணந் தருக.

2. கொச்சகக்கலிப்பா எத்தனைவகைப்படும்? எவ்வாறு வரும்?

3. மருட்பாவென்ரு லென்ன? அஃது எவ்வெப்பொருளில்வரும்?

4. வஞ்சிப்பாவின் இலக்கணம் என்ன?

5. மோனை எத்தனை வகைப்படும்? உதாரணந் தருக.

6. செப்பலோசை, தூங்கலோசை, துள்ளலோசை, அகவலோசை என்ரு லென்ன? இவைகள் எவ்வெப் பாக்களுக் குரியன?

III. 1. தலை தாழிசை தனிச்சொல் சுரிதகம் என்ற கலிப்பாவுறுப்புக் களின் பரியாயநாமங்களையும் அப்பெயர்க்காரணங்களையும் எழுதுக?

2. "மாஞ்சீர்கலியுட்புகாகலிப்பாவில்விளங்கலிவந்
தாஞ்சீரடையாவகவலகத்துமல்லாதவெல்லாந்
தாஞ்சீர்மயங்குந்தளையுமதேவெள்ளத்தன்மைகுன்றிப்
போஞ்சீர்கனிபுகிற்புல்லாதயற்றளைபூங்கொடியே"
இக் காரிகையின்பொருளை விரித்துரைக்க.

3. தமிழிலுள்ள அலங்காரநூல்கள் வேறு யாவை?

4. செறிவு தெளிவு சமநிலை இவற்றை விளக்குக.

5. நிலகவணி எத்தனைவகைப்படும்?

6. வேற்றுப்பொருள்வைப்பு, தற்குறிப்பேற்றம், ஒப்புமைக்கூட் டம் இவ்வணிகளின் இலக்கணத்தை விளக்குக.

IV. 1. (a) தாதளவிவண்டெதிர்மாறுந்தாமரைகொல்
மாதர்விழியுலவுவாண்முகங்கொல்—யாதென்
றிருபாற்கவர்வுற்றிடையூசலாடி
ஒருபாற்படாதுளம்.

(b) சரியும்புனைசங்குந்தண்டரிபோன்மேனி
வரியுந்தனதடஞ்சூழ்கும்பமும்—திருமான
ஆகந்தழுவுதடந்தோளகளங்கன்
கோரங்கிதாழுதகொடிக்கு.

இச் செய்யுள்களிலுள்ள அணிகளை விளக்குக.

2. உவமானோபமேயங்களில் யாதேனுமொன்றை விசேடமுடைத்தாகச்சொல்லுதலும், ஒரு கர்த்தாவைச்சேர்ந்த முறையுள்ள பல செய்கைகளே முறைபிறழாமற் சொல்லுதலும் காரியத்தை யதன் காரணத்தோடொத்ததாகச் சொல்லுதலும் என்ன அணிகளாகும்?

3. விபாவனாலங்காரம், விரோதாபாசாலங்காரம், வியாஜஸ்திதாலங்காரம், அர்த்தாந்தரந்யாசாலங்காரம், வியாகாதாலங்காரம் இவற்றின் தமிழ்ப்பெயர்களைக் குறிக்க.

4. சித்திரகவி எத்தனைவகைப்படும்? சித்திரகவிகள் சங்கத்தார் நூல்களிற்பயிலாது பிற்காலத்துநூல்களிற் காணப்படுவதற்குக் காரணம் யாது?

5. பெருங்காப்பியத்தின் இலக்கணம் யாது? காப்பியங்களில் வரலாகா வழுக்கள் யாவை?

6. எழுத்துவருத்தனத்தை உதாரணத்தோடு விளக்குக.

உ

புத்தக மதிப்புரை.

---

1. சுலோசனை:—இது, இராமாயணத்துள்ள கிளைக்கதைகளுளொன்றாக இந்திரஜித்தின்மனைவியாகிய சுலோசனை யென்பாள் பெயரால் அவள் கற்புடைமைதோன்ற அமரிடைமடிந்த கணவனைத்தழுவி அருந்தழல்புகுந்ததை விஷயமாகக்கொண்டு, இராமேசுவர தேவஸ்தான ஸம்ஸ்கிருத வித்யாசாலையின் தலைமையாசிரியரும், வித்வான் பரீக்ஷையிற் சிறப்புப் பெற்றவரும் 'ஸஹ்ருதயா' என்னும் அரிய வடமொழிப் பத்திரிகையின் ஆசிரியருமாகிய ஸ்ரீமத் ர. கிருஷ்ணமாசாரியர் M. A. அவர்களால் 'ஸஹ்ருதயா'வில் வடமொழிவடியாய் எழுதிவெளியிட்டதொரு சிறியகதை. இதனை வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்ல மதிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீ-மத். மு. கதிரேசச்செட்டியார் அவர்கள், மேலச்சிவபுரிச்சன்மார்க்கசபையார் வேண்டுகோட்கிணங்கிச் சிறந்த தமிழ்நடையில் மொழிபெயர்த்து அச்சிட்டிருக்கிறார்கள். விஷயங்கள் வடமொழியிலுள்ளவையேயாயினும், மொழிபெயர்ப்பிற் சுவை குன்றுதற்குரிய வழிநடை யெனத் தோன்றவண்ணம் சுவை மிகுவடைய

தலைநடையான தமிழ்நடையென்றெண்ணும்வகை மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. ஆண் பெண்மக்களாயிருபால் மாணவரும் பயிலற் குரியது. இவ்வாறு இன்னும் பல நடைமொழிக்கதைகளைத் தமிழ்நடை யிலெழுதித் தமிழுலகுக்குபகரிக்கத்தகுதிவாய்ந்த இவர்களது உபய பாஷாபாண்டித்யம் பாராட்டத்தக்கது. இதனவிலை அணா மூன்று. வேண்டுவோர் மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபையார்க்கெழுதிப் பெறலாம்.

2. தனிப்பாக்கோவை:—இது, இப்போது இராமநாதபுரம் ஜில்லா பெண்பாடசாலை உதவிப்பரிசோதகராயிருப்பவரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின அங்கத்தினருள் ஒருவருமான ஸ்ரீ-மத். வே. முத்து ஸாமி ஐயர், M. A. L. T. அவர்களால் அவ்வப்பொழுது தம் மனத் தில் தோன்றிய கருத்துக்கியைவமைத்துச்செய்திருக்கும் தனிப்பாக் களாற்றொகுக்கப்பட்டது. இதில் தோத்திரப்பாடல்களும் வாழ்த்துப் பாடல்களும் இரங்கற்பாடல்களும் வேறு பலவகைப்பாடல்களும் உள் ளன. இவற்றுள் ஐயாவர்கள் சென்று தரிசனம்செய்த பலபுண்ணிய ஸ்தலங்களும், சென்றிருந்து பிரஸங்கம்புரிந்த சங்கங்களும், அவர்களால் நன்குமதிக்கப்பெற்ற பல கனவான்களுடைய பெருந்தகை மையும் பிறவும் அறியலாம். இது, இக்காலத்தவர்களது சரித்திரத்தை ஆராய்ந்தெழுதமுயலும் பிற்காலத்தவர்களுக்கு மிகவும் பயன்படத் தக்கது. இதன்விலை அணா 8. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

3. தொகுவரோ:—இதில் சுவநாராயணம், ஜவாராயிநாயாம்விதெரிகும், வஹ்ஜாவிம்பகி, வாழ் ஐவநாயஹவாத்தோகாதெரிகும், காணாஷக்கும், வழுவா ராணாநாவ்ஸாரி ஸ்ரீவ்மநுவநாயாவெரிதாபகம், ஜஹாம க்ஷிவெரிதாபகம் என்னும் எழுபிரபந்தங்கள் அடங்கியுள்ளன. இவை, திருவிந்தளூர் வித்வான் ஸ்ரீமத் ராமாராயணரால் அதுஸந்தா னம் பண்ணுவார்க்கு அர்த்தஸ்புரணமுண்டாகும்படி. ஸரளமான ஸம்ஸ்கிருதவசனரூபமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றுள், ஸகந்தவனகாதாஷ்டோத்தரஸத நாமங்களையெல்லாம் வாஸவவி வக்ஷமாகவும் மஹாலக்ஷ்மிவெரிதாபகம் நாமங்களையெல்லாம் அகராதி

யாகவும் அமைத்திருப்பது பாராட்டத்தக்கது. இதன்விலை அணை-ர். வேண்டுவோர், நம்மங்குறிச்சி ரெங்காசாரியர், வடக்குவீதி, திருவழுந்தூர், மயவரம் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

4. ஸ்ரீகாளிதாஸர்:- வடமொழிப்புலமைவாய்ந்து தெய்வகவியாய் விளங்கிய காளிதாஸரை அறியாதவர் லெகுசிலரேயாவர். அவரியற்றிய காவியங்களும் நாடகங்களும் பல. அவை சொற்பொலிவும் பொருட் பொலிவும் அலங்காரமும் மிக உடையன. அவற்றின் திட்ப நுட்பங்களையும் பிறநலன்களையும் தமிழுலகமும் அறிந்து இன்புறற்பொருட்டுக் கும்பகோணம் கோமளவல்லி புத்தகசாலையார், காளிதாஸர் என்ற பெயருடன் ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையை நடத்திவருகிறார்கள். அதன் முதற்பகுதியிற் காளிதாஸரியற்றிய நாடகங்களுள்ளும் காவியங்களுள்ளும் தலை சிறந்தனவாகிய மாளவிகாக்கினிமித்திரமும் குமாரசம்பவமும் தெளிவான தமிழ்நடையில் விளக்கமான சூறிப்புரையுடன் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன. இவற்றை மொழிபெயர்த்துதவியவர் சும்பகோணம் ராஜாங்கக்கலாசாலை ஸம்ஸ்கிருத பண்டிதர் ஸ்ரீ. உ. வே. ரா. வே. கிருஷ்ணமாசாரியஸ்வாமியாவர். மொழிபெயர்ப்பும் குறிப்பும் கவிசருக்தை நன்கு விளக்குவனவாயுள்ளன. இப்பத்திரிகை மாதந்தோறும் 40 பக்கங்கொண்டதாய் வெளிவரும். இதன் வருடச்சந்தா ரூபா மூன்று. வேண்டுவோர் மானேஜர், கோமளவல்லி புத்தகசாலை, 21. பாட்டராசாரியர் தெரு, கும்பகோணம் என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

5. ஸ்ரீ ராமாயணம்:— இது, இராமசரிதையைப் பாலகாண்ட முதல் யுத்தகாண்டம்வரை எளிய சிறு சிறு வாக்கியங்களாற் சுருங்க உரைப்பது; கும்பகோணம் இராஜாங்கக்கலாசாலை ஸம்ஸ்கிருத பண்டிதர் ஸ்ரீ. உ. வே. ரா. வே. கிருஷ்ணமாசார்யரின் புத்திரி செள. அரங்கநாயகியால் எழுதப்பட்டது. உரைநடை பயிற்றத்தொடங்கும் சிறுவர்க்குபயோகமாகத்தக்கது. இதன்விலை கூ 0—8—0. வேண்டுவோர் மானேஜர், கோமளவல்லி புத்தகசாலை, 21. பாட்டாச்சாரியர் தெரு, கும்பகோணம் என்ற விலாசதார்க்கு எழுதிப்பெறலாம்.

6. குலசேகரன்:—இது, P. M. வேணுகோபால நாயுடு அவர்களால் எழுதிவெளியிடப்பட்ட நவீனகதைப்புத்தகங்களுள் ஒன்று; பல

நீதிகளைப்புகட்டுவது; செவ்வியநடையிற் றிருத்தமாய் அச்சிடப்பட்டது. இந்நூலாசிரியர் வேறு சிலபுத்தகங்களும் வெளியிட்டுள்ளார். அவை சம்பகமாலினி, சரசுவதியந்தாதியுரை என்பனவாம். வேண்டுவோர், ஆம்பூர் எலிமெண்டரி ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ P. M. வேணு கோபாலநாயுடு அவர்களுக்கு எழுதிப்பெறலாம்.

7. முபபொருளுறவு:—இது, சென்னை 'நியூ ரிபார்மர்' என்ற பத்திரிகையிலை ஆசிரியர் ஸ்ரீமத் D. கோபாலசெட்டியாரால் எழுதப் பட்டது. இதன்விலை கூ 0-8-0. வேண்டுவோர், அறக்கோணத்தி லிருக்கும் 'நியூரிபார்மர்' பத்திராதிபர் D. கோபாலசெட்டியாரவர்களுக்கு எழுதிப்பெறலாம்.

8. சாவித்திரி நாடகம்:—இது, ஸ்ரீமத் தியாகராஜையா அவர்க ளால் இயற்றப்பட்டது. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்

9. ஆனந்தசாகரம்:— இப்பெயருடன் ஒருமாதாந்தப்பத்திரிகை நாளிது துர்மதிவரு சித்திரைமாதமுதல் கொழும்பில்நடந்துவருகிறது. இதில் நீதிகளும், சிறு கதைகளும், விநோதச்செய்புட்களும் முதலிய பல விஷயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. வேண்டுவோர், மானேஜர், "ஆநந்த சாகரம்," 63 ஜிந்தம்பட்டித்தெரு, கொழும்பு என்ற விலாசதார்க்கு எழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஅ.] துர்மதி-ஞெல மாசி-மீ [பருதி ச.
Vol. XX. February—March—1922. No. 4.

கிழவோன் என்னும் சொன்முடிபு.

செந்தமிழ் 17-ஆம் தொகுதியில் வெளிவந்த அண்மைவினாவுதற்றிலே, பத்திராசிரியர் திருநாராயணையங்காரவர்கள்,

'இவனியா ரென்குவை யாயி னிவனே
* * * *
விழுநீர் வேலி நாடு கிழவோனே'.

என்னும் புறப்பாட்டிற் கிழவோன் என்பது அண்மைவினாவாமென்று வாதித்து அப்பால் அக்கிழவோன் என்பதற்குச் சொன்முடிபுகாட்டு வான்புகுந்து அஃது உடம்பொடுபுணர்த்தலாற்பெறப்பட்டதோர் ஒனீற்று (ஆண்பாற்படர்க்கை)ச்சொல்லென்றும், மாயோன் என்பது ஒப்பின்முடித்தலாற்பெறப்பட்ட ஒனீற்றுச்சொல்லென்றும், ஒனீறு ஆனீற்றின் வேறென்றும், அவ்வாறே பெண்பால் பலர்பாற்குரிய ஆள், ஆர் என்னும் ஈற்றின் வேறுக ஓகாரமடுத்த ளகார ரகார ஈறும் உள வென்றும் ஓரிடத்துக்கூறி, மற்றோரிடத்துக் கிழவோன் மாயோன் என்

முன்னதன் எதிருரை.

கிழவோன் என்னும் சொன்முடிபு என்ற இம்மறுப்புரையானது 'ஒனீறு' முதலியவற்றிற்குச். சொல்லோன்கருத்தொடுபடாத பிறிது பொருள்கருதி மறுப்பதாயிருப்பதால் இதிற் சொல்லும்விஷயங்கள் பெரும்பாலும் இருதலைக்கும் உடம்பாடே. ஒருசிலவே மாறுபடுவன.

பன முறையே கிழமை மாயம் என்னும் பண்புப்பெயரடியாக ஆன்விகுதி புணர்ந்தவழிக் கிழவான் மாயான் எனமுடியாது நித்தியமாய் ஆ ஓவாகத் திரிந்து முடியுமென்று முன்னெடுபின் மலையக்கூறினர். இதனால் உண்மைப்பொருள் இதுவென்று துணிதல்கூடாமையின் இதுபற்றித் தொன்னூற்கருத்து யாதாமென ஆராய்தல் இன்றியமையாதாயிற்று.

பத்திராசிரியர் கிழவோன் என்பது உடம்பொடுபுணர்த்தலாற் பெறப்பட்டதோர் ஒனீற்றுச்சொல்லென்று கூறலுற்றது, 'ஏனைப்புள்ளி யீறுவிளிகொள்ளா' என்னும் தொல்காப்பிய விளியியற்சூத்திரவுரையிலே நச்சினார்க்கினியர் 'கிழவோள்' 'கிழவோன்' * * என்றும் பிறண்டும் உடம்பொடுபுணர்த்துக்கூறிய ஒன் என்னும் ஈறு தொழிலிற்கூறும் ஆன் என் இறுதிபோல யகரமாய் விளியேற்றலுங்கொள்க. ஓகாரமடித்த ளகாரவீறு விளியேற்குமேனுங் கொள்க என்று கூறியதுபற்றிப்போலும். அதுவாயின், கிழவோன் என்புழி ஒனீறு உடம்பொடுபுணர்த்தலாற்கொள்ளப்படுமென்பார்க்கு மாயோன் என்புழியும் அது அவ்வுடம்பொடு புணர்த்தலானே கொள்ளப்படுமெனல்வேண்டுமன்றி ஒப்பின் முடித்தலாற் கொள்ளப்படுமெனல் தவறுதலறிக. அல்லதூஉம் அவர் 'மாயோன் மேய காடுறை யுலகமும்' என ஆசிரியர் தொல்காப்பியனர் அகத்திணையியலுட் புணர்த்துக் கூறியதனையும் மறந்தார்போலும்.

இனி, மேல் எடுத்துக்காட்டிய நச்சினார்க்கினியருரைபற்றி ஆராயின், அவர் ஒருவர்மாத்திரம் ஒன் என்னும் ஈறேயன்றி ஓகாரமடித்த ளகார ரகார ஈறுகளும் வேண்டினர் என்பது பெறப்படும்.

சொல்வோன் கருத்தொடுபடாத பொருள் கருதியவற்றுள், 'ஒன் என்னும் ஈறு'என்று நச்சினார்க்கினியரும், 'ஒனீறு' என்று பத்திராதிபரும் கூறிப்போந்தகருத்து, ஒன் என்னும் ஓலியை இறுதியாகவுடைய பெயரென்பதாம். இங்கு ஈறு என்றது விகுதியையன்று. இறுதியிலுள்ள ஒலியை என அறியத்தக்கது. இவ்வாறே 'தம்முன்' முதலிய பிரிப்பிற்பிரியாக்கிளவிதுதற் பெயர்களை 'உன்னீறு' என வழங்குவர் சேனவரையர். இங்கு 'உன்', என்பது ஒருவிகுதியாகாது அம்மொழியின் இறுதியொலியாயிருப்பதும் நோக்கத்தக்கது. ஆதலால் ஈற்றயல் ஆ ஓவாகத்திரிந்த னவ்வீறு என்னுங் கருத்தால், அன்

நச்சினார்க்கினியர்க்கு முந்திய உரையாசிரியராகிய இளம்பூரணர் சேனாவரையர்முதலியோர் யாரும் அவ்வீறுகள் வேண்டினரிலர்.

ஆசிரியர் தொல்காப்பியனர் ஆண வடமொழியிற் பெறப்படாத உயர்திணை அஃறிணைப் பாகுபாடுபற்றியும் அத்திணைகட்குரிய பாலீறுகள்பற்றியும் எஞ்சாமல் வரைந்தோதுமுகத்தானே தமிழின் தனி மொழித்தன்மையை உலகிற்கு உணர்த்தினாராய், 'னஃகானெற்றே ஆடூஉ வறிசொல்' என்றுற்போலும் சூத்திரங்கள் இளவியாக்கத்துக் கூறியது னேடமையாது 'அன்னும் ஆனும்' எனப் பெயரியலுள்ளும் 'அன்ஞ னள்ளார்' என வினையியலுள்ளும் கூறி, செய்யுள்வழக்கிலேமாத்திரம் வரும் மாரீறு முதலாயினபற்றியும் சூத்திரம் ஓதினர். அவர்க்குக் கிழ வோன் மாயோன் என்புழி ஓன் என்பதொன்று பானுணர்த்தும் ஈறென் பது கருத்தாயின், அதனையும் எடுத்தோதிச் சூத்திரிப்பரன்றி உடம்பொடு புணர்த்துக்கூறி உய்த்துணரவைத்தாரென்றல் பொருத்தமையறிக.

இனி, அத்தொல்காப்பியனர் தாம் எடுத்தோதிற்றிலரேனும், அத் தொல்காப்பியத்தின்வழியே நன்னூற்பெயரின்வருத்து, அவர் உடம் பொடுபுணர்த்தலாற்பெறவைத்த வியங்கோள்பற்றிக் 'கயவொடு ரவ் வொற் றீற்ற வியங்கோள்' எனவும், சேனாவரையரால் ஏம் ஈற்றின் சிதைவென மறுக்கக்கிடந்த ஓம் என்பதோர் ஈறும் புதியனபுகுதலாற் கொண்டு 'அம்மாமெம்மேமோமொடு' எனவும் வேண்டும் விகற்பங் கூறி முடித்து நூல்செய்த பவணந்திமுனிவரும் 'அன்னனள்ளாள் அர் ஆர்' என்றே ஓதியொழிந்தாரன்றி ஓகாரமமித்த னகார ளகார ரகாரவீறு கொண்டிலர்.

ஆன் ஈற்றின் வேறுபட்ட னவ்வீற்றின் ஓரபகுதி என்பதைச் சுருங் கக்கூறவேண்டி 'ஒனீறு' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனை ஆனீற் றின்வேறுகக் காட்டியது அளபெடைச்சொல்லும், அளபெடித்தசொல் லும்போலத் திரிந்ததன்றிரு பிறிதென்னும் வழக்குப்பற்றியென்க. இத னுற் பத்திராசிரியர் கூறியது முன்னெடுபின் மலிவுடையதாகாது.

இன்னும், தொல்காப்பியவரியில் "உடம்பொடுபுணர்த்துக்கூறும் ஓன் என்னும் ஈறு" என்ற நச்சினார்க்கினியர்க்கு ஓன் என்னும் விகுதி யொன்று உடம்பொடுபுணர்த்தலாற்பெறப்பட்டதென்பது கருத்தாகு

குட்டித்தொல்காப்பியமெனப் புனைந்துரைக்கப்படும் இலக்கண விளக்கனூலாரும் நேமிநாதனூலாரும் அவ்வீறுகள் உளவாக ஓதினரிலர்.

பாலுணர்த்தும் ஈறுகள்பற்றித் தமக்குவேண்டியவாறெல்லாம் மாறு நிலைதிரிய எடுத்தோதிய வீரசோழியனூலாரும் அவ்வீறுகள்கொண்டிலர்.

பிந்தியதால்களின் உரையாசிரியர் சங்காரமச்சிவாயப்புலவர் முதலி யோரும் கொண்டிலர். அதனுல் நச்சினர்க்கினியருரை ஆசிரியர்கருத் தோடு மாறுபடுவதாமென மறுக்க.

இனித் தொன்னூலாசிரியரும் உரையாசிரியரும் எடுத்தோதினுல தேனும், இலக்கியங்கண்டதற் கிலக்கணமியம்பல்பற்றிக் கிழவோன் முத லிய இலக்கியமுன்மையால் நச்சினர்க்கினியர்கூறியவாறு ஒன் முதலிய வீறுகோடற்கு இழுக்கின்றும்பிறவெனின், அற்றேல் 'வில்லோன் காலன கழலே' 'தொடியோண் மெல்லடி மேலவுஞ் சிலம்பே' 'நல் லோர் யார்கொ லளியர் தாமே' 'கழனி நல்லூர் மகிழ்நற் கென்னிழை, நெகிழப் பருவரல் செப்பா தோயே' என்புழியெல்லாம் ஒன்முதலிய வீறு கோடற்கு இழுக்கின்றும். ஆயின், ஆசிரியர் ஆயிடை னளரயவீற்றயல் ஆகாரம் செய்புள்வகக்கிலே ஓகாரமாய்த்திரிந்துவருமென்னுங் கொள் கையராய் 'ஆவோ வாகும் பெயருமா ருளவே, யாயிட னறிதல் செய்யு ளுள்ளே' என்று பெயரியலுள் எடுத்தோதியதனை அது பயனில்கூற் றுக்குமாறறிக.

மென்று கருதுகிறார்கள்; அவர்க்கு அது கருத்தன்று; உடம்பொடு புணர்த்தலாற் பெறப்பட்ட ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாக நித்தியமாய்த் திரிதலேயுடைய னகரவீறென்பதே கருத்தென்க.

இனி 'ஆவோ வாகும் பெயருமா ருளவே' என்ற சூத்திரத்துள்ள உம்மையால் ஈற்றயல் அகரமும் ஓவாதல் பெறப்படும் என்கிறார்கள். அவ்வாறு ஓரையிலும் காணப்படவில்லை. சேனவரையருரையிலெழுதி யிருக்கும் ஒருபகுதி தம்கூற்றுக்கு ஆதாரமாயிருப்பதாக நண்பரவர்கள் கருதுகிறார்கள். அது முழுதும் தம்கூற்றுக்கே விரோதமுடையதா யிருக்கிறது. அதனுள் தமக்கு விரோதமுள்ளபாகத்தை.....இப்புள்ளி கொடுத்து விலக்கிவிட்டார்கள். அவ்வாறு விலக்காது முழுதுமெழுதிக் கொண்டுபார்த்தால் உண்மை வெளியாகும். அவ்வுரைமுழுதும்வருமாறு.

ஆசிரியர் தொல்காப்பினர் பெயர்ச்சொல்லுளேயன்றி வினைச்சொல் லுள்ளும் ஆகாரம் ஓகாரமாய்த் திரிந்துவருதல்பற்றிப் 'பாலறி வந்த அம் மூ வீற்றும், ஆவோ வாகும் செய்பு ளுள்ளே' 'ஆபென் கிளவியும் அவற் றொடுகொள்ளும்' என்று வினையியலுள்ளும் மயக்கமினறி ஓதினர்.

அக்கருத்தேபற்றி நன்னூலாரும் 'பொர்வினை யிடத்து னளரய வீற்றயல்-ஆவோ வாகலும் செய்புளு ளுரித்தே'என்று சூத்திரம் ஓதினர்.

இலக்கணவிளக்கநூலார் 'அந் நன்னூற்சூத்திரத்தினையே பொன் போற் போற்றி எடுத்தோதினர்.

நேமிநாதத்தார் 'ஆய்ந்த வயர்திணைப்பேர் ஆவோவாஞ் செய்பு ளிடை'என்றோதினர். ஆகலின் ஆண்டு ஆ ஓவாகத்திரிந்துவருமென்பதே எல்லாவாசிரியர்க்கும் ஒப்பமுடிந்த கருத்தாவதன்றி ஒன்முதலிய வீறு கோடல் கருத்தன்மை தெளிக.

இனி, வில்லான் முதலியவற்று ஆகாரம் ஓகாரமாய்த்திரிந்து வில் லோன் முதலியனவாக வருதற்கு அஃதொக்கும். கிழவோன் மாபோன் என்புழி அவ்வாறு ஆகாரம் ஓகாரமாய்த் திரிந்துவருமென்பதற்குக் கிழ வான் மாயான் என ஆனீற்றுமொழி வழக்கினு ளின்மையாலும், கிழ வன் மாயன் என்னும் அன்னீற்றுமொழிகளே உண்மையானும் ஆகாரம்

"உழாஅன், கிழாஅன் என்பனவோவெனின் அவை அன் ஈற்றுப் பெயர்; ஒருமொழிப்புணர்ச்சியான் அவ்வாறுநின்றன வென்பது. ஆன் ஈறுயவழி உழவோன் கிழவோன் எனத் திரியுமாறறிக" என்பதாம். இதனால், கிழாஅன் என்பது அன் ஈற்றுப்பெயரென்று விளக்கமா யுரைக்கப்பட்டிருக்கிறது. ஆகலா லிது ஆனீற்றுப்பெய ரளபெடுத்து நின்றதெனக்கொள்ளற்கவென்பது குறிப்பாயிற்று. ஆகவே 'அவ் அன் ஈற்றுக்கு முற்பட்டிருக்கும் பகுதி யாது 'அது கிழமை என்னும் சொல்லாயிருக்கவேண்டுமென்பதும் பெறப்பட்டது.

இனி, 'ஆனீறுயவழி உழவோன், கிழவோன் எனத் திரியுமாறறிக' என்றதனால், கிழமை என்னும் பகுதி ஆன்விகுதிபெற்றவழி ஆ ஓ ஆகல் நித்தியமென்பதும் பெறப்பட்டது. இதனால், கிழவான் என் னும் சொல் இல்லையாத லறிக. இவற்றால், கிழவோன் என்பது கிழவன் என்பதன் றிரிபன் றென்பதே பெறப்பட்டது.

ஓகாரமாய்த் திரிந்ததெனற்கு எலாமையின் ஈண்டைக்குமாத்திரம் ஏற் புழிக்கோடலால் ஓனீறுதோடுமெனின், நன்று கூறினுப்! இலக்கியமென் சுஞ்செல்லாததொன்று இலக்கணமாவதின்மையின், ஒருவழி ஆனிற்றின் திரிபெனவிலக்கப்பட்ட ஓனீறு பிறிதொருவழி இலக்கணமாவது யாண் டையதென்க.

அற்றேல், கிழவோன் மாயோன் என்பன முடிந்தவாறு யாதோ வெனின் வில்லான் என்புழி ஆகாரம் ஓகாரமாய்த்திரிந்து வில்லோன் என முடிந்தாற்போல ஒரோவழிக் கிழவன் மாயன் என்னும் அன்னீற்று மொழியின் அகரமும் ஓகாரமாய்த்திரிந்து கிழவோன் மாயோன் என முடியுமெனக்கொள்க. இம்முடிபு ' ஆவோவாகும் பெயருமாருளவே ' எனுஞ் சூத்திரத்து உம்மையாற் கொள்ளப்படும். அசரூத்திரத்திரை யிற் சேனவரையர் உழாஅன் கிழாஅன் என்பனவோவெனின் * * ஆனீறுயவழி உழவோன் கிழவோன் எனத் திரியுமாறறிக என்றார். கிழ வோன் என்புழிக் கிழமை என்பது நின்று ஆன்விகுதியோடுபுணர்ந்த வழிக் கிழவோன் என முடிந்ததென்பது இவ்வுரையாசிரியர் கருத்தன் றும். இவரும் மற்றைத் தொல்காப்பியவுரையாசிரியரும் பதமுடிபு என்ப தோர் இலக்கணம் பிற்காலத்தார்படைத்துக்கொண்டது தன்னுளொரு பொருள் கருதிக்கூறல் என்னும் குற்றத்தின்பாற்படுமென்று கருதினு ராவர்.

இறையனர்களவியல் மூன்றுஞ்சூத்திரத்துரையிலே தெய்வப்புல வர் நக்கீரனர் கிழவோன் கிழமை உடைமையிற் கிழவன் என்றுரைத் தனர். அவர்க்கும் அகரம் ஓகாரமாய்த் திரிந்துவந்ததென்பதே கருத் தப்போலும் இனி நன்னூலார்க்கும் இலக்கணவிளக்கநூலார்க்கும்

இனி, இறையனர்களவியல் மூன்றுஞ்சூத்திரவுரையில், 'கிழவோன் (கிழமைபுடைமைபால்) கிழவன்' என்ற வாக்கியத்தாலும் அகரம் ஓகார மாகத் திரிந்ததென்பதே அவ்வுரைகாரர்கருத்தென் றெண்ணுகிறார்கள். இதில், 'கிழவோன்' என்றசொல்லின்பொருளை விரித்துரைக்கக்கருதி, 'கிழமைபுடைமைபால்' எனக்காரணங்காட்டி, கிழவன் எனக் கண்ணழித் துரைக்கப்பட்டிருக்கிறது. அறுவை (அறுக்கப்படுதலால்) துணி எனக் காரணங்காட்டிய கண்ணழிப்புரையுள் அறுவை துணியின்றிரிபாகாத வாறே கிழவோனும் கிழவன்றிரிபாகாதெனக் கொள்க.

T. 11 வது.

இதுவே கருத்தாதல் 'பெயரினையிடத்தனளரயவீற்றயல்' என்னும் சூத்திரவுரையான் உணர்க.

மாயோன் என்பதற்கும் இம்முடிபு ஒக்கும். எனவே, நச்சினர்க் கினியர் உடம்பொடுபுணர்த்தலாற்கொண்ட ஒனீற்றுச்சொல் என்றது போலியுரையாத லறிக. இதனானே பத்திராசிரியருரையும் மறுக்கப் பட்டது.

இனிக் கிழவோன் என்பதன்முடிபு இதுவாயினும், கிழவோன் என்பதும் கிழவன் என்பதும் சொன்னிலையால் வெவ்வேறு சொல்லே யாம், ஒன்றல்ல; அளபெடைச்சொல்லும் அளபெடுத்தசொல்லும் வெவ்வேறுயினுற்பே ல. ஆகவே கிழவோன் என்பது விரிவேற்றுமை யிற் கிழவோய், கிழவோயே எனவரும்; அன்றிக் கிழவோனே எனவும் வரும். அவை கிழவன் என்பதன் விளியல்லவென்க. இவ்வாறுசெ தற்கு விதி 'ஏனைப் புள்ளி யீறுவிளி கொள்ளா' என்னும் சூத்திரமாம். அச்சூத்திரத்துரையிலே நச்சினர்க்கினியர் கிழவோன் என்பது 'தொழி லிற்கூறும் ஆனென்னிறுதிபோல (வந்தான் வந்தாய் என வந்தாற்போல) யகரமாய் விளியேற்றலுங் கொள்க. அது, பெருங்கால் வைப்பி னுடகிழ வோயே' 'மாயோய்' என்றுற்போலவருவனவும் கொள்க' என்றுகூறி யதுபற்றி யுணர்க. கிழவோயே கிழவோனே என்புழி ஏகாரம் விளியுரு பாம். அதற்கு விதியும் அச்சூத்திரமேயாம். ஏகாரம் விளியுருபாமாறு 'தாரேன்னவோங்குஞ்சடைமுடிமேல்' என் னும் 'திருக்கோவையா ருரையிலே 'பேதையரேயெனச் சிறுபான்மை ஏகாரம் பெற்றது' என்று பேராசிரியர் கூறியதனாலும் உணர்க.

இச்சொற்களின்வேறுபாடுகருதாது நன்னூலாரும் இலக்கண விளக்கநூலாரும் வாயிலான் என ஆனீறுஅய்நின்றசொல்லும் கிழவன் என அன்னீறுஅய்நின்றசொல்லும் விளிக்குமிடத்து முறையானே வாயி லோயே எனவும் கிழவோயே எனவும் வருமென்றுகொண்டு 'ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்' என்னுஞ்சூத்திரத்து, 'இறுதியவ்

இனிக் 'கிழவோனே' என்பதில் ஏகாரமே விளியுருபாகவேண்டு மென்று கருதித் திருக்கோவையாருரையில், 'பேதையரே எனச் சிறுபான் மை ஏகாரம் பெற்றது' என்பதைக் காட்டுகிறார்கள். இதனால் ஏகாரம் பெறுது பெரும்பான்மை இயற்கைவிளியாமென்பதும் பெறப்பட்டமை

வாதல் அதனோடியறிர்தேயுறல்' என்று விதியமைத்தார். வாயிலோயே, கிழவோயே, மாயோயே என்பவற்றிற்கு எழுவாய்வேற்றுமையாய்நின்ற சொல் வாயிலோன், கிழவோன், மாயோன் என்பனவேயாம். இவற்றின் வேற்றுமைவரிசையை அடியிற்காண்க.

எழுவாய்	வாயிலோன்	கிழவோன்	மாயோன்
இரண்டாவது	வாயிலோனை	கிழவோனை	மாயோனை
மூன்றுவது	வாயிலோனொடு	கிழவோனொடு	மாயோனொடு
நான்காவது	வாயிலோற்கு	கிழவோற்கு	மாயோற்கு
ஐந்தாவது	வாயிலோனின்	கிழவோனின்	மாயோனின்
ஆறுவது	வாயிலோனது	கிழவோனது	மாயோனது
ஏழாவது	வாயிலோன்கண்	கிழவோன்கண்	மாயோன்கண்
விளி	வாயிலோய்	கிழவோய்	மாயோய்

இனி, வாயிலான் கிழவன் மாயன் இவற்றின் வேற்றுமைவரிசை வருமாறு.

எழுவாய்	வாயிலான்	கிழவன்	மாயன்
இரண்டாவது	வாயிலானை	கிழவனை	மாயனை
மூன்றுவது	வாயிலானொடு	கிழவனொடு	மாயனொடு
நான்காவது	வாயிலாற்கு	கிழவற்கு	மாயற்கு
ஐந்தாவது	வாயிலானின்	கிழவனின்	மாயனின்
ஆறுவது	வாயிலானது	கிழவனது	மாயனது
ஏழாவது	வாயிலான்கண்	கிழவன்கண்	மாயன்கண்
விளி	வாயிலாய்	கிழவ	மாய

எனவே, வாயிலான் என்றுற்போலும் இயல்பாகநின்றசொல்லின் வேற்றுமைமுடிபும்வேறே, வாயிலோன் என்றுற்போலும் ஈற்றயல்திரிந்து நின்றசொல்லின் வேற்றுமைமுடிபும் வேறேயாம். இவற்றின்முடிபு மாறிவாரா. வாயிலான்முதலியன வாயிலோன் முதலியனவாகத் திரிபு

யால், 'கிழவோன்' என்பது இயற்கைவிளியாமென அறிக. இச்சிறு பான்மைவரும் ஏகாரமும் உயர்திணையின் னகரவீற்றுக்குரியதன்று. 'புள்ளியு முயிரு மிறுதி யாகிய-வஃறிணை மருங்கி னெல்லாப் பெயரும்-விளிநிலை பெறூஉங் காலந் தோன்றிற்-றேளிநிலை யுடைய' தாய்வரும் என்பதனை இச்சூத்திரத்து நச்சினார்க்கினியருரையால் அறியலாம். அஃறிணைக்குரிய கள்விகுதி வழுவமைதியாய் உயர்திணைக்கட் செல்வது போல இவ்வேகாரமும் உயர்திணைக்கட்சென்றதென்பதே தொல்லாசிரி

கிழவோன் என்னும் சொன்முடிபு

பெற்றமுடிவதற்கு விதி 'பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல், ஆவோ வாகலும் செய்புழு ஞரித்தே' என்பது முன்னே தெளியப்பட்டது. ஆண்டுப் பெயரெனப் பொதுப்படவே ஓதியவதனுல் வாயிலோனை வாயி லோனெடு என மற்றைவேற்றுமையுருபேற்றுநிற்குமிடத்தும் ஈறுகெரி தற்கு அவ்விதியே அமையும். வாயிலோய் என விளியேற்குமிடத்து அவ்வீறுகெரிதற்கும் அவ்விதியே அமையும். அச்சூத்திரம் விளிவேற் றுமையை விலக்குமாறில்லை. ஆகவே, 'ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்' என்னும் சூத்திரத்து 'அயறிரிந்து' என்றது மிகைபடக் கூறலாதல் அறிக. வாயிலான் வாயிலாய் என வருதற்குவிதி யாகிய இறுதியவ்வாதல்' என்பதே வாயிலோன், கிழவோன், மாயோன் என்பன முறையே வாயிலோய், கிழவோய், மாயோய் என வருதற்கும் அமையும். வாயிலோயே, கிழவோயே, மாயோயே எனவருதற்கு 'இறுதியவ்வாத லத னெடுயுறல்' என்றுலே அமையும்.

நுண்ணிய உரையாசிரியர் பரிமேலழகரும் "மாஅயோயே மாஅ யோயே" என்னும் பரிபாடலுரையிலே 'மாயோன் என்பது காயோன் என்னும் பொருள்குறியாது பெயர்மாத்திரையாய்நின்றது ; அது விளி யேற்று 'மாயோய்' என்றுயிற்று என்று கூறினர். அவர்க்கும் மாயோன் என்பதன்றி மாயன் என்பது விளியேற்று மாயோய் என வாராதென் பதே கருத்துப்போலும்.

ம. நா. சோமசுந்தரம்பிள்ளை,
திருமருகல்.

யர் துணிபு. பின்னூல்செய்த நன்னூலார், வழக்குப்பயிற்சிநோக்கியும், மாணுக்கர் இடர்ப்படாது எளிதினுணரக் கருதியும் கள்விகுதி கூறிய வாறே இவ்வேகாரத்தையும் உயர்திணை விளியுருபாகக் கூறினர். இது, தொல்லாசிரியர்துணிபாகமாட்டாதென் றுணரத்தக்கது.

கிழவோன் என்றசொல் கிழவோய் என விளியேற்குமென்று மிகவும் விளக்கிக்காட்டுகிறீர்கள். அவ்வாறு விகாரவிளி வாராதென் றெருவரும் சொல்வாரில்லை. அதனுல், கிழவோன் என்னும் இயல்புவிளி யில்லையென்று நிரூபிக்கப்பட்டதாகமாட்டாது. மற்றையவெல்லா முடம்பாடே.

இனி, மாயோன் என்பது ஒப்பின்முடித்தலாற் பெறப்படுவதன் றென்றும், 'மாயோன்மேய' என உடம்பொடுபுணர்த்தலாற் பெறப்பட் டது என்றும் காட்டியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கதே.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

புரூரவசரிதை.

(ககசு-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

உருப்பசிப்படலம்.

அணைப்படாநீத்தமென்னவழிமதவருவிதாழும்
பணைப்படாமுகத்தகால்வாய்ப்பருமிதக்குன்றமன்னன்
பிணைப்படாக்கருங்கட்செவ்வாயுருப்பசிப்பிடியின்பீனத்
தூணைப்படாமூலமேற்சேர்ந்தவண்ணமேற்சொல்லலுற்றும். (க)

வேறு.

ஈரப்பனசங்கொழுவிஞ்சிபலா
ரசத்திலவந்துடிநாகம்விளா
வாரத்தினைடாமலகந்திலகஞ்
சேரப்பொலிகின்றதுதென்றலொடும். (உ)

கொடியோடியமுல்லைகொழுங்குமுதம்
பொடியோடலர்கேதகைபுண்டரிகம்
படியோடலர்பன்மலரெம்மலருங்
கடியோடலர்கின்றதொர்காவகமே. (ங)

பொற்றாவியனத்தொடுபூவைகிளிச்
சொற்றாவுவதும்பிகளம்பியதே
னிற்றாதிபமென்றுநுகர்ந்தெழுபண்
கற்றாதுறுகின்றதோர்கன்னிவனம். (ச)

கன்னிப்பொழிலூடுகரும்புயலின்
மின்னுற்றனவாமெனவிண்ணுலகி
னன்னித்திலவாணகையார்நணுகித்
துன்னித்தனியாடல்தொடங்கினரால். (ஞ)

மறியுந்திரைவாரிதியூட்முதஞ்
செறியும்பொழுதெய்துதிறத்தினையன்
றறியும்படிசெய்வதுபோலிலரீ
செறியும்புனலாடலிழைத்திடுவார். (ட)

செல்லிற்குமுயர்ந்தசினைப்பொதுளு
மல்லிப்புதுமாமலைசந்தருவின்
வல்லிக்குலமென்னமலர்க்கையினூற்
புல்லிப்புனைபோதுபுனைந்திடுவார். (எ)

மேகந்தொடர்ந்றுவிரிந்தமடற்
பூகங்களம்வென்றபொருமையினுல்
வேகங்கொடிமுத்துவிசிப்பனபோ
லாகங்குளிரூசலசைத்தசைவார். (அ)

சந்தங்கிளர்கொங்கைகளைச்சரியா
யந்தம்பெறலென்றழல்கின்றவர்போற்
கந்தங்கள்கமழ்ந்தகனங்குழலார்
பந்தங்கைகொடெற்றுவர்பற்றுவரால். (கூ)

பாய்கெண்டைவிழிக்கடைபாயநடை
நோய்கொண்டவரென்னதுடங்கிடையார்
வாய்கொண்டநிறத்துவர்வாய்ந்தபழுக்
காய்கொண்டுகழங்குபயின்றிடுவார். (கo)

அங்கன்னவர்தாம்வீளையாடுதலுஞ்
சிங்கந்நிகராய்வருதெவ்வடரும்
வெங்கண்ணசுரர்க்கிறைவேலியெலாஞ்
சங்கம்மலவாய்நடைதந்திடுவான். (கக)

வடகுன்றமெனப்பொலிமார்புடையான்
கடலன்றிடியேறனகட்டுரையா
னுடல்கொண்டவருனுதிரத்தினெடுங்
கூடர்கொண்டவனண்டர்குலப்பகையான். (கஉ)

எமதண்டமுமீசனிலக்கழுவுந்
தமையஞ்சிடவிஞ்சுதனிப்படையான்
சுமையென்றுலகக்கொடிதொய்யமனக்
கமையின்றியழற்பொலிகண்ணுடையான். (கங)

காலானகடற்படையின்னுவண்
ணலாலமெனக்கனலாகுமெனச்
சூலார்மழைமேகமெனச்சுலவுங்
காலாளியதேர்கடவாகடவா. (கச

வருகேசியவ்வானமடந்தையர்பொற்
குருகேய்நிறுசெங்கைகுவித்திடமைப்
பொருகேசியுருப்பசிபோதுதல்கண்
டருகேகியெடித்தகல்வானகல்வான். (கஞ)

பொறிவெம்புலிவாயிடைபுக்கியமான்
மறியென்பனபோன்மனமாழ்கியயர்ந்
தறிவொன்றுமிலாளுயர்வானடைய
வெறிசெண்டைவிழிச்சிபரேங்குதலும். (கசு)

ஓராழியவையமுகைத்தலகி
னீராதவரெய்தினரென்னநெடுந்
தோராதவணேடுதிரிந்திடுமப்
போராழியனஞ்செவிபுக்குதலும். (கஎ)

வந்தூற்றனன்மாமதிமைந்தன்மக
னந்திப்பிறைவாணுதலீரழியுஞ்
சிந்தைத்துயரென்கொல்தெரித்திரென
வந்தக்கொடியன்னவர்பன்னுதலும். (கஅ)

எத்திக்கினிலேகினனென்றிடலுங்
நித்திக்குமொழிச்சியர்சேணிடையே
யித்திக்கினிலென்றனரென்றிடலும்
வெத்திக்கினிலேகினனன்னவனே. (கசூ)

தண்டாரவனேகுதடத்திடையே
கண்டானசுசேசர்கடக்கரிறே
யண்டாதவனன்னவணங்கிலுடும்
விண்டாவிவனென்னவிசைந்திடலும். (உ0)

எங்கேகுவதேகலடாகனகப்
பங்கேருகமின்னனபைந்தொடியை
யிங்கேதருகின்றிலையேலுனவிண்
கங்கேறுகரும்படிகாட்டுவனுல். (உக)

என்றங்கையிருஞ்சிலைகால்வளையா
மின்றங்கியநாணிவிசித்துநெடுங்
குன்றங்கடகர்ந்துகுலைந்திடவான்
சென்றங்கதிராச்சிறுநாணெறியா. (உஉ)

கண்டேயொருமானிடன்விற்கடுமைக்
கெண்டோளவனேநிகரென்னவியந்
துண்டேனிவனுருயிரென்றுரையாத்
திண்டோளவன்வெங்கணைசிந்தினனே. (உங)

இடியொப்பனவெங்கனலேய்வனநீள்
தடியொப்பனசண்டனவென்றனவிப்
படியைப்பொடிசெய்வனபண்ணவர்தங்
குடிகெட்டிடவிட்டகொடுங்கணைகள். (உச)

கனகந்தொடுகுன்றிடைகார்மழைநீ
ருருகுசந்தியின்வீசுவதொப்பனவே
சகமங்கைதனப்பிலதாகியபொற்
சிகரம்பொருதோண்மிசைசென்றுறவும். (உடு)

குறுமூரல்வினைத்தகுணத்தவனுய்க்
கறுவோடுசதாகதியம்புதொடுத்
துறுதேர்வறுகேசியையோதமிகுந்
தெறிவேலியினீரிடையிட்டனனே. (உரு)

அக்கேசிபெறும்படையானவெலாங்
திக்கேகதிபோச்சிதறுற்றிடவு
மிக்கோர்மொழிமின்னையெடுத்திகல்வேன்
மிக்கோனுமிமைப்பினில்மீண்டனனே. (உஎ)

வேறு.

தெரிந்தவென் றியப்புரூவா மணிநெடுந்தோண்மேல்
முருந்தவாணகைதனைக்கொடுபோய்மலர்முகைவாய்
விரிந்தகற்பகநீழலில்விண்ணவர்பரவ
விருந்தவாயிரங்கண்ணுடைக்கடவுண்முன்னீந்தான். (உஅ)

தெளித்ததேமொழிமடந்தையைக்காண்டலுஞ்சினத்தீத்
தளிர்த்ததாமெனத்திகழ்சடாமுனிதருசலத்தா
லொளித்ததன்னகர்வளமெலாங்கடல்கடைந்தொருவ
னளித்ததாமெனக்களித்தனமரர்நாட்டரசன். (உக)

வெய்யவாள்வலியவுணர்கைப்புகுந்துளம்விம்முற்
றையலாடனீமீட்டளித்ததற்குபகாரஞ்
செய்புமாறிலையன்றியுமுனக்குமால்செய்யு
மையவாள்விழியணங்கினீப்பெறுகெனவழங்க. (உ0)

ஈங்குபோதுவதென்றுகொலென்றலுமொளிவாய்ந்
தோங்குபூண்முலைகேட்டியென்றெருவுமொன்றுதவி?
யாங்கிம்மன்னனியமனிற்காண்டியேலவனை
நீங்குகென்றனன்குன்றெறிவயிரவாள்நிருபன். (உக)

என்னவோதியம்மடந்தையீதலுமிகல்வேன்
மன்னர்கோசரியாகியபுரூவாமகிழ்ந்து
கன்னல்வாய்மொழியுருப்பசியிளமுலைகலந்து
பொன்னிணைசனத்திருந்தனன்பின்னதுபுகல்வாம். (உஉ)

உருப்பசிப்படலம் முற்றும்.

(தொடரும்)

உதவிப்பத்திராதிபர்.

ஸ்ரீ:

அநுதாபக்குறிப்பு.

நம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வித்வதங்கத்தினருள் ஒருவரான சுன்னாகம்வித்வான் ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் துர்மதி வருஷம் மாசிமீ 25உ இரவு இவ்வுலகவாழ்க்கையைத்துறந்தார் என்று தெரிந்து மிகுந்து வருந்துகின்றோம். இவர் தென்மொழியிற் சிறந்த பண்டிதர். வடமொழியும் வல்லுநர். நம் மதுரைத்தமிழ்ச்சங்கந்தொடங்கியகாலந்தொட்டுச் சங்கத்தின் அங்கத்தினராயிருந்து செந்தமிழ்க்கு நீண்டகாலமாக வேண்டும் விஷயங்கள் எழுதியும், தமிழ்ச்சங்கத்தார் நடத்திவரும் தனித்தமிழ்ப்பரீக்ஷையிற் பரீக்ஷகராயிருந்து விஞ்ஞாபனங்கள் எழுதியனுப்பியும், தமிழ்ச்சங்கத்துக்கு உதவிபுரிந்திருப்பதோடு, சிறந்த செய்புளாலும், செவ்வியநடையாலும், சிற்சில தமிழ்நூல்களியற்றியும், வடமொழியினின்று மொழிபெயர்த்துதவியும், சிலவற்றிற்கு உரைபெழுதியும், அவற்றை அச்சிடுவித்தும், தமிழுலகுக்கு உபகரித்திருக்கிறார். இவருடைய விருத்தாந்தங்களை, அடுத்துவரும் ஸ்ரீமத்-கந்தையபிள்ளையவர்களெழுதிய விஷயத்தில் விரிவாய் அறியலாம். இவரது கல்வித்திறமைகண்டு இலங்கையரசினர் இவர்க்குரூ 250 (ரூபா இருநூற்றைம்பது) பரிசளித்துக் கௌரவித்திருக்கிறார்கள் என்று தெரிகிறோம். இத்தகைய புலவர்பெருந்தகையை இழந்துவருந்தும் அவருடைய நன்மக்களுக்கு நமது அநுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

பத்திராதிபர்.

குமாரசுவாமிப்புலவர்.

அருமைபெருமைவாய்ந்த அறிவு ஒழுக்கங்களானுன்ற ஆப்தசிகாமணியும், வடமொழி தென்மொழிகளில்வல்ல கவிஞர்சிகாமணியுமாகிய யாழ்ப்பாணச் சுன்னாகத்துக் குமாரசுவாமிப்புலவர் சிவபதமடைந்தனர் என்னுஞ் செய்தியைக் கேள்வியுற்ற தமிழுலகம் அருமணியிழந்த நாகம் போலக் கையாறுற்றுக் கவலையின் மூழ்குவதாயிற்றே! நுணங்கியகேள்வியும் வணங்கியவாயுமுடையராய்ச் சொற்பிரபஞ்சமே வடிவுகொண்டு படியில்வந்தனைய செழுந்தமிழ்வள்ளலாகிய இப்புலவர்பெருமானைப் போலக் கற்பவருளங்கொள்ளுமாறு கற்பகமென்னச் சொற்பொருளெளிக்

கும் தேசிகோத்தமர்கள் யார்கொலோ என்று மாணவரெல்லாம் கவலாநிற்கின்றனரே! நஞ் செந்தமிழணங்கின் செய்தவப்பெற்றியு மின்னதாயிற்றே!

இப்புலவர்திலகர், யாழ்ப்பாணத்து. உடுவிற்பதியில்வசித்த வேளாண்குலத்தினராகிய சந்திரசேகரம்பிலே முத்துக்குமாரகவிராயருக்குப் பௌத்திரராய்ச் சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்த அம்பல வாணபிள்ளை என்பவருக்கு அருந்தவப்புதல்வராய்ச் சுன்னகத்திற் பிறந்து, நல்லொழுக்கமும் நுண்மதியும் உடன்வளர வளர்ந்து, முருகேசபண்டிதரிடம் தமிழும், நாகநாதபண்டிதரிடம் ஸம்ஸ்கிருதமும் கற்று வல்லராகி, மாணவர்பலர்க்கு இலக்கண இலக்கியங்களையும் பிற நூல்களையும் கற்பித்தலையும், பத்திரிகைகளுக்கு வாதவிடயங்களும் பிறவுமாக அரியவிடயங்கள் எழுதுவதையும், நூலுரைகளைப் புதியனவாக இயற்றுவதையுமே தொழிலாகக்கொண்டு, தமிழ்ப்புலமையிலும், கவிபாடுதலிலும் மிகச்சிறந்தவராய்த் தமிழ்நாட்டுக்குப் பேருபகாரியாய் விளங்கினர். நூலுரைகளைத் தேடி இடைவிடாது கற்றலும் கற்றவாறு ஒழுகுதலும் கைகூடப்பெற்றவர். கல்வி செல்வங் காரணமாக அகங்காரங்கொண்டு பழி பாவங்களைத் தேடுதலும், புகழ் பொருள் காரணமாக ஆடம்பரவேடம்பூண்டு அவமானமடைதலும் அறியாதவர். "தூக்கின்-மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல-வலிதன்றே தாழுந் துலைக்கு" எனவும், "முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே-அழகுக் கழகு செய்வார்" எனவும் வரும் ஆன்றோர் வாக்குக்களும் ஈண்டு நோக்கற்பாலன. இவரிடம் முறையாக நெடுங்காலங் கற்றோரும் இடையிடையே ஐயங்களை வினவித் தெளிந்தோருமாக உள்ளவர் மிகப் பலராவர். 'பொன்னகருமல்லாது புகலுண்டோ' என்பதுபோலப் புகழ்ந்து, கடிதவாயிலாக ஐயங்களை வினவித் தெளிந்தும், நூலுரைகளைப் பார்வையிடுவித்தும் உதவிபெற்றுக்கொண்டுவந்த வடதேயப்புலவரும் பலராவர். இவ்வாறு கற்றோர்க்கும் மற்றோர்க்கும் உற்றிடத்துதவும் பெற்றிநோக்கி இவரைப் புலவர்சிந்தாமணி எனக் கூறுதல் ஒருஞான்றும் புனைந்துரையாகாது. மாணவர்யார்க்கும் பரோபகாரமாகச் சொற்பொருள்தெளிக்கு நற்குணமாண்பும், ஆற்றலும், முன்னொருகால் யாம் சிறப்புப்பாயிரமாகக் கூறிய பின்வரும் ஆசிரியப்பாவின் அடிகளால் ஒருவாறு புலப்படும். அவ் வடிகள்,

"மங்குல்கண் படுக்கும் பொங்குபூந் தருக்களின்
விண்மணி வெயில்புகாத் தண்மணி நிழற்றிச்
செந்தார்ப் பொலிந்த சிறுபசுங் கிளிகள்
மேவிய காதலிற் பூவைகட் கென்றுஞ்
செந்தமிழ் மொழிகளைச் செவ்விதிற் பயிற்றல்
தம்பயன் கருதாத் தன்மையின் யாஇ
மானவர் தமக்குப் பேணியே நாளுங்
கலியழு தளிக்கு நிலைமையின் வழாஅ
ஆன்றமை புலத்தர்ச் சான்றோர் செயலென
இறம்பூது பயக்கு நறும்பொழி னிடித்த
சுன்னமா நகரின் மன்னுபே ரறிஞன்;
எல்லார்க்கு நன்றும் பணித லவருளுஞ்
செல்வர் தமக்கே செல்வமென் றுரைத்த
பொய்யில் புலவன் பொருளுரைக் கிலக்கியம்
ஆகப் புகலுஞ் சோகமில் பெரியோன்
வடமொழி தென்மொழிக் கடனிலை கண்ட
இத்தலம் புகழும் வித்துவ சிரோமணி
அளியனேன் மனமா மணிநீர்ப் பொய்கையின்
மலர்ந்திடுஞ் செந்தா மரைமல ரடியான்
துங்கமார் குமார சுவாமிப் புலவன்"

என்பனவாம்.

பிள்ளைமைக்காலந்தொட்டுப் பத்திரிகைகளிலும், மாசிக சஞ்சிகைகளிலும் நூன்முகங்களிலும் இவரால் எழுதப்பட்ட வசனவடிவமைந்த விஷயங்கள் செந்தமிழ்நறுந்தேன்பிலிற்றிப் பத்தழகும்பயின்று, விவாதச்செறிவாற் போலிக்கொள்கைகளைச் சண்டமாருதம்போற் சென்று தாக்கித் தலைகுனிவிக்குந் தன்மையன. பிறரைத் தெருட்டுமுகத்தால், பரோபகாரமாக நூலுரைப்பிழைகளை நுண்ணிதினுய்ந்து இவரால் வெளியிடப்பட்ட எதிர்நூல்களும் பல. "போலிநாவல்கள் புரைபட வியற்றிய நூலுரைப் பிழைகளை நுண்ணிதி னுய்ந்தவர்" என இவரைப் புகழ்ந்துகூறினரு முளர். இவராற் பாடப்பட்ட பிரபந்தங்களும், சிறப்புப்பாயிரங்களும், முத்தகச்செய்யுட்களும் எத்தனையோபல. கவிகள் செவ்விய மதுரஞ்சேர்ந்த சீரிய கூரிய நிஞ்சொற்களானமைந்து,

ஒழுகிய ஓசையும் விழுமியபொருளுங் கொண்டுள்ளன. இவர் மொழி பெயர்த்துப்பாடிய மேகதூதக்காரிகை, ஏகவிருத்தபாரதம், இராமோதந்தம், சாணக்கியநீதிவெண்பா "முதலியன நன்றியைக்குழுரைவழி நன்னெடுங்-குன்றிசைப்பதுபோல" அவ்வவ் வடநூற்பொருண்மாண்பையும், செந்தமிழ்ப்பாடற்செவ்வியையும் நன்கு புலப்படுத்துவனவாகும்.

சாணக்கியநீதிவெண்பா என்னும் நூலுக்குச் சிறப்புப்பாயிரமாகயாம்கூறிய கவிகளும் உரிமைபற்றி ஈண்டுக் காட்டப்படுகின்றன.

உலகுபுகழ் வடமொழியி லுயர்சாணக் கியகவிஞ னுரைத்த நீதி,
குலவியநூ லறும்பொருளோப் பத்தழகு நவாசழுங் குதிகொண் டாட,
நிலவுதமிழ் வெண்பாவி லெளனவைமொழி பிதுவென்று நிலத்தோர் கொள்ளப்,
புலவர்புது விருந்துகொளப் பெயர்த்துரைத்தான் யாவ னெனிற் புகலக் கேண்மோ.

மன்னியசெந் தமிழ்மொழியும் வடமொழியு மினிதுணர்ந்தோன்
மாசில் வாய்மை, தன்னிமிகு குணக்குன்று கவிஞர்சிகா மணியாகித்
தலங்குஞ் தோன்றல், பன்னுமெண்போ லியர்பலர்க்குப் பலகலைநூ
லளித்தருளும் பரோப காரி, சங்கீனையெனு நகாளி குமாரசுவா மிப்
பெயர்கொள் சுகுணன் மாதோ.

சிசுபாலன்கதை, கண்ணகிகதை, இதோபதேசம், தமிழ்ப்புலவர்சரித்திரம் என்பனவும் "செந்தமிழ்" ச் சஞ்சிகைகளிலில் பிறபத்திரிகைகளிலும் வரையப்பட்ட அரியவிஷயங்களும் வாக்கியத்தடைவன்மையைக் காட்டும். தண்டியலங்காரப்புத்துரை, யாப்பருங்கலக்காரிகையுரை, அகப்பொருள்விளக்கவுரை, நீதிநெறிவிளக்கப்புத்துரை, இராமாயணஅரும்பதவுரை, இருவம்பிசக்கருப்பொருளுரை முதலியனவும், இலக்கணசந்திரிகை, வினைப்பகுபதவிளக்கம் என்பனவும் உரைவன்மையையும் இலக்கணஇலக்கியவுணர்ச்சியையும் நன்கு காட்டும். செந்தமிழ் வள்ளலும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தாபகருமாகிய, ஸ்ரீமாந். பாண்டித்துரைத்தேவரவர்களும், மாட்சிமைதங்கிய இராஜாஜேஷ்வரசேதுபதி மகாராசர் அவர்களும் நம் புலவரவர்கள்மாட்டுப் பெருமதிப்புடையார்களென்பது, அன்னவர் விசேஷாபிமானம்பெற்றுப் புலவரவர்களால் வெளியிடப்பட்ட நூலுரைகள் காட்டும்.

புலவரவர்கள் அப்பெரியார்மீது பாடிய கவிகளுள்ளும் நான்குகவிகள் இயைபுபற்றி ஈண்டுக் காட்டப்படுகின்றன.

ஸ்ரீமாந். பாண்டித்துரைத்தேவரவர்கள்மீது பாடியன.

திக்குலவும் புகழாளன் பிரபுகுல சிகாமணியாய்ச் சிறந்த சிலன்
அக்கிரகண் ணியன்பொன்னுச் சாமியெனு நபால னருளும் பாலன்
நக்கனடி யவர்பாலன் பேறுளத்தன் வெண்ணீறு நண்ணும் பாலன்
தக்கபொரு ளிலவுகலை விநோதனுபர் சற்சங்க சனனு கூலன்.

பூதேவன் புகலியர்கோன் முதலறிஞர் தமிழ்நூலின் பொருள்க ளுள்ள
மீதேவன் புறமருவிப் பதித்தேவன் தேவனெனும் வெளிறு நீங்கி
நீதேவ னெனக்கொண்டு நிலத்தேவன் பகைகடந்து நெறிநின் றீசன்
மாதேவன் பதத்தேவன் மகிழ்பாண்டித் துரைத்தேவ மன்னன் ருனே.

மாட்சிமைதங்கிய

சேதுபதிமன்னரவர்கள்மீது பாடியன.

சீதை காவல ருதியி னுட்டிய தேவ ராலயம் போற்றிடுங் காவலன்
நீதி காவலன் றொன்னெறி காவலன் நீடி மூன்னவர் செய்தரு மங்களின்
பாது காவலன் பாவலர் காவலன் பழைய வைதிக சைவர்கள் காவலன்
சேது காவலன் செந்தமிழ்க் காவலன் சீர்த்தி ராஜரா சேசர மன்னனே.

ஓதுதமிழ்ப் புலவர்சரித் திரமா மிந்நூல்
உயர்ச்சிபெற வுபகரித்த செல்வச் சீமான்
தாதுமலி தளவமலர் மாலை மார்பன்
சயவீர ராசரா சேசு ரப்போர்ச்
சேதுபதி நரபாலன் பலநூல் கற்றோன்
செய்யதமிழ் வளர்க்குமபி மான சிலன்
மாதுபதி ராமேச னருளால் வேண்டும்
வாங்களெலாம் பெற்றினிது வாழி மாதோ.

புலவரவர்களது சொற்பொருணர்ச்சிவன்மையையும், ஸம்ஸ்கிருத நூலுணர்ச்சியையும், அவர்களால் வெளியிடப்பட்ட இலக்கியச்சொல் லகராதியும், மேலும் புலவரவர்கள்உதவிகொண்டு ஸ்ரீமான். நீதிபதி கு. கதிரைவேற்பிள்ளையவர்களால் தொகுக்கப்பட்டு, மதுரைத்தமிழ்ச் சங்கத்தாரால் அச்சிடப்பட்ட அகராதியும், மொழிபெயர்ப்புநூல்களும் காட்டும். இவர்களால் தமிழுலகம் அடைந்த நன்மையோ அளவிடற்கரி யது. தக்கவாறு அபிமானிப்போருதவியும் பிற உதவிகளும்வாய்க்கப் பெற்றிருக்குமாயின் நம் புலவரவர்கள் எத்தனையோ அரிய பழந்தமிழ் நூல்களெல்லாம் பிழையின்றிப் பரிசோதித்து அச்சிட்டும், புதியன வாய்ப் பலநூல்களை இயற்றியும் இன்னும் விசேஷமாக உலகிற்கு உபகரித் திருப்பார்கள்.

இவர்கள் பாடிய செய்புட்கள்முழுவதையும் ஒருங்குசேர்த்துக் “குமாரசுவாமிப்புலவரவர்கள்பிரபந்தம்” என்னும் பெயரோடு அச்சிட்டு வெளிப்படுத்தினால், அது, இத்தமிழுலகிற் பெரும்பயன்றருதலோடு, புலவரவர்கள் தமிழ்ப்புலமைகாரணமாக அமைக்கப்படுந் தக்க ஞாபகச் சின்னங்களுள் ஒன்றாக நின்று நிலவும் என்பது எமதுகருத்து.

இத்தகைய அருமைபெருமைவாய்ந்த புலவர்பெருந்தகையைத் தமிழுலகம் இழக்கப்பெற்றது நம்மனோர்தவக்குறைவென்றே பின்னும் கூறி இவ்வளவில் முடிக்குதும். இவர் இச்சங்கபுலவருள் ஒருவராதலின், இவர் சிவபதமடைந்தமைகாரணமாக எழுதப்பட்ட இவ்விஷயமும் ‘செந் தமிழ்’க்கு உரியதென்றே கொள்ளுதும்.

இங்ஙனம்,

தென்கோவை, ச. கந்தையபிள்ளை.

——

குமாரசுவாமிப்புலவர்

இவர், யாழ்ப்பாணத்திலுள்ள சுன்னாகமென்னுமூரிலே, வேளாளர் குலத்தவரும் சைவசமயத்தவருமாயிருந்த அம்பலவாணப்பிள்ளை யென் பவருடைய புத்திரர். இவர் பிறந்தகாலம் பிரமாதீசவருடம் தைமீ கஆ-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை. இவர் முத்தகச்செய்யுள் பாடுவதில்முதன்மை கொண்ட முத்துக்குமாரக்கவிராசருக்குப் பௌத்திரர். அவ்வூரவர்களாய் விளங்கிய நாகநாதபண்டிதர், முருகேசபண்டிதர் என்னுமிருவரிடத்தும் முறையே வடமொழிதென்மொழிகளைக் கற்றவர். அவ்விருமொழியினும் பிரமே சிறந்தவித்துவான்களாய்விளங்கிய ரீர்வேலிச் சங்கரபண்டிதர், நல் லூர் ஆறுமுகநாவலர் என்னு மிருவரிடத்துஞ் சிற்சில நூல்கள் கேட்டு முள்ளவர். இவ ரிளமையிலே கூரியமதியும் பாரியவறிவும்பொருந்தி நூல் களை நாடுந்திறமுங் கவிகளைப் பாடுந்திறமுங்கொண்டுள்ளவர். மாட்டார் செய்யும் பாட்டார்நூல்களினு முரைகளினுமுள்ள பிழைகளையும் நுண் மாண்புலங்கொண்டு நுழைந்துகாண்பதினும், கண்டு அப்பிழைகளைக்காட் டிக் கண்டனங்கள்செய்வதினு மதிசமர்த்தர். ஏழாலை யென்னுமூரிலே தாமோதரம்பிள்ளையினுற் றூபிக்கப்பட்ட தமிழ்வித்தியாசாலையினும், வண்ணார்பண்ணையென்னுமூரிலே ஆறுமுகநாவலராற் றூபிக்கப்பட்ட தமிழ்வித்தியாசாலையினும் தலைமைபுபாத்தியாயராகவிருந்து படிப்பித் துப் பலரைப் பண்டிதராக்கினவர். நீதிபதி, கதிரைவேற்பிள்ளையெழுதிய அகராதிக்கு முதலியாக்கினவர். பிறர்செய்த நூலுரைகளைத் தம்மதியாற் சுழுவியுமாக்கினவர். தாமும் புதிய நூலுரைகளைப் பிழையற முன்னோர் நூலுரைகளைத்தழுவியுமாக்கினவர். ஆக்கியநூலுரைகளுள்ளே, சிசுபால சரிதம், இலக்கணசந்திரிகை முதலியன விவ்வது வடமொழியுணர்ச்சி வன்மையை நன்குகாட்டும். விநேப்பகுபதவிளக்கமுதலியன தென்மொழி யிலக்கணவன்மையை நன்குகாட்டும். இராமாவதாரக்குறிப்புரை முதலி யன வடமொழியிலக்கியவன்மையை நன்குகாட்டும். மேகதூதக்காரிகை முதலியன கவியாக்குந் திறமையை நன்கு காட்டும். தமிழ்வாக்கியங்களைச் சிறப்புறத் தொடுக்கும்வன்மையைச் செந்தமிழ்ப்பத்திரிகை நன்குகாட் டும். இவைகாட்டு மிவர்திறமையோ பலவாயினு மவற்றுட் சிலவாயினும் பல்குமென்றஞ்சி ஈண்டுக் காட்டிற்றிலம். அவ்வற்றையெல்லாம் யாம் பின் னிவாகவெழுது மிவர்சரிதத்துட் காட்டுதும். அங்குக் காண்க.

குமாரசுவாமிப்புலவரவர்கள் தேகவியோகக்கவிகள்.

ஏகவிருத்த குமாரசுவாமிப்புலவர் சரிதம்.

திருமருவு யாழ்ப்பாண மேவுசன் மோப்பதிச்
செம்ம லம்பல வானைனுக்
திகழ்மேழி யின்பெருஞ் செல்வர்க்கோர் செல்வனுப்த்
தேர்ந்துவட மொழிதென் மொழி

தருமருவு பொழில்புற்ஞ் சூழுமே மூலையிற்
முமோ தன்றந் திடுக்
தமிழ்ப்பெருங் கழகமூட னுறுமுக நாவலத்
தனிமணிழுன் வண்ணை வைத்த

வுரைமருவு கல்லூரி தனினலா சிரியனு
யுற்றினிது கற்பித் திடா
வோதுபல நூலுரைகள் செய்துதமிழ் நாட்டினுக்
கோர்தீப மென விளங்கி

வரமருவு புதல்வனம் பலவான பிள்ளையொடு
மற்றை முத்துக் குமார
மைந்தனுந் துயர்கொளக் குமாரசாமிப் புலவ
மணிபன்னிண் ணுற்றன னரோ.

வெண்பா.

ஆண்டுநிகழ் தின்மதியி லாயதும்ப நன்மதியிற்
பூண்டவிரு பானைந்திற் புந்தியினி—னீண்டகலை
வார்தசமி சுண்ணைக் குமாரசுவா மிப்புலவப்
பேர்மணிசென் மேற்கதிகாட் பேறு.

சங்கப் புலவர் தனிமநிப்புப் பெற்றிருந்தா
னங்கப் புலவ ரதிமதிப்புந்—தங்குவான்
கூடிவன்கொல் விண்ணைக் குமாரசுவா மிப்பெயரோன்
பாடுங் கவிஞர் பதி.

கட்டளைக்கலித்துறை.

வழுவின்றி நூல்பல கற்போர்க் குரைக்க மதியினெடும்
பிழையின்றி நூல்செயச் செய்பாரைக் காட்டப் பெரிதுரைகள்
பழுதின்றி நாட்டக் குமார சுவாமிப் பருமணிபோல்
இழிவின்றி யோங்குந் தமிழ்நா டெவரை யினியெய்துமே.

சுத்திகொ ளாய்தமிழ்ச் சுன்னைக் குமார சுவாமியையாம்
வித்துவ சூடா மணியெனக் கூறிடல் வேண்டுங்கொலோ
சித்திர மாக வயன்மதி தீட்டித் திகழ வைத்த
உத்தம மானபன் னூல்க ளெடுத்தினி தோதுமன்றே.

பெருந்தகு விட்டுக் குமார சுவாமிப் பெருமன்சென்ற
தருந்தமிழ் கற்பவ ராற்றுந் தவக்குறை வோவலதெம்
பருந்தமிழ் நாட்டின் றவக்குறை வோதமிழ்ப் பாவைசெய்த
விருந்தவப் பேற்றின் குறைவோ வெதுவென் றியம்புவமே.

இங்ஙனம்,

சி. கணேசையர்,

புன்னாலைகட்டுவன்.

உ

பிழைதிருத்தம்.

சென்ற தைப்பதிதியில் (தொகுதி-உ. பகுதி கூ-ல்) கஉகூ-ஆம் பக்கத்துக்குப்பின் பக்க எண்கள் உஉச முதல் உகூஉவரை கொடுத் திருப்பது பிழை. அவற்றை கஉச முதல் கூஉ வரையுள்ள எண்க ளாகத் திருத்திக்கொள்ளவேண்டும்.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

புத்தக மதிப்புரை.

1. சாணக்கிய சாகஸம் என்னும் சந்திரகுப்தசரித்திரம் (இரண்டாம்பாகம்):—இது, ஸ்ரீமதி பாலம்மாளால் எழுதப்பட்டது. இதன் முன் வெளிவந்த இதன் முதற்பாகத்திலும் இது பலவிதத்திலும் திருத்தியதாய் அமைந்திருக்கிறது. இதில் அருமைவாய்ந்த நீதிநூன் முடிபுகளுக்கு நிதர்சனமாகக் காட்டக்கூடிய பலசரிதங்கள் அடங்கியுள்ளன. வாக்கியங்கள், படிப்பவர் விருப்புறுமாறு தெளிவும் இனிமையும் செவ்வியநடையும் இயைந்தன. சந்தர்ப்பானுகுணமான ஒழுக்கவழக்கங்களும் உலகியலும் அறியக்கிடந்தன இன்னோன்னபுத்தகங்கள் மிகுதியாய் இல்லாமையால் ஆங்கிலகலாசாலைமாணவர்க்கு அந்நியதேசசரித்திரம் கற்பிக்கப்பட்டுவருகிறது. அக்குறைநீருமாறு பலரும் பலபுத்தகங்களும் எழுதுதற்கு இது வழிகாட்டியாகும். இன்னும் இதன் சிறப்பினைத் திருச்சி கேஷனல்காலேஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் இதற்கெழுதியிருக்கும் முகவுரையால் அறியலாம். இதன்விலை ரூபா 1-8-0. வேண்டுவோர் ஐயரவர்களுக்கு எழுதிப்பெறலாம்.

---

2. தூதகடோற்கசம்:— வடமொழியிற் பழமைவாய்ந்த மஹாகவியான 'பாஸன்' என்பவரால் நாடகரூபமாகச் செய்யப்பட்டிருந்த இது, சென்னை ராஜாங்கக் கையெழுத்துப்புத்தகசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் கோ. சேஷாத்திரி ஐயரவர்களால், தமிழில் மொழிபெயர்த்துதவப்பெற்றிருக்கிறது. வசனநடை படிப்பதற்கு விருப்பமுடைய்தாயும், தெளிவாயும் எழுதப்பட்டிருப்பதோடு இடையிடையே பொருத்தமான செய்யுள்களும் சேர்க்கப்பட்டுள்ளன இப்புத்தகம், நடுத்தாக்கலாசாலை மாணவர்க்கு உபபாடமாக வைக்கத்தக்கது. இதன்விலை அணு ஐந்து. வேண்டுவோர் ஆசிரியர்க் கெழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

"எண்ணெழுத்திகழேல்."

வேதசாஸ்திரத்தின் உட்பொருளையே தமிழ்நீதிநூல்கள் தொகுத்தும் விரித்தும் பலவாறு கூறியுள்ளன. அவைகளைக் கற்றோரும் மற்றோரும் எளிதில் உணர்ந்துய்யும்வண்ணம் ஔவையார், கருணைகூர்ந்து பழமொழிபோன்ற சிறுசொற்றொடரால் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்ற நூல்களில் வேதக்கட்டளைகளை வெளியிட்டிருக்கிறார். இந்த முதலவாக்கியங்கள்,

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்"

என்று அவர் புகழ்ந்துள்ள குறட்செய்யுளிற் குறுகியதாய் இருத்தலின், இவ்வாக்கியங்களுக்குப் பொருள்கூறுவோர் அவரவர்கள்மனோதர்மத்துக்கும் ஒழுக்கத்துக்கும் பழக்கத்திற்கும் தக்கவாறு தங்கருத்தை வெளியிட்டனர்போலும். உதாரணமாக,

"எண்ணெழுத்திகழேல்" என்பதற்கு, எண்—கணிதநூலையும், எழுத்து—இலக்கணநூலையும், இகழேல்—நீ தூஷிக்காதே. அதாவது கணிதநூலையும், இலக்கணநூலையும், நீ நிந்திக்கலாகாது, என்று சில உரையாசிரியர் உரை கூறியுள்ளார்கள். சாதாரணமாய்க் கற்கும் இளைஞர்கள்பலருக்குக் கணிதமும் இலக்கணமும், காவியமும் கதையும்போல் இனிப்பாயிராமல், விளக்கெண்ணெய்குடிப்பதுபோல் மிக அருவருப்பாயிருப்பதை உபாத்தியாயர் அறிந்ததுபற்றிச் சப்தசாஸ்திரமும் சோதிடசாஸ்திரமும் மக்கள்வாழ்க்கைக்கு அவசியம் கற்கத்தக்கன; இகழற்பாலனவன்று என்று சொல்லவந்ததாம்.

பின்னும், மெய்ப்பொருளையுணர்ந்து வீடுபெறவேண்டின், "தர்க்கோ அப்ரதிஷ்டः" என்றதற்கிணங்க இந்நூல்களைக் கற்றல் ஞானத்துக்கு இடையூறென்று எண்ணி,

"சத்தமுஞ் சோதிடமு மென்றுங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையர் ரில்"

என்று நாலடியாரிற்கூறியுள்ளதை மறுக்கவேண்டி. ஔவையார் இங்ஙனம் அவைகளை இகழேல் என்றுசொன்னதும் அமையும்.

ஆயினும், இது சிறப்பன்று. ஆசிரியர் கருத்தை ஆசிரியரே கூறுவது சரியான கூற்றன்றி நமது யுக்திக்குத் தக்கவாறு காரணங் கூறுதல் முறையன்று. பின்னே அவர் கருத்து எங்கு தெரிவித் திருக்கிறாரெனின், அவரியற்றிய கொன்றைவேந்தனில் "எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்" என்றார். "கண்ணிற் சிறந்தவுறுப் பில்லை" ஒரு மனிதனுக்கு அவயவங்கள் பல விருப்பினும், கண்ணின்றி இவ்வுலகத்தில் அவன் எக்காரமமும் தானாகவே செய்யக்கூடாமையின், கண் எவ்விதம் இகழற்பாலதன்றோ, அவ்விதமே இம்மை மறுமைப் பயன்களை அடைவதற்கும், எண்ணும் எழுத்தும் வழிகாட்டும் இரண்டு கண்கள் என்றறியத் தக்கன.

இக்கருத்தையே, திருக்குறளாசிரியரும், கல்வி என்னும் அதி காரத்தில்,

"என்னென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு" என்றும்,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்றும் விரித்துரைத்திருக்கிறார். கற்றோரே கண்ணுடையராவர். எண் ணும் எழுத்துமான கல்வியே அக்கண்கள். அவற்றை நிந்திக்கலாகாது; அவை கற்கவேண்டுவன. கல்வியிலரேல், ஊனக்கண்ணுடையராவர்; உளரேல் ஞானக்கண் பெற்றவராவர்.

இவ்வாறு எண்ணும் எழுத்தும் என்பதற்குக் "கணிதமும் இலக் கணமும்" என்றும், அதாவது, "சத்தமும் சோதிடமும்" என்றும் வெகுவாய்த் தொன்றுதொட்டுச் சிறுவர்க்குப் பொருள்கூறுவதை நாம் அறிவோம். ஆயினும், என்ன ஆதாரம் கொண்டு இங்ஙனம் பொருள் சொல்லப்படுகிறதென்று நமக்கு விளங்கவில்லை. எழுத்தென்பது இலக் கணம் என்று எப்படிப் பொருள்படும். ஆன்றோர் நூலில் அங்ஙனம் வழங்கப்பட்டதாக நமக்குத் தெரியவில்லையே.

பின்னே எண்ணுமெழுத்தும் என்பதன்பொருள்தான் என்னவெ னின், எண்ணும்–அங்கணிதமும், எழுத்தும்–பீஜகணிதமும், கண்

னைனந்தகும்–இரண்டு கண்களென்று சொல்ல வற்கும். அதாவது கணிதம் இருவகைத்து. அவை இரண்டும் கண்போன்றன. அந்நூல் கள் கற்கவேண்டுவனவே. எண் என்பது கணிதத்தைச் சாதாரணமாய்க் குறிக்குமாயினும், எழுத்து அங்ஙனம் கணிதத்தைக் குறிக்குமா என்று வினவின், அங்ககணிதத்தில் எண்மானங்களையும், பீஜகணிதத்தில் அவைகளுக்குப் பதிலாய் எழுத்துக்களையும் வழங்கிவருதலிக் கணி தம் பயின்றோர் அறிவர்.

இனி, ஸித்தாந்தசிரோமணிக்ரந்தகர்த்தாவும்,

விவியமனரிதரூத்தவ்யக்தவ்யத்தம் ॥

என்று கோளாத்யாயத்தில், கணிதம்–வ்யக்தம், அவ்யக்த மென் றிரு வகைப்படுமென்றார்.

மேலும், தமிழ்த்திவாகரத்திலும், சூடாமணிநிகண்டிலும், 'எண்ணு மெழுத்தும்–கணக்கெனப்படுமே' என்றும், "கற்றறி யெழுத்துமெண் ணும்—கணக்கெனப்படுமே" என்றும் கூறப்பட்டுள்ளன.

எழுதப்படுவது எழுத்தாயின் அதை இலக்கணந்தான் என்றும், ரேகை, வரைதல் முதலாயின வல்லவென்றும் எப்படித் தணியக்கூடும். ஆகலின் எழுத்தென்பதற்கு இலக்கணநூல் என்று பொருள்கொள்ளுவ தற்கு யாதொரு ஆதாரமுமில்லை. அது சிறப்பன்று என்று பின்னும் காட்டுவாம்.

கணிதம் என்பதற்குச் சோதிட சாஸ்திரம் என்று பொருள்கொளல் மாண்பே. எனெனின் அச்சோதிடம் வேதத்தின் முக்ய அங்கமாகும். அது "வேதசக்ஷுஸ்" என்று வழங்கப்பட்டுவருகிறது. கணிதம் அதற்கு இன்றியமையாதது.

சூர்யஸித்தாந்தத்திலும்,

மனிதமஹரிதாதெவஜ்யோதிஷாம்ஹயாதம் ।

என்று சோதிடமும் கணிதம் பலிதம் என்று இருவகைப்படுமென்று கூறியிருக்கிறது. இச்சோதிடம் வேதத்திற்குக் கண்கள்போன்ற அங்க மென, ஸித்தாந்தசிரோமணிக்காரரும், கணிதாத்யாயத்திற் பின்வரு மாறு வரைந்திருக்கிறார்.

வெஷாஷ்ஷாவஷ்ஜஷுகஉஷுவ்ஷுதாயஜஷுஸ்
வ்ஷொதாஷ்ஷ்ஷுதஷுகாஷுஷுரஷுயெஸா ।

ஸாஷ்ஷுஷுஷுஷுகாஷுவ்வொயொயதஷ்ஷுஸாசஸ.
வெஷாஸகஷுஷஜ்ஜுளதிஷஷொஷுதஷுஉஷுஸாசஸ ॥

ஸஷு ஸாஷ்ஷுஷ ஊவ்ஷ ஜ்ஜுளதிஷ்ஷ வக்ஷஷுஷீ
ஷ்ஷொதுஷுஷுதஷ நீஸஷுதஷ வகஷுஷ்ஷி கஷ்ஷுளா ।

யாதஷுஸீக்ஷுஷாவஷு வெஷவ்ஷு வா நாஷிகா
வாஷவஷுஷுயம வஷுக்ஷுஷ்ஷ்ஷுவ்வுஷுயெஃ ॥

வெஷவக்ஷுஷ் கிஷ்ஷ்ஷுஷ்ஷுஷ்ஷுதஷ்ஜ்ஜுஷ்ஷுதிஷ்ஷ
ஊவ்வுதாவாஸஉயெஷு தெஷ்ஷாவுதெ ।

ஷுஷுயஷுதொஷீதஷ்ஷ்ஷுஷ் கணஷுஷுகாஷாஷிஷி
ஸுக்ஷுஷுஷாஸ்ஷ்ஷுஷ்ஷ்ஷுஷ்ஷுதகஸ்ஷுஷ்ஷுகஷுஸ் ॥

தஷுஷாஷிஷ்ஷ்ஷுஜஷுஷுயஷுயநீயஷுஷ்ஷுதஸ
வஷுணஷுஸஷுஷுவஷு ஷுவஸஷுவதஸஷுவ ।

யொஜ்ஜுளதிஷ்ஷ வெதி நஸஷுஷ்ஷ வஷுக்
ஷஉஷுயஷுகாஷாஷு ஷுஷுதெ யஸஷுஷ ॥

இது நிற்க, எண்ணும் எழுத்தும் கண்கள் என்றதனால், எண் ஒரு கண்ணும், எழுத்தொருகண்ணுமாக இரண்டும் ஓர் உறுப்பாயிருக்க வேண்டுதல் இயல்பேயன்றி ஒன்று கண்ணுயும், மற்றது வாயாயுமிருத்தல் கூடுமோ ? கணிதநூலும் இலக்கணநூலும் ஒன்றுக்கொன்று யாதொரு சாஸ்திர சம்பந்தமுமில்லாமலிருக்க, இரண்டும் சஜாதீயமான கண்களாக எப்படியாகும். இரண்டுகண்களுக்கும் பார்சுவப்பார்வையேயொழிய, முழுப்பார்வையும் இரண்டானுமேயமையும்.

"ஓதுவது ஒழியேல்" என்று, சுருதியை எப்போதும் அத்யயநம் செய்யக்கடவாய் என்று நித்யகர்மமாகச் சொல்லப்போருமுன், அவ்வேதவிதிப்படிசெய்யும் யஜ்ஞகர்மாக்களுச் சோதிடசாஸ்திரமுறையே காலமறிந்து செய்யவேண்டுமாதலால், வேதக் கண்களான அந்தக் கணித சாஸ்திரத்தை நீ இகழக்கூடாது. அப்யஸிக்கவேவேண்டுமென்று வற்

புறுத்தும் வாக்யமென்று பொருளுரைத்தல்தான் எவ்விதத்திலும் ஏற்கும்.

மேற்கூறிய பொருளினும் சிறந்தபொருள்கொள்ளலும் பொருந்தும். தனக்கு வேறாயிருக்கும் பொருள்களை அறியுங்கருவிகளிற் கண்ணை விடச் சிறந்ததொன்றில்லை. சாமான்யமாய் ஜனங்கள் ப்ரத்யக்ஷத்தையே முக்யப்ரமாணமாகக் கொள்கின்றனர். சார்வாகர்களுக்கும் அதுவே ப்ரமாணம்; வேறிலது. ஆனால் மெய்ப்பொருளான கடவுளை அறியவும், ஜீவனும் ஈசுவரனும் ஒன்றென்று தெளியவும், ப்ரத்யக்ஷப் பிரமாணம் போதாதாகலின், அந்த ஞானத்தைக் கண்கள்போன்ற மற்றச் சூக்ஷ்ம ப்ரமாணத்தால்தான் அறியவேண்டும். அவை எண்ணும் எழுத்துமேயாம். அதாவது சுருதியும் ஸ்மிருதியுமாம். பிரமத்தை அறிதலே அறிவாம், அதை அறியக்காட்டும் கருவிகளே ஞானக்கண்களாகும். இதற்கு, "சுருதி மறை சாகை–எழுதாக்கேள்வி" என சுருதியை எழுதாக் கேள்வியென்று கூறியிருத்தலின் அது எழுதப்படாது, சப்தரூபமாய்ச் சித்தத்தினுல் நினைக்கப்படுவதினுல், என் என்றும், அங்ஙனமின்றி எழுத்து ரூபங்கொண்டு ரிஷிகளால் வெளியிடப்பட்டிருக்கின்றமையால், அந்த ஸ்மிருதியை எழுத்து என்றும் பொருள்கொள்ளுதலும் சிறப்பாகும்

ஸவ்ம்தூ வஃவெஷ்யூஃம் நிவிமும் ஜூஹுவஃஷூஷா
ஸூதிஷ்டாஃனூதொ விஷாநு ஷ்யஷெபு நிவிஷ்டதவெ।
ஸூதிஷ்டூதூஷிதம் யஃபுஃநூதிஷ்டநுஷி ஶாநவஃ
ஊஹஸ்தீபுவாவ்ஹாதி வ்ரெதுவா நூத்தம் வஃவம் ॥

என்று மந்த்ரமகர்ஷியும் வேதத்தையும் ஸ்மிருதியையும் ஞானக்கண்களாகக் கூறியிருப்பதும் காண்க.

டி. வி. சாமிநாத ஐயர்,
திருசிரபுரம்.

சிருங்கேரிமடம்.

(குறிப்பு:—அடியிற்கண்ட கடிதங்கள் 18-ஆம் நூற்றாண்டினிறுதியில் எழுதப்பட்டவை. அவற்றில் நமது தேசசரித்திர புருஷர்களின் அன்யோன்யபாவனைகளும் சரித்திர ஆராய்ச்சிக்குதவியான விஷயங்களும் அடங்கியிருப்பதால் அவை இங்ஙனம் எழுதி வெளியிடப்பட்டன. R. S. N.)

கடிதம் I.

மைசூர் ராஜ்யாதிபதி திப்புசுல்தான் அவர்கள்

ஸ்ரீமத் பரமஹம்ச.....ஜகத்குரு சிருங்கேரி ஸ்ரீ சச்சிதானந்த பாரதிஸ்வாமிகள் அவர்களுக்கு.

மர்யாதையுடன் கேட்டுக்கொண்டபிரகாரம், ப்ரிஞ்சாரிமுதலான கொள்ளைக்காரர் உபத்ரவம்செய்யாமற் காக்கும்பொருட்டு, கொப்பம் தாலூகா அமுல்தாருக்கு உத்தரவுசெய்யப்பட்டிருக்கிறது. அதனுடன், மடத்தின்பந்தோபஸ்துக்காக ஒரு சிப்பாய்ப்பட்டாளமும் அனுப்பப்பட்டிருக்கிறது.

கடிதம் II.

ஹிஜரா 1219ஆவ=(இங் 1791)

மார்க்க சீர்ஷ சுக்லபக்ஷ ஷஷ்டி.

மர்யாதையுடன், ராஜ்யப்பகைவர் நாசத்திற்காக, எங்கும் ஜபங்கள் நடத்தவேண்டுமென்றும், அதனால் எற்படும் செலவுகளுக்கு ஜாப்தா அனுப்பவேண்டுமென்றும் பிரார்த்திக்கப்படுகிறது.

கடிதம் III.

ஹிஜரா 1219=(இங் 1791)

மர்யாதையுடன், கேட்டுக்கொண்டப்பிரகாரம், வைதிக கர்மாக்கள் நடத்துவதில், யாரும் விக்னம் செய்யாமல் பந்தோபஸ்துசெய்யும்படி, உத்தரவளித்திருக்கிறோம் என்பது இதன்மூலமாயறிவிக்கலாயிற்று.

கடிதம் IV.

ஹிஜரா 1219 (இங் 1791)

ஸர்தார், ஸபத் மஹமத் அவர்களுக்கு,

சிருங்கேரி ஸ்வாமிகள் ஸமுத்திரஸ்நாநத்துக்குச் செல்லுகிறார்கள். அங்கங்கே ஜாகைகள் சௌகரியப்படித்திக்கொடுக்கவேண்டும். போய்த் திரும்பிவந்துசேரும்வரை, அவர்களுக்கு 20 பேர் ஸஹாயத்துக்காக அனுப்பவேண்டும். தமது சிஷ்யரில் தர்மப்பிரஷ்டாவோர்களை, ஸ்வாமிகளே விசாரணைசெய்துகொள்ள உரிமையிருக்கவேண்டும்.

கடிதம் V.

ஹிஜரா 1219 (இங் 1791)

மைசூர்ராஜ்யத்திலுள்ள கிலாதார்களுக்கும் அமுல்தார்களுக்கும்

சிருங்கேரிமடசம்பந்தமான காரியமாய்ப்போய்வரும் ஜனங்களை ஹிம்ஸிக்கவேகூடாது.

கடிதம் VI.

ஹிஜரா 1219=(இங் 1791)

மைசூர்ராஜ்யத்திலுள்ள கிலாதார்களுக்கும் அமுல்தார்களுக்கும்,

சிருங்கேரிஸ்வாமிகள் யாத்திரைபய்வருகிறார்கள். நீங்களெல்லோரும் ஸர்வஜாக்ரதையாயிருந்து, வேண்டிய மரியாதைகள்செய்து, தலைநகர்வரும்வரை அவர்களுக்கு வழியில், வேண்டியசௌகரியங்கள் செய்துகொடுக்கவேண்டும்.

கடிதம் VII.

ஹிஜரா 1220=(இங் 1792)

ஹைதராபாத் நிஜாம் அவர்களின் ப்ரதானமந்திரி சந்தலால் அவர்கள்

ஸ்ரீமத் பரமஹம்ஸ.....ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு நரஸிம்மபாரதி ஸ்வாமிகளுக்கு,

மிக்க மரியாதையுடன், ஸ்வாமிகள்செய்யும் கங்காமஹாயாத்ரையில் இந்த ராஜ்யத்தில் விஜயம்செய்வதாய் எண்ணங்கொண்டது, தாஸனுக்கு விசேஷ சந்தோஷமும், இத்தேசத்திற்குப் பெரும் பாக்கியமும் விளைவிக்கத்தக்கதாயிருக்கிறது,

இத்தேசத்திலுள்ள கர்மஸந்யாஸிகளும், ஞானஸந்யாஸிகளும், அவதூதர்களும், பதினெண்ஜாதியாரும், வகுப்பினரும், தம் தம் கர்மானுஷ்டானங்களை முறைதவறாது செய்துவருகிறார்களா வென்று விசாரணை செய்யவும், அவரவர் தர்மத்தில் அவரவரை நிலைபெறச்செய்யவும், ஸ்வாமிகளே பரமாதிகாரிகள்.

மதவிஷயத்தில் ஸந்நிதான ஆணையை ஒருவரும் மீறக்கூடாதென்று இந்த ஸமஸ்தாநாதிபதியான நிஜாம் அவர்களும், கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை இதன்மூலமாய் ஸந்நிதானத்துக்கு வணக்கமாய் அறிக்கைசெய்துகொண்டேன்.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.,
மதுரை.

ஒ

குறும்பூர்ச்சாசநங்கள்.

முகவுரை.

குறும்பூர், திருநெல்வேலிஜில்லாவில் ஆழ்வார்திருநகரிக்கும் திருச்செந்தூருக்கும், மத்தியி லுள்ளது. ஆதியில், 'குறும்பில்' என்னும் பெயரையுடையது. குடநாட்டுக்குட்பட்டது. இறையனாரகப்பொருட் கோவைநாயகன் நெடுமாறன் சேரனெடு ?யுத்தம்செய்த களங்களில் ஒன்று. பாண்டியநாட்டை, ராஜராஜனுக்குமுன் பராந்தகன்முதலியோர் ஜயித்திருந்தாலும், அந்நாட்டுக்கு முதன்முதல் தன்பெயரிட்டவன் ராஜராஜனே. இவன் இக்குறும்பூருள்ள குடநாட்டுக்கும் தன்பெயரையே கொடுத்தான். இவன்மகன் ராஜேந்திரன் பாண்டியநாட்டிற் சிலஊர்களுக்குப் புழம்பெயர்நீக்கித் தன்பெயர் வழங்கினன். அவைகளில் இந்தக் குறும்பிலான குறும்பூரு மொன்று. இதற்கு அரிந்தவன்கல்லூர் என்று ஒருபெயரு முண்டு (இதில் 7-வது சாசனம் பார்க்க). அரிந்தவன் என்பது ராஜேந்திரனுடையவிருதுப்பெயர்களி லொன்றுபோலும். ஆனல் இவ்வூருக்கு இப்போது பழம்பெயரே நிலைத்திருக்கிறது. இவ்வூரையடுத்துக் கிழ்புறம் 'கல்லூர்' என்று ஓரூர் இருக்கிறது. அது 'ராசேந்திரகல்லூர்' என்பதன் கடைக்குறைபோலும். அவ்வூரும் இவ்

ஊரும் அக்காலத்து ஒரே ஊராயிருந்தது. மேற்கேயுள்ள குறும்பூர்ப் பெருமாள்கோவில், ராசேந்திரசிங்கவளநாட்டுத் திருமேற்கோயிலென்று வழங்கப் படுவதை இச்சாசனங்களிற் காண்க. இவ்விராசேந்திரன் பெயரால் இச் சில்லமன்னர்கோயிலில் ராஜஸிம்மன் என்னும் ஓர் சோன் 'ராஜேந்திர சோழவிண்ணகர்' என்று ஓர் விஷ்ணுகிருகம் எடுப்பித்தான். இக் குறும்பூரையடுத்துத் தெற்கேயுள்ள அங்கமங்கலந்தான் அக்காலத்துக் கங்கமங்கலமென்றே [உடைய] ங (?) ங்கைமங்கலமென்றே வழங்கப்பட் டிருக்கவேண்டும். குறும்பூரைபடுத்த சிவந்தலைப் பெருமாள்கோயில் திருநாராயணசதுர்வேதிமங்கலத்துள்ளது.

இதிற்காணப்படும் 7-ம் நிம்பர் சாசனமே முதலிற் பொறிக்கப்பட் டிருக்கவேண்டும். அதிலும் மற்றவைகளிலும் இவ்வூர்ப்பெருமாள்கோயில் 'சுந்தரசோழபாண்டியவிண்ணகர்' என்று வழங்கப்பட்டுள்ளது. சுந்தர சோழபாண்டியனுற் கட்டப்பட்டதால் அதற்கு அப்பெயர் வந்தது. 'சோழபாண்டியன்' என்ற பட்டத்தைவகித்த சோழஅரசர்கள் மூவ ருண்டு. சோழவரசர்கள் தங்கள் புதிதாய்வென்ற பாண்டியநாட்டை ஆளப் பிரதிநிதிகளை நியமித்தார்கள். கி. பி. 1011 முதல் 1041 வரை ஆண்ட ராஜேந்திரசோழன் தன்மகனைச் 'சோழபாண்டியன்' என்னும் பட்டப்பெயருடன் பிரதிநிதிபாக்கினன். 1052 முதல் 1064 வரை ஆண்ட ப. ராஜேந்திரதேவன், தன்தம்பி மும்முடிச்சோழனை அப் பட் டப்பெயருடன் பிரதிநிதியாக்கினன். 1062 முதல் 1070 வரை ஆண்ட வீராஜேந்திரன் தன்மகன் கங்கைகொண்டசோழனை அப் பட்டப்பெய ருடன் பிரதிநிதியாக்கினன். இவர்களில் முதலிற்கூறப்பட்ட பிரதிநிதி தான் இக்கோவிலைக்கட்டித் தன்பெயரிலிவித்தான். (மா—ன், விக்ரம சோழபாண்டியன் என்ற ஒரு பிரதிநிதியும் முண்டு.)

இந்த 7-ம் நிர். சாசனத்தைப்போன்று 'சடையபன்மரான உடை யார் ஸ்ரீ சோழபாண்டியதேவற்கு' என்று ஆரம்பித்துள்ள சாசனங்கள், சுசீந்திரம், சிவலப்பேரி முதலான இடங்களிலுமுண்டு. புதுக்கோட்டைப் பெருங்குறை, மதுரை ஆனைமலை, திருவாங்கூர்ச் சோழபுரம், திருநெல் வேலி ஆதனூர், அம்பாசமுத்திரம், வீரசிகாமணி, கழுகுமலை, கங்கை கொண்டான், சோன்மாதேவி முதலான இடங்களிலும் இவனுடைய சாசனம் காணப்படுவதால் தென்சமுத்திரமுதற் புதுக்கோட்டைவரை

யுள்ளதேசம் இவன்கைவசம் இருந்திருக்கக்கூடும். இவன்தகப்பன் பெயரால் பிரமதேசம் மன்னர்கோயிலிற் கட்டப்பட்ட 'ராஜேந்திரசோழ விண்ணகர்' எம்பெருமானுக்கு ராஜராஜசதுர்வேதிமங்கலத்தார் இவனுடைய ஆட்சியின் 13-ம் வருடத்திற் சிலநிலம் விற்றுக்கொடுத்தார்கள் என்றும், இவன் ராஜேந்திரசோழன்மகனென்றும் மன்னர்கோயிற் சாசனங்கள் கூறுகின்றன. இதிலுள்ள 7-ம் நிர். சாசனத்தாலும் இவன் ராஜேந்திரசோழன்மகனென்று தெரிகிறது. இவன் முதலாம் ராஜேந்திரசோழன்மகனல்லனென்று சந்தேகம் ஏற்பட்டால் அக்கால எழுத்துக்களை ஒப்பிட்டுப்பார்த்து நிச்சயிக்கவேண்டும். இருந்தாலும் இந்தச் சோழஸ்தானாதிபதிகள் 'சடாவர்மன்'–'மாறவர்மன்' என்கிற பாண்டியர்களுக்கேயுரிய சிறப்புப்பெயர்களை என்ன உரிமைபற்றி வஹித்தார்கள் என்பது அறியப்படவேண்டும். பெருந்துறை, திருக்கோளூர் இவ்விரண்டிலும் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் சிவபெருமான்கள் சுந்தரசோழ பாண்டீச்சராமுடையார் என்று அழைக்கப்படுகின்றனர்.

மன்னர்கோவிலிற் பொறித்துள்ள இவனுடைய 13-ம் வருஷத்திய சாசனம் கி. பி. 1033–34-ம் வருடத்தியதாகக் கணக்கிடப்படுகிறபடியால், இதின் 7-ம் நிர். சாசனம் கி. பி. 1044–45ம் வருடத்தியதாகக் கொள்ளப்படவேண்டும். மதராஸ் சாசனரிப்போர்ட்டு 94-ம் வருஷத்து 18-ம் நிம்பரிலும் 09-ம் வருஷத்து 438-ம் நிம்பரிலும் இவன் தகப்பன் இறந்தவருடமாகிய, இவன் ஆட்சி 23-வது வருடத்தில்தான், இவனுடைய கடைசிச்சாசனம் காணப்படுகிறது என்று கண்டிருந்தபோதிலும் இதில் 7-ம் சாசனம் இவனுடைய 24-ம் வருஷ சாசனமானபடியால் இவன் தகப்பன் இறக்கபிறகும் இவன் பிரதிநிதி என்ற நிலைமையிலேயே ஆண்டிருக்கிறானென்றுகொள்ளுதல் தவறாகாது.

சாசனம் I.

(கர்ப்பக்கிருஹத்தின் தென்புறம் மேலிருக்கு மேழே இரண்டாவது பட்டியல் மேற்கோரத்திலிருக்கு)

விஷயம்:–குறும்பூர்ச்சோலைத் திருநீலகண்டன், லேப்பிரான் கிரமனிடம் ஒரு நிலம் விலைக்கு வாங்கி இவ்வூர்ப்பெருமாளுக்கு ஒரு வேளான்பெயராற் கட்டளை ஏற்படுத்தி ஸபாரியிடம் அந்த நிலத்தை ஒப்புவித்தது.

(1) ஸ்வஸ்ஸ்ரீ

புகழ்மாதவிளங்கஜயமாதவீரும்ப
நிலமகள்நிலவமலர்மகள்புணர
உரிமையிற்சிறந்தமணிமுடிசூடி
மீனவன்நீலகெடவில்லவர்குலதர
ஏனமன்னவரிரியலுற்றிழிதர
திக்கனைத்துந்தன்சக்கரநடாத்தி

விஜயராஜேந்திரதேவம்பண்ணி வீரவிஸ்வேஸ்வரத்து அவனிமுழுதுடையா ளோடும் வீற்றிருந்தருளிய கோ ராஜகேஸரிபன்மரான சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவர்க்கு யாண்டு சயச நாற்பத்தாலாவது ராஜராஜபாண்டிநாட்டு உத்தமசோழவளநாட்டுக்குட் – – – – ப்ரஹ்மதேயம் சிவந்தலை + கங்கமங்கலத்து ஸ்ரீமஹாவைஷ்ணவோம் இந்நாட்டுக்குறும்பிலூரான ராஜே (2) ந்த்ரநல்லூர் திருமேற்கோயில் ஸ்ரீ சுந்தரசோழபாண்டியவிண்ணகர் வீற்றிருந்தருளிய எம்பெருமானுக்கு இவ்வூர் சோலை திருநீலகண்டன் ராஜராஜகுடாநாட்டு – – – ந்தி வேளான் திருமடைப்பள்ளிப்புறமாக எங்கள் பக்கல் கொண்டு குடுத்த பூமியாவது இவ்வூர் ஸ்ரீ ஸ்ரீ ராஜ.....ரமன் நீலப்பிரான்பக்கல் வீலை கொண்டு உடையகங்கை மங்கலத்து திருநாராயணவயற்கல் தடி ஒன்றுக்கு மேலெல்லை:–சிதேவிவயலுக்கு மேற்கும் தென் எல்லை 'நின்றவாதிப்பிரான்' தேவதேவசன் கொற்றிவயலுக்கு வடக்கும், மேலெல்லை 'பொலிந்துநின்றபிரான்' அமாவாஸிப்புறம் திருநாராயணவயலுக்கு கிழக்கும்வடவெல்லை சுந்தரத்தோழவிளாக்கரைக்கு தெற்கும்; இவ்விசைந்த.

(3) மஹாவிஷ்ணுவோம் இவ்வம்பெருமானுக்கு, இப்படிக்கிவை திருவிரூரரு நீலப்பிரான் எழுத்து. இப்படிக்கிவை ஸ்ரீவை–மாதவன் எழுத்து, இப்படிக்கிவை ஸ்ரீவஸ்ரீவேசன் நின்றவாதிப்பிரான் எழுத்து இப்படிக்கிவை நீலப்பிரான் திருவிக்கிரமன், இப்படிக் கிவை ஸ்ரீமாதவன் சுந்தரத்தோளுடையான் எழுத்து, இப்படிக் கிவை உதயதிவாகரன் மாதவன் எழுத்து, இப்படிக் கிவை நின்ற வாதிப்பிரான் ஸ்ரீவஸ்ரீவேசன் எழுத்து. இவை ஸ்ரீவஸ்ரீவேசன் மாதவன் எழுத்து. இம்மஹாஸனை பணிக்க இக்கலம் எழுதினேன். இவ்வூர் மங்கல்லியன் வேளா ..... ன கருமாணிக்கத்தின் எழுத்து ஸ்ரீவையிஷ்ணவரைக்கு.

குறிப்பு:—உத்தமசோழன் = கண்டராதித்தன்மகன். இக்குலோத்துங்கன் காலத்தும் பாண்டிநாட்டிற் சோழராதிக்கம் முறையில்லையென்பது சோழனுக்குக்கொடுத்துள்ள அடைமொழிகளாற் றெரிகிறது. திருமடை = அமுது, பள்ளிப்புறம் = கோயிலுக்குவிட்டநிலம். தடி=பெரியகயல். (சிறுவயலுக்குக் தண்டு என்று பெயர்) — கிரமன் = கிரமவேதபாராயணம் பண்ணினவன். நின்றவர்திப்பிரான்=ஆழ்வார்திருநகரிப்பெருமான் திருநாமம் (திருவாய்—4-ம் பத்து). தேவதேவேசன்=தேவதேவபிரான் என்பதுபோன்ற பிரபந்தத்திற் பயின்றுள்ள சொற்றொடராக்கம். இங்கு, இவ்விரண்டுபெயரும் ஒருவன் பெயராகவந்தன. பொலிந்துநின்றபிரான் ஆழ்வார்திருநகரிப் பெருமாளுக்குத் திருவாய்மொழிபிற் பயின்றுள்ள பெயர். இங்கு இப்பெயர் எவ்வூர்க்கடவுளைக்குறிப்பதென்று விளங்கவில்லை. அவ்வெம்பெருமானுக்கு அமாவாசைநாள் விசேஷநைவேத்யத்துக்காக விட்டநிலம் அமாவாசைப்புறம். சுந்தரத்தோளுடையான் திருமாலிருஞ்சோலைமலைப்பெருமாளுக்கு 'நாய்ச்சியார்திருமொழி'யிற் பயின்றுள்ள பெயர். இங்கு ஒரு மனிதனைக் குறிக்கிறது. கருமாணிக்கம், பிரபந்தங்களிற் பலதடவையின்றுள்ளபெயர். நீலப்பிரான் என்பது பிரபந்தத்திற் கரியபிரான் என்று பயின்றுளது. இச்சாசனத்தால், சுந்தரத்தோளுடையான், தேவதேவேசன், நின்றவாநிப்பிரான், நீலப்பிரான், கருமாணிக்கம், முதலான பிரபந்தப்பெயர்கள் மக்களுக்கு வழங்கப்பட்டனவென்றுதெரிகிறது. இவர்கள் கூ குலோத்துங்கன்காலத்தில் ஒருரி லிருந்தவர்கள். எங்கள்பக்கல் கொண்டுகுடுத்தபூமி=எங்களிடம்கொண்டுவந்துகொடுத்தபூமி.

சாசனம் II.

தென்புறம் (அர்த்தமண்டபமத்தியில் ஒருகல்லில்மாத்திரம்).

விஷயம்:— குறும்பூர் நக்கண்டான் அவ்வூர்ப் பெருமாளுக்குத் தினம் 4 விளக்கு எரிப்பதற்காகக் கோயிற்கார்யஸ்தாவசம் 25 ஆடு விட்டது.

(1) வுவலிழூ திரு வனசக்கரவத்திகள் ஸ்ரீவல்லவதெவற்கு யாண்டு உயிர ஆவது ஸ்ரீபாண்டிநாட்டு (2) குடநாட்டுக் குறும்பிலான ராஜேந்ரநல்லூர் திருமேற்கோயில் ஸ்ரீசுந்தரசோழபாண்டியவிண்ணகர் ஆழ்வாற்கு சோழமண்டலத்து சோழபாண்டிய சதுர்வேதிமங்கலத்து நக்கன் பிள்ளை ஆண்டான் வைத்த ஸந்தியாதீபம்நாலு சந்திராதித்தவற் செல்வதாகவிட்ட சாவா மூவாப் பேர் ஆடு உயிரு, நித்தம் ஆழாக்குநெய் செல்வதாக இவ்வாழ்வார்கன்மிகள்வசம் விட்டேன் நக்கன்பிள்ளை ஆண்டானேன். இந்தன்மம் ஸ்ரீவயிஷ்ணவ (ர்) ரக்ஷை

குறிப்பு:—வல்லபதேவன்சாசனம் முதலாம்வருடத்ததொன்றைச் சேந் தமிழில் 'திருக்கோளூர்ச் சாசனங்கள்' என்றதலைப்பின்கீழ்ப் பதிப்பித்திருக் கிறேன்.

'ராஜராஜ' என்கிற சோழஅடைமொழிகளில்லாமற் பாண்டிநாட்டு—குட நாட்டு என்றுமாத்திரம் வருவதுகொண்டு வல்லவன்காலத்தில் பாண்டிநாட்டிற் சோழர்ஆதிக்கியம் குறைந்துவிட்டதென் றறியலாம். 'சோழமண்டலத்து' என் பது சோழபாண்டியசதுர்வேதிமங்கலத்து' என்பதற்கு அடைமொழியாயிருந் தால் இச்சோழபாண்டியன் சோழமண்டலத்திலும் தன்பெயரால் அக்ரகாரம் ஏற்படுத்தியிருந்தான் என்பது வெளியாகும். 'ஆண்டான்' என்பதைத்தழுவின தாகவுமாம்.

ஆழ்வார்கள்மிகள், ஆழ்வார்=பெருமாள், கன்மிகள்=தேவகர்மம் செய் பவர்கள்.

நக்கன்—நக்நன்—சிவபெருமானுக்குக் காரணப்பெயர்.

சாசனம் III. (குறை)

(மேலிருந்து கீழே மூன்றுவது பட்டியல்: கர்ப்பக்கிருகமத்தியிலாரம்பம்)

(மெய்க்கீர்த்தி-முதல் சாசனத்தைப்போல்) யாண்டு உலகுவது ராஜராஜபாண்டிநாட்டு உத்தமசோழவளநாட்டுக்குடநாட்டு குறும்பிலான ராஜேந்திரசல்லூராரோம் இவ்வூர் திருமேற்கோயில் ஸ்ரீசுந்தாசோழபாண் டியவிண்ணகர் ஆழ்வார்க்கு

சாசனம் IV.

மேல்புறம் நடப்பட்டியல்

விஷயம்:—பெருமாள் அமாவாசையன்று பருப்புக்கறியமுதுடன் அமுதுசெய்தருளும்படி விட்ட உடையநங்கைநிலம் செழியகோன் ராசேந்திரப்பெருமாள் இறையிலியாகக் கல்வெட்டிக்கொடுத்தது.

1. ஸ்வஸ்திஸ்ரீ.....மிசையுங்குடைநீழற்ற மன்ன ரெல்லாம் வந்திறைஞ்ச.....லிஹாஸைத்து. 2. உலகமுழுதுடையா ளொடும்வீற்றிருந்தருளிய மாமுதல் மதிக்குலம் விளக்கிய———பம்ம ரான திருபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீவல்லவதேவற்கு யாண்டுஆறுவது ஸ்ரீபாண்டிமண்டலத்து—குறும்பிலான ராஜேந்திரசல்லூர்—வீற்றிருந் தருளிய———டியவிண்ணகராழ்வார் அமாவாஸிநாள் அமுதுசெய்தருள திருப்போனகப்படி அரிசி கலனே நாஞழியும் பயற்றமுது நாஞழியும் நாலுவந்தது கறியமுது இருதலாமும் மிளகமுது உழக்கும் சீரக

அமுது—அமுது இருநாழியும் தயிரமுது—(ப) லமும் இலையமுது கட்டு இரண்டு அடைக்காயமுது நாற்பதும் இவையிற்றுக்கு திருப் போகசப்பாணியும் விறகும் உட்பட வேண்டுவனவைக்கு சந்திராதித்தவற் செல்வதாக. இதுக்கு தானமாக நீர்வாத்துக்குடித்த அட-உடையநங்கை வயக்கல் நிலத்துக்கு நான்கெல்லைபாவது : கிள்ளல்லை—பெற்றுள்வயக்க லுக்கு மேற்கும், தெ—கைக்காலுக்கு வடக்கும், மேலெல்லை இவ்வாழ் வார்தேவதானத்துக்கு கிழக்கும், வடவெல்லை கடுங்கோ மங்கலத்தார் காலுக்கும் இவ்வாழ்வார்தேவதானத்துக்குத் தெற்கும், நடுவுபட்ட (?) நிலமும் மேலேக்கின—கினைறும் உட்பட்ட இன்நிலஞ் சந்திராதித்தவற் செல்வதாக இதனுல்வந்தஇறைஎப்பேற்பட்டதும்—தாரும்இயதாக கல் வெட்டிக்குடு(த்)தன். அட்டி அப்பி (?) வித்திருந்தானை ராஜேந்த்ரச் சேழியகோனேன் ஸ்ரீ சுந்தரசோழபரண்டியவிண்ணகர் ஆழ்வார்க்கு இத் தர்மம் ஸ்ரீவைஷ்ணவரகைஷ்.

குறிப்பு:-திருப்போனகம்=திருவமுது, துலாம்=தூபலம், பயற்றமுது, கறியமுது, காயமுது என்று எல்லாவற்றிற்கும் அமுது அமுது என்றுவருவது வைஷ்ணவபரிபாஷையென்று சிலர் நினைப்பர். சைவசாசனங்களிலும் இப் படியேவருவதுகண்டு தமிழ்நடை உபசாரமென்றறிக.

திருப்போனகப்பாலை=பொங்குவதற்கு மண்பாண்டம்

உடையநங்கைவயக்கல்நிலம்—முதல் சாசனத்தில் உடையகங்கைமங்க லம் என்பது உடையநங்கைமங்கலம் என்றிருக்கவேண்டும்போலும்.—(நம்மாழ் வார் தாயாருக்கும் உடையநங்கை யென்று பெயர் என்பர்)-இவ்வூர் அரையன் பெயர் 'உடையநம்பி' என்பது V சாசனத்தால் தெரிகிறது. 'நம்பி' என்பதற் குப் பெண்பால் நங்கை. வயக்கல்நிலம்=வசக்கல்நிலம், பண்படுத்தப்பட்டுக் கொண்டுவரும்நிலம்போலும்

பேற்றன் ஒருபெண்பெயர்; நிலங்களெல்லாம் பெண்பெயராடைமொழி பயின்றுவருதல் காண்க. முதற் சாசனத்தில் தேவிவயல், கொற்றிவயல் என வந்திருப்பதும் காண்க.

கடுங்கோமங்கலம் கடுங்கோ என்பவன்கண்ட ஊர்.

இலையமுது=வெற்றிலை.

(தொடரும்.)

வித்வான் ஆ. மா. சடகோபராமானுஜாசாரியர்,
தலைமைத்தமிழ்ப்பண்டிதர்,
கவர்ண்மேண்டுகாலேஜ், கும்பகோணம்.

யாப்பறிபுலவோர் நீப்பருவிருந்து.

முன்னுரை:—எல்லாப் பொருட்கும் நிலைக்களனும், இருப்பது யாப்பு. அதனியலை உள்ளவாறு விரித்தோதிய நன்னூல்காறிற் சின்னூல்களே தற்காலத்துக் காணக்கிடைக்கின்றன; மலயமாதவனுல் இயற்றப் பெற்ற அகத்தியத்தில் யாப்பிலக்கணம் பரக்க எடுத்துரைக்கப்பட்டது. என்றும், ஆசிரியர் தொல்காப்பியனுர் அப்பாப்பினை ஆய்ந்து சுருக்க மாகச் செய்தனர் என்றும் நச்சினர்க்கினியர் கூறுவர். யாப்பருங்கல விருத்தியாசிரியரோ தொல்காப்பியர் யாப்பியலை விரித்துரைத்தனர் என்றும், பல்காயனுர் அதனை வகுத்துரைத்தனர் என்றும், காக்கைபாடினியர் தொகுத்துரைத்தனர் என்றும் கட்டுரைப்பர்; இவர் கூற்றினை நிலைப் படுத்த ஓர் பழைய செய்புளும் உண்டு. அது,

> "தொல்காப் பியப்புலவர் தோன்ற விரித்துரைத்தார்,
> பல்காய னர்வகுத்துப் பன்னினுர்—நல்யாப்புக்
> கற்றேர் மதிக்கும் கலை (க்) காக்கை பாடினியர்
> சொற்றார்த்தம் நூலுட் டொகுத்து."

[யா-விருத்தி எழுத்தோத்து முதற்சூத்திர-உரை]

என்பது. இத்தகைய யாப்பியலை நன்கறிந்தார். உலகியலை அறிவிக்கும் தொன்னூற்பொருட்குரியலைனை உள்ளவாறு நன்கு மதிப்பிடுவார் என்றும், அது காரணமாகத் தன்னியல் தெரிந்து மயக்கமீப்புற்று நன்னெறிசேர்வர் என்றும் கட்டுரைப்பர் அறிஞர். இதனை "யாப்பறிவார் நீப்புணர்வார்" என்ற முதுமொழியும் பேணுநிற்கும். ஆகவே யாப்பறியும் புலவோர் பெறும் பெரும்பயன் ஏனையர், உறும் பயனிலும் விஞ்சிய தாகும். சொல்லியைபினை உள்ளபடி கண்டு பொருள்தெரிந்து உள்ளுறைதெளிய நுண்ணறிவான் ஆய்ந்து முட்டறுத்துப் பொருண்முடிவு பெறுவோர் யாப்பறிபுலவோரே. தொன்னூற்பண்டசாலையைத் திறந்து இலக்கண இலக்கியப்பண்டங்களைக் கண்டு (எடு) எழுதுவோர் சாலிகை வழு தூசு மாசுகளைப்போக்கி, நுண்ணறிவாய நெய்பெய்தெரியும் யாப்பு என்னும் ஒளிவிளக்கினுல் தூருவியெடுத்து அப்பண்டங்களை ஏற்றபடி மதிப்பிட்டுணர்ந்து மானவர்க்குக் கைம்மாற்று ஆகச் செய்யும் வணிகர்மக்கள் இவரேயாவர்.

இத்தகையினர்க்கு இயன்றவாறு ஒரு விருந்தளிக்கப் பன்னாள் விருப்புண்டெனினும் இடம் பொருள் ஏவல்கள் ஒத்துவரவில்லை. இந் நிலையில் கற்பொழுது ஒருவாறு சீர்மைக்கிடமாயிற்று. பொதுவாக விருந்தளிப்பார் அச்செயலாற் பெறும் நன்மைகள் பல எண்பர். அவற் றுள், கைகண்ட பலன் ஒன்று. அஃதாவது தமக்குரிய மெல்லியல் பினைக்கு நீங்கலாக, இன்புறுதலாம். இதனைப் பேராசிரியரும் ஓரிடத்து மற்றோர்முகமாக எடுத்துக் காட்டியுள்ளார். [தொல்-மெய்ப்பா-24 புரையறந் தெளிதல்-உரை.]

நச்சினார்க்கினியர் உலகில் மேல்லியல் பினைக்கு நீங்கலாகிய வாற்றினைக் கூறுமாறு "எம்மை எத்தன்மையாகக்கருதினுப் எனப் புலந்து பின்னர் ஒருமொழியுங் கூறுதிருப்பெனாயின் அது நீங்கத்" [தலைவன் தன்] "தேரிலே ஆரவாரிப்பக் கொண்டுவந்த விருந்தினரை எதிர்கொள்ளுகையினாலே எந்நாளும் புலவியை மறப்பேன்" [கலி-மருதம்-10-உரை] என்பது.

இவ்வாறே தொன்னூல் நோக்க இயைவதால் ஆகும் ஐயங்காரண மாக தண்ணுணர்வில்லா மெல்லியலார் பினைக்கு ஆகும்பொழுது அதனை விலக்க அகப்பிழம்பாக ஒளிர்வானை நோக்கி முறையீடுசெய்ய அவன் விருந்தினரை எதிர்ப்படுத்த அன்னைசைத் தம்மனைதத்து எற்றிக் கூட்டிக் கொணர்ந்து ஊட்டுவிக்கையினால் அம்மெல்லியல் பினைக்கு நீங்க லாகுமென்றல் துணிபு.

மண்போதுத் தந்தையாம் மன்னுமாதவன் திருமுன்.
காஞ்சிமன்றம் கணிகண்ண நிலயம் (Camp)
ஓர் முறையீடு.
ஆகியாண்டு ஒழுங்கு வழக்கு எண்ணம்-க

(க) குள்ளாலினிய பெருமாள் கலி...முறையிட்டாளி. [Plaintiff.]

(க) செப்பலறந்தருவார் ... வெண்பா
(உ) அகவனம்பியார் ... ஆசிரியம்
(ங) தூங்கிசையாழ்வார் ... வஞ்சி
(ச) உவரியுண்டோர் ... அகத்தியர்
} எதிராளிகள். [Defendants]

முதல்விதி, தலைத்தொகுதி, இடைப்பகுதி, ஈற்றுப்பிரிவின்படி தொடுக்கப்பெற்ற உரிமைவழக்கு.

(க) முறையாளியும் முதன்மூன்று எதிராளிகளும் ஆகிய நாங்கள் ஓசைவேளிருடைய வயிற்றுப் பிறந்த மக்கள். நாங்கள் உடன் பிறந்தோர், ஒப்புரவில் எவ்விதமாண்பும் குறையாதவர்களாய் எந்தையாற் பேணப்பெற்று உவரிசூழுலகில் உரிமையெய்திவந்தோம்.

(உ) எதிராளிகளைப் பார்க்கிலும் இம்முறையாளியே மிகவினிய மொழியும் பொருளும் கிளையுமுடையவனாயிருத்தல் உலகறிந்தவுண்மை. அதனுடன் கூடும் இனமும் கனமுமாக இருத்தல் ஊன்றிநோக்கிற் புலனாகும். ஆகவே உலகினர் பலர் இவனை மதித்துப் பாராட்டிவந்தனர். இஃதொன்றே எதிராளிகளாகிய இவனுடன்பிறந்தார்க்கு மனக்கசப்பை உண்டுபண்ணப் போதுமானதாயிருந்தது.

(ங) இதனை அடிப்படையாக்கொண்டு முதன்மூன்று எதிராளிகளும் தந்தையாரிடம் இம்முறையாளியைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் எடுத்தேற்றிப்பொதுச்சொத்தில் இரண்டொன்றை எடுக்காமலிருக்க இவனை இடர்ப்படுத்தியதுண்டு. என்றாலும் கட்டளைப்படுத்திய அப்பொழுதும் ஓசைவேளிர் தம்மகத்தில் இவனைப்பற்றி அளவு எடுத்துப் போற்றுதல்செய்வது பெருவழக்கமாய் நடைபெற்றது.

(ச) இங்ஙிலையில் இம்முறையாளி கபாடபுரத்துப் பேருங்கலி நிலயத்திற்குச் சென்றிருந்தவேளைநோக்கி, முதன்மூன்று எதிராளிகளும் ஓசைவேளிரை நலித்துப் படுத்தல் ஆக்கி இத்தனடியிற்சுட்டும் பொதுச்சொத்துக்களாகிய சீர் சீராட்டுக்களைப் பறிமுதல்செய்து பிரித்து எடுத்துக்கொண்டனர். அதுமட்டோ? இம்முறையாளியின் கட்டையும் கனத்தையும் குலைத்து இவன் இனத்தையும் பகுத்துத் தம்புக்கமாகப் பம்பக்கம் செய்து இவனைக் கோச்சைப்படுத்திவிட்டனர்.

(ஞ) இத்துணையும் இயலறிந்து எற்றிப்பிரிக்க உடனளியராயிருந்தவர் உவரியுண்டார். ஆகவே அவரையும் இம்முறையீட்டில் நான்காவது எதிராளியாக்கி உடன்சேர்த்தல் இன்றியமையாததாயிற்று.

(சு) இங்ஙனமாய இப்பிரிவின்பெற்றியறியாத இம்முறையாளி முறைப்படி தன்னிலையம்போந்து களித்திருக்கையில் "துள்ளினமாடு பொதி சுமக்கும்" எனக் கூற்றுமொழியானும் பிறவானும் சுட்டிப் பெருநகையாடினர் எதிராளிகள் மூவரும்; இச்சொலவடையும் பெருநகையும் எக்காரணத்தால் தோன்றிய என அக்கம் பக்கம் நோக்கி யுசாவியதில் இம்முறையாளிக்கு உரிமையான தாயபாகம் வஞ்சகமாய்க் கவரப்பட்ட இயல் விளங்கிற்று. இவன்சார்பாகின்றூர் பலதுறைப்பட்டு விருத்தமாகித் தாழிசைக்குட்பட்டமையும் பிறவும் நன்கு துலங்கின.

(எ) எதிராளிகளில் முதலிருவராம் 'செப்பலறந்தருவாரும் அகவனம்பியாரும்' தனித்தியங்கும் பேராற்றலுடையவராவர். ஆகவே நேரில் தொடுக்கவழியில்லை. நிரையில் தொடுக்கச் சிரில்லை. நேரிற் பிரித்தால் நிரையுட்சேர்வர். நிரையுள் தடித்தால் நேரில் போவர்; மூன்றும் எண்ணின்கண்நின்றூர் நறும்பூ தூகர்ந்து கனிகொண்டு தண்ணிழல் சேர்ந்து தூங்கலைத் தம்மாபாசக்கொண்டுள்ளார். பெருவழக்கு என்(ன)னும் செப்பல் தோப் பண்பினர். அவரை எழுவாயாக்கினும் பயனில்லை. காரகவேதுவாக்கிப் பயனிலையளித்து முடிப்பினும் எதிர்மறை (வினை)யிலேயே நிற்பர். ஆகவே முத்தகமான அவரைக் குளகமாக்கல் அரிது. அடைநிலையினை இடையே பெற்றூர் நடைநிலைபேணுர். இரண்டடி தட்டிக்கேட்கின் இரண்டொரு மாச்சீர் என்கடை இல்லென்பர்.

(அ) இங்ஙனம் அவர் இயல்பாக; உவரியுண்டார் இயலோ உலகறிந்த உண்மை. மாமேருவின் வலியினையிறுத்து (ப்பின்னர்) க் கரந்துளச்கிய ' கு லு ' மு னி . இறைவர்க்கிறைவ! நின்வழிப்பட்டோருடனினைந்து தென்றிசைபலபத் தமர்ந்து கானத்தால் "ஐயிருதலையினரக்கர் கோமா"னைப் பிணித்த அருந்திறல் வாய்ந்தோர்.

(கூ) ஆக இந்நால்வர் இத்துணையராயினும் உயர்வறவுயர்நல முடைய முதல்வ!! நின் இணைக்கழற்கு இணங்கிநிற்பர்.

(கo) ஆதலால் இன்னேரை நின்திருமுன் அழைப்பித்து இவன் முறையீட்டினுக்கு இவர்கள் அளிக்கும் மறுமொழிகளைத் தனித்தேனும் இணைத்தேனும் (க) எழுதிவாங்கி, இருதிறத்தினர் உட்கிடையினையும் (உ) விளக்கஞ்செய்து, கரிகூறுவோர் உரைமொழிகளைக் (ங) கேட்டாய்ந்து, பொருளியல் (ச) தெளித்து, முறையீட்டாளியின் உரிமைப் பருதியைச் (ஞ) செப்பமாக்கி இவனுக்குக் கொடுப்பதுடன் இடைக்கால வரும்படியேனும் அதற்கேற்ற சீர்சீராட்டேனும் இவன் (ஙு) அடைய வும், இன்னும் அவ்வப்போழ்து திருவுள்ளத்திற்குத் தோன்றுகிற நல் லியல்வளம் இவனுக்கு ஏற்றவாறு (எ) சேரவும் தீர்ப்புச் செய்யப்பிராத் தணைசெய்யலாயிற்று.

சொத்தின்விவரம்.

க. சீர்:— ஓரசைச்சீர். க. நாள். உ. மலர்.

ஈரசைச்சீர்.	மூவகைச்சீர்.	நாலசைச்சீர்.
க. தேமா	க. தேமாங்காய்	க. தேமாந்தண்பூ
உ. புளிமா	உ. புளிமாங்காய்	உ. புளிமாந்தண்பூ
ங. கருவிளம்	ங. கருவிளங்காய்	ங. கருவிளந்தண்பூ
ச. கூவிளம்	ச. கூவிளங்காய்	ச. கூவிளந்தண்பூ
	ஞ. தேமாங்கனி	ஞ. தேமாந்தண்ணிழல்
	ஙு. புளிமாங்கனி	ஙு. புளிமாந்தண்ணிழல்
	எ. கருவிளங்கனி	எ. கருவிளந்தண்ணிழல்
	அ. கூவிளங்கனி	அ. கூவிளந்தண்ணிழல்
		கூ. தேமாநறும்பூ
		ஙி. புளிமாநறும்பூ
		ஙிக. கருவிளநறும்பூ
		ஙிஉ. கூவிளநறும்பூ
		ஙிங. தேமாநறுநிழல்
		ஙிச. புளிமாநறுநிழல்
		ஙிஞ. கருவிளநறுநிழல்
		ஙிஙு. கூவிளநறுநிழல்

உ. சீராட்டு:—இந்நால்வகைச் சீரினைப் பற்றிவரும் ஆட்டம்.

உறுதிமொழி:—இதிற் காட்டப்பெற்றவை யாவும் உண்மையானவை யே என்றும், மெய்யேயன்றி மற்றொன்று அன்று என்றும் உறுதிகூறும்.

துள்ளலினியபெருமாள்—கலி.

முறையீட்டாளி.

(தொடரும்.)

பெயர்விழையான்.

பல்லவர்கோயில்கள். *

1. கோயில்களின் பொதுவமைப்பு.

இந்தியா தொன்றுதொட்டே புண்ணியபூமி கர்மபூமி எனக் கூறப் பட்டுவந்ததென்பதும், இந்தியர்கள் உலகத்துள்ள மற்றெல்லாவகுப் பினரையும்விட மதத்தால் மிகுதிபாகக் கட்டுப்பட்டவர்களென்பதும் யாவரு மறிந்தனவே. இவ்விதமான மதப்பற்றுள்ளநாட்டிற் கோயில்கள் அதிகமாகக் காணப்படுவது ஒரு அதிசயமன்று. அதிலும் வடஇந்தியா வைவிடத் தென்னாட்டிற் கோயில்கள திகம். "கோயிலில்லாவூரிற் குடி யிருக்கவேண்டாம்" என்று ஒரு முதுமொழியும் உண்டு. தமிழ்நாட்டி லுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தது ஒரு கோயிலேயாவது நாம் பார்க்கின்றோம்.

பண்டைக்காலத்து அரசர்கள் இக்கோயில்களுக்கும் படித்த "நல் கூர்நல்பார்ப்பார்க"ளுக்கும் மிகுந்த தானங்கள் செய்திருக்கிறார்கள். அவைகள் நீடிழிகாலம் வாழவும், தமக்குப் பின்னுல்வரும் அரசர்கள் அவைகளைத் தவிர்க்காமலிருக்கவும் அவற்றை அக்காலத்து நாட்டார் கள் மகாசபைகள்கூடுமிடமாகிய கோயில்களில் யாவருக்குமுபயோகப் படும்படி சாஸனமூலமாகச் செதுக்கிவைத்திருக்கிறார்கள். அச்சாஸ னங்களிலுள்ள மெய்க்கீர்த்திகளால் அக்காலசரித்தத்தை நாம் அறிகின் றோம்.

இந்துக்களின் கோயிற்சுவர்களிலும் மாடங்களிலும் கோபுரங்களி லும் அநேக மதஸம்பந்தமான விக்கிரகங்கள் காணப்படுகின்றன. அவ் விக்கிரகங்களைப் பரிசோதித்தால் அக்கால மாந்தரது மனநிலை ஒழுக் கம் நாகரிகம் முதலியவற்றை நாம் அறிந்துகொள்ளலாம். உதாரணமாக, மாமல்லபுரத்திலுள்ள விக்கிரகங்கள் அக்காலமாந்தர் ஆண் பெண் யாவ ரும் இடுப்பிற்குக்கீழேமட்டுந்தான் உடை உடுத்துவந்தாரென்பதையும் அவ்வுடையையும் நாபிக்கு மூன்று அங்குலத்திற்குக் கீழேதான் உடுத்து வந்தாரென்பதையும் விளக்குகின்றன. இவ்விதம் அக்காலசரித்திரத் தையும் நாகரிகத்தையும் நமக்கு நன்குவிளக்கும் கோயில்களின்காலங் களை நாம் நிச்சயமாய் அறியவேண்டுவ தவசியமாகின்றது. கோயில் களின்காலங்களை நிச்சயிக்க இதுவரையில் ஒரே ஒருவழிதான் வெளி வந்திருக்கின்றது; அதாவது: டாக்டர் ஹூல்ஷ் ‡ கூறுமாறு "அக் கோயில்களிற் செதுக்கப்பட்டிருக்கும் சாஸனங்களின் உதவியைக் கொண்டு கோயில்களின்காலங்களை நிச்சயிக்கலாம்" என்பதுதான். ஆனல் அது போதாததாகும். சிலகோயில்களிலுள்ள சாஸனங்கள் அது கட்டப்பட்டு வெகுகாலத்திற்குப்பிறகு வெட்டப்பட்டிருக்கலாம்.

---

* இது, புதுவை டாக்டர் G. JOUVEAN DUBRENIL அவர்களால் ஆங்கில த்தில் எழுதப்பட்டது. அவர்கள் அனுமதியுடன் மொழிபெயர்த்துச் சிலகுறிப் புக்களுடன் வெளியிடப்பட்டது.

‡ Epigraphia Indica. Vol. X. No. 1. p. 1.

இன்னும், சிற்பம் சித்திரம் முதலியவைகளால் நாகரிகம் முதலியவைகளை நிச்சயமாக நாம் அறியக்கூடியகோயில்களிற் சாஸனங்களே இல்லாமலும் இருக்கலாம். இவ்விதமாக நாம் அதிகமாக உண்மையிலிருந்து தவற இடமுண்டாகும். ஆகவே கோயில்களைச் சிற்பசாத்திரத்தினுதவியால் ஆராய்ந்து அவைகள் கட்டப்பட்டிருக்கும்வடிவைக்கொண்டு அவைகளின் காலங்களை நிச்சயித்தலே சிறந்த வழியாகும்.

தற்காலத்திற் கட்டப்பட்ட திருப்பாப்புலியூர்க்கோயிலுக்கும் பல்லவர்காலத்துக் கட்டப்பட்ட மாமல்லபுரம்கோயில்களுக்கும் மிகுந்த வித்தியாசங்கள் காணப்படுகின்றன. அவைகள் இரண்டும் ஒரேமாதிரி கட்டப்படவில்லை. இவ்விதம் வித்தியாசமேற்பட்டது எங்ஙனம்? சிற்பசாத்திரத்தில் வித்தியாசங்களேற்பட இரண்டுவிதகாரணங்களுண்டு.

1. பிறநாட்டாரதுகூட்டுறவால் அவர்களது நடை, உடை, சித்திரம், சிற்பம் முதலியவைகளைப் பின்பற்றி நமது சிற்பத்தை மாற்றுதல்.

2. நமது கர்ணபரம்பரையைப்பின்பற்றி நமது சிற்பத்தையே உபயோகித்துக்கொண்டுவருங்கால் அதைவிருத்திசெய்யவேண்டி மாற்றுதல்.

தென்னாட்டுக் கோயில்களையும் சிற்பத்தையும் நன்கு ஆராய்வார்க்குத் தென்னிந்தியர்களுக்கும் பிறதேசத்தவர்களுக்கும் சிற்பசாத்திரஸம்பந்தமான கூட்டுறவுநடக்கவில்லை பென்பது நன்கு புலப்படும். அதுவே எனது அபிப்பிராயமும் ஆகும். மேலேகூறிய இரண்டு காரணங்களுள் முதலிற்கூறியது தென்னிந்தியசிற்பத்திற்கு ஒவ்வாது. ஆகவே, எப்போதும் அவற்றையே உபயோகித்துவந்ததாலும் சிற்பசாத்திரத்தை விருத்திசெய்யவேண்டுமென்ற ஆசை அவர்கட்கிருந்ததாலும் சிற்பிகள் அவற்றைக் காலமுறைக்கேற்பச் சிறுகச்சிறுக மாற்றிவந்தனரென்பது பெறப்படும்.

மற்றைநாட்டுச்சிற்பங்களிலுள்ளவைகளைப்போல் திராவிடநாட்டுச் சிற்பங்களில் திடீரென்று மாறுதல் காணப்படவில்லை. இந்நாட்டுச் சிற்பிகள் கர்ணபரம்பரையை அநுசரித்துவந்ததால் இம்மாறுதல்கள் இயற்கையாகவும், ஆதிமுதல் ஒருவனும் பின்பற்றக்கூடியனவாகவும் இருக்கின்றன.

கோயில்களை ஆராய நமக்கு இந்நூல் சிற்பசாத்திரமும் கோயில்களின் ஒவ்வொருபாகங்களதுபெயர்களும் தெரியவேண்டியது அவசியமாகின்றது. ஆகவே, அவற்றைச் சுருக்கமாகக்கூறிவிட்டு மேலே, பல்லவர் காலத்திற் கட்டப்பட்ட கோயில்களை அங்ஙனம் ஆராயப்புகுவோம்.

அடியிற் காட்டியிருக்கும் முதற்படம் அக்காலக்கோயில்களுள், ஒன்று கட்டப்பட்டிருக்கும் 'வரிசை' (architectural order) யைக் காண்பிக்கிறது.

படம் I

பனைமலைக்கோயில் கட்டப்பட்டிருக்கும் வரிசை.



..... ஸ்தூபி
..... சிகரம்
..... கிரீவா
..... கால்
..... யாளம்
..... கபோதம்
..... போதிகை
..... பலகை
..... குடம்
..... கலசம்
..... பத்மபந்தம்
..... சிங்கம்
..... அசுவபாதம்
..... அக்ரபட்டியல்
..... காந்தம்
..... குமுதம்
..... பத்மம்
..... உபானம்

அதில்,

1. உபபீடம்:-அதிஷ்டானத்திற்குக் கீழே அதற்கு ஒருபீடம்போலுபயோகப்படும் 'உபபீடம்' காணப்படவில்லை.

2. அதிஷ்டானம்:— சில இடங்களில் குமுதத்தில் மூலைகள் காணப்படாமல் வளைவாகவிருக்கும். மற்றுஞ் சிலஇடங்களில் பிரஸ்தரத்திலுள்ளவைகளைப்போலவே கபோதம் பாளம் ஆகிய விரண்டும் காணப்படுகின்றன.

3. ஸ்தம்பம்:—தூண்களில் இருவகை யுண்டு.

(1.) சதுரமானது (2.) வட்டமானது

சதுரத்தூண் அதிகமாக அலங்கரிக்கப்பட்டிருக்காது. அது கீழும் மேலும் சதுரமாகவும், மத்தியில்மட்டும் எட்டு அல்லது பதினாறு பட்டை கோயுடையதாகவும் இருக்கும்.

வட்டத்தூணின் மேற்பாகம் மிகவும் அலங்காரமாகவிருக்கும். கலசத்தின் உச்சிகுறுகியபிறகு குடத்திற்குக்கீழே காணப்படும்கோடுகளுக்குத் தாடி எனப் பெயர். குடத்திற்கும் பலகைக்கும் மத்தியிற் காணப்படும் தாமரைப்பூவிற்கு இதழ் எனப் பெயர். பலகைக்கும் போதிகைக்கும் மத்தியில் உள்ளதற்குக் கண்டம் எனப் பெயர்.

[நடுவில் உத்திரங்களைத் தாங்கிக்கொண்டிருப்பதற்குத் தூண் என்றும் ஓரங்களிற் சுவருடன் ஒட்டிப் பாதிப்பாகம்மட்டுந் தெரிந்துகொண்டிருப்பதற்குக் கம்பம் என்றும் பெயர்.]

போதிகையின்மூனை இரண்டு மரத்துண்டுகளைச்சேர்த்தால் எப்படியிருக்குமோ அப்படித்தானிருக்கும்.

4. பிரஸ்தரம்:—ஏராதகம் இராஜாளி அன்னம் மூதலிய பொம்மைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

கபோதம் எப்பொழுதுங் கூட்டால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். கபோதத்தின்முனையிற் சித்தரிக்கப்பட்டிருக்கும் பூக்களைக்குக் கருக்கு எனப் பெயர். இங்கு அது கோடியிலிருப்பதால் அதற்குக் கோடிக்கருக்கு எனப் பெயர்.

கூட்டின் மத்தியபாகத்திற்குக் கந்தர்வமுகம் என்றும், அதைச் சுற்றி வலீவாய்வருவதற்குக் கோடி என்றும், அதன் உச்சிக்குச் சிம்ம முகம் என்றும் பெயர்.

கந்தர்வமுகத்தில் ஒரு கந்தர்வனது தலை காணப்படும் (படம் II B. பார்க்க). ஆனல் இங்குக் காட்டப்பட்டவற்றுள், குடிசையைக்காண்பிக் கும் ஒரு சிறியகூரை காணப்படுகிறது. அன்றி, உச்சியிற் சிம்மமுகம் காணப்படவில்லை. அதற்குப்பதிலாக அவ்விடம் 'சுளுகுபாறைத்தலை, (shovel head) என நாம் பெயரிடத்தகுந்த பாறையால் அலங்கரிக்கப் பட்டிருக்கிறது.

5. கர்ணக்கூடு:—கால் என்பது ஸ்தூபிக்கு ஒரு பீடம்போ லபயோகப்பட்டுவருகிறது. காலி லிரண்டிஞன்னல்கள் காணப்படுகின் றன.

இக்கர்ணக்கூடு கர்ப்பக்கிரஹத்திற்கும் மூலைகளிலுள்ள அறை களுக்கும் மேலேதான் காணப்படும். மற்றவிடங்களிற் சாலேயென்பது காணப்படும். அது கொஞ்சம் நீளமாக மூன்று, ஐந்து அல்லது ஏழு வரை ஸ்தூபிகளை உடைத்தாயிருக்கும்.

தமிழ்நாட்டிலுள்ளகோயில்களில் மேலைத்தேசத்துக் கோயில்களைப் போல அதிகமாக ஜன்னல்கள் இல்லை. ஆனல், சுவர்கள் அலங்கரிக் கப்படாமலிரா. ஜன்னல்களிருக்கவேண்டிய இடங்களில் மாடங்கள் காணப்படும். அதற்குக் கோஷ்டபஞ்சரம் எனவும் பெயர். அதற்கு உச்சியில் பஞ்சரம் காணப்படாமல் திருவாட்சி எனப் பெயரிடத்தக்க ஒரு தோரணம் காணப்படும் (படம் II B. பார்க்க.).

நமக்கு இவ்வாராய்ச்சியிற் சிற்பசாத்திரத்தைத்தவிர விக்கிரகவடிவ சாத்திரமும் (Iconography) சாஸனங்களிலுபயோகப்படும் எழுத்துக் களின்வடிவத்தைப்புற்றிய சாத்திரமும்(paleography)உபயோகப்படும்.

(தொடரும்.)

கி. நா. சுப்பிரமணியம்,
கும்பகோணம்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஅ.] தூர்மதி- ஹேவிளம்பி-மீ [பகுதி ரு.

Vol. XX. March—April—1922. No. 5.

தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி.

கல்விசைப்புலவரெல்லோரானும் கன்குமதிக்கப்பட்டதும், பல்லாயிர வருடங்கட்குமுன்பே தோன்றியதுமான தொல்காப்பியப் பொருளதிகாரத்துட் சொல்லப்படும்பொருள் இன்னவென்னத் துணிவுறவேண்டியும், தமிழ்ப்பெருங்கல்வியைத் தழைப்பிக்கவிரும்பியும், தமிழறிஞரிற் றக்கோரையறிந்து பரிசளிக்கக்கருதியும் கொழும்புமாநகர்ப் பெருஞ்செல்வரு ளொருவராகிய ஸ்ரீமான் Dr. ஸ்ரீகாந்தமுதலியாரவர்கள் தொல்காப்பியப் பொருளதிகாரவிடயம்பற்றிப் பண்டிதரெழுதுமாராய்ச்சியிற்சிறந்த தொன்றற்கு 200 ரூபா பரிசளிப்பதாக 1912-ம் ஆவது பத்திரிகைகளிற் பிரசுரம்செய்வித்திருந்ததுகண்டு, அப்பொழுது மதுரைத் தமிழ்ச்சங்கத்திற் செந்தமிழ்ப் பத்திராசிரியராயிருந்து இப்பொழுது சென்னையில் தமிழ் லெக்ஸிகன்கமிட்டியில் தலைமைத்தமிழ்ப்பண்டிதராயிருக்கிற ஸ்ரீமத். மு. இராகவையங்காரவர்கள், தாம் அரிதிற்படித்துணர்ந்து பல நூல்களாலுந்துணிந்த பொருளதிகாரவிடயங்களைத் தொகுத்தெழுதியனுப்பிய இவ்வாராய்ச்சியே மற்றையோரெழுதியவற்றினின்றும் மேலாக மதிக்கப்பட்டுப் பரிசளிக்கப்பெற்ற பெருமையுடையதாயிருக்கிறது. மேலும், அது மதுரைத் தமிழ்ச்சங்கத்தாராலும் ஆதரிக்கப்பட்டுத் தமிழ்ச்சங்கப்பிரசுரமாகவும் வெளியிடப்பட்டிருக்கிறது. இதில், பண்டைக்காலத்துத் தமிழ்மக்களது ஒழுக்க வழக்கங்களும், அறம்பொருளின்பங்களே யடையுமுறைகளும், கற்றுவல்லபுலவர்கள் செய்யுளியற்றுந் திறப்பாடுகளும், சொல்வழங்கும் மரபுகளும், பிறவும் பயில்வார் அறியும்படி காட்டப்பட்டுள்ளன. தமிழ்மொழிக்கும் தமிழர்க்குமுரிய சரித்திர ஆராய்ச்சிசெய்வார்க்கும், பொருளதிகாரம் படிக்கப்புகுவார்க்கும் இது மிகவும் பயன்படத்தக்கது. தெளிவான செவ்விய தமிழ்நடையுடையது. பண்டிதபரீக்ஷை, வித்வான்பரீக்ஷைகளுக்குப் பாடமாகவைக்கத்தக்கது. இவ்வாறான ஆராய்ச்சி மேன்மேல் வெளிவருமாறு ஆண்டோறும்தூண்டுவாருண்டாயின் ஊன்றிய தமிழ்நூலுணர்ச்சி இவ்வுலகிடைப்பரவி நிலை பெறுமென்பது உறுதியே. இதன்விலை ரூபா ஒன்று.

பத்திராதிபர்.

நல்லந்துவனர்சோதிடப்பொருத்தமும் காலமும்.

செந்தமிழ்த் தொகுதி-ஙகு பகுதி பதினொன்றில் ஆசிரியர் நல்லந் துவனர்பாடிய பரிபாடற் பதினோராவதுபாட்டிற்கண்ட கிரகநிலைகளின் மேல் எழுந்த ஆக்ஷேப சமாதானங்களைப்பற்றி நடந்த வாதப் பிரதி வாதங்களைச் செந்தமிழ்ச்செல்வர்கள் கண்ணுற்றிருக்கலாம். இவ்வம யம் அவ்வாதத்தை யாரம்பித்து முற்றுவிக்கவும் மேலுமேலும் ஆராய்ச்சி செய்விக்கவும் தூண்டிய நியாயவாதி ஸ்ரீமத். R. S. நாராயணஸ்வாமி ஐயர்கட்குத் தமிழுலகமே கடப்பாடுடையதாம். அவர்கள் இவ்வாதத் தைக் கிளப்பாவிடின். இன்னும் வெளிவரக்கூடிய பல விஷயங்கள் வெளி யாகாமலே நின்றுவிடும்.

முதலாவதாகப் பண்டித சான்றோர்கள்கூறிய

உத-ரெ-ஹவெ நவ-ரிய-ரசு ஜுவிதெள லவதஃ கூயம்

என்ற பிற்பகுதிச் சுலோகத்தில், வ-ரிய-ரசு - சூரியனுக்கு, உத-ரெ-ஹவெ நு - நான்காவது ராசியில், ஜுது-புதனும், விதெள-சுக்கிர னும், கூயம்-எப்படி, லவதஃ-இருக்கக்கூடும் என்ற வினாவை ஆசாரிய வராஹமிஹிரர் எழுப்பியுள்ளார். நமக்கோ சூரியனிருக்கும் இராசிக்கு மூன்றாவது இராசியிற் புதனும், சூரியனிலிருந்து நான்காவது இராசியிற் சுக்கிரனும் இருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. வராஹ மிஹிரரோ புதசுக்கிரர்கள் இருவரும் நான்கு இராசி தள்ளியிருப்பது எப்படி என்கின்றனர். இச்சுலோகத்தின் முற்பகுதியோ,

வ-ரிவ-ஸ்ரவ்ஷ்ட்ர நவ்ஹரெணயோவ ஜ்ராஷயஃக்ரூ தாஃ।

என்று காணப்படுகிறது. 'இதன்பொருள், ஏயா என்னில், வ-ரிவ-ஸ் ரவ்ஷ்ட்ர நவ்ஹரெண்-பழையசாஸ்திரங்களையநுசரித்து; வஜ்ராஷயஃ-இவ் வஜ்ரயோகமுதலியன; க்ரூதாஃ-செய்யப்படுகின்றன (சொல்லப் படுகின்றன.) என்பதாம். ஆகையால் வராஹமிஹிரருக்கு முற்பட்ட ஜோதிஷசாஸ்திரிகள் இப்படியிருத்தல்கூடுமென்று அதற்குப் பலன் களும் யோகங்களும்கூட வகுத்துப்போயினர் என்று தெரிகிறது. இதற்குப் பட்டோத்பலர், வ-ரிவ-ஸ்ரவ்ஷ்ட்ர நவ்ஹரெண திஃ:— வ-ரிவ-ஸ்ரவ்ஷ்ட்ர நவ்ஹரெண-வ-ரிவ-ர்ஹாவெயஃ உய யவ

நாஹிஹிஃ வ ஜ்ராவெ்ரா யொமஃ க்ரூதாஃ என்று உரைகூறியிருக்கி றார். இதனற் போந்தபொருளாவது;-பூர்வாசாரியர்களாகிய மயனர், யவ னர் முதலியவர்களாற்சொல்லப்பட்ட வஜ்ராயோகத்தை நான் குறித்தேன் என்பதாம். இக்காலத்துச்சோதிடவல்லுநர்களைப்போன்று அக்காலத்துச் சோதிடவல்லுநரும் இவ்வாறு ஐயமுற்றனரென்றலும் அதற்கு முன்னரே இப்பகுப்பட்ட யோகங்கள் பல இருந்தனவென்பதை வராஹ மிஹிரரே கூறுகின்றனர் அவையாவன:-

பிருகத்ஜாதகம் நாரதயோகாத்யாயம் ஸ்லோகம் 5-6.

ஸகூடாம்ஜவஜ்ரஹாஸ ஸ்ரைவ ஜ்யம்தஸ்திவரீ தமைய-ஸ்வஃ।
கமேம்தஸ்விஸ்ரஸ்வஸ்திதை தவ-ஸ்வாவீ தஜ்யுஸ்திகெம்ஸ்ரவாஹ்யு தாஃ ॥
யுஹ்ரவஜ்ரியொஹ்ஸ்ரஸ்யாஸ்ரு தம்ய-ஸ்ரஃஸ்ரியொஸ்ரஜ்ரவாவாஸ்ரவஜ்ரி ।
நா நுதஸ்ரெஸ்ரி தஜ்ரவஜ்ராவெ்ரா யொமொஸ்ரவதி ॥ என்பனவாம்.

அதாவது லக்னத்திலும் உதயத்திலும், ஏழிலும் சுபர்கள் நிற்க நாலிலும் பத்திலும் பாபிகள் இருப்பார்களானால் அதற்கு வஜ்ரயோக மென்றும், அதற்கு மாறுபாடாகக்காணப்படுமாயின் அது யவயோகமென் றும், கேந்திரங்களில் எல்லாக்கோள்களும் காணப்படுமாயின் அதற்குக் கமலயோக மென்றும், 3, 6, 9, 12ல் எல்லாக்கோள்களும் நிற்குமாயின் அதற்கு வாபி என்றும் பெயர் என்பதாம். இன்னும்,

பிருகத்ஜாதகம் ராஜ்யோகாத்யாயம் ஸ்லோகம் 20.

ஸ்ரஸ்ரவஹித வ்ரயஸ்ரெஸ்ரு ஸவஜ்ரிஸ்ரெஸ்ர-ஸ்வ-ஸ்ரெஸ்ர
விய திஷிவஸ நாயொஸ்ரொஜி நாஜ்ஜ நஸ்விஸ்ரு ராஸ ।
ஸ்ரஸ்ரவஸ்ரிய-ஸ்ரதகஸ்ரெஸ்ரு ஃ க்ரூ-ஸ்ரஸ்ரஸ்ரெஸ்ரஸ்ரவாஸ்ரவெ
வ்ரு-ஜ்ஜதிஸ்ரவாஸ்ரஸவ்ரு-ஸ்ராஜிதாரிய-ஸ்ரோக்ரு ॥

என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இதன்பொருள்:- குரு, சுக்ரன், புதன் இவர்கள் உதயத்தில் நிற்க, சனி ஏழில் நிற்க, திவசநாதன் என்ற சூரியன் பத்தில் நிற்கப் பிறந்த வன் எல்லாப் போகபோக்கியங்களையும் அனுபவிப்பன்; பலமுடைய சுபக்கோள்கள் கேந்திரத்தினிற்கப் பாபர்கள்பாபஸ்தானங்களையடையின், அந்தயோகத்திற்பிறந்தான் தனபதியும், வேடர் கள்வர் இவர்களுக்குத் தலைவனு மாவான் என்பதாம்.

இவைகளால் வராகமிஹிரர் சூரியனுக்குநான்காவதுராசியிற் புத சுக்கிரர்கள் இருத்தல் கூடுமோ என்ற வினவை எழுப்பிப் பூர்வாசாரியர் கள்கூற்றென விடைபகர்ந்துளார். பூர்வாசாரியர்களாவார், மயனர், யவ னர், (மாமு-ஃ) கார்க்கர் முதலாயினர். கார்க்கர்காலம் வேதாங்கஜோதிஷ காலம், (அதாவது இற்றைக்குச் சுமார் ஐயாயிரவருடங்கட்குமுன்ன ராம்.) இன்னும், இப்பிரகதஜாதகத்துக்கு உரைதீட்டியபட்டோற்பலர், நகஷாஹிகெஷாஷயெவா யெஷாஹ்ஷாய-ஸ்ராத்ரயொஃ வெஷஸு கெஷள ஷவதஃ சூஹிதெஷயெஷாஹ்ஷஷ்ஷுகய-ஸ்ராத்ரஷ்ஷுவாதயொ ஸுஷயாஹ்ஷீயொவா நலவதி ॥ ஒருபோதும் சூரியனுக்குவெகுதூரத் திற் புதசுக்கர்கள் காணப்படுதலில்லையென்றும், அப்படியானல் நண்பகல் நள்ளிரவு இவைகளிற் புத சுக்கர்கள் காணப்படுதல்வேண்டும், அது கூடாது என்றும் எழுதுகின்றனர். இதைத்தான் பண்டித சான்திரிகள் பெயர்த்து அப்படியே எழுதினாபோலும். பூர்வாசாரியர்கள் ஒருகாலும் தோன்றக்கூடாத (உண்டாகக்கூடாத) ஒருவிஷயத்திற்குப் பலன்கூற மாட்டார்களென்பதை நன்றாக நினைக்கவேண்டும்.

இதுகாறும் கூறிய பிருகத்ஜாதகமேற்கோள்களினுலேயே அந் நூலுடையார் முன்னைநாட்பழக்கத்தை ஒப்புக்கொள்வதைத்தவிர்த்து வேறுவழியில்லையென்றுகண்டனர் என்பதும், முன்னுளில் இவைகள் சம்பந்தித்தனவென்பதும் விளங்குவதால் பரிபாடலிற்கண்ட கோணிலை சரியானதென்பதும், அதில் யாதொருபிழையுமில்லையென்பதும் ஒருதலை.

இனி அதனை இக்காலத்து ஆசிரியர்களும் ஜோதிட்சாஸ்திரிகளும் ஒப்புக்கொண்டார்களில்லையெனப்பிரசுரமாயின், இக்காலத்திலே திரிக் சித் தாந்தகணிதத்தை அப்பியசித்துத் தென்னட்டாருக்குப் பஞ்சாங்க ரூபமாக முதன்முதல் வெளியிட்டவரும், இப்பொழுது திரிக்சித்தாந்த கணிதப்படி பஞ்சாங்கம் பதிப்பித்துவருபவரும் ஸ்ரீமத் T. S. விசுவநாத சிரௌதிகாது பெற்றோருமாகிய ஸ்ரீமத். சுந்தரேசிரௌதிகள் இவ் வாறுண்டாதல்கூடுமென்றுசொல்லியதாக ஸ்ரீமத் K. சிதம்பரையரவர்கள் ஓரிடத்திற் கூறியுள்ளார்கள். ஆதலால் நுணுகி யாராய்வோமாயின் இப்பரிபாடலிற்கண்ட கோணிலைகள் ஒருகாலத்துத் தோன்றியதே யொழியக் கவி தானுகக்கூறினர் என்றுகூறுதற் கியலாதாம்.

இனி, ஸ்ரீமான். R. S. நாராயணசாமி ஐயரவர்கள், தாம் குறித்த காலநிர்ணயத்தில் (செந்தமிழ்த்தொகுதி 19. பக்கம் கூஎகூ) தற்கால ஆங்கிலசித்தாந்தப்படி சுக்கிரனும் புதனும் முறையே 48–28 பாகைகளுக்கு மேலே எட்டுவதில்லையென்றும் அதனாலே இப்பாடலின் நாள் ஆடிமீ 18உக்குட்பட்டுத்தான் இருக்கவேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறுகிறார்கள். சிதம்பரையவர்கள், சுக்கிரன் 48 பாகையும், புதன் 29 பாகையும்தான் அதிகமாகச் செல்லக்கூடுமென்கிறார்கள். இவ்விதமாக அபிப்பிராயபேதங்கள் இருப்பதையும் மனத்தில் நிறுத்தவேண்டும். நமது உரையாசிரியரோ "பாம்பு மதியமறைய ஒல்லைவருரா ளென்றது அவ்வாவணிமாதத்து மதிநிறைநாளாகிய அவிட்டத்தை; எனவே, மதியும் இராகுவும் மகரத்துநிற்க என்பதூஉம், கேது அதற்கு ஏழாமிடமாகிய கற்கடகத்துநிற்க என்பதூஉம் பெறப்பட்டன. இதனாற் சொல்லியது ஆவணித்திங்கள் அவிட்டநாளில் இக்கோள்கள் தமக்குரிய நிலமாகிய இவ்விராசிகளில் நிற்பச் சோழனை அரசாக்கினவென்ப தாயிற்று". தற்காலத்தில், திருவாளர் நாராயணசாமி ஐயரவர்கள் எவ்வளவு அழுத்தமாக ஆடிமீ 18உக்குமேல் இருக்கமுடியாதென்று சொல்லுகிறார்களோ அவ்வளவு திடமாக ஆசிரியர் பரிமேலழகரும் ஆவணித்திங்கள் என்றே சொல்லுகின்றனர். அன்றிச் சாந்திரமானப்படி ஆடிமாதத்து அமாவாசைத்துக்குப் பிற்பட்ட முதற்பிறைமுதல் ஆவணிமாதத்து அமாவாசைக்குமுன்பட்ட ஆவணித்திங்கட்பகுதியான சிராவணசுத்தமெனக் கொள்வோமாயின், அச் சாந்திரமானக்கணக்குத் தென்னாட்டில் வழக்கிலில்லாததொன்றும். அன்றியும், சிராவணசுத்தமாக இருக்குமாயின் அவ்விதமே ஆசிரியர் குறித்திருப்பர். டாக்டர் தீபோ (Dr. Thibaut) "தக்காணத்தில் தமிழ்ப்பாஷைவழங்குமிடத்திற் சௌர அல்லது வாக்கியசித்தாந்தமே உபயோகப்படுத்தப்படுகின்றதென உவாசன் ஆசிரியர் கூறியுள்ளாரென்றும், அது பிழையற்றதென்றும் குறித்துள்ளார். மேலும், வேதாங்கஜோதிஷத்திற்கண்ட சாந்திரமானகணிதம் பிழைபட்டதெனத் திவான்பஹதூர் ஸ்ரீமான். சாமிக்கண்ணுப்பிள்ளையவர்களது 1916-ஆம்வருடத்துச் சர்வகலாசங்க ஜோதிஷச்சொற்பொழிவுகளே ஊன்றிநோக்கப் புலனாகும். தென்னாட்டில் தொன்றுதொட்டு வழங்கிவந்தது புலிசனால் இயற்றப்பட்ட வாக்கிய கணனமுறை என்று தென்னாட்டாரும் ஜோதிடமும் என்பதில் முன்னரே குறித்துள்ளேன்.

மேலேகாட்டிய நியாயங்களால் ஆடித்திங்கள்தான் என வற்புறுத்துவது ஆசிரியர் கூற்றுக்கும் உரையாசிரியருரைக்கும் மாறுகொளக் கூறலாகும்.

இன்னும், வேதாங்கஜ்யோதிஷகாலத்து (அதாவது சற்றேறக்குறைய இரண்டாயிரம்வருடங்கட்குமுன்) ஆகர்ஷணசக்தியால் அயனமும் விஷுவத்தும் சலனமடைந்திருந்தது. இதனைத் திருவாளர் ராம. கணபதி ஐயாவர்கள் எழுதியுள்ளார்கள். வாக்கியகணனத்திலே தக்ஷிணாயனம் ஆயில்யத்தின்மத்தியிலிருந்து முன்னர் உண்டாயிற்று; இப்பொழுதோ புனர்வசுவிலிருக்கிறதென்று காண்பப்படுகிறது. காலஞ் சென்ற திலகமகரிஷி தமது ஓரியன் (Orion) என்னும் நூலில் வேறு விதமாகக் கூறுவர். பின்னர் அசுவதியிலிருந்துவர அதைக்கொண்டே கணித்துவரப்பட்ட தென்றும், இப்பொழுது உத்தரட்டாதிக்குச் சமீபத்திலிருக்கிறதென்றும் திருவாளர் கணபதி ஐயாவர்கள் கூறுவர் (செந்-பக்கம் 374-376). பாஸ்கராசாரியர் தமது வாஸனாபாஷ்யத்திலும் கோளாத்யாயத்திலும் அயனசலனம் ஒருவிதமாகக் கூறுகின்றாரில்லை யென்றும் பலவிதமாக மாறி, இருந்தஇடத்தையே யடைகிறதென்று கொள்ள வேண்டுமென்றும், தற்போது ஆங்கில ஜோதிஷ்தந்திரசபையின் உப. அக்கிராசனாதிபதியாயிருக்கும் (Vice President, Royal Astrological Society of England) வை, வே, இரமணசாஸ்திரிகள் 'இந்து' பத்திரிகைவாயிலாகச் சிலவருடங்கட்குமுன்னர் எழுதியுள்ளார்கள். இவற்றையெல்லாம் உணர்ந்தும், அறிந்தும் காலநிர்ணயம்செய்ய வேண்டும்.

இனித் திருவாளர் நாராயணசாமி ஐயாவர்கள் குறித்த உத்தேச காலத்தை யாராய்வோமாயின், கி. பி. 372க்குக் கலியப்தம் 3473க்கு சித்திரை அப்தம் ஆரம்பதினத்தில் சூரியன் மேஷத்தில் 59 நாழிகை 28 வினாடி 45 தற்பரைக்குப் பிரவேசித்திருக்கின்றான். ஆடிமாதப்பிறப்பு முதலாள் (இரவு) 55 நாழிகை 50 வினாடி 45 தற்பரைக்கு உண்டாயிருக்கிறது. அதன்படி கணிக்கச் சூரியமத்திமம் 3 ராசி 14 பாகை 20 கலை 13 விகலையும், சூரியசுத்தஸ்புடம் 3 ராசி 13 பாகை 23 கலையும் (அதாவது 101 பாகை) ஆகிறது.

புத சுக்கிரர்களுக்கோ புதனது சூரிய சுத்தஸ்புடம் 106 பாகை 28 கலையும்; சுக்கிரனது சுத்தஸ்புடம் 118 பாகை 56 கலையு மாகிறது.

புத சுக்கிரர்கள் நித்தியகதியோ முறையே 4 பாகை 5 கலையும் 1 பாகை 36 கலையும் ஆம். அங்ஙனமாக நாராயணசாமி ஐயர்வர்கள் கொள்கை பிறழ்ச்சியுடையதாகின்றது. இவர்கள் தம் ஆராய்ச்சியிற் பஞ்சசித்தாந்திகாவிற்கூறிய சூரியசித்தாந்தகணனத்தைக் கவனித்திருப்பதாகத் தெரிகிறது. பஞ்சசித்தாந்திகை பதினாறவது அத்யாயம் முதற் சுலோகம்,

வஷ்நிஸாஜ்ஞகவஜ்ராம்தாராஸ்ரஹிணஃயொகஃஹிஜாஜ்ஞெ।
தத்ரஜ்ஞஃவஃத்ரஸஃஸ்ரஜ்ஞதஃஸ்ரஜ்ஞஸ்ரஜ்ஞஜ்ஞாகஃண ॥

என்பதாம். அதற்குச் சுதாகரதுவிவேதியவர்கள், "புத சுக்ரர்களுக்கு அவந்தியிலே (உஜ்ஜயினியிலே) மத்திமஸ்புடம்செய்ய சூரியமத்திம ஸ்புடம்போற் கதிகளாம்" என்பர். இதனால், சூரியனுடைய நித்தியகதி தான் இந்தப் புத சுக்ரர்களுக்கும் என்று கொள்ளக்கூடாது. மத்திய ஸ்புடம் வேறு. சுத்தஸ்புடம் வேறு. பழைய சென்தமிழ்த்தொகுதி களைப் பார்த்தாற் சோதிடகணிதம் குறிக்கப்பட்டிருப்பது நன்கு புல னும். அதன்படி கலிசுத்தினத்தைப் பல்வேறுவகைப்பட்ட கணிதங் களைச் செய்து ஒவ்வொருகிரகமும் இத்தனை பரிவர்த்திகளைச் செய் திருக்கின்றது என்பதை நீக்கிவிட்டு மிகுதிக்கு ராசி பாகை கலைகளைக் காணவேண்டும். அவ்விதமான கணிதமே செய்யப்பட்டு மேலேயுள்ள புத சுக்ர ராசி பாகை கலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் நாராயணசாமி ஐயர்வர்கள் உத்தேசித்த கி. பி. 382 பொருத்த மில்லை. வேறுவருட மிருக்கலாமென்றாலும், அவர்கள் ஆடிமீ 15உ தான் இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவதும் பொருந்துமாறில்லை என்பதை ஆசிரியர் பரிமேலழகர் உரைகொண்டு காட்டுவாம்.

இனி, ஆசிரியர் பரிமேலழகர் கூற்றுப்படி." ஆவணித்திங்களிலே, ஆதித்தன் சீயத்தையடைய" (பரி - பக். 85) வென்று கூறுவதால் அன்று பிரவேசமாயிருந்தாலு மிருக்கலாம். அவ்விதமானால் ஆதித்தன் சிம்மத்தில் முதற்பாகையில் இருக்கவேண்டும். ஐயர்வர்கள்கூற்றுப் படி புதன் 29 பாகைக்குமேல் எட்டியிருக்கமுடியாதாகையால் (121–29) —92 பாகையில் இருக்கவேண்டும். அப்பொழுது கடகத்தில் வர வேண்டியதுதானேயென்பர். உண்மைதான். முன்னரே அயனசலன மும், விஷுவத்சலனமும் கண்டு மற்றவைகளைக் கவனிக்கவேண்டு

மென்று கூறியுள்ளேன். திருவாளர் நாராயணஸ்வாமி ஐயாவர்களும் வாஸ்தமி ஹிரர்காலம்வரையிற் கார்த்திகாதிகணனமே வழங்கிவந்த தென்பர் (செந்தமிழ்த் தொகுதி–19. பக். 382). இது உண்மைதான். அப்படியாயின் விஷ்ணுவத்தோ, அயனமோ கார்த்திகையினின்றல்லவா ஆரம்பித்திருக்கவேண்டும். இது அதற்குமுன் புனர்பூசத்திலும், அதற்குமுன்னர் ஆயில்யத்திலுமல்லவா ஆரம்பித்துவந்தது. ஆகையால் கார்த்திகையில் மேஷாயனம் இருந்திருக்குமாயின் நக்ஷத்திரம் ஒன்றுக்குப் பாதம் நான்காக அசுவதி, பரணி இரண்டு நக்ஷத்திரத்திற்கு 8 பாதத்திற்குப் பாதம் 1-க்கு 3 பாகை 20 கலியாகக் கூடியது 26 பாகை 40 கலி குறையுமானல் அதது ஆசிரியர் கூறியவாறே இருக்குமென்பதில் ஐயமில்லையாம். இப்பொழுது புதனுச்சுக் கண்ட 92 பாகையில் 26° – 40' ஐக் கழித்தால் மீதமாவது 65 பாகை 20 கலியாகும் ஆகவே மேடம், இடபம் போக மிதுனராசியில் 5 பாகை 20 கலி புதன் சென்றிருப்பான். அதேமாதிரி சுக்கிரனுக்குச்செய்ய (121—48 + 26·40) 46 –20 கலியாகும். அதாவது ரிஷபத்தில் 16 பாகை 20 கலி சென்றிருப்பான். ஆகவே சூரியன் சிம்மத்திலும், புதன் மிதுனத்திலும், சுக்கிரன் ரிஷபத்திலும் இருப்பது உண்மையென்றேற்படும்.

இதுவரையிற் சொல்லியதுகொண்டு மற்றைக்கொள்கைகளை (அங்கி என்பது அக்கினிநக்ஷத்திரம் என்பதும், புரைவரை என்பது அஸ்தகிரி என்பதும் போன்றவைகளை)க் கவனிக்கவேண்டிய அவசியமே ஏற்படாது. எப்பொழுதும் பழமையானகொள்கைகள் ஒரு ஆதாரத்தைப்பற்றியிருக்கும்.

இனி, இக்காலம் எப்பொழுதுதான் இருக்கும் என்பதைப்பற்றிப் பின்னொருமுறை ஆராய்வாம்.

இலக்கணவிளக்கம்
வைத்தியநாததேசிகர் பரம்பரை,
திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

பல்லவர் கோயில்கள்.

(கஅ0-ஆம்பக்கத் தொடர்ச்சி.)

ii. தமிழ்நாட்டுப் பழையகோயில்கள்.

நாம் இதிற் பல்லவர்காலத்திற் கட்டப்பட்ட கோயில்களை ஆராய்வதாக எடுத்துக்கொண்டோம். பல்லவராதுசரித்திரமே நமக்குக் கி. பி. ஆறும்நூற்றாண்டின்மத்தியிலிருந்து (அதாவது சுமார் 550 முதல்) தான் சரியாகத் தெரியும். அதேபோலச் சிற்பவடிவுசாத்திரத்தைக் கொண்டு ஆராயும்போதும் அதற்கு முந்தியகாலத்துக் கோயில்களுள் ஒன்றுவது இத் தமிழ்நாட்டிற் கிடைக்கவில்லை. நமக்குக் கிடைக்கும் கோயில்களுள்ளும் மிகப்பழமையானது மலையிற் குடையப்பட்ட குடைவரைக் கோயில்களே. (Rock-cut Temples). "அஃதெங்ஙனம்? கி. பி. ஆறும்நூற்றாண்டின்மத்தியில்தான் தமிழ்நாட்டினர்களுக்குக் கோயில்கட்டும் ஆசையுண்டாயிற்று? கோயில்கள் கட்டத்தெரியாமையால், பாறைகளிற் செதுக்கிவைத்தார்களா?" என்ற விஷயங்களை அறிய வேண்டுவது முக்கியமாகின்றது.

ஆனல், கி. பி. இரண்டாம்நூற்றாண்டிலேயே தமிழ்நாட்டிற் கோயில்கள் கட்டுப்பட்டுவந்திருக்கின்றனவென்பதை நாம் மதுரையிலிருந்த கடைச்சங்கமருவியநூல்களால் அறிகின்றோம். சேரநாட்டுக்கருவூரைத் தலைநகராக்கொண்டு செங்கோல்நடாத்திய செங்குட்டுவன் கண்ணகிக்காக இமயமலைசென்று கற்கொணர்ந்து படிவமமைத்துக் கோயில்கட்டினனென்பதும் இந்நாட்டிற் குடிபேறியிருந்த யவனர்கள் அரபிக்கடலையொட்டி மலையாளதேசத்தில், சோம்தேசத்தை யாண்டுவந்த அகஸ்டஸ் என்பானுக்குக் கோயில் கட்டியிருந்தார்களென்பதும் யாமறிந்தனவே.

கி. மு. மூன்றும்நூற்றாண்டில் இமயம்முதற் பெண்ணைவரையாண்டமௌரியவம்சத்துச் சாசன எழுத்துக்களையொத்து ப்ராக்ருதபாஷையிற் பிராமி (Boarmi) எழுத்துக்களில் எழுதப்பட்ட சாஸனங்களையுடைய குகையறைகள் மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களிலும், செஞ்சிமலைக் குச்சமீபத்திலும் யதேஷ்டமாகக் கிடைக்கின்றன. அவைகள் பௌத்த

ஜைனமுனிவர்களால் உபயோகப்படுத்தப்பட்டுவந்தன. அவைகளுக்குப் "பஞ்சபாண்டவர் படுக்கை" எனப் பெயர் உண்டு. அவைகளுள் முக்கியமானவை திருக்கோயிலூருக்குத் தென்கிழக்காகப் பன்னிரண்டுமைல் தூரத்திலுள்ள "திருநிறன்றொன்றை" என்னு மூரிலுள்ள அப்பந்தநந்த ரது ஜைனக்கோயிலுள்ள அறைகளே.

யாவரும் புகழ்ந்துகொண்டாடும்படி சலிப்பில்லாமல்வேலைசெய்த திருவாங்கூர்ச் சிலாசாஸனபரிசோதகர் மகா-ரா-ரி-ஸ்ரீ T. A. கோபிநாத ராவ் அவர்கள் காஞ்சீபுரம் காமாக்ஷியம்மன்கோயில் உட்பிராகாரத்திற் சுமார் கி. பி. இரண்டு அல்லது மூன்றும்நூற்றாண்டைச்சார்ந்த புத்த விக்ரஹங்களைட் * சிலவற்றைக் கண்டுபிடித்திருக்கிறார்.

அன்றியும், சங்கநூல்களுள், பலராமன் கண்ணன், காளி, இந்திரன் முதலியோர்களுக்குக் கோயில்கள் கட்டப்பட்டுவந்தனவெனக் கூறப்பட்டிருப்பதாலும், கோபிநாதராவ் அவர்களாற் குடிமல்லத்துக் கண்டுபிடிக்கப்பட்ட நிறிஸ்தவாப்தத்திற்கு மூந்தியதான லிங்கம் † முதலியவைகளாலும் அக்காலத்து ஜைன புத்த மதத்தினர்க்கேயன்றி இந்துமதத்தினர்க்கும் கோயில்களிருந்தனவென்பது நன்குபெறப்படும்.

ஆகவே, தமிழ்நாடுமுழுவதும் நிறைந்திருந்த அழகானகோயில்களுள், தற்காலத்து ஒன்றுகூடக் காணப்பெறுமையும், திடீரென்று கி. பி. ஆறும்நூற்றாண்டின்மத்தியிற் குடைவரைக்கோயில்கள் தமிழ்நாடெங்கும் தலைப்பெற்றமையும் எங்ஙனம்?

இதற்குவிடை விழுப்புரம்தாலூகா மண்டகப்பட்டியுள்ள ஒரு பழைய சாஸனத்திலிருக்கின்றது. அது ஒன்றுக்குமுதற்றபடி ஜீர்ணமாய்விட்டதென்று சென்னை இராஜாங்கச் சிலாசாஸனபரிசோதகர்களால், ‡ அறிவிக்கப்பட்டது. ஆனால் நான் அதை முழுதும் நம்பாமல்

---

* Ins. Ant. Vol. XLIV Part DLVII June 1915.

† Elements of Hindu Iconography by T. A. Gopinatha Rao Vol. II Part I plates 2, 3, 4 and 5.

‡ G. O. No. 518, Public 18th July 1905 Report on epigraphy for 1904—1905. Part II No. 3, P. 39,

அங்குச்சென்று அதன் "பதிவுபடம்" (Estampage) ஒன்று எடுத்து வாசித்ததில் அதன் இரண்டாம் அடியின்முடிவில் "விசித்திரசித்தேன" என்னும் பெயரை என்னால் வாசிக்கமுடிந்தது. "விசித்திரசித்த" வென் பது நான் பல்லாவரத்திற்கண்டு * பிடித்த முதலாம் மஹேந்திரவர்மனது விருதாகும். ஆகையால் விசித்திரசித்தனும் பாறையிற் செதுக்கப்பட்ட மண்டகப்பட்டுக் குகையானது நிச்சயமாக மஹேந்திரவர்மன்காலத் தைச் சார்ந்தது என்று துணியலாம்.

ஆயினும், அச்சாஸனம் முழுவதையும் என்னால் வாசிக்க முடியவில்லையாதலால் அதன் பதிவுபடத்தைக் கோபிநாதராவ் அவர்க ளுக்கு அனுப்பி அதைப் பெயர்த்தெழுதும்படி வேண்டிக்கொண்டேன். அதைப் பெயர்த்தெழுதியபிறகு மகா-ா ா ஸ்ரீ ராயரவர்கள் "என் மன திற்குத்திருப்தியாக இச்சாஸனத்தை வாசிப்பதில் ஜயமடைந்தேன் என்பதைத் தங்கட்குச் சந்தோஷத்துடன் அறிவிக்கின்றேன். மஹேந் திரவர்மனது மற்றைச்சாஸனங்களைவிட இது மிகுந்தபிரயோசனத் தைக் கொடுக்குமெனவு மறிகின்றேன்" என எழுதினர்கள்.

என்னுடைய வேண்டுகோளின்படி கோபிநாதராவ் அவர்கள் அச் சாஸனத்தைப்பற்றி ஒரு சிறு வியாஸமெழுதி அதைப் பதிவுபடத் துடன் "எபிகிராபியா இந்திகா" என்னும் பத்திரிகைக்கு அனுப்பி யிருக்கிறார்கள். இதன் பெருமையெல்லாம் அதற்கே சேரவேண்டுமென் னும் விருப்பம் எனக்கிருப்பதால் "பதிவுபட"த்தை நான் இங்குக் கொடுக்கவில்லை.

சாஸனம் நமக்கு முக்கியமானதால் அவருடைய உத்தரவின்பேரில் அவர் பெயர்த்தெழுதியபடி சாஸனத்தையும் மொழிபெயர்ப்பையும் கீழே வரைந்திருக்கின்றேன்.

சாஸனம்:—

"ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமஹேந்ரவிஷ்ணுக்ருஹே விவிதரூபிதநரேந்
த்ரவிசித்ரசித்தேந நரேண்ரேண விஷ்ணுகுலாயதநம்"

---

* பின்னுல் படம் IV.

மொழிபெயர்ப்பு:—

"பிரும்மா ஈச்வரன் விஷ்ணு ஆகிய இவர்களுக்கிருப்பிடமாகிய (இவர்களது விக்கிரகங்களமைக்கப்பட்ட) இக்கோயிலானது கல்லில்லாமலும் மரமில்லாமலும் உலோகமில்லாமலும் சுண்ணப்பில்லாமலும் விசித்திரசன் என்னும் அரசனாற் செய்விக்கப்பட்டது."

இச்சாஸனம் வெகு சிறியதாயிருந்தாலும் பலபொருள்களையுடைத்தாயிருக்கின்றது. மஹேந்திரவர்மன் இச்சாஸனத்தால் இப்பொழுது இங்கே (தமிழ்நாட்டில்) கல் சுண்ணப்பு உலோகம் மரம் முதலியவைகளை யுபயோகித்துக் கோயில்கள் கட்டிக்கொண்டு வருகிறார்கள்; ஆனால், விசித்திரசித்தன் (விசித்திரமான சித்தத்தையுடையவன்) என்னும் பெயரைத் தரிக்கத்தருந்தவனான் நான் ஒரு பாறையைத் தவிர மற்றவைகளி னுதவியில்லாமற் கோயில்கட்டும்விதத்தைத் தமிழ்நாட்டிலுள்ள எனது பிரஜைகளுக்குக் கற்றுக்கொடுக்கப் போகின்றேன்" எனக் கூறுகின்றான்.

மஹேந்திரன்காலத்தில்தான் தமிழர்களுக்குப் பாறைகளிற் குகைகள் செதுக்கும்வழி தோன்றியது எனச் சிலர் எண்ணலாம். ஆனால் "அது அப்படியில்லை. அரசனுடைய நேர்பார்வையின்பேரில்தான் பரவிய"தென்பதை இச்சாஸனம் தெளிவாகக் காண்பிக்கின்றது. மண்டப்பட்டுக்குகை அரசனுடைய சொந்த உத்தரவினாலேயேதான் செதுக்கப்பட்டது. ஆகையால் மஹேந்திரவர்மன்,

1. பாறைகளிற் கோயில்கள் செதுக்கும் வழக்கம் விசித்திரமும் புதுமையுமானதென்றும்,

2. அப்படிச் செதுக்குமெண்ணத்தை இந்நாட்டிலிழுப்பியதுந்தானே (சிற்பவேலைக்காரர்களல்லர்) என்றும் கூறிப் பாத்தியதையை ஸ்தாபித்துக் கொள்ளுகிறான்.

இச்சாஸனத்திற் குடைவரைக்கோயில்கள் செதுக்கும் வழக்கம் புதிதானது என்றும், விசித்திரமானதென்றும் கூறப்பட்டிருக்கின்றது. அதற்குமுன் இப்படிப்பட்ட குடைவரைக்கோயில்களிருந்திருக்குமாயின் இதிற்கூறியதற்குப் பொருள் ஒன்றுமில்லை. ஆகையால், தென்னிந்தியாவிலுள்ள குடைவரைக்கோயில்கள் எல்லாவற்றிலும் மண்டகப்பட்டிலுள்ளதுமிகவும் பழமையானதென்று நிச்சயமாயறியலாம்.

மஹேந்திரன்காலத்திலேயே பாறைகளிற் செதுக்கப்படாமற் கல், சுண்ணும்பு, உலோகம், மரம் முதலிய அழியக்கூடிய சாமான்களாற் கட்டப்பட்ட கோயில்களும் இருந்தனவென்று இச்சாஸனம் நன்றாகக் கூறுகின்றது. அவைகள் அழியக்கூடிய சாமான்களாற் கட்டப்பட்டிருந்தமையாற் காலக்கிரமத்திலாவது மணிதர்களாலாவது அழிந்திருக்க வேண்டும்.

(தொடரும்.)

தி. நா. சுப்பிரமணியம்,
கும்பகோணம்.

புருரவசரிதை.

[கசகூ-ஆம் பக்கத்தொடர்ச்சி].

உருப்பசிநீங்குபடலம்.

அறம்பொருளின்பம்வீடென்றறைந்தநாற்பயனின்முன்னைத்
திறந்தருமறமேயாதிமூன்றையுஞ்சிந்தையா
லிறஞ்சியன்புடனேபூசையியற்றுவானியற்றுநாளில்
மறஞ்செலாவறத்தினன்பாற்பூசனைவழங்கலானன். (க)

அம்முறைநடத்துநாளிலருந்தமுங்காமந்தானும்
விம்மிதமாகிநம்மையிகழ்ந்தனனறத்தின்மிக்கா
னம்வலிசிறிதுகாட்டாதொழிகுதனன்றன்றென்னத்
தும்முறுசிற்றங்கொள்ளப்பொருளிவைசொல்லிற்றன்றே. (உ)

உரவுநீருலகங்காப்போர்க்குறுபொருளாதியாகி
யரியமாமரீங்களாலேயமருக்குதவியாங்குப்
பெரியவானவர்க்குமேலாய்பெரும்பதமுதவியிங்ஙன்
பொருளலார்தமைபுமாக்கும்பொருளலாற்பொருள்வேறுண்டோ. ()

தருமமென்றுரைத்தல்யார்க்குந்தருதலோதவிர்தலோவென்
றருமைகண்டறிந்திலாய்நானல்லவோவறத்தின்மூலந்
தெரிவுறவுணர்க்துமெண்ணுதிகழ்ந்தனீயதனற்றீய
குரவிலுக்காளாய்லோபங்கொள்கெனச்சபித்ததன்றே. (ச)

மற்றையக்காமந்தானுமண்ணுலோர்விண்ணோரதி
பெற்றபேரின்பமெல்லாம்யான்செயும்பெற்றியன்றே

வுற்றுணர்ந்தறியினெல்லாவுள்ளமுமுறைத்தவென்னைப்
பற்றிலாகில்வேதன்முயற்சியுன்பயத்தவாமோ. (டு)

இலங்குவேலசவெண்ணெநிகழ்ந்தனையாதலாலே
கலங்கிளரின்பங்குன்றியாசையானலிந்துராமப்
பொலன்குழைக்கருங்கட்செவ்வாயுருப்பசிபோகம்போக்கிக்
கலங்குநெஞ்சமென்னவுரைத்ததுகடியசாபம். (சு)

கடைப்பிடிகலமேல்குந்தருமமாங்கடவுட்டெய்வம்
விடைத்தவச்சாபந்தாங்கும்விடலையையியந்துநோக்கிப்
படைத்தநின்வாணெநிகாண்கநின்குலத்தோர்பாலு
நடக்குறுங்காலங்காறும்வாழ்கெனநல்கிற்றன்றே. (எ)

தருமநன்குரைத்ததென்றும்மற்றவைசபித்தவென்று
மருணயந்தவனுமல்லனவலமுற்றவனுமில்லன்
வருவவந்துமுன்னுள்ளத்தெண்ணியேவையமெல்லா
மொருதனிச்செங்கோலோச்சியுருப்பசியோடும்வாழ்வாள். (அ)

வேறு.

அந்தமாதனத்தொடுவிளையாடுவான்வசந்தம்
வந்தமாதனன்காண்கனும்பூகதம்வகுளஞ்
சந்தமாதனமெனவிளக்தளிர்தருஞ்சாரற்
கந்தமாதனப்பெருங்கிரிமருங்கினிற்கலந்தான். (கூ)

ஓங்குமியோசனையோரிரண்டாயிரமுயர்ந்து
பாங்கிலன்னவையகன்றுமுப்பத்தொருநால்காய்
நீங்குமாயிரநீலத்தைநிடதத்தைநெருக்கும்
வீங்குமேருவின்மேல்புடைசூல்படவிளைகுஞ். (கo)

சிந்துரத்தொடும்பொருந்துமம்மலைச்சிகரஞ்
சிந்துரத்தொடும்பொருங்குறத்திடர்முலைச்சிகரஞ்
சிந்துரத்தொடும்பொலிந்தமெய்ச்சித்தியர்திலகஞ்
சிந்துரத்தொடும்பொலிந்தவணிலங்குறுந்திலகம். (கக)

முனிவருந்துறைநோக்கியகுரவர்தம்முன்றில்
முனிவருந்துறைவிளங்குறுமுகிழ்மதிக்குழவி
முனிவருந்துறையிகழ்ந்துபோறிவெடமுத்து
முனிவருந்துறையறிந்துமாதவத்தொழில்முடிப்பார். (கஉ)

ஆயசூழினமைத்தனலுருமணிமாடம்
போயபேரிருளொருவழிப்புகுந்ததுபோலப்
பாய்கருங்கதிர்விளங்குவதனிடைப்பயின்றான்
மாயையூடிருந்தியற்றுமுமொருவனமான. (கசு)

இன்னகோயிலுளுருப்பசியிளகலப்பருகி
நன்னர்நாள்பலகளித்தனன்களிற்றிடைநாளிற்
பொன்னின்வார்கழற்புரூரவாபுயத்துமால்பூண்ட
மின்னைமீட்பதற்கெண்ணினன்விண்ணவர்வேந்தன். (கச)

அண்டர்வேந்தன்மற்றவ்வழியிருவரையழைத்துப்
பண்டைநாளுளதன்மைகளனைத்தையும்பகர்ந்து
விண்டபூங்குழலுருப்பசிவளர்த்திடும்வெள்ளை
கொண்டுபோதுகவெனவிடைகொண்டுபோயினரால். (கரி)

போனவிஞ்சையர்கருணிமாலிகைப்புறத்துத்
தானவாரணமன்னனுமனையவடானும்
வேனிலான்சமர்க்கெதிர்வுழிவிண்ணவர்வேந்தன்
கானவார்குழற்குதவியவெள்ளையைக்கவர்ந்தார். (கசு)

ஒருவகன்றிடலுடிலுளுள்ளகன்குணர்ந்தான்
வெருவல்யான்றனிகொணர்குவன்கடிதெனவிரையத்
தெரிவைபிச்செலமீடலுமிந்திரன்செயலாற்
கருவிவானின்றிபின்னினவிருள்புறங்கரப்ப. (கள)

ஊற்றுபேரிருளகன்றுநற்பகலெனத்துலங்க
வெற்றிவேலிறைநின்றதுகண்டனள்விரிந்த
பொற்றபூந்துணரசோகினுன்பதமலர்ப்புறத்துப்
பற்றிலாதீவர்சீவகாரம்மெனும்படிவம், (கஅ)

படிவம்நோக்கினள்காமமாந்தெய்வதம்பகர்ந்த
கொடிமைநோக்கினளிந்திரன்சூட்சியுங்குறித்தாள்
வடியுண்வென்றிவேல்மன்னவவென்னைமணத்தற்
கொடிவுவந்தனவெனவுரைத்தும்பரினகன்றாள். (கக)

தையலல்வழியேகிடத்தரிக்கிலனுகி
வெய்யதீயிடைமெழுகெனவுள்ளமும்வெதும்பி
யுய்யுமாறுசற்றுண்டுகொலெனவுணர்வோழிந்து
பொய்யிலாநெறிமன்னவன்றனித்தனன்புகல்வான். (உ0)

வேறு

குன்றெறிந்தகிண்டோட்குலிசிகுழையூடு
சென்றெறிந்தவேற்கட்டிருவனபதெள்ளமுதை
நன்றறிந்துகோடியெனநல்கிநடிவேகவர்த்தா
னின்றறிந்தேனென்னுயிர்க்கோர்தூண்டிலெனவிட்டீர்த்தல். (உக)

பாடுமிசையளிகள்செந்தேன்பருகுமலர்த்
தோடுவிரிகூந்தற்றெண்டைக்கனியிதழ்வாய்
வாடுநுசுப்பினிளமான்பிரிவினுல்வளர்த்த
வாடுதனீட்டுமுலையானையைக்கைவிட்டேனே. (உஉ)

சந்தத்தனிமணியைத்தீர்ந்ததறுகட்செவிபோற்
கந்தக்குழலியிழந்தகருத்தழிவா
னுந்திக்கடலலைநீருண்டபுயலன்றியுமின்
றந்தப்புரத்திற்றடித்தெழுந்ததச்சோவே. (உங)

என்னப்பலபலவும்பன்னியிருந்தழியு
மன்னர்க்குமன்னன்மதித்தழற்கும்வாடைக்குங்
கன்னற்சிலைவேள்கணைக்குங்கடலொலிக்கு
நென்னற்பிழைத்தென்மேலென்னேநிகழ்வதென. (உச)

கண்ணுருதிகுடைந்தெடித்ததெள்ளமுதின்
விண்ணுளரசன்விருந்தாயருந்துமெழு
பண்ணுர்ந்தசெவ்வாய்ப்பவளவிதழமுத
மூண்ணுதொழியேனென்றேங்கும்வனத்தூடுற்றான். (உரி)

மஞ்சுதவழும்வரையும்வரைச்சார்புங்
கஞ்சமலர்ந்ததடமுங்கடிகாவு
நஞ்சுகலந்தவிழிநன்னுதலாளைத்தேடி
நெஞ்சுகலங்கிநெடுநாட்டிரிந்தனனுல். (உசு)

போந்தவரசன்கலிமடந்தைபோற்பொருந்தி
வாய்ந்தந்தியின்மருங்குற்றனம்மருங்கிற்
றேய்ந்தமருங்குற்சிலதியசொடுஞ்சிவந்த
காந்தள்பொருசெங்கையுநப்பதியைக்கண்ணுற்றான். (உஎ)

கண்டானகங்குளிர்ந்தான்கண்களித்தான்காதலமு
துண்டானெனத்தளிர்த்தானுன்மத்தன்போலானுன்

வண்டாரலங்கல்மணிப்புயங்கள்பூரித்தான்
தண்டாமரையனையாட்கின்னமொழிசாற்றினன். (உஅ)

பொன்னேமணியேபுனிகலனேபொற்கோபின்
மின்னேயமுதேவிளக்காவிளக்கொளியே
பின்னேயமின்றிப்பிரிந்தனையேபோரசே
பென்னேயுனைப்பிரிந்துமின்னுயிர்கொண்டுய்வேனே. (உக)

கோணுதலர்ந்தசெழுங்கோகனகவாண்முகமு
நாணுநும்வேட்டநலங்கனிந்ததோளிணையும்
பூணுர்களபப்புணர்முலையும்புன்னகையுங்
காணுதொழிந்தேனிக்கங்குல்கைகாண்பேனே. (உ0)

பஞ்சிற்கனல்போலப்பான்மதியும்வேள்பொருத
நெஞ்சிற்கனற்றிநிலைகவர்ந்துநீறுக்க
நஞ்சிற்கொடியாய்விழிக்கருணைகல்காதே
வஞ்சித்தகன்றுபிதுவோவுன்வாறென்றான். (உக)

செம்மலுரைத்தமொழிகேட்டலருஞ்சேதாம்ப
லம்மத்தளவமருப்பிற்றெனநகையா
மம்மரொளியாகமன்னவனேயென்னனைய
கொம்மைமுலைமின்னுர்குணங்கூறக்கேட்டியார்ல். (உஉ)

அள்ளீரிலேவேலலங்கற்களிறனையாய்
தெள்ளீரம்புனிற்றச்சிறந்தசெழுங்கிடைபோற்?
கள்ளீரநீங்காக்கருங்கூந்தற்கன்னியர்க்கு
முள்ளீரமின்மைசிறிதுமுணர்ந்திலையோ. (உங)

நிவந்தவரைகுளிரவீழ்ந்தநெடுநீரு
மூவந்தமலர்தேடியுறவுற்றவண்டினமுங்
குவிந்தமுலையார்களன்புங்குணமனைத்துங்
கவர்ந்துகொடுபோங்கருத்தன்றேகாவலனே. (உச)

கன்மூடுநெஞ்சுங்கனிமூடியமொழியுங்
குன்மூடுந்தூண்டிற்குலவிழியுங்கொண்டுலவு
மின்மூடுங்காரோதிமெல்லியலாரென்னும்வெலும்
புன்மூடும்பாழ்ங்கிணற்றில்வீழ்வரோபோர்வேந்தே. (உடு)

சூதாடல்கள்ளருந்தல்வேட்டைசிலசூழ்தல்
தீதாங்கொலைபுரிதல்செங்கோன்முறைதிறம்பல்
காதார்ந்தகண்ணார்தங்காமத்தேகாதலித்தல்
மீதானவேந்தர்கெடுதற்குவித்தாமால். (கூசு)

ஈதலறிவுக்கமின்சொற்பொறையுடைமை
பேதமறப்புரத்தல்வாய்மைபிறழாமை
யோதல்படைபயிற்றலொன்னருரடங்கக்
காதல்திறைகோடலீதன்றேமன்னர்கடன். (கூஎ)

ஆதலாலென்பாலவாவொழிகவன்றுகி
லேதமறவோரண்டிடையொழிகவீங்கொழிந்தாற்
போதவடிவாயுனக்கோர்புத்திரனுண்டாமவனல்
மாதவஞ்செய்தென்னைமணத்திபெனமொழிந்தே. (கூஅ)

பின்னுகவொன்றுபகர்வாள்பெருந்தகையே
பொன்னுட்டரசன்பொதுமடந்தையாளன்றே
வின்னுளிற்காந்துருவர்க்கீந்தானருந்தவத்தா
லென்னைவேண்டியருளிலீணுகுவன்யான். (கூசு)

என்றினையபன்னவிகல்வேந்துருப்பசிதன்
குன்றனையபின்பக்குவிமுலையிற்கூட்டுதவ
நின்றுபுரிந்தான்முன்கந்துருவர்நேர்ந்துபசும்
பொன்றிகழுந்தீத்தகழிபொன்றுதவிப்போயினர். (சஂ)

காதார்விழிச்சிதருங்காமக்கடுங்கனலு
மூதாதைதின்றுமுடுக்குபெருங்கனலு
மேதாலவியுமெனநினைந்தேற்கித்தழலும்
போதாதோவென்றதனையிட்டகன்றுபோயினன். (சக)

தாறுபொருகம்பத்தறுகட்களிறனையா
னீறுபடுகாமநெருப்பினெடுநாளுழன்றே
யேறுபருவமுலையேந்திழையைக்கண்ணுற்று
மாறுபருவமவலத்தழிந்தனனால். (சஉ)

உருப்பசிசீங்குபடல முற்றும்.

(தொடருஂ.)

உதவிப்பத்திராதிபர்.

கந்தியார்.

(Copyright Reserved.)

'கந்தி' என்னும் பெயர் நீலநிறமுடைய ஒருவகைமாணிக்கத்தைச் சுட்டுவது என்றும், இதனை மெல்லியலார்க்குரியபெயராக இட்டுவழங்கல் தமிழ்மரபென்றும் மொழிநூல்வல்லார் ஒருவர் உரைக்கின்றனர். மற்றொருபுலவர் இதற்குக் 'கழுகு' என்று பொருள்கூறி ஆகுபெயர்முறையாற் பெண்பாலரைச் சுட்டி நின்றது என்று உரைக்கின்றனர். நிகண்டுகளில் இப்பெயர்க் குரியபொருளாக அறியக்கிடப்பன பல. நச்சினார்க்கினியரோ—"கறந்தபாலனைய கந்திக் கொம்பு" [சிந்தா. முத்தி. 51.] என்ற விடத்துப் "பால்போல் மிகவுந்தூய கந்தியாகியகொம்பு" என்றே உரைகண்டனர். இங்ஙனமான இப்பெயருடன் ஆர் விகுதியை இணைத்துக் 'கந்தியார்' என்று வழங்குவர் ஆன்றோர்.

ஈண்டு இக் 'கந்தியார்' என்னும் பெயர் எண்ணெழுத்தறிந்த ஒரு பெண்மணியைச் சுட்டிநின்றது. அறிந்தவரை இப்பெண்மணியார் இயற்றமிழ்ப்புலமை நிரம்பியவராகவே கருதப்படுகின்றனர். இவர் பிறந்த ஊர் 'பேரை' என்பதாம். இது நூற்றெட்டுத்திருப்பதிகளில் ஒன்று; பாண்டியநாட்டுத் திருக்குருகூர் என்னும் ஆழ்வார்பதிக்குக் கிழக்கே இரண்டுநாழிகைவழியில் இருப்பது; வைணவரால் 'திருப்பேரை' 'தென்திருப்பேரை' என்று வழங்கப்படுவது. இம்மெல்லியலார் வைணவரைப்பினர்; நிலங்கடந்தநெடுமுடியண்ணலை வழிபடுதெய்வமாகக் கொண்டவராக எண்ணப்படுகின்றார். பஞ்சகாவியத்துள் ஒன்றாகிய சிந்தாமணியில் இவரால் இடைமடுக்கப்பெற்ற செய்யுட்கள் பலவாம். அவை, இன்ன என அறிந்துகொள்வது அந்நூல் உரைகாரருள் ஒருவரான 'ஆசிரியர் உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர்'க்கும் மிக்க அருமையாயிற்று.

பதிப்பிக்கப்பெற்றிருக்கும் சிந்தாமணிச்செய்யுளினுடைய மொத்த எண் 3145

கூடி நூலிறுதிப்பாதக்குறிப்பிற் காட்டப்படுவது 1

கூடி கூடி காட்டப்பெறுதது 1

ஆ 3147

இவற்றுள் நச்சினார்க்கினியர் உரைப்படி திருத்தக்கதேவர் வாக்கென அறியப்பெற்றன 2700

திருத்தக்கதேவருடைய ஆசிரியர் [தோலாமொழித்தேவர்] கூறிய அருகக்கடவுள்வாழ்த்து ["செம்பொன்"] 1

கூ ஓம்படைச்செய்யுள் ["முந்நீர்வலம்புரி"] ... 1

ஓம்படைச்செய்யுளை அடுத்து நூலாசிரியர்வாக்காகவந் துள்ளன. 2

ஆ 2704

இவ் விரண்டாயிரத்து எழுநூற்றுநான்குசெய்யுட்கள் ஒழிந்த வீனைய **443** செய்யுட்கள் கந்தியார்வாக்கெனக் கருதப்படுகின்றன; நச்சினார்க்கினியர் 'கந்தியார்கூற்று' எனக் கணித்து எடுத்துக்காட்டிய "தத்தைகுணமாலை" என்னுங் கவியும் 'பகைமாற்று' என்னுங் கவியும்" சேரின் 445 செய்யுட்கள் கந்தியார் உரைத்தனவாகப் போதரும்.

[ஓம்படைச்செய்யுளை அடுத்துள்ள இரண்டுகவிகளை வேறுபிரித்துத் தேவர்வாக்கென எண்ணியமை "முத் திருபத்தேழ் கோத்துமிழ்ந்து" என்றதன் விசேடவுரைநோக்கி என்க]

'கந்தியார்கவி' என அறிய ஒண்ணுத ஏனைய 443 செய்யுளும் 'இவை தேவர்வாக்கு' 'இவை கந்தியார்வாக்கு' என அறிய ஒண்ணுத அளவிற் சொற்பொருட்டிட்பநுட்பஞ்செறிந்தனவாய்ச் சுவைவளம் பொலிந்தனவாய் ஆசிரியர் நச்சினார்க்கினியர்காலத்திற்குமுன்னரே இடம், முதலியன அறிந்து இடைமடுக்கப்பட்டிருத்தல்வேண்டும் என்றல் ஓர் யூகமாகும்.

நச்சினார்க்கினியர் சிந்தாமணியுரையில் ஓரிடத்து இக் கந்தியார் கண்டபாடத்தையும் ஒரு சிறந்த ஆதாரமாகக்கொண்டுள்ளார். அவர் அவ்விடம் குறித்தது:– 'ஊன்பிறங் கொளிறும் வேலான்....முன்புறங் கட்டப் பட்டு' [குணமாலை-240] என்றும்—'இமிழிற் பூட்டி' (கூ-241) என்றும் தேவர்மனத்தை இறுகப்பிணித்தமைதோன்றக் 'கட்டி' என்றும் 'பூட்டி' என்றும் செய்புள்செய்தமைபற்றிக் 'கந்தியாரும் இடை

யிடையே பாடியிட்ட செய்யுட்களிலும் அப்பொருடரக் கட்டி என்று செய்யுள்செய்தார் என்றுணர்க"—[குணமாலை-239-உரை] என்பது. இதனுற் கந்தியார் தாம் இயற்றிச் சந்தர்ப்பம்நோக்கிச் சிந்தாமணியகத்து, ஆண்டாண்டுமெடுத்தசெய்புட்களிற் 'கட்டி' என்னும் சொற்பிரயோகம் பலவரும் என்பதும் அச்சொற்கு நச்சினார்க்கினியர் கருதிக்கூறியவாறே பொருள்கொள்ளப்படும் என்பதும் பிறவும் புலனும்.

ஆற்காரிலிருந்து வரப்பெற்ற 'பலகவித்திரட்டு' என்ற பழைய சுவடி ஒன்றில் இக்கந்தியார்பாடல்கள்சில காணப்படுகின்றன. [இச் சுவடி தந்துதவினோர் தாலூகாபோர்டுமெம்பர் கவிராஜ் A. M. மலை ஐயாப்பிள்ளையவர்கள்.] அவற்றுட் சில ஈண்டுக் காட்டப்பெறும். அவை யாவன:—

"அஞ்சிலோதி யாடவை யஞ்சாய்" எனமுடிக்கவிடுத்த சங்கத் தார்க்குப் பேரை ெ[ை] வணவி கந்தியார்சொற்ற செப்பும் விஞவும்":—

செப்பு

1 "அஞ்சிலோதி யாரிடாற் பேரின் பமைந்திசினே
ரஞ்சிலோதி யன்ரே வறிதலின-லஞ்சிலோதி
யஞ்சிலோதி யாரிப் படுநெல் லறைக்கரும்பு
வஞ்சிலோதி யாடவையஞ் சாய்."

விஞ

2 "கொண்டல் வண்ணன் கனிட சுவைநலம்
கண்டீ ருண்டீர் கேட்டீ ரறியீர்
துண்ட மெட்டே தொண்டை கொண்ட
வெண்டிசைக் குத்தி ஞண்டுழு வேரல்
மண்டெரி யீஞ வெண்டளி யண்டம்
தண்டமிழ் பயில்வீர் கொண்டுரைப் பீரே"

அவர்பாடிய பரிபாடற்பகுப்புத்தொகை வெண்பா.

3. திருமாற் கிருநான்கு செவ்வேட்கு மூப்பத்
தொருபாட்டுக் காடுகாட் கொன்று—மருவினிய
வைபையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்."

அவர் பாடிய தொல்காப்பியப் பகுப்புத்தொகை வெண்பா.

(எழுத்து)

4. நூலின் மரபு மொழிமரபு நுண்பிறப்பு
மேலைப் புணர்ச்சி தொகைமரபு– பாலா
முருபியலின் பின்னுயிர் புள்ளி மயக்கந்
தெரிவரிய குற்றுகரஞ் செப்பு.

5. எழுத்ததி காரத்துச் சூத்திரங்க ளெல்லா
மொழுக்கிய வொன்பதோத் துள்ளும் வழுக்கின்றி
நானூற் றிருநாற்பான் மூன்றென்றே நாவலர்கண்
மேனூற்று வைத்தார் விரித்து.

[சொல்]

6. கிளவியாக் கம்மே கிளர்வேற் றுமைச்சொல்
லுளவேற் றுமைமயக்க மோங்கும்—விளிமரபு
தேற்றம் பெயரினைச்சொற் சேரு மிடையுரிச்சொற்
றோற்றியிடை மெச்சவியல் சொல்.

7. "தோடவிழ் பூங்கோதை சொல்லதி காரத்துட்
கூடிய வொன்பதியற் கூறிற்கும்—பாடமாம்
நானூற் றறுபத்து நான்கேநன் னூற்பாக்கள்
கோனூற்று வைத்த குறி"

[பொருள்]

8. "ஈட்டு மகத்திணையு மெய்தும் புறத்திணைபுங்
காட்டுங் களவியலுங் கற்பியலும்—காட்டும்
பொருளியன்மெய்ப் பாட்டிவமம் போற்றிய செய்புண்
மரபியலு மாம்பொருளின் வைப்பு"

9. பூமலிமென் கூந்தல் பொருட்படல நூற்பாக்க
ளாவவறு நூற்றறுபத் தீந்தாகும்—மூவகையி
னுயிரத்தின் மேலா றறுநூற்றீ ராறென்ப
பாயிரமோ வோரிரண்டென் பார்"

சிந்தாமணிபற்றிப் பாடியகவி.

10. "தத்தைகுண மாலையொடு தாவில்புகழ்ப் பதுமை
யொத்தவெழிற் கேமசரி பொண்கனக மாலை
வித்தகநல் விமலையொடு வெஞ்சரமஞ் சரிதா
னத்தகையி லக்கணையொ டாகமணமெட்டே."

11. "பகைமாற் றெருநற் பரன்வாழ்த் தவைச்சொற் பதிகவிலம்பகமோ
வகைமாற் றெருநா மகளோர் கோவிந்தை மணமுறு தத்தைகுணம்
மிகைமாற் பதுமை கேமசரி கனகம் விமலையர் வீழ்சரமஞ்
சகைமாற் றெடுமண் மகள்பூ விலக்கணை முத்தியீ ராறுன்றே."

என்பனவே.

இவற்றுள், **3**வது இலக்கப்பாட்டு, இரண்டாவதடியில் வேறுபாட மாக ஆக்கப்பெற்று ("ஒருபாட்டுக் கார்கோளுக் கொன்று" என்று பாடங் கொண்டு) சிற்சிலாற் பதிக்கப்பட்டிருக்கிறது.

4வது **5**வது எண்ணத்தில்வரும்பாட்டுக்கள் பூரணவடிவுடன் அச்சிடப்பெற்ற தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியருரைப் புத்தகத்திற் காணப்படுகின்றன.

8வது **9**வது இலக்கப்பாக்கள், சிற்சில உருவவேற்றுமையுடன் செந்தமிழிற் காணப்படும். **10**வது எண்ணப் பாட்டோ--சிந்தாமணிப் பதிப்பாசிரியரால் ஷை நூலினிறுதியிற் காட்டப்பெற்றுள்ளது.

ஏனைய **1, 2, 6, 7, 11**வது இலக்கப்பாக்கள் இதுவரை அச்சில் வாய்வரப்பெற்றிருப்பதாகத் தெரிகவில்லை.

நிற்க, பரிமேலழகர் பரிபாடற்கும் உரை இயற்றியிருக்கின்றனர் என்பது பலரும் நன்கறிந்ததொன்றும். அவரது தற்சிறப்புப்பாயிரம் எனக் கருதப்படும் "கண்ணுதற்கடவுள்" என்ற ஆசிரியத்திடையே அவர் இக்கந்தியாரைப்பற்றிச் சிற்சில சுட்டி உரைத்துள்ளார். "ஆசற்றூர் கண்ணுந் தெரியுங்கால் இன்மையரிதே வெளிறு" என்ற மெய்ம்மொழி உண்மையாக்கொள்ளப்பெறுமாயின், இறைவன் ஒழிந்த ஏனையர் முற்றறிவுபெற்றிலராதல்பற்றி இந் நல்லிசைப்புலமைமெல்லிய லாரது குணமேம்பாடே அறிஞர்க்குச் சிறந்துவிளங்கும் என்றல் ஒரு

தலையாவதுடன் இவரும் பிறரால் போற்றப்படுவதற்குத் தக்கார் என் பதும் புலனும். தத்தம் புலமைமிருதியை வியர்த்தும், பிற பேணியும், நுண்ணுணர்வினரையும் அஃதிலரென ஓரோவழி இகழ்ந்துரையாடல் சான்றோரால் பேணப்படுவதொன்றன்று. நிற்க

பரிபாடலில், "தந்திடைமடுத்தகந்தி" என்ற பரிமேலழகர்வாக்கா னும், முன்னர்க்கூறப்பெற்ற நச்சினார்க்கினியர்வாக்குக்களா னும் இக்கந்தி யார் அவ்விருவர்காலத்திற்கும் முற்பட்டவர் என்றல் தெளிவாம்.

கால இடங்களோநோக்கித் தொன்னூல்களினிடையே சொற்பொரு ணயன்மலிந்த பாக்கள்பல பிற்காலத்தவரால், இடைமடுக்கப்பட்டுள்ளன வாகப் பிறவிடங்களிலும் கேட்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்று, வேள்ளியம்பலத்தம்பிரான் என்பவராற் சேக்கிழார் அருளிய திருத் தொண்டர்புராணத்தகத்துப் பல பாக்கள் இடைமடுக்கப்பெற்றன என் பது; சென்றநூற்றாண்டின்தொடக்கத்திலிருந்தவரான நல்லாப்பிள்ளை என்பாரும் 'வில்லி' வாக்குக்களின் இடையே, தமது இனியபாக்களை மகாபாரதத்துத் தந்திடைமடுத்தனராவர். அவர் பாடியன சமீபகாலத் தனவாகலின், வில்லிபுத்தூரார்வாக்கு இவை என்று அறிந்த வல்லார் இப்பிள்ளைவாக்கை ஒட்டிநட்சத்திர அடையாளம் பொறித்து அச்சேற்றி வெளியிட்டிருக்கின்றனர். ஆனால் வெள்ளியம்பலத்தம்பிரான் என்பார் இடைமடுத்தனரோ, நெடுநாளாக எட்டியும், சுட்டியும் உரைக்கப்படுத லன்றி இதுவரை வேறு பிரித்தெடுத்துக் காட்டப்பெற்றில.

(தொடருங்.)

பெயர்விழையான்.

வேள்விக்குடிச் செப்பேடுகள்.

முன்னுரை.

(கே. ஜி. சங்கரன் இயற்றியது).

இவ்வேடுகளை, 1893-ல் வெங்கையர் அவர்கள் பதிப்பிக்க நினைத்தார்கள் (Indian Antiquary தொகுதி 22 பக் 61). அதன்பிறகு, 29 ஆண்டுகள் சென்றுவிட்டன. ஆயினும், அவைகள் இன்றும் பதிப்பிக்கப்பெறவில்லை. ஆகையால், Dr. L. D. Barnett அவர்கள் அன்புடன் உதவிய லண்டன் பிரிட்டிஷ்மியூஸியத்திலிருக்கும் இவ்வேடுகளின் மஷிப்படங்களிலிருந்து நான் இப்பொழுது அவைகளைப் பதிப்பிக்கத் துணிந்தேன்.

இப்பத்து ஏடுகளில், ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் செய்யுள் உரைநடைகளமைந்த 155 வரிகள் உள்ளன. ஸம்ஸ்கிருத பதங்கள் கிரந்தத்திலுள்ளன. தமிழ்ப்பதங்கள் வட்டெழுத்திலுள்ளன.

ஸம்ஸ்கிருதப்பகுதியில் அடங்கியவரலாறுகள் பின்வருவன.

ஹிரண்யகர்ப்பமும் துலாபாரமும் இயற்றிய மாறவர்மன் என்றொரு பாண்ட்யன் இருந்தான். அவன்மகன் ரணதீரனென்று புகழ்பெற்றிருந்தான். அவன்மகன் ராஜஸிம்ஹன் என்ற மாறவர்மன் பல்லவமல்லனைப் புறங்கண்டு, ஹிரண்யகர்ப்பமும் துலாபாரமும் இயற்றி, மழவராஜன் மகள் பூஸுந்தரியை மணந்தான். அவர்கள் மகன் ஜடிலபராந்தகன் ஆண்டுகொண்டிருந்தான்,

தமிழ்ப்பகுதியில் அடங்கிய வரலாறுகள் பின்வருவன.

பாண்ட்யன் பல்யாகமுதுகுடுமிப்பெருவழுதி கொற்கையிலிருந்த நற்கொற்றனுக்கு வேள்விக்குடியை அளித்தான். அவன் வழிப்பிறந்தவர் நெடுங்காலம் அதை அநுபவித்தபிறகு, பாண்ட்யரை விலகீக்கினைகளப்பன் அதைத் தன்கைக்கொண்டான். சிறிதுகாலம் சென்றபின்பு, பாண்ட்யன் கடுங்கோன் திரும்பிவந்து தன்னுட்டை மீட்டுக்கொண்டான். அவன்மகன் அவனிசூடாமணி என்ற மாறவர்மன். அவன் மகன் செழியன்வானவன் என்ற சேந்தன் (வடமொழியில் ஜயந்தன் எனப்படும்). அவன் வழிப்பிறந்த அரிகேஸரி (பகைவர்க்கொருஸிம்ஹம்)

அலமஸமன் (தாழ்ந்தவர்க்கினியவன்) என்ற மாறவர்மன் பாழியிலும் செந்நிலத்திலும் வென்றும், நெல்வேலியில் வில்வேளியைப் புறங்கண்டும், குறுநாடரை முறியடித்தும், நாடெங்கும் தனிச்செங்கோல் கோளோச்சப் பலமுறை வென்றும், கோழி என்ற சோழர்தலைநகர் உறையூரைக் கைக்கொண்டும், ஹிரண்யகர்ப்பமும் துலாபாரமும் இயற்றினன். அவன் மகன் தென்னவானவன், செம்பியன்சோழன், மதுரகருநாடகன், கொங்கர்கோமான் என்ற சடையன் மருதூரில் வென்று, தென்திருவாங்கூரில் ஆண்ட ஆய்வேளை அழித்து, மங்கலபுரம் என்னும் மஹாநகரில் மஹாரதர் என்ற மேலச்சளுக்யரைப் புறங்கண்டான். அவன்மகன் மாறன் நெடியவழிதும், குறுமடையிலும், மன்னிருநிச்சியிலும், திருமங்கையிலும், பூவலூரிலும், கொடும்பாளூரிலும் வென்று, குழும்பூரில் பல்லவனைப் புறங்கண்டு, பெரியலூரில்வென்று, காவேரிக்கரையில் மழகொங்கத்தைக் கீழ்ப்படித்தி, கொங்கரசன் கங்காஜன்மகளைமணந்து, கோஸஹஸ்ரமும், ஹிரண்யகர்ப்பமும், துலாபாரமும் செய்து, கூடல், வஞ்சி, கோழி என்று பெயரிடப்பட்ட மதில்களையும் புதுக்கினான். அவன் மகன் தென்னவானவன், ஸ்ரீவரன் (ஸ்ரீமான்), ஸ்ரீமஹோஹரன், சினச்சோழன், புனப்பூழியன், வீதகல்மஷன் (மலம் கெடுக்கப்பட்டவன்), விநயவிச்ருதன் (தாழ்மைக்குப் பெயர்பெற்றவன்), விக்ரமப்ராகன் (விக்ரமத்தின் கரைகண்டவன்), வீரபுரோகன் (வீரர்களில் முதல்மைபெற்றவன்), மருத்பலன் (காற்றின்வலி உடையவன்), மாந்யசாஸநன் (கொண்டாடப்பட்ட அதிகாரத்தை உடையவன்), மதுரபமன் (மதுவுக்கு உவமை ஏற்பவன்), மர்த்திதவீரன் (மிதிக்கப்பட்ட வீரர்களை உடையவன்), கிரில்ஹிரன் (மலைபைப்போல் அசையாதவன்), கிகிஸ்தரன் (பாட்டில் கிக்ரன்), க்ருபாலயன் (கருணைக்கிருப்பிடம்), க்ருதாபதாநன் (நினைத்ததை நிறைவேற்றுபவன்), கலிப்பகை, கண்டகநிஷ்டுரன் (தீயவரிடம் இரக்கமில்லாதவன்), கார்யதக்ஷிணன் (கார்யங்களில் தேர்ந்தவன்), கார்முகபார்த்தன் (வில்லில் அர்ஜுநன்), பரந்தகன் (பகைவரைத்தொலைப்பவன்), பண்டிதவத்ஸலன் (பண்டிதவிடம் ப்ரியம்வைப்பவன்), பரிபூர்ணன் (நிறைந்தவன்), பாபபீரு (பாபத்தைஅஞ்சுகிறவன்), சுகுணக்ராஹ்யன் (குணத்தை ஏற்பவன்), கூடநிர்ணயன் (பிறரறியாமல் ஆலோசனை செய்பவன்) என்ற நெடுஞ்சடையன் பல்லவனைக்காவேரித்தென்கரையில் பெண்ணைகடத்தும், ஆய்வேளையும் குறும்பரையும் நாட்டுக்குறும்பிலும் புறங்கண்டான். அவனது மூன்றாம்ஆண்டில், நற்கொற்றன் வழிப்பிறந்தவன் ஒருவனுக்கு

வேள்விக்குடியை மறுபடியும் அளித்தான். இதற்கு ஆனைத்தி கொங்காசன் கங்காஜனையும் வெண்பையில் வல்லபன் என்ற மேலச்சளுக்யனையும் புறங்கண்டு, கங்காஜன்மகளைப் பூர்வாஜன்ஆயின ராஜஸிம்ஹனுக்கு மணம்முடித்த, களக்காடு (நிருகெல்வேலிஜில்லா) என்ற கரவந்தபுரத்துவைத்யன், கவி, மதுரதரன் (மிகவும் இனியவன்), மங்கல்ராஜன், மூவேந்தமங்கலப்பேரரையன் என்ற மாறன்மகன் காரி.

மேற்கூறப்பட்ட முதுகுடுமி தென்திருவாங்கூரில், பறளியாறு என்று பஃறுளியாற்றைவெட்டின வடிம்பலம்பநின்றபாண்ட்யனின்(புறம் 9-ம், உரையும்) வழிப்பிறந்தவனும், தலையாலங்கானத்துவென்ற நெடுஞ் செழியனின் முன்னவனும் (மதுரைக்காஞ்சி 759-60) ஆவான். ஆகையால், அவன் சங்ககாலத்திலிருந்தவன்.

தென்னாட்டவரின் பட்டியில், கி. பி. 500-ல் இருந்த வாஹமிஹிரர் களப்ரைக்கூறவே இல்லை. ஆனல், கி. பி. 7, 8-ம் நூற்றாண்டுகளில், பல்லவர்களில் ஸிம்ஹவிஷ்ணுவும், முதலாவது நரஸிம்ஹவர்மனும் (South Indian Inscriptions தொகுதி ii. பக்கம் 356; தொகுதி i. பக்கம் 152), மேலச்சளுக்யரில் முதலாவது விக்ரமாதித்யனும், விநயாதித்யனும், இரண்டாவது விக்ரமாதித்யனும் (Ind. Ant. தொ ix. ப 129; தொ vii. ப 303; Epigraphia Indica தொ v. ப 204) களப்ரரை வென்றதாகக்கூறிக்கொள்கிறார்கள். சங்கச்செய்யுள்களில் எங்கும் அவர்கள் கூறப்படாததால், அவர்கள் ப்ரபலமாய் இருந்த காலத்திற்கு முன்னே, பின்னேதான் சங்ககாலம் ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனல், இச்செப்பேடுகளிற் கண்ட பாண்ட்யரில் ஒருவனும் சங்கச்செய்யுள்களிற் பாடப்பெறுததால், கி. பி. 750-க்குப் பின்னர் அல்லாது, கி. பி. 600க்கு முன்னரே சங்ககாலம் என்றுதுணியப்படும். பாண்ட்யரை விலகநீக்கின களப்ரனே பின்னர்க் கடுங்கோனல் விலக்கப்பட்டதால், பாண்ட்ய நாட்டில் களப்ரரது ஆட்சியம் சிறிதுகாலமே என்றும் துணியப்படும்.

இவ்வேடுகள் வெட்டப்பட்டகாலத்து ஆண்டுகொண்டிருந்த நெடுஞ் சடையன் என்ற ஜடிலபராந்தகனது மூன்றாவது முன்னவனுயின தமிழ்ப்பகுதியின் இரண்டாம் மாறவர்மனும் ஸம்ஸ்க்ருதப்பகுதியின் முதலாவது மாறவர்மனும் ஸ்ரீவல்லபனே ஆகவேண்டும். அவனும் அவன் பெயரனும் இருபகுதியிலும் ஹிரண்யகர்ப்பமும் துலாபாரமும் இயற்றியதாகக் கூறப்படுகிறார்கள். பின்னவன் கோஸஹஸ்ரமும் செய்ததாகக்

கூறப்படுகிறான். இவைகளில், முறையே தான் நுழைந்துவந்த பொன் பசுவையும், தன்நிறையுள்ள பொன்னையும், 1000 பசுக்களையும் அரசன் அந்தணர்க்கு அளிக்கவேண்டும். இவர்களில், முதலாவது மாறவர்மன் பாழியிலும், செந்நிலத்திலும், நெல்வேலியும் வென்ற மாறன் அரிகேஸரி என்ற இறையனார் அகப்பொருளுரையில் அடங்கின கோவையின் தலைவனும், சம்பந்தமூர்த்திகளால் சைவனுக்கப்பெற்ற நெல்வேலிவென்ற நெடுமாறநாயனாரும் ஆவான்.

மாறன்பகைவன் வில்வேலியானதாலும், நந்திவர்மன் பல்லவமல்லன் னேனித்தலைவன் உதயசந்திரனின்பகைவன் சபரவரசன் உதயனன் ஆனதாலும், இங்நெல்வேலிப்போர் வேறு, உதயசந்திரன் வென்ற நெல் வேலிப்போர் வேறு. மேலும், மாறன் வென்ற சங்கமங்கைப்போர்வேறு. உதயசந்திரன் வென்ற சங்காக்ராமப்போர் வேறு. (South Ind Insc. தொ ii. 74-வது சாஸநம்).

இம்மாறன் அவன் முன்னவனின்மகன் என்னுது வழிப்பிறந்தவன் என்றே கூறப்படுவதாலும், அவன்புறங்கண்டகோளன் நாடெங்கும் தனி அரசன் என்று கூறப்படுவதாலும், சேந்தனுக்குப்பிற்காலம் பாண்ட்ய நாட்டைக் கோளன் ஆக்ரமித்தான் என்றும், தன்னுட்டை மீட்பதற்கு அவனுடன் பலமுறையும் மாறன் பொரவேண்டியிருந்ததென்றும் தோன்றுகிறது. கொல்லிகாவலன், கூடல்நாயகன், கோழிக்கோன் என்று கூறிக்கொள்ளும் குலசேகராழ்வாரே இக்கேரளன் என்று கூறத்தகும்.

சடையன் என்ற அடுத்த அரசனுக்கு ரணதீரன் என்ற பட்டப் பெயர் இருந்திருக்கவேண்டும்.

அவன்மகனே ஸம்ஸ்க்ருதப்பகுதியின் ராஜஸிம்ஹன் ஆவான். அவன்பல்லவமல்லன் என்ற நந்திவர்மனைப் புறங்கண்டதாகக் கூறப்படுவ தால், அவன்பொருத மன்னிகுறிச்சியும், உதயசந்திரன் பாண்ட்யரொடு பொருத மண்ணைக்குடியும் ஒன்றாய் இருக்கலாம். மழவஅரசன்மகள் பூஸுந்தரி கங்கராஜன்மகளாய் இருக்கவேண்டும். விம்ஹவிஷ்ணுவும், விஜயாதித்யனும் மழவரை வென்றதாகத் தெரிகிறது (S. I. I. ii. 356; I. A. vii 303). வெண்பையில் மாறன்காரி வென்ற வல்லபன், பாண்ட் யருடன் பொருத இரண்டாவது விக்ரமாதித்யன் ஆகவேண்டும் (Epi. Ind. ix. 205).

இதன் ஆணத்தி ஆனைமலைக்கோயிலைக்கட்டி, கலி 3871, கார்த்திகைமாஸம், ஞாயிற்றுக்கிழமை, ரேவதிநாளான கி. பி. 770 நவம்பர் 4-இல் ப்ரதிஷ்டைசெய்த, பாண்ட்யன் மாறஞ்சடையன் பராந்தகனுக்கு உத்தரமந்த்ரியான கரவந்தபுரத்து வைத்யன், கவி, மதுரதரன், மூவேந்த மங்கலப் பேரையன் என்ற மாறன்மகன் காரியேஆகவேண்டும். ஆனால் அவன், ப்ரதிஷ்டைநடந்து, சிறிதுகாலத்திலேயே இறந்துவிட்டான். ஆகையால், அவனுக்குப்பிறகு உத்தரமந்த்ரிபதம் அடைந்த பாண்டி மங்கலவிசைஅரையன் என்ற அவன் தம்பி மாறன்எயினன், முகமண்டபத்தைச்செய்து அதையும் கீர்த்தனித்தான் (E. I. viii. 317-21). தளித்து என்பதின் ப்ரயோகத்தை ஐங்குறுநூறு 328-ல் காண்க.

கி. பி. 770-ல் மாறன்காரி இறந்துவிட்டதால், அவன் ஆணத்தியாயிருந்த இவ்வேடுகளும், அவைகளின்காலமான ஜடிலனின் 3-வது ஆண்டும் கி. பி. 770க்கு முந்தவேண்டும். ஆகையால், ஜடிலன் கி. பி. 767-க்கு முன்னரே பட்டம் எய்தியிருக்கவேண்டும்.

வேள்விக்குடிச் செப்பேடுகள்.

[குறிப்பு:—இவைகள் Dr. L. D. Barnett. உதவிய மறிப்படங்களிலிருந்து, பிழைகளைத் திருத்தாமல், உள்ளபடியே பதிப்பிக்கப்படுகின்றன. வேண்டுவோர் பிழைகளைத் திருத்திக்கொள்ளலாம். இவைகள் இதுவரை ஒருவராலும் பதிப்பிக்கப்படவில்லை.—கே. ஜி. சங்கரன்.]

ஏடு-i; பக்கம் 2. விளிம்பில்.

(வரி-க) ஸுவஸ்திஸ்ரியஸ்ஜிதாவஸிஸிரோமணி ஸொவராஸ் ஸிவரூதாகி-ஸ்வதிவாஸகாரணஸ் । தநொதிவளவண-ஸ்கவஷ-ஸ்வரூரம் கூஷவ-ஸ்(உ)கூவ-ஸ்ஷவ்வஷ-ஸ் நஸ் விஸ்வஸ்ரோஹரஸ்ரூதை ஸொஷவி ஸ்ரூகாரணம் (கூ) (ங) கவ்வாதஞ்ஸ்ரவிஷ்வையாஷங்யஸ் வ்ராண்ஸ்வஸ்ஷ ஸ்ரூதாம் கவ்ஸ்ரஸ்வய திதியாரவ்விஜ்ரஸ்ரோணஸ்ரஸ (ச)ஸ்ஸஸ்ஷஷவி வஜ்ஜயொஸ்ரயஸ்வஸ், கஸ்ரஷ்ஷாஷ்ஸ்வொஸவ திவஸ்வஸ்ஷ-நிஸ் வ-ஸ்ரொயாஸ்வஸ்ரீநியி। (ரு) ஜ-ய திவாண்ஸ்ய நஸ்ரொஸ்ரவ்ம்ஸ் ॥ கவ்ஸ்ரஷவ்ரதி ஷவ்ஸ்ரவ்ஷ்ஹி தஸ்வாண்ஸ்ரஹிபாஸ்ரொநியெ (சு) வீ-ஸ்ரா ஸ்ரஸ்ரிஷ்ஹீ

வதிவிழ்ஹாவநெமீநெவிகலுகூயாசு; யாதூராவ்யூஷவதாவா நவ்ல (எ) ஜமதாஈகூயாய-ஃஹியி-ஃதவ்ஹெஜவ்ஸீ தூநயகூவெஃது ஸஸிநெரநாதூாவைாயாவெ்ராஹவசு

ஏடு ii. பக்கம் 1.

(வரி.க) வாதூவ்ஹவ்யுவாஈதூவாஹாஜவலுவ்யுவ்ஹுஹெதூஃவ்ரஹாவ்ஹுஃஹ்ஸொஸிவஸீதூஃவ்ஹுகுஸி (உ) ஹாவிதூயுஹ்ஸீஃதுஃவ்ஹுவெஸகூராஜ-ஃஈவநஹாரஹாஜிஸாரணைவிஸ்ஹுவ்யுவிஸ்ஹுதூராமெஹ (ங) வ்ஸாதிகிஸாஸ்ஹுதெயாயிஜிதாஸொஷாஃராரிவ்யுஹௌ,ஃஒதிஹாஒதஜிவொகுவிகுகிதியார (ச) கூாவ்ஸாஹிவஸங்கொஹாஜிதகூஸீஸொஃநுகி கூாதூிவ்ஸ்தூவகூராவ்ஹாதஹிஷெகுகிரயெ, ஊஷூாய-ஃவ்-ஃண (ஞ) தவிள்தாயி-ஃஜநதாவாஒணள்கூஃராணுவெ ஜநூாவாவஜமதயாவி-ஃதமாணஸ்ரீஸாஈவஃ-ஈாநூ (சு) வஃ॥ யாணீவஹயம வஃவ்ஹுவெதஜிஜொஃ-ஙுஃவிஹொாஈமெண,ஸவிஹூதஙகுஹாஈவ்ஹு (எ) ஜங்மஃயிஹத-ஃ-ஸ்ரிஈகூாஸொஃஹநகூஞ்நூாயாஃ॥ கூயிாஈவூதாஸாஃதிகுவமள்ங்யாயிஜி—

ஏடு ii பக்கம்-2. (விளிம்பில்-2).

(வரி-க) கூாதூிதமஃள்தெதாஜநிகுவா வாஸ்யியாஃயிவஸ்ஸாவண-ஃராஸிங்வியிவஸ்ஹுபூதிவாஃயாவ்ஹுஹிவ (ஈ) தவ்யா. (உ) தூஜவ்ஹுராணஹாவ்ஸ்ஹுா தாவ்யுதெதஜாராஜாவஹாஸ்ஹிவாராணயிராஎதிவ்யுதீகஃ,ஸொஸீஹுஸெவஹாவந.(ஙு)வ்யுவஹாராஹாராஃஹாராஃஸபாஹாவ்யுமாராவஹ்ஸாராநாயகவ்யு ॥ வாதூவ்ஹவ்யுவாராஈநூாவ்யுதிகூயதிஹ்-ஃஸ்ரி(ச) வாநூாஸீவ்ஹுஹொாந தூாஸொஷ்நஸொந்ரவெஷ்நஃணிவ்யுாதாவ்யுதாஈவிரூவ்யஃ। ஞவஸீஸ்ஸ்தூவவஃவ்ஃவ(ஞ்) ராகூயெந்ஃவதூாவஈநாபீாஃவ்தி விள்தூாசாராவிஹாஸ்ஷணஸ்ரூாதயாா ஸ்ரீஸாஈவஃ-ஈாஸியஃ வராஜ—(சு) விஹஹவ்ஸ்ராவஸீராாஹாரகெஷாஹயஸ்ரூாவிவ்யுாணஹ்யுதாஃவொவ்யு, ராராகூஷ்ஃகூஷ்ஃகூவிதாஃரீவகூஷ (எ) ஃகூஷாதஜஃகூஷாவதிராகூஷ்தாஜ்ஃ ॥ நஸொராநாராகெஷாநாவ ஹஸொராநாவஸ்ரிஈாஷஃவ்ஸொராநாஈாஸகெஷ்யாநாவ.

ஏடு iii. பக். 1.

(வரி-க) ஸரொஷதோமதம் ஹதிஸ்டிகூபாயியம்ஹபாஜி-ர்தம் வஜபதெவஜுவதீஜுஸ்டுவ (உ) தீம் । கநகமஹர்க்ரதவுஸவம் வாநம்ஸயிராஹ்ரதஸ்ரதவிவி, கதிராஷ (ங) ஸ்டுர்விவா க்ரதகஜுஷொஜ்விஜஷரிதுஸ்ராயுதிநஷ்யம் ॥ சாஹாகாஸீ நா ஜுவெநுக (ச) நுர்ாம்ஸராவதிர்ாஹஷுஸீரிவாஹ । கஜாபதா ஸ்ர்ாம்ஹராஸ்தி நகலொஜமஜி தாய-ம்ஜபி(ரு)ஹியா நம், கஸி ஷஷ்யரா ஏஹீ நஸாரம்கிதிவம்க்ஷாஹித கஜுஷா நாஷம்மம்— நதரா (சு) ஜகஸொஹிராஜராஸ்டிவ்கராஹ்யஜிர்தவாஷ வதுவீ ரம் । கஜபெஹமாணாநஷாதுர்தவ (எ) ஜ்ஹாஜாஹ்ர்ாம்ஸாரா வாஷவஜ்ஹாவம், கஹயம்ஸராணாமதவுஜாஜ்ர்வஸிவம்ஸம்பதிஸ-

ஏடு iii. பக்-2 (விளிம்பில்-3).

(வரி-1) தூவாதிர்வெஜ்ர் ॥ ராஜதாம்ஸஷஹீவாஜகிரீடா விர்தஸாவஸநம். ராஜஸிஜ்ஹரஸாதொராரா (2) ஜாஜிராஷாவ்ர்ாம வராஜதகம். ॥ வ்ருஷஜிஸவர்க்ரதாயாஜியாகியவரொஷயஜ்ட-ஞற்செ (3) ய்யப்பட்ட-து-lll-கொல்யாணபலவோட்டிக் கூடாமன்னர் குழாந்தவி- (4) -ர்த்த, பல்யாகமுதுகுடுமிப்பெருவ்ழுதி என்னும் வாணர்ாயிராஜ (5) ஞகமாமலர்ச்சோலைநளிர்சினமிசைவண்டலம்புஞ், பாகனூர் (6) க்கூற்றமென்னும்பழனக்கிடக்கைநீர்நாட்டுச், சொற்கண்ணாளர்செ (7) லப்பட்ட ருத்திராடம்ம் பிழையாதுகொற்கைகிழானற் கொற்றன்கொண், (8) டவேள்விமுற்றுவிக்க, கேள்வி அந்தணாளர்முன்பு கேட்க என்றெடுத்-

ஏடு iv. பக். 1.

(1) துரைத்து, வேள்விசாலைமுன்புநின்றுவேள்விகுடி என்றப்பதியைச், சி (2) றொடுதிருவளரச்செய்தார்வேந்தனப்பொழுதேய், நீரோடட்டிக்கொ டுத்தமை (3) யானிடு ஹாக்தி துத்தபின், னளவரிய சூயிராஜரொ அகலநீக்கி அகலிடத்தை, (4)க் கூஹ்ரனென்னுங்கலிஅரைசன் கைக் கொண்டதனை இறக்கியபின், படுகடன்முளை (5) த்தபருதிபோல் வாணர்ாயிராஜன் வெளிற்பட்டு, விடுகதிராவிரொளி விசுலகஷிற்றி (6)ருந்து,

வேலைசூழ்ந்தவியலிடத்துக், கோவுங்குறும்பும்பாடைன்முருக்கிச், செ (7) ங்கோலோச்சிவெண்குடைநீழற், றங்கொளிறைந்ததரணி மங்கை யைப், பிறர் (8) பாலுரிமைதிறலிதினீக்கித், தன்பாலுரிமைநன்கனம மைத்த, மானம்பே (9) ர்த்ததாளைவேந்தன், ஒடுங்காமன்னரொளிகர ழித்த, கடுங்கோனென்னுங்கதி- (10) ர்வேற்றென்னன், மற்றவற்குமக ஞ்சி ஹீ தலும பொதுங்கி, மலர்மங்கைஅ-

ஏடு iv பக்-2. (விளிம்பில்-4).

(1) டுமணனயர்ந்த, அற்றமில்பாவைத்தாளை, சூயிராஜ்ஜு அவனீசூளா மணி, எத்தி-(2) றத்துமிகலழிக்கு மத்தயாளை சோவஉ-ஆலுமற்றவற்கு மருவினிய ஒருமகனு- (3) ஓ, மண்மகளைமறுக்கடிந்து, விசூஉ த்தின் வெளிற்பட்டுவிலங்கல் வேல்பொ-(4) றிவேந்தர்வேந்தன், சிலைத்தடக்கைக் கொலைக்களிற்றுச், செழியன்வானவன் (5) செங்கோற்சேந்தன், மற்றவற் குப்பழிப்பின்றிவழித்தோன்றி, உயயிரியெ (6) த்துறுகடர்போலத், தெற்றென்று ஙிஙெ நடுங்க, மற்றவன்வெளிற்பட்டுச், சூ-(7) ழியாளை செலவுந்திப், பாழிவாயமர்கடந்து, வில்வேலிக்கடற்றானையை, (8) செல் வேலிச்செருவென்றும், விரவிவந்தடையாதபரவரைப்பாழ்படுத்- (9) து, மறுகாலினம் புடைதிளைக்குங் குறுநாட்டவர்குலங்கெடுத்து-(10)ங், கைந் நலத்தகளிறுந்திச் செந்நிலத்துச்செருவென்றும், பாரளவுந்-

ஏடு v. பக் 1.

(1) தனிச்செங்கோற் கொஊ ளைப்பலமு[றையுமு]ரி[மை]ச்சுற்றுமா,,,, யாளை-(2) உம், புரிசைம்மதிற்புலிஊரப், பகனுழிகைஇறவாமை இக்கோ- (3) ழிஉள்வென்றுகொண்டும், வேளாழிஉம்வியன்பரம்புமேலாமைசென்- (4) றெறிந்தழித்தும், ஹிரணயுஜஉமூம் துலாஹாஊமூம், தரணி மிசைப்பலசெய்து, (5) கஞுணர்க்கும் கஊகர்க்கும் வந்தணைக என் றித்தளித்த, உகரிஙெ அனிமணி-(6) நெடுமுடி கரிகெஉரி கஜு ஊஉஉ ஸ்ரீசோஊவ்உ-ஆ மற்றவற்கு மகனுஇக் கொற்றவே-(7) ல் வலனேர்த் திப், பொருதாருங்கடற்றானையை மருதாருண்மாண்பழித், தாய்வே(8)- ரே அகப்பட வயென்ணுமை எறிந்தழித்துச், செங்கொடியும்புதான்கோட்- (9) டுஞ் செருவென்றவர்கினைந்தவீர்த்துக், கொங்கலருந்தும்பொழில் வாய்க்கு-(10) இலோடுமஇலகவு, மங்கலபுரமென்னும் உஹாநமஊஞ் உஹாஊயஙெள

ஏடு v. பக். 2. (விளிம்பில்-5).

(1) றிந்தழித்தறைகடல்வளாகம் பொதுமொழிஅகற்றிச், சிலஉம்புலி உங்-(2) கயலுஞ்சென்று, நிலையமைநெடுவரை இடவகிற்கிடாய், மண்ணினிதாண்ட-(3) தண்ணளிச்செங்கோற், றென்னவானவன் செம்பியன்சோழன், மன்னர்மன்னன்மது-(4) ரகருநாடகன், கொங்கின்றநெடுஞ்சுடர் வேற்கொங்கர்கோமான் கோச்சடையன், (5) மற்றவற்கு வ ுதுஞ்மண் மகளதுபொருட்டாக மத்தயானைசெலவுந்தி மான-(6) வேல்வலனேந்திக், கடிவிசையாலெதிர்ந்தவரை நெடுவயல்வ ய்கரழி-(7)த்துக், கறுவடைந்த மனத்தவரைக் குறுமடைவாய்க்கூர்ப்பழித்து, ம-(8) ன்னிகுறிச்சிஉங் கிருமங்கைஉ முன்னின்றவர்முரணழித்து, மேவலோ (9) ர்கடற்றீன ஓடேற்றெதிரேய்வந்தவரைப், பூவலூர்ப்புறங்கண்டுங், (10) கொடும்புரி சைநெடுங்கிடங்கிற் கொடும்பாளூர்க் கூடார் கடும்பரி-

ஏடு vi. பக். 1.

(1) உங், கருங்களிறுங் கதிர்வேலிற்கைக்கொண்டுஞ், செ(ழும்புரவிப்)பல்லவனீ[க்]- (2) குழும்பூருட்டேசழிய, எண்ணிறந்தமால்களிறுமிவுளிகளும் பலகவர்ந்-(3) தும், தரியலராய்த்தறித்தவரைப்பெரியலூர்ப்பிடழித்தும், பூவிரிஉ-(4) ம் பொழிற்சோலைக்காவிரியைக்கடந்திட், டழகமைந்த வார்சிலைஇன்மழகொ-(5) ங்கமடிப்படித்து, மிண்டொளியமணிமிசைக்கு மெழிலமைந்தநெடும்பு- (6) ரிசைப், பாண்டிக்கொடுமிடிசென் றெய்திப் வஸு ுவதியது வ துவாஉழ பணிந்தே-(7)த்திக், கநகராசி உங்கதிர் மணிஉம் மனமகுழக்குடத்திட்டுங், கொங்க-(8) ரவந்நறுங்கண்ணிக் முமு ராஜனெடு ஸ ஸுஞ்செய்தும், எண்ணிறந்தன-(9) மொஹஹஸ்ர மும் ஹிரண்ய ஹ-ருமுங் துலாஹாரமும், மண்ணின்மிசைப்பலசெய்தும்(10)றைநாவினர்குறைதீர்த்துங் கூடல்வஞ்சிகோழிஎன்னுமாடமாமதி-

ஏடு vi. பக். 2. (விளிம்பில்-6).

(1) ல் புதுக்கிஉம், மறைகடல்லளாகங்குறையாதாண்ட, மன்னர்மன்ன தென்னவர்மருக-(2) ன், மானவெண்குடைமான்றேர்மாறன், மற்றவற்கு மகனுகிமாலுருவின்வெளிற்ப-(3) ட்டுக், கொற்றமுன்றுடனியம்பக்குளிர் வெண்குடைமண்காப்ப, பூமகளுந்பு-(4) லமகளுங்நாமகளுங்கலனேத்தக், கலிஅரைசன்வலிதளரப்பொலிவினெடுவீ- (5) ற்றிருந்து, கருங்கட லுடுத்தபெருங்கண்ணூலத்து, ஈற்பெரும்படைஉம்பா-(6) ற்படப்பாப்

பிக், கருதாதுவந்தெதிர் மலிந்தகாடவனைக்காடையப், பூவி-(7) ரிஉம் புனற்கழினிக் காவிரிஇன்றென்சரைமேற் ,றண்ணகம்மலர்ச்சோலை-(8) ப் பெண்ணகடத்தமர்வென்றும், திவாய்அதிலேந்தித்திளைத்தெதிரேய்வந்-(9) திறுத்த, ஆய்வேளுங்குறும்பரையுமடலைமருளழித்தோட்டிக், காட்டு-(10) [த்] தறும்புசென்றடையநாட்டுத்தறும்பிற்செருவென்று, மறை கடல்வளா-

ஏடு vii. பக். 1.

(1) க [மொ] ரு [மொ] ழிக்கொளிஇய, சிலைமலிதடக்கைத்தென்னவான வன்அவனை-(2) ய், ஸ்ரீவாரு ஸ்ரீகொநாஹாரு சினச்சோழியன் புனப் பூழியன், வதிகுநஷநு (3) விநயவிஸ்ரூதாநு. விக்ரவோராகநு வீர வாரொகநு ஸாரூவுநு சாந்யஸாவஸநு உநவிவீநு (4) ஶிஷ்த வீராநு மிரிவ்ஷ்ரீராநு நீதிகிளராநு க்ரவாலயநு க்ரதாவதாநு கலிப்பகை கூண(5) கநிஷ்ரூராநு கூரயஃஉகூணிநு காஃஃகவாயஃநு வராஜகுகநு வணிதவஸ்ஸுநு வரிவஃணஃநு வ (6) வஹீராரூ குரைஉறு கடற்படைத் தானை முணஸ்ராஹ்நு. முஃவநிணஃயநு நிரைஉறுமல-(7) ர் மணிநீண்முடிநெரிய, கோன்னெடுஞ்சடையமற்றவன் றன், ராஜ்யவஸ்ஸுநு மூன்று-

ஏடு vii. பக்-2. (விளிம்பில்-1).

(1) வது செலாநிற்ப, ஆங்கொருநாண், மாடமாமதிற்கூடற்பாடுநீத்தவர் (2) சூகெராயிக்கக், கொற்றவனேய்மற்றவரைத்தெற்றெனநன்குகூவி, என்னேய்துங்குறை-(3) என்றுமூன்னுகப்பணித்தருள, மேனிணின்குரவ ராற்பான்முறைஇன்வ-(4) மூவாமை, மாகந்தோய்மலர்ச்சோலைப்பாகனூர்க் கூற்றுத்துப்படுவது, (5) ஆள்வதானை அடல்வேந்தேய் வேள்விகுடி என் னும்பியருடையது, ஓ-(6) ல்காதவேற்றானை ஓடோதவேலி உடன்காத்த பல்யாகமுதுகுடுமி- (7) ப்பெருவழுதி என் னும் வாகெரூராற், வேள்விகுடிஎன்னப்பட்டது (8) கேள்வியிற்றரப்பட்டதனைத், தளக்க மில்லாக் கடற்றானையாய் கூஹூர (9) ராலிறக்கப்பட்டது, என்றுநின் றவன் விஜாவுஞ்செய்ய நன்றுநன்றென்று-(10) மூறுவலித்து, நாட்டா னின்பழமையாதல் காட்டிநீ[கேளென்]னுநாட்டிற்றன்-

ஏடு viii. பக்-1.

(1) பழ[மைபாதலிகாட்டி]றைங்க[ப்பொ]ழுதே[ய்காட்]ட, மேனிலை[ங்]குர-(2)வாற்பான்முறைஇற்றரப்பட்டதை, எம்மானுந்தரப்பட்டதென்று செ-(3) ம் மாந்தவனெடுத்தருளி, விற்கைத்தடக்கை விறல்வேந்தன்கொற்கைகிழா-(4) ன் காமக்காணிநற்சிங்கற்குத், தேரோடுங்கடற்றானையான்னீரோடட்டிக்கொ-(5) டுத்தமைஇன், மற்றிதற்குப் பெருநான்கெல்லை தெற்றென விரித்துரைப்-(6) பிற், புகாறுபொழின்மருங்குடுத்தநகருஎல்லைக்கும் மேக்கும், மற்றிதற்கு (7) த்தென்எல்லை, குளந்தைவங்கூழ்வந்தைசைக்குங், களந்தைக்குளத்திலாலுக்கு (8) வடக்கும், மற்றிதற்குமேலெல்லை, அற்றிமில்லாக்கொற்றன்புத்தூர், கொடுமைய்இ-(9) ருப்பைச்செய் இடைமேற்றலைப்பெருப்பிற்குக்கிழக்கும், மற்றிதற்குவடபா-

ஏடு viii. பக். 2.

(1) லெல்[லை]காயலுட்கமலம்மலரும்பாயலுள் வடபாலைப்பெருப்பிற்குத்-(2) தெற்கும், இவ்வியைதபெருநான்கெல்லையிற்பட்ட பூமிகாராண்மைமியாட்சி-(3) உள்ளடங்க மேலெங்குவாற்குடுக்கப்பட்டபரிசேய் எம்மானுங்கொடுக்-(4) கப்பட்டது, மற்றிதற்காணத்திருற்றமின்றிக்கூறுங்காலைக், கொங்கரவங்க-(5) ருங்கண்ணிக் ம்ம்ராஜநது கூந்ராஜ்ஜ்ஜ், கொங்கர்கோற்குக்குணந்துகொடுப்ப, ஆர்ப்-(6) பரு அடற்றானைப் வ்ஙிவ்ஸ்ராஜர் புகன்றெழுந்து, வில்விசவுங்கடற்றானை கூலுஹனை-(7) வெண்பைவாய், ஆளமருள்ளழிந்தோடவாளமருளுடன்வவ்விய, எனப்பொரி-(8) இகலமருளிடிஉருமென வலனேந்திமானத்தானை, ஷஉவீகூலுண்மன்னர்கோ-(9) னருளிற்பெற்றுங், கோல்வளைக்கும்வேற்றானைப்பல்வளைக்கோன்குணர-

ஏடு ix. பக். 1.

(1) ப்பட்டும், பொரவந்தவர் மதந்தஷிர்க்குங் கரவந்தபுரத்தவர்கு[ல]த்தோன்றல், மாவேங்-(2) துங்கடற்றானைமூவேந்தமங்கலப்போரையனுகிய, வெஷகுஸிவாஷணி மா-றங்கா-(3) ரி-இப்பிரமதேயமுடையகொற்கைகிழான்காமக்காணிசுவரஞ்சிங்கன், இ-(4)தனுள்மூன்றிலொன்றுந்தனக்குவைத்திரண்டுகூறும் ஓம்பதின்மர்வ்ராஹ்மண (5) ர்க்குரோடட்டிக்கொடுத்தான், இதனுள் மூர்த்திஎயினஸ்சவைஷடொ-(6) த்தது நான்கையப்

படாகாரமுடையவன், இதனுட்டனக்குவைத்த ஒருகூற்றினு-(7)ந் தம்பி மார்க்குரான்குந் தஞ்சிற்றப்பனர்மக்களுக்குஆறும்வலெ(8)ஒடொத்த படாகாரங்கொடுத்தான். இப் பூஷணி பாடின சேனப-(9) தி எனுதி ஆனை சாத்தஞ்சாத்தற்கு மூன்றுகூற்றுகுமாய்த்-(10)தங்களோடொத்த நான்கு படாகாரங்கொடுத்தார்.-III-

ஏடு ix. பக். 2.

(க) சுவீ நூம்மஊாஜொயூாரு தாரீஸாஷ்ரவிஷ கவிவ-ாதீ சூஜாவிரவ்வெஷ்கூாவஷுவாரூா (உ) யிவாஷவ்வீ ॥ ரு தூா ஸுரீவாரக்ஷ்தீவிஷயீ தவிஷ்வா நூஷாஹியஉ-ியஸவீவாரு (ங) வஷ்வ வஷ்ர், யாதெஷ்வவஷ்ஷ ூவிவிஷ்மஷ்வ நஷயாவி ரு தநிவ ணஷ்ரதய்ீ வுயிவீஸுரெநூா (ச) நஹீஷ-ிஜிவுஷா நாஷெவ ஷாநஉநுஷ்ஷிஷ்டுதெ நஷாவீஷ-ிஜிஹாரணா தாவ(ரு)உநுஷ்விபிய தெ ஷாதாஉஸா நூஷ்ஹா தியொஹரெஉஸஹஜிவ கூதிதா நா மதா (சு) நீஹகூஷ்ரா நிகூஷ்ரு நஜூரு ॥ ஷ்ஷு தாம்வாரஉ தாம்யொஹ ரெதவஷூஸ்ரா (எ)ம நதவ்வு நாரகாவெஷ்ரா ஷிஜ்வுதெநிஷ்ஷ்ரதீஸ் கவிஸ்.வஹூஹிவ-ஷூஷ்யா-

ஏடு x. பக்-1.

(1) உ தூாஷூஜ்வுதெஹி தஷாயிவெஉ யவ்யவ்யஷாஷ-ி ஷ்ஷவ்வு தவ்வு த(2)ஷாவஷுழ் ।।। உகவாரு ஊவெவெஷவெயஉ-ி ஸ்ரோகா: (3) மற்றினைக்காத்தார்மலரடிஎன்முடிமேல் என்று கொற்றவ னேய்பணி-(4)த்தருளித்தெற்றெனத் தா ூவாவ நஞ்செய்வித்தான்- -III-இஃதெழுதி-(5) ன சுத்தகேசரிப்பெரும்பணை காரனுக்கு பெருமக் கள் அருளாற்பெற்ற-(6) து ஒரு இல்லவளாவும் இரண்டுமாச்செய் உ-ம் ஒரு புன்செய் உ-(7)ம் பெற்றான், இவையூஷுகெவாரிப் பெரும்பணைகா னெழுத்து.

ஸ்ரீ:

மனோன்மணீயம்.

(இரண்டாம்பதிப்பு.)

இது, திருவனந்தபுரம் மஹாராஜாகலாசாலையில், தத்துவசாஸ்திர போதகாசிரியராயிருந்த ராவ்பஹதூர் P. சுந்தரம்பிள்ளை M.A., அவர்களால் இயற்றப்பட்டுப் பிரஸித்தியடைந்ததொரு நவீன நாடகம். இதன்பகுதிகள் சென்னைச்சருவகலாசங்கத்தாரால் யப். ஏ. வகுப்புக்குப் பாடமாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்புத்தகத்துக்கு, இப்பொழுது திருவனந்தபுரம் உயர்தர நீதிமன்றத்தில் நியாயாதிபதியாயிருக்கும் ஸ்ரீமத் K. G. சேஷையரவர்களால் முன்னமே ஆராய்ச்சியுரை பொன்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கிறது. பல சிறந்த அறிஞர்களால் இப்புத்தகம் நன்குமதிக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் முதற் பதிப்பாய் வெளிவந்தபிறகுதான் ஆங்கிலம்வல்லதமிழ்மக்கள்பலரும் தமிழ் ஒரு தனித்தஓமொழி என்று மதிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். இதனையியற்றிய பிள்ளையவர்களது கல்வித்திறமையும், ஆற்றலும், அறிவுடைமையும் அறியாதவர்களில்லை. பிள்ளையவர்கள் நீண்டகாலம் நில்லாதுசெல்லினும் அவர்தம் புகழினை ஈண்டு நீண்டிருத்தவேண்டி. இப்புத்தகத்தினை இரண்டாமுறை பதிப்பித்துதவிய திருவனந்தபுரம் ஹைக்கோர்ட்டுவக்கீல் ஸ்ரீமத் S. வையாபுரிப்பிள்ளை, B.A., B.L., அவர்களது தமிழறிவுடைமையும் தமிழபிமானமும் பாராட்டத்தக்கன. வேண்டுவோர் ஸ்ரீமத்-S. வைபாபுரிப்பிள்ளையவர்கட் கெழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

பிழைதிருத்தம்.

செந்தமிழ்த்தொகுதி உயி-பகுதி ச-ல் (தை மதி-ஹை மாசிப்பகுதியில்) கடைந-ஆம்பக்கத்து உடை-ஆம்வரியில் வடமொழியிலக்கியவன்மையை என்றிருப்பதை ஆம்மொழியிலக்கியவன்மையை என்று திருத்திக்கொள்ளவேண்டும்.

கீதாஞ்சலி.

விருத்தம்.

அந்தமுறுதெனப்படைத்தாயருட்சித்தத்தால்
அழியுமிந்தப்பொய்யுடலாங்கலத்தினுரும்
பந்தமுறுமலப்பெருக்கைப்புறத்தேபூற்றிப்
பதிஞானம்புத்தாவியெனவுள்ளேற்றிச்
சந்தமுறுஞ்சிறியபைம்புற்குழல்போலென்னைத்
தரணியிடைகீழ்மேலாந்தலங்கண்முற்றும்
சொந்தமுறநடத்திநித்யபோனந்தச்
சுருதியமுதூட்டினுய்துதிக்கமாதோ. (1)

என்றுமருட்சக்திநிறைதிருக்கையேதை
இதயமதிற்படக்கரையிலின்பந்தேங்கி
நன்றுபொலிந்திசைமேவிநாவால்நாயேன்
நவிலறியாஞானமதைநவிலச்செய்தே
குன்றனைகொடைபொழிந்துசிறியேன்புன்கை
கொளக்கொளவேவற்றுதுகொடுத்துமுன்னே
சென்றபலவூழிசெலவின்னுஞ்செல்லும்
சேணூழிவரையுமெனைக்காக்குந்தேவே. (2)

அடியேனைப்பாடெனநீயழைக்கும்போதென்
அகங்குழைந்துகளிப்பினிருவிழியாறும்
படியேயென்முகந்தோயப்பவத்தேன்காணப்
பங்கயமாந்திருமுகத்தைப்பார்த்துப்பார்த்து
மிடிசேரென்னிசையில்லாவாழ்வையெள்ளி
விழுமியசீரொழுபாவாழ்வைவேண்டிப்
படிதோயுங்கடல்கடந்துகுடம்பைநோக்கும்
பைம்புனலைவீடறைஞ்சிப்பாடுவேனே. (3)

ஐயனேநின்சமுகமடையவேண்டின்
அன்புருகும்பாவின்றிவழியுமுண்டோ
கையனேயுபினும்நான்பாடப்பாடக்
கனிந்துநீபித்தங்கொள்ளுங்கனிவுகண்டே

துய்யபாச்சிறைவிரித்துப்பறக்தேயெட்டாத்
தூரியாதீதத்தடிகள்தொட்டேனப்பால்
மெய்யெலாமயர்க்தென்னைமறந்தின்பாழ்ந்து
விண்ணவரீதோழனென்றேன்தலைவரீயே. (4)

என்னைபிங்காண்டடிமைகொண்டோனிசைக்குகாதம்
இதம்விடந்துமெய்மறந்துகேட்பதல்லாற்
பின்னையானதெனவேபேசக்கல்லேன்
பேரூலகைத்தாங்குமொலீயதுவெயாகி
மன்னியவானிடைமருவிப்பரந்துசென்று
மலையனையதடையெல்லாமறுத்துப்பாய்ந்தே
துன்னுபரஞ்சோதிகிர்வாழ்வைநல்கும்
தோமிறய்யவொலியாகித்துலங்குமாதோ. (5)

பண்ணூர்ந்தமொழிகொடுபாடும்வண்ணம்
பண்பிலேனிதங்கூர்ந்தங்கைசந்துபாட
விண்ணூர்ந்தாதமிகவேண்டினேன்யான்
வேண்டினுமென்பாச்கள்வெறுஞ்சொல்லாய்நாயேன்
உண்ணூர்ந்தவேட்கைமுற்றுந்தணிந்ததின்றுல்
உளறினெனலறினேனுள்ளதொன்தே
அண்ணுந்துகூப்பிட்டேனழியாதுந்தன்
அமிர்தமார்நாதவலியகப்பட்டேனே. (6)

வேறு.

என்னுயிர்க்குயிரேயீசாவியங்குமென்னுடலத்தெங்கும்
மன்னுசிற்சக்தியாய்வாழ்வினைவழங்கலாலே
புன்மயவழுக்குநீக்கிப்புனிதமார்புரையில்தேகம்
தன்னைநீகோணவென்றும்தமியனேன்முயல்வனன்றே. (7)

உள்ளுறுமிதயத்தன்னில்உளதிலதறிந்தேயுண்மை
தெள்ளுறுமொளியைநாட்டுஞ்சிறந்தொளிரீயேயாலல்
கள்ளுறுதீயவெல்லாம்கடிந்தென்றன்கருத்திற்பொய்ம்மை
கொள்ளுறுவண்ணம்நிற்கக்குறித்தியான்முயல்வனன்றே. (8)

ஏற்றங்கொளென் னுள்ளத்திலிலங்கிநீகோயில்கொண்ட
ஆற்றினைமதித்தர்ங்குள்ளவழுக்கழித்தன்புசார்த்தித்
தேற்றங்கொள்குணங்கள்பூக்கத்தேவினைநடுவிலேற்றும்
மாற்றரும்பெருமைவாழ்த்திவரிதமுயல்வனன்றே. (9)

செய்புமெய்செய்கையாவுஞ்சிறந்திடச்செய்யும்சக்தி
ஐயநின்னுடையதென்னுமறிவினையறிந்தநாளும்
உய்யுமாறடியேன்ஞாலத்துவந்திவாழ்வில்மேலோன்
பெய்யுநற்கருணைதோன்றப்பெரிதியான்முயல்வனன்றே. (10)

வேறு.

பக்கமதிலோர்கொடியேனும்பாவியிருக்கும்பரிசுற்றால்
வைக்குநினைவுவேறொன்றில்வருமோவளருந்தொழிலெல்லாம்
தொக்கபின்னர்வைத்தேயான்சோர்வில்லாமற்றொழுதாறி
மிக்ககருணைமுதற்பெற்றேவிஞ்சுந்தொழில்கள்புரிவேனே. (11)

என்றுன்னெளிசேர்முகங்காணுதிருந்தேனெவென்னிறைவாகேள்
அன்றென்னுள்ளத்தாறலிலாதவியாக்கவலைக்காளாகித்
துன்றும்வெள்ளத்தினபினைதொலையாக்கையில்கடல்மூழ்கி
நின்றுதுதும்பிச்செயுஞ்செயல்கள்நோய்மூடியாதலேவேனே. (12)

விரும்பும்வேளிற்பிறந்தக்கால்வெயில்தோய்என்பல்கணிவாயிற்
சுரும்பின்கீதத்தொனிகேட்கும்துணர்கொண்மலர்க்காநிழல்குறுகி
அரும்புங்கவலையிலாதெங்கும்ஆனந்தம்பொழியவ்வேளை
கரும்பிற்கினியமுகங்கண்டென்கடவுட்கென்னைப்படைப்பேனே. ()

வேறு,

வாடியவென்னிதபமலர்மண்மடிமேல்வீழாமுன்
தேடியசீயதைட்பறிப்பின்செங்கைக்குநோவுமுண்டோ
சூடியவுன்மார்தனிற்றொங்குமிடனின்றெனினும்
நாடியவுன்கப்பரிசநாபேற்குப்போதாதோ. (14)

கங்குலீபகலாயடியேன்காத்திருந்தன்சமலபதம்
தங்கியேயிதம்பூக்கச்சால்வுமே அருச்சித்தேன்
பொங்குநிறப்பூவழகும்பொலிமணமுமிலதேனும்
அங்கதனையேணிதல்ஆகாதோஆள்வோனே. (15)

R. R. குணரத்நம் B.A.,

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஎ.] ஹேவிளம்பி- வரை சித்திரை-மீ [பகுதி கூ.
Vol. XX. April—May—1922. No. 6.

ஸ்ரீ:

தமிழ்வரலாறு.

(பிற்பாகம்–முற்பகுதி.)

இதன் முற்பாகம் முன்னமே வெளியிடப்பட்டது. இப்பொழுது இதன் பிற்பாகத்தின் முற்பகுதியும் தஞ்சை ஸ்ரீமான் ராவ்பஹதூர் K. S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்களாலெழுதப்பட்டு 187-பக்கங்களில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

இதில், முதலாங்காலப்பகுதியிற் சங்காலவரலாறுகளும், இரண்டாங் காலப்பகுதியிற் சைவவைணவசமயப்பிரசாரகர்களின் காலவாராய்ச்சி களும் விளக்கமாயெழுதப்பட்டுள்ளன.

அவற்றுள், பொய்கையார் பெருந்தேவனார், கல்லாடர், ஔவையார் முதலிய பெயர்படைத்த புலவர்கள் வெவ்வேறுபலருளரென்றுகாட்டி யிருப்பது சரித்திர ஆராய்ச்சிசெய்வார் முன்பின் முராணுற் றிடர்ப்படா திருக்கும்படி சிக்கெனத்தவிட்டதாயிருக்கிறது

களவியலுரை நக்கீரரெழுதியதன்றென்று வியக்தமாய் நிரூபித் திருப்பது சரித்திரவாராய்ச்சிசெய்பவர்களுக்கு மிகுந்தசாதகமாயுள்ளது.

மற்றும், முதலாங்காலப்பகுதியிலுள்ள நூல்களின்விருத்தாந்தங் களை ஒருங்கிலக்கப்படத் தொகுத்தெழுதியிருப்பது தமிழ்நூல்களின் விஷயந்தெரியப்படிப்பவர்க்கு மிகவும் பயன்படத்தக்கது.

இதில், சைவசமயகுரவர்களின் காலவாராய்ச்சி விரிவாயும் தெளிவாயும் எழுதப்பட்டிருக்கிறது. ஆழ்வார்கள்கால ஆராய்ச்சியும் அறிதற்கெட்டிடமட்டில் அடித்தெழுதப்பட்டிருக்கிறது.

மேலும், ஆராய்ச்சிசெய்து தெளிவடையவிரும்புவார்க்கு இப்புத்தகத்திற் சொல்லிய விஷயங்கள் அவசியம் அறியவேண்டியனவாயுள்ளன.

இன்னும், தமிழ்ப்புலவர்களின் சரித்திரகாலங்களை ஆராய்ச்சி செய்து தெளிவடையவிரும்பும் ஆங்கிலங்கல்லாத தமிழ்ப்புலவர்களுக்கு இப்புத்தகம் இன்றியமையாததொன்றென்று சொல்லத்தகும். இப்புத்தகத்தையெழுதி வெளியிட்ட பிள்ளையவர்களுக்குத் தமிழுலகம் நன்றிபாராட்டக்கடமைப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 1—8—0 வேண்டுவோர் பிள்ளையவர்களுக்கு எழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

அந்தணர் என்போர் யாவர்.

அந்தணர் என்னும் சொல், அம்=அழகிய (செம்மையான), தணர்=தண்மை (குளிர்ந்த தன்மை) யுடையவர் (அதாவது, செம்மையான கருணைவாய்ந்தவர்) என்று பொருள்படும். அங்ஙனம் உயிர்களிடத்திற் கருணையுள்ளார் யாவரும் குணத்தால் அந்தணர் ஆவரேயாயினும் அது, பிராமணர் என்ற ஒரு ஜாதியாரையே சிறப்பாகக்குறிக்கும். இந்தச் சிறப்புப்பொருளை இக்காலத்திற் சில தமிழர்கள் மறுக்கிறார்கள். அவர்கள் எந்த ஆதாரம்கொண்டு மறுக்கிறார்களோ நமக்குத்தெரியவில்லை. திருக்குறள் 3வது அதிகாரம், 10வது செய்யுள் தங்களுக்குச் சான்றாக இருக்கிறதெனக்கூறுவார்போலும். அதாவது:—

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்." என்பதாம்.

இக்குறள் அந்தணர் யாவர் என்று குறிப்பிடவந்ததேயொழிய, அறவோரை வரைய வந்ததில்லை. இச்செய்யுள் உள்ள அதிகாரம் பார்த்தார்

பெருமையைக் கூறுவது. அவர்கள் ஐம்புலன்களை அடக்கி யறம் கைக் கொள்ளுபவர். அவ்வறங்களிற் சிறந்ததும், எளிதிற் செயவல்லதும், உலகிற்கு நன்மை தரத்தக்கதுமாயது "அஹிம்ஸை." இந்தத்தர் மத்தை யாவரும் செய்யவேண்டியதாயினும், சிலர் ஜாதி பற்றியும், தொழில் பற்றியும் பழவினையின்பயனுப், ஹிம்ஸையை விலக்க இயலாத வர்களாயிருக்கின்றனர். அறத்தின் ஆறு பலவிதம்; ஆகையால் அறவோரும் பலராவர். என்றாலும், யாதொரு உயிர்க்கும் ஹிம்ஸையைச்செய்வ தில்லை என்று சங்கற்பித்து அவைகளிடம் கருணைபாராட்டுவதையே முக்கியதர்மமாகக்கொண்ட ஒருஜாதியாரேனும் அறவோராவர் என்று திருவள்ளுவநாயனர் "அஹிம்ஸையை" மேலானதர்மமாக உலகத்துக் குத் தெரிவிக்கவும், அதைக்கைப்பற்றிய பிராமணர்களே அறவோர்கள் என்று சிறப்பிக்கவும் அங்ஙனம் கூறினர் என்று விளங்குகிறது. ஆத லால் இக்குறளுக்கு 'மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மைபூண்டொழுகலான், அந்தணர் என்போரே அறவோராவர்' என்று பொருள்கொள்ளல்வேண்டும். வேறு எவ்விதம் கொள்ளினும் சிறப்பன்று. எளிதிற் பொருள்கோடலும் அன்று. அதிகாரமுறைக்கும் முரண்.

இனி, அந்தணர் என்பது ஒருஜாதியின்பெயராய்ப் பிராமணரையே குறிக்கும் என்பதற்குப் பிறமேற்கோள்களும் உள.

"ஐயர் வேதியர் இருபிறப் பாளர்
மெய்யர் மிக்கவர் மறையோர் பூசுரர்
அந்தணர் நூலோர் அறுதொழிலாளர்
செந்தீ வளர்ப்போர் உயர்ந்தோ ராய்ந்தோர்
ஆதி வருணர் வேத பாரகர்
விப்பிரர் தொழுகுலத் தோர்வேள்வி யாளர்
மூப்புரி நூலோர் முனிவ ரென்றிவை
நற்பிலி பார்ப்பார் தம்பெயராகும்."

என்ற சேந்தன்திவாகரச்சூத்திரத்தில் அந்தணரைப் பார்ப்பார் என்றும், அறுதொழிலாளர் என்றும் வழங்கப்பட்டிருக்கிறது. இது ஒரு சாதி யாரைக்குறிக்கிறதேயன்றி, குணத்தினரைக்குறிப்பதன்று. இங்ஙனமே, சூடாமணிநிகண்டிலும்,

"ஐயர்வே தியரே நூலோ ரறுதொழி லாள ராய்ந்தோர்
மையில்பூ சுரரே செந்தீ வளர்ப்பவர் தொழுகு லத்தோர்

பொய்யிலந் தணரே யாதி வருணர்மூப் புரிநூன் மார்பர்
மெய்யர்விப் பிரரே வேத பாரகர் வேள்வி யாளர்''
''இருபிறப் பாளர் பார்ப்பா ரேற்றமேற் குலருயர்ந்தோர்
வருமறையர்தம்போரா'' என்றும்,

ஒரு ஜாதியாரைக்குறித்து வழங்கப்பட்டிருக்கிறது. 'பொய்யிலந்தணர்' என்றுகூறியது அக்காலத்திலேயே போலியந்தணராய் ஏனையோரும், அந்தணர் என்று தங்களை யழைக்கமுயன்றதுபற்றிப்போலும். திவாகரத்திலும் அங்ஙனமே ''தப்பில் பார்ப்பார்'' என்று கூறியது தப்புடைய பார்ப்பாருமுளர் என்று சுட்டிப்பிக்கிறது. மேலும், குறளாசிரியர், செங்கோன்மை என்ற அதிகாரத்துள்,

''அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியா
கின்றது மன்னவன் கோல்''—என்றும்,

கொடுங்கோன்மை என்ற அதிகாரத்துள்,

''ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்''—என்றும்,

கூறியிருப்பதை ஒப்பிட்டுப்பார்த்தால் அந்தணர் என்பதும் அறுதொழிலாளர் என்பதும் ஒரு ஜாதியாரான பிராமணரைக் குறிக்கின்றனவன்றிப் பொதுவாய் அறவோரைக் குறிக்காமை காண்க.

இன்னும், குறளாசிரியர் 'ஒழுக்கமுடைமை' என்னும் அதிகாரத்தில்,

''மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்''

என்று அருளியதில், 'பார்ப்பான் பிறப்பொழுக்கம்' என்பதனால், பிறப்பாற் பார்ப்பானை உணர்த்தியதேயன்றி, பார்ப்பான்குணமுடைய ஏனையோரைக் குறிக்காமை தெளிதில் உணரப்படும்.

மேலும், தமிழிற் சேக்கிழார்புராணத்தில் அந்தணர்வீதியென்றும், சுந்தரமூர்த்திநாயனர்சரித்திரத்தில் ''அந்தணர் அடிமைபூதல் கண்டிலம்'' என்றும் வழங்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் ஜாதி அந்தணரைக்குறித்தே சொல்லப்பட்டிருக்கின்றன.

இதுநிற்க; சிலர் குறளாசிரியர், கிறிஸ்தவமதக்கொள்கையைப் பெரும்பாலும் பற்றினவர் என்றும், வேறுசிலர் சமணமதக்கொள்

கையை உட்கொண்டவர் என்றும், கூறுவர். தமிழரிற் சிலர், வள்ளுவர் ஆதித்திராவிடரின்மதத்தையும் ஆசாரத்தையும் கைக்கொண்டவர் என்று வ்யவஹரித்து, ஆரியரல்லாதவரின்மதம் ஒன்று தனியே தென்னாட்டிலிருந்ததாயும், அந்த மதாசாரத்தைக் குறளாசிரியர் குறளில் வெளியிட்டிருக்கின்றனரேபன்றி, ஆரியமதாசாரத்தைச் சொல்லவில்லை என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். இவை மெய்யன்று. ஏனெனில், குறளாசிரியர் அபிப்பிராயத்தை அவர் இயற்றியநூலிலிருந்தும் அவர்காலத்திருந்த வித்வான்களுடைய மேற்கோளைக் கண்டும் தெரிந்துகொள்ளவேண்டுமேயன்றித், தம் மனம்போனவாறு கூறுவது சரியன்று.

ஆரியத்தில் ஸ்மிருதிகள் எங்ஙனம் தர்மத்தை வேதத்திலுள்ளபடி விளக்குகின்றனவோ, அங்ஙனமே, ஆர்யபாஷை தெரியாதவர்களுக்கும், வேதத்தில் அதிகாரமில்லாதார்க்கும் பயன்படுமாறு, சுருதிஸ்மிருதிகளின் அபிப்பிராயத்தைத் தமிழிற் குறளாசிரியர்செய்ததாகத் திருவள்ளுவமாலையிற் பலவித்வான்கள்பாடலால் நன்குவிளங்குகிறது. விரிப்பிற் பெருகுமாகையால் வெள்ளிவீதியார்மொழிந்த செய்யுளைச் சான்றுக வரைந்து இதை முடிப்பாம்.

"செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
இதற்குரிய ரல்லாதா ரில்"

இதைப்பார்க்கிலும், நமது மதாசாரத்வேஷிகளான பாதிரிகள் அபிப்பிராயமும், தங்கள் நன்மையைத் தாங்கள் தெரிந்துகொள்ளாத நப்பிராமணர்சிலருடைய விபரீதக்கொள்கையும் உண்மையால் சாகடிப மாகாது.

டி. வி. சாமிநாத ஐயர்,
பி.ஏ., எல்.டி.,
திரிசிரபுரம்.

ஸ்ரீ:

புரூரவசரிதை.

[ககூஅ-ஆம் பக்கத்தொடர்ச்சி].

யாகப்படலம்.

இன்னாள்கழிந்தேகக்கிரேதையா
முன்னீயூழிமுடிந்தகழிந்தன
பின்னீயூழிபிறப்பப்பெறும்பவன்
றன்னுகின்றகருமமுந்தான்றிற்றே. (1)

கருமந்தானுமெழுங்கருமத்தாற்
றெருமந்தானுஞ்சிறிதுதெளிந்துவான்
றருமந்தாகினிகொண்கனைத்தண்டுழா
யருமந்தாமுகிலையருச்சிபா. (2)

ஏதமன்னிதபகமலத்தின்
மீதுதோன்றிவென்னும்விரிஞ்சன்மாட்
டோதுநாதப்பிரணவமுற்றதில்
வேதமூன்றுவெளிப்படத்தோன்றிற்றே. (3)

தோன்றும்வேதச்சுருதிப்பயன்றெரிந்
தான்றபோறிவாலறிந்தனதில்
மூன்றுதானமுழங்கெரியேமுதல்
வான்றரும்பயனல்குமகமெலாம். (4)

மகத்தினல்வருமிந்திரன்வாழ்வென
வகத்தினடியவலத்தழிந்தனம்
சகத்துநாநரர்க்கருத்துந்தழங்கழ
லிகத்துநாம்பெற்றிழந்தனமேயென. (5)

உருவத்தெய்வவுருப்பியன்றுகந்
தருவர்ப்போற்றிடச்சொன்னதுமுன்னிடத்
தருமமத்தோன்றலண்டாமென்றதுமிந்தக்
கருமத்தெய்தம்பயனின்கருத்தரோ. (6)

ஆதலான்மகமாற்றுவனுற்றுதம்
கேதுவானதமழினைவிட்டுவிண்
போதுகானிடைபோய்க்கொணர்வேனெனத்
தாதுலாவியகானிடைசார்ந்தனன். (7)

சார்ந்துகானிடைநோக்கத்தகழியுங்
கூர்ந்தவெய்பகழுஞ்சுடரங்கியு
மார்ந்தசாகைச்சமிபுமசுமாய்ச்
சோர்ந்துநின்றமைகண்டனன்சிரிபோன். (8)

பாதவங்களிரண்டையும்பண்டுள
மாதவங்களில்வாங்கியன்மந்திரப்
போதவங்கமறைவழிபொற்புபல
காதவச்சைசிவப்பக்கடைந்தனன். (9)

ஒன்றையந்தவுருப்பசியாகவு
நின்றவொன்றுதானென்னவுகோந்தவை
துன்றுகின்றதுதோய்குறியாகவும்
வென்றிவேந்தன்கடைந்தனன்மெல்லென. (10)

இணியப்பெருந்துன்றெனவேந்துதோட்
பணிவெங்கட்பணிமுகயாணையார்க்
கரணிவந்தருளும்பொறிமைந்தனித்
தரணியெங்குந்தருமந்தழைக்கவே. (11)

வேறு.

சாகைமாமறையினுலிந்தனத்துறுமங்கிதன்னை
யாகவீயமாதியாக்கியேயண்டகோடிக்
கேகமாம்புருடனனவெழுமூன்றுயூபஞ்சேர்த்திப்
பாகசாதனனேயாதிசார்க்கவிப்பாகஞல்கி. (12)

படுப்பனவிதித்தசெங்கணயமேதம்பலவுமாற்றிக்
கடுப்பொடுவாவும்வேகக்கலினவெம்பரிகண்முடி
விடுத்தொராண்டேகுங்கிக்கில்வினையெலாந்தடிந்துமீட்டுக்
கொடுத்தனனுவமேதமுருத்திரபாகக்கூற்றுல். (13)

கூறியமகங்களெல்லாங்குறைதவிர்த்தசுவமேத
நூறுமாங்கியற்றிவேட்டோர்வேட்கைகளனைத்தும்நூறி
யாறுமாடரவந்திங்கட்கண்ணியுமணிந்தமுக்க
ணேறினனருளாலும்பரேறினனேறினனே. (14)

மூனிவரமர்சித்தர்சாரணர்முறையிற்போற்றக்
கனிவருமுதச்செவ்வாயரம்டைப்பர்டனங்காட்டத்
தனிவருகவினையோங்கச்சாமையிரட்டத்தாருப்
பலிவருதேறல்தூற்றநிகடைக்கணித்தல்பார்க்க. (15)

இலங்குறுமணிமாக்குன்றென்றிரவியைமுடிமேற்றாங்கி
அலர்ந்தசெங்கமலமாங்கோரியிரப்பொலிந்துதோன்ற
வலந்திகழ்வயிரவாளுந்தாங்கியோர்மடங்கர்பீடங்
கலந்தெனவிருந்தகோலமகபதிகண்ணிற்கண்டான். (16)

காண்டலுங்குணகூர்ந்துதன்னுடைக்கனைபிடத்
தாண்டவன்பாகநல்கச்சரியரசாட்சியாளன்
வேண்டியவேண்டியாங்கனைத்தலாற்றவமேமேலு
மீண்டிறமுயலவேண்டுமென்றனரறிவின்மிக்கோர். (17)

திண்பணைமரத்திலுற்றசுடுதொழிற்கனலிச்சேயாய்
நண்புறவளர்த்தலுலேயுள்ளத்தினலிவுதீர்ந்து
விண்புகப்பெற்றுனென்றுன்மெய்யுணர்வுபெற்ற
பண்புடைமக்கட்பெற்றார்பெறும்பயன்பகரற்பாற்றே. (18)

அந்தணரின்றும்வேள்வியாற்றுழியாணிமாட்டுச்
சென்தழல்கொள்வதந்தவருப்பகியுடனேதின்டோட்
சுந்தரப்புரூரவாமுன்றேய்ந்திடவரிற்றேன்றி
வந்திடுமைந்தனுகக்கொள்வனவுலகின்மாதோ. (19)

ஆயிரகயனத்தண்ணலரியணையிருந்தவண்ணல்
சேயரிக்கருங்கீட்செவ்வாயுருப்பசிகனகச்செங்கேழ்
வேய்பொருமென்றோளாரமேவினன்மெலிவுதீர்ந்தான்
போயகைப்பொருளீத்தேடிக்கண்டகல்சூரவோர்போல. (20)

யாகப்படலம் முற்றும்.

உருப்பசிசாபமடைந்து சாபநீங்குபடலம்.

ஆழியுலகாளியும்விண்ணாளியுமோராளி
சூழமணிமீதுதருநீழலொருசூழ
லேழுலகும்வாழ்வுறவிருந்தனரிருந்த
கேழ்வயிரவாளிறைவனிம்மொழிகளைக்கும். (1)

நிலப்பொறைதவிர்த்தநிருபர்க்கரசமுந்நீர்
கலக்குறவெழுந்தவமுதத்தில்வருகஞ்சத்
திலக்குமியையெம்மிளவலன்றுமணமெய்து
நலத்தினோடன்னமகளோர்நாடகம்வகுத்தாள். (2)

நீயுமதுகாணுதிகொலென்றவனிகழ்த்த
வாயுமறிவாளவனுமன்னபரிசென்னத்
தேயுமதிவாணுதலரம்பைபர்செறிந்தே
வேயுமணிமாலதுகில்வேறணியணிந்தார். (3)

உன்னுருமையாகியவுருப்பசியைமன்னு
பொன்னுருவவேடமருளென்றுபுலவோர்மன்
மன்னிடவுருப்பசிமலர்ந்தகமலத்தின்
மின்னுருவவேடமொடுமெல்லெனடந்தாள். (4)

பஞ்சிகுடிகொண்டபதபங்கயமிலங்க
மஞ்சுகுடிகொண்டகுழன்மாலைபுடைவீழ
நெஞ்சுகுடிகொண்டவறிவோருநிலைபோ
நஞ்சுகுடிகொண்டுவிழிநின்குளைதடாவ. (5)

கும்பமெனும்விம்பமுலைவம்பொடிகுலுங்க
வம்பரமைந்தவிடையாடலினுடப்
பைம்பொன்மணிமேகலைகுலாவறையபாயுஞ்
செம்பவளவாயிதழின்மூரல்சிறிதெய்தி. (6)

செங்கையபிறண்ணுமைதழித்திடைகல்யாழ்
மங்குலுமோரிசையினுய்ப்பிழிபிலிற்ற
வங்கியமிசைப்பவருகட்டேவலாளர்
தங்கியசுதத்துவனியும்முறைதயங்கி. (7)

தூன்றியகருங்குழலம்பைபர்கள்சூழ
மென்றுகில்வீணந்தவெழிலிக்குள்வருமின்னே
சொன்றுவமையில்லியுவரித்திரையினூடே
அன்றுவருஇன்றவவளேயுவமையாமால். (8)

விண்டுவடிவம்புனருருப்பசிவிருப்பங்
கொண்டருடநாடகமதாயிடைசூலாவப்
பண்டருமொழிச்சிபாதத்தலரிநடத்தை
யண்டர்கள்பிரானவையிலன்பொடுநடித்தாள். (9)

ஆடியமடக்தையமர்க்கநிபனம்பொற்
பீடிகையிருந்தருள்பெருந்தகைசெழுந்தார்
கீடியபுபத்தினிறைந்திடம்வனப்பை
நாடியமனத்தபிநயத்திறன்பறந்தாள். (10)

வையகநிழற்றுகுடைமன்னவன்வனப்பாற்
கையபிநயத்திறமறந்திடுகருங்கட்
டையலிவிளித்தவண்மனத்திடைசலிப்பத்
தெய்வருடனக்கறுவுசெய்திவையுரைத்தான். (11)

வேறு

காரறலனையகூந்தல்வெண்ணகைக்கருங்கட்செவ்வாய்
வாரறவளர்ந்தகொங்கைவனிதைகேளொருவன்மாட்டே
போறிவதனும்பெற்றவிஞ்சையிற்பிழைத்தோர்யாரு
யோரறிவுடையவர்க்கமுயிரிடையுதிப்பருண்மை. (12)

இன்றுயென்பாற்பெற்றவிஞ்சையையிதயம்வேறுய்
மன்றிடையெவருமெள்ளமறந்தனையாதலாலே
சென்றுயைம்பத்தையாண்டாசமாங்கொடியாய்க்சென்தென்
றுன்றூர்ந்தினார்க்குமாவனத்திடைத்தோன்றுகென்றான். (13)

என்னவப்பாதவாசாரியனுரைத்திருஞ்சாபத்தை
மன்னினசின்னுள்போயம்மன்னனுமிரீர்வையர்
தன்னிடைச்சார்ந்துகாமச்சலதியினமிழ்ந்திக்தென்கா
றுன்னியமலைச்சார்வெய்திச்சோலகடோறுஞ்சென்றுற்றார். (14)

ஆங்கறைந்திடுங்குமாரவனமென்பதுபில்வேற்செங்கைக்
காங்கயன்றவஞ்செய்தானேர்காலமங்காலத்தன்னிற்
கோங்கலர்முலையார்யாருமிவ்வனங்குறுகிற்கோளிற்
பூங்கொடியாகவென்றுபுகன்றதோர்சாபமுண்டால். (15)

அவ்வனத்தருகினுங்கோர்மாதவிச்சூழலண்மி
மைவரைந்திடுங்கண்ணுளுமன்னனுமலர்ப்பூஞ்சேக்கைச்
செய்வகைக்கலவிக்கின்பந்தெரித்திடுமூடல்காட்டி
நவ்வியிற்சிறந்தாண்மெல்லவெழுந்தயனடந்தகாலை. (16)

சொல்லியவனத்தினெல்லைச்சூழலிற்றுணைப்பொற்பாதப்
பல்லவமித்தலோடும்பண்டுளபடிவநீங்கி
யொல்கியவிடையேபல்லாதுருவமுந்திரியச்சென்றேன்
மல்குபூங்கொடியின்கோலமருளினபுலன்கண்மாறி. (17)

கன்றியவூடலாலேதீர்ந்தவள்கமலப்பாத
மொன்றியசுவடுநோக்கிச்சென்றனனுருவங்காணுன்
மன்றலார்குழலாயெங்ஙன்மறைந்தனைகொல்லோவென்னக்
குன்றுறழ்தோளான்பட்டதன்மையார்குணிக்கற்பாலார். (18)

வரைகளுஞ்சுனையுமாறுந்தடங்களுமலர்ந்ததண்பூ
விரைகெழுகாவும்யாவும்பெயர்சொலிச்சொலிவினிக்கும்
புரைதபுமஞ்ஞைபன்னம்பொறிவரிக்குயில்கள்காணிற்
றிருவனுளென்னச்செல்லுமகன்றிடற்றிகைக்குஞ்சிந்தை. (19)

பூத்தபூங்கொம்பர்காணிற்பொற்கொடியேன்னும்பூந்தே
னூர்த்தசேதாம்பல்கண்டாலதரங்கள்துடிக்கநிற்குஞ்
சேத்தமென்கமலநீலமலர்களுந்தெரியிற்பூமி
னூத்தனங்கெய்துந்தன்மையாதெனச்சொல்லற்பாற்றே. (20)

பச்சிளங்கொடிகள்காணிற்படர்ந்தொசிந்திடுதல்கண்டாற்
கச்சிளமுலையாயென்னக்கைகளாற்புல்லிப்புல்லிப்
பிச்சரிற்பிதற்றியுள்ளம்பேதுறுநாளிலோர்நாண்
முச்சகம்புரப்போனுங்கோர்கொடியொடுமுயங்கினனே. (21)

அக்கொடியன்னமன்னனணிமணிக்காத்நிற்றீண்டிச்
சக்காத்தலிவனுனதசரதராமன்முள்கள்
புக்கிடக்கிடந்தகல்லிற்பொன்னுருப்பொலிந்தென்ன
மைக்கருநெடுங்கட்செவ்வாய்மடவரலாயிற்றன்றே. (22)

செய்ப்படுகமலச்செவ்வித்திலகவாண்முகத்துச்செவ்வாய்
மைப்படிகூந்தலாலோவனந்தொறுந்தேடிக்காணு
தெய்ப்பொடும்வருந்துவானுக்கெளியளாய்வலியவேதன்
கைப்படுமென்னிலெய்துங்களிப்பினையுரைப்பதென்னே. (23)

உள்ளுபிர்பிரிந்தவாக்கையுயிருற்றதெனவுழம்பர்
பள்ளநீரமுதமீட்டும்பெற்றதோர்பரிசும்போல
வள்ளலார்குழைபாள்விம்பவளமூலைப்போகமாந்தித்
தெள்ளுதெண்கடல்சூழ்வைப்பிற்றிகிரியொன்றுருட்டுநாளில் (24)

தேயுநூனுசப்பினஞ்சொலுருப்பசிதிருவயிற்றி
லாயுவேமுதலாவெண்மருகித்தனரவருளாயு
நேயமாம்வழிவந்தோர்கண்மகிருலநிருபராகித்
தாயெனவுலகுக்கெல்லாந்தனிக்குடைநிழற்றினரே. (25)

உருப்பசி சாபமடைந்து சாபநீங்குபடல முற்றும்.

(தொடரும்.)

உதவிப்பத்திராதிபர்.

பல்லவர் கோயில்கள்.

———o———

(கசஙஈ-ஆம்பக்கத் தொடர்ச்சி.)

iii. குடைவரைக்கோயில்களின் உற்பத்தி

மண்டகப்பட்டுச்சாஸனம், அப்போதிருந்த கற்களாற் கட்டப்பட்ட கோயில்கள் இப்போது ஏன் காணப்படவில்லையென்பதையும் தெரிவிக்கின்றது. ஆகவே, "மஹேந்திரன்காலத்திற் கட்டப்பட்டு அழிந்துபோனகோயில்களின்பாகங்கள் ஏதாவது இப்போது அகப்படக்கூடுமா? அப்படிக்கூடுமானால் எங்ஙகப்படும்?" என்னும் கேள்வி எழும்புவது இயற்கையே.

அதற்குப் பதில் பின்வருமாறு:—மஹேந்திரவர்மன் தன்னுடைமுழுவதிலும் கோயில்கள் கட்டினான். காஞ்சீபுரம் அவனுக்குத் தலைநகராயிருந்தமையால் அங்கு அவன் நிச்சயமாகக் கோயில்கள் கட்டியிருத்தல் வேண்டும். ஆனால், காஞ்சீபுரம் பாறைகளில்லாச் சமவெளியிலிருப்பதால் மண்டகப்பட்டுச்சாஸனத்திற்குறிக்கப்பட்ட, கல் சுண்ணும்பு உலோகம் மரம் முதலியவைகளைக்கொண்டு கட்டிய கோயில்கள் அங்கேதான் நமக்ஙகப்படும்.

ஆகவே காஞ்சீபுரத்தையாராய அங்கே சென்று அங்குள்ள ஒவ்வொரு கல்லையும் நன்றாய்ப் பரிசோதித்தேன். நான் கஷ்டப்பட்டது வீண்போகவில்லை. ஏகாம்பரநாதஸ்வாமிகோயிலைப் பரிசோதித்துவரும்போது அங்கு ஒருமண்டபத்தைக் கண்டேன். அதற்குப் "பௌர்ணமி மண்டபம்" எனப் பெயர். அது முதற்பிராகாரத்துள்ள, ஆயிரக்கால் மண்டபத்தையொட்டி அதற்குப் போகும் வழியாகவுபயோகப்படும் பள்ளிகோபுரத்திற்கு மேற்காக இரண்டாம்பிராகாரத்தில் இருக்கின்றது. (அதாவது, ஏகாம்பரநாதஸ்வாமிகர்ப்பக்கிரஹத்திற்குத் தெற்காக இரண்டாம்பிராகாரத்திற் புதுக்கட்டிடம் ஒன்றிருக்கிறது. அதன் பக்கத்தில் இப் பௌர்ணமிமண்டபம் பாழாகிக் கிடக்கின்றது.)

இம்மண்டபம் பலவிடங்களிலிருந்து கொணர்ந்துசேர்க்கப்பட்ட கற்களாற் கட்டப்பட்டது. அதிலுள்ளதூண்களெல்லாம் அநேகமாகப் பல்லவர்காலத்திற் செதுக்கப்பட்டவைகளே யொத்திருக்கின்றன. அம் மண்டபத்தின் முன்வரிசையிலுள்ள ஆறுதூண்களும் மஹேந்திரவர்மனது குகைகளிலுள்ளவைகளைப் பெரிது மொத்திருக்கின்றன. அவைகள், தாமரைமலர்களாற் சித்தரிக்கப்பட்ட சதுரத்தூண்களாகும். அவைகளில் ஒருதூணில்மட்டும் மேலே நான்குபக்கங்களிலும் ஒரு சாஸனம் எழுதப்பட்டிருக்கின்றது.

அதைப்பார்த்தவுடன் எனக்குண்டான ஸந்தோஷத்திற்கு அளவேயில்லை. அச்சாஸனம் வடக்கு மேற்கு கிழக்கு ஆகிய மூன்றுபக்கங்களிலும் தெளிவாயிருக்கின்றது. அது, அதைவெட்டுவித்த அரசனதுவிருதுகளின்வரிசையொன்றை யுடைத்தாயிருக்கின்றது. அவ்வரசன் முதலாம்மஹேந்திரவர்மன் என்பதிற் சந்தேகமேயில்லை. தெற்குப்பக்கத்தில் "அபிமுக" "சித்திரக்காரப்புலி" "கூற்றம்பு" என மூன்று பெயர்களிருக்கின்றன. அவைகள் மஹேந்திரவர்மன்விருதுகளே.

அபிமுகவென்பது, திருச்சிராப்பள்ளி மேல்குகையிலுள்ள மூன்றுவதுதூணில் முதல்வரியி லிரண்டாவதுவார்த்தையாகும். †

சித்திரக்காரப்புலியென்பது, பல்லாவரம்சாஸனத்திலுள்ளது. *

கூற்றம்பு என்பது, திருச்சிராப்பள்ளி மேல்குகையில் நான்காவதுதூணில் மூன்றுவதுவரியில் முதல்வார்த்தையாகும். †

காஞ்சீபுரம்சாஸனத்தில் வடக்குப்பக்கத்திலிரண்டாவதுவார்த்தையாகிய "வம்ப" வென்பது திருச்சிராப்பள்ளி மேல்குகையிலுள்ள நான்காவதுதூணில் நான்காவதுவரியில் முதல்வார்த்தையாகும். †

மஹேந்திரவர்மனது இவ்விருதுகளாவும் பலபாஷைகளிலிருந்து வந்தவைகளாகக் காணப்படுகின்றன. சில ஸமஸ்கிருதத்திலிருந்தும்

† South Indian Inscriptions Vol. I. pl. and my english book Pallava Antiqutes Vol. I pl. XXIII.

* G. O. No. 538. Public July 1909; Report on Epigraphy for 1908, 1909. Part II No. 14, 75.

சில தமிழிலிருந்தும் மற்றுஞ்சில தெலுங்கிலிருந்தும் வந்தவைகளாகக் காணப்படுகின்றன. இவ்விஷயத்திற் கோபிநாதராவ் அவர்கள், "இதனுடன் மஹேந்திரவர்மனது தெலுங்குவிருதுகளின்தன்மையைப்பற்றியறிந்தவர்களுள் நான் முதலாமவன் என்பதைத் தெரிவித்தால் உங்கட்கு ஆச்சரியமாகத்தானிருக்கும்.....என்னை முதலில் மயக்கிய வார்த்தை 'நிலுவுலேநேயம்பு' அதாவது 'நிறுத்தமுடியாதநேசம்'; 'நெயம்பு' என்பது நேசமென்பதின் மரூஉ. இது வெங்கையாவால் சொல்லப்பட்டது. இவ்வெண்ணம் அவருக்குச் சொந்தமாகவுண்டாகாததாதலால் அதைத் தெலுங்குபாஷையைச்சேர்ந்ததென்று கூறியதற்குக் காரணங்கூறமுடியவில்லை. நான் இன்னும் சிலவற்றை விளக்கிச் சொல்லமுடியவில்லை. 'நயம்பு' சாந்தமாயிருப்பவன் அல்லது சாந்தகுணம். 'கறும்பு' (குறும்பு) விரோதமானது. குற்றம்பு (கூற்றம்பு) யமன் சாவு இவ்வார்த்தைகள் தமிழ்ப்பகுதிகளையும் தெலுங்குப்புனர்ச்சிகளையு முடைத்தாயிருக்கின்றன" என எழுதினர்கள்.

மஹேந்திரவர்மனுக்குத் தெலுங்குவிருதுகள் எங்ஙனம்வந்தன? அதற்கு நான் மஹேந்திரவர்மனுவது அவன் தகப்பனுவது தெலுங்கு நாட்டை ஆண்டிருந்தல்வேண்டும் என அபிப்பிராயப்படுகின்றேன். ஆனால் அக்காலத்தில் தமிழ்நாடு எதுவரை பரவியிருந்ததென்பதை யறியவேண்டிய அவசியமாகின்றது.

"வடஆற்காடுஜில்லாவில் தற்காலத்தில் தெலுங்குபாஷைவழக்கிலிருந்தாலும் அதேஜில்லாவிலுள்ள தொண்டைமாநாடு, காளஹஸ்தி, திருப்பதி, திருச்சானூர், யோகிமல்லாவரம் முதலிய நகரங்களிலுள்ள பழையசாஸனங்கள்யாவுந் தமிழிலேயேயிருக்கின்றன. 12, 13-நூற்றாண்டுகளில் நெல்லூரிலும் அப்படியேயிருக்கின்றது. ஆகவே, மேலே கூறிய நகரங்களையும் நெல்லூர்ஜில்லாவின் தென்பாகத்தையும் உள்ளிட்டநாடானது ஆதியில் தமிழ்நாடேயென்றும், அங்குள்ளபாஷை தெலுங்காகமாறினது விஜயநகரத்தரசர்காலத்திலென்றும் நாம் நிச்சயிக்கலாம்". ‡

மேலேகூறியதிலிருந்து தற்காலத்தியநெல்லூர்ஜில்லாவே முற்காலத்தில், தமிழ்நாட்டிற்கும் தெலுங்குநாட்டிற்கு மிடைப்பட்டநாடாகுமென்பது போதரும்.

‡ G. O. Nos. 678, 679, 12th Aug. 1914 p 7.

ஆகவே, மஹேந்திரவர்மனுவது அவன்தகப்பனுவது நெல்லூருக்கு வடக்கேயுள்ளநாட்டையாண்டிருத்தல்வேண்டும்.

மஹேந்திரவர்மன்காலத்திற்குமுற்பட்டகோயில்கள் தமிழ்நாட்டிலில்லை யென்றும், மலைகளிற் கோயில்கள் செதுக்கும்வழக்கம் மஹேந்திரனுல்தான் தமிழ்நாட்டிற்குக் கொணரப்பட்டதென்றும் மேலேகூறினேம். அவ்வழக்கம் எந்நாட்டிலிருந்து கொணரப்பட்டது? மஹேந்திரவர்மன் தெலுங்குநாட்டையாண்டதால், கிருஷ்ணைவின்கரையில்தான் அவனுக்கு அவ்வெண்ணம் உதித்திருத்தல்வேண்டும். அங்கு, கிருஷ்ணைவின் வடகரையிற் பெஜவாடா, மொகல்ராஜபுரம் முதலிய இடங்களிலும் தென்கரையிற் சித்தன்னவாசல், உண்டவல்லி முதலிய இடங்களிலும் குகைக் கோயில்க ளிருக்கின்றன.

இதுவரையில் ஒருவரும் அவைகளை நன்றாய் ஆராய்ந்து முடிவுரை கூறவில்லை. அவைகளில் உண்டவல்லிக்குகைகளை நன்றாய் ஆராய்ந்த ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஸர்வால்டர் எலியட் ¶(Sir walter Elliot) என்பவருக்கு அவைகளுக்கும் மாமல்லபுரத்திலுள்ளகோயில்களுக்கு முள்ள ஒற்றுமைகள் தோன்றினதும் அவைகளை நன்றாக ஆராய்ந்துபாராததால் அதற்குத் தகுந்த ஆதாரங்கள் அவராற்கூறமுடியவில்லை. ஸ்ரீவெல் என்பார் (R. Sewell) அவை சளுக்கியர்களாற் செதுக்கப்பட்டவை என்னும் எண்ணமுடையவராயிருக்கின்றார். †

ஆனல், H. கிருஷ்ணசாஸ்திரிகள் சளுக்கியர்காலத்திற் குகைகளை வெட்டப்படவில்லையாதலால் அவை சளுக்கியர்காலத்தைச்சார்ந்தவையல்லவெனவும், ஸ்ரீஸாக்குகைகளுக்கும் அவைகளுக்குமுள்ள சிலவொற்றுமைகளைக்கொண்டு அவை கி. பி. முதல் அல்லது இரண்டாம்நூற்றாண்டைச் சார்ந்ததாகுமெனவும் கூறுகின்றார். *

உண்டவல்லிக்குகையின்வடிவு நான் எனது பிரஞ்சுப்புஸ்தகமாகிய 'Archeologic du Sud de L'Inde' என்னும் புத்தகத்தில் விவரித்

¶ Ind Ant Vol V p 80.
† List of Antiquities Vol I p 77.
* G. O. No. 588, 28th July 1909, Part II No. 18 p 74.

திருக்கும் சளுக்கியரதுவடிவை யொக்கவில்லை.'‡ உண்டவல்லிக்குகை களின்முன் நின்று அவை ஒவ்வொரு நாட்பவேலைகளிலும் மஹேந்திர வர்மனதுகுகைகளே யொத்திருப்பதைப் பார்த்ததும். எனக்குண்டான ஆச்சரியத்திற் களவேயில்லை.

1 அவைகளின் நிலப்படங்கள் ஒன்றுகவே யிருக்கின்றன.

2 தூண்கள் தாமரைமலராற் சித்திரிக்கப்பட்ட சதுரபாகங்களை யுடையனவாயிருக்கின்றன.

3 துவாரபாலர் நிற்கும்விதம் ஒன்றுகவே யிருக்கின்றது.

4 நிலைகளின்மேலும் மாடங்களின்மேலும் 'இரட்டைத்திரு வாட்சி' என்னும் தோரணங்கள் காணப்படுகின்றன.

தவிர, அங்குள்ள கூடுகளிற் பல்லவர்காலத்தியதைப்போலவே கந்தர்வமுகம் காணப்படுகின்றது. அங்குள்ள மாடங்களெல்லாம் மாமல்லபுரம் 'பகீரதன்தபசு' என்னும் பாறையிலுள்ள சிறியகோயிலை யொத்திருக்கின்றன. அங்குள்ள அனந்தசயனமூர்த்தி மாமல்லபுரத் திற் கலங்கரைவிளக்கத்திற்குச் சமீபமாயுள்ள மஹிஷாஸுரமர்த்தனி குகையிலுள்ள அனந்தசயனமூர்த்தியைப் போலவே யிருக்கின்றார். உண்டவல்லியிலிருந்தமூர்த்தி உடைந்துபோய்விட்டது. தற்காலத் திற் காணப்படுவது அவ்விடத்திலேயே செய்யப்பட்ட சுண்ணாம்பு விக் கிரகமே. நன்றுக ஊடுருவிப்பார்த்தால் அம்மூர்த்தி ஒருகாலத்து மாமல்லபுரம் சிங்கவரம் முதலிய இடங்களிலுள்ளவைகளைப்போலவே கையைமீட்டிக்கிடந்ததென்பதை யறியலாம்.

இவ்வளவுதூரம் பல்லவர்குகைகளுக்கு ஒற்றுமையுள்ள உண்ட வல்லிக்குகைகள் யாராற் செதுக்கப்பட்டன?

அக்குகைகளையுடைத்தான வெங்கிநாடு கி. பி 673 ல் ஸர்வலோ காச்ரயன் சந்தலூர்க் கிராமத்தைத் தானம்† செய்தபொழுது கிழைச் சளுக்கியரது ஆட்சியின்கீழிருந்தது. அன்றி, சுமார் கி. பி. 640-ல் அங்நாடு இரண்டாம் புலிகேசியின்கீழ்ச் சித்தராசனன முதலாம்விஷ்ணு வர்த்தனனுடைகையின்கீழிருந்தது.* ஆனால், இந்திரவர்மன் இராம தீர்த்தம் சாஸனஞ் செய்தபொழுது அது விஷ்ணுகுண்டினர் ஆளுகை யின்கீழிருந்தது.‖ தவிர, விஷ்ணுகுண்டினவிக்கிரமேந்திரவர்மனது

‡ Archeologic du Snd de L'Inde Tome I. Architecture ps. 173, 174, 175 and pt CLVIII B.

† Ep. Ind. Vol VIII No. 24.

* Timmapuram Plats—Ep. Ind. Vol IX p 317.

‖ Ep. Ind. Vol XII No. 17. p 183.

சிக்குலாதானத்திலுள்ள முத்திரையில் உண்டவல்லி (படம் 2) சீயமங்கலம் முதலிய இடங்களிலுள்ள தூண்களிற் சித்திரிக்கப்பட்டிருக்கும் சிங்கங்களையொத்த சிங்கம் ஒன்றிருக்கிறது. இராமநீர்த்தம் சாஸனத்திலும் அவ்விதமாகவே யிருக்கின்றது.§ ஆகவே அவ் வெங்கிநாட்டைச் சளுக்கியர்களுக்கு முன்பு விஷ்ணுகுண்டினர்கள் ஆண்டுவந்தனரென்பதும் உண்டவல்லிக்குகை விஷ்ணுகுண்டினர்களாற் செதுக்கப்பட்டவையென்பதும் போதரும்.

இதுகாறுங்கூறியவாற்றால் மஹேந்திரவர்மன் உண்டவல்லிக்குகைகளையே மாதிரியாகக்கொண்டு தமிழ்நாட்டிற் கோயில்கள் வெட்டினனென்பது உறுதியாயிற்று. இச்சிற்பசாத்திரவொற்றுமையன்றி வேறொன்றும் மிருக்கின்றது.

பல்லவவம்சாவளியில் லிம் ஹவிஷ்ணுமூன்றாக மஹேந்திரன் எனப் பெயர்கொண்டவர் ஒருவருமில்லை. ஆகவே முதலாம் மஹேந்திரவர்மன் உண்மையில் அப்பெயர்பூண்டவர்களுள் முதல்வனேயென்றறிக. திருச்சிராப்பள்ளி, பல்லாவரம் முதலிய இடங்களிலுள்ள சாஸனங்களில் இவனதுபெயர் 'ஸ்ரீமஹேந்திரவிக்ரம'‡ என எழுதப்பட்டிருக்கின்றது.

விஷ்ணுகுண்டினவம்சத்தில் விக்கிரமேந்திரவர்மன் என்னும் பெயர் பூண்டவர்கள் இருக்கின்றார்கள். சிக்குலாதானம்,¶

மாதவவர்மன்

|

விக்கிரமேந்திரவர்மன் (I)

|

இந்திரபட்டாரகவர்மன்

|

விக்கிரமேந்திரவர்மன் (II)

என்னும் வம்சாவளியைக் கொடுக்கின்றது. 1914-ம் வருஷத்திற் கண்டுபிடிக்கப்பட்ட விஷ்ணுகுண்டின சாஸனம்† ஒன்று விக்கிரமேந்திரவர்மன் என்பது விக்கிரமஹேந்திரவர்மன் என்பதன்மரூஉவென்பதைத் தெரிவிக்கின்றது. ஆகவே ஸிம்ஹ விஷ்ணு விக்கிரமேந்திரவர்மன் என்னும் விஷ்ணுகுண்டின அரசனது புதல்வியை மணந்து அவளுக்குப்பிறந்த பிள்ளைக்குப் பாட்டன்பெயரான மஹேந்திரவிக்கிரமன் என்னும் பெயரைச் சூட்டியிருத்தல் வேண்டு"மென நான் ஊகிக்கின்றேன்.

---

§ Ep. Ind. Vol XII No. 17. p. 133.

‡ பின்னுல் படம் 21 and V.

¶ Ep. Ind. Vol IV No. 25 p 195.

† No. 7 of Appendix A. G. O. No. 920 4th Aug. 1914 Part II No. 35.

சிக்குலாதானம், முதலாம்விக்கிரமேந்திரவர்மனது தாயார் வாகாடகவமிசத்தைச்சார்ந்தவளெனக் கூறுகின்றது. அஜந்தாவிலுள்ள குகைகளெல்லாம் வாகாடகவமிசத்து அரசர்களால் வெட்டப்பட்டனவாகும். அக்குகையில் வாகாடகர்களது சாஸனங்கள் யதேஷ்டமாகக் காணப்படுகின்றன. அவைகளுள் 16, 17-குகைகள் ஹரிஷேனன் என்னும் அரசனால் வெட்டப்பட்டனவாகும். அங்குள்ள அவனது சாஸனங்களால் அவனது ராஜ்யந்தில் தெலுங்குநாட்டின் ஒருபாகமும் மிருந்ததெனத் தெரிகின்றது.* ஆகவே, வாகாடகரது சம்பந்தத்தால் விஷ்ணுகுண்டினர்கள் கிருஷ்ணாநதிக்கரையிற் குகைகள்செதுக்கக் கற்றுக் கொண்டன ரென்பதும் அவ் விஷ்ணுகுண்டினரது சம்பந்தத்தால் மஹேந்திரன் தமிழ்நாட்டிற் குகைக்கோயில்கள்செதுக்க வெண்ணங் கொண்டனனென்பதும் போதரும்.

இதுகாறுங் கூறியவாற்றால்,

1 தமிழ்நாட்டுப் புராதனக்கோயில்கள் கல், சுண்ணாம்பு, உலோகம் மரம் முதலியவைகளை யுபயோகித்துக் கட்டப்பட்டு வந்தவைகளே; அவைகள் அழிபக்கூடிய சாமான்களாற் கட்டப்பட்டுவந்தமையால், காலக்கிரமத்தாலாவது மனிதர்களாலாவது அழிந்திருத்தல் வேண்டும்.

2 பாறைகளிற் கோயில்கள்செதுக்கும்வழக்கம் எப்பொழுதும் தமிழ்நாட்டிற் பரவியிருக்கவில்லை. ஆனால், திடீரென்று ஏழாம்நூற் றாண்டினாம்பத்தில் இப்புதுவழக்கம் தமிழ்நாட்டிற் பரவத்தொடங்கியது.

3 இப்புதுவழக்கத்தைத் தமிழ்நாட்டிற்குக் கொணர்ந்தவன் முதலாம் மஹேந்திரவர்மனவன.

4 மஹேந்திரவர்மன் பெஜவாடா உண்டவல்லி முதலிய இடங்களில் ஆண்டமையால் அங்கு, தனது விஷ்ணுகுண்டின உறவினர்களாற் செதுக்கப் பட்டவைகளைப் போலவே, தமிழ்நாட்டிலும் செதுக்க வெண்ணங்கொண்டான்.

என்னுங் கொள்கைகள் உறுதியாகின்றன.

(தொடரும்)

கி. நா. சுப்பிரமணியம்,

கும்பகோணம்.

---

* Archeological Survey of Western India. IV p p 124 & 129 No. 622 and 624, of Prof keilhorn's List For a delarted information of this dyhasty Seew A. Smith Paper on 'The Vakataka dynasty of Berar in the 4th and 5th centuries AO' in JR. AS. April 1914.

ஸ்ரீ:

குறும்பூர்ச்சாசனங்கள்.

(கல்10-ஆம் பகுதந் தொடர்ச்சி.)

சாசனம் V.

(வடபுறம்—மேற்பட்டியல் கிழோரத்திலிருந்து)

விஷயம்:—இவ்வூர்ப் பெருமாளுக்கு நிலம் தர்மதானம் பண்ணிக் கொடுத்தது.

(1)—லெல்லை — வயக்கலுக்கு கீள்வா — வடவெல்லை—கீழ் — குள் பட்ட—பாயும்—குடி—வல்லால் நீர்பாயும் பாட்டனுவருக—முக்காணி யும் இக்காலலாநீர்பாயும்துறையா கடவல் — லஞ்சியும் இக்காலலா நீர்பாய்பும்—வடக்கடைப நில அரைக்காணியும் இத்தறை — லகுடிபலவு க்கு கீள்எல்லை—எல்லைத்துடலல்லுக்கும் ஸாஸ்தமங்கலத்தார் கால்லு க்கு மேற்கும்—எல்லைநல்லூர் செழிய—கல்—சம்புக்கும் — மேல்எல்லை (2) (மூன்றுபக்கமும்)—அநச்ச வயக்க—எல்லைக்குநிலமும் இவை— த்துக்கு நாற்றங்கால்—ஊனி—கும்—நல்லூர் எல்லைக்கு—யும்துறகை —ாட்டம் பல் தடிஇரண்டினுல் — மேதாவிவயக்கல்நிலம் — இக்காலலா நீர்பாயும்—தாவி வயக்கல்-தடி நாலினுல் நிலம் இரண்டுமாவுத்தத்திரு திருவிடையாட்ட—லெல்லை கீள் மைத்திருவாய் போனதெருவுக்கு மேற் கும் தென்னெல்லை—ினறு—நோக்கி போகிற—திருவாழிக்கல்லுக்கு— லெல்லை பள்ளிச்சந்தத்துக்கு கிழக்கும் வடவெல்லை கங்கை — தெற்— வழிக்கு கிழக்கு பாண்டியமுவேந்தரைய உள்ளிட்ட — கிணற்றுக் — டத்துதெக்கில் மதுரை(?)னு (3) வித்துவருகிற-னெல்லை இவெம்பெரு மான்திருவர—ல்லிலேகின்று — இவ்விசை — பருநான்கெல்லை படமன கள்ளும் திருமுகக்கால்வட—இவ்மாணத்தில் பேசினபடியாயுள்ள திரு விடையாட்டங்க — கோட்டத்துக்குப்போகிற இடிவைக்கு மேற்கு — நோக்கிப்போகிறதெருவுக்கு வட(கீள்?) சிறை தளை சென்னீர்கூடி யெசசோறு,கூற்றரிசிமற்றும் எப்பெற்பட்ட—நித்தயஉஉ-ஆ நம் பண் ணிக்குடுத்தோம் குறும்பில் இராஜேந்திரநல்லூராரோம் இவ்வூரிற் திரு மேற்கோயில் சுந்தரபாண்டியவிண்ணகர் எம்பெருமானுக்கு இப்படி சந்திராதித்தவற் செல்வதாக கலனிலுஞ் செம்பிலும் வெட்டுவித்துக் கொள்வாராக ஸம்மதித்து யஉஉ-ஆ(ந)ம்பண்ணிக்குடுத்தோம். இரா சேந்திரநல்லூரோம். சுந்தரபாண்டியவிண்ணகர் எம்பெருமானுக்கு

இப்படிக் கிவை உத்தமன் திருக்குறுங்குடி —ன்சுந்தரபாண்டியசெழிய கோன் எழுத்து இ—உத்தமதொங்கள்எழுத்து. இப்படிக்கிவை சீவல்ல —குறுங்குடி-ஆன குலசேக(ர) செழியகோன் எழுத்து—இப்படிக் கிவை குறுங்குடி சோமனை இராசநாராயணசெழியகோன் னெழுத்து சோதி யான அழகியபாண்டியதமு—எழுத்து. இப்படிக்கிவை தர்க்கை (?) சிராம—கோவ (4) இப்படிக் கிவை புருஷோத்தமன் சொக்கன் ஆன குலசேகர இப்படிக் கிவை இடை—குடி எழுத்து. இப்படிக் கிவை சீவல்லவன் விரதமுடித்தான் எழுத்து—தமன்வீற்றிருந்தான் எழுத்து இப்படிக் கிவை—தரையன் எழுத்து இப்படிக் கிவை புருஷோத்தம நாராயணதற்குறியா (ர) தன்மைக்கு—புருஷோத்தமன் சொக்கன் எழுத்து. இப்படிக் கிவை உத்தமன் திருவாய்?க் குலமுடையான் எழுத்து. இப்படிக்கிவை உத்தமன் சொக்கன் எழுத்து. இப்படிக் கிவை ஆதித் தன் சொக்கன் எழுத்து. இப்படிக்கிவை பாக்கரன் உத்தமதொங்கன்? எழுத்து. இப்படிக் கிவை சூரியன் பிச்சன் எழுத்து. இப்படிக் கிவை சூரியன் புல்லூரன் எழுத்து. இப்படிக் கிவை இராசராசன் கூடித்ர சூடாமணி(?) எழுத்து. இப்படிக் கிவை அரயன் அரிசேகர(?) ஈச்சர முடையான் எழுத்து. இப்படிக் கிவை உத்தமன் அமுதன் தற்குறியா (ர)தன்மை—வீற்றிருந்தான் எழுத்து. இப்படிக் கிவை சோலியரை யன் சொக்கன் எழுத்து. இவைகள் ?—ன்மைக்கு இப்படி—ஸ—தித்தமைக்கு இவ்வூர் அரையன் உடையநம்பியான—முடிப்பல்லவதரையன்.

குறிப்பு:—ஸ்ரீஸ்தமங்கலத்தார்:— 'ஸ்ரீஸ்தமங்கலவாவிநாராயணென' என்று ஸ்லோகரூபமாய் ஒருவர் இச்சோழபாண்டியன்மன்னர்கோவிற்சாசனத் திற் சாட்சிக்கையெழுத்துவைத்திருக்கிறார். திருவிடையாட்டம்=கடவுளுக்கு விட்டநிலம். திருவாழிக்கல்=நிலஎல்லைச்சக்கரக்கல். பள்ளிச்சந்தித்துறைக்குக் கிழக்கும்=ஜைநக்கடவுள்நிலத்துக்குக்கிழக்கும். குறுங்குடி ஆன = குறுங்குடி யான் என்று கொள்வதிலும் குறுங்குடிஆன = 'குறுங்குடி' என்னும் மறுபெய ருடையவனென என்றுகொள்வது மிகவும் பொருந்தும். தற்குறி = தன்+குறி அல்லது தத்குறி, கையெழுத்துப்போடத்தெரியாதவனின் அடையாளம். ஆதன் மைக்கு=ஆதற்றன்மைக்கு. பாக்கரன்=பாஸ்கரன். ராசராசன் கூடித்ரசூடா மணி முதல்ராஜராஜனுக்கும் 'கூடித்ரிய சிகாமணி' (சூடாமணி) என்னும் பட்ட முண்டு. சோழசாசனங்களில் 'கூடித்ரிய சிகாமணிவளநாட்டு' என்று வருவதும் காண்க. அரிசேகரஈச்சரமுடையான்=அரிகேசரி ஈச்சரமுடையான் என்றிருக்க வேண்டும்.

சாசனம் VI.

விஷயம்:—ஓர் செழியகோன் நிருதுந்தாவிளக்குக்காகப் பெரு மாளுக்கு நிலம் தானம்பண்ணி இறைசெலுத்தாமற்போக, அவனுக்காக வேளான் ஐயனம்பியும் வேளான் உலகுத்தமனும் இறைசெலுத்துவதாகப் பெருமாளுக்குப் பிடிபாடு எழுதிக்கொடுத்தது.

1. ஸ்வஸ்திஸ்ரீ பூவளர்கிளத்தி மேவிவீற்றிருப்ப மேதகுமாது நீதியில்புணர சயப்போர்மடந்தை—புயத்திருப்ப—மறைநெறிவள மனு நெறி—வீற்றிருப்ப—ககாசூழ்த்த—கடலேழு பொழில் குடைநிழற்கீழ் செங்கோல்நடப்ப கொடுங்கலி—நடமபிலல தாளியவலவர் செம்பியர் விரா டவாவாபலவர்த—முறைமுறைபணிய ஒருகேமியினல் மீயோங்க—வளர்மணிமுடிசூடி வீறஙகயமணியணி வனதுறை—ருந்தருளிய மாமு தல்மதிக்குலம்விளக்கிய—கோச்சடையபன்மரான திரிபுவனசக்கரவத தி—குலசேகரதேவற்குபாண்டு—ந்நுவதின் எதிராமாண்டு திருவழுதி வளநாட்டு கற்குறிச்சிபான ராசராசநல்லூர் வேளான் அய்யனம்பியும் வேளான் உலகுத்தமனும் இவிருவோங்குடகுடநாட்டு குறும்பிலான இராசேந்திரநல்லூர் உகந்தருளின சுந்தரசோழபாண்டிய விண்ணகர் எம்பெருமானுக்குப் பிடிபாடுபண்ணிக்குடுத்த பரிசாவது-

2. எங்கள்ஞாதி சீரிளங்கோ இராசிங்கதேவனை கற்குறிச்சி மூவேந்தவேளா முன்பு குறும்பிலான இராசேந்திரநல்லூர்—று குடித்த நிலமாவது இவ்வூர் கொட்டி — அணைமாஞ்சைக்காணியும் ஆகநில(ம்) இரண்டுமாவரைக்காணியும் அவர்விற்று விலைகலஞ்செய்து குடித்தமை யில் இநிலம் இரண்டுமாவரைக்காணியையும் இச்செழியகோனர் இவெம் பெருமானுக்கு நிருநுந்தாவிளக்கு செலவிதாக திருக்கையமலிலே தன்மதான்மாக நீர்வார்த்துக்குடித்து இநிலத்துக்கு கடமை குடிமையும் சிறைதளை செஞ்ஞீர்வெட்டியும் மற்றும் எப்பேர் அவர் தாமே இறுத்து குடிப்பராக பிரமாணம் பண்ணிக்குடுத்தமையில் அவர் இநிலத்துக்கு கடமை இறுமையில் நாங்கள் இந்நிலத்திலே கடமைபெறவேணும் என்று நின்றிடத்து பலரும் அவர் எழுதிகுடுத்த பிடிபாட்டைக்கண்டு நீங்கள் தன்மவிரோதம்பண்ணவேண்டாம் அவ(ர்)யையே பிடிச்சுக்கொள்ளுமென் று சொன்னடத்து இச்செழிய-

3. கோனூர் முன்னிலலாமையால் இத்திருவிடையாட்டநிலம் இரண்டுமாவரைக்காணிக்கும் வந்த கடமையும் சில்வரியும்—போர்ப்பட்டதும் நாங்களும்—க்கு சந்திராதித்தவற் செல்வதாக இப்படி சம்மதித்து பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் வேளான் அய்ப்பசம்பியும் வேளான் உலகுத்தமனும் இவ்விருவோமும் சுந்தரசோழபாண்டிய விண்ணகர் எம்பெருமானுக்கு இப்படிஸம்மதித்து பிரமாணம்பிண்ணிக்குடுத்த வேளான் ஐய்யநட்பி எழுத்து, இப்படிக்கு வேளான் உலகுத்தமன் தற்குறியாதன் மைக்குட்டோறிஞ்சேல் திருக்கோளூரான உலகசிந்தாமணிபுரத்து கண்டன் உய்யவந்தான் எழுத்து. இப்படிக்கு இவை வேளான் உமையான் எழுத்து. இவர்கள் சொல்ல இப்பிரமாணம் எழுதினேன் இன்நாட்டு கற்குறிச்சியான இராசாராசநல்லூர் வேளான் நடியன் எழுத்து. H இத்தன்ம—பதின் எட்டுமண்டலத்து திருவேளாகாறர் ரகஷை.

குறிப்பு:—பிடிபாடு=நன்கொடைச் சாசனம். விலேகலஞ்செய்து=விலேச் சாசனஞ்செய்து. சொன்னடத்து=சொன்னவிடத்து. பதினெட்டு மண்டலத்து என்பது தமிழ்நாட்டுப் பிரிவென்றும் 18-பாஷையுடையதாகக் கருதப்பட்ட இந்தியாவின் பிரிவென்றும் தெரியவில்லை, ('பதினெண்புவி ஸ்ரீவைஷ்ணவாள்' என்ற வழக்குச் சில இடங்களி லுள்ளது.) பதினெட்டுநாட்டுமறவர்களும் உண்டு. திருவேளாகாறர் = தெய்வங்களுக்காவது தெய்வசொத்துக்களுக் காவது கெடுதிவருமிடத்துத் தங்களுயிரைக்கொடுத்து ரக்ஷிப்பதாகச் சபதம் செய்துகொடுத்து ஆயுதபாணிகளாய்க் கோயிலேலேயே சாப்பிட்டுக்கொண்டு காத்திருக்கும், பைராகிபோன்றவர்கள். இவர்கள் அக்காலத்தில் அநேகமாயெல்லாக்கோயில்களிலுமிருந்தார்கள். அரமனைகளிலு மிப்படிப்பட்டவருண்டு.

சாசனம் VII. (குறை)

(வடபுறம் நடப்பட்டியலின் நடு.)

விஷயம்:—பெருமாளுக்கு நிலம் இறை இறக்கிக் கொடுத்தது.

1. சடையவர்மரான உடையார் ஸ்ரீசோழபாண்டியதேவற்குயாண்டு உலிசவது திருவாகணந்தபுரத்து தேவர் தேவதானம் ராஜராஜபாண்டியநல்லூர் — கழற்காற்செண்னி இராசேந்திரசோழன்றன்மதலே — த்தியல் சுந்தரசோழபாண்டியர்க்கு—ண்டேற்றத்திய விசேசொன்பதன்கட் சேற்றித்தண்ணீர்பாய்கெண்டை சாரநிவண(லே) பூமேவு குநிகொண்டு பாய் குடநாட்டே பகுஞ்சதி(?) தண்ட நென்மலி காம்பிலி மகதைபுகழ் குறும்பிலென்னு மரிந்தவநல்லூர்க் கெழில்சேர் நன்மைவரப்பண்ணும்-

2. பாண்டிய வின்னைகர் தேவர்கன்மிகளுக்கு ஓ இசைந்து இறை இறக்கிக்குடுத்த பரிசாவது இவ்வூர் அப்பி உத்தமனை ராஜேந்திர செழி.....வேளாளம் அப்பிகொற் (இனிவேறு)

விஷயம்:—கோயில் கட்டினது:—

றருனேர்விட்டு X தந்தமன்னிலவுகளின(?) மத்திருக்கோயில் சூழ்சுற்றுலை சீரமைத்திருக்க — கூவண்ணத்தொழிற்—வளம்பெருகச் செய்தமைத்து பண்ணறகரிய படைததிருமால் அண்ணற்றிருமேனி யாக்கி— யிரஞ்சேவடி பிராட்டி திருமாலும் பார்மகளுமென்னுமிரு மடி தா சோதித்திருவுருவும் தொல்சீர் மணவாளராதித் திருவுநவுமாலுக்—

இதற்குக்கீழ் 3-வதுபட்டியலிலுள்ள 5-வரியும் இதனுடன்சேர்ந்தனவோ அல்லவோ; எழுத்து விளங்கவில்லை. வடபுறம் நடுவில் தீபத்துக்குச் சமீபத்தில் அடிப்பட்டியலில்? 'பூமருவிய திருமடந்தையும்' என்று ஆரம்பித்தெழுதியிருக்கிறது. கீழே குனிந்தெழுதவேண்டியதிருப்பதால் எழுதவில்லை. இனிக் கீழைக்கடைசி அர்த்தமண்டபம் 3-வது பட்டியல் 5-வது வரியும் நாலாவது அடிப்பட்டியலும் எழுதவேணும். இதற்குக்கிழக்கே சுவரில் பெரிய எழுத்தில் வரிக்கல்லில் ஓர் குலசேகரனின் சாசனம் இருக்கிறது. நன்றாய்த்தெரிய வில்லை. அதற்குக்கீழ் மிதி பட்டியலிலும் 2-வரி சுற்றுமிருக்கிறது. அடிப் பட்டியலின்கீழ் 7-வரி தளவரிசையின் நெருக்கத்தினிருப்பதால் எழுதமுடிய வில்லை.

குறிப்பு:—'ராசேந்திர சோழன்றன்மதலை — சுந்தரசோழபாண்டியர்க்கு' என்பதைக் கவனிக்க. அரிந்தவன்=வரிஞவன்=சத்துருவைத் தபிக்கச்செய் பவன். ராஜேந்திரன் என்பதன் பரியாயமாய் வந்தது. தேவர்கன்மிகள்= தேவகாரியஞ்செய்வோர்.

N. B.:— அக்காலத்தில் உலகவழக்கில் இலக்கணம் கவனிக்கப்படாத தற்குப் பின்வரும்வார்த்தைகளைக் கவனிக்க:—

ராஜேந்திர, இவையிற்றுக்கு, தளை, மனை, வையிஷ்ணவர், இன்னிலம், இன்னாடு, தற்மம், கைய்மலர், ஐய்யறம்பி, எழுதினேன், ஆழ்வாற்க்கு.

வித்வான் ஆ. மா. சடகோப-ராமானுஜாசார்யர்,
தலைமைத்தமிழ்ப்பண்டிதர்,
கவர்ண்மேண்ட்கோலேஜ், கும்பகோணம்.

ஸ்ரீ:

திருமுருகாற்றுப்படையாராய்ச்சி.

ஆற்றுப்படை.

ஆற்றுப்படை என்பது ஆறு+படை என்னும் இருசொல்லும் புணர்ந்து ஆற்றுப்படை என்று ஆகி வழியிற்செலுத்துதல் என்னும் பொருளதாம்.

அவ்வாற்றுப்படைதான், பாணாற்றுப்படை கூத்தராற்றுப்படை பொருநராற்றுப்படை விறலியாற்றுப்படை எனப் பலதிறப்படும். அவற்றுள் இம் முருகாற்றுப்படை எதன்பாற்படும் என்று ஆராயின், "தாவினல்லிசை" என்னும் சூத்திரத்தில் (தொல். பொரு. புற. 36.) "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறுஅர்க் கறிவுறீஇச், சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" என்னும் அடிகளிற் குறிக்கப்பட்ட கூத்தராற்றுப்படை முதலியவற்றோடு ஒருங்கு எண்ணப்பட்ட 'ஆற்றிடைக் காட்சி....சென்றுபயனெதிரச்சொன்னபக்கமும்" என்பதன்கண் அடங்குமென்று நச்சினார்க்கினியர் கூறுவர். எனவே முருகாற்றுப்படை என்பதற்கு முருகன்பால் வீடுபெறுதற்குச்சமைந்தானே சிரவலனை ஆற்றுப்படுத்தது என்பது பொருள் என்றும் கூறுவர்.

முருகாற்றுப்படை புலவராற்றுப்படையா ?

இம் முருகாற்றுப்படை மற்றைக் கூத்தராற்றுப்படை முதலியன போல இரண்டாம்வேற்றுமைத் தொகையாகாது ஏழாம்வேற்றுமைத் தொகையாகப் பொருள்கூறப்பட்டுள்ளது; இதனை மற்றை ஆற்றுப்படைகள்போலவே இரண்டாம்வேற்றுமைத் தொகையாகப் புலவராற்றுப்படையென்று கூறுவாரு மூளர். அங்ஙனம் கூறுவதை நச்சினார்க்கினியர் மேற்குறித்த தொல்காப்பியச்சூத்திரத்தின் உரையில் "இதனைப் புலவராற்றுப்படையென்று உய்த்துணர்ந்து பெயர் கூறுவார்க்கு முருகாற்றுப்படையென்னும் பெயரன்றி அப்பெயர் வழக்காமையான் மறுக்க" என்று மறுக்கின்றார். கூத்தராற்றுப்புடைமுதலிய இரண்டாம்வேற்றுமைத்

தொகையாகக் கூறப்பட்ட ஆற்றுப்படைகளெல்லாம் ஒலியுமாற்றலுமோம் பாலீகையுமுடைய மக்களிடத்து ஆற்றுப்படுத்துவதாம். ஏழாம்வேற்றுமைத்தொகைபாகிய இம்மூ அங்ஙனமன்றித் தேவரிடத்து மக்களை ஆற்றுப்படுத்துவதாம். இக்கருத்துப்பற்றியே நச்சினார்க்கினியர் இதனைப் புலவாற்றுப்படையென்றுகூற மறுத்தனரோ என்று கருதுகின்றேன். புறநானூற்றிற் புலவாற்றுப்படையென்னும் தொகைக்கு உதாரணமாக இரண்டொருசெய்யுட்கள் வந்துள்ளன. அவை மக்களிடத்து மக்களையே ஆற்றுப்படுத்தினவாகக் காணப்படுகின்றன. இதனாலும், அவற்றில் ஒன்றன் விசேடவுரையில் உரைகாரர் "தலைவனதியல்பையும் ஊரையுங்கூறி முதுவாயிரவல எம்மூரூள்ளெனத் தன்தலைமைதோன்றக் கூறினமையால் இது புலவாற்றுப் படையாயிற்று" என்று கூறுவதனாலும் மேலேகூறியகருத்து வலியுறுத்தப்படுவதாயிற்று. இங்ஙனமன்றி வெண்பாமாலைக்காரர், "இருங்கண்வானத் திமையோருழைப், பெரும் புலவீன யாற்றுப்படுத்தன்று" என்று புலவாற்றுப்படைக்கு இலக்கணங்கூறி,

> "வெறிகொ ளறையருவி வேங்கடத்துச் செல்லின்
> நெறிகொள் படிவத்தோய் நீயும்—பொறிகட்
> கிருளீயு ஞாலத் திடரெல்லா நீங்க
> வருளீயு மாழியவன்"

என்று உதாரணச்செய்யுளும் கூறுகின்றார். இவர்கருத்து மற்றைப் புறநானூற்றுரைகாரர் நச்சினார்க்கினியர் ஆகியவர்கள் கருத்தோடு முரண்படுவதாகின்றது. வெண்பாமாலையுரைகாரர் புலவாற்றுப்படை மக்களிடத்து ஆற்றுப்படுத்துவது என்னுங் கருத்துக்கொண்டே, மூலகாரர் தேவர்களிடத்து ஆற்றுப்படுத்தியதை அமைக்கவேண்டி, "உலவாவூக்கமொடுன்னியது முடிக்கும், புலவாற்றுப்படை புத்தேட்கு மூரித்தே" என்னும் இடம்விளங்காத புறனடைச்சூத்திரத்தான் அமைக்கின்றார். 'அச்சூத்திரம் செய்தவர்கருத்தும் மக்களிடத்து ஆற்றுப்படுத்துவதே புலவாற்றுப்படை என்பதை மேற்காட்டிய சூத்திரத்திலுள்ள எச்சவும்மை விளக்கும்.

ஆயினும் புலவர் என்று தேவர்கட்குப் பெயருண்மையின் புலவாற்றுப்படை தேவரிடத்து ஆற்றுப்படுத்துவது என்று ஏழாம்வேற்று

மைத்தொகையாகப் பொருள்கொண்டு ஐயனரிதனூர் "இருங்கண் வானத் திமையோருழை" என்று கூறியிருக்கின்றார் என்று கருதலாம். இதற்கு உதாரணவெண்பாவும் இயைபுடையதாயிருக்கின்றது. எனினும், அவர் "பெரும்புலவனை யாற்றுப்படுத்தன்று" என்று கூறியிருப்பது முன் கூறியதையே குறிப்பதாம். எனவே மக்களிடத்து ஆற்றுப்படுத்துவ தற்குப் புலவாற்றுப்படை என்று வழங்குதலும் தேவரிடத்து ஆற்றுப் படுத்துவதற்கு அங்ஙனம் வழங்காமையும காரணமாம் என்பது நச்சி னார்க்கினியர்கருத்தாம். இவற்றாலெல்லாம் முருகாற்றுப்படை புலவ ராற்றுப்படை என்று வழங்கப்பெறாது என்பதே கருத்தாம்.

ஆற்றுப்படையுட் கூறப்பட்ட தலங்கள்.

அங்ஙனம் ஆற்றுப்படுத்துமிடத்துத் தலைவனது ஊரும் பேரும் இயல்புங்கூறி ஆற்றுப்படுத்துவது மரபாம். இவ்வாற்றுப்படைத்தலை வன் முருகவேளாம். அம்முருகவேளது ஊர் அவர் கோயில்கொண் டெழுந்தருளியிருக்குந்தலங்களாம். அத்தலங்களுட்சிறந்தனவான பரங் குன்று திருச்சீரலைவாய் ஆவினன்குடி ஏரகம் குன்றுதோறுடல் பழமுதிர் சோலைமலை முதலியனவே இங்குக் கூறப்பட்டுள்ளன. இத்தலங்களைப் பற்றி நச்சினார்க்கினியர் யாதொன்றும் கூறவில்லை. ஆயினும் ஆறுதலங் கள் கூறப்படவேண்டிய காரணம், அவை கூறப்பட்டுள்ளமுறை, அத் தலங்கள் எவை என்பனபோன்ற ஆராய்ச்சி ஈண்டைக் கின்றியமையா தனவாம்.

முருகக்கடவுட்கும் ஆறு என்னும் எண்ணிற்கும் மிக்க வியைபுண் டாதலின் இங்குத் தலங்கள் ஆறு கூறப்பட்டனவும் இயைபேயாம். ஆற் றுப்படையுள் ஆறுதலங்கள் கூறப்படவில்லை என்றுகூறுவார் கூறுக; ஆறுதலங்கள் என்று அவ்வாற்றுப்படை கிடக்குமுறையான் விளங்கு கின்றது. அங்ஙனம் கொள்வதில் யாதோரிழுக்குமில்லை; ஆதலின் ஆறு தலங்கள் என்றேகொள்ளலாம். அன்றியும், நக்கீரரால் ஆற்றுப்படையுட் கூறப்பட்டதலங்கள் ஆறே என்பது அவர் அவற்றைப் பெயர்குறித்தறி விருந்தும், பிற்பட்ட அருணகிரியார் "சகலமூமுதலாகிய அறுபதிலேமே விய கடமையிலதனிலேறிய–பெருமாளே" "ஆறுதிருப் பதியில்வளர்— பெருமாளே" என்று கூறுவனவிற்றிலிருந்தும் அறியலாம். எல்லாத் திருப்பதிகளையும் எடுத்துக்கூறுதல் இயலாமையின, கூறப்பட்டதிருப்

பதிகள் ஆறையினும் மற்றத்திருப்பதிகளையும் குன்றுதோறுடல் என்று கூறியதாற் றழுவிக்கொண்டார். அங்ஙனம் அவர் தழுவிக்கொண்டிருக்கிறார் என்பதை,

"ஊரூர் கொண்ட சிர்கெழு விழவினும்
ஆர்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனும்
காடுங் காவும் கலின்பெறு திருத்தியும்
யாறும் குளனும் வேறுப்ல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்"
... ...

குறமகள் முருகாற்றுப்படுத்த வருகெழுவியனகரில்,

"வேண்கொ வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் றைதலு மறிந்த வாறே"

என்று கூறியிருப்பதுகொண் டறியலாம்.

இங்ஙனம் நக்கீரர் பலதலங்களைக்குறித்து அவற்றைக் குன்றுதோருடலின்க ணடக்கிக் குன்றுதோருடலுடன் தலங்கள் ஆறு என்று வரையறுத்ததாகக்கொள்ளல்வேண்டும்.

திருப்பரங்குன்று மருதநிலம்; சிரலிவாய் நெய்தனிலம்; ஆவிர்ன்குடி முல்லைநிலம்; பழமுதிர்சோலைமலை குறிஞ்சிநிலம்; என நானிலத்திற்கும் நான்கு தலங்களாகப் பாண்டிநாட்டிற்கூறிச் சோழநாட்டில் மருதவைப்பு ஒன்றுமாத்திரங்கூறிக் குன்றுதோருடலால் எல்லா நாட்டும் எல்லாநிலங்களையும் தழுவியிருக்கிறார்.

இனி அத்தலங்கள் கூறப்பட்டுள்ள முறைமையினைப் பார்ப்பாம். அவை, பரங்குன்று சிரலிவாய் ஆவிர்ன்குடி ஏரகம் குன்றுதோருடல் பழமுதிர்சோலைமலை என்று முறையே கூறப்பட்டுள்ளன. இவற்றுள், பரங்குன்று சிரலிவாய் ஆவிர்ன்குடி பழமுதிர்சோலைமலை ஆகிய நான்கும் பாண்டிநாட்டிலுள்ளதலங்களாம். ஏரகம் சோழநாட்டிலுள்ளது. குன்றுதோருடல் பொது.

பரங்குன்று முருகவேள் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் தல மாதலோடு பரமசிவனுடைய தலங்களிலும் ஒன்றும். அது ஞான சம்பந்தர், சுந்தரமூர்த்திகள் ஆகிய இருவருடைய பாடல்பெற்றதாம். அன்றியும், முருகாற்றுப்படையைக்கூறிய புலவர் நக்கீரனர் எழுந்தருளியிருந்த பாண்டிய ராஜதானியாகிய கூடலுக்கு அருகிற் குடபாலுள்ளதாம். அதனை நக்கீரரே "மாடமலி மறுகிற் கூடற்குடவயிற்குன்று" என்று கூறியிருக்கிறார்.

T. 1142

முருகவேளுக்கே சிறப்பாகவுள்ள மற்றைத்தலங்களினும் பரங்குன்று முருகவேளுக்கும் பரமசிவனுக்கும் பொதுவாகவுள்ளமை கருதியும், தம்நகருக்குஅருகிலுள்ளதுகருதியும், பண்டைத்தமிழ்நூல்களாற் சிறப்பித்துக்கூறப்பட்டுள்ளதுகருதியும் நக்கீரரால் முதற்கண்வைக்கப் பட்டுள்ளது. அன்றியும், நக்கீரர் பூதத்தாற் பரங்குன்றிலுள்ளகுகையின் கண் வைக்கப்பட்டு, அக்குகையிலிருந்து முருகக்கடவுளைப் பாடத்தொடங்கினராதலின், முதற்கண், அக்குகைபொருந்திய குன்றின்கண் எழுந்தருளியுள்ள சடவுளைப் பாடினரென்னவுமாம்.

அதன்பின்னர் முருகவேளுக்குச் சிறப்பாகவுள்ள தலங்கள் கூறுகின்றார். அவற்றுள், சிரலிவாய் பாண்டியர்களுக்கு மற்றொரு ராஜதானியாகிய கொற்கையம்பதிக்கு அணித்தாகவுள்ளது. அங்ஙனமன்றிச் சிரலிவாயே பாண்டியர்களின் பழைபராஜதானியாகிய கபாடபுரமோ என்று சிலர் ஐயுறுவர்கள். "செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரிசெந்தித்பதிகர்' என்னும் அருணகிரிநாதர்வாக்கும் அதற்கிடம் கொடுக்கும். இவற்றுலெல்லாம் சிறப்புற்ற நகரமான சிரலிவாய் முருகவேளுக்கே சிறந்ததலங்களில் முதன்மையாகப் பரங்குன்றையடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இனி, ஆவிநன்குடி பாண்டிநாட்டுள்ள முருகவேள் தலங்களுட் சிரலிவாய்க்கு அடுத்ததாம். அம்முறையே ஆற்றுப்படையுட்கூறப்பட்டுள்ளது. ஆவிநன்குடி (வேள்குலத்து) ஆவியர் தலைநகராம். அது ஆவியின் நல்லகுடி என்னும் பொருளுள்ளதாம். அது இக்காலத்துப் பொதுநி என்னும் சொல்லின் மருஉமொழியாகிய பழநி என்னும் பெயரால் வழங்கப்படுவதாம். (இது விஷயமாக, ப்ரும்மஶ்ரீ சேதுசமஸ்தான வித்வான் ரா. இராகவையங்கார் அவர்கள் "ஆவிநன்குடி" என்று தலைப்

பெயரிட்டுச் செந்தமிழ்த்தொகுதி-2. பகுதி 1-ல். அருமையாக ஆராய்ச்சி செய்துள்ளார்கள்.)

இனி, ஏரகம் சோழநாட்டுத்தலங்களுட் சிறந்ததாம். "முருகன் தண்பரங்குன்று" "ஒடியாவிழவின்கெடியோன்குன்று" என்று பரங்குன்றும், "செந்தில்-நெடுவேள் நிலைஇய காமர் வியன்றுறை" என்று சீரலை வாயும் முருகனுக்குரியதாகச் செய்யுள்வழக்காற் கூறப்பட்டுள்ளது போல ஏரகமும் "சுவாமிமலை" என்று உலகவழக்கால் முருகனுக்கு உரியதாகக் கூறப்பட்டுள்ளது. சுவாமி என்பது முருகன்பெயர். ஏரகத்திற்குச் சுவாமிமலையென்ற பெயருண்மை "ஏரகவெற்பெனு மற்புதமிக்க சுவாமி மலைப்பதி மெச்சிய சற்சன" என்னும் அருணகிரியார்வாக்கானறியப்படும். அன்றியும், சுவாமிமலையை அடுத்துள்ள கிராமம் ஒன்று இன்றைக்கும் ஏரகம் என்று வழங்கப்பெறுகின்றது. அது ஏகம் என்பதன் மரூஉவாகக் கொள்ளலாம். இன்னும், இவர், திருவலஞ்சுழி மும்மணிக்கோவையாசிரியரென்பவாகலின், திருவலஞ்சுழிக்குச் சமீபத்திலுள்ள சுவாமிமலையையே இவர் ஏரகவெற்பென்று குறித்திருக்கலாம்.

இனிக் குன்றுதோறுடல் என்பது "சேயோன் மேய மைவரை யுலகமும்" என்று தொல்காப்பிய அகத்திணையியற்சூத்திரத்திற்கூறியபடி முருகன் குறிஞ்சிநிலக்கடவுளாதலின் அக்கடவுள் தமக்குரித்தாய குன்றுகளின்மேலியாடல்புரிதலைக் குன்றுதோறுடல் என்றார். "மலியாவையும் மேவிய தம்பிரானே" "பலதன்றிலுமமர்ந்தபெருமாளே" என்பன அருணகிரியார்வாக்காம். இதற்குமுன்னர்க்கூறிய தலங்கள்போலவே பலதன்றுகளும் முருகனுக்கே சிறப்பாக உரியனவாம். அக்குன்றுகள் இன்னனாட்டின என்னும் வரையறையில்லை; ஆதலின் ஒரொருநாட்டிற்கேயுரிய தலங்கள்கூறியபின்னர் ஈற்றிற் குன்றுதோறுடல் என்று ஆசிரியர் நக்கீரர் கூறியிருக்கின்றார்.

இனிப் பழமுதிர்சோலைமலை என்பது திருமால் திருப்பதிகள் நூற்றெட்டில் ஒன்றாகிய திருமாலிருஞ்சோலைமலை என்று கொள்ளவேண்டும். சோலைமலை திருமாலுக்கு எத்துணையுரிமையுடையதோ அத்துணையிற் சிறிது குறைந்தாவது முருகக்கடவுளுக்குரிய தாக முற்காலத்து இருந்ததுபோலும். இக்காலில் முருகக்கடவுளுக்குரிய மற்றைத் தலங்

கள்போல இம்மலை அக்கடவுளுக்கு அவ்வளவு உரிமையுடையதாகக் காணப்படவில்லை. ஆயினும், இம்மலை முற்காலத்து அக்கடவுளுக்கு உரியதாக இருந்தது என்று கருத முன்னோர்களுடைய வழக்காறுகள் உள்ளன. "சேயோங்குதண்திருமாலிருஞ்சோலைம்மலை" எனனும் திருமங்கையாழ்வார்பாசுரத்திற்குப் பரமகாருணிகராகிய பெரியவாச்சான் பிள்ளை, "சேய் என்று சுப்ரமண்யனுக்குப் பெயராய் அவனவ்விடத்துக் காவலாகச்சொல்லிப்போருவதொன்றுண்டு" என்று வியாக்கியானம் செய்திருக்கிறார். சேய் எனனும் பெயர் முருகக்கடவுளுக்குப் பெருவழக்கேயன்றி சுப்ரமண்யனுக்கு அத்தனை பெருவழக்கில்லை. சேய் என்பதற்கு சுப்ரமண்யனென்று பெரியவாச்சான்பிள்ளை பொருள் செய்திருப்பதுகொண்டு நாம் அப்பதத்திற்கு முருகக்கடவுள் என்று பொருள்கொள்ளுவது முன்னூல்களுடன் மிகவும் பொருத்தமுடையதாகும் என்று நினைக்கிறேன். அன்றியும், "பஞ்சவர்தம் பங்கங் களைந்தான் பனிரண்டு கண்ணுருவன், பங்கங்களைந்தான் பதி" என்னும் அழகர் கலம்பகச்செய்யுளடிகளில் முருகக்கடவுளுக்கு அம்மலை யுரிமையுடையதுபோலக் கூறப்பட்டிருத்தல் காண்க. அன்றியும், அருணகிரியார் முதலியவர்களும் சோலைமலையை முருகக்கடவுட்குரியதாகக் கூறியிருக்கிறார்கள்.

சிலர், முருகாற்றுப்படையுள், 'பழமுதிர்சோலைமலை' என்று கூறியது சோலைமலை என்னும், தலத்தையன்று என்று கூறுவர். அதற்கு அவர், மெச்சும்புலமை நச்சினார்க்கினியர், மற்றைத்தலங்களை 'என்னும் திருப்பதி' 'ஒரு திருப்பதி' 'என்னும் ஊர்' என்று அடைகொடுத்தும் விளக்கியும் போயிருக்கின்றார் சோலைமலைக்கு அங்ஙனம் அடைகொடுத்தும் விளக்கியும் கூறவில்லை. ஏன்று ஒரு காரணம் காட்டுவர்.

சோலைமலைஎன்பதுமதுரைக்குவடக்கே எறக்குறையப்பின்னிரண்டு மயில் தூரத்துள்ள ஒரு மலைபாம். மற்ற ஒரு மலையினும் இல்லாது இம்மலைக்கே சிறப்பென்று சொல்லும்படி பல சோலைகளாற் சூழப்பட்ட மலையாதலின், இது, சோலைமலையென்று பிரசித்தமாக அக்காலத்து வழங்கப்பட்டுவந்ததுகருதி, நச்சினார்க்கினியரும், சோலைகளையுடையமலை யென்றுகூறி விளக்காமலே போயினர் என்றுகொள்வதே பொருத்தமுள்ள

தாம். சோலைகளாற் சூழப்பட்டிருப்பதே அம்மலையின்சிறப்பு என்ப தனை, நம் சடகோபரும் தமது அருளிச்செயலில், "வளரிளம்பொழில் சூழ்மாலிருஞ்சோலை" என்று விதந்து கூறியருளியிருக்கின்றார்.

அங்ஙனம், சோலைகளாற் சூழப்பட்டமலை இரண்டுண்டு என்றும், அவ்விரண்டில், இதனை வேறுபடுத்தற்குரிய இது பெரிதாக இருந்தமை பற்றி, இரும் சோலைமலையென்று வழங்கப்பட்டது என்றும் அறிய இடமுண்டு. சோலைகளாற் சூழப்பட்ட மலைகளில் மற்றொன்று இருஞ் சோலைமலைக்கு அருகில் இருந்துகொண்டு இற்றைக்கும் சிறுமலை என்று வழங்கப்பெறுவதே இதற்குத் தக்கசான்றும். இச்சோலைமலையே இருஞ் சோலைமலை என்றும், திருமாலினுடைய இருஞ்சோலைமலையாதலின், திரு மாலிருஞ்சோலைமலையென்றும் வழங்கப்பெறுவதுபோலவே, பழங்கள் முற்றியிருப்பதாற் பழமுதிர்சோலைமலையென்றும் அக்காலத்தில் வழங் கப்பட்டது என்று அறிக.

இவற்றுலெல்லாம், நக்கீரர், பழமுதிர்சோலைமலை என்றது திருமா லிருஞ்சோலைமலையையே என்பது தெளிவாம். அங்ஙனமாயின், பாண்டிநாட்டின் மற்றத்தலங்களுடன்கூறாது சோலைமலையை ஈற்றில் வைத்தது என்னையெனின், முதலிற்கூறிய பரங்குன்று பரமசிவன் சம் பந்தம்பெற்று முருகக்கடவுட்கு உரியதாயவாறுபோலவே இது திருமால் சம்பந்தம்பெற்று முருகனுக்கு உரியதாயிற்று என்க. அக்காரணம் பற்றியே இதனை ஈற்றில்வைக்கநேர்ந்ததும் என்றுணர்க.

பரங்குன்றையும் சோலைமலையையும் முதலிலும் முடிவிலும் வைத்த தற்கேற்ப மற்றைத்தலங்களில் முருகக்கடவுளைப் பற்றிக் கூறியது போலன்றி இந்த இரண்டுதலங்களைமாத்திரம் தலத்தின்வளந்தோன்றப் பாடியுள்ளதும் உண்டு அறியத்தக்கது.

இனி அத்தலங்களை நக்கீரர் எவ்வாறு சிறப்பித்துக் கூறியுள்ளார் என்று காண்பாம்:—

"செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து

மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் தஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும்
குன்றமர்ந் துறைதலு முரியன்"

என்று பரங்குன்றைக் கூறியுள்ளார். அதற்கு, "போரைவென்றுவிரும்பிக் கட்டின சேய்நிலத்தேசென்றுபர்ந்த கொடியகொடிக்கருகே நூலால் வரிந்து பூணப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்மையிற் றாங் கிவேவிடும்படி பெறுவாரை இல்லையாக்குங்கையினாலே எக்காலமும் போர்த் தொழிலரிதாகிய வாயிலினையும் திருமகள் வருத்தமின்றியிருந்த குற்றந் தீர்ந்த அங்கடித்தெருவினையும் மாடங்கள்மலிந்த ஏனைத்தெருக்களையு முடைய மதுரையின் மேற்றிசையிடத்து அழகினையுடைத்தாகிய சிறகையுடைய வண்டினுடைய அழகியதிரள் கரியசேற்றினையுடைய அகன்றவாயிலிலே முறுக்குநெகிழ்ந்து பின்பு தாதும் அல்லியும் தோன்ற மலர்ந்த முள்ளையுடைத்தாகிய தாளையுடைய தாமரைப்பூவிலே இராப் பொழுது துயில்கொண்டு விடியற்காலத்தே தேன் நாறுகின்ற நெய்தற் பூவையூதி ஞாயிறுதோன்றினகாலத்தே கண்ணையொக்கவிரிந்த விருப்ப மருவின சுனைப்பூக்களிலே சென்று ஆவாரிக்கும் திருப்பரங்குன்றிலே நெஞ்சமர்ந்திருத்தலுமுரியன்" என்பது பொருளாம்.

இவ்வடிகளில், நக்கீரர், தம்நகர்மீதுள்ள பற்றினால் முதலில் மதுரை யின் வளங்களைக்கூறிப் பின்னர்ப் பரங்குன்றினவளங்களைக் கூறுகின்றார். பரங்குன்றைக்கூறுமிடத்து ஆசிரியர் பெரும்பாலும் மருதவளத்தாற் கூறுவதால் அது மருதநிலத்தாராம். பரங்குன்றைக்கூறுமிடத்து "மறு வில் கற்பின் வாணுதல் கணவன்" என்பதாற் பரங்கிரியில், தெய்வயானை திருமணத்தைக் குறித்தாராயிற்று.

திருச்சீரலைவாயை, "வைகறுதிபொருத வடிவாழ் வரிநுதல்" என் னும் அடிமுதல் "உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்—அலைவாய்ச் சேறலு நிலையிய பண்பு" என்னும் அடிகள்முடியக் கூறியுள்ளார்.

இதன்பொருள்:—"கூர்மையையுடைத்தாகிய தோட்டிவெட்டின வடி வமைந்தின புகரையுடைய மத்தகத்தே பொன்னரிமாலை பட்டத்தோடே

கிடந்து அசையத் தாழ்கின்றமணி மாறி ஒலிக்கின்ற பக்கத்தினையும் கடியநடையினையும் கூற்றுவனொத்த பிடரான் றடுத்தற்கரியவலி யினையுமுடைய ஓடுங்காற் காற்றெழுந்தாலொத்த களிற்றை ஏறி, ஐந் தாகிய வேறுபட்ட வடிவினையுடைய மூடிக்குச்செய்புந்தொழிலெல்லாம் முற்றப்பெற்ற முடியோடேகூடி விளங்கிய ஒன்றற்கொன்று மாறுபாடு மிகும் அழகினையுடைய மணி மின்னுடேமாறுபடுகின்ற விளக்கத் தோடே முடியிலே பொலிவுபெற, ஒளிதங்கியசையுந் தொழிற்கூறமைந்த பொன்னுற்செய்த மகரக்குழை சேய்நிலத்தேசென்றுவிளங்கும் இயல்பினையுடைய ஒளியையுடைய மதியைச்சூழ்ந்துநீங்காத மீன்கள் போல விளங்குவனவாய் ஒளியைக் கால, வருத்தமில்லாத விரதங்களை யுடைய தவத்தொழிலேமுடிப்பாருடையமனத்திலே பொருந்தித்தோன்று கின்ற ஒளி நிறம் இவற்றையுடைய முகங்களிரண்டு ஒருமுகம் பெரு மையையுடைத்தாகிய இருட்சியையுடைய உலகம் குற்றமின்றாய்விளங் கும்படி பல கிரணங்களையும்தோற்றுவித்தது; ஒருமுகம் தன்மேல் அன்பு செய்தவர்கள் துதிக்க அதற்குப்பொருந்தி அவர்க்கினிதாக நடந்து அவர்மேற்சென்றகாதலாலே மகிழ்ந்து வேண்டும்பொருள்களை முடித்துக் கொடுத்தது; ஒருமுகம், மந்திரத்தையுடைய வேதத்திற்கூறிய முறைமை யிடத்தைத் தப்பாத அந்தணருடைய யாகங்களில் தீங்குவாராதபடி நினையாநிற்கும்; ஒருமுகம் ஈண்டுவழங்காத வேதங்களினும் நூல்களினு மூள்ளபொருள்களை யாய்ந்து இருடிகள் ஏழுறும்படி உணர்த்தித் திங்கள்போலத் திசைகளெல்லாம் விளக்குவிக்கும்; ஒருமுகம் திருவுள் ளத்துச்செல்கின்ற நடுவுநிலைமையைக் கெடுத்து இவர்களைக் கொல்ல வேண்டும் என நூ கறுவுதல்கொண்ட திருவுளத்தோடே செறப்படும் அசுரர்முதலியோரைப் பொன்றக் கெடுத்துக் களவேள்வியைவேட்டது; ஒருமுகம் குறவருடைய மடப்பத்தையுடையமகளாகிய வல்லிபோலும் இடைபிங்கையுடைய வள்ளியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று: அவ் வாறுமுகமும் அத்தொழில்களிடத்துச்செய்யும் முறைமைகளைப் பின்னுநடத்துவியலினாலே அம்முகங்களுக்குப் பொருந்தப் பொன்னுற் செய்த ஆரந்தங்கிய அழகையுடைத்தாகிய பெருமையையுடைய மார்பிற் கிடக்கின்ற உத்தமலக்கணமாகிய சிவந்த மூன்றுவரியினையும் தன் னிடத்தேவந்துவிழும்படி வாங்கிக்கொண்டவும், தம்முடையவலியினாலே பெரிய புகழ்நிறையப்பட்டுச் சுடரையுடைய படைக்கலங்களையெறிந்து

பகைவர்மார்பைப்பிளந்து அவற்றை வாங்கியமான நிமிர்தோள்களில் ஒருகை எக்காலமும் ஆகாயத்தே இயங்குதன்முறைமையினையுடைய தெய்வ இருடியர்களுக்குப் பாதுகாவலாக எடுத்தது. ஏந்தியகைக்கு இணைந்தகை மருங்கிலேவைத்தது. ஒருகை தோட்டியைச் செலுத்தா நிற்க மற்றைக்கை செம்மைநிறம்பெற்ற ஆடையையுடைத்தாகிய துடை யின்மேலே கிடந்தது. இரண்டுகைகள் வியப்பையும் கருமையையு முடைய பரிசையுடனே வேலையும் வலமாகச் சுழற்ற, முனிவர்க்குத் தத்துவங்களைக்கூறி உரையிறந்தபொருளையுணர்த்துங்காலத்து ஒருகை மார்போடே விளங்கா நிற்க, ஒருகை மார்பின் மாலைதழுவுதலையுடைத் தாகிய தழுவுகையோடே சேர்ந்து அழகுபெற, ஒருகை தொடியொடு மேலேசுழலாறு களவேள் விக்கு முத்திரைகொடுப்பக் கீழேவீழ்ந்தமற்றைக்கை ஓசையினிதாகிய ஒலிக்கின்ற மணியை மாறியொலிக்கப்பண்ணி, ஒருகை நீலநிறத்தை யுடையமேகத்தாலே மிக்கமழையைப் பெய்யாநிற்க, ஒருகை தெய்வ மகளிர்க்கு மணமாலைசூட்ட, அப்படியே அந்தப் பன்னிரண்டுகையும் முகத்தின்பகுதியிலேபடும்படி தொழில்செய்து ஆகாயத்தினது துன்பமி யொலிப்பத் தின்னியவைரத்தையுடைய் கொம்பு மிக்கொலிப்ப வெள் ளியசங்கு முழங்க வலியைத் தன்னிடத்தேகொண்ட உருமேற்றினது இடிப்புப்போலும் ஓசையையுடைய முரசுடனே பலபீலியையுடைய மயில் அவனுணையினுலேவென்றெடுத்த கொடியிலேயிருந்து ஒலியா நிற்க, ஆகாயமேவழியாக விரைந்தசெலவினைமேற்கொண்டு நன்மையோங்கும் நன்மக்கள்புகழ்ந்த உயரும் சீரினையுடைய புகழினையுடைய நாமனூரலை வாய் என்னும் திருப்பதியேற எழுந்தருளுதலும் அவற்கு நிலைபெற்ற குணம்" என்பதாம். இவ்வடிகளிற் சிலவாயில் எழுந்தருளியுள்ள குமரக்கடவுளின்திருவுருவம் நன்குபுகழப்பட்டிருத்தல் அன்பர்களின் மனத்தை யபகரிக்கும் என்பதிற் றடையிர்த்து. இவ்விடத்து, ஆறுதிரு முகங்களும் பன்னிருதிருக்கைகளும் பாங்காகப் புகழ்ந்துகூறப்பட் டுள்ளன.

இனி, ஆவிநன்குடியைச் "சிரை கைதிய உலகுகையர்," என்பது முதலாகச் "சின்னுள்-ஆவி நன்குடி யகைதலு முரியன்" என்பது வரை யிலும் கூறியிருக்கின்றார். "இதன்பொருள்:—"பலரும் புகழ்கின்ற அயன் அரி அரன் என்னும் மூவரும் தத்தமக்குரிய தொழில்களை முன்புபோல் நிகழ்த்தித் தலைவராகவேண்டிப் பிள்ளையார்சபித்தலாலே

மண்ணிடத்தேதோன்றி மயக்கமுறுகின்ற நான்குமுகத்தையுடைய, திரு மாலுடைய திருவுந்தித்தாமரைபெற்ற, ஊழிகடோறும் தன் படைத்தற் றொழிலில் வருத்தமில்லாத ஒருவனுகிய அயனைப் பழையநிலையிலே நிறுத்தக்கருதி நான்காகிய பெரிய தெய்வத்தையுடைய நன்றுகிய ஊர் கள் நிலைபெற்ற உலகத்தைக்காக்கும் ஒரு தொழிலையேவிரும்பியகோட் பாட்டையுடைய நஞ்சுடனே உறைக்குள்ளேகிடந்த துளையினையுடைய வெள்ளிய எயிற்றினையும், நெருப்பென்னும்படி நெட்டியிர்ப்புக்கொள் ளுப கண்டார்க்கு அச்சந்தோன்றும் கடியவலியினையு முடைய பாம்பு படும்படியடிக்கும் பலவரியினையுடைத்தாகிய வளைந்தசிறகினையுடைய கருடனையணிந்த நீண்டகொடியினையுடைய திருமாலும், வெற்றிக்களத் தே வெள்ளிய வெற்றிவெற்றிக்கொடியாக எடுத்தலவலும் இறைவி யொருபாகத்தேபொருந்தி விளங்குமவலும் பலரும் புகழ்கின்ற சிக் கென்ற தோளினையும் இதழ்குவியாத மூன்றுகண்ணினையுமுடையவனும் முப்புரத்தை யெரித்த மாறுபாடுமிக்க செல்வனுமாகிய உருத்திரனும், ஆயிரம் கண்ணினையும் பலவேள்விகளை வேட்டுமுடித்ததனாற்பெற்ற பகைவரைவென்று சொல்கின்ற வெற்றியினையும் உடைய தலைகள் எந்தி யிருக்கின்ற நான்காகிய கொம்பினையும் அழகிய நடையினையும் நிலத்தே கிடக்கின்ற பெரிய வளைந்த கையினையுமுடைய எல்லாரு முயர்த்துச் சொல்லப்படுகின்ற யானையின்கழுத்திலே ஏறிய திருமகள்விளங்கு மிக் திரனும், தம்முள் மாறுபாடில்லாத அறிவினையுடைய நான்காகிய வேறு பட்ட இயல்பினையுடைய மூப்பத்துமூவரும், பதினெண்வகையாகிய உயர்ந்தநிலையைப் பெற்றவரும் ஆகிய இவர்கள் உடுக்கள் பொலிவு பெற்றுத் தோன்றினாலொத்த தோற்றத்தையுடையராய் மீன்கள் உலாவு கின்ற இடத்தே சேர்ந்து காற்று எழுந்தாலொத்த செலவினையுடைய ராய்க் காற்றிடத்தே நெருப்பெழுந்தாலொத்த வலியினையுடையராய் நெருப்புப்பிறக்க உருமேறு இடித்தாற்போன்ற குரலினையுடையராய் ஆகாயத்தே சுழற்சியினையுடையராய்த் தம்முடைய சீரிய படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் தொழில்களைப் பண்டுபோலப் பெறுமுறை மையினைக் குறைவேண்டிநின்றுபெறுங்கூற்றாலே முடித்துக்கோடற் குப் புகையைமுகந்தாலொத்த தெய்வத்தன்மையால் அழுக்கேறாத தூய வுடையினையும் முகை வாய்நெகிழ்ந்த மாலைசூழ்ந்த மார்பினையும் உடைய செவியாலே சுருதியையளந்து நேம்படைக்கட்டின சுற்றுதலுறும் வார்த்

கட்டினையுடைய நன்முகிய யாழினிசையிலேபயின்ற ஈரமுடைய நெஞ் சாலே எக்காலமும் மெல்லியவார்த்தைசொல்லுதலேப்பொருந்திய கந்தரு வர் மக்களுக்குரிய கோயில்லீயாக நிருநிந்த உடம்பினையுடையராய் மாவின தூ விளங்குகின்ற தளிரையொக்கும் நிறத்தினையுடையதாய் விளங்குந்தோறும் பொன்னுரைவிளங்கினுற்போலும் திகலையையுடைய ராய்க் கட்கினிய ஒளியினையுடைய பதினெண்சோவையாகிய மேகலே யணிந்த தாழவேண்டிய இடம் தாழ்ந்து உயரவேண்டிய இடம் உயர்ந்த அல்குலேயுடைய குற்றமில்லாத கந்தருவமகளிரோடே குற்றமின்றுய் விளங்காநிற்க இனியநரம்பை வாசிக்க மாவிரியை யுடையாகச்செய்த உடையினையுடையர் அழகோடு வடிவாலும் நிறத்தாலும் வலம்புரிச்சங் கினையொக்கும் நரைமுடியினையுடையர்; எக்காலத்தும் நீராடுதலின் அழுக்கறவிளங்கும் வடிவினையுடையர், கிருட்டினசினம்போர்த்த வீரதங் களால் விட்டபட்டினியால் தசைகெடுகின்ற மார்பின் எலும்புகள் கோவைதோன்றியுலவும் எலும்பினையுடையர்; மாறுபாட்டோடே நெடுங் காலம் நிற்கும் செற்றத்தினையும்போக்கிய மனத்தினையுடையர்; பலவற் றையும் கற்றோர் சிறிதுமறியப்படாத இயல்பான அறிவினையுடையர்; பலவற்றையும் கற்றோர்க்குத் தாம் எல்லையாகிய தலைமையையுடையர்; ஆசையோடே கடியசினத்தையும் போக்கின அறிவினையுடையர்; தவத் தான் மெய்வருத்தமுளவேனும் மனத்தான் வருத்தம் சிறிது மறியப் பட்டாத இயல்பினையுடையர்; ஒருவருடனும் வெறுப்பில்லாத நல்லவறி வினையுடைய முனிவர் திருவுள்ளம் பொருந்துதல்வர முன்னேசெல்ல யாவரும் சேரவந்து காணும்படியாக வருத்தமில்லாத அருட்கற்பினை யுடைய தெய்வயானையருடன் ஆவிநன்குடியென்னும் ஊரிற் சிலநாள் இருத்தலும் உரியன்" என்பதாம். இவ்வாவிநன்குடி என்னும் ஊரில் முருகக்கடவுள் திருவோலக்கமும் அதிற் கந்தருவர் யாழ்வாசித்தலும் முனிவர்வருகையும் அயன்சாபத்தையொழித்து நல்வழிப்படுத்த வேண்டி மும்மூர்த்திகள்வந்து குறையிரந்தலும் முதலியன கூறப்பட் டுள்ளன. இவ்வடிகளில் முனிவரைப்பற்றிக் கூறியிருப்பது அறிஞ ரறிந்து வியக்கத்தக்கதாம்.

திருவோகத்தை, "இருமூன்று எய்திய இயல்பினின்வழாஅ"— என்பதுமுதற் "பெரிதுவந்து, வரகத்துறைதலு முரியன்" என்பது வரையுமுள்ள அடிகளிற் கூறியுள்ளார். அவ்வடிகளின்பொருள், "ஓதல்

ஒத்துவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறுகிய நன்மைபொருந்திய இலக்கணத்தில் வழுவாமல் தாயும் தந்தையுமாகிய இருவர்குலத்தையும் உலகத்தார் நன்றென்று பலவாய் வேறுபட்ட பழையகுடியிற்பிறந்த நாற்பத்தெட்டியாண்டு நல்லிளமையை வேதம் கூறிய நெறியிலேபோக்கிய அறத்தை எப்பொழுதும் கூறுகின்ற கோட் பாட்டினையும் நாற்சதுரமும் முச்சதுரமும் வில்வடிவுமாகிய மூன்று வகையான ஆகவனீயம் தக்கிணாக்கினி காருகபத்தியம் எனும் மூன்று தீயானுண்டாகிய செல்வத்தினையும் ஒன்பதாகியநூலைத் தன்னிடத்தே கொண்ட ஒருபுரி மூன்றுகிய நுண்ணிய பூணூலையும் உடைய இருபிறப் பாளர் தாங்கள் நீராடுங்கால் தோய்க்கப்பட்ட கலிங்கம் உடம்பிலே கிடந்துபுலர உடுத்து மனைமிக்க நறியபூவை பெய்துத் தலைமேலே வைத்த கையினையுடையராய் ஆறழுத்தினைத் தன்னிடத்தே யடக்கி யிருக்கின்ற கேட்டற்கரிய மறையவுச்சரிக்கப்படும் மந்திரத்தை நாப் புடைபெயருமளவிலே பயில உச்சரித்து வழிபடுங்காலமறிந்து தோத் திரங்களைக்கூறப் பெரிது மகிழ்ந்து ஏரகம் எனுகின்ற ஊரிலே இருந்த லுமுரியன்" என்பதாம் இவ்விடத்தில் அந்தணர்தன்மையும் பிரமசரிய விரதமும் அதனைக்காக்கவேண்டிய எல்லையும் அந்தணர் குமரக்கடவுளை வழி டுமுறையும் வழிபடும்பொழுதும் நாப்புடைபெயரும் (உச்சரிக் கும்) மந்திரமும் ஆகியவை நன்குகூறப்பட்டுள்ளன. நக்கீரர் அந்தண ரல்லரென்றுகூறுவார் இவ்வடிகளை நன்கு ஊன்றிப்பார்ப்பாராக.

இனிக் குன்றுதோறுடலைப் "பைங்கொடிநறைக்காய்" என்பது முதற் "குன்றுதோறுடலும் நின்றதன் பண்பே" என்பதுவரையிலு முள்ள அடிகளைக் குறித்துள்ளார். "கானவர்கள் குரல்வயபய மெல்லிய தோளினையுடைய மானினைபோலும் மகளிர் குரவையாடியசைய, செய் யன் வேலன் நறியசந்தனத்தைப்பூசிய நிறம்விளங்குமார்பிலே காட்டுமல் லிகையுடனே வெண்டாளியையுங்கட்டின கண்ணியையுடையனுய்க் கச் சைக்கட்டிக் கழலையணிந்து வெட்சிமாலையைச்சூடிக் குழலூதிக் கொம் பைக்குறித்துச் சிறியபல்லியங்களை எழுப்பி மயிலை ஏறிக் கோழிக் கொடியை யுயர்த்துத் தானவேண்டியவடிவுகொடலிற் பிள்ளையாயிராது நெடுகவளர்ந்து தோளிலே தொடியையுணிந்து நம்பு ஆரவாரித்தா லொத்த இளையமிடற்றையுடைய பாடுமகளிரோடே மலைகடோறுஞ் சென்று தன்னுடைய முழவையொத்த பெருமையையுடையகையினுலே

அவர்கள் கையினைத்தழுவி எடுத்துக்கொண்டு விளையாடுதலும் முருகனுக்கு நிலைபெற்றகுணம்" என்பது, அவ்வடிகட்குப் பொருந்தபொருளாம். இவ்விடத்திற் குறிஞ்சிவளங்கள்சிலவும் கானவர் தம்மகளிரோடு குரவையயர்தலும் அக்குரவைக்கூத்தில் வேல்முருகன் தோன்றிச் சிலமகளிர்களுடன் மலைகளில்நின்று குரவைக்கூத்தாடுதலும் கூறப்பட்டுள்ளன.

பழமுதிர்சோலைமலையைப் "பலவுடன், வேறுபல் துகிலி னுடங்கியகில்சுமந்து" என்பது முதல் "பழமுதிர்சோலைமலைகிழவோனே" என்பதுவரையும் குறிஞ்சிவளம் நன்குதோன்றக்கூறியிருக்கின்றார். "வேறுபட்ட பலவாகிய துகிற்கொடிகளைப்போலத் தாம் பலவும் கூடவைசந்து அகிலைமேற்கொண்டு சந்தனமாகிய பெரியமரத்தைத் தள்ளிச் சிறுமூங்கினது பூவையுடைய அசைகின்றகொம்பு தனிப்ப வேரைப்பிளந்து தேவருலகத்தைத் தீண்டுகின்ற நெடியமலையிடத்தே ஞாயிற்றின்மண்டலத்தைப்போல வைக்கப்பட்ட தண்ணியவாய் மணக்கின்ற விரிந்த தேன்கூடுகெட நன்றாகிய பல ஆனினி (பலா) களினுடைய முற்றியசுளை தன்னிடத்தேகலக்க மலையினுச்சியிலேயுண்டான சுரபுன்னையின நறிய மலர்கள் உதிரக் கருங்குரங்கோடே கரியமுகத்தையுடைய முசுக்கலைகளும் நடுங்கப் புகையணிந்த மத்தகத்தையுடைய பெரியபிடி குளிரும்படி வீசிப் பெரியயானையினுடையமுத்தையுடைத்தாகிய வெள்ளிய கொம்புகளையுள்ளடக்கி நல்ல பொனனும் மணியும் நிறம்விளங்கும்படி மேலேகொண்டு குதித்துத் தத்துதலையுற்றுப் பொடியான பொன்னைத் தெள்ளி வாழையினது பெரியமுதல் துளியத் தெங்கினது இளநீரையுடைய சீரிய தலையுதிர அவ்விரண்டினையும் மோதி மிளகினது கொடியின் கரியகொத்துக்கள் சாயப் பீலியையுடைத்தாகிய இடத்தினையும் மடப்பத்தையுடைத்தாகிய ஓழுக்கத்தினையுமுடைய மயில்களோடே கோழியினுடைய வலியையுடையபெடை வெருவிப் பலவும்சேக்கை ஆண்பன்றியுடனே உள்ளே வெளிற்றினையுடைத்தாகிய கரிய பனையினது புல்லிய செறும்பையொத்த கரியநிறத்தையுடைத்தாகிய மயிரினையுடைய உடம்பினையும் வளைந்த அடியினையு முடைய சுடு பெரிய கல்விண்ட முழைஞ்சிலே சேரக் கரிய கொம்பினையுடைய ஆமாவினுடைய நன்றாகிய ஏறுகள் முழங்க மலையின் உச்சியினின்றும் இழுமென்னும் ஓசைபடக்குதிக்கும் அருவியையுடைய பழம்முற்றின சோலைகளையுடைய மலைக்கு உரிமையையுடையோன்" என்பது அவ்வடிகளின் பொருளாம். இவ்வடிகளில்

மலையின்து இயற்கைவளனையும் அருவிபாயும் அழகையும் எளிய இனிய நடையில் மாட்டிலக்கணமென்பது சிறிதுமில்லாமற் குறிஞ்சித்திணையை வருணித்திருப்பது கற்றோர்மனனைக் கவருமென்பது எனதுகருத்து.

இனி, ஆற்றுப்படைக்குத் தோற்றுவாய்செய்தவிடத்து மறுவில் கற்பின்வாணுதல் கணவன், தண்டார்புரளுமார்பினன், காந்தட்கண்ணி மிலைந்தசென்னியன், எய்பாநல்லிசைச்செவ்வேற்சேய் நீ அவனது சேவடி படரும் செம்மலுள்ளமொடு செலவுநயந்தனையாயின், இன்னேபெறுதி முன்னியவினையே என்று தலைக்கூட்டிப் பின்னர், அவன் எழுந்தருளி யுள்ள தலங்களைக்கூறி அத்தலங்களிலும் பிறவிடங்களிலும் அவன் எழுந்தருளியிருப்பான். நீ அவ்விடங்களில் அவனைக்கண்டுழி முக னமர்ந்து ஏத்தி அறுவர்பயந்த ஆறமர்செல்வ ஆல்கெழுகடவுட்புதல்வ மலைமகள்மகனே மாற்றேர்கூற்றே கொற்றவைசிறுவ பழையோள்குழவி வானோர்வணங்குவிற்றூணத்தலைவ மாலைமார்ப நூலறிபுலவ செருவி லொருவ பெருவிறன்மள்ள அந்தணர்வெறுக்கை அறிந்தோர்சொனமலி மங்கையர்கணவ மைந்தரேறே வேல்கெழுதடக்கைச்செல்வ குறிஞ்சிக் கிழவ நன்மொழிப்புலவரேறே பெரும்பெயர்முருக நசையுநர்க்கார்த்தும் இசைபேராள அலந்தோர்க்களிக்கும்சேய் பரிசிலர்த்தாங்கும்கெடுவேள் போர்மிகுபொருந எனப்பல ஆனது ஏத்திக்குறித்துமொழியாளவை யின் மலைகிழவோனிய குரிசிலும் தெய்வஞ்சான்ற திறல்விளங்குருவின் வான்றோய்நிவப்பில் தான்வந்தெய்தித் தெய்வத்தினாலங்காட்டி அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின்வரவு என அவ்புடை நன்மொழிகூறி இவ்வுலகத் தில் ஒருயோகத்தோன்றப் பெறலரும்பரிசில் நல்குவன் என்று கடைக் கூட்டி ஆற்றுப்படுத்தவாறுகாண்க.

நல்குவன் எனப் பயனிலை முன்னும், 'பழமுதிர்சோலைமலைகிழ வோன்' என எழுவாய் பின்னும்வர வினைமுற்றுத்தொடராகப் புலவர் இப்பாட்டினைச் செய்திருக்கின்றார் என்பது உரைசெய்த நச்சினார்க்கினி யர்கருத்தென்பதனை அவர் ஈற்றில் முடித்துக்காட்டியிருப்பதா லறிய லாம். இங்ஙனம் செய்யுள்செய்வதே சிறப்பென்பது அக்காலத்துப் புலவர் கருத்தாம். இன்னும் மற்றுமுள்ள ஆற்றுப்படைகளிலும் எழு வாயை ஈற்றில் நிற்பது காண்க. இப்பாட்டைச்செய்த புலவர் நக்கீரர், தாமியற்றிய நெடுநல்வாடையென்னும் மற்றொருபாட்டின்கண்ணும் எழு வாயை ஈற்றில் வைத்திருப்பது இங்கு அறியத்தக்கது.

இப்பாட்டில் ஆற்றுப்படுத்தவன் பெற்றம்பெருவளத்தினையுடையவன்; அவனை "யானறியளையின் ஏத்தி" என்னுமிடத்திலுள்ள "யான்" என்னும் சொல்லாற் குறித்துள்ளார். ஆற்றுப்படுக்கப்பட்டவன் "முதுவாயிரவல" "நீ" என்பனவற்றாற் கூறப்பட்டுள்ளான்.

இனி இவ்வாற்றுபடையுள் வீடுபெற்றான் ஒருவன் அதுபெறுதானை நோக்கி நீ வீடுபேறு கருதினையாயின் முருகனிடத்துச்செல்க என்றனன்; பெறுதான் அம்முருகன் எங்கெழுந்தருளியிருக்கும் என்று வினவப் பாங்குற்றிலுள்ளான என்றனன. ஆயின், அவன் இயல் என்னை என்று கடாயினன்; அதற்கு ஆறுமுகம் பன்னிருகை முதலியவற்றையுடையான் செந்திலான் என்றன. அப்பொழுது இரவலன் வீடருளுந் தன்மையுடையனை முருகன் என்றையுற்றான். நீ ஐயுறேல்; அவன் முத்தேவர்க்கும் அருள் செய்து அவர் தொழில் நிலைநிறுத்தினவன்; முப்பத்துமூவரும் பதினெண்கணங்களும் தன்னைவழிபட நின்றான் ஆவினன்குடியில் என்றான். அங்ஙனமாயின், அவனை வழிபடுமாறு எங்ஙனே? வழிபடும் மந்திரம் எது? என்றுசாவினன்; அதற்கு ஏரகத்தில் அந்தணர்வழிபடுமாற்றையும் அவர்கள் உச்சரிக்கும் மந்திரமாகிய ஆறெழுத்தினையும் உபதேசித்தான். அப்பொழுது அத்தகையோனை மேலேகூறிய இடங்களிற்சென்றுதான் காணவேண்டுமோ என்று எக்கமுற்றான்; அதனைக்கண்டு வீடுபெற்றான் அன்பனே! நீ எக்கமடையற்க; என்னாற்கூறப்பட்டவன் முற்கூறிய இடங்களின்மட்டுமன்று; சீர்கெழு விழவு மேவுநிலை வெறியயர்களன் காடு கா கவின்பெறுதிருத்தி கந்துடைநிலை முதலிய இன்னும் பல இடங்களில் நீ எங்கெங்குக் காண வேண்டுமென்று விரும்புகின்றனையோ ஆண்டாண்டுக் காணப்படுவன் என்று தேற்றினான். தேற்றத்தேறிய இரவலன் என்னை நீ கூறியது; உன்னாற் கூறப்பட்டவன் ஆறுமுகமும் பன்னிருகையு முடையவனன்றே? அவன் அருள்செய்வது முத்தேவர்களுக்கன்றே? அவனைச் சூழ்ந்திருப்பார் தேவர்களும் முனிவர்களுமன்றே? அவனைப் போற்றிவழிபடுவார் அருமறையந்தணரன்றே? அவர்கட்கன்றே அவ்வாறெழுத்தும் சொல்லியமுறைபாற் சொல்லுதற்கெளிது? எம்மனோர்க் கெளிவரும் நிலைமையனை அவன் என்று ஆர்வமுற்றான். அக்காலை வீடுபெற்றான் ஆர்வலனது தீவிரமான பக்குவதசைகண்டு அவனை விளித்து நீ அங்ஙனம் கருதற்க. நீ கூறவேண்டுவது

ஆறெழுத்தன்று; மகனே கூற்றே குழவியே மைந்தரேறே புலவரேறே என்று உனக்குத் தோன்றிய சொற்களால் எத்தலாம். அவனைச் சேவித்துநிற்பார் தேவராயினும் யாவராயினும் அவர்கள் நீ வந்ததை முருகனிடத்து விண்ணப்பஞ்செய்யுந் தண்ணளியுள்ளவர்கள்; தேவர்க்கு மட்டும் அருள்செய்பவனன்று; அவன் பரிசிலர்த்தாங்கும் உருகெழு நெடுவேளாம். அவன் உருவத்தைக்கண்டு அச்சம் கொள்ளற்க. உனக்குக் காட்சிதரும்பொழுது வருத்தமமைந்த தன்று தெய்வத்தன்மையை உள்ளடக்கிக்கொண்டு தன் இனிய வடிவுடன் வந்துதோன்றுவன். உன்னைக் கண்டவுடன் நீ உன் குறையைக்கூறவேண்டாதே தானே அன்புடை நன்மொழியினால் அஞ்சலோம்புதி அறிவல்லின்வாவு என்று கூறி அருள்செய்யும் எளிவரும் நிலையினன்; நீ அவனிடத்துச்செல்க என்று அவன்கூறியவற்றிற்குத்தக முறையே விடையிறுத்து ஆற்றுப்படுத்தியவாறு அருமையினும் அருமையாம்.

இனி இவ்வாற்றுப்படையின் உள்ளுறைபொருளாவது:—சனகர் முதலிய முனிவர்நால்வரும் மாணிக்கவாசகரும் முத்திநிலையை அடைவதற்கு மெய்ம்மையானதேசிகனை விரும்பினரன்றே? அங்ஙனம் அவர்கள் தாம் விரும்பியவாறே தேசிகனைப்பெற்று அம்முத்திநிலையினை யுள்ளவாறறிந்தனரன்றே? அவர்க்குத் தேசிகனுப்ப பரமசிவன் தானே விரும்பியமர்ந்து அவர்களை ஆட்கொண்டனர். அங்ஙனமே உபதேச மொழிகளை அனுபவமுடைய தேசிகர்பாற்கேட்டு அதனால் மெய்ப்பொருளையுணரவேண்டு மென்பது கட்டளையாதலின் நக்கீரரும் இவ்வுலகத்திடத்துக்கொண்ட மேலான அருளினால் மக்களை நல்வழிப்படுத்துவதற்கு அவர்கள் தம்மை விரும்பாமலிருக்கையிலேயே தாமே வலிய அவர்கள்குழலிற்புகுந்து அவர்கட்குத் தாம் தேசிகராகவமர்ந்து அவர்களிடத்து முருகனது இடமுதலியவற்றையும் அவனிடத்துத் தாம் பெற்ற அருளையும் கூறி மக்களைத் தம்வயப்படச்செய்து அவர்களையும் முருகனைவழிபடக் கூறியருளினர் என்பதேயாம்.

வீட்டுநெறி என்பது எண்டுவராநெறியன்றே? அங்ஙனமாக வீடுபெற்றவொருவன் இவ்விடத்து மக்களிவரை ஆற்றுப்படுப்பதெங்ஙனங்கூடும்? என்னும் தடையுண்டாகலாம்; அதற்கு இங்கு வீடுபெற்றன் என்றுகுறிக்கது ஜீவன்முத்தனையாம். உள்ளுறைபொருளினும்

நக்கீரரும் சாவவும் வாழவும் பாடும்படி கடவுளருள்பெற்றாதலின் ஜீவன்முக்தரென்றே கருதலாம்.

இவ்வாற்றுப்படையுள், முதலிற் சிவபிரான் தலமும், ஈற்றில் திருமால் திருப்பதியுங்கூறி, நடுவில் அபனுக்கு அருள்செய்தமை கூறியிருக்கின்றார்.

இனி இவ்வாற்றுப்படையுள், மக்களாவார்க்கு உறுதிபயப்பன வாகிய நால்வகைப்பொருளும் நால்வகையிலையும் நன்கு வமைத்துக்கிடக்கின்றன. "ஓருமுகம் குறவர்மடமகள் கொடிபோனுசுப்பின்—மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே" 'இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தது உலகிலில்வாழ்க்கைநடத்தற்கென்றுணர்க' என்பதனாலும், 'சிரைதைஇய வடிக்கையர்.....தினையில்காட்சி முனிவர்' என்பதனாலும் முறையே இல்லறமும் துறவறமும் கூறினர். இதனால் அறம் கூறப்பட்டவாறு காண்க. இல்லறமும் துறவறமும் அறங்களுட்டலையாய அறங்களாம்; பலர்புகழ்மூவரும் தலைவராகப் புள்ளணிகீள்கொடிச் செல்வனும் யானையெருத்தம் ஏறிய திருக்கிளர்செல்வனும் மூவெயின்முறுக்கிய முரண்மிகு செல்வனும் முதலியவர் தன்னைவந்துகாணத் தான் ஆவிரன்குடியசைதனு முரியன் என்று அரசியல் கூறியமைபாற் பொருளும், "மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு.....மென்றோட் பல்பிணை தழீஇத் தலைதந்து—குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே" என்று மலைகடோறும் சென்று மகளிரோடு குரவையாடுதல் கூறியவதனால் இன்பமும், "புலம்புரிந்துறையுஞ்சேவடி" என்று கந்தழி கூறியவதனால் வீடும் கூறினராயிற்று.

இனி "இருமூன்றெய்திய இயல்பினின்வழாஅ.....முத்திச்செல்வத்திருபிறப்பாளர்" என்பதனால், பிரமசரியமும், "ஓருமுகம் குறவர் மடமகள் கொடிபோல் நாசுப்பின் - மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே" என்பதனால் மனையறமும் "சிரை தைஇய உடுக்கையர்..... தினையில் காட்சி முனிவர்" என்பதனால் துறவறமும் கூறினராயிற்று; வானப்பிரத்தம் துறவறத்திற்கு ஆறு ஆதலின் துறவறங்கூறியவதனால் அதனையும் கூறியதாகவே யமையும்.

ஆற்றுப்படையுள் வந்துள்ள கதைகள்.

(1) அயன்சாபம்.

பிள்ளையார் அசுரையழித்துத் தேவரைக்காத்ததற்கு இந்திரன் மகள் தெய்வயானையாரை அவர்க்குக் கொடுத்தவிடத்தே பிள்ளையார் தங்கையில் வேலிலேகோக்கி நமக்கு எல்லாந்தந்தது இவ்வேல் என்ன, அருகிருந்த அயன் இவ்வேலிற்கு இந்நிலை என்னுல்வந்ததன்றே என்றுதங்கையில்வேலுக்கு நீகொடுப்பதாரு சத்தியுண்டோவென்றுகோபித்து இங்ஙனங்கூறியநீ மண்ணிடைச்செல்வாய் என்று சபித்தனர்.

(2) முருகன்பிறப்பு.

இறைவன் உமையை வதுவைசெய்துகொண்டகாலிலே இந்திரன்சென்று நீ புணர்ச்சிதவிர்வேண்டும் என்று வேண்டிக்கொள்ள அவனும் அதற்குடம்பட்டு அது தப்பாஞேப் புணர்ச்சிதவிர்ந்து கருப்பத்தை இந்திரன்கையிற்கொடுப்ப அதனை இருடிகளுணர்ந்து அவன் பக்கல்நின்றும்வாங்கித் தமக்குத் தரித்தல் அரிதாகையினுலே இறைவன்கூறுகிய முத்தீக்கட்பெய்து அதனைத் தம்மனைவியர்கையிற் கொடுப்ப அருந்ததியொழிந்த ஆறுவருவாங்கிக்கொண்டு விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப்பொய்கையிற் பதுமப்பாயலிலே பயந்தாராக ஆறுகுழவிகளாகின்றகாலத்து இந்திரன் தான் இருடிகளுக்குக்கொடுத்த நிலையை மறந்து ஆண்டுவந்து வச்சிரத்தான் எறிய அவ்வாறுவடிவுமொன்றுய் அவனுடனே பொருது அவனைக் கெடுத்துப் பின் சூரபன்மாவைக்கொல்லுதற்கு அவ்வடிவம் ஆறுகிய வேறுபட்டகூற்றுலே மண்டிச்சென்றதென்று புராணம் கூறிற்று .....இவ்வாறன்றி வேறுவேறு புராணம் கூறுவாரு முளர்.

சு. ஸ்ரீநிவாஸையங்கார்,
தமிழ்ப்பண்டிதர்,
தூத்துக்குடி.

தொல்காப்பியவாராய்ச்சி.

புணரியல்.

(செந்தமிழ் சகூ-ஆந் தொகுதியின் ஙகஉ-ஆம்பக்கத்தொடர்ச்சி.)

3. "குற்றிய லுகரமு மற்றென மொழிப."

(இ-ள்.) ஈற்றுக்குற்றியலுகரமும் வருமுயிர் ஏறுவதற்கு அம் மெய்யைப்போலவே இடங்கொடுக்கும் என்ப (எ-று.)

எகரம் தொக்குநின்றது.

மொழிமுதற்குற்றியலுகரம் இங்ஙனம் உயிரேறுதற்கு இயலாதாகலின் அதனை ஒழித்து ஈற்றுக்குற்றியலுகரமே கொள்ளப்பட்டது.

குற்றியலுகரம் புள்ளிபெறுமென்று முன்னர்க்கூறவில்லை. ஆண்டு மெய்யும் எகர ஒகரங்களுமே புள்ளிபெறும் என்றார். ஆகலின் ஈண்டுக் குற்றியலுகரமும் புள்ளிபெறுமென்றுரைனிற் பொருந்தாது; எங்ஙனே? மெய்யானது புள்ளிபெறுமென்ப தீண்டுக்கூறத்தக்கதொன்றன்றுகலினும் தனித்தமெய் யாண்டும் புள்ளிபெற்றேநிற்கு எனவும், உயிரேறிய மெய்யே புள்ளிபெறுதனவும் முன்னரே யறிவித்திருத்தலினும். இனி இச் சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள்செய்யாவிடின் மேலைச்சூத்திரத்தின் மாட்டேற்றுச்சூத்திரமாகிய "புள்ளி யீற்றின்மு னுயிர்தனித் தியலாது-மெய்யொடுஞ் சிவணு மவ்வியல் கெடுத்தே" என்றதனாற் பெறக்கூடிய புணர்ச்சியானது குற்றியலுகரத்திற்கு இன்றாய்முடியும். அன்றியும், குற்றியலுகரத்திற்குப் புள்ளியிட்டதுபோல எகர ஒகரங்களுக்குப் புள்ளிகூறுதலு குன்றக்கூறலாகுமென்க. "யகரம் வருவழி யிகரங் குறுகு—முகாக் கிளவி குவாத் தோன்றுது" என்னுஞ் சூத்திரத்தை உற்றுநோக்குழி அவ்வுகரம் பிறவிடங்களிலே மெய்யீறுபோல உயிரேற இடங்கொடுக்கும் என்பது தெள்ளிதிற்புலனாகும்.

இனிக் கதவழகிது என்றாங்கு முற்றுகரமும் புணர்ச்சிபெறவும் இதனைமட்டும் இங்ஙனம் விதித்தல் குற்றமெனின் அற்றன்று; எங்ஙனே?

"சுட்டுமுத லுகர மன்னெடி சிவணி—யொட்டிய மெய்பொழித் துகரங் கெடுமே" என்னுஞ் சூத்திரவரையிலே "ஒட்டிய என்றதனாற் சுட்டுமுத லுகரமன்றிப் பிறவுகரமும் உயிர்வருவழிக் கெடுவன கொள்க" என்றலின் என்க.

இவற்றுள் மொழியீற்றுக்குற்றியலுகரம் மெய்போல உயிரேற இடங்கொடுக்கும் எனவும், முற்றியலுகரம் ஓரோவழி உயிர்வருமிடத்துக் கெடும் எனவும் கண்டுகொள்க.

4. உயிர்மெய் யீறு முயிரீற் றியற்றே.

(இ-ள்) மொழியீற்று உயிர்மெய் உயிரீற்றின் இயல்பையுடைத்து (எ-று.)

எனவே முதற்கண் மெய்யும் ஈற்றில் உயிருமாக ஒலிக்கும் என்க.

இதனானன்றே உயிர்மெய்ம்முதலே மெய்ம்முதலாக ஆண்டுவகுத்தனர். இடைக்கண்ணும் இவ்வாறே கொள்க. இவை முன்னரேபெறப் படவும் ஈண்டுக் கூறியது வேறொருகாரணம்பற்றிவந்ததென்றுகூறுதல் ஆவசியகமாகும். அக்காரணத்தான் யாதோவெனிற் கூறுதும். புள்ளியீற்றின்முன்வரும் அவ் வுயிர் மெய்யின்மேலேறும் எனின் உயிரீறு வரு முயிரொடு எவ்வாறுணரும் என்பதாம். இஃது "எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே-யுடம்படு மெய்யு நுவலொலள் வரையார்" என்னும் முப்பத்தெட்டாஞ்சூத்திரத்தோடு மாட்டேறினின்றது. "மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்" "குற்றிய லுகரமு மற்றென மொழிப" என்னுஞ் சூத்திரங்களுக்கு மாட்டேறுகின்றது "புள்ளியீற்றின்முனையிர்" என்னும் முப்பத்தாறாஞ்சூத்திரமென்பது முன்னர் விளக்கப்பட்டது. அதற்கடுத்தசூத்திரம் "மெய்யுயிர் நீங்கிற் றன்னுரு வாகும்" என்பது.

இது, சாரியையின் முதலீறுகளிலுள்ள உயிரும் மெய்யும் நிலைவரு மொழிகளின் ஈற்றினும் முதலினும் உள்ள உயிர்மெய்யிலே உள்ள உயிரெழுத்துக்கள் நீங்கப்பெறின் ஆண்டுள்ள மெய்யெழுத்துக்கள் முன்னர்த் தமக்குநுவான புள்ளியைப்பெற்றுநிற்கும் என் றுணர்த்துகிறது. இனிப் புள்ளியீற்றின்முன்வரு முயிர் தனித்தியலாது அவ்வியல் கெடுத்து மெய்யொடுஞ்சிவணும் என்றவர் "மெய்யுயிர் நீங்கிற் றன்னுரு வாகும்" என்பது முறையாதலே உய்த்துணர்ந்துகொள்க.

இதற்குப்பின்னர் உயிரீற்றினியற்றாய உயிர்மெய்யீறும் உயிர் முதலோடுபுணர்வதைக்கூறுவது முறைமையாகும் என்க. இக்கூறியவற்றுள் இச்சூத்திரம் "எல்லாமொழிக்கும்" என்னுஞ் சூத்திரத்தோடு மாட்டேறி நின்றதென்பது விளக்கப்பட்டதென்க.

உயிர்மெய்யீறு உயிரீறாகு மென்பதுகொண்டு உயிரீறும் உண்டென்பது பெற்றாம். அஃது ஓரெழுத்து உயிர்மொழியும் உயிரளபெடையும் ஆகும். இத்துணையும் மொழிமரபிற்கும் புணரியலுக்குமுள்ள தொடர்பு கூறிற்று மொழிமரபின் ஒழிபுகூறிற்றென்றுங் கூறுப.

5. உயிரிறு சொன்மு னுயிர்வரு வழியு
முயிரிறு சொன்முன் மெய்வரு வழியு
மெய்யிறு சொன்மு னுயிர்வரு வழியு
மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியுமென்
றிவ்வென வறியக் கிளக்குங் காலை
நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்
றீரி ரியல புணர்நிலைச் சுட்டே.

(இ-ள்) உயிரெழுத்திலேமுடிகின்றசொல்லின்முன் அதன்பொருண்மையைக்குறித்துவருகின்றசொல்லின்முதற்கண் உயிரெழுத்துவருமிடமும், உயிரெழுத்திலே முடிகின்றசொல்லின்முன் அதன்பொருண்மையைக்குறித்துவருகின்றசொல்லின்முதற்கண் மெய்யெழுத்துவருமிடமும், மெய்யெழுத்திலேமுடிகின்றசொல்லின்முன் அதன்பொருண்மையைக்குறித்துவருகின்றசொல்லின்முதற்கண் உயிரெழுத்துவருமிடமும் மெய்யெழுத்திலேமுடிகின்றசொல்லின்முன் அதன்பொருண்மையைக்குறித்துவருகின்ற சொல்லின்முதற்கண் மெய்யெழுத்துவருமிடமும், என்றுகூறப்பட்ட புணர்ச்சிவகையை இவ்வாறினவென்று அறிந்து கொள்ளும்படி கூறுமிடத்து முன்னர்நிறுத்தப்பட்டசொல்லும், அதன் பொருண்மையைமுடித்தலைக்குறித்துவருகின்ற சொல்லும் என்று கூறப்பட்ட அவ்விரண்டியல்பினையுடைய (எ-று)

எனவே ஒருசொல்லினதுபொருண்மையைமுடித்தற்குப் பிறிதொருசொல் அதனைக்குறித்துவந்து புணரும் என்பதூஉம், அவ்வாறு புணருமபொழுது நின்றசொல்லினீற்றெழுத்தொடு வருஞ்சொல்லின் முதலெழுத்துப் புணரும் என்பதூஉம் பெற்றாம்

இது மெய் உயிர் என்னும் எழுத்துக்களோ முதலினும் ஈற்றினுங்கொண்டமொழிகள் தம்மொடு புணரும்போழ்து உயிர்முன் உயிரும், உயிர்முன் மெய்யும், மெய்ம்முன் உயிரும், மெய்ம்முன் மெய்யும் என நான்குவகைப்படும் என்னும் அந்நால்வகையாகப்புணர்தற்கு முதலாக நின்றமொழிகள் நிறுத்தசொல் குறித்துவருசொல் என இருவகைப் படும் என்றும் கூறுகின்றது.

நிறுத்தசொல்லும் குறித்துவருசொல்லுமாகிய இவை நாம் மேற் கூறிய நான்குவகையாகிப் புணரும் என்பதுவே கருத்தாகக்கொள்க.

மூற்கூறிய பயன்பற்றியும், புணர்வது எழுத்தேபன்றி மொழியன் றென்பதுபற்றியும் "உயிரிறு சொன்மு னுயிர்வரு வழியும்" என்னும் முறைபற்றிச் சூத்திரித்தார். உயிரிறுசொன்முன் என்றமையானே உயிர்வருவது வருமொழிமுதலில் என்க. ஏனையவற்றையும் இவ்வாறே கூறிக்கொள்க. உயிரின்சிறப்புக்கருதி அதனை முற்கூறினர்.

இங்ஙனங்கூறிய ஈறுபற்றிப் புணரும் நிலைவருமொழிகள் பெய ரொடுபெயரும், பெயரொடுவினையும், வினையொடுபெயரும், வினையொடு வினையுமாகப் புணருமென மேற்கூறப்பெறும் சூத்திரத்திற்கு முதலாக இச்சூத்திரம் அமைந்திருத்தற்கும் "உயிரிறுசொன்முன்" என்று முறைப்படுத்தினருமாம்.

இனி, முற்கூறிய எழுத்தொடு எழுத்துப் புணருங்காலத்து இயல் பும் விகாரமும் தோன்றும். அத்தோன்றுதலுக்கு அடியாவன பெயரும் வினையும் தன்னொடும் பிறிதொடும் கூடுவதேயாகும்.

இக்காட்டியவற்றுனே இடக்கைமுறையும் நன்குணரப்படும். பெய ரும் வினையும் முற்கூறியாங்குக் கூடுங்காலத்து எழுத்துப்புணர்ச்சியும், சாரியைப்புணர்ச்சியும், உருபுப்புணர்ச்சியும், இன்னபிறவும் இயையும். இதனருகியன்றே புணர்ச்சிபான் எய்தப்பெறும் இயல்பொடு விகாரங் களோ இவையெனக்கூறிய ஆசிரியர் முறையே சாரியைப்புணர்ச்சிக்கும் பிறபுணர்ச்சிக்கும் இயைபும் விகாரங்களோயும் இவையென விதந்து கூறினர். அன்றியும், இவ்வோத்திற்குப் புணரியல் என்று குறியிட்ட மைக்குங் காரணம் இதுவேயென் றறியக்கிடக்கின்றது.

K. S. நவநீதகிருஷ்ணபாரதி.

"முத்திநெறி"

கருவூர், தி. மா. அப்பாவுப்பிள்ளை எழுதியது.

முதலாவது

சன்மார்க்கம்.

முதற்பிரிவு.

*கு. பதி, பசு, ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை என்னும் ஷட்பதார்த்தங்களின் முக்கியதருமம் என்னென்ன?

(க) கடவுளாகியபதியினுக்கு, ஒருவரும் அறிவிக்காமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளுகிற குணமும், ஆன்மாக்களுக்கு அறிவிக்கவல்ல குணமும்.

(உ) அநேகமாகிய சீவப்பசுக்களுக்கு ஒருவர் அறிவித்தான்மாத்திரம் அறிந்துகொள்ளுகிறகுணமும், பிறருக்குத் தாமாகஅறிவிக்கத் திறமையற்றகுணமும்.

(ங) இருளாகிய ஆணவமலத்தினுக்கு, ஆன்மாவேண்டுங்காரியத்தை மறைக்கின்றகுணமும் வேண்டாக்காரியத்தில் விருப்பையுண்டாக்குகின்ற குணமும்.

(ச) புண்ணியபாவமாகிய கன்மமலத்தினுக்கும், அசுத்தமாயாமலத்தினுக்கும் சுத்தமாயாமலத்தினுக்கும், ஆன்மா ஆணவத்தைப் பொருந்தினால், அந்த ஆணவத்திலேயே அழுத்துவிக்கின்றகுணமும், பதினைப்பொருந்தினால் பதியிலேயே அழுத்துவிக்கின்றகுணமுமாம்.

கூ. ஷட்பதார்த்தங்களும் தம்முள் ஒன்றுபட்டிருக்கும் தன்மைப்பாடு எதுபோல்?

கடல் வியாபகமாவதுபோலக் கடவுளாவார் வியாபகப்பொருளாம். அக்கடலிலுள்ளநீர் வியாப்தியாவதுபோலக் கடவுளினிடத்து ஆன்மா வியாப்திப்பொருளாம்; அக்கடல்நீரிலுள்ள உப்பு வியாப்பியமாவதுபோல, ஆன்மாவினிடத்து ஆணவம், கன்மம், அசுத்தமாயை, சுத்தமாயை என்னும் நான்குமலமும் வியாப்பியப்பொருள்களாம்.

---

*இதற்குமுன்னைய நான்குபகுதிகள் கையெழுத்துப்பிரதியுட் கிடைத்தில. புத்தகத்துப்பக்கங்கள் ஆரம்பமுத லுள்ளேனும், எனைப்பகுதிகளின்றி "கு" ஆம் பகுதியிற்றொடங்குமதனைநோக்கம் புலனின்று. ஆராய்ச்சியுட் கிட்டுமேல், அப் பகுப்புக்களின் அருமைப்பொருள் காண்பாம்.

எ. ஷட்பதார்த்தங்களுக்கும் அநாதிநித்தியத்துவமும் சர்வ வியாபகத்துவமும் எங்ஙனமமையும் ?

சூரியன் இருக்கும்போதே கண்ணும், கண்ணினமறைக்கவல்ல இருளும் ஓரிடத்திலேயே கூடியிருப்பதுபோல், எப்பொழுது பதியுண்டாயிற்றோ அப்போழ்தே பசுவும் பாசமும் கூடவே உண்டாயினவாம்.

எதனால் ?

(க) எண்ணிறந்தகண்களுக்கு, ஒருசூரியனிருந்து வெளிச்சத்தையறிவிப்பதுபோல், எல்லாப்புவனங்களிலுமுள்ள எண்ணிறந்த ஆன்மாக்கட்கும், கடவுள் ஒருவரேயிருந்து அறிவிப்பதனாலும்,

(உ) கண்ணானது, சூரியமண்டலமுதலான இடங்களிலெல்லாம் போக்குவரவுபுரியாமலே, சகலகாரியங்களையும் அறிந்துகொள்வதுபோல் ஆண்மாவானது சகல புவனங்களிலும் போக்குவரவு புரியாமலே எல்லாக் காரியங்களையும் அறிந்துகொள்வதனாலும்,

(ங) இருட்டானது, சகல உலகங்களையும் மறைப்பதுபோல், ஆணவமலமானது மிதமற்ற ஆன்மாக்களை மறைத்தலினாலும்,

(ச) பலவகைத்தானியங்கள் அந்தந்த ஊரார்களுக்கு அங்கங்கேயே உணவாதல்போலப் பலவிதகன்மங்கள், அந்தந்தப் புவன ஆன்மாக்களுக்கு அங்கங்கேயே புசிப்பாயிருத்தலினாலும்,

(ஞ) குயவனானவன் பற்பலவிதமான பாத்திரங்களை அந்தந்த ஊரார்களுக்கு அங்கங்கேயே ஆக்குவதுபோல, அசுத்தமாயாமலமும் சுத்தமாயாமலமும் பலதத்துவாதிகளை அந்தந்தப் புவன ஆன்மாக்களுக்கு அங்கங்கேயே அருளுவதனாலும் மேற்கூறியுள்ள ஷட்பதார்த்தங்கட்கும் அநாதியே அநாதித்தியத்துவமும், சர்வவியாபகத்துவமும் உள்ளபடியமைந்துள்ளனவாம்.

ஆ. ஷட்பதார்த்தங்களின்சம்பந்தமுண்மை எதனாலறியலாம் ?

அநாதியிலேயே ஆன்மாக்கள் ஆணவமலத்தில் அழுந்தியிருந்ததையும், அவ்வாணவமலமே ஆன்மாக்களுக்குக் கன்மத்தில் இச்சையினை வருவித்ததையும், அவ்விச்சையினைப் பதிபாவார் அறிந்து கருணையினால் அவ்வான்மாக்களினிச்சைக்குத்தக்கவாறுன மாயாகருவிகளை வழங்கி, அக்கருவிகளின்மூலமாகக் கன்மங்களைப் புசிப்பிக்கின்றதையும் பிரபஞ்சத்தோற்றமுறையில் உய்த்தறிந்துகொள்ளலாம்

கூ ஆணவமலப் பிரஸ்தாபம்.

பதியாவார், ஆன்மாக்கட்கு ஆணவமலத்தைக் கூட்டிவைத்தனரா? ஆணவமலமானது தானே ஆன்மாக்களிடம்வந்து பொருந்திற்று? ஆன்மாக்களே ஆணவமலத்தைப்பற்றிக்கொண்டனரா?

பதியாவார், நின்மலரான சர்வாநுக்கிரகரானதால், ஆன்மாக்களுக்கு ஆணவமலத்தைக்கூட்டிவைக்க நியாயமேயில்லை. ஆணவமலமும் சடமாகையால் அது, தானேவந்து பொருந்தவுஞ் சத்தியிலதாதலால், ஆன்மாக்களே, ஆணவமலத்தைப் பற்றிக்கொண்டன வென்க.

ம ஆணவமலம் ஆன்மாவுக்கு அநாதிசையோகம் என்னை யாங்ஙனம்?

பாலுக்கு வெண்மையும், கரியினுக்குக் கருமையும் விட்டொழியாவியற்கையாவதுபோலும், வெள்ளாவத்திரத்துக்கு அழுக்கேறுதல் செய்கையாவதுபோலும், ஆன்மாக்களுக்குப் பெத்தத்திலும் முத்தியிலும் வந்துபொருந்தாமல், நெல்லுக்கு உமியும், செம்பினுக்குக் களிம்பும், கடனீருக்கு உப்பும்போல், அநாதிசைபோகமும் அநாதிசெயற்கையுமாம்.

ஙக. ஆன்மாக்களின் செய்தியுடைமை எங்ஙனம்?

ஆன்மாக்கள் சுதந்தரவினர்களாகவிருந்தும் ஆரணங்களில் அவர்கட்கு விதி விலக்குகளும் சுவர்க்க நரகங்களும் காணப்படுதலினும் செய்தியுமுண்டாம்.

சஉ. ஆன்மாக்களுக்குண்டாம் கன்மாபேக்ஷை கடவுளருளுவதா? ஆன்மாக்களுக்கே உண்டாவதா?

கடவுளருளுவதாயிருந்தால், ஆன்மாக்களே, என் பாபத்தைச்செய்தீர்கள் என்று நரகத்திட்டுத் தண்டிக்கவேண்டியதே இன்றும். ஆன்மாக்கட்கே உண்டாவதாயிருந்தால், அனந்தவகைப்புண்ணியங்களிருக்கப் பாபங்களைப்புரிய உடன்படவேமாட்டார்கள். இவ்விரண்டுமின்மையின், ஆணவமலமே ஆன்மாக்கட்குக் கன்மத்தில விருப்பை உதயிதாம். அங்ஙனம் விருப்பத்தையுதவிய ஆணவமலமும், ஆன்மாக்கட்குக் கன்மத்தை அறிந்தெடுத்தூத்தாவும் வலியிலதாம். விருப்பத்தைக்கொண்ட ஆன்மாக்களும், கன்மத்தை அறிந்தெடுத்துக்கொண்டு புசிக்கவுந் திறனிலவாம். விரும்பப்பட்டகன்மமும், ஆன்மாக்களை அறிந்தூவந்து பொருந்தவும் பொருந்தா. இச்செய்திகளையறிந்த கருத்தாவானவர், மனமிரங்கி அவ்வான்மாக்களது கன்மங்கட்கேற்பத் தக்கவாதிகளைபருளி, அத்தக்கவினிடமாகக் கன்மங்களைக் கூட்டிப் புசிப்பிப்பாரென்க.

உதாரணமாக:—குழந்தைக்குப் பாலின்கண் உண்டாகும்விருப்பம் தாயார்கொடுத்ததா? குழந்தைக்கே உண்டாகியதா? என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோமாகில், தாயார் அளித்தவிருப்பானால், அவள் தருகின்றபோழ்தெல்லாம் குழந்தை தானே பாலையருந்தல்வேண்டும். குழந்தைக்கே உண்டானவிருப்பமானால், மந்தம்ஆதியன பீடித்தகாலத்தும் கூட மாறு தருந்தல்வேண்டும். இவ்விரண்டுமின்மையின், பசிப்பிணியே குழந்தைக்குப் பாலின்கண் விருப்பத்தை அளித்ததாம். விருப்பத்தை யளித்த பசிப்பிணியும், பாலை யறிந்தெடுத் தூக்கொடுக்கமாட்டாது. விரும்பியசேயும் பாலை யறிந்தெடுத் தூக்குடிக்கவுமாட்டாது. விரும்பப் பட்ட பாலும் சேயின் தூவாயிலே தானேவந்து புகுதவுமாட்டாது. ஆதலால், இச்செய்தியைப் பெற்றவள் அறிந்து, இரக்கத்தாலே பாலையெடுத்துப் பாலடையில்வார்த்துக் குழந்தையின்வாயிலேவைத்துப் புகட்டாநிற்பள். இவற்றுள், குழந்தையைப்போலும் ஆன்மா, பசிப்பிணியைப் போலும் ஆணவமலம், பாலைப்போலும் கன்மபலம், தாயைப்போலும் ஜகத்குரூத்தா, பாலடையைப்போலும் தநுவாம்.

மற்றும், பிறவிக்குருடனுக்குக் கோவின்கண் உண்டான இச்சை யானது, கோல் உதவி அழைக்கின்றவனதிச்சையா? அல்லது குருடனுக்குண்டானவிச்சையா?. என்பதைப் பற்றியும் ஆராய்வோம்.

கோலுதவினவன் இச்சையானால் அவன் உதவுந்தோறெல்லாம் கோலிணைப்பற்றவே வேண்டும். குருடனுக்குண்டானஇச்சையானால், எப்போழ்தும் கோலிணைப்பற்றிக்கொண்டேயிருத்தல்வேண்டும். இவ்விரண்டுமின்மையின், குருடே குருடனுக்குக் கோலின்கண் விருப்பத்தை யளித்ததாம். விருப்பத்தையுதவிய தருடும், கோலையறிந் தெடுத்துக் கொடுக்கமாட்டாது. விரும்பியகுருடனும், கோலை யறிந் தெடுத்துக் கொள்ளவும் வல்லனல்ல. இச்சிக்கப்பட்டகோலும், குருடன்கரத்தில் தானேவந்து பொருந்தமாட்டாது. இச்செய்தியைக் குருடனுக்குரியவனுவான் அறிந்து, இரக்கத்தால் அவன்கையிற் கோலையுதவிக் குருடன் குறித்தவிடத்தினுக்குக் கொண்டுபோய்விடுவன். இவற்றுள், குருடனைப் போலும் ஆன்மா, குருட்டைப்போலும் ஆணவமலம், கோலைப்போலும் உடல், கோலுதவி யிழுப்பவனைப்போலும் பதி, இடத்தைப் போலும் புவனம் என்றுணர்க. (தொடரும்.)

சுகவனம்,

ப. சி. சிவப்பிரகாசம்பிள்ளை,
தமிழ்ப்பண்டிதர், ஆத்தூர்.

ஸ்ரீ:

புத்தகமதிப்புரை.

I. தமிழ்மொழியின்வரலாறு:— இது, சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையில் தலைமைத்தமிழ்ப்பண்டிதராயி ருந்தவரும், ரூபாவதி, மதி வாணன், மானவிஜயம், நாடகவியல், பாவலர்விருந்து, மணியசிவனார் சரித்திரம் முதலியதூல்களை இயற்றியவருமான ஸ்ரீமத் வி. கோ. சூரிய நாராயணசாஸ்திரியார் B.A. அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. இதன் அருமை பெருமைகளும், சாஸ்திரியாரின் தமிழபிமானமும் ஆராய்ச்சிவன்மையும் எல்லோரும் நன்கறிவர். இது தூரைத்தனத்தா ற்பாடபுத்தகமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. சாஸ்திரியார்குமா ரன் ஸ்ரீமத் வி. சூ. நடராஜன் என்பவர், தம் தந்தையார் அரிதின் ஆராய்ந்து வெளியிட்ட இப்புத்தகத்தை இப்பொழுது கலாசாலை மாண வர்க்குபயோகமாம்படி இரண்டாம்பதிப்பாக வெளியிட்டது அவரது தமிழபிமானத்தைப் புலப்படுத்தும். இதன் விலை ரூ. 1-0-0. வேண்டி வோர் வி சூ. சுவாமிநாதன், பரிதிமாற்கலைஞன் புத்தகாலயம், 735 காசி காத்தோப்புத்தெரு, மதுரை என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

II. சைவசமயசாரம்:—இது, நவலக்தி ஆசிரியர் ஸ்ரீமத் திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரவர்களால், பிறமததூஷணையின்றி எழுதப் பெற்றது. இதில், சைவசமயத்தின் சமரஸநிலையும், அதன் பழமையும், சைவரிலக்கணமும், விபூதிருத்திராக்கம் அணியவேண்டியகாரணமும், சைவர்கள் வழிபடுமுறையும், பிறஒழுக்கங்களும், சைவர்களது கடமை யும் இனியநடையில் எழுதப்பட்டுள்ளன இடையிடையே தேவாரம், தி ருவாசகம், திருமந்திரம் முதலியவற்றிலிருந்த மேற்கோள்கள் காட் டப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா ஒன்று. வேண்டுவோர் காரைக்குடிச் சிவனடியார்திருக்கூட்டத்தார்க்கு எழுதிப் பெறலாம்.

III. வித்யாவிலாசம்:—இது, கும்பகோணம் சேடிவ்ஹைஸ் கூல் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் சு. ஸ்ரீநிவாஸையங்கார் அவர் களால், நம்நாட்டுப் பழைய குருகுலவாஸத்தை மூலமாகக்கொண்டு மாண வர்கள் கல்வியறிவொழுக்கங்களில் மேம்படுவதுகருதிச் சிறுவர் சிறுமி யரும் படித்துணரும் செவ்விய தமிழ்நடையில் எழுதப்பெற்றது. இதில் மாணவர்க்குக் கல்வி அறிவு ஒழுக்கங்களைப்புகட்டும்முறையையும்,

மாணவர் அவற்றையடையவேண்டிய நெறியையும் ஆசிரியர், புராணம் இதிகாசம் முதலியவற்றிலிருந்து மேற்கோள்தந்து நன்கு விளக்கியிருக்கிறார். இதனைத் தரைத்தனத்தார் கலாசாலைப்பாடபுத்தகமாக அங்கீகரித்திருப்பது பாராட்டத்தக்கது. இது கும்பகோணம் புத்தக வியாபாரம் ஸ்ரீமத் K. ஸ்ரீநிவாஸையங்காரவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றிருக்கிறது. இதன் விலி அணு 8. வேண்டுவோர் இதனை அச்சிட்டவர்க்கு எழுதிப் பெறலாம்.

IV. மாந்தைப்பள்:—கருவைநல்லூர்ச் சிதம்பாதாண்டவ மதுரகவிராயரவர்களாலியற்றப்பட்ட இது, சேற்றூர் ஆ. சங்கரலிங்கபாரதியாரால், குறிப்புரையுடன் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இது விசுவகர்மர்களின்சிறப்பைக்கூறுவது. இதன்விலி ரூ. 2-0-0. வேண்டுவோர் பாரதியாருக்கு எழுதிப்பெறலாம்.

V. தத்துவ இஸ்லாம்:—இது, நாச்சியார்கோவில் முஸ்லீம் சங்கத்திலிருந்து மாதமொருமுறை வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதில், இஸ்லாம்மார்க்கதர்மங்களும், நாயகவாக்கியங்களும், மற்றும், மஹமதியர்கள் அறிந்துகொள்ளவேண்டிய பல விஷயங்களும் பிற குறிப்புக்களும் தக்கவர்களால் எழுதி வெளிவருமென்று தெரிகிறது. இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூ. 3-0-0. வெளிநாடுகளுக்கு ரூ. 4-0-0. தனிப்பிரதி ரூ. 0-4-6. வேண்டுவோர் நாச்சியார்கோவில் முஸ்லீம்சங்கமானேஜருக்கு எழுதிப் பெறலாம்.

ஒரு குறிப்பு.

செந்தமிழ்த் தொகுதி 20. பகுதி ச. கநிசு-ஆம் பக்கத்தில், தூதகடோற்கசமென்ற புத்தகத்தைப்பற்றி மதிப்புரை எழுதப்பட்டிருக்கிறது. அப்புத்தகம்வேண்டுவோர் அதனைப் பதிப்பித்தவராகிய பண்டித. அ. கோபாலையரவர்கள், No. 16, பிராடீஸ்ரோடு, மைலாப்பூர், சென்னை என்ற விலாசத்தாரிடம் பெறலாம்.

உதவிப்பத்திராதிபர்.

1922ஹ மேமீ 7உ (துந்துபிஹ சித்திரைமீ 25உ) காலை 10-மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகசபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

மகா-ன-ன-ஸ்ரீ ராவ்பகதூர் P. சுப்பராய ஐயரவர்கள், B.A.
அக்கிராசனம் வகித்தவர்.

,, K. ராமையங்காரவர்கள் B A., B.L.

,, M. கோபாலகிருஷ்ணையரவர்கள்.

,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., B.L., M.L.C.
இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1921-ஹ நவம்பர்மீ முதல் 1922-ஹ பிப்பிரவரிமீ முடிய உள்ள சங்கம் வரவுசெலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய அடியிற்குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) மகா-ன-ன-ஸ்ரீ L. S. சுப்பிரமணியசெட்டியாரவர்கள், தமிழ்ப் பண்டிதர், காவேரிப்பட்டணம், கிருஷ்ணகிரித் தாலூகா.

(2) ,, ,, அ.மு.சகாதேவசெட்டியாரவர்கள், பாரதப்பிரசங் கியார், காவேரிப்பட்டணம், கிருஷ்ணகிரிதாலூகா.

(3) ,, கனகராயன் T. ப்ல் அவர்கள் B.A., L.T., OBE., Y.M.C A. சேலம்.

(4) ,, S. வெங்கடசுப்பிரமணிய ஐயர் அவர்கள், M.A., பிளீடர், சாத்தூர்.

(5) ,, T. S கந்தசுவாமிமுதலியாரவர்கள், B.A., வக் கீல், சாத்தூர்.

(6) ,, மன்னடிமங்கலம் எம்.வ. சிவசாமிபிள்ளையவர்கள், பிட்டுத்தோப்புரோடு, மதுரை.

III. மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை மாணவர்போஷணைக்காக இராமநாதபுரம்சமஸ்தானத்தினின்றும் மாதம்ரூ. 10 வீதம் சங்கத்துக்குதவிசெய்துவந்தபடி 1921-ஜூலைமீ முதற்கொண்டு அவ்வாறே அன்புகூர்ந்து உதவிசெய்துவரவேணுமென்று மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் ராஜா அவர்களைச் சங்கநிர்வாகசபையார் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறார்கள்.

IV. சங்கப்பிரசுரம் ஒன்றில் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்குமேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100-க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

V. மகா-ன-ன-ஸ்ரீ ராவ்சாஹிப் புரொபஸர் S. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், கல்கத்தாவில் நடைபெற்ற ஓரியண்டல்கான்பரென்ஸில் சங்கத்தின் பிரதிநிதியாக ஆஜராகி, வியாசம் வாசித்துச் சங்கத்தைக் கௌரவப்படுத்தியதற்காக அவர்கட்குச் சங்கநிர்வாகசபையார் அளிக்கும் வந்தனத்தைத் தெரிவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

VI. & VII. சங்கம் அச்சாபீஸ் அபிவிருத்திசம்பந்தமாகச்செய்யவேண்டியசீர்திருத்தங்கள் முதலியன இன்னவென்பதைத் தெரிவிக்கவேணுமென்று மகா-ன-ன-ஸ்ரீ ராவ்பகதூர் P. சுப்பராய ஐயரவர்களையும், மகா-ன-ன-ஸ்ரீ V. S. ராமஸ்வாமி சாஸ்திரியவர்களையும் எற்கனவே கேட்டுக்கொண்டிருக்கிறபடி சீக்கிரம் தெரிவிக்கவேணுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

VIII. மேற்கண்டரிப்போர்ட்டை எதிர்ப்பார்த்துச் சம்பளப்பிரமோஷன்சம்பந்தமான மனுக்கள் தள்ளிவைக்கலாயின.

IX. சங்கத்தின் வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனைசெய்யும்படி மதுரை ஹைக்கோர்ட்டு வக்கீல் மகா-ன-ன-ஸ்ரீ V. சுந்தரமையரவர்களைக்கேட்டுக்கொள்ளலாயிற்று.

X. சங்கவருஷோத்ஸவத்தை, நாளது வருஷம் ஜூலைமீத்தில் மாட்சிமை தங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்கள் இருந்து நடத்தத்தகுந்த சௌகரியமானதேதி குறிப்பிடவேணுமென்று கனம் அக்கிராசனாதிபதியவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

மதுரை.
7—5—1922.

P சுப்பராய ஐயர்,
அக்கிராசனம்வகித்தவர்.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஎ.] ஆந்துபி-ஹூ வைகாசி-மீ [பகுதி எ.
Vol. XX. May—June—1922. No. 7.

வடசொல்.

தமிழில்வந்துவழங்கும் ஆரியச்சொல் வடசொல் எனப்படும். பண்டைக்காலத்திலே தமிழில்வந்துவழங்கிய ஆரியச்சொற்கள் மிகச்சிலவேயாம். தற்காலத்திலே மிகப்பலவாகும். அதன்காரணம் பெரும்பாலும் ஆரியநூல்கள்பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டமையே. பண்டைக்காலத்திலே வடசொற்கள்போன்றனவாய்ச் சில சொற்கள் தமிழிலும் வழங்கியனவுண்டு.

தேவன், தேவி, தேவர், பூதம், காலம், உலகம் என்பன வடமொழிப்பதங்கள். இவைபோன்ற சொற்கள் தமிழிலுமிருந்தன என்பது, தொல்காப்பியத்திலுள்ள,

"பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கி
ஞண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியுந்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியு
மிவ்வென வறியு மந்தத்தமக் கிலவே
யுயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்"

என்னுஞ்சூத்திரத்துத் 'தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக்கிளவி' பால்பிரிந்திசைத்தற்குக் காண்பித்த தேவன், தேவி, தேவர் என்னு முதாரணங்களானும்,

"கால முலக முயிரே யுடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉ-
மாயி ரைந்தொடு பிறவு மன்ன
வாவயின் வருஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா வுயர்திணை மேன"

என்னுஞ்சூத்திரத்துவரும் காலம் உலகம் பூதம் என்னுஞ் சொற்களானும் அறியக்கிடக்கின்றது.

உரையாசிரியருக்கு மிதுவே கருத்தாதல்,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

என்னுஞ்சூத்திரத்து விசேடவுரையிலே "வடசொல்லாவது வடசொல் லோடொத்த தமிழ்ச்சொல்லென்றார போலுரையாசிரிய ரெனின்" என எடுத் துச் சேனவரையர் மறுத்தலானு முணரப்படும். அன்றியும், அவர்,

"சகரக் கிளவியு மவற்றே ரற்றே
அஐ ஔவெனு மூன்றலங் கடையே"

என்னுஞ்சூத்திரத்துக்குக்காட்டிய உதாகரணத்துவரும் சாலை, சிலை என் னுஞ்சொற்களானும்,

"கதந பமவெனு மாவைங் தெழுத்து
மெல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே"

என்னுஞ்சூத்திரத்துக்காட்டிய உதாகரணத்துவரும் தேவர், தடம், பீடம், மாலை, மீனம், முகம் முதலிய சொற்களானும் அறியக்கிடக் கின்றது.

சேனவரையர்க்கு மிதுவே கருத்தாதல்,

"கடிசொல் லில்லைக் காலத்துப் படினே"

என்னுஞ் சூத்திரத்துக்குக்காட்டிய உதாகரணத்துவரும் சம்பு என்னுஞ் சொல்லானறியப்படும்.

நச்சினார்க்கினியருக்கு மிதுவே கருத்தாதல், அவர் காட்டும் சகடம், லேம், கேமி, மாலை, பௌவம், முகம் முதலியசொற்களான் அறியப்படும்.

நன்னூற் குரைசெய்த மயிலைநாதருக்கு மிதுவேகருத்தாதல்,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

என்னும் நன்னூற்சூத்திரத்துப் 'புதியனபுகுதலும்' என்பதற்குக்காட் டிய உதாகரணத்துவரும் சம்பு என்னுஞ்சொல்லானறியப்படும். சனி, சாடு, சமழ்ப்பு, சள்ளை என்னுஞ் தமிழ்ச்சொற்களோடு விரவக்கூறியதா னுஞ் சம்பு என்பது தமிழ்ச்சொல் என்பதே அவர்கருத்து. சேன வரையரும் சம்பு என்பதைச் சனி சமழ்ப்பு என்னுஞ் தமிழ்ச்சொற்களோடு விரவக்கூறுதல் காண்க. "கடிசொல் லில்லைக் காலத்துப் படினே" எனத் தொல்காப்பியர் பொதுவாகக்கூறினபடியால் வடசொற்கொண்டாளெனினு மிழுக்காது.

சாலை சிலை முதலிய வடசொற்களைத் தமிழ்ச்சொல் என உரையாசிரியர்முதலியோர் மயங்கிக்கூறினரெனின், காலம் உலகம்முதலிய சொற்களையும் தொல்காப்பியர் மயங்கிக்கூறினர் எனல்வேண்டுமாகலின் அது பொருந்தாது. அன்றியும், உரையாசிரியர் "ஆரியச்சிதைவல்லாதனகொள்க" என்றும், "ஆரியச்சிதைவென மறுக்க" என்றுங் கூறுதலானும், சேனாவரையர் "வடமொழி நிலைகண்டுணர்ந்தவர்" எனப் புகழப்படுதலானும், நச்சினார்க்கினியர் " வடசொல்லெனமறுக்க" எனக்கூறுதலானும் அவர்களை அங்ஙனங்கூறல் பொருந்தாது.

இனித் தேவன், தேவி, தேவர், காலம், உலகம், பூதம், வருணன், யாமம், மங்கலம், தேயம், தாபதம், நிமித்தம், உவமம், மந்திரம், சூத்திரம், ஆகந்தம் முதலிய வடசொற்களெல்லாம் தொல்காப்பியத்துவருதலின், தொல்காப்பியர் வடமொழியை விலக்கினரல்லர் என்பாருமுளர். அகத்தியருங்கொண்டார் என்பர்.

இனிச் சிலர் தமிழ்மொழிகள் ஆரியத்துச்சென்று வழங்குவனவுமுள என்பர். ஆகையினாற் சொற்களை ஆராய்ந்து வரையறுத்தல் மிகவரிது.

இங்ஙனம்,
சி. கணேசையர்,
புன்னாலைக்கட்டுவன்.

கவித்தன்மை.

அஃதாவது கவியின்றன்மை. கவி - புலவன்; அஃது ஈண்டுச் செய்யுண்மேனின்றது. கவியாவது அமைக்கவல்ல புலவனாலே அழகும் பொருளும் அமையப் பலசொற்கொண் டமைக்கப்படுவது. அமைத்தல் - கவிகளுக்குரிய அழகுகள் யாவும் அமையச்செய்தல்; அழகுகளாவன:-சொற்சுருக்கம், பொருட்பெருக்கம், சொற்றெளிவு, பொருளாழம், சொல்லினபம், பொருளின்பம், இசையொழுக்கம் முதலாயின. இவற்றைக் கம்பர்,

"புவியினுக் கணியா யான்ற பொருடந்து புலத்திற் முகி
யவியகத் துறைக டாங்கி யைந்திணை நெறி யளாவிச்

சவியுறத் தெளிந்து தண்ணென் றெழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்''

என்னுஞ் செய்புளாற் கூறுமாறறிக. அணியென்றது மடக்கு சித்திர முதலிய சொல்லணிகளையும், தன்மை, உவமை, உருவக முதலிய பொருளணிகளையும். ஆன்றபொருள் - விரிந்தபொருள்; அஃதாவது நோக்க நோக்கப் பொருள்விரிந்து தோன்றல்; கிறைந்தபொருள் எனினுமாம். புலம் - அறிவு. புலத்திற்றுதல் - அறிவின்கட்கிடத்தல்; என்றது தன்னைநோக்கு மறிஞர்க்குத் தன் சொற்சுவை பொருட்சுவைகளாற் களிப்புப்பயந்துகொண்டு தான் அவரறிவின்கண் நீங்காது கிடத்தலை. இதனை,

''மொழிசுருங்கல் பொருள்விளங்கல் மொழியவினி தாதனல மொழி புணர்த்தல்
வழியமையோ சையிற்பொலித லாழ்ந்திருத்தன் முறைநிறுவன் மலிவு தீர்தல்
பொழிவிழுமி யதுபயத்தல் காட்டாத லிப்பத்தும் பொலிய வாய்ந்த
கழிபொருளுங் கருதணியு நோக்குமிடந் தொறுங்கிடந்து களிப்புச் செய்ய''

என்னுஞ் செய்புளாலும் அறிக. அவிதல் - அடங்குதல்; 'ஐந்தவித்தான்' என்புழியும் 'அவித்தல்—அடக்குதல்' எனப் பரிமேலழகருங் கூறுதல் காண்க. அகம் - உள். துறை - பொருட்டுறை. சவி - பெலம்; ஒளியுமாம். தண்ணெனல் - குளிர்ச்சியாதல்; என்றது செவிக்கின்பம் பயத்தலை. ஒழுக்கம் என்றது இசை ஆற்றொழுக்குப்போலத் தொடர்ந்து சேறலை.

இனி, அமைதலாவது:—அழகியவாதல், பொருட்சிறப்பினவாதல், நுண்ணியபொருளனவாதல், இல்சொல்லினவாதல் முதலிய இலக்கணங்களெல்லாம் தானே அமைதல்; இதனைக் கம்பர்,

''செவ்விய.....பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்—வவ்விய கவிஞர்''

எனச் செம்மை முதலிய இலக்கணங்களைக் கவிக்கு விசேடணமாக்கிக் கூறுதலானே அறிக. செவ்வி - குற்றமின்றிக் குணமுடைத்தாதல்; குணம் என்றது சீருங்கச்சொல்லன்முதலாக நன்னூலார்கூறிய பத்தழகினுள்ளே இக்கவியிற் பின்கூறியனவல்லாதன. சுருங்கச்சொல்லலிலே திருவள்ளுவரும் கம்பரும் மிகச்சிறந்தவர்கள்; ''ஐந்தவித்தா னுற்ற லகல்விசும்பு ளார்கோமா - னிந்திரனே சாலுங் கரி'' எனத் திருவள்ளுவரும், ''நாடுகூறினு நகரங் கூறுவாம்'' எனவும், ''வந்த நம்பியைத் தம்பி தன்

னெடு-முந்தை நான்மறை முனிக்குக் காட்டி" எனவும் "இலேமுகப் படத்தவ செழுதிக் காட்டிய-தலேமகன் சிலேத்தொழில்" எனவும், "அஃ தைய" எனவும், "அடிபொரு மூன்றுநீ யளந்து கொள்கென-நெடியவன் குறியகை நீரி னீட்டினன்" எனவும் கம்பரும் கூறுதல் காண்க.

"உடாஅது முண்ணுதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாத நல்லறங்கள் செய்யார்—தொடாது
வைத்தீட்டி னுரிழப்பர் வான்றேய் மலேநாட
வுய்த்தீட்டுந் தேனீக் கரி"

எனப் பிறரும் இவ்வாறு கூறுவர்.

சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல்பற்றியே கம்பர்கவிகளைக் கம்ப சூத்திரம் என்பர். தானே யமைதலாவது:—மேற்கூறிய அழகுகள் யாவும் வேறுபடுக்கப்படாது தானே சம்பந்தப்பட்டுக்கிடத்தல். அதற் குக் காட்டாக "வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோ டிலங்கை புக் கான்" என்னுமடியுள் வரும் 'போட்டு' என்னுஞ்சொல்லை நீக்கிவிட்டு, அதற்குப்பதிலாக அப்பொருளமைந்த எச்சொல்லைப்பெய்துரைப்பினும் இன்பம் பயவாமை காண்க. இங்ஙனமே பிறவுங் காண்க.

இனி, அமைக்கவல்லபுலவன் என்றது பலவகைப்பாஷைகளிலும், பலநூல்களிலும் சென்ற செயற்கையறிவோடு இயற்கையாய அறிவுமுடை யவனை. இவ்வகை யறிவையுடையரே கவிஞர் எனபதுதோன்றக் கம்ப ரும், "பல்லிய லுலகினுட் பாடை பாடமைந்—தெல்லேயி லூற்கட லேற நோக்கிய - நல்லியற் கவிஞர்" எனக் கூறுதல் காண்க. இங்ஙனமே பரி பாடலும் "மாசில் பனுவற் புலவர்" எனக் கூறும்.

இன்னும், கவிகளெல்லாம் மென்சொலின்றியும், வெளிற்றுரையின் றியும், வீண் புன்சொலின்றியும் தொடைச்சிறப்பினவாயும், தொடையை நீங்காத இசையையுடையனவாயும், ஆழ்ந்தபொருளவாயினும் அப் பொருள்களெல்லாம் நோக்குவோர்க்கு நன்குதோன்றும்படிவைக்கப்பட்ட தெளிவானசொற்களையுடையனவாயும் இருத்தல்வேண்டும். இதனைக் கம்பர்,

"நல்லியற் கவிஞர் நாவிற் பொருள்குறித் தமர்ந்த காமச்
சொல்லெனச் செய்யுட் கொண்ட தொடையெனத் தொடையை நீக்கி
யெல்லையில் செல்வந் தீரா இசையெனப் பழுதிலாத
பல்லலங் காரப் பண்பே காருத்தன் பகழி மாதோ" எனவும்,

"எற்பெரு நாகர்த மிருக்கை யீதெனக்
கிற்பதோர் காட்சிய தெனினுங் கீழுறக்
கற்பக மீனையவக் கவிஞர் காட்டிய
சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது" எனவும்

கூறுமாற்று னறிக.

இனிக் கவிகளைச் செய்வோரும் இயற்கைக்கவி, செயற்கைக்கவி என இருவகைப்படுவர். இயற்கைக்கவியாவான் நூலானமைந்த அறிவோடு இயற்கையாயமைந்த அறிவின்வன்மையுங்கொண்டு பாடுபவன். இயற்கைக் கவியைத் தெய்வக்கவி, வரகவி, அருட்கவி என ஆன்றோர் கூறுவர். இயற்கைக்கவிக்குப்பாட்டினியல்பெல்லாம் நாவிலேயே அமைந்து கிடக்கும்; இதுபற்றியே "சித்திரக்காரனுக்குக் கையுணரும், தெய்வப் புலவனுக்கு நாவுணரும்" என்னும் பழமொழி வழங்குவதாயிற்று. கம்பரும் 'நாவிற்றோன்றுஞ் சொல்' என்றும், 'நல்லியற்புலவர் நாவிற்பொருள் குறித் தமர்ந்தநாமச்சொல்' என்றுங் கூறுவர். பரிபாடலும். 'புலவர் புகழ்புலநாவிற்புனைந்த நன்கவிதை' எனவும் கூறும்.

செயற்கைக் கவிகளுள்ளே பாடும்வன்மையையடைந்தவர் சிலர். பலர் அவ்வன்மையில்லாதவர். அவர்கள் பழந்தமிழ்நூல்களைப் படியெடுத்து அவற்றிலுள்ள சொற்களையும் தொடைகளையும் அடிகளையும் அப்படியே கவர்ந்துவைத்துப் பாடுகின்றனர்; அவற்றின்பொருள்களையும் நாடுகின்றனர். "அப்பலருள்ளுஞ் சிலர் தம் வாய்ச்சொற்களோடு பழையபனுவலாசிரியர்வாய்ச்சொற்களையுந் தொடுத்து இசைவாயாது போகின்றனர். சிலர் செவிகளுக்கு யாழ்நரையடித்ததுபோலப் பாடாது பறைபடுத்ததுபோலப் பாடி இசையான் வசைபெறுகின்றனர். சிலர் இலக்கிய இலக்கணவரம்பினறிப் பிழையான வழக்குச்சொற்களையும் பிற பாடைச்சொற்களையுந் தொடுத்துப்பாடி அப்பாக்களி னசைவான் வசைபெறுகின்றனர். இப்படிப் பாடுவாரும் பலர். இவர்களுக்கெல்லாம் அதிகாரம்பற்றியும், பொருள்வரவுபற்றியும், நண்புபற்றியும் மதிப்புரைகளெடுத்தும் தூதிப்புரைகள் தொடுத்தும் சிறப்புப்பாயிரங்கொடுப்பாரும் பலர். பாயிரநோக்கி அக்கவிகளைப் பழுதுநோக்காது படிப்பாரும் பலர். இவைகளாற் றமிழுலகுக்குநேரு மிழிவுகளையெல்லாஞ் செந்தமிழ் வளர்ப்போர் சிந்திப்பாராக.

சி. கணேசையர்,
புன்னாலைக்கட்டுவன்.

ஸ்ரீ:

புரூரவசரிதை.

[உகஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி].

சனிபகவான் ரோன்றுபடலம்.

அந்தவூழியுமகன்றிடவரிவையுமகன்றே
முந்தைநாட்டகங்கலந்திடமுறையறிந்தவனும்
வந்தகாலத்தின்செயலிதுவாமெனமதித்துச்
சிந்தைவேறுரூதரசியல்செலுத்திடுநாளில். (1)

தன்னினேரிலான்கங்கைசூழ்நாடுடைத்தலைமை
மன்னனுதவவருணன்மாதவத்தினிற்ரோன்றுங்
கன்னிபுண்டரீகப்பெயர்வல்லிபொற்களபந்
துன்னுகொங்கைமேற்சுயம்வரம்வலித்திடத்தோய்ந்தான். (2)

வாளைக்கும்வெஞ்சிலைமாரனுமிரதியுமனையார்
நீளைக்குமின்பமேவீடெனவொருவிடாத்தினத்தி
லீளைக்குநுண்ணிடையன்னவள்திருவயிற்றிடையே
மூளைக்குநாண்மதியெனவிருதனயர்கண்முளைத்தார். (3)

மழலைமைந்தர்கள்செவ்வியுமனமனைத்திறனும்
பழையநல்வினைப்பயனெனப்பயன்பெறுநாளிற்
றழையுமன்பொடுநாரதத்திருமுனிசார
விழையுமன்பினன்ரோழுதெழுமுனிவான்விளம்பும். (4)

காரியென்பவனெய்துறுங்காலநேர்ந்தன்வீப்
பாரினிற்புகுந்துனக்கறிவுறுத்திடப்பட்டேன்
சூரியன்முற்றற்கோள்களேத்தொழுதிரீயெனப்பண்
ணூருமின்னிசைமகதியாழ்முனிவானகன்ரோன். (5)

வேறு.

கன்தோடும்பொருங்காடக்கவுண்மதச்செம்புகர்முகத்துக்களிற்றுவேந்தன்
கொன்தோடுந்திகழ்கடுக்கைக்கோடான்றிருமேனிக்குறியாய்க்கஞ்சப்
பைன்தோடுமைகவிரிக்குங்கதிர்மதிசெய்மால்பிரகற்பதியாங்கோள்க
ளோன்தோடொன்றினையும்விடாதுமுறையிற்பூசைபுரிந்தருளுவானால். (6)

கதிரா தியாகவருங்கோளனைத்துந்தங்களபகாரந்தோறு
மெதிர்காலத்தியற்பஅவர்பலனனைத்துமியம்புதலுமேழாங்கோளி
னதிகாரம்வந்திடலுமவனேமறைமந்திரத்தாலருச்சித்தேத்தித்
ததியாகின்றிடக்காரிபுள்ளேறிமன்னவன்மூன்றேறினானே. (7)

ஒருங்காகனினைந்தவருக்கழியாதவாயுள்தருமுறவோன்றன்னை
முருங்காகாத்தருஞ்சுடரோன்றருஞ்சேயைக்காளிந்திமுன்னேன்றன்னை
யிருங்காகதண்டாறுஞ்செச்சையனைத்தென்றிசைவாழிமையோர்க்கூட்டுங்
கருங்காகப்பரியோனைச்சவரியனையிருகண்ணுங்களிப்பக்கண்டான். (8)

பருமழையகார்மேகமிந்திரநீலக்கிரிமேற்பயின்றசெங்கே
ழருணமணிச்சுடர்தாங்கிவருவதெனமணிமவுலியலங்கல்வீசும்
விரிசிறைவான்காகமிசையெழுந்தருளுஞ்சவரிதிருமேனிநோக்கி
யுருகியுளங்களிகூர்ந்துகாகமலமுகிழ்த்திவைகின்றுரைக்கலுற்றான். (9)

கடவுளர்கள்யாவருக்குமேலானவதிகாரக்கடவுளேசெஞ்
சுடரவனேமுதலானோர்தரும்பலன்களனைத்தினையுஞ்சொற்றீர்நீயுந்
தடையறவேவருங்காலந்தரும்பலன்களனைத்தினையுஞ்சாற்றுகென்ன
மடலவிழுங்கமலநிகர்செம்பவளவாய்திறந்துவழங்கினனால். (10)

சென்னிரண்டுமூன்றுடையோனுலுஞாலமுண்டதேவென்றாலு
முன்னிரண்டுவகையுயிரும்பலவடிவாய்ப்படைத்ததனிமுதலென்றாலு
நின்னிரண்டுதாளனையவலியுடையார்யாரொனினுநிகழுமோரை
பன்னிரண்டுமோரிரண்டுமுதலுமென்றனதிகாரப்பருதியாமால். (11)

இம்முறைமையோரையொருமூன்றிடத்துமேழரையாண்டிருப்போமீதின்
மெய்ம்முறைமைநிதிபதியூர்நாடரசுகரிபரியும்வெவ்வேறுக்கிப்
பொய்ம்முறைமைகொடுத்திரவிற்புரத்தியவயவங்கள்சிலபோக்கிமீட்டு
மும்முறைமையெவரிடத்துநடத்துவதென்னதிகாரமுயற்சியென்றான். (12)

கரியமணித்திருநிறத்தானிவ்வண்ணமுரைத்திடலுங்கழற்கால்வேந்தன்
றிரிபுவனத்தெவரிடத்துமும்முறைசென்றிடலுளவேற்சிந்தித்தேன்பா
லொருமுறைமையவர்க்கடவாயென்றிடனன்றெனக்கருத்திலுவந்தேகின்பால்
வருவதுகல்லிளமையிலோமுதுமையிலோவெனமீட்டும்வழங்கினனால். (13)

காரியுரைத்திடுமாற்றமனைத்தினையுமனத்தினிடைக்கருதியேதன்
பாரியிடத்தினில்லுரைப்பவன்னவலும்பின்னுறுதிப்பயத்தைநாடி
யாரியனேமுதுமையில்வந்திடற்பிழைத்தல்யாவருக்குமரிதேசாலச்
சீரிதுகல்லிளமையிலேவரவுழைத்தாலெனவுரைத்தாடெய்வம்போல்வாள். (14)

புண்டரிகவல்லியிவைபுகன்றிடலுங்கேட்டுணர்ந்தபுரூரவாவுந்
தண்டரளம்விளைந்தொளிருந்தடம்புயத்துச்சவுரிதிருமுன்புசார்ந்தே
யண்டர்தொழும்பெருமானேயிளமையிலேவருகவெனவன்பிற்கூறக்
கொண்டகுறமுறுவலொடுங்காதமிசைக்கரியநிறக்குரிசில்போனான். (15)

சனிப்பெருமானகன்றதற்பின்றன்னுரிமைப்பொன்னவிர்பூந்தவிசினண்ணிக்
குனிப்பெருமாண்சிலப்புருவக்கொவ்வையிதழ்நல்லிவிழிக்கொம்மைக்கொங்கைக்
கனிப்பெருமாண்மழலைமொழிக்காந்தையொடுமைந்தரொடுங்களிப்பினெய்திப்
பனிப்பெருமான்மதிக்குடைக்கீழ்ப்பொதுநீக்கியுலகனைத்தும்பரிக்குநாளில். (16)

சனிபகவான்றோன்றுபடலமுற்றும்.

இளவேனிற்படலம்.

இருதூருசுணங்கவிருங்களபமணியிளமுலைகளிறைவர்மார்பிற்
பொருதூடல்புரிந்தவர்க்குந்தணந்தவர்க்குமிதயமொன்றுய்ப்பொருத்தவேமற்
றிருதூதுதுமின்றியெனதாணைசெயுமெனக்குயிலென்றுரைக்கும்வென்றி
விருதூதத்தென்மலைக்காலமைச்சிஞெடும்பொலிந்தவிளவேனில்வேந்தே. (1)

மருமல்கும்பாசடையுஞ்சைவலமுமொழித்தபுதுமணிநீர்ப்பொய்கை
பெருகியகங்கலங்காதுநின்றனவுமொத்தனதம்பிரசக்கோயிற்
றிருமருவும்பைந்தளவோன்றிருமேனித்திறனெனவுந்தெரிந்தஞாலத்
தொருபொருளும்வெஃகாதாருள்ளமுமொத்தன்தெளிவாலும்பர்வானம். (2)

குறைதீரப்பெருந்துணையாய்க்கொண்டசெழும்புண்டரிகக்குலத்தையெல்லா
முறைதீரவளைந்துமுகத்தொளிமழுங்கப்பொருதபனிமூரிவேந்தைப்
பொறைதீரத்தரந்ததரந்தடர்ந்துபொருதவனுடம்பிற்புண்ணீர்தோய்ந்த
கறைதீரக்கழுவியவாளெனப்பொலிந்தகிரவிசெழுங்கதிர்களெல்லாம். (3)

காலமறிந்திடனறிந்துசெல்வுழியிற்சென்றுதுறையனேகத்துங்கண்டு
சேலொடுமம்படிந்தவர்தஞ்சுதகந்தீர்த்தெப்பொருளுந்தெருட்டித்தேவர்
சால்பினுயிர்சமசமமீருகவருளுறுதண்ணளியேயாகி
ஞாலமளிழ்வுறத்தெளிந்துள்ளடங்கினர்போன்றெழுகினான்னதிகளெல்லாம். (4)

மூல்லையரும்பாகையாகின்றெனமல்லிகையரும்புமுகைத்தமஞ்ஞை
யில்லரிபாட்டிசைத்திலவென்றுட்டொழிந்தகுயின்மகிழ்ந்திலம்பியார்த்த
புல்லறிவின்றிறமனைத்துமொல்வொன்றுய்ப்புறமேபோக்கிமேலாந்
தொல்லறிவின்புயன்பெறுவான்றவம்புரிவாரொத்தசிலதோலையெல்லாம். (5)

வேறு.

எஞ்சலில்சதக்கிருதெறிந்திடமறிந்த
வன்சிறைபடைத்தெனமருங்குறவுனைந்த
மஞ்சினையொழிந்தனவரைக்குலம்வயப்போர்க்
கஞ்சுகியொழித்தொளிருடம்பினர்கடுப்ப. (6)

தூணகுகுலச்சவர்சூழ்கொலையிலே
வுனறவொழிந்திடவொழித்துழுதபாலே
பானுவினெரிக்கதிர்பழுத்திடையுதிர்த்த
வேனிலவிளைத்துவிளையும்பருவமொத்த. (7)

விற்பொலிபுயற்பொழிகைமேவுழியினல்லாற்
சொற்பொலிபுகழ்ப்பொருளொளிப்பதொடுதாய
பொற்பொடுமணந்தவர்முன்னன்றிநகைபூவாக்
கற்பினருமொத்தயர்கற்புடையமுல்லை. (8)

பாட்டளிகருங்குயில்வெளிக்குருகுபம்பொற்
சூட்டனமுதற்பலதொகுந்தொகுதிதொக்க
வூட்டுணவுகண்டுறவுசேருமுறவோரை
யீட்டுமவொத்தமருதத்தினைகளெல்லாம். (9)

மெய்வருடிசிந்தனைவிடாதவர்கள்மெய்வான்
பெய்வருடநாளிடைபிரிந்தவர்திரிந்தே
மைவருடகண்ணியர்மலைத்தடமூலைக்கே
கைவருடவைத்தயர்கைதைதிகழ்நெய்தல். (10)

இளவேனிற்படலமுற்றும்.

உதவிப்பத்திராதிபர்.

பல்லவர் கோயில்கள்.

(உஙசூ ஆம் பக்கத் தொடர்ச்சி.)

IV. மஹேந்திரன்காலத்திய கோயில்களின்வடிவு.

மேலேகூறியதிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள மிகப் பழமையான கோயில், மண்டகப்பட்டிலுள்ள குகைக்கோயிலேயென்பது வெளியாயிற்று. அதைச் செதுக்கிய முதலாம் மஹேந்திரவர்மனுற் செதுக்கப்பட்ட குகைக்கோயில்கள் இன்னும் ஏழு ஊர்களிற் காணப்படுகின்றன. அவை வருமாறு:—

1. வல்லம்:—இங்கு 1892-ல் பகாப்பிடுகு, லலிதாங்குர, சத்துருமல்ல, குணபர, மஹேந்திர போத்தராசா (1) என்னும் பெயருடைய அரசன்சாஸனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. மகா-ரா-ஸ்ரீ V. வெங்கையா (2) அவர்கள் பெரியபுராணத்தை யாதாரமாகக்கொண்டு சிறுத்தொண்டநாயனர் முதலாம் நரஸிம்மவர்ம்மன்காலத்தவரென்றும், அவருக்கு முற்பட்ட அப்பர் குணபரன் என்னும் பட்டத்தையுடைய அரசனல், முதலிற் சிறைசெய்யப்பட்டுப் பிறகு போற்றப்பட்டுவந்தவ ரென்றும், ஆகையால் இவன் முதலாம்மஹேந்திரவர்மனேயென்றும் ஆராய்ந்து முடிவுரை கூறியிருக்கின்றார்.

2. திருச்சிராப்பள்ளி:— இவ்விடத்திலிருந்து 1890-ல் டாக்டர் ஹுல்ஷ் (3) சத்துருமல்லன் என்னும் பட்டத்தையுடைய குணபரன் என்னும் அரசனது சாஸனங்களை மொழிபெயர்த்திருக்கின்றார்.

3. மஹேந்திரவாடி:—1896-ல் (4) குணபரன் அங்குள்ள குகைக்கோயிலை மஹேந்திரவிஷ்ணுக்கிரஹம் எனனும் பெயரால் விஷ்ணுவுக்கு அர்ப்பணஞ்செய்ததைக்குறிக்கும் சாஸனம் ஒன்று (5) கண்டுபிடிக்கப்பட்டது.

---

(1) G.O. No. 642-3. 14th Aug. 1893-Inscription No. 185. of 1892.
(2) Ep. Ind. Vol III. p. 277.
(3) S. I. I. Vol I. p 29. Nos. 33 and 34.
(4) G.O. No. 814-815. of the 6th Aug. 1896. Inscription No. 13.
(5) Ep. Ind. Vol. IV. p. 153.

4. சீயமங்கலம்:—1900-ல் (1) இங்கு லலிதாங்குரனது சாஸனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. (2)

5. தளவானூர்:—1905-ல் சத்துருமல்லனது சாஸனம் ஒன்று வெங்கையாவால் கண்டுபிடிக்கப்பட்டது. (3)

6. பல்லாவரம்:— இங்கு மேலேசொல்லப்பட்ட கோயில்களிற் காணப்படும் பெயர்களிற் சிலவற்றை யுடைத்தாயிருக்கிற சாஸனங்களிருக்கின்றன. மகா-ரா-ரா-ஸ்ரீ H. கிருஷ்ணசாஸ்திரிகள் 1909-ல் இதை முதலாம்மஹேந்திரவர்மனுக்கு உரிமையாக்கினர். (4)

7. மாமண்டூர்:—இங்கு 1917-ல் என்னால் மிகவும் பழுதாயுள்ள மஹேந்திரவர்மனது சாஸனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்விதம் இலைகள்யாவும் முதலாம்மஹேந்திரவர்ம்மனுக்கே புரிமையாக்கப்பட்டன. ஆனல் டாக்டர் ஹூல்ஷ் தான் எழுதிய மஹாபலிபுரத்திலுள்ள பல்லவசாஸனங்களைப்பற்றியவியாசத்தில், (5) 'திருச்சிராப்பள்ளிச் சாஸனங்களின் எழுத்துக்கள் மிகவும் தூதனமாகக்காணப்படுகின்றன. ஆகவே அவைகள் (யாவும்) முதலாம் மஹேந்திரவர்ம்மனுக்கு உரித்தானவை (S. S. I. Vol. II. p. 341) யென்னும் கொள்கை சரியல்ல'வென எழுதியிருக்கின்றார்.

திருச்சிராப்பள்ளிச்சாஸனங்கள் தளவானூர் மஹேந்திரவாடி சீயமங்கலம் முதலியஇடங்களிலுள்ள எழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கவில்லையென்பது வாஸ்தவந்தான். திருச்சிராப்பள்ளியிலுள்ள வெளியிடப்பட்டனவும் வெளியிடப்படாதனவுமாகிய மஹேந்திரனுக்கு உரித்தானசாஸனங்கள் தளவானூர், மஹேந்திரவாடி, சீயமங்கலம் முதலிய

---

(1) G. O. Nos. 833—835 of 22nd Aug. 1900. Inscription No. 67.

(2) Ep. Ind. Vol. VI. p. 320. No. 32.

(3) G. O. No. 518. 18th July 1905. p. 47. Inscription No. 51 of 1905.

(4) G. O. No. 538. 28th July 1909. p. 75.

(5) Pallava Inscriptions of the Seven Pagodas. Ep. Ind. Vol. X. No. I a. p. 2. Note 2.

T. 11 Ju.

இடங்களிலுள்ள எழுத்துக்களைவிட தூதனமாகக் காணப்படும் எழுத்துக்களாலேயே பொழுதப்பட்டிருக்கின்றனவென்பதை நான் திருச்சிராப் பள்ளி சென்றிருந்தபொழுது நிச்சயஞ்செய்துகொண்டேன்.

மகா-ஸ-ஸ-ஸ்ரீ H. கிருஷ்ணசாஸ்திரிகள் பல்லாவரம் சாஸனத்தைப் பற்றி, "இக்குகையின் மேல் கிழ்த் தூண்வாரங்களிலுள்ள உக்திரங்களிற் புராதன பல்லவ கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கும் சாஸனம் திருச்சிராப்பள்ளிமலையில் மேல்குகையின் தூணில் எழுதப்பட்டிருப் பதைப்போல் நீளமாக ஒற்றைவரியில் எழுதப்பட்டிருக்கின்றது" என எழுதியிருக்கிறார். (1) நான் பல்லாவரஞ்சென்றிருந்தபொழுது அவர் கூறியது உண்மையேயென நிச்சயஞ்செய்துகொண்டேன்.

ஆகவே எழுத்துக்களின்வடிவைக்கொண்டு இவைகளை மூன்றுவித மாகப் பிரிக்கலாம்.

1. வல்லம்:—அங்குள்ள சாஸனம் தமிழில் எழுதப்பட்டிருக் கின்றது. ஆகவே, அதைப்பற்றி இங்கு விவகரிக்கவேண்டுவதில்லை.

2. தளவானூர், சீயமங்கலம், மஹேந்திரவாடி, மாமண்டூர், மண் டகப்பட்டு:—இவ்விடங்களிலுள்ள சாஸனங்கள் புராதன பல்லவ கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கின்றன.

3. திருச்சிராப்பள்ளி, பல்லாவரம்:—இங்குள்ள சாஸனங்களின் எழுத்துக்கள் அவ்வளவு புராதனமல்லாதனவாகவும் கொஞ்சம் விருத்தி யடைந்தனவாகவுங் காணப்படுகின்றன.

இவை, ஒன்றற்கொன்றொவ்வாமையால் இவ்விஷயம் மறுமுறை புதிதாகப் பரிசோதிக்கப்படவேண்டியதாகும். "இவைகளின்காலம் யாது? இவை யாவர்க்குரித்தானவை?" என இவைகளை நிச்சயிக்க இக்கோயில்களை நன்றாய்ப் பரிசோதிக்கவேண்டும்.

1. கோயில்களின்சிற்பங்களையாதாரமாகக்கொண்டு இதுவரையில் ஒருவித ஆராய்ச்சியும் செய்யப்படவில்லை. ஆகவே அவைகளின் புகைப் படங்களின் உதவியால் அக்கோயில்களையாராய்வது மிகவும் அவசியம்.

---

(1) G. O. 28th July 1909. p. 75.

2. எழுத்துக்களின்வடிவையும் ஆதாரமாகக்கொண்டதால் மறு படங்கள் பிடிக்கப்படாதனவும், மறுபடங்கள்பிடித்தும் அவைகள் எழுத் துக்களின்வடிவைச் சரியாகக்காண்பிக்காதனவுமாகிய சாஸனங்களே யவ் விடத்திலேயே போய்ப் பரிசோதித்தல் அவசியமாகின்றது.

3. கடைசியாக, கோயில்களிற் சாஸனங்கள்பொறிக்கப்பட்டிருக்கு மிடத்தையறிவதும் உபயோகமாகாமற்போகாது. இவ்விதமாக, அக் கோயில்களே அவ்விடத்திலேயேபோய்க் கவலிகொண்டு ஆராய்வது மிக வும் அவசியமாகின்றது.

1. வல்லம்:– செங்கற்பட்டிற்குக் கிழக்கே திருக்கழுக்குன்றத்திற் குப்போகும்சாலையில் இரண்டுமைல்தூரத்தில் ஒரு சிறியகுன்றிருக்கின் றது. வல்லம்கிராமமும் அதைச்சேர்ந்த அச் சிறியகுன்றும் சாலைக்கு வலதுபக்கத்திலிருக்கின்றன. அக்குன்றில் மூன்றுகுகைகளிருக்கின்றன. அவைகளிற் பெரியகுகையிற் சாஸனங்களிருக்கின்றன. அவை, "South Indian Inscriptions" என்னும் புத்தகத்திற் பிரதிபடங்களுடன் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

அவைகளும் மிகவும் பழமையானவை. அவை குகைவாசலி லுள்ள இரண்டுதூண்களிற் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அதன்மொழி யும் எழுத்துக்களுந் தமிழே. அது, அக்குகை பகாப்பிடுகு, லளி தாங்குர, சத்துருமல்ல, குணபர என்னும் விருதுகளையுடைய மஹேந் திரபோத்தராஜாவின் சிற்றரசனும் வஸந்தப்பிரியராஜாவின்மகனுமான கந்தசேனன் என்பவனாற் செதுக்கப்பட்டது எனக் கூறுகின்றது. (1)

வல்லம் குகையின் நிலப்படம் மிகவும் சாதாரணமானது. அது ஒரு சிறு கர்ப்பக்கிரஹத்தையும் ஒருதாழ்வாரத்தையுந்தான் உடையது. படம் 3 அதன் நிலப்பட்டத்தைக் காண்பிக்கின்றது. 4 அங்குள்ள தூண் களில் ஒன்றைக் காண்பிக்கின்றது. வாசற்படிக் கிருபுறங்களிலும் விக் கிரஹங்களிருக்கின்றன. வலதுபக்கத்திற் சிவனதுபத்தினியாகிய ஜ்யேஷ்டாதேவியின் விக்கிரகமும் இடதுபக்கத்திற் கணேசரது விக்கிரக மும் இருக்கின்றன. (2)

---

(1) S. I. I. Vol. II. Part III. No. 72. Pages 340 and 341.
(2) Archeologic du sud de L'Inde. Tome II Pl. XVI B.

கர்ப்பக்கிரஹத்துள் ஒரு லிங்கமுளது. அது, அக்குகைக்கோயில் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமையானது என நாம் நிச்சயிக்கத்தகுந்த ஆதாரங்களிருக்கின்றன. அது வட்டவடிவமாகவிருக்கின்றது.

கர்ப்பக்கிரஹத்தினிருபுறங்களிலும் மிருதுவாரபாலகர்களிருக்கின்றார்கள். படம் 1 இடதுபக்கத்துவாரபாலகனுருவைக்காண்பிக்கின்றது. அவ்விடம் குறுகியதாகவும் இருட்டாகவு மிருக்கின்றபடியால் அதைப் புகைப்படம்பிடிப்பது மிகவும் கஷ்டமாகவிருந்தது. அது நேர்பார்வையில்தானிருக்கிறது. கால்கள்ஒன்றின்பேரிலொன்றுகக் குறுக்கிட்டுக் காணப்படுகின்றன. அவனது அடர்த்தியானதலையி லிரண்டுகொம்புகளிருக்கின்றன. அவனது கை கதாயுதத்தின்பேரிற் பொருந்தியிருப்பது கவனிக்கத்தகுந்தது. வலதுபக்கத்திலுள்ள துவாரபாலகனது உருவம் இடதுபக்கத்திலுள்ளதைப்போலவேயிருக்கிறது.

பல்லவர்காலத்திய துவாரபாலகர்களுக்கு இரண்டுகைகளே இருக்கின்றன. எட்டாம்நூற்றாண்டின்பிற்பாடிவிற்றான் துவாரபாலகர்களுக்கு நான்குகைகள் ஏற்பட்டன.

2. மஹேந்திரவாடி:–இது, அரக்கோணத்திற்குச் சமீபமாயுள்ள ஷோளிங்கர் என்னும் புகைவண்டிநிலையத்துக்குத்தென்கிழக்கே மூன்றுமைல் தூரத்திலுள்ளது. அஃது வைஷ்ணவப்பிராமணர்களாற் குடியேறப்பட்ட ஒரு சிறு கிராமம் ஊருக்குக் கிழக்கேயுள்ள மைதானத்தில் ஒரு சிறுகுன்றிருக்கின்றது. அக்குன்றின் கீழ்புறத்திலே ஒரு சிறிய குகைக்கோயிலிருக்கின்றது.

அதன் இடதுபக்கக்கோடிக் கம்பத்தில் ஒரு சாஸனமிருக்கின்றது. அது, "Epigraphia Indica" என்னும் புத்தகத்தில் 4-ம் தொகுதியில் (பக்கம்-153) பதிவுபடத்துடன் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அப்பதிவுபடத்திலிருந்து அதன் எழுத்துக்கள் தெளிவாகப் புலப்படவில்லை. ஆகவே அவ்வூருக்கு நேரே சென்று அச்சாஸனத்தின் பிரதியொன்று கண்ணாற்பார்த்து எழுதவேண்டியதாயிற்று. (படம் 5) அச்சாஸனம், "மஹேந்திரபுரத்தில் மஹேந்திர தடாகக்கரையிலுள்ள மஹேந்திரவிஷ்ணுக்கிரஹம் என்னும் குகை குணபரன் என்னும் அரசனுற் குடையப்பட்டது" எனக் கூறுகின்றது.

அக்கோயிலின் நிலப்படமும் தூணும் வல்லத்திலுள்ளவைகளையே ஒத்திருக்கின்றன. அத்தூண் வல்லத்திலுள்ளதைப் போலவே நடுவிற் பட்டங்களையுடையதாயிருக்கின்றது. ஆனல், போதிகையின்மூன வல்லத்திலுள்ளதைப்போலில்லாமல் வளைவாகவிருக்கின்றது. சதுரபாகங்கள் தாமரைமலர்களாலும் ரோஜாவின்வகைகளாலுஞ்சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

படம் II A. தூவாரபாலகருருவைக் காண்பிக்கின்றது. அவை நேர்பார்வையுடன் விஷ்ணுகோயிலுக்குவேண்டிய சாந்தமுகத்துடனிருக்கின்றன. கர்ப்பக்கிரஹத்துள் தூதனமான நரலிம்ஹவிக்ரஹம் ஒன்றிருக்கின்றது.

3. தளவானூர்.—இது திண்டிவனம் தாலூகாவில் போண்டிசேரி என்னும் புகைவண்டிநிலயத்துக்குமேற்கே ஐந்துமைல்தூரத்திலுள்ளது. ஊருக்குவடக்கேயுள்ள "பஞ்சபாண்டவர்மலை" என்னும் சிறியகுன்றின் தென்பக்கத்திற் குடைவரைக்கோயில் குடையப்பட்டிருக்கிறது.

சிலாசாஸன வருஷாந்த அறிக்கையில் 1905-ம் வருஷத்திய 51-ம் சாஸனம், 50ம் சாஸனம் பொறிக்கப்பட்டுள்ள குகையில் உட்புறமுள்ள தூணிலேயே பொறிக்கப்பட்டிருக்கின்றது என எழுதப்பட்டிருக்கின்றது. (1) நான் தளவானூர் சென்றபொழுது ஆராய்ந்துபார்த்ததில் அச்சாஸனம் அவ்விடத்திற் காணப்படவில்லை. ஆனல், அது முன்மண்டபத்தை இடதுபக்கக் கம்பத்திற் பொறிக்கப்பட்டிருக்கக் கண்டேன்.

இச்சாஸனம் 'பதிவுபடத்'துடன் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டது. (2) அது அக்குகை சத்துருமல்லன் என்னும் விருதையுடைய நரேந்திரன் என்னும் அரசனுற் குடையப்பட்டது எனக் கூறுகின்றது.

படம் 6 அதன் நிலப்படத்தைக் காண்பிக்கின்றது. இதில் ஒரு விசேஷமுண்டு. கர்ப்பக்கிரஹம் குகைவாயிலெதிர்நோக்கியிருக்கவில்லை; ஆனல் இடதுபுறமாகவிருக்கின்றது. ஏனெனில், குகை தெற்குமுகமாகவிருப்பதாலும் சிற்பி கர்ப்பக்கிரஹம் கிழக்குநோக்கியிருக்கவேண்டுமென இஷ்டப்பட்டதாலும் இப்படி நேர்ந்திருத்தல்வேண்டுமெனத் தோன்றுகிறது.

(1) G. O. No. 518, 18th July, 1905.
(2) Epigraphia Indica Vol. XII Part V, January 1914., p. 235.

கர்ப்பக்கிரஹவாயிலிலுள்ள துவாரபாலகர்கள் வந்தனஞ்செலுத்து தற்கு அறிகுறியாக ஒரு கையைத் தலைக்குச்சரியாகத் தூக்கிக்கொண் டிருக்கிறார்கள். கர்ப்பக்கிரஹத்துள் வல்லத்திலுள்ளதைப்போல ஒரு லிங்கமிருக்கின்றது.

குகையின்வாயிலிலுள்ள இரண்டுதுவாரபாலகருருவமும் இரண்டு விதமாகவிருக்கின்றன (படம் IV). இடதுபக்கத்திலுள்ளது தலைக்குச் சரியாகக் கையைத்தூக்கிக்கொண்டிருக்கின்றது. வலதுபக்கத்திலுள் ளது வல்லத்திலுள்ளதைப்போலக் கதாயுதத்தின்பேரிற் கையைவைத் துக்கொண்டிருக்கின்றது.

அங்குள்ள இரண்டுதூண்களும் மஹேந்திரவாடியிலுள்ளவைகளை யொத்திருக்கின்றன. அவைகளுக்கு மேலே திருவாட்சி (படம் II B) யென்றுகூறப்பட்ட ஒருவித தோரணமிருக்கின்றது. அது இருபுறத்தி லுமுள்ள மகரங்களின்வாய்களிலிருந்துகிளம்பி நடுவிலுள்ள ஒரு சிறு மேடையிற் சந்திக்கின்றது. அம் மேடையின்மேலும் மகரத்தின் கழுத் துக்களிலும் சிறிய கந்தர்வர்கள் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். அதில் இருவரிலிருப்பதால் நாம் இதை "இரட்டைத்திருவாட்சி"எனக் கூறுவோம்.

அதற்குமேலே கபோதமும் கூடும் காணப்படுகின்றன. தளவாஹரி லுள்ளது மற்றையிடங்களிலுள்ளவைகளைப்போல் மழைவெய்யில் முத லியவைகளால் ஜீர்ணமாய்ப்போகாமல் நன்றாய் இருக்கின்றது. இது நடுவிற் கந்தர்வமுகத்தையும் உச்சியிற் கருக்கால் அலங்கரிக்கப்பட்ட 'சுரைகுபாறைத்தலை'யையும் உடையதாயிருக்கின்றது.

4. சீயமங்கலம்.—இது,வந்தவாசித்தாலூகாவிலுள்ள தேசூருக்கு ஒரு மைல் தெற்கேயிருக்கின்றது. இது "ஸிம்ஹமங்கலம்" அதாவது "ஸிம்ஹ விஷ்ணு சதுர்வேதமங்கலம்" என மஹேந்திரவர்மனது நகரப் பன்பெயரைக்கொண்ட சதுர்வேதிமங்கலமாயிருக்கலாம்.

அங்குள்ள கோயிலின்கர்ப்பக்கிரஹம் ஒரு மலையிற்குடையப்பட் டது. அதற்குமுன்பாக மண்டபங்களின்வரிசையொன்றிருக்கின்றது. அக்கோயிலிற் பல்லவர்காலத்தைக்குறிப்பிடும்பாகத்தையடைவதற்கு

முன்பாக ஒருவன் அநேக இருட்டறைகளைத் திவர்த்தியினுதவியாற் கடந்துபோகவேண்டும். ஆகவே அங்குப் புகைப்படங்கள் சரியாய் எடுபடவில்லை.

அங்குள்ள சாஸனம் வாயிற்படியிலுள்ள தூணிற் பொறிக்கப்பட்டிருக்கின்றது. "Epigraphia Indica" விலுள்ள அதன் பதிவுபடத்தால் எழுத்துக்கள் நன்றாக விளங்கவில்லை. (1) ஆகவே அதற்குக் கண்ணாடி ஒன்று எடுக்கவேண்டியதாவசியமாயிற்று. அதன் எழுத்துக்கள் தளவானூர் மஹேந்திரவாடியிலுள்ளவைகளை யொத்திருந்தாலும் தளவானூர் எழுத்துக்களுக்கும் அதற்கும் ஒரு வித்தியாசமுமில்லை. அச்சாஸனம் அவனிபாஜன பல்லவேச்வரம் என்ற அக்ரகையானது வளிதாங்குரன் என்னும் அரசனாற் குடையப்பட்டது எனக் கூறுகின்றது.

அதனுடைய நிலப்படம் மஹேந்திரவாடியிலுள்ளதைப்போலவேயிருக்கின்றது. கர்ப்பக்கிரஹத்திலுள்ள லிங்கமும் அதன் வாயிலில் உள்ள துவாரபாலருருவங்களும் வல்லத்திலுள்ளவைகளையே ஒத்திருக்கின்றன.

குகையினிருபுறங்களிலும் சில விக்கிரஹங்கள் காணப்படுகின்றன. படம் 7 இடதுபக்கத்திலுள்ள உருவத்தைக் காண்பிக்கின்றது. அது பல்லவர்காலத்தியதைச் சார்ந்ததே. அது, மீசையையும், தடி, கேடய முதலியவைகளையும் உடையதாயிருக்கின்றது. அம்மாடத்தினுச்சியில் "இரட்டைத்திருவாட்சி" என்னும் தோரணமிருக்கின்றது. அதனிருபுறங்களிலுமுள்ள கம்பங்களை நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். குடத்திற்கும் பலகைக்குமிடையில் ஒன்றன்மேலொன்றாக இரண்டு பதுமங்களிருக்கின்றன. அவை கி. பி. மூன்றும்நூற்றாண்டில் (அமராவதியில்) உபயோகப்பட்டுவந்த பலகைகளைப்போலத் தலைகீழாக வமைக்கப்பட்ட மாடிப்படியை யொத்திருக்கின்றன.

படம் 8 அங்குள்ள தூணைக் காண்பிக்கின்றது. அதிலுள்ள இரண்டுசதுரங்களிற் கீழேயுள்ளதில் ஒரு தாமரைமலரும், மேலேயுள்ளதில் ஒரு சிங்கமும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இச் சிங்கம் உண்டவல்லியிலுள்ளதை யொத்திருக்கின்றது 'என மேலேயே கூறியிருக்கின்

(1) Ep. Indi. Vol. VI. No. 32. p. 320.

ரேம். அதிலுள்ள போதிகையின்மீன மஹேந்திரவாடியிலுள்ளதைப் போல வளைவாகவேயிருக்கின்றது. தவிர, அதிற் கீற்றுக்களும் காணப் படுகின்றன.

5. பல்லாவரம்:—ம்கா-ரா-ரா-ஸ்ரீ H. கிருஷ்ணசாஸ்திரிகள் பல்லா வரம் என்பது தென்னிந்திய இருப்புப்பாதையிலுள்ள அப்பெயர்கொ ண்ட வண்டிநிலையத்துக்குத் தெற்கே இரண்டுமைல்தூரத்துள்ளது எனக் கூறுகின்றார். (1) ஆனல், குகைக்கோயிலையுடைய "பஞ்சபாண்ட வர்மலை" வண்டிநிலையத்துக்குத்தெற்கேயில்லாமற்கிழக்கேயிருக்கின்றது. அக்குகை தற்காலத்தில் மஹம்மதியர்களினுதீனத்தினகீழ் மிகவும் பரி தாபப்படத்தக்கநிலையி லிருக்கின்றது.

கோயிலின் ஒருபாகம் மண்சுவற்றினல் மூடப்பட்டிருக்கின்றது. பாக்கியுள்ள சுவர்களெல்லாம் கனமாகச் சுண்ணும்பால் மூடப்பட்டிருக் கின்றன. ஆகவே சாஸனங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. தற்காலத் தில் நமக்குக்கிடைக்கக்கூடியது தூண்களின்மேலுள்ள உத்திரத்தி லெழுதப்பட்டிருப்பதே. அவை நீளமாக உத்திரத்தின் வெளிப்புறத்தின் மட்டுமல்லாது உட்புறத்திலும் எழுதப்பட்டிருக்கின்றது.

அது, அதைவெட்டியஅரசனின் விருதுகளின்வரிசையொன்றை யுடையதாயிருக்கின்றது. (2) அது, முதலில் 'ஸ்ரீ மஹேந்த்ரவிக்ர உத்தவிலாஸ சித்தகாரி, விசித்ரசித்த' என ஆரம்பிக்கின்றது.(படம் IV) இவைகளைத் தவிர லளிதாங்குர பகாப்பிரு முதலிய விருதுகளும் அங் கிருக்கின்றன. அதன் எழுத்து, திருச்சிராப்பள்ளியிலுள்ளதை ஒத் திருக்கின்றதென நாம் முன்னமே கூறினேம்.

படம் 9 அதன் நிலப்படத்தைக் காண்பிக்கின்றது. ஐந்துவாசற் படிக்கும் சரியாக ஐந்து அறைகள் எதிருக்கின்றன. அநேகமாக அவை களில் விங்கங்களிருந்திருக்கவேண்டும். அங்குள்ள தூண் மஹேந்திர வாடியிலுள்ளதையெத்திருக்கின்றது. ஆனல் தாமரைமலரால்மட்டும் அலங்கரிக்கப்படவில்லை. அநேகமாக அவை வாளைத்தாற் சித்திரிக்கப் பட்டிருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது.

(1) G. O. No. 538. 28th July. 1909 page 75.
(2) G. O. No. 538. 28th July. 1909. p. 75. Part II. No. 14.

6. திருச்சிராப்பள்ளி:—திருச்சிராப்பள்ளிமலையில் மேலே செல்லும்வழியில் இரண்டுகுகைக ளிருக்கின்றன. அவைகளில் மேலேயுள்ளதில் அநேகசாஸனங்க ளிருக்கின்றன. அவைகளில் அதை வெட்டுவித்த அரசனது விருதுகளின்வரிசையொன் றிருக்கின்றது. அது அநேகமாக அக் குகையின்முன்புறமுள்ள நான்குதூண்களில் எழுதப்பட்டிருக்கின்றன. [படம் 21.] அக் கிரந்த பல்லவசாஸனங்களை ஆராய்ந்துபார்த்ததில்,

1. அத்தூணிலுள்ள சாஸனம், தென்னிந்திய சிலாசாஸனப்புத்தகத்துள் முதற்றொகுதியுள் 33, 34-ம் சாஸனங்கள் (1) எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்களாலேயே எழுதப்பட்டிருக்கின்றன.

2. அவ்வெழுத்துக்கள் பல்லாவரம் எழுத்துக்களையே மிகவும் ஒத்திருக்கின்றன.

3. அவ்வெழுத்துக்களைவிட மிகவும் பழமையான எழுத்துக்களால்ல சாஸனங்களே இல்லை.

என்பவைகளை நான் நிச்சயம்செய்துகொண்டேன்.

அவை ஜீர்ணமாகாமல் நன்றாக இருப்பதால் எழுத்துக்கள் தெளிவாக இருக்கின்றன. அநேகவார்த்தைகள் தமிழ்ப்பகுதிகளையும் தெலுங்குப்புணர்ச்சிகளையும் உடையனவாயிருக்கின்றன. அவைகளைத்தவிர "நித்யவினீத:, நிரபேக்ஷ:, ரஹிகாமுத்ரிக:, விரஸ:, வ்யவஸ்தித:, வ்யவஸாய:, அனுமான:, அவனிஜன:, அகருண:, அனித்யதாக:, முதலியவார்த்தைகளுங் காணப்படுகின்றன. இதிலுள்ள அவனிஜன: என்னும் விருதை நாம் சீயமங்கலம் சாஸனத்துட் பார்த்தோம். இன்னும் அங்குள்ள சாஸனங்களிற் (2) குணபர, சத்துருமல்ல, புருஷோத்தம, ஸத்யஸந்த முதலியவிருதுகளும் காணப்படுகின்றன. (3)

வலதுபக்கத்திலுள்ள ஒரு கம்பத்தில் ஒரு கிரந்த பல்லவ சாஸனமிருக்கின்றது. (படம் 10.) அது, மங்களத்தைக்கொடுக்கக்கூடிய

(1) S. I. I. Vol. I. p. 28, 29, 30.
(2) Inscs. 33 and 34 of S. I. I. Vol. I. p. 28.
(3) Annual Report of the Director general of Archeology for 1903—04. p. 271.

'ஸ்வஸ்தி' என்னும் வார்த்தையுடன் ஆரம்பிக்கின்றது. அதற்குப்பிறகு பல்லாவரம் சாஸனத்தைப்போலவே "ஸ்ரீமஹேந்ரவிக்ரம மத்தவிலாஸ" என வார்த்தைகள் காணப்படுகின்றன. திருச்சிராப்பளளியிலுள்ள சாஸனங்களுள் முக்கியமானது அதுதான் எனவும், பல்லாவரம் கோயிலும் திருச்சிராப்பள்ளிக்கோயிலும் ஒரே அரசனுற் செதுக்கப்பட்டனவென வும் நான் எண்ணுகிறேன்.

அங்குள்ள தூண்கள் வல்லத்திலுள்ளவைகளைபொத்திருக்கின்றன. போதிகைகளிற் சீயமங்கலத்திலுள்ளவைகளைப்போலவே கீற்றுக்கள் காணப்படுகின்றன. சதுரமானபாகங்கள் தளவானூரிலுள்ளவைகளைப் போலவே தாமரைமலர்களாற் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

அங்குள்ள தாழ்வாரத்தினிடதுபக்கத்திற் கங்கையைத் தனது ஜடையினின்றும் கீழேவிடும் கங்காதரனதுவிக்கிரகம் ஒன்று செதுக்கப் பட்டிருக்கிறது. (1)

தளவானூரிலுள்ளதைப்போலவே அங்குள்ள கர்ப்பக்கிரஹமும் குகைவாயிலைநோக்கியில்லாது வலதுபக்கமாக இருக்கிறது. அதற்குள் இப்போது ஒன்றுமில்லை.

அங்குள்ள துவாரபாலரூபம் (படம் V a.) வல்லம் சீயமங்கலம் முதலிய இடங்களிலுள்ளவைகளைப்போலவே கதாயுதத்தின்மேற் கையை வைத்துக்கொண்டிருக்கிறது. கால்களையும் அதேவிதமாகக் குறுக்கிட் டுக்கொண்டிருக்கின்றது. பார்வையும் அதேவிதமாகவிருக்கின்றது.

7. மாமண்டூர்:—இது, காஞ்சீபுரத்திற்கு ஆறுமைல் தெற்கே யுள்ளது. இங்குள்ள ஒரு சிறியகுன்றில் நான்கு குகைகள் வெட்டப் பட்டிருக்கின்றன. தற்காலத்தில் வடபக்கத்திலுள்ள இரண்டு குகை களும் மாமண்டூர்க்கிராமத்தையும் தென்பக்கத்திலுள்ள இரண்டும் நாஸ புரம் அல்லது நாஸபோலியம் என்னும் கிராமத்தையும் சேர்ந்துள்ளன.

அவற்றுள் மாமண்டூர்க் கிராமத்தைச் சார்ந்தவைகளுள் வலது பக்கத்துள்ளகுகையில் 18 வரியில் ஒரு பெரிய பல்லவ கிரந்த சாஸனம் இருக்கிறது. அதை டாக்டர் ஹுல்ஷ் வெருகாலத்திற்குமுன்னமே

(1) Archeologic du snd de L'Inde. Tome I Pl. XXII B. Tome II Pl. XI B.

ஒன்றுக்குமுதலாதது எனக் கூறிவிட்டார். (1) ஆனால் நான், மறுமுறை பரிசோதித்தால் நமக்கு அது பயன்படும் என அதைப்போய் ஆராய்ந்தேன். அவற்றுள் "மத்தவிலாஸப்ரஹஸனம்" என்னும் வாக்கியத்தை என்னால் வாசிக்கமுடிந்தது. அதேகாலத்தில் திருவனந்தபுரத்தில் ஸம்ஸ்கிருதச்சுவடிகள் கண்டுபிடித்து அவற்றை அச்சியற்றும்வேலையில் அமர்ந்துள்ள T. கணபதிசாஸ்திரிகள் "மத்தவிலாஸப்பிரஹஸனம்" என்னும் சிறிய ஹாஸ்யநாடகத்தை அச்சியற்றினர். (2) அதிலுள்ள ஸ்தாபனம் [ப்ரஸ்தாபனம்] அது பல்லவகுலதிலகனை சிம்ஹ விஷ்ணுவர்மன் என்னும் அரசனதுபுதல்வனை மஹேந்திரவிக்கிரமவர்மனால் இயற்றப்பட்டது எனக் கூறுகின்றது. தவிர அவனதுவிருதுகளான அவனிபாஜன சத்துருமல்ல முதலியவைகள் அதிலுள்ள சுலோகங்களுள்வைத்து எழுதப்பட்டிருக்கின்றன. (3)

[சென்றவருஷம் திருவனந்தபுரம் வக்கீல் K. G. சங்கரையரவர்கள் அச்சாஸனத்தில் அநேகபாகங்களை வாசித்தார்கள். அவை மஹேந்திரவர்மனதுவீரச்செயல்களைப்பற்றிக் கூறுகின்றன] (4)

படம் VI b. அதன் எழுத்துக்கள் மஹேந்திரவாடியிலுள்ளவைகளை ஒத்திருக்கின்றனவென்பதைக் காண்பிக்கின்றது: அங்குள்ள தூண்களும் (படம் V b.) அவைகளிலுள்ள தாமரைமலர்களும் மஹேந்திரவாடியிலுள்ளவைகளையே யொத்திருக்கின்றன. காப்பக்கிரஹத்தில் ஒன்று மில்லை. ஆனால் அதில் விஷ்ணுவின்விக்ரஹம் ஒன்று இருந்திருத்தல்வேண்டுமென நான் எண்ணுகிறேன்.

8. மண்டகப்பட்டு:—இங்கு நாம் ஆதாரமாகவெடுத்துக்கொண்ட தமிழ்நாட்டுப் புராதனக்கோயிலைப்பற்றிக்கூறவேண்டுவதும் அவசியம்.

---

(1) Ins. No 38.-G. O. No. 424. 20th April 1888.

(2) See my paper on 'The Pallavas' p. 38 and 39.

(3) Trivandram Sanskrit Series 45. Introduction and T. A. Gopinatha Rao's article on 'Mattavilasaprahasana in Christian College Magazine February 1917.

(4) Quarterly Journal of the Mythic Society Vol. X. part 4. PP. 356.

மண்டகப்பட்டு, புதுச்சேரிக்குச்சமீபமாயுள்ள சின்னபாபு ஸமுத்திரம் என்னும் வண்டிநிலயத்தக்குத்தெற்கே இரண்டுமைல் தூரத்திலுள்ளது. அங்குள்ள சாஸனம் குகைவாயிலிற் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நாம் முன்னமே கூறியிருக்கின்றோம்.

அத்தாழ்வாரத்திற்கப்பால் மூன்று கர்ப்பக்கிரஹங்களிருக்கின்றன. அவை பிரும்மா, ஈஸ்வரன், விஷ்ணு ஆகிய மூவர்களுக்கும் உரிமையாக்கப்பட்டிருந்தன.

VI ம. படத்திலுள்ள குகைவாயிலை நாம் நன்றாய் ஆராயவேண்டுவது அவசியம். இடதுபக்கத்திலுள்ள துவாரபாலருருவம் திருச்சிராப்பள்ளியிலுள்ளதை மிகவும் ஒத்திருக்கின்றது. அவர்களதைகளிற் பாம்புகள் காணப்படுவதால் அம் மும்மூர்த்திகளுள் முக்கியமானவர் சிவன் என்பது போதரும்.

முடிவுரை.

இதுகாறுங்கூறியவாற்றால் அவ்வெட்டுக்குகைகளும் ஒரேவிதமான வடிவிற் செதுக்கப்பட்டிருக்கின்றன வென்பது போதரும். அன்றி, திருச்சிராப்பள்ளிக்குகையிலுள்ள ஒரு சாஸனம் குணபரன் என்னும் அரசன் கெட்ட நடத்தையிலிருந்து சைவமதத்திற்குத்திரும்பினதைக் குறிக்கின்றது. (1) அதிலிருந்து குணபரன் முதலிற் சைவமதத்துவேஷியாயிருந்தானென்பதும், பிறகு சைவமதத்திற்கேவந்து அதை மிகவளர்த்தானென்பதும் நன்கு விளங்கியது. ஆகவே நாம் நிச்சயமாக வெங்கையாவுடன்கூடி (2) அச்குகைகள்யாவும் சத்துருமல்லன் குணபரன் லளிதாங்குரன் விசித்திரசித்தன் மத்தவிலாஸன் முதலிய விருதுகளையுடைய முதலாம் மஹேந்திரவர்மனற் செதுக்கப்பட்டனவெனவே கூறவேண்டியிருக்கின்றது. இவையாவும் "மத்தவிலாஸப்பிரஹஸனம்" என்னும் நாடகத்தால் நிச்சயமாயிற்று.

இனி நமக்கு ஹுல்ஷைப்போல் அச்சாஸனங்களைப்பற்றிச் சந்தேகிக்க இடமில்லை. அவையாவும் ஒரேகாலத்தில் ஒரே அரசனற் பொறிக்கப்பட்டனவாகும். அவைகளால் நாம் மஹேந்திரன்காலத்துப் பல்லவ

(1) S. I. I. Vol. I. p. 29. Ins. No. 33.
(2) Ep. Ind. Vol. III. p. 277.

கிரந்த எழுத்துக்கள் இரண்டுவிதமாய் வழங்கிவந்தனவென வறிகின் றோம்.

1. சாதாரணவெழுத்து:—தளவானூர் மஹேந்திரவாடி பெரமங்கலம் மண்டகப்பட்டு மாமண்டூர்முதலிய இடங்களிலுள்ளது.

2. அலங்காரவெழுத்து:—திருச்சிராப்பள்ளி பல்லாவரம் முதலிய இடங்களிலுள்ளது. இவைகளில் நேர்கோடுகள் வளைந்து காணப்படு கின்றன.

இதுவரை நாம் ஆராய்ந்த மஹேந்திரவர்மன்காலத்திய கோயில்கள் யாவும் குகைக்கோயில்களே. அவைகளினுதவியால் அவன்காலத்தில் வெட்டப்பட்டுச் சாஸனங்களில்லாதகுகைகளைக் கண்டுபிடித்துவிடலாம். அப்படிச்செய்வதற்குதவுவது அவன்காலத்திய கோயில்களின்வடிவே யாம். இதுகாறும் ஆராய்ந்ததிலிருந்து அவன்காலத்திலகோயில்களின் வடிவு பின்வருவனவாகும்.

1. கர்ப்பக்கிரஹத்துள் லிங்கத்தைத்தவிர (சில கோயில்களிற் பின்சுவற்றில் ஸோமாஸ்கந்தவிக்கிரகமிருப்பதுபோல்) வேறுவிக்கிரகங் கள் ஒன்றும் காணப்படமாட்டா. லிங்கங்கள் எப்போதும் உருண்டை வடிவமே (பட்டைவடிவமல்ல) உடையனவாயிருக்கும்.

2. துவாரபாலர்கள் எப்போதும் நேராகவே பார்த்துக்கொண் டிருப்பார்கள். அவர்கள் கையை வந்தனஞ்செலுத்துதற்கறிகுறியாகத் தலைக்குச்சரியாகவோ அல்லது கதாயுதத்தின்பேரிலோ வைத்துக்கொண் டிருப்பார்கள்.

3. தூண்கள் எப்போதும் சதுரத்தூண்களே. சதுரபாகங்கள் தாமரைமலரால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

4. மாடங்களின்மேலுள்ள தோரணங்கள் எப்போதும் இரட்டைத் திருவாட்சியே யாகும்.

கி. ரா. சுப்பிரமணியம்,

கும்பகோணம்.

பூஞ்சோலைகாவலன்.

கவிசிரேட்டராகிய ரவீந்திரநாததாகூர் இயற்றிய பனுவற்றொகுதிகள் பலவுள. அவற்றினுள் ஒன்றாகிய பூஞ்சோலைகாவலன் என்னும் நூலானது அன்பும் அறனும் பொருளாக இச்சகத்தாரும்மைவாகிய எண்பத்தைந்துசெய்யுட்களாலியன்று கேட்டார்ப்பிணிக்குந்தகைமைய தாய் நிலவுகின்றது. அதனுட் பொதிந்துகிடக்கும் அழகுகள் மிகப் பல. அவற்றுள் ஒரு சிலவற்றையுரைப்பதற்கெழுந்தது இவ்வியாஸம். கவிசிரேட்டர் உலகப்பிரசித்திபெற்றவர். இவரியற்றிய கீதாஞ்சலி என்னும் நூலில் ஈடுபட்டமேலைநாட்டார் இவர்க்குப் பெரும்பரிசிலுதவியதன்றி இவர்தஞ்செய்யுட்களைத் தம்மொழிப்பாற்படுத்து அவற்றினுட்டழும்பிய கவிரசநறவினையுண்டு அகங்களிகூர்வாராயினர். இக் கீதாஞ்சலி நூலிற் சிலசெய்யுட்கள் எற்கனவே வெளிவந்த செந்தமிழ்ப்பிரசுரம் ஒன்றில் எமதருமைப் திருவாளர் R. R. குணரத்தினம் அவர்களால் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டன.

யாமெடுத்துக்கொண்ட பூஞ்சோலைகாவலன் என்னும் இந்நூலின் சுவையானது கீதாஞ்சலி, வளரிளம்பிறை யென்னும் ஏனையநூலின் சுவைரசத்தினும் வேறுபாடுடையது. உள்ளத்தமைந்த கள்ளக்காதலை யுருக்கமொடுரைக்கும் சிறப்பினவாகிய செய்யுட்கள்பல இந்நூலில் விரவிக்கிடக்கின்றன. வாணன்கோவையுட்பொய்யாமொழியாருரைத்த இரவுக்குறியிடையீட்டினும் நுட்பமாகிய பொருளினதாகிய ஒரு செய்யுளை இங்கே மொழிபெயர்த்துக்காட்டுவாம். ஆங்கிலம், தமிழ் என்னும் இரண்டுகண்ணுடியிற் பிரதிபிம்பித்த சாயலினதாகிய என்கவி முதனூற் கவிரசத்தை முழுதுமுணர்த்தாதென்ப தொருதலை. கவிசிரேட்டராகிய தாகூர் தம்பனுவல்களைக் கற்றுவல்ல பண்டிதருந் ஏனையோரும் படித்து இன்புறவேண்டுமென்று எழுந்தினமையால் அவர்கருத்தொடுமாறு கொள்ளுதல் தருதியன்றென இம்மொழிபெயர்ப்பும் யாப்பினும் சொல்லினும் மிகவும் எளிதாகிய நடையைப் பயின்றுவருவது அறிஞரால் நோக்கற்பாலது.

தன் காற்சிலம்பும், தன் னெஞ்சமும், தன்மார்பிலணிந்த சுடர்விடு மணியுந் தனக்கு இடையீடாகவிலாதனவென்று நாணியுரைக்கும் ஒரு தலையின்வாய்மொழியாக அமைந்த இச்செய்யுளைத் தாழிசைக்கொச்சகத்தில் மொழிபெயர்த்துத்தருகின்றும். கலிக்குரிய துள்ளலிசையோடு படிப்பிற் பொருளுக்கும் யாப்புக்குமுள்ள சம்பந்தம் விளக்கமாகப்புலப்படும்.

பூஞ்சோலைகாவலன் கூடம் செய்யுள்.

க. மாலைப் பொழுதினிலுன் மணமனைக்குப் போம்போது
சீலமுள்ள பறவையெலி செய்யாது கூடையும்

உ. காற்றுமசை யாதுநிற்குங் கடிதுசெலுங் தெருமருங்கிற்
றேற்றுநல்ல வீதிகளிற் றேன்றுதோ சொலிக்குறிப்பும்

கூ. என்காலிற் பொற்சிலம்பே யெனக்குறுகண் விளைப்பனவாய்
மென்மேலு மொலித்துநிற்கும் வெட்கமெனக் குண்டாக.

ச. மாடத்தின் மிசையிருந்து மணமகனுர் வருங்குறிகேட்
டூடிபட நிணைக்குங்கா லீலைதானு மசையாது

ரு. நீரருவி தளம்பாது நித்திரையிற் சிறிதயர்ந்த
போர்வீரன் முழந்தாளிற் பொருத்திவைத்த வாளெனவே

சு. என்னெஞ்சே படபடப்பா யேங்கித் துடித்துவிடும்
அன்னதணை யமர்த்திவைக்க வரியவழி யறியேனே

எ. அண்ணலென்பால் வந்திருக்கு மமயத்தி லுடல்தகும்பக்
கண்ணிமைகள் சோர்ந்துவிடுங் கனத்தவிருள் மூடிவிடும்

அ. தீபத்தைக் காற்றவிக்குந் திரைபோட்டு மறைத்ததுபோல்
மேகத்தான் மறைந்துவிடும் விண்ணிலுள்ள மீன்களெல்லாம்

கூ. தோன்றுமென்றன் மார்பிலணி சுடர்மணியொன் றிருளகற்றிக்
கான்றவொளி வீசுமதைக் கரக்கவுமோர் வழியறியேன்.

இக்கவி மும்மூன்று ஒருதொடராகிய மூன்றுதொடர்களான் மூடிந் திருப்பதையும், க-ச-எ தம்முள்ளே பொருட்டொடர்பினவாகவிருத்தலை யும் அங்ஙனமே உ-ரு-அ, கூ-சு-கூ ஒத்த பொருளனவாகவிருத்தலையும், மணமகனைக்குப்போதல், மாடத்தின்மிசை வரவுகாத்திருத்தல், காதலன் வந்தணைதல், ஆகிய மூன்றுதொழிலு நிகழுங்கான் முறையே நடந்து செல்லுங்காலிலணிந்த பொற்சிலம்பும், வரவுகாத்திருந்த நெஞ்சமும், இன்புறத்தழுவிய மார்பிலணிந்த சுடர்விடுமணியும் இடையீடாயினவென வகுத்துக்கூறிய கவியமைப்பும் பிறவும் நோக்கற்பாலன.

இனி, புலவராவாரிவரென்பதுப், அவர் உலகினர்க்குப்புரியும் உப காரம் இத்தன்மையினதென்பதும், அவர் பல்லாண்டுகழியினும் இளமை கழியாமாண்பினரென்பதும், சாக்காடு மறுமையாதியவற்றை யாராய்ந் தறிவுறுத்தும் அறிஞரொருசாராக, இளநலந்துய்ப்போர்களவியன் முறையை யின்னிசைச்செய்யுளாற் பின்னமின்றியுரைக்குங் கவிஞரும் இன்றியமையாதாரென்பதும் பூஞ்சோலைகாவலன் இரண்டாஞ்செய்யு ளாற் புலப்படுகின்றது. அதனை ஆசிரியப்பாட்டில் மொழிபெயர்த்துத் தருகின்றும்.

புலவ,
மாலைப் பொழுதுஞ் சாலவந் திறுத்தது
பின்,
கருநிறக் குஞ்சி வெண்மை சான்றது

தனிமையி னுய்ந்தனை சாலவு மினிவருங்
கதியி னியல்பு கண்டனை யோவெனப்
புலவன்,
மாலைவந் திறுத்தது பெய்யே வேலைப்
பகலவன் மறைந்தனன் பகற்பொழு தகன்ற
தாயினு மயலூர் மேயினர் சிலரென்
பால்வரு வாரெனக் காலொலி யரவம்
கேட்டிருக் கின்றனன் கோட்டபி னெஞ்சினர்
இளமை சான்ற விருவர் மனமலிவுற்
றொருமைப் படுங்கா லுரைசொல நாணி
அவாநிறை கண்ணினை நெனப்பார்த் திரப்பின்
அவர்வா யுரையே யென்னுரை யாக
வவர்வயி னிறைந்த காதலை யுணர்த்தி
யின்னிசைச் செய்யுள் செய்பவ னனே
அச்செய லொரீஇ,
வாழ்க்கை யென்னும் வான்கரை யிருந்து
சாக்காடு மறுமைத் தகைமையா ராயின்
அவர்க்கங்
கின்னிசைச் செய்யுள், செய்பவர் யாரோ ?

மாலை வெள்ளியு மறைந்தது சேய்மையின்
அடங்கிச் சென்னதிப் பாங்க ரிடங்கொள்
ஈமத் தெழுதீக் குறைந்தனை கின்றது
தேப்பிறை நிலவுசெல் பாழ்மனை முற்றத்து
நரிக்குலங் குழுமி யொலிக்குறி காட்டின
இவ்வழி,
மனைதுறந் தலைவோ னொருவன் வந்து
விழித்திருட் குறிப்புணர் விருப்பின னுகச்
சென்னிதாழ்த் திருப்பி னவன்செவி யகத்து
வாழ்வின் மருமம் வழங்குவார் யாரோ
யானென்,
கதவ மடைத்துத் தனிமையி னிருந்து
தளைநீங்கு தொழிலென் னுளமேற் கொளினே.
(தளை=உயிரைப்பற்றிய உடற்றொடர்பு முதலியன)

கருமயிர் வெண்ணிற மாயினு மாகுக
இவ்வூர்,
மூதியோர்க் கெல்லா மூதியோ னனே.
இளையோர்க் கெல்லா மிளைஞனு நானே

இனியபுன் னகையின சொருசில சொருசிலர்
மணிநிறக் கண்ணின் மருட்குறிப் பினரே
பகற்கண் ணீர சொருசில சொருசிலர்
காணு விரவிற் கண்ணீர் சொரிபவர்
இவர்க்கெலா மின்றி யமையா நின்றேன்
யானே யாகலின் மயிர்வறிது வெளிறிலென்
இனிவரு கதியின் நிலைமை யாய்தலிற்
பொழுது போக்கேன் கருமயிர் வெளிறிலென்
பலபரு வத்தினர் நிலையின னெனக்கே.

இனி, தலைமகன்வந்தவழி பெள்ளி யவன் பிரிந்தவழிக்கலங்கினு ளொருதலையி தன்னெஞ்சைமுஞ்னிலைப்படுத்திக் கூறியதாகிய கூசு-ம் செய்புளைக் கலிவெண்பாட்டில் மொழிபெயர்த்துத்தருவாம்.

காதற் கணிகலமே கண்டிறந்து பாரிதுவு
நீதியோ வென்றென்மு னின்றுனைப் போதிநீ
யென்னைக் கொடுஞ்சொல்லா லேசினேன் கோன்போல்
முன்னின் றகலான் முளரிமலர்க் கையிரண்டிம்
பற்றினன் விட்டகல்வாய் பாவியென்றேன் போகாஞய்
நெற்றியென்கா நிற்சேரு நீர்மையுறக் கிட்டினன்
வெட்கமிது வென்றேன் விலகா னிதழ்பொருந்த
முத்தமிட்டு நின்றுன் மொழிகுளறிச் சித்தமிகக்
கூசியே மிஞ்சிநடந் தாயென்னைக் கூறினேன்
ஆசைவெட்கந் தன்னை யறியாதாற் பேசாஞய்
நின்றுனெனீ பூங்குழலை நீள்கரத்தாற் றொட்டுமலர்
ஒன்றை யணிந்தா னுரையாடான் மன்றன்
மலர்மாலை யொன்றென் மணிக்கழுத்தி னின்று
விலகும் படியெடுத்து மீண்டான் அகலவே
ஆாமை மிக்கரற்றி யன்பனினி வன்னெஞ்சே
வாாாஞை வென்றேன் வறிது.

"நீம்பால்கறந்தகலமாற்றி" என்னுங் கலித்தொகைச்செய்யுளோடு இதனை பொத்துநோக்குக.

கவிஞர்பெருமான் முன்னிலைக்கட் டேவர்ப்பாயபொருண்மைத்தாகச் செய்த பாஞிப்பாட்டொன்றைத் தாழிசைமுன்றடுக்கிய கொச்சக வொருபோகில் மொழிபெயர்த்துத்தருவாம். கீதாஞ்சலிநூலிலுள்ள செய்புட்கள்பல இங்ஙனே பாணிப்பாட்டாய் ஒத்து மூன்றடுக்கியதாழிசைக்கொச்சகவொருபோகில் மொழிபெயர்க்கத்தக்கன.

இருசீர்முதலாஎண்சீரளவும் வருதலன்றே கலியடிக்கியல்பு. இச்செய்புள் அவ்வெல்லையிகந்தபண்ணிருசீரடியாஞபிற்றே. இதனை எங்ங

னம் கலிப்பாவின்பாற்படுத்துவதெனின், இத்தன்கட்பயின்றுவரும்அடி. யாப்பின்வேறுபட்டதெனினும், தாழம்பட்ட ஓசைபவாய் ஒருபொருண் மேல்வந்தஉறுப்பு ஒத்து மூன்றுதலின் இதனைத் தாழிசையென்றும். அஃது ஒவ்வாதென்பார் பிற்காலத்து நூல்நோக்கி இதனை யாசிரிய விருத்தமென அமைக்கினு மமையும்.

பூஞ்சோலைகாவலன் ரு-ம் செய்யுள்.

(1) மட்டுக் கடங்காச் சலிப்புற்றேன்
மனமோ மிகுந்த தூரத்தில்
வயங்கும் பொருளை யுறுவதற்கு
வறிது விரும்பித் தவிக்குதையோ
கட்டுக் கடங்கா வென்னுளமுங்
காத லாகிச் சேய்மைக்கட்
காணும் பொருளைப் பெறவெண்ணிக்
கருதிச் செல்லு மியல்பினதே
எட்டா மரபிற் பெரியோய்நின்
இதழினியைந்த குழலோசை
யிசைகேட் டுருகி நிற்கின்றேன்
யாது செய்வேன் பறந்துவரச்
செட்டை யிரண்டெற் கில்லாத
சிறுமை மறந்தே னெவ்விடத்துந்
திரியாப் படியான் கட்டுண்ட
செயலை மறந்தேன் மறந்தேனே.

(2) நாடும் விழைவு பெரிதுடையேன்
நாட்டந் துயிலேன் பிறர்க்குரிய
நாடிந் நாடிங் குறைகின்ற
நானு மயனுட் டவனுனேன்
கூடுங் கூடாப் பொருளுமெனக்
குறிப்பா லுணர்த்துஞ் சிறுமொழிமேற்
கொண்டே னின்னு வெண்ணுவாக்
கெள்ளு மென்ற னிதயமையா
தேடற் கரிய பெருளேநின்
றிருவா யினைந்த குழலோசைச்
சீர்கேட் டுருகித் தியங்குகின்றேன்
செய்வ தியாவென் றறிந்திலனுல்
ஆடற் சிறைகொண் டந்தரஞ்செல்
பரியேற் கரிதென் றறமறந்தேன்
ஆங்குச் செல்லும் வழியினையான்
அறியே னெனனு மறந்தேனே.

(3) நொந்து திரிந்திங் குழல்கின்றேன்
நோக்கி லிதயத் தலைவுற்று
நுவல விடமொன் றில்லாது
நோவுற் றுடல மயர்கின்றேன்
சிந்துங் கிரண விரவியொளி
சேரு முச்சிப் பொழுதினிலின்
செல்வ வுருவோ விசும்புநிறை
சீரார் நீலச் செவ்வியையா
அந்தத் திற்கு முடிவேகின்
னணிவா யியைந்த குழலோசை
யதுகேட் டுருகி நிற்கின்றேன்
யாது செய்வ தெனவறியேன்
சொந்த மாக யான்வாழுந்
தொடக்கா மனையிற் கதவமெலாந்
தொட்டுப் பூட்டி யிருக்கின்ற
னுன்ப மறந்தேன் மறந்தேனே.

எண்சாளைவினதாகிய சிற்றுடம்பில் அடைபட்டிருக்கும் உள்ள மானது இறைவனுடைய மணிவாயினமைந்த வேய்ங்குழலொலிகேட்டு உருகிச் சிறைகாவன் மறந்து விழைவுமிக்கிருக்குநிலைமையைச் சிறப் பாக வுரைக்கு மிச்செய்யுள் முதனூலிற் றிட்பநுட்பஞ் செறிந்தமைந் திருக்கின்றது. தெளிவுநோக்கிச் சற்று விரிவாக மொழிபெயர்க்கப் பட்டது.

இனி, இந்நூலுக்குப் 'பூஞ்சோலைகாவலன்' என்னும் பெயரிடப் பட்டதற்குக் காரணமிதுவென வாராயும்பொருட்டு முதற்செய்யுளை மொழிபெயர்த்துத் தருவாம்.

அரசன் ஒருவன் பணியாளன்போற் கோலம்பூண்டு தனது அரசி யொடு வார்த்தையாடுமார்க்கத்தான் அவள்மேற் றனக்குள்ள அரும் பெருங்காதலை வெளிப்படுத்துவது இச்செய்புட்பொருளாகும்.

இதனைக் கூற்று மாற்றமு மிடைந்து நாற்சீரடியானடந்த உறழ் கலிப்பாட்டில் எழுதுவாம்.

பணியாளன்:—பணியாளன் றனக்கிரங்கிப் பார்த்தருள்வா யென்னரசி

அரசி:—அணியவையுங் குலைந்துவிட்ட தினைவருந்தப் மனைபுகுந்தார்
தாமதித்திவ் வேளையிலே தனியேநீ வரலேனே

பணியாளன்

போற்றியவர் போனபின்னர்ப் போதனல மென்றிருந்தேன்
ஈற்றினின்ற தொண்டனெனக் கிடும்பணிதான் யாதோசொல்வாய்

அரசி:—நேஞ்சென்று வந்தனையா னினக்கென்ன பணியிடுவேன்

பணியாளன்:–ஆரந்தரு பூஞ்சோலை யதைக்காக்க வனுப்பிவைப்பாய்

அரசி–பேதைமையிங் கிதுவன்றே

பணியாளன் யாதும்வெறுத் திதுபுரிவேன்
நீதுபுரி வாளும்வேலுஞ் சேர்த்துமணன் மீதெறிவேன்
தூரத்துள்ள வரசர்தம்பாற் றூதாக வினிப்போகேன்
போரிற்சென்று வெற்றிபெறேன் பூஞ்சோலை காத்திடுவேன்

அரசி–உன்கடமை யாதாகும்

பணியாளன் உனக்குப்பணி புரிவதாகும்
காலையினி னீயுலவும் பாதையிற்புல் வளர்த்துவைப்பேன்
பாதம்படும் போதுபூக்கள் சாதலுக்கு விழைந்தேத்த
ஏழிலைப்பேர்த் தருவிலுஞ்ச லிட்டுன்னை யதிலிருத்தி
வாழியென்ன வாட்டிடுவேன் வான்மதியம் விழைவாகி
இலையொதுக்கி யீங்குவந்து னின்பநல்கு மாடையினை
யிலவுற்றுச் சிறிதுகொஞ்ச வமைத்துவைப்பே னல்லுஞ்சல்
பள்ளியறைக் குள்ளெரியும் பாங்கான தீபத்திலே
தெள்ளுநறு மணங்கமழுஞ் சீர்த்தைலஞ் சேர்த்துவைப்பேன்
பாதம்படும் பலகையிலே யேதமிலாச் சந்தனத்தான்
மஞ்சளினு லெழுதிவைப்பேன் வாகான கோலமெல்லாம்

அரசி:–இத்தனையுஞ் செய்வதற்கிங் கென்னகூலி கேட்பாயோ

பணியாளன்
சித்தமிருந் தாலுனது செங்கைமலர்ப் பங்கயத்தைத்
தொட்டதிலோர் மலர்த்தொடையல் சூட்டிவைக்கும் வரம்வேண்டும்
செய்யவசோ கத்திதழைச் சேர்த்துப் பிழிந்தசாற்றைப்
பையவுந்தன் சேவடியிற் பரப்பியந்த மலர்ப்பதத்தில்
மிஞ்சியிருக் குந்துகளைக் கொஞ்சிடவோர் வரம்வேண்டும்

அரசி:–நாடும் ஊரங்களெல்லா நானளித்தேன் பணியாளா
வடவிழ்பூஞ் சோலையினை யினிக்காத்து வருவாயே.

முதற்செய்யுளுக்கு உரியதாகிய பூஞ்சோலைகாவலன் என்னும் பெயர் நூல்முழுவதுக்குமுரியதாயிற்று. "செய்யதிருப்பேழையினுள் அமைந்திருக்குந்திரவியத்திற்சிறிது காட்டி - வையமிசைக்குணனுரைக்கு மரபிற்' கவிசிரேட்டராகிய ரவீந்திரநாததாகூரியற்றியபனுவற்றொகுதிகள் பலவற்றுள் ஒன்றாகிய இந்நூலிற்பொதிந்துகிடக்கும் அழகுகளுட் சில காட்டினும்.

யாம்அளித்தகவிதையிருந்து 'செந்தமிழ்ப்பத்திரிகாபிமானிகளுக்கு இதந்தருவதாயின் இணிமேலும் எம்மாலியன்றபுரியப் பின்னில்லேம்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்
மயிலாப்பூர் – சென்னை

பண்டித. மயில்வாகனன்.

ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் **1922**ஆம மார்ச்சுமீ **4**உ நடத்திய
ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப்
பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணக்கர்களின் விவரம்.

பி. ஏ. பரீக்ஷை.

1-வது வகுப்பு.

தொடர்ச்சி நிர்.	ரிஜிஸ்டர் நிர்.	
1.	4.	S. சொக்கலிங்கம், கவர்ன்மெண்ட்காலேஜ், கும்பகோணம். (முதற்பரிசு ரு 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

2-வது வகுப்பு.

1.	2.	S. முத்துசாமி, S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
2.	1.	A. சோமசுந்தரம் ஷை ஷை

எப். ஏ. பரீக்ஷை.

1-வது வகுப்பு.

1.	6.	P. சங்காலிங்கம், அமெரிக்கன்காலேஜ், மதுரை. (முதற்பரிசு ரு 40 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

2-வது வகுப்பு.

1.	8.	P. சுப்பையா, அமெரிக்கன்காலேஜ், மதுரை.
2.	25.	T. A. தாணுமாலயன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
3.	42.	N. முத்துச்சாமி, ஸ்ரீ மீனாக்ஷிகாலேஜ், சிதம்பரம்.
4.	18.	A. N. மகாபூஷணன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
5.	12.	S. வீராசாமி, S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
6.	30.	வி. வி. டானியல் (பெண்), H. H. College for women, திருவனந்தபுரம்.
7.	41.	R. நடேசன், ஸ்ரீ மீனாக்ஷிகாலேஜ், சிதம்பரம்.
8.	38.	K. திருவ்ணமாச்சாரி, ஷை ஷை
9.	39.	K. S. குருஸாமி ஷை ஷை

10. 11. V. பொன்னுசாமி, அமெரிக்கன்காலேஜ், மதுரை.
11. 29. S. கிறேஸ் (பெண்), H. H. College for women, திருவனந்தபுரம்.
12. 20. M. முத்தையா, ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
13. 19. T. சுந்தரமூர்த்தி ஷை ஷை
14. 37. T. V. திருஷ்ணமூர்த்தி, ஸ்ரீ மீனாக்ஷிகாலேஜ், சிதம்பரம்.
15. 31. R. சேஷாத்திரி, பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.

மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

2-வது வகுப்பு.

1. 116. V. S. வெங்கடாசலம், முனிசிபல்காலேஜ், சேலம்.
2. 180. D. சௌந்தராராஜலு, முனிசிபல்ஹைஸ்கூல், வாலாஜாநகர்.
3. 119. R. V. வரதராஜன், முனிசிபல்காலேஜ், சேலம்.
4. 123. A. லக்ஷ்மீநரசிம்மன், கவர்ன்மெண்ட்காலேஜ், கோயம்புத்தூர்.
5. 66. M. சாமுவேல் யோபுதாஸ், அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூல், பசுமலை.
6. 272. V. ஸௌம்யமூர்த்தி, ஸ்ரீ பூமிஸ்வராகவாமி ஹைஸ்கூல், இராமச்சந்திரபுரம்.
7. 146. S. ராமையா, C. M. S. ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
8. 210. A. ஜான் தேவசகாயம், கால்டுவெல்ஹைஸ்கூல், தூத்துக்குடி.
9. 46. D. V. வேங்கடசுப்பு, ஸௌராஷ்ட்ராஹைஸ்கூல், மதுரை.
10. 178. K. S. திருவேங்கடாசாரி, நேடிவ்ஹைஸ்கூல், செங்கற்பட்டு.
11. 51. J. அன்னத்தாய் அம்மாள் (பெண்), மங்களபுரம்ஹைஸ்கூல், மதுரை.
12. 120. S. இரத்தினசபாபதி, முனிஸிபல்காலேஜ், சேலம்.
13. 118. K. S. கிருஷ்ணமூர்த்தி ஷை ஷை
14. 68. C. தங்கையா, அமெரிக்கன்மிஷன்ஹைஸ்கூல், பசுமலை.
15. 47. K. சோமசுந்தரம், ஸௌராஷ்ட்ராஹைஸ்கூல், மதுரை.
16. 71. A. ஸ்ரீநிவாசன், ராஜாஹைஸ்கூல், இராமநாதபுரம்.
17. 175. S. கண்ணியப்பன், நாஷனல்ஹைஸ்கூல், மன்னார்குடி.
18. 117. P. S. ஜானகிராமன், முனிஸிபல்காலேஜ், சேலம்.
19. 176. R. கிருஷ்ணசாமி, நாஷனல்ஹைஸ்கூல், மன்னார்குடி.
20. 303. A. R. சோமசுந்தரம், ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரர் வித்தியாசாலை, காரைக்குடி.
21. 300. S. மெய்யப்பன் ஷை ஷை

22. 78. V. தங்கசாமி, S. P. G. ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
23. 43. R. ராமகிருஷ்ணன், சேதுபதிஹைஸ்கூல், மதுரை.
24. 137. C. சங்கரன், ஸெண்ட்ஜோசப் ஹைஸ்கூல், மஞ்சக்குப்பம்.
25. 293. N. கலியபெருமாள், பச்சையப்பாஹைஸ்கூல், சிதம்பரம்.
26. 112. M. S. பிரான்சிஸ் மரியலூயிஸ், St. Francis Xaviers' High School, பாளையங்கோட்டை.
27. 69. V. S. ஷண்முகம், A. V. உயர்தர கல்விச்சாலை, சாத்தூர்.
28. 72. M. முத்துத்துரைச்சாமி, ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
29. 127. V. ஸ்ரீநிவாஸன், கவர்ன்மெண்ட் காலேஜ், கோயம்புத்தூர்.
30. 95. P. A. கணபதி, C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
31. 115. P. செமிஜியான்பர்னந்து, St Francis Xaviers' High School, பாளையங்கோட்டை.
32. 53. P. பொன்னம்மாள் (பெண்), மங்களபுரம் ஹைஸ்கூல், மதுரை.
33. 63. S. G. அருமைநாயகம், அமெரிக்கன் மிஷன் ஹைஸ்கூல், பசுமலை.
34. 94. A. நெல்லைநாயகம், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
35. 90. R. A. அம்பலவாணன், ஷை ஷை
36. 92. A. குமாரகுருபாதித்தன், ஷை ஷை
37. 262. R. திருமலைசாமிநாயுடு, முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
38. 270. D. S. பிந்துமாதவராவ், ஸ்ரீபூமீஸ்வரசுவாமி ஹைஸ்கூல், இராமச்சந்திரபுரம்.
39. 85. A. காளியப்பன், ராஜா ஹைஸ்கூல், எட்டையபுரம்.
40. 165. K. S. கிருஷ்ணமூர்த்தி, P. S ஹைஸ்கூல், மைலாப்பூர்.
41. 174. S. ராஜரெத்தினம், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.
42. 253. S. ரெங்கசாமி, ஹிந்து ஹைஸ்கூல், பத்தமடை.
43. 52. Y. S. கிருபையம்மாள் (பெண்), மங்களபுரம் ஹைஸ்கூல், மதுரை.
44. 101. T. S. ராமகிருஷ்ணன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
45. 138. K. சோமசுந்தரம், ஸெண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
46. 173. A. S. அனந்தராமன், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.
47. 220. R ஸ்ரீநிவாஸன், டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல், திருவண்ணமலை.
48. 44. V. கிருஷ்ணஸாமி, சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.
49. 65. S. யோசேப்புதம்பையா, அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூல், பசுமலை.
50. 81. A. இராமகிருஷ்ணன், ராஜா ஹைஸ்கூல், எட்டையபுரம்.
51. 238. K. ஜோதிமணி, விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.
52. 67. K. V. ராக்கன், அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூல், பசுமலை.
53. 166. P. சின்னப்பன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.

54. 49. S. இராமையா, ஸௌராஷ்ட்ரா ஹைஸ்கூல், மதுரை.
55. 58. S. காதர்பாகூா, அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூல், பசுமலை.
56. 144. S. கைகாட்டி, C. M. S. ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
57. 246. M. V. நெல்லையப்பன், ஹிந்து ஹைஸ்கூல், பத்தமடை.
58. 172. V. கண்ணையா, பிண்டிலே காலேஜ், மன்னர்குடி.
59. 177. V. சுப்பராவ், நாஷனல் ஹைஸ்கூல், மன்னர்குடி.
60. 45. V. J. டிமெல், மதுரைக் காலேஜ், மதுரை.
61. 76. வீ. சா. இராஜகோபாலன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
62. 261. K. S. ராமமூர்த்தி, முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
63. 93. S. V. கிருஷ்ணஸாமி, C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
64. 257. R. ஆதிசேஷன், போர்டு ஹைஸ்கூல், பட்டுக்கோட்டை.
65. 296. M. N. K. ஆராவமுது, பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.
66. 114. V. அந்தோனிசுவாமி, St. Francis Xaviers' High School, பாளையங்கோட்டை.
67. 50. P. திருக்குற்றாலலிங்கம், அமெரிக்கன்மிஷன்ஹைஸ்கூல், மதுரை
68. 124. E. R. விஜயராகவன், கவர்ன்மெண்டு காலேஜ், கோயம்புத்தூர்.
69. 97. C. சுப்பிரமணியன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
70. 54. R. ராகேல்அம்மாள் (பெண்), மங்களபுரம் ஹைஸ்கூல், மதுரை.
71. 122. V. சுந்தராஜன், முனிசிபல் காலேஜ், சேலம்.
72. 157. S. ஸ்ரீநிவாஸவரதாச்சாரி, கலவலஇராமாநுஜம் கலாசாலை, புரசை, சென்னை.
73. 209. D. பால்வர்மா, கால்டுவெல் ஹைஸ்கூல், தூத்துக்குடி.
74. 263. N. சீனிவாசப்பிள்ளை, முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
75. 125. G. சுப்பிரமணியன், கவர்ன்மெண்ட் காலேஜ், கோயம்புத்தூர்.
76. 265. A. வெங்கடேசன், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
77. 128. L. பள்ளிகொண்டையா, கவர்ன்மெண்ட் காலேஜ், கோயம்புத்தூர்
78. 96. M. அந்தோணிமுத்துராஜா, C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
79. 278. A. நாராயணசாமி, ராமஸாமிசெட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.
80. 294. T. நடேசன், பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.
81. 62. B. தங்கையா, அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூல், பசுமலை.
82. 86. K. கிருஷ்ணன், ராஜா ஹைஸ்கூல், எட்டையபுரம்.

B. இராஜராஜேஸ்வரவேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

4-7-1922

தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் துர்மதி-ஆவ பங்குனிமீ **21, 22, 23 (1922**-ஆவ ஏப்பிரல்மீ **3, 4, 5)**-ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷிகளிற் றேறிப் பரிசும், யோக்கியதாபத்திரமும் பெறும் மாணக்கர்களின்விவரம்.

பிரவேசபரீக்ஷை.

1-வது வகுப்பு.

தொடர்ச்சி நீர்.	நிஜிஸ்டர் நீர்.	
1.	51.	தங்கம்மாள், ஸ்ரீ ராமநாதவித்யாலயம், சுன்னாகம், யாழ்ப்பாணம். (முதற்பரிசு ரு. 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)
2.	11.	ஸ. லக்ஷ்மிநரசிம்மன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. (இரண்டாவது பரிசு ரு. 30.)

2-வது வகுப்பு.

1.	33.	M. நல்லசுவாமிநாடார், பாங்குன்றுப்புரம், வீரகேரளம்புதூர் போஸ்டு, தென்காசிதாலூகா.
2.	14.	பெருமாள்செட்டி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
3.	12.	ஆ. பொன்னுச்சாமி ,, ,,
4.	13.	வே. இராமநாதன் ,, ,,
5.	31.	D. மாசில்லாமணி, புதுப்பேட்டைத்தெரு, பாளையங்கோட்டை.

B. இராஜராஜேஸ்வரவேதபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

4-7-1922

க

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஅ.] திருத்துபி-ஹுல் ஆனி-மீ [பகுதி அ.
Vol. XX. June—July—1922. No. 8.

பாணினீய லகுதீபிகை.

[திருவனந்தபுரம் வடமொழிநூற்பிரசுராசாலே'யிற் பண்டிதராயிருக்கும் ஸ்ரீமாந். ஜி. ஹரிஹராசாஸ்திரியவர்களுடைய உதவியால், S. வையாபுரிப் பிள்ளை B.A., B.L., எழுதியது.]

ஸம்ஸ்கிருதபாஷையை 'வடமொழி', 'தேவபாஷை', 'ஆரியம்' எனப் பலவாறுகத் தமிழுலகிற் பெயரிட்டழைப்பர். இப்பாஷை யிப் பொழுது வழக்குவீழ்ந்துபோயிற்றெனினும், நமது இந்தியாதேசத்தில் வழங்கிவரும் பாஷைகளனைத்திற்கும் 'தாய்' எனத்தகும் உரிமைபூண்டி அவற்றை நாளிதுவரை வளர்த்துவருகிறதென்னும் உண்மை கடுவுநிலை குன்றுதார் யார்க்கும் தெள்ளிதிற் புலப்படும். தமிழ்மொழியும் மேல கற்கோர் விலக்கன்று; ஆனல் இம்மொழிக்குச் 'செவிலித்தாய்' என வடமொழியைக்கூறுதலே பொருந்துவதாகும். அறிஞர்கள் பலர்க்கும் இதுவே அங்கீகாரமாம். இக்காலத்து ஸ்ரீமான் R. சுவாமிநாத ஐயாவர் கள்போன்ற கல்வியாளர்கள்சிலர் தமிழுக்கு 'நற்றாய்' வடமொழியென ஸ்தாபிக்கப் பெரிதும் முயன்றுவருகிறார்கள். இவர்கள் கூறும் நியாயங் களைப் பாஷாசாஸ்த்ரவிற்பன்னர்கள் ஆராய்ச்சிசெய்து அறுதியான வொருமுடிபுக்குவரும்வரை, பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள கொள் கையைக் கைவிடுதல் உசிதமன்று.

வடமொழியைத் தமிழுணர்ந்தின்'செவிலித்தாய்' எனக்கூறுதற்குத் தக்காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக நூல்வழக்கிலும் பேச்சு வழக்கிலுமாகத் தமிழிலுள்ளசொற்களில் ஒருபெரும்பகுதி வடமொழிப் பதங்களாம். நமது பாஷையில் இவ்வாறு வடசொல் புகத்தொடங்கியது இன்று நேற்றன்று. எக்காலத்து முதன்முதல் தமிழ்நூல்கள் தோன்றத் தொடங்கினவோ அக்காலத்துத்தானே வடசொற்களும் தமிழிற் பயின்றுவந்திருக்கின்றன. இருபத்றிபே 'இலக்கணக்கொத்து' இயற்றிய ஸ்ரீசுவாமிகாதநேகரும் 'அன்றியுந் தமிழ்நூற் களவிலே யவற்றுள், ஒன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ' என வினவுவாராயினர். ஆனால் இதனைத் தமிழிற்கோர் குறைபாடாகக் கருதுதல் தவறு; தமிழ் மக்களது அறிவுவளர்ச்சி காரணமாகவும் நாகரிகமுதிர்ச்சி காரணமாகவும் 'சொற்கடன்' ஏற்பட்டுளதென்பதை நாம் மறந்துவிடலாகாது. இரண்டாவதாக, நூற்குரியவிஷயங்களெனத் தமிழில் எடுத்தாளப்பட்டவற்றுள், பெரும்பாலன வடமொழிநூல்விஷயங்களாம். இதற்கு எடுத்துக்காட்டுக்களாகத் திருவள்ளுவரது' திருக்குறளினையும் கம்பநாடரது இராமாயணத்தையும் கூறுதல் தகும். 'இவர் (திருவள்ளுவர்) பொருட்பாகுபாட்டினை அறம் பொருள் இன்பமென வடநூல்வழக்குப்பற்றியோதுதலான்' எனவும், 'அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தனசெய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்' எனவும், 'தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப்பூண்ட வியாழ வெள்ளிகள் துணிபு தொகுத்துப்பின் னீதிநூலுடையார்கூறியவாறு கூறுகின்றமையின்' எனவும், 'ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம்பற்றிச் செலவு, ஆற்றுமை, விதுப்பு, புலவி யென நால்வகைத்தாக்கிக்கூறினர்' எனவும் திருக்குறளுக்கு உரையிட்ட பரிமேலழகர் உரைத்திருக்கின்றார். கம்பநாடரும், 'தேவ பாடையினிக்கதை செய்தவர்–மூவ ரானவர் தம்முளு முந்திய–நாவி னருரை யின்படி நான்றமிழ்ப்-பாவி னுலி னணர்த்திய பண்பரோ' என்று கூறினர். மூன்றுவதாக நூல்விஷயமேயன்றிச் செய்யுட்குரிய சுவிமாபுமுதலிய வற்றை நோக்கினும் இருபாஷைகளும் பெரும்பாலும் ஒத்தியல்கின்றன. இவ்வாறு, நமது வடமொழியுணர்ச்சி பெருகப்பெருக இருமொழிக்கு மூளிய தொடர்பும் பலவகையாலும் வளர்ந்துகொண்டே செல்கின்றது. ஸம்ஸ்கிருத மொழியோடு சமமாக நிற்கக்கூடிய அளவில், தமிழை வளம்படுத்தவேண்டுமென்ற பேரவா தமிழ்நாட்டில் வேரூன்றிநின்றதென்பது

பலவாயில்களாலும் வெளிப்படுகின்றது. 'ஆரியத்தோடுறழ்தருதமிழ்த் தெய்வம்' என்றும், 'இருமொழியும் நிகரென்னு மிதற்கைபமூளதேயோ' என்றும் வருவன மேற்கூறியதனை வற்புறுத்துகின்றன. ஈண்டு எழுதிய வற்றைநோக்கும்போது வடமொழி தமிழுக்குச் செவிலித்தாயாக நின்ற தென்பதில் விபப்பொன்றும் இல்லை.

மொழியின்வரம்பினை வகுத்துக்கூறும் இலக்கணவிஷயத்திலும் வடமொழிக்கு நமதுமொழி பெரிதுங் கடப்பட்டிருக்கின்றது. தமிழுக்கு ஆதிபிலக்கணம் அகத்தியமுனிவரால் செய்பப்பட்ட அகத்தியம் என்றும், இதற்குப்பின் தோன்றியது தொல்காப்பியரால் செய்பப்பட்ட தொல்காப்பியம் என்றுங் கூறுவர். இவையிரண்டற்கும் முறையே பாணினீயமும் ஐந்திரமும் முதனூலாமென்பர் பிரயோகவிவேகநூலார். இவரதுகருத்தொடு சிறிதுமுரணி 'விடை யுகைத்தவன் பாணினிக் கிலக்கணை மேனுள்—வட மொழிக்குரைத் தாங்கியன் மலயமா முனிக்குத்-திட முறுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொல்' எனவும், 'வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்-தொடர் புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்-குடமுனிக்கு வலியுறுத்தார்கொல்லேற்றுப்பாகர்" எனவும் இலக்கிய இலக்கணத்துறை முற்றிய இருவர் கூறியிருக்கின்றார்கள். வடமொழியிலுள்ள புராதன வியாகரணங்களுக்குத் தொல்காப்பிய முதலிய தமிழிலக்கணங்கள் கடப் பட்டுள்ளனவென்பது மேற்குறிக்கப்பட்டோரனைவர்க்கும் அங்கீகாரமாம். இது கர்ணபரம்பரைக் கட்டுக்கதையுமன்று. நூலாராய்ச்சிசெய்து உண்மை நோக்குமிடத்தும் இக் கடப்பாடு யதார்த்தமேயென்பது விளங் கும். உதாரணமாக இரண்டொன்று காட்டுதல் மிகையாகாது. பாணினி முனிவரியற்றியசிக்ஷையில் 'அஷ்டௌ ஸ்தாநாநி வர்ணாநாம் உர: கண்ட: சிர: ததா ஜிஹ்வாமூலம் ச தந்தாஸ்ச நாஸிகோஷ்டௌ ச தாலுச' என்பது காணப்படுகின்றது. இதனைஒப்ப எழுத்ததிகாரத்தில், பிறப்பியலில்,

'...தலேயினு மிடற்றினு நெஞ்சினு நிலேஇப்
பல்லு மிதழு நாவு மூக்கு
மண்ணமு மூளப்பட வெண்முறை நிலேயா
னுறுப்புற் றடைய நெறிப்பட நாடி
யெல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலேப்
பிறப்பி னுக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான'

எனத் தொல்காப்பியர் சூத்திரமியற்றினர். 'ஸுப்திங்தம் பதம்' என்பது பாணினீயம். இதற்கேற்பத் தொல்காப்பியரும் 'சொல்லெனப் படுப பெயரே வினேயென்-றுபிரண் டென்ப அறிந்திசி னோரே' என்று கூறியிருக்கின்றனர்.

இங்ஙனமாக நமது தாய்மொழிக்கும் வடமொழிக்கும் மிக நெருங்கியதொடர்பு ஏற்பட்டிருக்கின்றது. திராவிடமகாபாஷ்யகர்த்தராகிய ஸ்ரீ சிவஞானசுவாமிகளும் 'வடமொழியுணர்ந்தார்க்கன்றித் தமிழியல்பு விளங்காது' எனத் தமது 'முதற்சூத்திரவிருத்தி'யிற் கூறினர். ஆகவே வடமொழியுணர்ச்சி தமிழ்கற்றார்க்கெல்லாம் இன்றியமையாததாயிருக்கின்றது.

ஆயினும், பற்பல காரணச்செறிவால், தமிழ்மக்களிடையே வடமொழியுணர்ச்சி குன்றிக்கொண்டேவருகிறது. இதற்கு வடமொழியை யெளிதிற்கற்றுக்கொள்ளுதற்குத்தக்கபடி தமிழில் இலக்கணம் முதலிய கருவிநூல் இல்லாமை ஒரு முக்கிய காரணமெனத் தோன்றுகிறது. பேச்சுவழக்கிலிருக்கும் பாஷைகளே யிலக்கணவுதவியன்றியே நாம் கற்றுக்கொள்ளுதல்கூடும்; வழக்குவீழ்ந்தபாஷைகளே யிலக்கணவாயிலாகவன்றிப் பிறவாறு உணர்தல் சாத்தியமாகாது. இக்கருத்திற்கிசைய வடமொழியிலக்கணமொன்று தமிழில் எழுதலாயிற்று. உலகத்திலுள்ள இலக்கணங்கள் பலவற்றுள்ளும் தலேசிறந்துவிளங்குவதாகக் கணிக்கப்படும் பாணினீயத்தையே துணேக்கொண்டு வடமொழியுணர்ச்சியைச் சம்பாதித்துக்கொள்ள முயலுவோம்.

(தொடரும்)

ஸ்ரீ:

புரூரவசரிதை.

(உஅசு-ஆம் பக்கத்தொடர்ச்சி)

போதுதொய்படலம்.

இன்னதாயவிளவேனிலிறுப்ப
மன்னர்சூடுகழன்மன்னவர்மன்னன்
கன்னல்வேளமர்கடாவுமுனன்னென்
றுன்னுபாசறைதுடர்ந்திடலுற்றான். (1)

கவுண்மதப்புகர்முகச்சிறுகட்கா
ரிவுளிசுற்றவயில்வீரரிரைப்பத்
திவண்மணிச்சுடர்செறிந்துதயத்திற்
றவனனைப்பொருவுதேர்புடைசார. (2)

மன்றநாறுகுழல்வல்லிமருங்குற்
குன்றமாமுலைகுழைக்குழையூடு
சென்றுலாவியெதிர்செஞ்சிலைவேளை
வென்றவேலுடையவெள்ளமெருங்க. (3)

ஆசையாவையுமளந்தபுகழ்ச்சீர்
நேசமாதுபுயவீள்வரைமீதி
னேசிலாநடமியற்றுதல்போல
வீசுசாமரைவிரிந்துவிளங்க. (4)

சந்திரன்புவிதழைப்பவளித்த
மைந்தன்மைந்தனல்வழித்துணையாகிச்
சிந்தைகூரவயல்சென்றெனவெம்மை
யுந்துதண்கவிகையும்பாளப்ப. (5)

அயில்படைத்தவிழியங்கையொடொன்றக்
குயில்படைத்தமொழியின்னிசைகூட்ட
வுயிர்படைத்ததனியோவியமன்னர்
மயினடித்தெனமருங்கினடிப்ப. (6)

வெள்ளிவால்வளையின்மெல்லியலன்ன
ரள்ளிவானமுதருத்துவதென்ன
வுள்ளிவீணையினரம்பினுருத்த
தெள்ளுதேனிசைசெவிப்புலனுங்க. (7)

நாத்தழைக்கவிகணவலர்நல்க
வேத்தெடுப்பவிசைவந்திகென்போர்
வேத்தவைக்குழுமிடைந்திடமென்பூப்
பூத்தலர்ந்ததொருசோலைபுகுந்தான். (8)

வேறு.

பூவையுங்கிள்ளையும்புகழ்ந்துபோற்றின
மாவினங்குயில்கள்கட்டியம்வழங்கின
மேவுறுஞ்சிறையளியிசைமிழற்றின
கோவிளங்களிறனுன்குறுகநோக்கியே. (9)

புன்னையும்வகுளமும்போதுதூவின
கன்னிகாரஞ்சுடர்கவினவேந்தின
தன்னுகேதகைபெருஞ்சோறுதாங்கின
மன்னவனெய்தினனெனுமகிழ்ச்சியால். (10)

புத்தமுதட்பொதிவருக்கைபூங்கனி
மத்தகக்களிறனுன்வரவுந்தூவுவ
வித்தகைபின்னவர்க்கீதல்வேண்டுமென்
றுத்தமக்குணத்தவருதவுந்தன்மைபோல். (11)

இலவினிற்சிறந்தளிறந்தகாய்முதிர்ந்
தலர்தொறும்பஞ்சியாயுடைந்துபாறுவ
நலனுடையோர்வயினல்குரவிதிப்
புலையர்தம்வாட்கையேபோலும்போலுமால். (12)

கலகலவெனச்சிலகாய்கலிப்புற
விலதுளுழலினேந்துபூந்தணர்
குலவுபெண்குருகிரைகொணரப்பார்ப்பின
மலகுவாய்விரித்துநின்றரற்றல்போலுமே. (13)

கிளைகுலம்வண்டினங்கெழுமியார்ப்புறத்
தளிகுலாங்கதம்பமொண்மலர்கடாங்குவ
களைகணுமொருவனைக்கண்டுகண்டுளம்
புளகமாய்மெய்ம்மயிர்பொடித்தல்போலுமே. (14)

அந்தரமீதுயர்ந்தகன்றசிற்றிலைச்
சிந்துவின்கூன்கனிசெறிந்துதூங்குவ
மைந்தரேமுதலிபவாழ்வின்வைகினுஞ்
சிந்தைவேறுற்றவர்செய்கைபோலுமே. (15)

கூந்தலங்கமுகினங்குலையின்மீதுசெம்
மாந்தளிர்தோய்ந்துநின்றசைதல்வள்ளுயிர்ச்
சேந்தகையொருத்தியோர்திருவன்னுள்செழும்
பூந்தணர்க்குழல்சுகிர்விடுத்தல்போலுமால். (16)

இன்னனசோலையின்வளமைநோக்கியே
மன்னவன்மகிழ்தலுமற்றைமாந்தருங்
கன்னியர்குழாங்களுங்கமழும்பூந்துணர்ப்
பொன்னவிர்தாதுகுபோதுகொய்தனர். (17)

படியினுநீரினும்படர்ந்தசுற்றுபூங்
கொடியினுமுயரியமரத்தின்கோட்டினுங்
கடிமலர்யாவையுங்காமுற்றாரோ
துடியிடைமடந்தையர்வண்டின்றோற்றம்போல். (18)

பாசிலைச்சண்பகமலரைப்பற்றித்தன்
ஞசியினுயிர்ப்பினுன்மோப்பநாசியின்
வாசமும்வடிவமுமொத்தவாற்றினு
லாசையுற்றனண்மிகவொருத்தியாங்கரோ. (19)

அரசிளங்குமரனுங்கொருவனன்பினுன்
மரைமலர்முகிழினையொருத்திமார்புற
வுருவினைமறைத்துநின்றுந்தச்சிந்தையிற்
கருதினன்மதன்கணைச்செயலைக்காட்டவே. (20)

மங்கையர்குழாத்தொருமைந்தன்சந்தனக்
கொங்கைகணைக்கினன்கொங்கைகாளென
தங்கையிற்குழைபடவண்மினென்னவுஞ்
செங்கடைக்கண்ணொருமயிற்குச்சேந்ததே. (21)

முருகவிழ்குழலினுளொருத்திமுண்டக
விருமலரிருகரத்தேந்தியெய்தவாங்
கொருமகணியுருவுருவமிக்கவாங்
கிருமகளாமெனச்செங்கைகூப்பினுன். (22)

பங்கயஞ்சூதநீளசோகமுல்லைபண்
டங்கிசையளிமுரனீலந்தாங்கிய
செங்கையனெருவனேத்திருவன்ஞசொழி
லங்கசன்றனுவிலனென்னவையுற்றார். (23)

வீழிவாய்க்கிளியன்ஞளொருத்திமென்றுணர்த்
தாழ்மலர்க்கொம்பினேத்தடக்கைபற்றினு
ளேழைநீயென்ஞடும்போதுகென்றுதன்
றோழிதோள்பற்றியதோற்றம்போலுமே. (24)

ஒசிந்தபூங்கொம்பினையொருவன்றீண்டலு
மசைந்தசைந்தவன்முகத்தடித்துநீங்குவ
வசஞ்செயுமடந்தையர்வஞ்சநெஞ்சகங்
கசிந்திடமுத்தமீந்தவருங்காட்சிபோல். (25)

கோதைவேலொருவனங்கொருத்திகொங்கையு
மாதுளங்கனியையுமலர்க்கைபற்றினு
னேதுகொலெழினலமெனவினுதலும்
போதரிக்கண்ணினுள்பொருமிவிம்மினுள். (26)

இன்பமுந்துன்பமுமிகந்தவுள்ளத்தார்
மன்பதைநோக்கினுர்நோக்கின்வாட்சுணுள்
பொன்பொதிமுலைத்தலைம்கிழின்போதுசேர்த்
தன்பினுனெருவனீதழுகிற்றென்றனன். (27)

தாங்கரும்பொறைவருந்தருணமாயதென்
றேங்குமிடையினுளொருத்தியேமுறப்
பாங்கனங்கொருவனன்பாருமச்சிறு
கோங்கரும்பெனவவள்கொங்கைநோக்கினுன். (28)

புல்லிநீங்காதபுண்டரிகப்பூந்தெனுஞ்
சொல்லிநீங்காமுலையொருத்திதூண்பொரு
வல்லிநீங்கியகளிறெனுமோர்மைந்தன்மேற்
கல்லிநீங்காதகட்காவிவீசினுள். (29)

வடமெலாம்புனைகெனவருமுலைக்குமார்
பிடமெலாங்கொடுத்தவண்முகத்தையேய்ந்திட
விடமெலாங்கொண்டவேம்பிளிருந்தாமரை
தடமெலாந்தடிஞுனுநைபைந்தாரினுன். (30)

பிணையமைத்தன்னகட்பெருங்கைக்குஞ்சரத்
துணைமருப்பெனுமுலைச்சுமைதாங்கலா
னினைருகுத்தியமலரிருகைதாங்கினு
ஞுணர்வுறுங்கருத்தவரேற்பதொப்பவே ?. (31)

நைவளமொழியினுணனிவனப்பினுள்
பொய்வளரிடையினுள்பூவின்மெல்லியாள்
மெய்வளங்கொடியனுனெருவன்வேறிலாச்
செய்வளந்தாமரைச்செம்மல்தாங்கியே.? (32)

விண்டுறைமலர்பலகொய்துமீட்டுப்யாழ்ப்
பண்டுறைச்சொல்லியர்பற்றலாருயிர்
கொண்டுறைகிடந்தவாட்குமார்யாவரும்
வண்டுறைதடந்தொறுமருவியாடினுர். (33)

போதுகொய்படலமுற்றும்.

(தொடரும்)

உதவிப்பத்திராதிபர்.

பெரியபுராணச்
செய்யுட்டொகையாராய்ச்சி.

"செந்தமிழ்"ப் பதினேழாந்தொகுதியின் நடசநி-வது பக்கம் முதல் நடுநடு-வது பக்கம் வரையில், திருத்தொண்டர்புராணமென்னும் பெரிய புராணத்தையாராய்ந்து, அதன்கண், தெய்வப்புலமைச் சேக்கிழாராற் பாடப்பட்ட செய்யுட்கள் 4253 இருக்கவேண்டியதிருக்க, திருமயிலைச் சுப்பராயஞானியார் அச்சுப்பிரதியில் 4299 செய்யுள்களும், இராமலிங்கம் பிள்ளை அச்சுப்பிரதியில் 4306 செய்யுள்களும், சென்னை பக்தஜன சபைப்பதிப்பிலும் நாவலர்பதிப்பிலும் 4286 செய்யுள்களும் இருக்கின்றனவென்றும், காண்டம் ஒன்றுக்கு இரண்டாயிரத்து நூற்றிருபத்தாறு செய்யுள்களும், சிகைச்செய்யுள் ஒன்றும் ஆக இரண்டுகாண்டத்துக்கும் 4253 செய்யுட்களே இருக்கவேண்டுமென்றும், அவற்றுள், முதற் காண்டத்துள் இருக்கவேண்டிய 2126 செய்யுள்கள் இவை யெனவும் காட்டினும்.

இதுபொழுது, இரண்டாங்காண்டத்துள் இருக்கவேண்டிய 2126 செய்யுள்களுக்கு உள்ளசெய்யுட்களைத்துணியென முதற்கண் குறிப்பாம்.

சிதம்பரம் ராமலிங்கம்பிள்ளையவர்கள் பதிப்புப்படி,

		பாடற்றொகை.
1.	திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்புராணம் • முன் காண்டத்திற்சேர்ந்த செய்யுள் 215-ம் சிகைச்செய்யுள் ஒன்றும் போகப் பாக்கி	1041
2.	வாயிலார்நாயனார்புராணம்	410
3.	திருமூலநாயனார்புராணம்	28
4.	தண்டியடிகணாயனார்புராணம்	36
5.	மூர்க்கநாயனார்புராணம்	12
6.	சோமாசிமாறநாயனார்புராணம்	54

7.	சாக்கியநாயனார்புராணம்	18
8.	சிறப்புலிநாயனார்புராணம்	6
9.	சிறுத்தொண்டநாயனார்புராணம்	88
10.	சேரமான்பெருமாணாயனார் (கழறிற்றறிவார்) புராணம்	174
11.	கணநாதநாயனார்புராணம்	7
12.	கூற்றுவநாயனார்புராணம்	8+1
13.	பொய்யடிமையில்லாதபுலவர்	3
14.	புகழ்ச்சோழநாயனார்	41
15.	நரசிங்கமுனையரையர்	9
16.	அதிபத்தநாயனார்	20
17.	கலிக்கம்புநாயனார்	10
18.	கலியநாயனார்	16
19.	சத்திநாயனார்	7
20.	ஐயடிகள்காடவர்கோன்	9
21.	கணம்புல்லநாயனார்	9
22.	காரிநாயனார்	5
23.	நெடுமாறநாயனார்	10
24.	வாயிலார்நாயனார்	10
25.	முனையடுவார்நாயனார்	6+1
26.	கழற்சிங்கநாயனார்	13
27.	இடங்கழிநாயனார்	11
28.	செருத்துணைநாயனார்	7
29.	புகழ்த்துணைநாயனார்	7
30.	கோட்புலிநாயனார்	12+1
31.	பத்தராய்ப்பணிவார்	8
32.	பரமனையேபாடுவார்	2
33.	சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்	1

34.	திருவாரூர்ப்பிறந்தார்	2
35.	முப்போதுந்திருமேனிதீண்டுவார்	3
36.	முழுநீறுபூசியமுனிவர்	6
37.	அப்பாலுமடிச்சார்ந்தார்	1+1
38.	பூசலார்நாயனார்	18
39.	மங்கையர்க்கரசியார்	3
40.	நேசநாயனார்	5
41.	கோச்செங்கட்சோழநாயனார்	18
42.	திருநீலகண்டயாழ்ப்பாணர்	12
43.	சடையநாயனார்	1
44.	இசைஞானியார்	1
45.	வெள்ளானைச்சருக்கம்	53
	மூக	2162+5

இனி, ஒவ்வொரு சருக்கத்தினீற்றிலும் பாடப்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளது துதியான ஐந்து பாக்களையும் நீக்க இரண்டாங்காண்டத்துள், இரண்டாயிரத்து நூற்றறுபத்திரண்டுசெய்யுள்கள் காணப்படும். இதில் இக்காண்டத்திற் பாருபாட்டின்படி இருக்கவேண்டியசெய்யுள் 2126 போக அதிகமாக 36 செய்யுள்கள் காணப்படுகின்றன. ஆகவே முப்பத்தாறுசெய்யுள்கள் இவ்விரண்டாங்காண்டத்தில் இடைச்செருகலாய் ஏறியிருக்கின்றனவென்று ஏற்படுகிறது. இந்த முப்பத்தாறு இடைச்செருகற்செய்புட்களும் இவையென்று கண்டறியவேண்டியது நமது கடமையாகும். இனி நம் கடமையை மேற்கொண்டு நமக்குத் தெரிந்தவரை ஆராய்வாம்.

I. திருமயிலைச் சுப்பராயஞானியார் அச்சுப்பிரதியில் ஏயர்கோன் கலிக்காமநாயனார்புராணத்தில்,

"மாலு மயனு முணர்வரியார் மகிழும் பதிகள் பலவணங்கி
ஞால நிகழ்கோட் புலியார்தந் நாட்டி யத்தான் குடிநண்ணா

சேலும் வகையா லல்ங்கரித்தங் கவரு மெதிர்கொண் டினிதிறைஞ்சிக்
கோல மணிமா ளிகையின்க ணூர்வம் பெருகக் கொடுபுக்கார்." (33)

"தூய மணிப்பொற் றவிசிலெழுந் தருளி யிருக்கத் தூரோற்
சேய மலர்ச்சே வடிவிளக்கித் தெளித்துக் கொண்ட செழும்புனலான்
மேய சுடர்மா ளிகையெங்கும் விளக்க வீசி யுளங்களிப்ப
ஏய சிறப்பி லர்ச்சனைக ளெல்லா மியல்பின் முறைபுரிவார்." (34)

என்று காணப்படுகிறது. சிதம்பரம் இராமலிங்கம்பிள்ளை அச்சுப்பிரதியில் இவ் விரண்டுபாக்களுக்கு மிடையில்,

"ஆண்ட நம்பி யுடன்வந்த வன்ப ரோடும் புறத்தணைந்து
நீண்ட மதிட்கோ புரங்கடந்து நிறைமா ளிகைவீ திபிற்போந்து
பூண்ட காதன் மிகுதியினற் பூணமங் கலதூ ரியமொலிப்ப
வீண்டு புகழ்க்கோட் புலியார்மா ளிகையை யெய்தி யுள்ளணைந்தார்"

என்ற செய்புளொன்று காணப்படுகிறது. இச்செய்யுளை அச்சிட்ட பிள்ளையவர்கள், "ஞானியாரச்சிட்ட பெரியபுராண வயர்கோன் கலிக்காம நாயனர்புராணத்தில் 33-வது பாட்டின்கீழ் 'ஆண்டநம்பியுடன்வந்த' என்கிறபாட்டு விட்டிருக்கிறபடியால் அதை இப்புராணத்திற் சேர்த்திருக்கிறே"மென்று எழுதியுள்ளார்கள். இப்பாட்டு அவ்விடமிருத்தல் நியமந்தானு என்று ஆராயப்புகின், கோட்புலியார்தம்நாட்டியத்தான் குடிநண்ண அவரும் (கோட்புலியாரும்) எதிம்வகையா னலங்கரித்து, எதிர்கொண்டு, இறைஞ்சிக் கோலமணிமாளிகையின்கண் ஆர்வம்பெருகக் கொடுபுக்காரன்றே? கொடுபுக்கவர் சுந்தரரைத் தூயமணிப்பொற்றவிசில் எழுந்தருளியிருக்கச்செய்து தூரோற் சேயமலர்ச்சேவடி விளக்கிப் பண்பின் மற்றவை செய்தார் என்பது சேக்கிழார்சுவாமிகள் கருத்தாகும். 'ஆண்டநம்பி' என்றபாட்டையும் உடன்கொண்டு பொருள்கொள்ளப் புகுங்கால், செம்பொருள் ஓழுகிசையினின்றும் வழுவுதல் காண்க. அன்றியும், மாதுமையம்மைமுணர்வரியார் பதிகள் பல வணங்கிய நாவலூர் நாட்டியத்தான்குடி நண்ணக் கோட்புலியார் கொடுபுக்கார் என்று கூறியபின்னர்க் கொடுபுக்கவர் செய்தியைக்கூறுதல் மையுமேயொழிய அதனைவிட்டு நம்பியாரூரர்செய்தியை அவ்விடத்து இடைமடித்தல் வேண்டாததொன்றும். மேலும், இச்செய்யுளின்பொருளையும் போக்கையும் கவனிக்கும்

போது இது முன்பின்செய்யுள்களோடு பொருந்துமாறில்லாதிருப்பதுங் காண்க. இன்னும் 33வது செய்யுளிற் கொடுப்புக்கார் என்று முடிந் திருக்க இவ்விடைமடித்த செய்யுளில் நம்பியாரூரர் கோட்புலியார்மாளி கை யெய்தினர் எனக் காணப்படுகிறது. இதில் எய்தினர் என்னும் வினை நம்பியாரூரர் தாமே கோட்புலியார்மனைக்கு வலியச்சென்றாரென் பதைக் குறிக்கும். ஒருவரான் அழைக்கப்பட்டுச் சென்றவர் வலியச் செல்லக் காரணமில்லை. ஆகையால் இது இடைச்செருகலென்றே கொள்ளவேண்டும். இவ்வொருபாட்டையும் நீக்க மிகுதியாவது 35 செய்யுட்களே.

II. திருஞானசம்பந்தசுவாமிகள்புராணத்திலே சுவாமிகள் புரட்டுச்சமணரை வாதில் வெல்லுங்கால், திருவேட்டிலே திருப்பாசுரத் தைப் பலருமுணர்ந்துய்யப் பகர்ந்தவரைந்து யாற்றில் திருக்கையால் நீட்டியிட்டார் என்றுகூறிய 821 ஆம் செய்யுளுக்குப்பின், கதை தொடர் பாயிருக்கவேண்டுமாயின் இட்டவேடு எடுபடவேண்டியதேயன்றி நடுவில் வேறுசெய்தியொன்று மிருக்கக் காரணமில்லை. அப்படியில்லாமல் இப் பொழுது புராணங்களிலே 821-ஆம் செய்யுளுக்குப்பின் ஏட்டிலெழுதி யிட்ட திருப்பாசுரத்திற்குப் பொருள்கூறுவதாகக்கொண்டு "அந்தணர் தேவரானினங்கள் வாழ்க" என்பது முதல், "நெறியே சிறிது யானறி நீர்மை கும்பிட்டேனன்பால்" என்பதுவரை (822—845) 24 செய்யுள் களைக் கணக்கிட்டுக் கதைத்தொடர்ச்சியினைக்கெடுத்து வேறுவிடயங் கூறப்புகுத்தி மீறுபடியும் "திருவுடைப்பிள்ளையார்தந் திருக்கையாலிட்ட வேடு" என்று தொடர்ந்தவிடயம்-ஆரம்பிக்கப்படுகிறது. இதனாலே இவ் விடைமடிக்கப்பட்ட செய்யுள்களையும் சேர்த்து எண்ணிவொண்ணுதென் பது விளங்கும். ஆகவே அது சம்பந்தமான இருபத்துநான்குசெய் யுள்களும் கணக்கிலிருந்து நீக்கப்படல்வேண்டும். இவ்விருபத்து நான்குசெய்யுளுங் குறையுமாயின், பதினொருசெய்யுள்களே அதிகமாகக் காணப்படும். இந்தப் பதினொருசெய்யுள்களும் இவைகளாகத்தானிருக்க வேண்டுமென அவைகட்குற்ற காரணங்களோடு கீழை குறிக்கப்பட்டுள் ளன. அறிஞர் ஏற்றபெற்றி கொள்வார்களாக.

III. இன்னும், திருஞானசம்பந்தசுவாமிகள்புராணத்தில்,

"பாவுதிருப் பதிகவிசை பாடிநீடும்
பான்கருணைத் திருவருளின் பரிசுபோற்றி
விரவுமலர்க் கண்பனிப்பக் கைகள்கூப்பி
வீழ்ந்தெழுந்து புறம்போந்து வேதவாய்மைச்
சிரபுரத்துப் பிள்ளையார் செல்லும்போது
திருநீல கண்டயாழ்ப் பாணர்பின்னே
வரவவரை வளம்பெருகு மணையிற்போக
வருள்செய்து தந்திருமா ளிகையின்வந்தார்."

என்ற 261-வது செய்யுளுக்குப்பின்,

"மறையவர்க ளடிபோற்றத் தந்தையாரு
மருங்கணைய மாளிகையி லணையும்போதி
னிறைகுடமு மணிவிளக்கு முதலாயுள்ள
நீடுமறைக் குலமகளிர் நெருங்கியேந்த
விறைவர்திரு நீற்றுக்காப் பேந்திமுன்சென்
றீன்றதா யார்சாத்தி யிறைஞ்சியேத்த
முறைமையவர்க் கருள்செய்து மடத்திற்புக்கார்*
முதல்வர்பான் மணிமுத்தின் சிவிகைபெற்றார்."

என்று ஒருசெய்யுள் காணப்படுகிறது. இதற்கடுத்து, "செல்வநெடு மாளிகையி லமர்ந்து நாளுந் திருத்தோணி மிசையாரைச் சென்று தாழ்ந்து,.....தாங்கினர் சுரர்கள்போற்ற" என்ற செய்யுள் காணப்படுகிறது.

திருநீலகண்டயாழ்ப்பாணரை முன்னே அவர்மனைக்குப் போக விட்டுப் பின்னே தமதில்லத்தில்வந்தார் என்று கூறியவர், மேல் வந்தவர் மாளிகையிலமர்ந்து செய்த செயலைக் கூறவேண்டியேயன்றி, இடையே "மறையவர்கள் அடிபோற்ற.....இறைவர் திரு நீற்றுக்காப்பேந்திமுன்சென்றீன்றதாயார் சாத்தி யிறைஞ்சியேத்த முறைமையவர்க்கருள்செய்து மடத்திலே புகுந்தா"ரென்றது மிகைபடக் கூறியதாவதோடு, இல்லதொருவழக்கினையுங் காட்டுகின்றதன்றே?

*"பாவுதிருப்பதிகம்" என்னுமுதற்செய்யுளில் 'திருமாளிகையின்வந்தார்' என்றவர், இச்செய்யுளில் 'மடத்திற்புக்கார்' என்றதும் பொருந்தாததாயிருக்கிறது.

தத்தூபரிவளவன்றன் செங்கோலோச்சுமமைச்சரிற் றலைவரான தெய்வப்புலமைச் சேக்கிழார்சுவாமிகள், செய்யுளையமாத்திரமின்றி ஒழுகிசைச்செப்பலின்பம் பயக்கக்கூடியதாகவே நான்முழுவதும் பாடியிருத்தலை ஊன்றிநோக்குவார்க்கு இவ்விடைச்செருகல் புலனும். அன்றியும், வந்தாரென்று வினைமுடிந்தபிறகு புக்காரென மற்ற ஒரு வினை கொடுத்து முடித்தல் சுவாமிகள் வழக்காகக்காணப்படவில்லை. அடுத்த செய்யுளில் வந்தவர் 'அமர்ந்து' என்று காணப்படுதலே இதற்குச்சான்றும். ஆகையால் இது, இடைச்செருகலென்றே துணியவேண்டியிருக்கிறது.

IV. மேலும், காம்பிலைவென்ற மென்றோளியாரைப் பொற்கிண்ணத்தினின்று அமிழ்தூட்டப்பெற்ற எந்தையாம் திருஞானசம்பந்தப் பெருமான், பூக்கமழும்பிணைசூழ்ந்த புகலியின் மீண்டும்புகுந்து, தேக்கியமறைவெள்ளத்திருத்தோணிவீற்றிருந்தாரை மொழிமாற்று, மாலை மாற்று, வழிமொழி, மடக்கு, சந்தவியமகம், ஏகபாதம், இருக்குக்குறள், எழுகூற்றிருக்கை, ஈரடிவைப்பு, நாலடிமேல்வைப்பு, மேன்மைநடையின் முடுகுமாகம், சக்கரம் ஆதிய விகற்பச்செய்யுட்களாற் செந்தமிழ்மாலை பாடி, யாழ்ப்பெரும்பாணனர்தாமும், மன்னுமிசைவடிவானமதங்க சூளாமணியாரும் அம்மாலைகளைப் பண்ணியவேழிசைபற்றிப் பாடக்கேட்டினிதமர்ந்தருளியிருக்குங்காலத்து, அருந்தமிழ்நாட்டிலுள்ள திங்கட்சடையார்தந் திருப்பதியாவையும் கும்பிடுவான்கருதி,

"..... .....

நீண்டசடை யாரடிக்கீழ்ப் பணிவுற்றுநீ டருள்பெற்றே
யீண்டுபுகழ்த் தாதையார்பின் னெய்திடயாழ்ப் பாணரோடுங்
காண்டகு காழிதொழுது காதலினற் புறம்போந்தார்".

என 281-ஆம் செய்யுளும், இதனுடன் கதைத்தொடர்புடையதாக,

"திருமறைச் சண்பையாளி சிவனர்திருக் கண்ணர்கோயில்
பெருவிருப்பா லிணைந்தேத்திப் பிஞ்ஞகர் கோயில்பிறவு
முருகியவன் பாலிறைஞ்சி யுயர்தமிழ் மாலைகொண்டேத்தி
வருபுனற் பொன்னிவடபாற் குடதிசை நோக்கிவருவார்"

என இருநூற்றெண்பத்தைந்தாஞ் செய்புளும் காணப்படுகின்றன. காழியினின்றும் வெளிப்போந்த சம்பந்தப்பெருமான் திருக்கண்ணூர் கோயில் முதலான தலங்களைத் தரிசித்துக்கொண்டு, பொன்னிநதியான காவிரியின்வடபால் மேற்குநோக்கிச் சென்றுசென்பது இவற்றின் பொருளாம். இவ்வாறு சென்றதிலும் செல்வதிலும் விபப்பாவது வெறுப் பாவது காணப்படுதலில்லை. ஆனால், 'புறம்போந்தார் என முற்றுவினை யாகக்கூறிய 281-ஆம் செய்புளுக்கும் அதனுடன் தொடர்புடையதாக மேலேகாட்டிய 285-ஆம் செய்புளுக்கு மிடையில்,

"அச்திரு மூதூரினுள்ளா ரமர்ந்துடன் போதுவார் போத
மெய்த்தவ ரந்தணர் நீங்கா விடைகொண்டு மீள்வார்கண் மீள
முத்தின் சிவிகைமேற் கொண்டு மொய்யொளித் தாம நிரைத்த
நித்தில வெண்குடை மீது நிறைமதி போல நிழற்ற" (282)

"சின்னந் தனிக்காளந் தாரை சிரபுரத் தாண்டகை வந்தா
ரென்னுக் தகைமை விளங்க வேற்ற திருப்பெயர் சாற்ற
முன்னெம் மருங்கு நிறைந்த முரசுடைப் பல்லிய மார்ப்ப
மன்னுந் திருத்தொண்ட ரானர் வந்தெதிர் கொண்டு வணங்க" (283)

"சங்கநா தங்க ளொலிப்பத் தழங்குபொற் கோடு முழங்க
மங்கல வாழ்த்துரை யெங்கும் மல்க மறைமுன் னியம்பத்
திங்களும் பாம்பு மணிந்தார் திருப்பதி யெங்குமூன் சென்று
பொங்கிய காதலிற் போற்றப் புகலிக் கவுணியர் போந்தார்." (284)

என்று மூன்றுசெய்புள்கள் காணப்படுகின்றன. ஒருமுறை 'போந் தார்' என்று கூறியவர் இரண்டாமுறையும் போந்தாரென்றல் மிகையன் றே? 'ஆண்டகையாரு' மென்றெடுத்த சேக்கிழார்நாயனர் ஒருபடி ஓரிடத்து ஒருவினையை முற்றுக்கியபின் மறுபடி அதேயிடத்து அதே வினையை அதே பொருளில் எடுத்தாண்டமை காண்கிலம். அன்றியும், 'ஆண்டகை' யென்ற ஒருசொல்லே எல்லாப் பெருமைகளையுமுடையதா யிருக்க மீண்டும் 'புகலிக்கவுணியர்' என்று கூறத்துணியார். மேலும், சேக்கிழார் கவுணியர்குலமூதலிலக்கூறுமிடத்தெல்லாம் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தனரேயன்றி இத்துணைப்பெருமையோடு கூறியதாகப்புலப் படவில்லை. ஆகையால் இடையில்வந்த மூன்றுசெய்புள்களும் இடைச்

செருகலாயிருத்தல் கூடுமென நம்பவேண்டியதாயிருக்கிறது. பெரியார் ஆராய்ந்து தம் அபிப்பிராயத்தை வெளியிடுதல் உத்தமமாகும்.

V. திருஞானசம்பந்தப்பெருமான், கருகாவூர், அவளிவணல்லூர் சீர்ப்பரிதிநியமம் முதலிய பதிகளைத் தரிசனஞ்செய்துகொண்டு திருவலஞ்சுழியடைந்து திருவலஞ்சுழியுடையாரைத்தொழுது, "என்ன புண்ணியஞ் செய்தனெஞ்சமே" யென்னும் வினவுந்திருப்பதிகம்பாடிப் பாவிப் பழையாறை யெய்துதற்கு நண்புடைய அடியார்களுடன் நடந்து ஆறைமேற்றளி சென்றெய்தினர் என்ற விருத்தாந்தத்தை அடியில்வரும் 379, 380, 381, 382, 389-ஆம் செய்யுள்கள் விளக்குகின்றன.

"மதிபுனைந்தவர் வலஞ்சுழி மருவுமா தவத்து
முதிருமன்பர்கண் முத்தமிழ் விரகர்த முன்வந்
தெதிர்கொள்போற்றினி லிழிந்தவ ரெதிர்செல மதியைக்
கதிர்செய் வெண்முகிற் குழாம்புடை சூழ்ந்தெனக் கலந்தார்" ()

"கலந்தவன்பர்க டொழுதெழக் கவுணியர் தலைவ
ரலர்ந்தசெங்கம லக்கரங் குவித்துட னணைவார்
வலஞ்சுழிப்பெரு மான்மகிழ் கோயில்வந் தெய்திப்
பொலங்கொள்நீள்சுடர்க் கோபுர மிறைஞ்சியுள் புக்கார்" (380)

"மருவலார்புர முனிந்தவர் திருமுன்றில் வலங்கொண்
டிருகுமன்புட னுச்சிமே லஞ்சலி யினராய்த்
திருவலஞ்சுழி யுடையவர் சேவடித் தலத்திற்
பெருகுமாதர வுடன்பணிந் தெழுந்தனர் பெரியோர்." (381)

"ஞானபோனகர் நம்பர்மூன் றெழுதெழு விருப்பா
லானகாதலி லங்கண ரவர்தமை வினவு
மூனமில்லிசை யுடன்விளங் கியதிருப்பதிகம்
பானலார்மணி கண்டரைப் பாடினர் பாவி" (382)

"கண்டைவரும் பிள்ளோயார் சடாமகுடர் வலஞ்சுழியை
யெண்பெருகத் தொழுதேத்திப் பழையாறை யெய்துதற்கு
நண்புடைய வடியார்க ளுடன்போத நடந்தருளி
விண்பொருசீர் மதிளாறை மேற்றளிசென் றெய்தினர்" (389)

இங்குக் கூறியபடி 382-ஆம் செய்யுளுக்குப்பின், சண்பைவரும் பிள்ளோயார் என்ற முதற்குறிப்புடைய 389-ஆம் செய்யுள் தொடர்புடைய தாயிருக்கவும், இச்செய்தியுடே 383 முதல் 388-ம் செய்யுள்வரை ஆறு செய்யுளால் திருவலஞ்சுழிவந்த பாலருவாயர் முதலவேனிலால் மிக்க துன்புற்றார் என ஒருசெய்தி கூறப்பட்டிருக்கிறது. அது வருமாறு:—

"புலன்கொளின்றமிழ் போற்றினர் புறத்தினி லணைந்தே
யிலங்குநீர்ப்பொன்னி சூழ்திருப் பதியினி லிருந்து
நலக்கொள்காதலி னுதர்தா னுடொறும் பரவி
வலஞ்சுழிப்பெரு மான்றொண்டர் தம்மொடு மகிழ்ந்தார்" (383)

"மகிழ்ந்ததன்றலை வாழுமந் நாளிடை வானிற்
றிகழ்ந்தஞாயிறு தூணைப்புனை சோலையுட் சேர்ந்து
நிகழ்ந்ததன்மையி னிலவுமேழ் கடனீர்மை குன்ற
வெகுண்டுவெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில்" (384)

"தண்புனற்குளிர் கானறுஞ் சந்தனத் தேய்வை
பண்புநீடிய வாசமென் மலர்பொதி பனிநீர்
நண்புடைத்தூண நகைமணி முத்தணி நாளு
முண்பமாதரி யச்சுவை யுலகுளோர் விரும்ப" (385)

"அறன்மலியுங் கான்யாற்றி னீர்நசையா லணையுமான்
பெறலரிய புனலென்று பேய்த்தேரின் பின்றொடரு
முறையுணவு கொள்ளும்புட் டேம்பவய லிரைதேரும்
பறவைசிறை விரித்தொடுங்கப் பனிப்புறத்து வதியுமால்" ()

"நீணிலமா ளிகைமேலு நிலாமுன்றின் மருங்கினிலு
வாணிழனீள் சோலையிலு மலர்வாவிக் கரைமாடும்
பூணிலவு முத்தணிந்த பூங்குழலார் முலைத்தடத்தும்
காணுமகிழ்ச் சியின்மலர்ந்து மாந்தர்கலங் துறைவரால்." (387)

"மயிலொடுங்க வண்டாட மலர்க்கமல முகைவிரியக்
குயிலொடுங்காச் சோலையின்மென் றளிர்கோதிக் கூவியெழுத்
துயிலொடுங்கா வுயிரீனத்துக் 'துயில்பயிலச் சுடர்வானில்
வெயிலொடுங்கா வெம்மைதரும் வேனில்விரி தருநாளில்" (388)

"சண்பைவரு.....ஆறைமேற்றளிசென்றெய்தினர்" (389)

இவ்வாறு வேனிற்காலத்தைவருணிக்க இடமொன்றும் பாட்டிற் காணப்படவில்லையே? இவ்வருணனைக்கு இடந்தந்ததுதானென்னை? தேவாரப்பதிகங்களில் ஏதாவது ஆதாரமுண்டாவென்று ஆராய்ந்தும் ஒன்றும்தோன்றவில்லை*. வருணனையிற்கண்டவாக்கினையுன்றியாராய்ந்து பார்த்து வாக்கின்நயத்தைக்கொண்டு ஊகித்ததியலாமாயினும் இந்நூலிற் றஞ்செய்யுளை இடைமடுத்த வெள்ளியம்பலவாணத்தம்பிரானுரும் வடமொழி தென்மொழிகளில் வல்லராய், முத்திநிச்சயம் என்னும் 17 பாக்களடங்கிய ஒரு சிறு சித்தாந்தநூலுக்குப் பெரும்பேருரைகண்ட புலவராதலால் அவர் இடைமடுத்த பாக்களை யறிந்து வெளியிடுதல் அசாத்தியமான காரியமாகும்.

VI. பூவலர் பொழில்சூழ் சண்பைப்புரவலர் பறிதலையமணரை யோட்டுவான், வெள்ளிமன்றுளாடி அமரு மதுரைமாநகர்சென்று திருமடத்திற்றங்கியபோது அமண்கொடியோர் திருமடத்திற் றீயிட்டதும் அத்தீ பாண்டியனைப்பற்றும்படி எம்பிரான் வெள்ளிமன்றுளாரைவேண்ட அவ்வாறே அத்தீ பாண்டியனைப்பற்றியதும் யாவரும் அறிந்ததே. திருட்டு அமண்குண்டர்செய் மாயத்தால், தென்னவனைப்பற்றிய வெப்பு நோய் தீராமைகண்டு, சுமந்திரனும் மற்றுமுள்ளோரும் அருமறைவாழ் பூம்புகலியண்ணலார்வரின் வெப்புநோய்தீர்தல் திண்ணமென்ற அளவில் வேந்தன் அடிகளை அழைத்துவரக் கட்டளையிட்டனன். பாலருவாயரும் அரசனவைபுகுதுமென வெளிப்போந்து, "சேவுயர்கொடியினர்தந் திருவுள்ளமறிவே" னென்று மடத்தினின்றும்,

".....
மெய்யணி நீற்றுத்தொண்டர் வெள்ளமுந் தாமும்போந்து
கையினை தலையின்மீது குவியக்கண் மலர்ச்சிகாட்டச்
செய்யவார் சடையார்மன்னுந் திருவாலவாயுட் புக்கு." (737)

---

* ஈகூஉ-ம் செய்யுளால் இவ்வேனிற்காலவருணனை இடைச்செருகலன் றென்று தோன்றுகிறது. திருச்சத்திமுற்றத்திலிருந்து நாயனார், திருப்பட்டீச் சுரஞ்செல்லுங்கால் வேனிலால் உண்டாகிய வெப்பத்தைத்தணிக்கும்படி நாயனார்க்குப் பட்டீச்சுரமுடையார் முத்துப்பந்தரளித்தனரென்று கூறியிருக்கின்றனரன்றே? முன்பு வேனிற்காலத்தைப்பற்றிக்கூறிவிட்டால் இங்கு வேனிலால்வரும்வெப்பத்தைத்தணிக்க முத்துப்பந்தரளித்தனரென்பது எங்ஙனம் பொருந்தும். உதவிப்பதிராதிபர்.

"கானிடை யாடுவாரைக் காட்டுமா வுரிமுன்பாடித்
தேனலர் கொன்றையார்தந் திருவுள நோக்கிப்பின்னு
மூனமில் வேதவேள்வி பென்றெடுத் தரையின்மாலை
மானமில் லமணர்தம்மை வாதில்வென் றழிக்கப்பாடி." (379)

"ஆலமே யமுதமாக வுண்டுவா னவர்க்களித்துக்
காலனை மார்க்கண்டற்காய்க் காய்ந்தனை யடியேற்கின்று
ஞாலநின் புகழேயாக வேண்டுநான் மறைகளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவபெரு மானேயென்றூர். (380)

இவற்றில், கதைத்தொடர்பு விடுபடவில்லை. மேலேகாட்டிய 737, 739, 740-ஆம் பாட்டுக்கள் தொடர்புடையனவாயிருந்தும் இடையே 738-வதுசெய்யுளாக,

"நோக்கிட விதியிலாரை நோக்கியான் வாதுசெய்யத்
தீக்கனன் மேனியானே திருவுள மேயென்றெண்ணில்
பாக்கியப் பயனுள்ள பாலரு வாயர் மெய்ம்மை
நோக்கிவண் டமிழ்செய்மாலைப் பதிகந்தா னுவலுற்றூர்." (738)

என்றசெய்யுள் காணப்படுகிறது. இது, பொருளையும் இடத்தையும் நோக்க மிகையென்றே தோன்றுகிறது.

மேலேகாட்டிய III, IV, V, VI, பத்திகளால், மிகையான 11 பாட்டுக்களும் குறிக்கப்பட்டன. இப்பாக்கள் உரியவிடத்தேதான் பதிக்கப்பட்டிருக்கின்றனவென வாதித்தலுங் கூடும். அங்ஙனமாயின் அவற்றின் வன்மைமென்மைகளோத் தெரிவித்துக் கண்டிப்பதோடுநில்லாது வேறு எவ்வெச்செய்யுட்கள் இடைச்செருகலா யிருத்தலியலுமென்பதனை அறிஞர்கள் தெரிவிப்பார்களாக. I, II. பத்திகளிற் குறித்த இரு பத்தைந்துசெய்யுட்களும் கணக்கினின்று நீக்கப்படல் வேண்டுமென்றே கொள்ளவேண்டும்.

இலக்கணவிளக்கபரம்பரை.

திருவாரூர். சோமசுந்தரதேசிகன்.

ஸம்ஸ்க்ருத வ்ருத்தமஞ்ஜரீ.

(யாப்பியல்)

ஸம்ஸ்க்ருத நூல்கள் கத்யம் (prose) எனவும், பத்யம் (poetry) எனவும் இருவகையாயமைந்துள்ளன.

பிங்கள சந்தஸ் சாஸ்த்ரம் ஸம்ஸ்கிருதத்தில் ஆதி யாப்பியல் நூல்.

பத்யம். { I வ்ருத்தம் / II ஜாதி. } இவை, 4 அடிகள் (பாதங்கள்) உள்ளவை.

வ்ருத்தம் என்பது அக்ஷர (அசை) க்கணக்காலமைந்துள்ளது.

மூன்றுவகை வ்ருத்தங்கள்:—

1. ஸமவ்ருத்தம்—4 அடியும் ஒரேமாதிரியாயுள்ளது.

2. அர்த்தஸமவ்ருத்தம்—முதலாவது மூன்றாவது அடிகள் ஒரேமாதிரியாகவும், 2, 4 அடிகள் ஒரேமாதிரியாகவும் அமைந்துள்ளது.

3. விஷமவ்ருத்தம்—நான்கு அடிகளும் வெவ்வேறுயமைந்துள்ளது.

II ஜாதி என்பது மாத்திரைக்கணக்காலமைந்துள்ளது.

(1) குறில்கள் யாவும் ஒருமாத்திரையளவுள்ளவை [க, டி, ஒ]

(2) நெடில்கள் ,, இரண்டுமாத்திரையளவுள்ளவை.

[ஆ கூ சீ டே]

(3) குறிலுக்குப்பின் ஒற்று அல்லது விஸர்க்கம் வருமாயின் அக்குறில் இரண்டுமாத்திரையளவுள்ளதாம்.

[கம், ஐ:]

(4) பாதக்கடைசிக் குறிலும் இரண்டுமாத்திரையளவுள்ளதாம்.

அக்ஷரம் (அசை=syllable)

உயிர், உயிர்மெய் யாவும் ஒரோர் அக்ஷரமாகும்.

ஒற்றுக்குத் தனிமாத்திரையளவாவது அக்ஷரவளவாவது இடையாது.

யதி (caesura)

செய்யுளில் ஒவ்வொருபாதத்தையும் வாசிக்கையில், நடுவே நிறுத்தி வாசிக்கவேண்டிய இடங்கள்.

கணம் என்பது 3 அக்ஷரம்டங்கிய இசை.

ஆதி மத்ய வஸா நேஷு
ய ர தா யாந்தி லாகவம்!
ப ஜ ஸா கௌரவம் யாந்தி
ம நௌ து குரு லாகவம்!!

கணவிவரம்—

கணம்	விவரம்
ய கணம்	ந ஸ ஸ
ர ,,	ஸ ந ஸ
த ,,	ஸ ஸ ந
ப ,,	ஸ ந ந
ஜ ,,	ந ஸ ந
ஸ ,,	ந ந ஸ
ம ,,	ஸ ஸ ஸ
ந ,,	ந ந ந
க (குரு)	ஸ (தனிநெடில்)
ல (லகு)	ந (தனிக்குறில்)

முறையே ய கணம், ர கணம் என்று கூறவேண்டும்.

ந குறிலையும் ஸ நெடிலையும் குறிக்கும்.

ப=ஹ, Bha

க=ம், Ga

ஸமவ்ருத்தப்ரகரணம்.

4. ப்ரதிஷ்டா (=கன்யா)

பாதம் ஒன்றுக்கு 4 அசை

க. ம. (ஸ ஸ ஸ ஸ)

5. ஸுப்ரதிஷ்டா (=பங்க்தி)

அசை 5

ப, க. க (ஸ ன ன ஸ ஸ)

6. காயத்ரீ (அசை 6.)

1. தனுமத்யா=த ய (ஸ ஜ ன ன ஸ ஸ)

2. வித்யுல்லேகா=ம ம (ஸ ஸ ஸ ஸ ஸ ஸ)

[முத்தி நெறி யறியாத(ர்)]

3. ஸுஸ்திவதனு=ந. ய (னனன ன ஸ ஸ)

4. ஸோமராஜீ=ய. ய (ன ஸ ஸ ன ஸ ஸ)

ஷெ யதி 2+4

7. உஷ்ணிக் (7 அசை).

1. குமாரலலிதா=ஜ ஸ க (3+4)

=ன ஸ ன ந ன ஸ ஸ

2. மதலேகா =ம ஸ க (3+4)

=ஸ ஸ ஸ ந ன ஸ ஸ

3. மதுமதீ =ந. ந. க (5+2)

=ந ந ந ந ந ந ஸ

[ஆதிமூலமென்—ரேதும் வேளையில்]

வானவர்களே தானவர்களே!

மானினீதனை எங்கு காணுவேன்.

8. அநுஷ்டுப் (8 அசை).

1. அநுஷ்டுப் (=ஸ்லோகம்).

நாலு அடிகளிலும் 6-ம் அசை நெடில்

,, 5 ,, குறில்

2.4 ,, 7 ,, ,,

1.3 ,, 7 ,, நெடில்

[இது, இதிஹாஸ புராணங்களிலும் மற்ற நூல்களிலும் விசேஷமாயுள்ளது]

2. கஜகதி=ந ப ல க (4+4)
=நநந ஞநந நஞ

3. ப்ரமாணிகா=ஜ ர ல க (4+4)
=நஞந ஞந்ஞ நஞ

4. மாணவகம்=ப த ல க (4+4)
=ஞநந ஞஞந நஞ

5. வித்யுன்மாலா=ம ம க க (4+4)
=ஞஞஞ ஞஞஞ ஞஞ

6. ஸமாநிகா=ர ஜ க ல (4+4)
=ஞனஞ னஞன ஞன

9. ப்ருஹதீ. (9 அசை)

1. புஜகஶஶிப்ருதா=நநம (7+2)
=நநந நநந ஞஞஞ

2. புஜங்கஸங்கதா =ஸ ஜ ர (3+6)
நநஞ நஞந ஞநஞ

3. மணிமத்யம்=ப ம ஸ (5+4)
=ஞநந ஞஞஞ நநஞ

10. பங்க்தி (10 அசை)

1. த்விதகதி=ந ஜ ந க (5+5)
=நநந நஞந நநந ஞ

2. மத்தா=ம ப் ஸ க (4+6)
=ஞஞஞ ஞநந நநஞ ஞ

3. சம்பக்மாலா (ருக்மவதீ)=ப ம ஸ க (5+5)
=ஞநந ஞஞஞ நநஞ ஞ

(தொடருும்)

R. S. நாராயணஸ்வாமி ஐயர் B.A.,B.L.,
மதுரை.

ஸ்ரீ ரவீந்திரநாததாகூர்மஹாகவி தேசபத்திமேலீட்டாற்செய்த

கடவுட்பிரார்த்தனைக்கவி.

மொழிபெயர்ப்பு.

எங்கே இதயம் பயமின்றி இருக்கும், ஈனுல் தலைகவிழா(து);
எங்கே அறிவை இலவசமா யெய்தலாம்;பல் உட்பிரிவால்
எங்கே மாந்தர் சிதருமே இருப்பர்; உள்ளாழ் மெய்யினின்றும்
எங்கே வார்த்தை வெளிப்படும்; சற்றெனினும் இசூப்பே இல்லாதே

எங்கே முழுத்த தேர்ச்சிஉற வெவரும் மேன்மேல் முயன்றிடுவார்;
எங்கே விவகாரிகஞானம் என்னும் தெளிந்த நன்னீரா(று)
எங்கே(டு) இழைக்கும் பழவழக்கம் எனும்பாழ் மணல்வ ஞக்தரத்தே
எங்கே எனினும் வழிதப்பி யிடாதே மேன்மேல் வசவுமம்;

எங்கோ வேநின் அருள்தூண்டி இயக்கும் வழியே சென்றுமனம்
எங்கே யும்வி சாலம்உறும் வண்ணம் செயல்கள் புரிந்திடுவ(து)
எங்கே; இவையெல் லாம்தடைஅற்(று) இயையும் பரமபதம் இருப்ப(து)
எங்கே:அங்கேவிழித்(து)எழுமா(று)எந்தாய் எந்நாட்டினர்க்(கு) அருளே.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

ஐயவினு.

தயைசெய்து, பின்வரும் வினுக்களுக்கு விடையெழுதக் கோருகிறேன்.

1. "மாதர்கள்கற்பின்மிக்கார்கோசலைமனத்தையொத்தார்
வேதியர்வசிட்டனெனத்தார்வேறுளமாந்தரெல்லாம்
சீதையையொத்தாரன்னுடிருவினையொத்தாண்மற்றைச்
சாதுகைமாந்தரெல்லாம்தசரதன்றன்னையொத்தார்."

என்னும் மிவ்விராமாயணப்பாட்டில்,

ஒத்தார் என்ற வினைமுடிபுகளுக்கு வேறுஉக்களெவை?
சாதுகைக்குப் பொருளென்னை?

2. "வதனமைந்தான்குஞ்சியாகாயன்சேய்மூனம்வர்தகம
வதனமைந்தான்குஞ்சிதையாவியமன்றன்வாழ்வுமைமு
வதனமைந்தான்குஞ்சிசூழ்வயற்கோமுத்திமன்னினிய
வதனமைந்தான்குஞ்சிதபாதமேடல்வளத்திருவே."

என்னும்,மீனுட்சிசுந்தரம்பிள்ளையிபற்றிய தூறைசையந்தாதியினுதிப் பாட்டின் பதவுரையையும் எழுதுக.

வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

சி. சிவசங்கர ஐயர்.
பன்றிக்கோடு.

அநுதாபக்குறிப்பு.

இச்சங்கத்தின் அங்கத்தினருள் ஆங்கிலபாஷாவிற்பத்தியும்தமிழ்ப் பாண்டித்யமுமுடையவர்களான சென்னை திரு. த. கனகசுந்தரம்பிள்ளை B.A., அவர்கள் 28—6—22லும், சேலம்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் T. S. நடராஜையரவர்கள் 2—7—22லும் இவ்வுலகவாழ்வைத்துறந்தமை கேட்டு மிகவும் வருந்துகிறோம். இவர்கள், பல ஆண்டுகளாகச் சங்கத்தனித்தமிழ்ப்பரீக்ஷை ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைகளுக்குச் சோதகர்களாகவும் மேற்பார்ப்பவர்களாகவும் இருந்து கைம்மாறுகருதாது சங்கக்காரியங்களை நன்கு நடத்திவந்திருக்கிறார்கள். இவர்களையிழந்து வருந்தும் இவர்கள் குடும்பத்தார்க்கு நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பத்திராதிபர்.

ஸ்ரீமத்-நடராஜையரவர்கள்.*

சேலம் முனிசிபல்கலாசாலையில் தலைமைத்தமிழ்ப்பண்டிதராயிருந்த ஸ்ரீமத் நடராஜஐயரவர்கள் சென்றஜூலைமீ 2வ இம்மண்ணுலகை நீத்தனரென்ற செய்திகேட்டு நம் தமிழுலகம் பெரிதும் துக்கிக்கின்றது. ஐயரவர்கள் திருவேங்கடமலைக்குச் சென்று திரும்பியபின் காலிற்றைத்தகல் காரணமாகக் கொப்புளத்தால், சென்ற ஒருமாதமாக வருந்தினர். தகுந்த வைத்தியம்பார்த்தும் சௌஸ்தமாகாமல் திடீரென்று சென்ற ஜூலைமீ 2வ சிவபிரான்றிருவடிநிழலை யெய்தினர். ஸ்ரீமத் சாமிசரவணப்பிள்ளையவர்களிடத்து ஐயரவர்கள் இளமைமுதல் இயற்றமிழ்பயின்று வல்லுநராகிக் கம்பராமாயணச் சொற்பொழிவாற்றுந் திறத்திலும், மிகுந்ததேர்ச்சிபெற்றுச் சேலம் முனிசிபல்கலாசாலையிற் சென்ற இருபதாண்டுகளாகத் தமிழ்ப்பண்டிதர்வேலைபார்த்துவந்தனர். தெய்வபக்தி, நடுவுநிலைமை, வாய்மை, கருணை யாதிய நல்லொழுக்கங்களில் மிகச்சிறந்து மாணவர்க்குக் கல்வியை ஊக்கமூட்டன் ஊட்டிவந்த இவரை இழக்க

---

* இவர்விஷயமாக அநுதாபக்குறிப்பும் இரங்கற்பாக்களும் பலரிடமிருந்து வந்துள்ளனவேனும் விரிவஞ்சி இவ்வொன்றே வெளியிடப்பட்டது. (ப.ரீ.)

நேர்ந்தது நம் தமிழ்மக்களின் துரதிர்ஷ்டமே. இவரிடத்திற் பயின்ற மாணவர்பலர் F. A. (எப். ஏ.) மெற்றிக்குலேஷன் சங்கத்தமிழ்ப்பரீட்சைகளில் இராஜதானிக்கு முதலாகவும் இரண்டாவதாகவும் தேறியிருக்கின்றனர். தனித்தமிழ்ப்பரீட்சையிலும் சிற்சிலமாணவர் இவரிடம் பயின்று தேர்ந்திருக்கின்றனர். அடிமேணியும் தமதுமாணவனுக ஏற்றுப் பண்டிதபரீட்சையாதியபரீட்சைகளுக்குரிய பாடங்களைப் போதித்து விருத்தியெய்தச் செய்தனர். அன்றியும், சங்கஸ்தாபகரான ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவரவர்கள் பெயரிட்டு மஹாஜனங்களின் பேருதவியால் 600ரூபா பெறுமானமுள்ள இலக்கண இலக்கிய வுரைநடைப்புத்தகங்களடங்கிய ஒருபுத்தகசாலையையமைத்துச் சேலம்கலாசாலைக்கு உதவியுள்ளார். இவரியிழந்த குடும்பத்தார்க்குச் சிவபெருமான் ஆறுதலளிப்பாராக.

இவர் சிவபதமடைந்தமைக்காற்றுதபாடிய இரங்கற்பாக்கள்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேனடுத்த கொன்றையினுன் திருவடிக்கண் அன்பென்றுந் திகழு நின்னே
யானடுத்து நெடுங்காலம் பயின்றதெலாம் சரமகவி யியம்பற் கேயோ
வானடுத்து வருமாரி யெனவேசொற் பொழிவாற்றும் வள்ளால் அன்பு
தானடுத்துக் கலைபயில்நின் மாணவர்தம் துயரெங்ஙன் சாற்று மாறே.

ஒன்னலரும் போற்றிசைக்கு முயர்கல்விப் பெருந்தகையாய்! உவந்து நோக்கி
அன்னையினு மன்புமிக வழைத்தென்னை யருகிருத்தி யமுதம் போலும்
பன்னரிய தமிழ்க்கலைகள் பண்புடனே பகர்ந்தநட ராச மேலோய்
மன்னுபிரி வாற்றுநின் கிளைஞர்மனந் தேறவரன் அருள்க மாதோ.

வெண்பா.

தந்துபி யாண்டதனிற் சோகமீது னத்திங்கள்
அந்தம்போ லுற்றதிதி யட்டமியில்—முந்தும்
அருங்கதிர்நா ளேயெம் நடராச வாசான்
நிருமேனி நீங்குந் தினம்.

இங்ஙனம்,

R. Thimmappa Aiyer.

புத்தகமதிப்புரை.

1. உலகியல்விளக்கம்:— இது, யாழ்ப்பாணத்திற் சுன்னாகத்துள்ள ஸ்ரீராமநாதவித்யாலயத்திற் றமிழ்ப்பண்டிதராயிருந்தவரும் இப்போது மாவிட்டபுரம் ஸென்ட்ரல்காலேஜில் தமிழ்ப்பண்டிதராயிருப்பவருமான ஸ்ரீமத். K. S. நவநீதகிருஷ்ணபாரதியாரவர்களால், பன்னெறிபற்றிப்பாடிய பல அகவற்பாக்களையுடையதொரு தொகைநிலைப் பனுவலாயுள்ளது. இதன் பாக்கள் பலவும் முன்னமே செந்தமிழில் தனிநிலைச்செய்யுட்கோவை என்ற தலைப்பில் வெளிவந்தமையால் அவற்றின் சொற்றொடை நடைகளும் பொருளின்பம் சுவைகளும் பண்டிதர் பலராலும் அறியப்பட்டன. இப்பனுவலுள் அறநெறியியல் என்னும் பகுதிமட்டும், இதுபொழுது, மட்டுநகர்வாசியும் சீமந்தனிபுராணம், விநாயகமான்மியம் முதலிய செய்தவருமான ஸ்ரீமத். ச. பூபாலபிள்ளையவர்களாலெழுதப்பட்டதொரு விளக்கமான விரிவுரையோடு, பௌதிக சாஸ்திர விற்பன்னரான ஸ்ரீமத் மயில்வாகனபண்டிதராற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்நூலுரைகளின்னடைகளை யிடையிடையே படிக்கும் பொழுது தொன்னூலுரைகளினடைகளைத் தொடர்ந்துசெல்லுந்தோற்றமுடைமை புலப்படுகிறது. பாதேசத்துள்ள பண்டிதசிரேட்டர்களுங் கொண்டாடும்படியான பெருமைவாய்ந்த பாரதியாரது தமிழ்ப்புலமை பாராட்டத்தக்கது. 'வேண்டுவோர் மானேஜர், கிளவ் அச்சுக்கூடம், பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

2. சிவஞானசித்தியார் சுபக்கம் மூலமும் உரையும்:—இது, சைவசித்தாந்த சாத்திரங்களுட்சிறந்த சிவஞானசித்தியாருக்குப் பல வுரைகளிலிருந்தும் தெரிந்தவிடயங்களையும், அவற்றில் விளங்காத விடயங்களையும் ஒருங்குவிளக்கவேண்டி யிலங்கைத்தீவகத்துள்ள சிவதேசச் செல்வர்களிற்சிறந்த திருவிளங்கவாசிரியரால் எழுதப்பட்ட தெளிவான வுரையோடு கூடியது. இடையிடையே படித்தமட்டில் நன்றுயெழுதப் பட்டிருப்பதாகவே புலப்படுகிறது, இதன் முதலிரண்டு சஞ்சிகைகள் உரையாசிரியராற் பதிப்பிக்கப்பட்டன. மூன்றுஞ்சஞ்சிகை இலங்கை நியாயவாதி ஸ்ரீமத் பண்டித க. சிதம்பரநாதன் அவர்களால் வேண்டிய இடத்து விரித்தெழுதிப் பதிப்பிக்கப்பட்டது. முதலாவது சஞ்சிகை

விலை 60 சதமும் இரண்டாவது மூன்றாவது சஞ்சிகை விலை தனித்தனி 50 சதமும் உடையன. வேண்டுவோர் பண்டிதர் க. சிதம்பரநாதன், புரோக்டர், S. C. கொழும்பு என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

3. கல்பதரு:—இது, சென்னையிலிருந்து சித்திரசுகிதமாய் வெளிவரும் ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன் ஆசிரியர் ஸ்ரீமத். K. P. சேஷாத்திரி ஐயங்காராவர். இதில், கைத்தொழில், வியாபாரம், விவசாயம், கல்வி, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளைப்பற்றி வியாசங்கள் வெளியிடப்படுமென்று தெரிகிறது. நமக்குக்கிடைத்த இதன் நான்காந்தொகுதியின் முதற்பகுதியிற் பல அரியவிஷயங்கள் விளிவந்துள்ளன. இதன் வருடச்சந்தா உள்நாட்டுக்கு ரூ 3. வெளிநாட்டுக்கு ரூ 4. வேண்டுவோர் K. P. சேஷாத்திரி ஐயங்காரவர்கள், 64 இராம சாமிதெரு, சென்னை என்ற விலாசத்துக்கெழுதிப் பெறலாம்.

4. குமரன்:—இது, தமிழ், தமிழ்நாடு, சமயம், அறிவு, வியாபாரம், தொழில், முதலியவற்றின் வளர்ச்சிகருதி மாதமொருமுறை காரைக்குடியிலிருந்து ஸ்ரீமத் சொ. முருகப்பசெட்டியாரவர்களால் வெளியிடப்பெறும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதன் முதற்றொகுதியின் முதன்மூன்று பகுதிகள் நமக்குக்கிடைத்தன. அவை தக்கவர் பலரால் எழுதப்பட்ட விஷயங்களையுடையனவாயிருக்கின்றன. இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூ 1—8—0. வெளிநாடுகளுக்கு ரூ 2—0—0 மாதிரிப் பிரதியின் விலை ரூ 0—2—6. வேண்டுவோர் ஸ்ரீமத் சொ. மு. முருகப்பசெட்டியாரவர்கள், குமரன்பத்திராதிபர், காரைக்குடி என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

5. பர்மா நாட்டுக்கோட்டையார்சங்கத்தின் பொருளுதவிபெற்றுக் காரைச் சிவனடியார்திருக்கூட்டத்தாரால் வெளியிடப்பட்ட மனிதர் வாய்ப்படும் அகிலஉயிர்ப்பிராணிகளின்மகாநாடு, ஐயனரின்பதிலுத்தரம், மநுநீதிச்சோழன், ஆணிமாண்டவியர், சிபிச்சக்ரவர்த்தி, சுந்தரர் திருநாள் என்னுந் துண்டுப்பிரசுரங்கள் வந்தன. இவை, ஜீவகாருண்யம், தெய்வபக்தி, அடியார்பக்தி, சமயநிலை முதலிய அரிய விஷயங்களை நன்கு புகட்டக்கூடிய இனிய நடையில் எழுதி வெளியிடப்பட்டுள்ளன. வேண்டுவோர் காரைக்குடிச் சிவனடியார்திருக்கூட்டத்தார்க்கு எழுதிப் பெறலாம்.

6. ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் அருளிச்செய்த எதிரொலிகள்:— இது, ஞானபாநுப்பத்நாதிபரும், சச்சிதானந்தசிவம் முதலிய பல புத்தகங்களை யெழுதிவெளியிட்டவரும் ஆகிய ஸ்ரீமத். சுப்பிரமணியசிவம் அவர்களால் எழுதப்பட்டது. சிவாஜியின் சரித்திரத்துள் இடையிடையே சிலவற்றைக்கூறுவது. இதன் விலை அணு 8. வேண்டுவோர் சாது இரத்தினசற்குரு புத்தகசாலை, நெ. 4/34, நயினியப்பநாயக்கன் வீதி, பார்க் டவுன் போஸ்டு, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

7. ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் அருளிச்செய்த தற்கால இந்தியா:- இதுவும் ஸ்ரீ சுப்பிரமணியசிவம் அவர்களால் மொழிபெயர்த்து வெளியிடப்பெற்றது. இதில் இந்தியாவின் முற்கால தற்காலநிலைமைகள் எழுதப்பட்டுள்ளன. வேண்டுவோர் சென்னை சாது இரத்தின சற்குரு புத்தகசாலைக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

8. இராஜாகோபிசந்த்:—இது, திருவூர் மா. ரத்தினசபாபதிமுதலியாரவர்களால் நாடகரூபமாக எழுதப்பட்டது. இதன் விலை அணு 8. வேண்டுவோர் தி. மா. ரத்தினஸபாபதிமுதலியாரவர்கள், மூல்லா ஸாஹிப் தெரு, சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை என்ற விலாசத்துக் கெழுதிப் பெறலாம்.

9. கனகரத்னதீபமணி:—இது புதுவை தொ. மு. ஆ. வே. இரத்தினஸபாபதிமுதலியாரவர்களால் இயற்றப்பட்டது. இதன் விலை அணு 8. வேண்டுவோர் புதுவை அம்பலத்தாடையர் மடத்துவீதி, நெ. 2. பீஸ். சா. நாகரத்தினம்பிள்ளையவர்களுக் கெழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

1922ஆம் ஜூலைமீ 12உ (துந்துபிவரு ஆனிமீ 28உ) காலை 9-30 மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகவஸபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜாஜேஷ்வரசேதுபதி மன்னரவர்கள்–அக்கிராசனாதிபதி.
2. மகா-ரா-ரா-ஸ்ரீ ராவ்பகதூர் P. சுப்பராய ஐயரவர்கள் B.A.,
3. ,, வித்துவான் R. இராகவையங்காரவர்கள்
4. ,, V. S. இராமஸ்வாமிசாஸ்திரியவர்கள் B.A., B.L.,
5. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., M.L.C.,
6. ,, M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A., B.L.,
7. ,, K. ராமையங்காரவர்கள் B.A., B.L.,

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1922ஆம் மார்ச்சுமீ முதல் ஜூன்மீ முடிய உள்ள சங்கம் வரவு செலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய வெள்ளாளபட்டி மகா-ரா-ரா-ஸ்ரீ S. திருஷ்ணசாமி ஐயரவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

III. சங்கக்காரியங்களைச் சௌகரியமாக நடத்திவரத் தவணைக்குத் தவணை வட்டிகொடுத்துரைக்கூடிய ஒரு பொறுப்பான இடத்திற் சங்கம் ரூபா 50011—5—0 யும் வட்டிக்குப் போடவேணுமென்று சங்கநிர்வாகசபையார் அபிப்பிராயப்படுகிறார்கள். மதுரையிலுள்ள Madura-Ramnad Central Co-operative Bank மூன்று மாதத்திற்கொரு தரம் 100 க்கு 6½ வட்டிவீதம் வட்டிகொடுக்கச் சம்மதிக்கும்பக்ஷத்தில் 5ஷ தொகையை 5ஷ பாங்கில் 25 மாதகால அளவுக்கு வட்டிக்குப்போடலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

IV. சங்க வருஷோத்ஸவத்தை நாளதுவருஷம் செப்டம்பர்மீ 23, 24 தேதிகளில் நடத்தவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று.

மதுரை,
12—7—1922

B. இராஜாஜேஷ்வரஸேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

ஸ்ரீ:

கூடற்புராணம்.

இது, மதுரையிற்கோயில்கொண்டெழுந்தருளியுள்ள கூடலழகப்பெருமானது தலமான்மியத்தைக்கூறும் ஒரு வைணவபுராணம். இதனை இயற்றிய ஆசிரியரது ஊர் பெயர் காலம் முதலியவரலாறென்றும் தெரியவில்லை. இவர் பிறமதத்வேஷமில்லாத வைஷ்ணவரென்பதும், சொல்லணி பொருளணி கற்பனை முதலியவைகளமையக் காவியமியற்றும் ஆற்றலுள்ளவரென்பதும் இந்நூலின் முதற்காப்புச்செய்யுளாலும் பிறவற்றாலும் விளங்கும். இந்நூல், எழுநூற்றைம்பத்தேழு செய்யுள்களிற் பதினைந்து படலங்களுடையதாக இயற்றப்பட்டது. இற்றைக்கு நூற்றுமுப்பது வருடங்கட்குமுன் எழுதப்பட்ட இந்நூலின் ஏட்டுச்சுவடியொன்று சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையிலுள்ளது. கன்னபரம்பரையாகவந்த சில வரலாறுகள் இந்நூலில் ஆங்காங்கு வலியுறுத்தப்படுகின்றன. அவற்றுள், ஆழ்வார் (சடகோபர்) "அண்டகோளத்தாரணு" என்னும் முதற் குறிப்புள்ளசெய்யுளாற் சங்கத்தாரை வென்றனரென்பது மொன்று— (கடவுள்வணக்கம் செய்யுள் 13 பார்க்க). இந்நூலின் அருமை பெருமைகளையும், வைஷ்ணவபரமான மதுரைமான்மியத்தையும் அறியவிரும்புவார்க்கு உபயோகமாக்கவும், அச்சில்வராத இந்நூலின் ஏட்டுச்சுவடி பழுதுபடாதுகாக்கவும் கருதி, ஏடெழுதுவோரால் நேர்ந்தபிழைகளைத் திருத்தியும், பொருள்விளங்காத சிலபாடல்களை ஏட்டிலுள்ளவாறேபதித்தும் இந்நூல் இப்பகுதிமுதற் புத்தகவுருவிற் செந்தமிழ்ப்பிரசுரமாய் வெளியிடப்படுகிறது. இந்நூற்பிரதி ஒன்றுமட்டும் இருத்தலாற் சில இடங்களில் உண்மைப்பாடங்கண்டுகொள்ள இயலாதிருக்கிறது. இந்நூற்பிரதிகள் வைத்திருப்போர் கொடுத்துதவுவார்களாயின் உண்மைப்பாடங்கண்டு வெளியிடுதற்கு அநுகூலமாயிருக்கும்.

உதவிப்பத்திராதிபர்.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஅ.] ஆனந்துபி-ஙுல ஆடி-மீ [பகுதி கூ.
Vol. XX. July-August-1922. No. 9.

தமிழ்க்கல்விவளர்ச்சி.

இந்நிலவுலகிலே, " இருவகைப்பொருள்கள்கல்வி யேற்றசெல்வங்க ளாமே" எனக்கூறிய இருவகைப்பொருளுமே இம்மை மறுமை வீடெய்து வதற்குக் காரணமாகும்.

" இருவே றுலகத் தியற்கை திருவேறு — தெள்ளிய ராதலும் வேறு " எனத் திருக்குறளிற்கூறியவாறு உலகத்திலே ஊழினுலாய இயற்கை இரண்டுகூறுபிருக்கின்றன. ஆதலாற் செல்வமுடையராதற்குக் காரணமாகுமுழ் அறிவுடையராதற்குக் காரணமாகாது ; அறிவுடைய ராதற்குக் காரணமாகுமுழ் செல்வமுடையராதற்குக் காரணமாகாது ; என்பதனை யாவரும் நன்குணரவேண்டும்.

" வடிவிலா வையத்து மன்னிய மூன்றி—னடுவண தெய்த விருதலையு மெய்தும் " என நாலடியாரிற்கூறியவாறு பொருளொன்றுனே தருமமும் இன்பமுமாகிய இரண்டு மெய்தலாமெனினும், அப்பொருளை அறிவொன்றுனே நல்வழிப்படுத்தி, அறமும் இன்பமும் எய்தவேண்டு மென்பதுவிளங்க, " அறிவுடைய செல்லா முடைய ரறிவிலா — ரென் றுடைய ரேனு மிலர் " எனத் திருக்குறளிற் கூறியிருக்கின்றுர்.

இன்னும், கல்வியறிவில்லாதவர்க்குப் புண்ணியபாவமும், இம்மை மறுமையும், வீடும் தெரியமாட்டாவென்பது விளங்க,

"இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி யெழுந்தா லன்றிக் கருதரிய பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற் கண்போல் யாரும்

பெருகியல்செல் வமுமறிவும் பெற்றலு நூற்கேள்வி பெறுவார்க் கன்றித்
திருவளர்புண் ணியபாவ மிம்மைமறு மையும்வீடுந் தெரியா வன்றே "

எனத் திருக்குற்றலத்தலபுராணத்திற் கூறியிருக்கின்றார்.

இன்னும், கல்வியறிவில்லாதவர் விலங்கோடொப்பாவரென்பது விளங்க, " விலங்கெரு மக்க ளனைய ரிலங்குநூல்—கற்றாரோ டேனை யவர் " எனத் திருக்குறளிற்கூறியிருக்கின்றார்.

இங்ஙனமே பலவாறுகப் பலநூல்களிலுங்கூறியிருக்கின்றமையாற் கல்வியறிவே சிறந்ததாகும்.

இக்கல்வியறிவாகிய செல்வத்தை யாவராலும் இலேசாகத் தேடிப் பெற்றுக்கொள்ளமுடியாது. நல்லாசிரியரையடைந்து வழிபட்டுப் பற்பல நாளாகப் பற்பலநூல்களினைத் "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க் குக்—கற்றனைத் தூறு மறிவு" எனத் திருக்குறளிற் கூறியவாறு சிறிது சிறிதாகக் கற்றுப் பெற்றுக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது.

இவ்வாறுகற்றுக் கல்வியறிவாகியசெல்வத்தை எல்லாரும் பெற்றுக் கொள்ளமுடியுமோவெனில்,

" கற்றில னுயினுங் கேட்க வஃதொருவற்
கொற்குத்தி னூற்றுங் கூனை "

" செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை "

" எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும் "

" கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி "

" செவியிற் சுவையுணரா வாயுணவின் மாக்க
ளவியினும் வாழினு மென் "

எனத் திருக்குறளினும், " கேள்விமுயல் " எனக் கொன்றைவேந்தனினும் கூறியிருத்தலாற் கற்றுத்தெளிந்தோர்கூறக்கேட்டாயினுந் தெரிந்து புண்ணியபாவமறிந்து நன்னெறியொழுகி நற்கதியடைய வேண்டும்.

இங்ஙனமிருப்பதனால், நூல்களைக் கற்கப்புகுவோரும், கல்லாமலிருப்பவரும் கல்லறிவெய்தி நன்னெறிபொழுகி யுய்யுமாறுகருதிக் கற்றவர்க்குற்றுணையாய்ச் சற்குணசீலபோதாயிருந்த பாண்டித்துரைத்தேவரவர்கள், மதுரையிலே தமிழ்ச்சங்கந் தாபித்துக் கலாசாலைவைத்து, வருடந்தோறும் பலதேசவித்துவான்களை வரவழைத்து நன்னெறிகளையும் நீதிகளையும் பிரசங்கஞ்செய்யும்படி செய்துவந்தார்கள். தாங்களும் பலவூரிலும் பிரசங்கஞ்செய்துவந்தார்கள். இவர்கள் நடத்திவந்ததுகண்டுதான் பலவூர்களினுங் கலாசாலைகளும் பிரசங்கங்களும் நடத்திவருகிறார்கள்.

இவ்வித்தியாதருமமன்றே பேரறிவும் பெருஞ்செல்வமு மூள்ளவர்கள்செய்புஞ் சிறந்ததருமமாகும். இப்பொழுது நம் தமிழாசிரியாமணியாகிய முத்துராமலிங்கசேதுபதியவர்கள் மேற்கூறியவற்றை நடத்திவருகிறார்கள்.

இதனைக் கண்டறிந்த நகரத்தாராகிய வணிகர்கள், சிலவூர்களின் மாத்திரங் கலாசாலைவைத்துக் கற்போர் கற்கும்படிசெய்து, கேட்டறிவோர் கேட்டறியுமாறு வருடந்தோறும் பலவித்வான்களைவரவழைத்துப் பிரசங்கமும் நடத்திவருகிறார்கள். இன்னமும் அநேகர்கள் கவனிக்கவில்லை. அவ்வாறு நகரத்தார்கள் தங்களுடைய பலவூரிலும் நடத்துவார்களாயின் அவர்கள் பெற்றிருக்கிற பெருஞ்செல்வத்திற்கு மேலாகிய பெரும் புண்ணியமாகும்.

இவ்விருவகையினரும் நடத்திவருகிற இவ்வித்தியாதானப் பெருந்தருமம் வளர்ந்துபரவுவது தெரிந்திருந்தும், சைவமடாதிபதிகளும், சைவத்திருவாளராகிய ஜமீன்தார்களும், பெரியபிரபுக்களெனப்பெயர் பெற்றபெருஞ்செல்வர்களும் தங்களூரிலாவது இவ்வித்தியாதருமத்தை நன்குநடத்திவருங்கடமையுற்றிருந்தும் அந்தோ! ஏனோ பாமுகமாயிருக்கின்றார்கள்.

பண்டைக்காலந்தொடங்கி அன்னதானத்துக்கும் வித்தியாதானத்துக்கும் ஏற்படுத்தப்பட்டு நடத்திவந்த சைவமடாதிபதிகள் பெரும் பொருளைப் பலவிதமான வீண்செலவுசெய்து தொலைக்கின்றார்கள். வருடந்தோறுஞ் செலவாகிறபொருளிலே நாலிலொருபங்கு அன்னதானத்துடன் வித்தியாதானத்துக்குச் செலவுசெய்தாற் போதுமே. இவ்விருவகைத்தானமுஞ் செவ்வையாக நடைபெறச்செய்யாமல் மிகவும் சிறி

தாகச்செய்து பெரிதாகச்செய்துவருவதுபோற் பாவனைகாட்டுகிறார்கள். இச்சைவமடாதிபதிகள் மந்திரம், கிரியை, பாவனை இம்மூன்றினும் தினமும் பூசைசெய்வார்கள். அப்பூசைக்குரிய பாவனையை இவ்விரு வகைத்தானத்துக்கும் உபயோகப்படுத்துவது தகுதாகுமா? இங்ஙனஞ்செய்கின்ற இவர்கட்கு எங்கும்நிறைந்த பரம்பொருளே யறிவுறுத்த வேண்டுமன்றி யறியுறுத்துவா ரொருவருமில்லை.

இச்சைவமடாதிபதிகள் இவ்வாறுகப் பாமுகஞ்செய்து, இத்தரு மத்தைமேற்கொண்டுநடத்தாமலிருப்பார்களானால், ஏனையஜமீன்தார்களையும், பிரபுக்களாயிருக்கிற பெருஞ்செல்வர்களையுங்குறித்து நாம் பேசும் வகையில்லை.

பெருஞ்செல்வர்களாயிருக்கின்ற அநேகர்கள் லௌகிககாரியங்களிலே யுழைத்து, "உண்டதேயுண்டுமுடித்ததேயுடித்துமுரைத்ததேயரைத்துரைத்துங் — கண்டதேகண்டுங்கேட்டதேகேட்டுங்கழிந்தனகடவுளெல்லாம்" எனச் சோணைசைலமாலையிற் கூறியவாறு காலங்கழித்தால், மக்களடையு முறுதிப்பொருளெனக்கூறும் அறம் பொருளின்பம் வீடாகிய நாற்பெரும்பயனையும் எவ்வாறு கற்றறிந்தெவ்வாறு பெற்றுய்வர். தாங்கள் கற்றறிந்து அவைகளைப் பெறுமுறையாற்பெற்றுய்ய முடியாவிடினும், உலகிலே பற்பலரைக் கற்றறிந்து பெற்றுய்யும்வண்ணஞ்செய்வது தாங்கள் செல்வம் பெற்றதனாற்பெற்ற பெரும்பயனுகுமன்றே? எக்காலத்திலெது குறைவாயிருக்கின்றதோ அதனியக்காலத்திலே நிறைவாகச்செய்வதுலகிற்குப் பேருபகாரமாகும். இக்காலத்திலே நந் தெய்வத்தமிழ்வளர்ச்சி குறைந்திருப்பதறிந்திருந்தும் அறியாதார் போலிருக்கின்றார்கள். அந்தோ! ஈதொருபரிதாபந்தான். "அற்காவியல்பிற்றுச் செல்வ மதுபெற்றால்—அற்குப வாங்கே செயல்" என்னுந் திருக்குறளை யுற்றுநோக்கவேண்டும்.

உலகிலே செல்வப்பொருளை வியாபாரஞ்செய்தும், ஊதியத்திற்குக் கொடுத்தும் வளர்த்தால், அங்ஙனம்வளராமற் கேட்டினையும் பொருந்துமன்றே! கல்விப்பொருளை ஒருவருக்குக் கொடுத்தால் அவர் பலருக்குக் கொடுப்பர்; அப்பலர்களிலே ஒவ்வொருவரும் பற்பலருக்குக் கொடுப்பர். இவ்வாறு வளர்ப்பதன்றே பேரூதியமாகும். இக் கருத்தடங்கும்படியான வொருகவி திருவாவடுதுறையாதீன சற்குருசாமிகளின்றிருமுன் கூறியிருக்கின்றேன். அக்கவி வருமாறு:—

" ஒருவருக்குக் கல்வியெனும் பொருளுதவி லவர்பலர்கட் குதவல் செய்வார்
மருவியவப் பலர்களிலொவ் வொருவரும்பற் பலர்களுக்கு வழங்கு வாரிப்
பெருகுமுறை யறிந்திதனைப் பற்பலர்க்கிங் குதவும்வண்ணம் பிரியங்கொண்டாய்
குருமணியம் பலவாண யாவரிவ்வு தியமுனைப்போற் கொள்வார் தாமே".

இதனை அக்குருசாமி திருவுளங்கொண்டு வித்தியாதானமும் மடத்திலே நடக்கிறதென்பதனை நிலைநாட்டிவந்தது பலரும் தெரிந்திருக்கிறார்கள். இன்னும் பலபடப்பேசுவதிலாவ தென்னை. ஆதலாற் கனதனவான்கள்,

"ஒன்றே செய்யவும் வேண்டு மொன்றும்
நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்
இன்றே செய்யவும் வேண்டு மின்றும்
இன்னே செய்யவும் வேண்டும்"

எனக் கூறியவாறு விரைந்துசெய்வதே அறிவிற்குஞ் செல்வத்திற்கும் பெரும்பயனுகும்.

நல்லறிவுடைய பெருஞ்செல்வர்கள் இங்ஙனங்கூறியவற்றையெல்லாம் உய்த்துணர்ந்து, இவ்வித்தியாதருமத்தைத் தங்களாலியன்றவாறு நடத்துவது பெரும்புண்ணியமாகும். சுபம். சுபம். சுபம்.

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்சைவநூற்பரிசோதகருமான

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

யாப்பருங்கலக்காரிகை யுரைத்திருத்தம்.

சுன்னகம் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்கள், இரண்டாவது பதிப்பிற் பதிப்பிக்குமாறு தமது யாப்பருங்கலக்காரிகையுரையிற் சில திருத்தங்கள் செய்துவைத்திருந்தார்கள். அவற்றைப் படிப்போர்க் குபயோகமாகும்பொருட்டு யாம் இச்செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிப் படுத்துகின்றும்.

உறுப்பியல் உ-ம் செய்யுளுரையில், "குறிலே நெடிலே நெறியேவரினும் நிரைந்து ஒற்றடுப்பினும்" என்பதை, "குறிலே நெடிலே நெறியே வரினும் ஒற்றடுப்பினும்" எனத் திருத்துக.

"குறிலிணையேனைக் குறினெடிலே நெறியேவரினும் நிரைந்து ஒற்றடுப்பினும்" என்பதை, "குறிலிணையேனைக் குறினெடிலே நிரைந்துவரினும் ஒற்றடுப்பினும்" எனத் திருத்துக.

கூ-ம் செய்யுளுரையில், " வழுவாவெழுத்தொன்றின் எதுகை " என்பதோடு இரண்டாம் என்பதைக்கூட்டி, "இரண்டாம் வழுவாவெழுத் தொன்றின் எதுகை" எனத் திருத்துக.

அடிதோறும் என்பதை, மோனைமுதலிய எல்லாவற்றோடுங் கூட்டுக.

கஉ-ம் செய்யுளில், "இடையிட்டதொருஉ" எனப் பாடங்கோடலு மமையும்.

செய்யுளியல்.

சூ-ம் செய்புளுரையில் "அங்கண் விசும்பின்" என்னும் செய்புளை,

"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கள்
மறுவாற்றுஞ் சான்றோர்ஃ தாற்றூர் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்." எனத் திருத்துக.

ஒழிபியல்.

க-ம் செய்புளுரையில், தில்லைவாழ் "இல்லையே" "குன்றையார்" என்பன நெடிலாகக்கொண்டு, மூவசைச் சீராகக்கொள்ளப்படும் என்ப தை, "குன்றையார் என்பது நெடிலாகக்கொண்டு மூவசைச்சீராகக்கொள் ளப்படும்" எனத் திருத்துக.

கூ-ம் செய்யுளுரையில்,

"குர வணங்கிலே மாவொடு சூழ்கரைச்
சர வணம்மிது தானனி போலுமால்
அர வணங்குவி லாண்டகை சான்றவன்
பிரி வுணர்ந்துழி வாரல னென்செய்கோ."

என்னும் செய்யுளை,

"குரவ ணங்கிலே மாவொடு சூழ்கரைச்
சரவ ணம்மிது தானனி போலுமால்
அரவ ணங்குவி லாண்டகை சான்றவன்
பிரிவு ணர்ந்துழி வாரல னென்செய்கோ."

எனத் திருத்துக.

இ வை யு ம் இன்னுஞ்சிலவும் குமாரசுவாமிப் புலவரவர்களால் திருத்தி எழுதப்பட்டிருந்தன. அவற்றை நாம் இங்கே எழுதினும். அறிஞர் நோக்கியுணர்க. பிழைகள் யாவும் மற்றையபதிப்பிற் திருத்தியச்சிடப்படும். தண்டியலங்காரவுரைமுதலியவற்றினும் புலவரவர்களாற் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவை பின் காட்டப்படும்.

சி. கணேசையர்.

க ள ப் ர ர் க ள் .

சென்ற பங்குனிமாதத்துச் செந்தமிழில் ஸ்ரீமான் கே. ஜி. சங்கர ஐயர் அவர்களால் வேள்விக்குடிச் செப்பேடுகள் பதிப்பிக்கப்பட்டதைக் கண்டு அளவற்ற ஆனந்தங்கொண்டேன். ஐயாவர்கள் இதுவரையிற் செய்த ஆராய்ச்சிகளோடு நிற்காமல் இப்போது தமிழ்நாட்டுச்சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுக்கு என்றும் உபயோகப்படக்கூடிய உதவியைச்செய்துள்ளார்கள். அவர்கள் எழுதிய முன்னுரை மிகவும் சிறியதாகஇருந்தாலும் அரியபொருள்களை உடையதாயிருக்கிறது. 207-ம் பக்கத்தில் அவர் இச்செப்பேடுகளிற் கூறப்பட்ட களப்ரரது ஆதிக்கத்தை ஆதாரமாகக் கொண்டு சங்ககாலத்தை நிர்ணயிக்கின்றார். இதையே அவர்கள் மிதித்

ஸொஸைட்டிப்பத்திரிகையில் (Quarterly Journal of the Mythic Society Bangalore Vol. XI. pp. 81–83) விரிவாகக் கூறியிருக்கிறார் கள். அங்குச் சாஸனத்தின் அப்பகுதிக்குப் பொருள்கூறும்போது அருத்தத்தை இடத்திற்குப்பொருந்தும்படி மாற்றிக் கூறுவதாகத் தோன்றுகிறது.

மூலத்தில் 'கூஉஜனென் னுங்கலி அரைசன்' என விருப்பதால் அது ஒருவனையே குறிக்கின்றதெனக்கொள்ளுகிறார். அங்ஙனமாயின், 'அளவரிய சூயிராஜரெ அகலநீக்கி' எனக் கூறியிருப்பது எப்படி ஒருவனுலாகும்? 'சூயிராஜரெ' எனப் பன்மையிலிருப்பதால் அது குறைந்தது இருவரையாவது குறிக்கவேண்டுமெனக் கூறுகிறார்; அப்படி யாயின், 'அளவரிய' என்பது எங்கேசெல்லும்? ஆகவே, அவர் அத்தொட ருக்கு 'அளவரியபாண்டியர்களை அவர்களது கடைகிச்சந்ததியின்மூல மாக' எனப் பொருள் கூறுகிறார். இப்பிரயோகம் நாம் அறியாதது அல்ல. ஆனல், இது கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப்பிறகு, ஒரு சமஸ் தானப்புலவர் தனது அரசரைப்புகழும் ஸமயத்தில்மட்டும் தான் உப யோகப்படுத்தப்பட்டுவந்தது. அன்றி, இங்கோ, பாண்டியனது ஸேவக னொருவன் பாண்டியனைப் புகழும்ஸமயத்தில் அதற்குமாறுகக் களப்ர ருக்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே, சங்கரையாவர் கள் கூறும்பொருளை நாம் ஒத்துக்கொள்ளமுடியாது. 'அளவரிய சூயிராஜரெ' என்பது 'எண்ணிக்கையற்ற பாண்டியரை' எனவே பொருள்படுத்தப்படவேண்டியது. இதை உறுதிப்படுத்த ஆதாரங்கள் இன்னும்உள. நாம் மேலேபோவதற்குமுன் களப்ரர் என்பவர் யாவரெனப் பார்ப்போம்.

வேள்விக்குடிச் செப்பேடுகளைப்பற்றிக் கொடுத்த அறிக்கையில் ஸ்ரீமான் வெங்கையா அவர்கள் 'மூர்த்திநாயனர்புராணத்திற் குறிப்பிக்கப் பட்டிருக்கும் கருநாடரும் களப்ரரும் ஒருவரெனக்கூறினர். (G. O. No. 574–17th July 1908. pp. 62–63) காலஞ்சென்ற கோபிநாதராயரவர் கள் உள்பட யாவரும் இதை ஒத்துக்கொண்டனர். ஸ்ரீமான் ஐயரவர் கள் மட்டும் இதை மறுக்கின்றார்கள். அவர், 'மதுரையைப்பிடித்த களப்ர அரசனே வெருட்டப்பட்டான் என நாம் மேலே காண்பித்தோம். ஆனல், கருநாடஅரசன் வெருட்டப்படாமலே ஸந்ததியில்லாமல் இயற்கையாக இறந்திருக்கின்றன். அன்றி, கருநாடக அரசருக்குப்பின் புட்டமெய்தப்

பாண்டிய அரசர் ஒருவருமில்லாததால், மூர்த்திநாயனர் பட்டமெய்த, களப்பாணுக்குப் பிறகு கடுங்கோன் பட்டமெய்தினன். முடிவாக, களப்பரும் கருநாடரும் ஒரு இடத்திலும் ஒருவராக நினைக்கப்படவில்லை. அதற்குமாறாக, சரித்திரத்திலும் இலக்கியத்திலும் இருவரும் வேறுகவே குறிப்பிடப்படுகிறார்கள்' எனக் கூறுகிறார் (O. J. H. S. Vol. X. pp. 178).

முதலாவதாக, கடுங்கோனே, களப்பரசனை முறிய அடித்துப் பட்டமெய்தினனு இல்லையாவென்பதை நா மறியோம். மூலமோ,

"அளவரிய சூயிராஜரெ அகலரீக்கி அகலிடத்தைக்
கூஉஜு னென்னுங் கலிஅரசன் கைக்கொண்டதனை இறக்கியபின்
படிகடன்முனைத்த பருதிபோல் வாணுயிராஜன் வெளிற்பட்டு" 39-42

எனக் கூறுகிறது. அந்த உவமானத்திலிருந்து களப்பர் அங்கிருந்த பொழுது பாண்டியவமிசமே உலகத்திற்குப் புலப்படாமலிருந்தது என்பது பெறப்படுகிறது. இதிலிருந்து, பெரியபுராணத்திற் கருநாடக அரசன் இறந்ததும் பட்டமெய்தப் பாண்டியவமிசத்தில் ஒருவருமில்லை யெனக் கூறப்பட்டிருப்பதற்கு ஒருவாறு ஸமாதானங் கூறலாம்.

இரண்டாவதாக, "சரித்திரத்திலும் இலக்கியத்திலும் இருவரும் வேறுகவே குறிப்பிடப்படுகிறார்கள்." எனக் கூறுவதற்கு ஆதாரமே கிடையாது. ஒருக்கால், வேள்விக்குடிச்செப்பேடுகள் ஓரிடத்துக் கருநாடரை,

"தென்னவனவன் செம்பியன்சோழன்
மன்னர்மன்னன் மாகருநாடகன்
கொன்னவின்ற கொடுஞ்சுடர்வேற்
கொங்கர்கோமான் கோச்சடையன்" (69–71)

எனக் கூறுவதைக்கண்டு மயங்கியிருக்கலாம். இஃது அங்ஙனமாகாது. உதாரணமாகப் பல்லவர்க்குக் காடவர் என்ற பெயர் உண்டென்பதை நாம் அறிவோம். அதே வேள்விக்குடிச்செப்பேடுகள் பல்லவர்களை ஓரிடத்து,

"செ(மும்புரவிப்) பல்லவனை[க்]குமும்மூட்டைசழிய" (78–79)

எனவும், மற்றோரிடத்து,

"நாற்பெரும் படைவும் பார்படப்பரப்பிக்
கருதாது வந்தெதிர்மலைந்த காடவனைக் காடடைய" (91–92)

எனவும் கூறுகிறது. அன்றி, களப்ரர்களும் கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கூடப் பிரபலமாக இருந்ததாகத்தெரிகிறது. சிறிதுகாலத்திற்கு முன் நான்கண்டுபிடித்த கந்திவர்மன் பல்லவமல்லனது கொற்றங்குடிச் செப்பேடுகளில், *

யஸ்ய வஜ்ர கடோர கொரடா
வாணர்வ ஹொட தட்ட கொமகுணாடயஃ ।
ஆரி வெஶ வஸியாஹி காமகுதிணஃ
ஹெவி தட்ஹிரவகாஶ ரோஹெத ॥

எனக் கூறப்பட்டிருக்கிறது. அன்றி, களுக்கிய விக்கிரமாதித்தன் இரண்டாமவன் தென்னுடுபோந்தபோது இவர்கள் முறிய அடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. (Ep. Ind. Vol. V. p. 204). இங்ஙனம், கோச்சடையனது வெற்றியை மற்றொருவமிசத்திற்கு உரிமையாக்கா மற் களப்ரர்கள்மேல் என எண்ணுவது தவறுகாது.

பெரியபுராணத்தில், கருநாடரைப்பற்றிக் குறிக்கும்பொழுது,

"தானக் கடிசூழ் வடுகக்கரு நாடர்காவல்
மானப் படைமன்னன் வலிந்து நிலங்கொள்வானு
யானைக் குதிரைக் கருவிப்படை வீரர்திண்டோர்ச்
சேனைக் கடலுங் கொடுதென்றிசை நோக்கிவந்தான்."

"வந்தற்ற பெரும்படை மண்புதை யப்பரப்பிச்
சந்தப் பொதியிற் றமிழ்நாடுடை மன்னன்வீரஞ்
சிந்தச் செருவென்றுதன் ஞேண செலுத்துமாற்றற்
கந்தப் பொழில்சூழ் மதுராபுரி காவல்கொண்டான்."

"தாழுஞ் சமண்கையர் தவத்தைமெய் யென்றுசார்ந்து
வீழுங் கொடியோ னதுவன்றியும் வெய்யமுன்னேச்
சூழும் வினையா லரவஞ்சுடர்த் திங்களோடும்
வாழுஞ் சடையா னடியாரையும் வன்மைசெய்வான்."

(மூர்த்தி—புராணம்)

* இச்செப்பேடுகள் அடுத்தபத்திரிகையில் வெளியிடப்படும்.

எனவும், வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணத்தில்,

> "தன்னு சேனையிற் றூளங்கிய வொருகரு நாட
> மன்ன னன்னகா ளவ்தருட் டென்னவ யோட்டிக்
> கன்னி மண்டலங் கொண்டபண் கையர்கை வீழ்த்து
> முன்ன நீடிய வைதிக முறையையு மொழித்தான்"

(மூர்த்திக்கு அரசளித்த திருவிளையாடல்)

எனவும் கூறப்பட்டிருக்கிறது. கி. பி. பத்தாம்நூற்றாண்டிற்கு முன்பு மதுரையும் பாண்டிநாடும் ஒரேஒருதரந்தான் பிறரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. வேறொன்றை நாம் அறியோம். களப்பர்கள் வேள்விக்குடியாகிய தருமசொத்தைநீக்கியசெய்தியைப்போலக் கருநாடர்கள் வைதிகமுறைகையும் சடையானடியாரையும் வன்மைசெய்தசெய்தி மேலேகாட்டிய செய்யுள்களிலிருந்து நன்கு பெறப்படும். இவைகளிலிருந்து களப்பர்களும் கருநாடர்களும் ஒன்று என நினைப்பதே மேல்.

களப்பர்ஆக்கிரமிப்பு ஒருதலைமுறையாக இருந்தால் இழக்கப்பட்ட ஸொத்தைச் சுலபமாகப் பாண்டியன் பட்டமெய்தியஉடனேயே அடைந்திருக்கலாம். இவ்விடத்திலோ அப்படிக் காணப்படவில்லை. ஸொத்தின் பாத்தியதைக்காரர் அதைத் திரும்பிஅடையப் பாண்டியன் மறுபடியும் பட்டமெய்தியபிறகு சுமார் 150 வருஷங்களுக்குமேற் காத்திருக்க வேண்டியிருந்தது. இதுவே பிறர்களது ஆக்கிரமிப்பு நீண்டகாலம் இருந்ததைக் காண்பிக்கிறது. பிறவரசர்களது ஆட்சி ஒருதலைமுறையாக இருந்தால், தருமசொத்துக்கள் திரும்பியடையமுடியாதவண்ணம் பிடுங்கிக்கொள்ளப்பட்டன எனக்கூறுவது பொருந்தாது. நான் முதலிலேயே ஒரு அரசன் பலவரசர்களைப் பட்டத்தினின்றும்நீக்குதல் இயலாதெனக் கூறியிருக்கிறேன். அன்றி, இச்செப்பேடுகளே மற்றேரிடத்து, "வேள்விக்குடி என்னப்பட்டது கேள்வியிற்றரப்பட்டதனைத் தளக்க மில்லாக் கடற்றானையாய் கூடூராலிறக்கப்பட்டது." (110–12) எனப் பன்மையிற் கூறுகிறது. இங்ஙனம் மதுரையைக் களப்பர்கள் ஆண்டது ஒருதலைமுறையல்ல.

சிலர் முதலில் மூலத்தில் என் ஒருமையிற் கூறப்பட்டிருக்கிறது என ஆக்ஷேபிக்கலாம். செப்பேடுகள் களப்பர்கள் தோற்றடிக்கப்பட்டுச் சுமார் 150 வருஷங்களுக்குப்பிறகே எழுதப்பட்டன வென்பதும், செப்பேடுகளுக்குப் பிரசஸ்தி எழுதியபுலவன் அவ்வளவு முந்திய காலத்துக்

சரித்திரத்தை நன்கு அறிந்தவனன்றென்பதும் நாமறிந்தவையே. கி. பி. 1850க்கு முற்பட்டகாலத்தை இப்பொழுதும் நம்பெரியோர்கள் 'கலகக்காரன்காலம்' எனக்கூறுவதுபோல அக்காலத்திற் பாண்டியநாட்டு ஆக்கிரமிப்பைக் 'களப்ரன்காலம்' என வழங்கியிருத்தல் இயற்கையே.

கடுங்கோனே, களப்ரவரசனை முறியடித்துப் பட்டமெய்தினனெனப்படும் கொள்கையை நான் ஸந்தேகிக்கின்றேன் என முன்னமேயே கூறினேன். களப்ரர்கள் முறிய அடிக்கப்பட்டது சுமார் கி. பி. 760–(30×6)=580 ஆகும். அக்காலத்தில், தமிழ்நாட்டில் முக்கியமான அரசர்கள் தொண்டைநாட்டையாண்ட பல்லவர்களே. அச்சமயத்து ஆண்டபல்லவன் முதலாம் மஹேந்திரவர்மனதுமகப்பன் விம்ஹவிஷ்ணு வாகும். இவ்வரசன்தான் தனதுநாட்டைச் சீர்ப்படுத்தித் தெற்கேயுள்ளநாடுகளை ஜயிக்கமுயன்றவன். இவனைப்பற்றி வேலூர்ப்பாளையம் செப்பேடுகள் "கவீரனது புதல்வி (காவிரியாறு) விளங்குகின்றதும், நெற்காட்டை (வயல்களை) ஆபரணங்களாக உடையதும், தென்னந்தோப்புகள் அதிகம் காணப்படுகிறதுமான சோழநாட்டை அவன் சீக்கிரம் பிடித்துக்கொண்டான்" எனவும் (South Indian Inscriptions. Vol. II. p. 512. Verse 31), காசாக்குடிச்செப்பேடுகள், அவன் "மலய, களப்ர, மழவ, சோழ, பாண்டிய அரசர்களையும், தனது புஜபராக்கிரமத்தால் மமதைகொண்ட சிங்கள அரசனையும் கோளர்களையும்" தோற்கடித்தான் எனவும் (S. I. I. Vol. II. p. 356 Verse 20) கூறுகின்றன. இவைகளிலிருந்து, களப்ரர்களது அழிவு விம்ஹவிஷ்ணுவால்தான் என நான் நம்புகிறேன்.

முடிவாக, சங்கம் முடிந்தபிறகு சுமார் கி. பி. 500ல் களப்ரர்கள் தமிழ்நாட்டுப்போந்து பாண்டியர்களைத்தோற்கடித்து மதுரையைப்பிடித்துக்கொண்டார்கள். ஆறும்நூற்றாண்டின்முடிவில் பல்லவ விம்ஹவிஷ்ணு தெற்கே படையெடுத்துவந்து களப்ரர்களை முறிய அடித்தான். ஆனால் அவன் நாட்டைச் சரிப்படுத்துவதற்குள், பாண்டியன் கடுங்கோன் நாட்டைப்பிடித்துக்கொண்டு சூரியன்போற் பிரகாசிக்கத்தொடங்கினன். இதுவே, நாம் தற்காலத்திற் களப்ரரைப்பற்றி அறிவது.

தி. நா. சுப்பிரமணியன்,

கும்பகோணம்.

ஸ்ரீ:

புருரவசரிதை.

(கூஉ0-ஆம் பக்கத்தொடர்ச்சி)

புனல்விளையாட்டுப்படலம்.

தோகையர்வாவியந்துறைக்கணைந்தலு
மாகமாறுமதவயவங்கள்யாவையு
மோகைமாய்ந்தாத்தனமோர்ந்துகொண்மினென்
றேகுவார்போன்றனபிரிந்துள்ளெலாம். (1)

சீதநீர்த்தடத்திடைத்திகழுமாமணிச்
சூதனுமுலையினர்நிழல்கடோன்றுவ
பூதலமங்கையர்பொற்பினற்புதம்
பாதலமங்கையர்பார்ப்பதொக்குமால். (2)

வள்ளோயுங்குமுதமும்வனசநீலமும்
பிள்ளோமானேக்கியர்மெய்யிற்பின்னுவ
கள்ளமாயெமதெழில்கவர்ந்தயாக்கையை
விள்ளுவமெனத்தனிவிசித்தல்போலுமால். (3)

துன்னருந்தடத்திடைநீந்துதோகைதன்
பொன்னருமுலைக்குடம்பேனம்போர்த்தன
முன்னவன்பயோதிகடைந்தமுன்னைநா
ளின்னமுதாடுமெழுங்கலசமேய்க்குமால். (4)

மலர்க்குழலியரொடுமொருவன்வாகுவி
னலப்புறுபுனலெலாங்கலக்கியாடுத
லுலப்பிலாவரம்பைய நுவரியூடெழக்
கலக்கியமந்தரவரையிற்காட்டுமால். (5)

கடகளிறெனுந்திறற்காளைவீரனுக்
கடமுறுபுனலிலோர்தையல்காணவே

குடதிசைமூழ்கினன்குணக்கெழுந்தனன்
சுடரவன்கடல்குளித்துதிக்குந்தோற்றம்போல். (6)

வேளமைவடிவினனெருவன்வீழிவாய்த்
தோளமைகொண்டவடிணைப்பயோதர
வாளமைகண்ணிதாமரையிரண்டொரு
தாளமைவனகொலோவென்னத்தாங்கினன். (7)

குற்றமாகெனுமொழியொருத்திகொங்கைகைப்
பற்றினன்புனலெலாம்பாந்தநீந்தினு
னற்றமில்காமமாங்கடற்கெர்ம்பியைப்
பெற்றவனீந்துதல்பேசவேண்டுமோ. (8)

முரண்டருமனத்தினனெருவன்மொய்ம்பொடு
திரண்டழகொழுகுபொற்புயத்தைத்தெப்பமா
யிரண்டபில்வேற்கண்ணிவந்துநீந்தினுர்
திரண்டெழுதிரைமிசைமுன்னஞ்சென்றன? (9)

புயற்கருங்கூந்தலார்புக்கங்காடலிற்
கயத்துயர்தாமரையசையுங்காட்சிதான்
மயக்குறுகண்ணியர்வடிவநோக்கியே
வியப்புறுவாவிகைவிதிர்த்தல்போலுமே. (10)

தேய்ந்ததூண்மருங்கினர்மூழ்கித்தேமலர்த்
கூந்தனீர்மகிழ்நர்தோள்குளிரவீசுவார்
சாந்தநீள்குவடியர்சயிலமேற்கட
லேய்ந்தமேகக்குழாஞ்சொரிவதென்னவே. (11)

அலர்ந்ததாமரைமுகமரும்புகொங்கைதேன்
கலந்தசேதாம்பல்வாய்காவிகண்கணீர்
வலந்தசைவலங்குழல்வள்ளைகாமாய்ப்
பொலன்குழைமகளிரோடொத்தபூந்தடம். (12)

மைந்தருமகளிரும்வாவியாடுதல்
சிந்துரக்கிளிறனென்றனஞ்சிந்தியாச்

சந்தவாரணிமூலத்தையலாளொடு
மந்தவாவியிற்குடைந்தாடினனோ. (13)

பொற்கொடிதன்னெடும்பொருவில்வேந்தர்கோன்
நற்புனல்படிந்தெழுகின்றநன்னல
மற்புதவுவமையொன்றுழிவாய்வருங்
கற்பகம்வல்லியோடெழுந்தகாட்சிபோல். (14)

இனையபுனல்குடைந்தினிதினுடிய
வனைகழன்மன்னனுமாதுமற்றுள
வனைவருந்துகிலணியணிந்துசந்திரன்
றினகரனுதயமுற்றெனச்சிறந்தனர். (15)

இந்துகாந்தத்தினுலிலங்குமண்டப
மந்தவாவியின்புறத்தாக்கியவ்வயிற்
புந்திகாதலனுமப்புனிதமங்கையுஞ்
சிந்தைகூர்களிப்பொடுசேர்ந்துவைகினர். (16)

புரிகுழன்மங்கையும்புரூரவாவுநீங்
கரியனமகிழ்ச்சியினுங்குவைகலும்
பெருவளம்பெருகியபிரதிட்டானமாந்
திருநகருற்றதைச்செப்புவாமரோ. (17)

புனல்விளையாட்டுப்படலமுற்றும்.

வித்துமாலிநகர்கொண்டபடலம்.

முத்துமாலிகையின்முந்துபுனற்கார்
தொத்துமாலியின்விளங்கியதோளான்
பித்துமாலியுருமென்றபெருஞ்சொல்
வித்துமாலியெனும்வெங்கணரக்கன். (1)

சுடரெறித்தகதிர்சூழ்வடகுன்றம்
வடபுலத்தடையவல்லிருளெல்லாந்
தடையறக்கடிதுசாருதல்போல
விடையமுற்றநகர்மேவினன்மாதோ. (2)

மாகநீள்புரிசைமாகசெங்கும்
வேகவாள்வலியரக்கர்மிடைந்தே
யோகைகூர்தரவுலாவினரூழி
யேகவேலைபுவியெய்துவதென்ன. (3)

மூன்னைநாளுளமுழுப்பகையாலே
யன்னமாகர்வளங்களீனத்துங்
கொன்னயிற்பொருநர்கொள்கெனவேவித்
தன்னதாணைசெலவேதவிசுற்றும். (4)

திறையெடுத்தரசர்சென்றுவணங்கும்
பொறையெடுத்துவளர்புந்திமகன்ற
னிறையெடுத்தமையெமக்கெனவெங்கும்
பறையடித்திடுகவென்றுபணித்தான். (5)

கைதவம்புரிகடுஞ்சொலரக்கன்
வெய்யவெம்பறைவீளம்பிடுமோதை
வையகஞ்செவிமடுப்பவயர்ந்த
நெய்தலின்பறையிதென்னநினைந்தே. (6)

மாபிணனெறிவழாதபெருஞ்சீ
ரூரவுநீர்நகருறைந்தவர்யாருங்
காவுநீணிசிசரன்புகிகாக்க
வரவின்வாயின்வருதேரையினைர். (7)

தாலமேழுமோருதண்கவிகைக்குண்
மாலினுந்தியெனவைத்துவளர்ப்போன்
சீலநனைகரிதீயவர்கொண்டார்
காலமென்றவரையாவர்கடப்பார். (8)

நாமியாவரினுநாயகநம்போ
லாமியாரெனுமகந்தையராகிப்
பூமியாதியபொருட்பயனெல்லாஞ்
சேமியார்கெடுதறிண்ணமதன்றே. (9)

இந்திராதியரிரும்பதியெல்லா
மூன்றைநாளவுணர்கோடலின்மூன்நீர்
நன்றுநீரிலுலகங்கணடுங்கு
மன்றுநாளெனநடுங்கினதவ்வூர். (10)

இற்றதாயகரின்றிறமெல்லாம்
பொற்றபூணினேதரும்புதல்வன்பா
லொற்றரோடினருணர்த்தவுணர்ந்தான்
மற்றிலாதநெறிமன்னவர்மன்னன். (11)

விந்துமாலிநகர்கொண்டபடல முற்றும்.

வனம்புகுபடலம்.

ஆயவாய்மொழியரசன்றன்செவிகளுக்கனல்வாய்க்
காயும்வேலுறத்தைத்தெனநெஞ்சகங்கனன்றுன்
சீயம்வாழ்மலைமன்தரத்திடையினிற்சிறுசெந்
நாயும்வாழவந்தனகொலோவென்றிவைநவின்றான். (1)

மனத்தின்முந்துறும்வாசிவாரணத்தொகைவயவ
ரினக்கொடும்படையாவையுமெழுகவென்றிசைத்தே
சினக்குஞ்வாள்வலியரக்கனேச்சிறந்துமித்திடுவ
னினேப்பின்முன்னெனக்கொடிநெடுந்தேர்மிசைநிவந்தான். (2)

கட்டமைந்தசெஞ்சிலையொடுபுட்டிலுங்கணையுந்
தொட்டகோதையுங்கழலுமெய்க்கவசமுந்தொட்டான்
றட்டிலாநெறிச்சாரதிதணமுகநோக்கி
விட்டிடாயினித்தேரென.....யவள்விரித்தாள். (3)

சதங்கைகொஞ்சுதாட்டையலாடலிவனைத்தாழ்ந்து
கதங்கொளாதிறைகேட்டிவெங்கதழெரிமருங்கே
பதங்கமெய்துறிற்பழுதுறல்யாதெனப்பார்த்திங்
கிதங்கள்செய்வதேமுறைமைமற்றுண்டுரையின்னும். (4)

ஆழிக்குன்றினுக்கப்புறஞ்செல்லுமுன்னணை
யாழிப்பாருலகனைத்துமுன்றோட்கரைப்பார
மூழிக்காலெழும்வடவனற்சிகையினையுணரு
மேழைக்காகநீசேறலன்றின்னமொன்றுளகேள். (5)

அரக்கனெண்ணமென்றெண்ணுவதெண்ணமன்றருத்த
மிரக்கமின்றியன்றுரைத்திடுஞ்சாத்தினியல்புங்
குரைக்கருங்கழன்மன்னவபங்குவங்குறித்த
வரைக்கடித்தநாள்வந்தனவாமெனவகுத்தாள். (6)

இரவிவானவன்விளங்குமிருநிலவரைப்பிற்
பருவம்வேறுவேறியினகாலத்தின்பகுதி
தெரியநாடின்மற்றண்ணதேயெனச்சிந்தைசெய்யா
தொருவர்மேற்குறைசொல்லுவதறிவினுக்குரித்தோ. (7)

நிறைந்தபாசெலாமசுரரேகொண்டிடநிமல
னறைந்தநாள்வரைமவுனியாய்க்கிரிப்புறத்தமர்ந்தா
னுறைந்ததானமுங்காலமும்வாலிதிறனுருங்கே
யறிந்தடங்குதல்வாகையின்வாகையாயமருமம். (8)

கருமமன்னதேயாதலாலிங்ஙகர்கடந்து
புரிசைசூழ்தருமற்றொருநகரியிற்புகுந்து
தருமமேதுணையாமெனச்சரித்திடத்தகுமென்
றரிமதர்க்கணைறைந்திடப்புரோவாவறைவான். (9)

பரந்தவான்படைக்கேசியாமசுரர்கோன்பற்ற
வரந்தையுற்றிடுமுருப்பசிதன்னைமீட்டமரர்
பெருந்தகைப்புரந்தரற்களித்தவன்மணிப்பிடத்
திருந்தபாணினியெளியர்போலாரிடத்திருத்தல். (10)

இன்றுசென்றவல்லரக்கனைக்கோறுதலின்றேற்
பொன்றுகின்றதிவ்விரண்டிலொன்றெனவெழும்போ நின்
வென்றமந்திரத்தலைவர்வந்தடிமிசைவீழ்ந்து
நின்றுகேட்டிடவேண்டுமென்றுருமொழிநேர்வார். (11)

வாலராயினும்விருத்தரேயாயினுமழலைப்
பாலராயினும்பயிற்பிலராயினும்பயிலுங்

கோல்வளைக்கொடியன்னவாயினுங்குறித்து
மேல்வரும்பயன்விளம்புவோர்மந்திரமிக்கோர். (12)

ஆகையாலெழிலம்புயத்திருமகளனைய
தோகைவாய்மொழிதெய்வதமொழியெனத்துணிந்தோர்
பாகமேவியேகிருதர்கோன்வலியெலாம்பார்த்திங்
கேகவேண்டுமென்றுரைத்தனர்மன்னனுமிசைந்தான். (13)

சூரவரந்தணர்மந்திரத்தலைமையர்குலத்தோர்
பரவுமன்னவர்சேனைகாவலொடும்பழைபோர்
கிரவுமன்பினர்யாவருமருகுறவிரைவி
னுரைசெய்மாதொடுமைந்தர்களொடுமவனுருவி. (14)

வேறு.

ஏமாங்கதன்கனகாங்கதனெனுமைந்தரிலிகல்வேற்
கோமானுருமகவேந்திடக்கொம்போர்மகவேந்தத்
தூமாங்கியினெரிகானிடைதொடர்ந்தேகினர்துணர்ப்பூந்
தாமாங்கதவிறன்மன்னவர்முடிமேலுறுசரணம். (15)

தன்னிற்புரிதவங்கியதகைமைந்தர்களுடனே
பொன்னிற்பொலிமனையாளொடுவெங்கானிடைபுகுத
மின்னிற்றிகழ்.....
நின்விற்பிரிகலம்யாமெனநெறிமுந்துவர்சிலரால். (16)

நெறியோடொருகுடைநீழலிலிபமேல்வருநிருபன்
வறியோரெனமரநீழலின்வனமேகுதல்காணு
வெறியோடியகுழுன்மாதரும்வேல்வேந்தரும்விம்மிப்
பொறியோடியகயிறற்றிடுமரப்பாவைகள்போன்றார். (17)

உதகார்கலியுலகியாவையுமுணர்வோய்ந்துயிரூலையச்
சுதையார்மதிகதிராயவர்தெரியாவனந்தொடர்ந்தான்
குதையார்சிலதுதலாளொடுகுணபூதரமனையான்
மதமாகரிபிடியோடொருவனமேவுவதெனவே. (18)

புல்வாயொடுபுலியும்மொருதுறைநீரிடைபுகுதுங்
கொல்வாளரியுடனேகிறுகளிறுந்தனிகுலவும்

பல்வாய்விடமுமிழ்நாகமுமயிலாடுதல்பார்க்கு
மல்வாழியபுயதாகுமன்னன்செலும்வனமே. (19)

முன்னளினில்வீணையோவெனமொழிவார்சிலர்முழுகு
நன்னுடறையெவரும்புரிகவையென்பவர்சிலசொற்
றுன்னுர்தொழுதெழுதாமரைத்தூணைத்தாளிணைதமியே
மென்காளினிற்காண்கின்றதென்றேங்.....ன்றவர்சிலால். (20)

புயலுந்தினவனமேலுறைபுயலுந்தினகனலிள்
சிகையுந்தினமாலுந்தளிர்சிறீனியுந்தினநீனபின்
முகையுந்தினநலியுங்கொடிமுருகுந்தினமலரும்
பகையுந்தினசுடர்வேலிறைபுகழுந்தினபகமே. (21)

வேறு.

வேங்கைபோதுழிவேழமெதிர்வுழி
யாங்குசீயமதிர்வுழியஞ்சியே
மாங்கதன்னழமற்றையக்கான்முளை
யீங்குபற்றித்தருகெனவேகுமால். (22)

வெய்யகானின்மிதிக்கப்பொருதபூஞ்
செய்யதாளிணைநோவுறத்தேம்புமத்
தையலுக்குத்தாபதிவிம்முறு
மையகூந்தலாண்மைந்தரைப்பார்த்தழும். (23)

வேறு.

ஒசியுநுண்ணிடையொக்கலைதாங்கிய
வசியின்மைந்தனைமன்னவன்றேட்கொளு
மிசையுந்தோண்மிசையென்னையுமேற்றெனப்
பிசையுங்கண்ணெடுநிற்குமோர்பிள்ளையே. (24)

ஆலவான்பெருக்காறுசெல்லாறுறிற்
பாலர்தம்மையோர்தோளிற்பரித்தற
னீலவார்குழலுங்கொண்டுநீர்த்துவான்
காலமேழையுந்தாங்குந்தருக்கினன். (25)

வரையுமாறுமடவஞ்சுனைகளும்
பொருவில்காஞ்சுகழியும்புளினமும்
கருவிவானெதிராச்சுரமுங்கடி
தொருவியாங்கணை நுதிகண்ணுற்றான். (26)

கண்டசாமைநதியின்கரையடித்
தண்டயோனிதன்னுதவத்தாலயர்
வுண்டமைந்தர்க்குணவுசற்றூட்டெனத்
தொண்டைவாய்ச்சியத்தோன்றற்குச்சொல்லினாள். (27)

நாமவாரிதிநானிலமீதினிற்
காமர்கங்கைதருமபலன்காட்டுமச்
சாமைமாநதிமூழ்கித்தளிர்மெயல்
வாமமைந்தர்க்கடிசில்வழங்குவாய். (28)

என்றுதானுமிரும்புனலாடிடப்
பின்றுகூந்தலுந்தோய்ந்துபெரும்பதங்
கன்றுமைந்தர்பசிக்கெனக்கட்டிய
துன்றுமூலவிழ்ப்பத்தொடங்கினும். (29)

எற்குமுந்துறவீகெனுமொன்றுசோ
ரெக்கவெற்கென்றெடுக்குமற்றோர்திறஞ்
செக்கர்வாய்ச்சிகிரித்தவிழாமுன
செக்கவெம்புழுவாகெளிந்ததே. (30)

சோறனைத்தும்புழுவெனத்தோன்றலும்
வேறளிப்பதொன்றின்மையின்மெய்த்தவப்
பேறளித்தபெருமகாரைத்தழீஇ
யாறளித்தனள்கட்கடலாலரோ. (31)

பசிபொறுதபதைத்துத்துடித்துளந்
கசியுமைந்தரைக்கைகொடுதாங்கியே
விசயமன்னனும்விம்மிப்பொருமினன்
பொசிபுங்கண்ணீர்புறத்துவிழாமலே. (32)

ஐயன்மீரெம்மருமகவீரெமை
யுய்யநல்குமுயர்தவப்பாலீர்
நையலீரடைநல்குதும்போதிரென்
றெய்துகானிடைப்பின்னருமெய்தவே. (33)

திகிரியொன்றுடைத்தேரவனென்னெடுங்
ககனமீதுந்தொடர்ந்தகருணையா
னகரநீங்கிலனனுமின்னேடுவிட்
டகல்வனென்பபோலப்புறத்தாயினன். (34)

பானுமன்னவனீங்கலும்பாயிருட்
கானவேலியுலகெங்குங்கொண்டகா
ளானமன்னவனீங்கவவன்புவி
போனவெய்யவிராக்கதர்பொற்பினே. (35)

வனம்புகுபடல முற்றும்.

உதவிப்பத்திராதிபர்.

விளம்பரம்.

---

8 அணை 4 அணை நிக்கல் நாணயங்கள் செல்லாது என்பதாக ஒருபெரிய வதந்தி மதுரையில் ஏற்பட்டிருக்கிறது. அதுபொய். இந்த 8 அணை 4 அணை நிக்கல் நாணயங்கள் எப்போதும்போல் செல்லும். அவைகளை உபயோகிக்கலாமென்று இதனால் அறிவிக்கப்படுகிறது.

K. V. S.

15—8—22. For Collector,

ஸம்ஸ்க்ருத வ்ருத்தமஞ்ஜரீ.

(யாப்பியல்)

(நாநகரு-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

11. தரிஷ்டுப் (11 அசை)

1. இந்த்ரவஜ்ரா=த த ஜ க க (5+6)
   =ஞஞந ஞஞந நஞந ஞஞ

2. உபேந்த்ரவஜ்ரா=ஜ த ஜ க க (5+6)
   =நஞந ஞஞந நஞந ஞஞ

3. உபஜாதி
   இந்த்ரவஜ்ரா
   உபேந்த்ரவஜ்ரா } இரண்டும் கலந்தது.

4. தோதகம்
   ப ப ப க க [6+5]
   ஞநந ஞநந ஞநந ஞஞ

5. ப்ரமரவிலஸிதம்
   ம ப ந ல க
   ஞஞஞ ஞனன நநந நஞ

6. ரதோத்ததா { 3+8 or 4+8 }
   ர ந ர ல க
   ஞநஞ நநந ஞநஞந ஞ

7. வாதோர்மீ
   ம ப த க க [4+7]
   ஞஞஞ ஞநந ஞஞந ஞஞ

8. சாலினீ
   ம த த க க [3+7]
   ஞஞஞ ஞஞந ஞஞந ஞஞ

9. ஸ்வாகதா

ர ந ப க க. [3+8]

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ

12. ஜகதீ (12 அசை)

1. வம்ஶஸ்யம்
=வம்ஶஸ்தனிதம்
=வம்ஶஸ்வவிலம்

ஜ த ஜ ர [5+7]

ந ஸ்ரீ ஸ்ரீ ந ஸ்ரீ ஸ்ரீ

2. இந்த்ரவம்ஶா

த த ஜ ர

ஸ்ரீ ஸ்ரீ ந ஸ்ரீ ஸ்ரீ

3. சந்த்ரவர்த்மா

ர ந ப ஸ [4+8]

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ந ஸ்ரீ

4. ஜலதரமாலா

ம ப ஸ ம [4+8]

ஸ்ரீ ஸ்ரீ ந ஸ்ரீ ஸ்ரீ

5. ஜலோத்ததகதி

ஜ ஸ ஜ ஸ

ந ஸ்ரீ ந ஸ்ரீ ந ஸ்ரீ ந ஸ்ரீ [6+6]

6. தாமரஸ

ந ஜ ஜ ய [5+7]

ந ந ஸ்ரீ ந ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ

7. தோடக

ஸ ஸ ஸ ஸ [4+4+4]

ந ஸ்ரீ ந ஸ்ரீ ந ஸ்ரீ ந ஸ்ரீ

8. த்ருத்விளம்பிதம்

ந ப ப ர [4+4+4]

ந ந ஸ்ரீ ந ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ

9. ப்ரபா

ந ந ர ர [7+5]

நநந நநந னநன னநன

10. ப்ரமிதாக்ஷரா

ஸ ஜ ஸ ஸ [5+7]

நநன நனந நநன நநன

11. புஜங்கப்ரயாதா

ய ய ய ய [6+6]

நனன நனன நனன நனன

12. மணிமாலா

த ய த ய [6+6]

னனந நனன னனந நனன

13. மாலதீ (யமுனை)

ந ஜ ஜ ர [5+7]

நநந நனந நனந னநன

14. வைஶ்வதேவீ

ம ம ய ய [5+7]

னனன னனன நனன நனன

15. ஸ்ரிக்விணீ

ர ர ர ர

னநன னநன னநன னநன

13. அதிஜகதீ [13 அசை]

1. கலஹம்ஸம்

ஸ ஜ ஸ ஸ க [7+6]

நநன நனந நநன நநன ன

2. க்ஷமா

ந ந த த க [6+7]

நநந நநந னனந னனந ன

3. ப்ரஹர்ஷிணீ

ம ந ஜ ர க [3+10]

ஸஸஸ நநந ஸநஸ ஸ

4. மஞ்ஜுபாஷிணீ

ஸ ஜ ஸ ஜ க [6+7]

நஸஸ நஸந நநஸ நஸந ஸ

5. மத்தமயூரீ

ம த ய ஸ க [4+9]

ஸஸஸ ஸஸந நஸஸ நநஸ ஸ

6. ருசிரா (ப்ரபாவதீ)

ஜ ப ஸ ஜ க [4+9]

நஸந ஸநந நநஸ நஸந ஸ

14. ஶக்கரீ [14 அசை]

1. அபராஜிதா

ந ந ர ஸ ல க [7+7]

நநந நநந ஸநஸ நநஸ நஸ

2. அஸம்பாதா

ம த ந ஸ த க [5+9]

ஸஸஸ ஸஸந நநந நநஸ ஸஸ

3. மஞ்ஜரீ (பத்யா)

ஸ ஜ ஸ ய ல க [5+9]

நஸஸ நஸந நநஸ நஸஸ நஸ

4. ப்ரமதா (சுசீருதா)

ந ஜ ப ஜ ல க [6+8]

நநந நஸந ஜநந நஜ

5. ப்ரஹரணகலிகா

ந ந ப ந ல க [7+7]

நநந நநந ஜநந நநந நஜ

6. மத்யக்ஷமா (ஹம்ஸஸ்யேனீ=குடிலம்)

ம ப ந ய க க [4+10]

ஸஸஸ ஸஸந நநந நஸஸ ஸஸ

7. வஸந்ததிலகா
=உத்தர்ஷிணீ
=லிம்மோந்நதா

த ப ஜ ஜ க க [8+6]

ஸஸந ஸநந நஸந நஸந ஸஸ

8. வாஸந்தீ

ம த ந ம க க [4+6+4]

ஸஸஸ ஸஸந நநந ஸஸஸ ஸஸ

15. அதிஶக்கரீ. [15 அசை]

1. தூணகம்

ர ஜ ர ஜ ர { 4+4+4+3 / 7+8 }

ஸநஸ நஸந ஸநஸ நஸந ஸநஸ

{ வீடலால வாயிலாய்
விழுமியார்க ணின்கழல் }

2. மாலினீ

ந ந ம ய ய [8+7]

நநந நநந ஸஸஸ நஸஸ நஸஸ

3. லீலாகேலம்

ம ம ம ம ம

யாவையும் நெடில்கள்

4. ஶஶிகலா

ந ந ந ந ஸ

கடைசியைத்தவிர மற்றயாவும் குறில்கள

16. அஷ்டி. [16 அசை]

1. சித்ர

ர ஜ ர ஜ ர க [4+4+4+4]

ஙஙங

யக்ஷ: சக்ரேஜனகதனயா ஸ்நாநபுண்யோதகேஷ்ட
ஸ் நித்த: சாயாதருஷ்டவஸதிம் ராமகிர்யாஶ்ரமேஷ்ட ||
[மேகதூதம் I. 1.]

5. வம்சபத்ரபதிதா

ப ர ந ப ந ல க [10+7]

ஸநந ஸநஸ நநந ஸநந நந்ந நஸ

6. சிகரிணீ

ய ம ந ஸ ப ல க [6+11]

நஸஸ ஸஸஸ நநந நநஸ ஸநந நஸ

7. ஹரிணீ

ந ஸ ம ர ஸ ல க [6+4+7]

நநந நநஸ ஸஸஸ ஸநஸ நநஸ நஸ

18. த்ருதி. [18 அசை]

1. குஸுமிதலதாவேல்லிதா

ம த ந ய ய ய [5+6+7]

ஸஸஸ ஸஸந நநந நஸஸ நஸஸ நஸஸ

2. சித்ரலேகா

ம ப ந ய ய ய [4+7+7]

ஸஸஸ ஸநந நநந நஸஸ நஸஸ நஸஸ

3. நந்தன

ந ஜ ப ஜ ர ர [11+7]

நநந நஸந ஸநந நஸந ஸநஸ ஸநஸ

4. நாராச

ந ந ர் ர ர ர [8+5+5]

நநந நநந ஸநஸ ஸநஸ ஸநஸ ஸநஸ

5. சார்த்தூலலலிதா

ம ஸ ஜ ஸ த ஸ் [12+6]

ஸஸஸ நநஸ நஸந நநஸ ஸஸந நநஸ

19: அதித்ரிதி [19 அசை]

1. மேகவிஸ்பூர்ஜிதா

ய ம ந ஸ ர ர க [6+6+7]

ந ன ன ன ன ன

ந ந ந ந ன ன

ன ந ன ன ந ன ன

2. சார்த்தூலவிக்ரீடிதம்

ம ஸ ஜ ஸ த த க [12+7]

ன ன ன ந ன ந ன ந ந ந ன

ன ன ந ன ன ந ன

3. ஸமதுரா

ம ர ப ந ம ந க [7+6+6]

ன ன ன ந ன ன ந ந ந ந ந

ன ன ன ந ந ந ன

4. ஸ்ரஸா

ம ர ப ந ய ந க [7+7+5]

ன ன ன ந ன ன ந ந ந ந ந ன ந ந ன

வர்க்கம்		வ்ருத்தம்	கணம்	யதி
20	க்ருதி	1. கீதிகா (Gitika)	ஸஜஸபரஸலக	5- 7- 8
	[20 அசை]	2. ஸ்ரவதரா	மரபநயபலக	7-7-6
21	ப்ரக்ருதி	1. பஞ்சசாவளீ	நஜபஜஜஜர	7-7-7
	[21 அசை]	2. ஸ்ரக்தரா	மரபநயயய	,,
22	ஆக்ருதி [22]	ஹம்ஸீ	மமத நந ஸக	-8-14
23	விக்ருதி [23]	அதிர்திதயா	நஜபஜபஜபலக	-11-12
24	ஸம்ஸ்க்ருதி [24]	தங்வீ	பதநஸபபநய	5-7-12
25	அதிக்ருதி [25]	க்ரௌஞ்சபதா	பமஸபநநநக	5-5-8-7
26	உத்க்ருதி [26]	புஜங்கவிஜ்ரும்பித	மமதநநநரஸலக	8-11-7

R. S. நாராயணஸ்வாமி ஐயர் B A.,B.L.,
மதுரை.

முத்திநெறி.

சன்மார்க்கம்.

(உஎஉ—ஆம்பங்கத்தொடர்ச்சி.)

கஈ. ஆணவமலத்தின் செய்தி எப்படியாம்?

விஷம், பாஷாணம், தீ, நீர், காற்று முதலான சடப்பொருள்களுக்குச் செய்தியுண்டாவதுபோல, ஆணவமலத்தினுக்குச் செய்தியுமுண்டாம்.

கச. ஆன்மாக்களுக்குத் தடுவாதிகளே அருளல் கடவுள் நினைவின் படியா? ஆன்மாக்கள் நினைவின்படியா?

ஆன்மாக்களின் நினைவின் படியேயாம். எங்ஙனம்?

குயவன் பாண்டங்களைவனையுமிடத்து, அவன் நினைவின்படிவனையாமற் பிறர்நினைவின்படியே வனைவான்; அதுபோன்ம். தன் நினைவின் படி வனையும்போழ்து, ஒருவடிவாகவே வனையாநிற்பன். பிறர்நினைவின் படிவனைவானுனற் பற்பல வடிவங்களாகவே வனையாநிற்பன். ஆதலால், குயவனைப்போலும் பரமபதி, மண்ணைப்போலும் மாயை, பாண்டத்தைப் போலும் தநு, பிறரைப்போலும் ஆன்மாவாம்.

கடு. ஆன்மாக்கள் சரீரத்தைப்பற்றிக்கொள்ளும்பான்மை எத்தன்மை?

படிகமலையானது, எந்தெந்தப்புறத்தில் எந்தெந்தவன்னத்தைத் தந்தபோதிலும், அந்தந்தப்புறத்தில் அந்தந்தவன்னத்தைப்பற்றிக் கொள்ளுமாபோல் எல்லாப்புவனங்களிலும், வியாபகமாயிராநின்ற ஆன்மாக்களுக்குக் கடவுளாவார், எந்தெந்தப்புவனத்தில் எந்தெந்தச்சரீரத்தை வழங்கினும், அந்தந்தப்புவனத்தில் அந்தந்தச்சரீரத்தை ஆசையுடன் பற்றிக்கொள்ளாநிற்பர். இதனால், படிகமலை, படிகமலைக்குஒளி, படிகஒளிக்குப் பற்றுங்குணம், படிகஒளிக்குப் பற்றுந்தொழில், வன்னம், வன்னத்தைப்பற்றுவிக்கின்றவன் என்னு ஆறுபொருள்கள் தலைப்படாநிற்கும். இங்ஙனம் தலைப்படுவனவற்றுள், படிகமலைபோலும்

ஆன்மா. படிகமலைக் கொளிபோலும் ஆன்மபோதம், படிகஒளிக்குப் பற்றுங்குணம்போலும் ஆன்மபோதத்திற்கு அறியுங்குணம், படிகஒளிக்குப் பற்றுந்தொழிலைப்போலும் ஆன்மபோதத்திற்கு அறியுந்தொழில், வன்னத்தைப்போலும் மாயாகருவி, வன்னத்தைப் பற்றுவிக்கின்றவனைப் போலும் கடவுளாம்.

கசு. ஆணவம் ஆன்மாக்களை மறைக்குந்திறம் எது போன்ம்?

சந்திரசூரியர்களை இராகுகேதுக்கள் மறைத்துக்கொள்வது போலும், தீயினை நீறுமறைப்பதுபோலும், ஆகாயத்தை மலை மறைப்பது போலும் ஆன்மாக்களை ஆணவ இருளானது மறைக்கநிற்கும்.

கஎ. ஆன்மாக்களுக்குக் கன்மம் வந்து பொருந்துகை எப்படி?

ஆன்மாக்கள் நிரவயவர்களாயிருப்பதை மறந்து, அவயவர்களெனக் கருதிக்கொண்டமையான், அக்கன்மம் வந்து பொருந்தியதாம். அக்கன்மத்தால் மாயையு முண்டாயிற்று. மாயையினல், தனுவாதிகளு முண்டாயின.

கஅ. கடவுள் ஆன்மாக்கட்குக் கன்மங்களைப் புசிப்பிக்கு முறை எவ்வடிவால்?

இச்சா ஞானக் கிரியாசொரூபராயிருந்து புசிப்பிப்பார். இவற்றுள், ஆன்மாக்களை முத்தியிற் சேர்ப்பிக்கவேண்டுமென்பதே இச்சை. ஆன்மாக்கள் இச்சித்த கன்மங்களை அறிந்துகொள்ளச்செய்வதே ஞானம்: ஆன்மாக்களுக்குக் கன்மங்களை ஊட்டி யுறக்கித் தொலைப்பித்தலே கிரியையாம்.

கக. ஆன்மாக்களின் கன்மம் புசிப்பிக்குமாறு எத்திறத்தால்?

இச்சை, ஞானம், கிரியைவடிவாயிருந்தே புசிப்பது. இவற்றுள்; பண்டு பதார்த்தங்களிற் சென்று பற்றுவதே இச்சை. அவற்றைப் பகுத்தாராய்தலே ஞானம். எல்லாந் தனதென் றமுந்தியிருத்தலே கிரியை.

உ. கன்மவகையும் இலக்கணமும் எத்தனை? என்னென்ன?

தூலகன்மம், சூக்குமகன்மம், அதிசூக்குமகன்மமென முத்திறமாம். இவற்றுள், இருவினைகட்கெல்லாம் தூலகன்மமென்றும் வினைகளுக்குப்

பின்பலனுக வருகின்ற புண்ணியபாவங்கட்கெல்லாம் சூக்குமகன்மமென்றும், புண்ணியபாவங்கட்குப்பின் பலனுக வருகின்ற இன்பதுன்பங்கட்கெல்லாம் அதிசூக்குமகன்மமென்றும் பெயராம். இவற்றை முறையே ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் எனவும் வழங்காநிற்பர். இம்மூப்பாகுபாட்டினுள், பயிரிடுவதுபோல் ஆகாமியம், பயிராலுண்டாம் பலன்களைக் களஞ்சியத்திற் கொட்டிவைப்பதுபோலும் சஞ்சிதம் கொட்டிவைத்ததினின்று சிறுகச்சிறுகவெடுத் துண்பதுபோலும் பிராரப்தமுமாம்.

உக. கன்மங்கள் பலன்படும் நேர்மை எவ்வாறு.?

ஒருவன், முன்பு பதினெட்டுப்பதித்துப் பின்னர்க் கத்தரிச்செடியினை நட்டு, அதன்பின்னர்க் கீரையினைப் பயிரிட்டால், கீரை ஒரு பதினைத்துக்குட் புசிப்பாகவும், கத்தரி இரண்டுதிங்களுக்குட் புசிப்பாகவும், பதினெட்டுவருடத்துக்குப்பின் புசிப்பாகவும் வருமாபோல் ஆன்மாக்கள் முன்னர்த்தேடிய கன்மம் முன்னரேயே பலன்பட்டுவராமல், வெகுபிறப்புக்களுக்குப்பின்னர்ப் பலன்பட்டு வருதலும், பின்னர்த்தேடிய கன்மமானது உடனே பலன்பட்டுவருதலும் மாறும்.

உஉ. கன்மங்கள் ஆன்மாக்கட்குண்டாம் வழி எவ்வழி?

ஆதிதெய்வீகம், ஆதிபௌதிகம், ஆதியாத்துமிகம் எனும் மூன்று வழியால் நேரும். இவற்றைத் தாபத்திரயம் என்றும் பகராநிற்பர். இவற்றுள், தெய்வத்தால்நேரும் இன்பதுன்பங்கட்குத் தெய்விகமென்றும், பூதங்களால் நேரும் இன்பதுன்பங்கட்குப் பௌதிகமென்றும், ஆன்மாக்களால்நேரும் இன்பதுன்பங்கட்கு ஆத்துமிகமென்றும் பெயர் கூறுவர்.

உங. கன்மங்கள் அகலுவது எவ்விதம்?

ஒருவன் பயிரிட்டு முதலாகக்கண்ட க000 (ஆயிரம்) கலம் நெல்லில், களஞ்சியத்தே ஐந்நூறுகலநெல்லைக் கட்டிவைத்து, முந்நூறுகலம் நெல்லைச் சாப்பாட்டுக்கென்றுவைத்து, இருநூறுகலம் நெல்லை விதைத்திருக்க; களஞ்சியத்திற் கட்டிவைத்தநெல் தீயாலழியவும், சாப்பாட்டுக்கென்று வைத்தநெல் சாப்பிட்டழியவும், விதைத்தநெல், மழையின்றிக் காய்ந்தழியவுமானாற்போல், ஆன்மாக்கட்குப் பக்குவம்வாய்ந்த

காலத்திற் சஞ்சிதமானது, ஞானசாரியருடைய திருநோக்கத்தாலும், பிராரப்தமானது புசித்தலினாலும், ஆகாமியமானது சுடவுளரது நின்மல ஞானத்தாலும் அகலாநிற்கும்.

உச. சஞ்சிதமாதி பாகுபாட்டின் விளக்கம் என்ன?

சஞ்சிதமாவது, சனனங்கடோறும், அநாதியே தொடர்ந்து, ஆறத் துவாக்களிலும் கட்டுப்பட்டு, அளவிறந்துகிடக்கும் இருவினைகளாம்.

பிராரப்தமாவது, சஞ்சிதத்தின் பரிபக்குவத்தைக்குறித்து, அதற் கேற்ற தனு கரண புவன போகங்களை உண்டாக்கிக்கொண்டு சஞ்சரிப்ப தாம்.

ஆகாமியமாவது, பிராரப்தத்துக்கிசைய எடுத்ததேகத்தில், அதன் பலத்தைப்புசிக்கையில் விருப்பு வெறுப்புக்களாலுண்டாகிய கன்மபலத் தைக்கூட்டுஞ் சிவனை இகழ்ந்த அபராதத்தால் நேரும் புண்ணிய பாவங்க ளாம்.

ஷ பிராரப்தமும் இச்சாப்ராரப்தம், அநிச்சாப்ராரப்தம், பரேச்சா ப்ராரப்தம் என முத்திறப்படாநிற்கும்.

இச்சாப்ராரப்தமானது, மன்னன்மனைவியைத் தீண்டலினால் வந்துறும் சுகதுக்கம்.

அநிச்சாப்ராரப்தமானது, இடியாதியால் உறும் பலன்கள்.

பரேச்சாப்ராரப்தமானது, ஒருவர் ஒரு காரியம்புரிய, அதனால், அரசன், அவனை ஆக்கினைசெய்யும் அபராதத்துக்கும் உள்ளாக்க, அவற்று லுறும் இடுக்கண்கள்.

அன்றியும்; வேறு மூன்றுவித ப்ராரப்தங்களுமுள. அவை: திருட்டப்பிராரப்தம், அதிருட்டப்பிராரப்தம், திருட்டாதிருட்டப்பிரா ரப்தம் என்பன.

திருட்டப்பிராரப்தமாவது தற்சமயம், ஔஷதபதார்த்தங்களா லும், மந்திரோச்சாடனங்களாலும், இம்மையிற் செய்த கன்மம் இம்மை யிலேயே உடன் பலிப்பதாம்.

அதிருட்டப்பிராரப்தமாவது இம்மையிற் புரிந்தகன்மம் மறுமையிலும் சுவர்க்க நரகங்களிலும் அனுபவிக்கை.

திருட்டாதிருட்டப்பிராரப்தமாவது இம்மையில் அசுவமேதயாகம் புரிந்தவன் இம்மையிலேயே சுக மநுபவித்துச் சுவர்க்க மடைவதாம்.

உடு. கன்மப் புசிப்பி லுண்டாம் முதன்மைப்பாடு எவரெவருக்கு?

ஆன்மாக்களுக்குப் பெத்தநிசையில், கன்மமாதியின் முழுவிருப்பம் இருக்கச்சே, கடவுளாவார் அவர்களைப் பார்த்துச் சுவர்க்கத்தினுக்கு போ என்று எவ்வளவு வருந்தி அழைத்தாலும், அவர்கள் வருவதற்கு மனம் உவக்காமல், அந்த மலமயத்திலேயே அழுந்திநிற்றலால், ஆன்மாக்கட்குப் பெத்தத்தில் முதன்மைப்பாடும், முத்திநிசையில் அவ்வான்மாக்கள் கடவுளிடத்தில் அழுந்திக் கடவுள்மயமாகவேயிருக்கக் கடவுள் கருணைபாலிப்பதால் கடவுளருக்கு முத்தியில் முதன்மைப்பாடு முண்டாம்.

உக. பதியாவார் பெத்தரிடத்தும் முத்தரிடத்தும் விளங்கும் பான்மை எதுபோல்?

பெத்தரிடத்திற் பாலுக்குள் நெய்போலும், முத்தரிடத்தில் தயிருள் வெண்ணெய்போலும் விளங்காநிற்பர்

உஎ. ஆன்மாக்கள் எப்போழ்துமே தனித்திராரெனல் எவ்வண்ணம்?

கண்ணனது, ஒருசமயம் ஒளியோடும், மற்றொரு சமயம் இருளோடும் கூடியிருப்பதல்லாமல், எப்போழ்தும் தனித்தேயோதுபோல ஆன்மாக்கள், ஒருசமயம் மலத்திலேயும், மற்றொரு சமயம் கடவுளிடத்திலேயும் கூடியிருப்பதல்லாமல், எப்போழ்துமே தனித்திருக்கவேமாட்டா.

உஏ. ஆன்மாக்களிடத்தில் பதியும், ஆணவமுங்கூடியிருக்குங் கூட்டுறவு எத்தன்மைத்து?

ஒருமரத்தில், அடிதொடித்து முடிபரியந்தம் இதமும், அக்கினியும் பொருந்தியிருப்பதுபோல், கடவுளரும் ஆணவமும் ஆன்மாக்களினிடம் எக்காலும் இடைவிடாது பொருந்தியேயிருப்பர்.

உசு. ஆன்மாக்களுடன் கூடியிருக்கும் பதியினுக்குத் துன்பமாகிய அவத்தை வாதியாமை எதுபோல்?

ஆதித்தனது பிரகாசமானது படிகஒளியிற் கலந்துநின்று, வன்னங் களைப் பற்றுவித்தும், தான் பற்றற்றிருக்கும் நிலைபோலவும், ஒருவன் அநுபவிக்கிற துன்பமானது, அவன் வயிற்றிலுள்ள கிருமியாதிகட்கு எட்டுணையும் வாதியாததுபோலவும் கடவுளரைத் துன்பமாகிய அவத்தை ஒருக்காலும் வாதியாது.

ஈஅ. காரண காரியாவத்தையாதி அவத்தைக் கோத்து என்ன?

காரணாவத்தையானது கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தா வத்தை யென மூத்திறப்பட்டாநிற்கும்.

காரியாவத்தையானது கீழாலவத்தை, மேலாலவத்தை, மத்யால வத்தை, யோகாவத்தை, போகாவத்தை, நின்மலாவத்தை என்று ஆறு பிரகாரமாயிருக்கும்,

(க) கேவலாவத்தை: ஆன்ம சொருவசங்காரமுதல், சிருட்டிவரை ஆணவத்தால் மறைப்புண்டு ஒன்றுந்தெரியாம னிற்கு மவசரம். அதா வது, ஆன்மாக்கட் கநாதியே இயற்கையாயமைந்த தன்மை. இதனைக் காரண கேவலசகலமென்பர்.

உ. சகலாவத்தை: சிருட்டி முதல் சங்காரம்வரை பிறந்திறந் தழலு மவசரம். அதாவது பரமேச்சுரனாற்கொடுக்க வான்மாக்களடை வன. இதனைக் காரணசகலமென்பர்.

(ங) சுத்தாவத்தை: கடவுளுடைய திருவடியில் இரண்டறக்கூடு மவசரம். அதாவது பஞ்சமலங்களும் ஆன்மாவைவிட்டகலுவது. இதனைக் காரணசுத்த மென்பர்.

ஆத்தூர்,
சேலம்ஜில்லா.

ப. சி. சிவப்பிரகாசம்பிள்ளை,
தமிழ்ப்பண்டிதன்.

க

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஅ.] துந்துபி-ஏஅ ஆவணி-மீ [பகுதி கo.
Vol. XX. August-September-1922. No. 10.

மேற்றிசைச்செல்வம்.

(The Wealth of the West)

முதலாம் அதிகாரம்.

முன்னுரை.

1. திருவினுலும் அரசினுலும் மேம்பாடுற்றுப் பிறநாடுகள் பல வற்றினும் தமது ஆணைசெலுத்திவருகின்ற ஆங்கிலாதி மேலைநாட்டவ ரது செல்வப்பெருக்கத்துக்கு உரிய காரணங்கள் எவையென ஆராய்வா னெடுத்துக்கொண்டாம்.

2. பரந்த இப்பொருளை ஆராயுங்கால் மேலைநாட்டாரது அரசியன் முறையும், புலனெறிவழக்கமும், கலைபயினிலைமையும், பொருள்செயல் வகையும் பிறவும் தெற்றெனப் புலப்படுவனவாம். ஆங்ஙனம் புலப்படவே மனத்தின்கண் ஊக்கம் மேலிட்டு அவர்படைத்த திருவை யாமும் படைப் பதற்கு முயல்வேமாதலின் இவ்வாராய்ச்சி பெரிதும் பயனுடைத்தா மென்க. பண்டைநாளில் நமது முன்னோர் சிறப்புற்றிருந்தாரென்று வாளா புராணம்பாடிக்கொண்டிருப்பதனுல் உறுபயன் யாதோ அறியோம். அயலுட்டாரோடு கொள்வனவும் கொடுப்பனவுஞ் செய்யாதொழியிற் செல்வம் நிலைபெறுது. உயிர்க்குறுதிபயக்கும் உண்மைநூல்கள் நம் மிடத்து ஏராளமாகவுள்ளன; உடற்குறுதிபயக்கும் நூல்கள் அவரிடத் துள்ளன. நமது உண்மைநூல்களை நாம் கொடுப்பதற்குமுன்னமே அவற்றின்சிறப்பையுணர்ந்த பேனுட்டார் தாமாகவே யெடுத்துக்கொண் டனர். அவர் முன்னுள் வருந்திச்செய்த அரிய ஆராய்ச்சியின்பயனைத்

திரட்டிவைத்திருக்கிற எண்ணிறந்தனவாகிய கணிதநூல், வானநூல், ஒளிநூல், ஒலிநூல், மின்னியக்கநூல், அனல்நூல், உடல்நூல், மன நூல், சிவநூல், பொருட்டன்மைநூல், இரசாயனநூல், உலகசரித்திரம், பூகோளவிவரணம், சிற்பநூல், வர்த்தகநூல், முதலியவற்றில் ஒன்றையேனும் நாம் தமிழ்ப்படித்தவில்லை. என்னே, நம்பேதைமை யிருந்தவாறு! இங்ஙனஞ் செய்யாதொழிந்தது ஆங்கிலங்கற்ற தமிழ்மக்கள் அனைவர் மேலும் பொறுத்த குற்றமாயினும் பட்டனவாகிவளாகிய தமிழ்மக்கள் பெரிதும் ஆங்கிலப்பத்திரிகைகளிலேயே ஆதரிக்கிறார்கள். தாம் ஆராய்ந்து கண்ட முடிபுகளை ஆங்கிலமொழியிலெழுதி அம்மொழிக்கே மேன்மேலும் மதிப்புண்டாக்குகின்றனர். ஆங்கிலத்திற் கவியெழுதவுந் தொடங்கி விட்டார்கள்; வேறு நாம் பேசுவதென்ன? கல்கிரேஷ்டராகிய ரவீந்திர நாததாகூர் தமது தாய்மொழியிற் கவியெழுதினமையினுற்றான் உலகத்தா ரது நன்மதிப்பைப்பெற்றானென்பதை ஆங்கிலங்கற்ற தமிழ்மக்கள் அறியார்களாயினும். எட்டுமுறை சூட்டிக்கரணம்போட்டாலும் தாய் மொழியன்றிப் பிறிதொருமொழியில் அம்மொழியாளரால் முதற்றரத்த தென்று மதிக்கப்படத்தக்க நூலியற்றல் இயலவே இயலாது.

3. இனி உயர்தரக் கல்விக்கழகங்களிற் கல்வியறிவூட்டும் முறை யைப் பார்த்தால் நினையளவுமருந்தைப் பெறுவதற்கு மலைமுழுவதை யுஞ் சுமப்பிக்குந்தோற்றமாயிருக்கிறது. யோக்கியதாபட்டம் பெறுவ தற்குமுயலுகிறமாணவன் தான் தெரிந்துகொண்ட பொருட்டுறையில் நிறைந்த புலமையுடையவனாயிருப்பினும், ஆங்கிலமொழியிற் சொல் வன்மையில்லாதவனாயிருப்பின், தகாதவனென்று தள்ளப்படுகிறான். ஆங்கிலமோ இலக்கணவரம்பில்லாத மூரட்டுமொழி; பத்தாண்டுபயிலி னும், கருதியபொருளைத் தெளிவுற உரைக்குஞ் சொல்வன்மையைப்பெறு வது மிகவும் அரிதாகும்: தாய்மொழியில் உரைத்தால் இனிமையைப் பயக்கத்தக்க பொருட்டுறைகள் வேற்றுமொழியில் உரைக்கப்படின் வெறுப்பைத்தருவனவாம். இதனால் மாணாக்கன் கற்குங்கல்வியில் மன வூக்கஞ்செல்லாதவனாக வருந்துகிறான். இன்னோரன்ன பலகாரணங் களால் உயர்தரக் கல்வியறிவும் தாய்மொழியிலே ஊட்டப்படவேண்டு மென்பது மறுக்கொணா உண்மையாகின்றது. யாம் வடநாட்டுக்குப் போயிருந்தபொழுது ஹரித்துவாரத்தில் ஆரியசமாஜத்தாரால் நடத்தப் படும் குருகுலம் என்னும் உயர்தரக்கல்விக்கழகத்தில் இரண்டுநாட் டங்கி

யிருந்து கலேபயிற்றுமுறைமையை நன்முகக் கவனித்துப்பார்த்தோம். பன்னீராட்டைப்பிராயத்துச்சிறுவர்களெல்லாம் வடமொழியில்வசனிக்கவும் நூல்களோவாசித் தின்புறவுந் தக்க பாண்டித்தியமுடையவர்களாக விருப்பதைக் கண்டு மகிழ்ந்தோம். ஹிந்திபாஷைமூலமாக மேலைத் தேசசரித்திரம் பௌதிகசாஸ்திரம் இவையெல்லாம் உயர்வாகக் கற்பிக்கப்படுகின்றன. இக்கல்விக்கழகத்தில் "வித்தியாலங்காரன்" எனும் பட்டம்பெற்றமாணவன் சென்னையில் எம். ஏ. பட்டம்பெற்ற மாணவனேடு ஒத்துநோக்கப்படிற் குறைந்தவனுகக் காணப்படான். இவன் தாய்மொழியிற் கல்விபயின்றவனுதலாற் றன்னூர்க்குச்சென்றதும் தான் பெற்றசெல்வத்தைப் பிறரும் அநுபவிக்கும்படி கொடுக்கிறுன். இதனல் இவன்பயின்றகல்வி ஆயிரமடங்கு பயன்றருகிறது. நம்நாட்டில் வறியோர் கொடுக்கும் வரிப்பணத்தைக்கொண்டு உயர்தரக்கல்விச்சாலேகள் நடத்தப்படுகின்றன; ஆதலால் இக்கல்விச்சாலேகளினின்று பிறக்கும் கலேயறிவு அனேவர்க்கும் பயன்றருவதன்றே நீதியும் மரபு மாகும். குஜராத்வித்தியாபீடம், காசிவித்தியாபீடம் இவற்றில் அனேத்துக்கல்வியும் தாய்மொழிமூலமாகவே தரப்படுகின்றன. வங்காளிபாஷையிலும் அநேக உயர்தர மொழிபெயர்ப்புநூல்கள் வந்துவிட்டன. காளிகட்டத்துச் சர்வகலாசாலேயார் தாய்மொழியிலே எல்லாக்கல்வியும் பயிற்றப்படல்வேண்டுமென்னும் சட்டத்தைச் சீக்கிரங் கொண்டுவந்துவிடுவார்கள். ஆந்திர கன்னட மலேயாள நாட்டாரும் தம்மொழியைவளர்ப்பதில் முன்னேற்றமடைந்துவருகிறார்கள். இவ்விஷயத்திற் சென்னைச் சருவகலாசாலேயாரும் தமிழ்மக்களுமே மிகவும் பிற்பட்டுநிற்கிறார்கள். தமிழில் மொழிபெயர்ப்புநூலெழுத முன்வருவார்சிலர் நிரம்பிய தமிழறிவின்மையான் ஆங்கிலமக்களும் தமிழ்மக்களும் ஒருங்குவெறுக்கத்தக்கபபற்றுப்பச்சரிசிநடையில் (பைந்தமிழும் வெள்ளேயர் ஆங்கிலமும் சரிக்குச்சரி கலந்த நடையைப் பயற்றுப்பச்சரிசிநடை யென்றும்.) மணிப்பிரவாளமென்றுற்போல்—நூலெழுதிமுடிக்கின்றார்கள். இவ்வாறெழுந்த நூல்களால் விளேயும்பயன் ஒன்றுமில்லே. ஓரோவழி அபனுட்டிச்சொற்களேச் சேர்த்துக்கொள்வதனுற் குற்றமில்லே; முடிந்தநூல் தமிழ்மணங் கமழ்வதாக விருத்தல்வேண்டும். அல்லாவிடில் நின்றுநிலவாது.

4. இத்தகைய எண்ணங்கள் மனத்தில் உதிக்க இராமபிரானுக்கு அணேகட்டுவதற்கு உதவிபுரிந்த சிறிய அணிற்பிள்ளேயைப்போலச்

செந்தமிழ்த்தாய்க்கு இயன்ற தொண்டுசெய்யவேண்டுமென்று எண்ணி "மேற்றிசைச்செல்வம்" (The wealth of the west), என்னும் இந் நூலையும், விஞ்ஞானதீபம் (The Light of science) எனப் பின்னு மொரு நூலையும் எழுத ஆரம்பித்தேம். இவை யிரண்டும் சுருக்க நூலாகப் பலவாய பொருட்டுறைகளைத் தம்முள் அடக்கியனவாக இருத் தல்வேண்டுமென்பது எமது எண்ணம். அதிகாரவகையைக்கூற இவ் வுண்மை புலப்படும். இம்முன்னுரைமுடிந்ததும் இரண்டாம் அதிகார மாக மேனாட்டுநாகரிக வரலாற்றைக் கூறத்தொடங்கி, சுமேரிய, அக் கேடிய, ஆசுரேய, பாபிலோனிய எகிப்திய நாகரிகநிலைமையையும், மூன்றும் அதிகாரத்திலே இப்பொருளையே தொடர்ந்து கிரேக்க, ரோமா னிய நாகரிகம் வளர்ந்து பரந்து மேற்றிசைக்குச்சென்ற வரலாற்றினை யும், நான்காம் அதிகாரத்தில் மத்தியகாலசரித்திரம் என்னும் பெயர்க் கீழ் இருள்பரவியிருந்த ஐரோப்பாக்கண்டத்தில் அறிவுச்சுடர் புகுந்த வாறும், அஃது கிழக்குத்திசையிலிருந்துசென்று மேற்கில் வெற்றிக் கொடிநாட்டிய அராபியராற் கொடுக்கப்பட்ட கொடையாமென்பதுஞ் சொல்லி, அப்பால் ஐந்தாம் அதிகாரத்திற் கப்பல்வர்த்தகநோக்கமாகப் புறம்போந்த மேனாட்டார் பிறதேசங்களைக் கைப்பற்றியவாறும் தமது வர்த்தகம் கைத்தொழில் இவற்றை விருத்திசெய்யுமுறையிற் பிறநாட் டாரை யறிந்தும் அறியாமலும் தன்புறுத்தியவாறும், உலாந்தாக்காரர் பிராஞ்சியர் போர்த்துக்கேசாதிய ஏனைய மேனாட்டாரை அடக்கி ஆங்கி லேயர் பரந்த சக்காதிபத்தியத்தை நிலைநிறுத்தினமையுஞ் சொல்லி, அப்பால் ஆறும் அதிகாரத்தில் மேனாட்டு அரசியல்முறையை விளக்கிக் குடிகள் எவ்வாறு தங்களுடைய அரசர்களுக்கு நல்லறிவுறுத்தி வேண் டும்பொழுது நெருக்கித் தன்புறுத்தி யாவராலும்விரும்பப்படத்தக்க சுயஅரசுச்சலாக்கியத்தைப் பெற்றுக்கொண்டார்களென்பதைச்சொல்லி, ஏழுமுதற் பன்னிரண்டுவரையும் உள்ள அதிகாரங்களில் முறையே மேனாட்டுக்கல்விக்கழகங்கள், விஞ்ஞானநூற்பெருக்கம், மகாயுத்தமும் அதனால்நேர்ந்த மாறுதல்களும், அமெரிக்கரது முன்னேற்றம், வேதாந்த ஞானம் மேனாட்டிற் பரவுதல் ஆசியாக்கண்டந் துயிலொழிந்தெழுதல் என்னும் பொருள்களைக் கூறிமுடிப்பாம். விஞ்ஞானதீபமும் பன்னி ரண்டு அதிகாரங்களால் முடியும். முதலொன்று அதிகாரங்களும் உற்பத்தி விளக்கமெனப்பட்டு முறையே சூரிய சந்திரோற்பத்தி (வானநூல்)

மலைகடலுற்பத்தி (பூமிநூல்) தாவரசங்கமோற்பத்தி (தாவரநூல், விலங்குநூல்) மானிடசரீர அமைப்பு (கேசாதிபாதநூல்) இவற்றைக் கூறுவன. எஞ்சிய எட்டு அதிகாரங்களும் தத்துவவிளக்கம் எனப் பட்டு முறையே பொதுவியல், ஒலியியல், அனலியல், ஒளியியல், காந்தவியல், மின்னியல், மின்னியக்கவியல், இரசாயனவியல் என நடப்பன.

5. நாம் கூறப்புகுந்த பொருளெல்லாம் ஆராய்ந்துபார்க்குமிடத்துத் தமிழ்ப்புலவரால் அகம் புறம் என்ன வகுக்கப்பட்ட இருபெரும் பொருட்பகுதியிற் புறத்தின்பால் அடங்குவனவாம். சிந்தையு மொழியுஞ் செல்லாநிலைமைத்தாகிய வீடும், உள்ளத்துணர்வால் அநுபவிக்க வேண்டிய இன்பமும் பிறரால் வேறுபடுத்தப்படாத நிலைமையினவாதலின் இவற்றைக்கூறும் அகப்பொருளிலக்கணங்கள் ஒரு காலத்தும் மாறுபடா நிலைமையின. ஆலவாயி லவிர்சடைக்கடவுள் அருளிய அன்பினைந்திணை, தொல்காப்பியனுரைத்த அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் ஆகிய விவை ஊழிக்காலத்தும் அழிவுபெறு இலக்கணங்களாம். புறப்பொருளிலக்கணம் அத்தகையதன்று. ஏனைநாட்டாரது நாகரிகமுறையானும் நமது நாட்டில் ஆணைசெலுத்திவருகின்ற ஆங்கிலரது அரசியன்முறையானும் விகற்பமுறும்நிலைமையது. இலக்கணநூல் அதிலும் புறப்பொருள் உலகவாழ்க்கைக்கு உபயோகமாகிநிற்றல்வேண்டும். கற்குங்கல்வியானும் உளத்திற்கினிமைபயத்தல், உயிர்க்குறுதிபயத்தல், உலகவாழ்க்கைக் குறுபயனளித்தல் ஆகிய மூன்றுவகையானும் அறத்தையும் பொருளையும் இன்பத்தையும் வீட்டையும் தருவதாகவேண்டும். தற்காலத்துத் தமிழ்ப்புலவர் ஏனைய மூன்றுபுருஷார்த்தங்களைப்பெற்றும் இரண்டாவதானதும் உலகவாழ்க்கைக் குறுபயனளிப்பதுமான பொருளைப்பெறுதல் வருந்தவதைக் காண்கின்றேம். இதனைப் புறப்பொருணூல்கள் பயனற்றுநிற்பது வெளிப்படையாகின்றது. அரசியன்முறை, மந்திரசபையமைப்பு, அமர்மேற்செல்லல், பொருள்செயல்வகை இவையெல்லாம் புறப்பொருட்பகுதிகளன்றே. தற்காலத்துக்கேற்ற இவற்றைக்கூறுநூல்கள் ஒன்றுவது தமிழ்மொழியிலில்லையே. இந்நாண்மரபுகள் அறம் பிறழ்ந்தனபோற்றோற்றினும், 'அரசனெவ்வழிக் குடிகளுமவ்வழி' யென்பதற் கிணங்க நம்மாற் கைக்கொண்டொழுகவேண்டுவனவாகின்றன. ஒரு சில உதாரணங்காட்டி விளக்குவாம். வேற்றுப்புலத்துக்

களவினுலே சென்று பசுநிரையைக் கொண்டுபோந்து காத்தற்குரியது வெட்சித்திணை. இது முற்காலத்து மன்னர் போர் ஆரம்பிக்கும் பொருட்டுச் செய்துகொண்டமுறை. இக்காலத்தோ என்றுல் மாற்றரசனுக்குச் செய்தியனுப்பி இன்ன இன்ன கொள்கைகளுக்கு அவன் உடன்படாதவழி அமர் ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்து அமர் ஆரம்பிப்பது முறை. வில்லும் கணையும் இக்காலத்து அமர்முறைக்குப் பயன்படா. அமர்மேற்செல்லுமுறை முற்றுமே இக்காலத்து வேறுபட்டது. இனிச் சட்டசபையமைப்பினைநோக்குவோமாயின் இந்நாளிற் ருலம் கல்வி யிவற்றினும் பார்க்கப் பொருட்செல்வமே பெரிதும் வேண்டற்பாலதாகத் தோற்றுகிறது. பொருளில்லாதார் குடிப்பிறந்தாராயினும் ஞானமிக்காராயினும் ராஜமந்திரத்தில் இடம்பெறுர். இந்நாளிலுள்ள சட்டசபையில் விசுவாமித்திரருக்கும் வசிட்டருக்கும் இடமில்லை, இவர்கள் திணையளவும் பொன்னில்லாத துறவிகளாதலின். காருண்ய அரசாங்கத்தினர் சிறிது சிறிதாகவேனும் நமக்குச் சுயராசுச்சலாக்கியத்தைத் தந்துவருகிற இந்நாளில் அவ்வகையாகிய சலாக்கியத்தைப்பயன்படுத்த வேண்டிய அறிவினை விருத்திபண்ணிக்கொள்ளுதல் அவசியமல்லவா? இந்த விஷயத்தில் வர்த்தமானப்பத்திரிகைகள் பெரிதும் முயன்று வருகின்றன. ஆயினும் ஆராய்ந்தமைத்தநூல் இல்லாதவழித் தெளிவுற விஷயங்களை அறிந்துகொள்ளுதல் கூடாது.

6. இக்காலத்திற் புறப்பொருளாராய்ச்சியே குறைந்துபோயிற்று. இன்னன் என்றிரங்குகிற மன்னைக்காஞ்சி சமகவிகளில்வெளிப்படுகிறது. யாக்கையுஞ் செல்வமும் இளமையும் நிலையா என்று அழுகிற அழுகையே தமிழ்வாணருக்கு இயல்பாயிற்று. நிலைபாப்பொருள்களைவிடுவாரோ மிகச்சிலர்; அவற்றைப்பற்றியணைத்துக்கொண்டு தேடித்தூய்ப்பதற்கு வலியின்மையால் "நிலையா,' நிலையா" என்று பொய்க்காஞ்சிபாடியிம்மை மறுமைச்சுகத்தை யிழப்பவரே மிகப்பலர். இனிப் பாடாண்டிணையை யவமதித்து ஆண்மையில்லா அசடர்களுக்குப் பாட்டிசைத்து அவர் தலைக்கடையிற் காத்திருந்து வன்சொற்களையே பரிசிலாகப்பெற்று மீளுகிற தமிழ்வாணர் பலர். இவ்வாறு இயல்பிற்றிரிபுபட்ட காஞ்சியும் பாடாணும் ஒழிய ஏனைய ஆண்டன்மைக்குரிய வாகை தும்பை முதலிய புறப்பொருட்பகுதிகள் மறைந்தொழிந்துவிட்டன. கவிநயவினிமையையும் பிறவினிமையையும்தருகிற அகப்பொருணறவினையுண்டு மதுவுண்டு

மயங்கியவண்டைப்போலச் செயலின்றிக்கிடந்தோம்; அடிமைத்தன்மை யும் வந்தெய்திற்று. ஐயோ! இந்நிலைமை யினி வேண்டாம். வீரத்தை யும் ஆண்மையையுந் தருகிற புறப்பொருளே நாடுவோம். தவராஜசிங்க மாகிய விவேகாநந்தசுவாமி சொல்லுகிறார். "எழுந்திருங்கள், சோம்பலை யும் மூடத்தனத்தையும் வீசியெறிந்துவிட்டு வெளியேஉலாவி உலகத் தின் ஏனைய பாகங்களிலுள்ள மாந்தர்கள் முன்னேற்றமடைந்துகொண்டு போவதைப் பாருங்கள். எத்தனைநாளைக்கு மூலையில் ஒதுங்கிக்கிடக்கப் போகிறீர்கள். நீங்கள் சுத்தவீரர்களின்வழிப் பிறந்தவர்கள் என்பதை மறந்துவிட்டீர்களா? சூரனுக்கு உயிர்தரும்பு; தேசமுன்னேற்றத்துக்காக உயிரையுங்கொடுக்கத் தயராயிருக்கும்வாலிபர்கள் ஆயிரக்கணக்கானபோர் முன்வரவேண்டும். மேனிலைபையடைவதற்கு முயலுவோம். அம்முயற்சி யில் உயிர்போனாலும் போகட்டும்". முன்நாளில் இருந்த நமது தமிழ் நாட்டுத்தாய்மார் எவ்வளவு வீரம்படைத்தவராக விருந்தார்கள்.

"நாம்பெழுந் தலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினை னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னுயி ரொண்டவென்
மூலையறுத் திடுவன் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களர் நுழுவுவோள் சிதைந்து வேற்கிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே"

இது முன்னுளியல்பு.

"தந்தை மதியினுஞ் சாலுநன் மதியோன்
என்மகன் தீரன் எசமான் கோபித்
தெட்டி யுதைத்த காலினைப் பற்றி
முத்த மிட்டு முன்னின்று பணிந்து
ஐயநின் காலுக் கடிமையு யர் வினைத்தனன்
என்னக் கூறி யீரைந்து வெண்பொன்
சம்பள வுயர்ச்சி சாலப் பெற்றனன்"

என மிழ்வது இந்நாளியல்பு. நாம்அறிந்த வரையிற் றமிழ்நாட்டா ரனைவரும் சாதிமத பேதமில்லாது கைக்கொள்ளத்தக்கநூல் ஒன்று உளது. அது புறநானூறு. இனி, "மேற்றிசைச்செல்வத்தை ஆரம் பித்து மேனாட்டுநாகரிகம்வந்தவரலாற்றினைச் சொல்லத்தொடங்குவாம்.

இரண்டாம் அதிகாரம்.

நாகரிகவரலாறு.

1. அழகு, அன்பு, ஞானம், கவித்துவம் இவற்றைப்பெருக்கி, மேலோங்கினத்தும் உய்யுமாறு அறிவுச்சுடர் பரப்பிநின்றது அத்தேனு நகரம். இந்நகரவாசிகள் தமது நாட்டை ஹெல்லாஸ் என்றும் தம்மை ஹெல்லேனியர் என்றும் பெயரிட்டுவழங்கினர்கள். இவர்களுள் ஒரு பாலாருக்கு அயோனியர் என்று பெயர். இம்மொழியின்சிதைவே யவனரென்பது. இதனால் நம்தநூல்களில் யவனபுரம் என்று குறிக்கப் பட்டது இவ் வத்தேனுநகரத்தையே யென்பது தெளிவாகின்றது. அஃ தன்றியும் வடமொழியில் வானநூலியற்றிய ஆசிரியராகிய வராகமிஹிரர் யவனபுரத்துக்குக்கூறிய தேசாந்தர அக்ஷாம்ச பாகைகளை நோக்கு மிடத்து அத்தேனுநகரமே யவனபுரம் என்பது நிச்சயமாகின்றது. யவனபுரத்திலே கவிசிரேஷ்டர்களும் தத்துவநூலாசிரியர்களும் பலர் இருந்தமையினால், பிறநாடுகளிலிருந்து மாணவர்கள் அங்குச்சென்று கல்விபயில்வது இயல்பாகவிருந்தது. இத்தகைய பெருமைவாய்ந்த அத்தேனுநகரத்தார் தமது நாகரிகத்தைப் பிறருதவியின்றி வளர்த்துக் கொண்டார்களோ வென்றால், இல்லை. இவர்கள் எழுத்துமுறையைப் பினீசியரிடமிருந்து கற்றுக்கொண்டதாகவும், தத்துவஞானத்தை எகிப் தியரிடமிருந்து உணர்ந்துகொண்டதாகவும் பூர்வீகநூல்களிலே கூறு கிறார்கள். ஆராயுமிடத்துப் பரதகண்டத்திலிருந்தும் இவர்கள் பல விஷயங்களை யறிந்துகொண்டதாகத் தெரியவருகிறது. இவ்விஷயத்தை யடுத்த அதிகாரத்தில் விரித்தெழுதுவாம். எகிப்தியருடைய நாகரி கம் மிகவும் பூர்வீகமானது. ஆசுர் என்னும் பட்டணத்தைத் தலைந கராகக்கொண்ட ஆசுரேயநாட்டின் நாகரிகம் எகிப்தியநாகரிகத்துக்கும் மூந்தியது. இவ்வாசுரேய நாகரிகந்தானும் பாபிலோனிய நாகரிகத்தைப் பின்பற்றியது. பாபிலோனிய சீர்திருத்தம் சுமேரிய அக்கேடிய நாகரி கத்தினின்வழிவந்தது. இங்குக்கூறியன யாவும் ஆராய்ந்து தாபிக்கப் பட்ட உண்மைகள். சுமேரிய அக்கேடிய நாகரிகத்துக்கும் தமிழ் நாட்டுப் பூர்வீகநாகரிகத்துக்கும் ஒற்றுமை காணப்படுகிறது.

2. ஈற்றிற் குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றிப் பிரபல ஐரோப்பிய பண்டிதர்களாகிய ஸர். எச். எச். ஜான்ஸ்டன், எச். ஜி. உவெல்ஸ்,

உவில்விறட்ஸ்காவேன் பிளன்ற், ஹக்ஸ்லி இவர்கள் சொல்வதை மொழிபெயர்த்து எழுதுவாம். முன்னோர் இருவருஞ்சொல்வது, புதிய ஆராய்ச்சி முறையின் முடிபாகக் கண்டது; பிஷப் கால்டுவேல் பண்டித முடையகொள்கைக்கு மாறுபட்டது; யுக்திக்கு ஏற்றதாகத் தோற்று கிறது. அதுவருமாறு:—உலகத்தில் முதன்முதற் கட்டிடங்களையும் பட்டணங்களையும் உண்டாக்கியவர்கள் சுமேரியரென்னுஞ் சாதியார். இவர்கள் யூதவகுப்பு ஆரியவகுப்பைச் சேர்ந்தவர்களல்லர்; எங்கிருந்து வந்தார்களோ தெரியவில்லை. இவர்களுடையபாஷை பலுக்கிஸ்தானத் தின் சிலபாகங்களிலும் காக்கேசியமலைநாட்டிலும் உள்ள பாஷைகளையும் ஸ்பானியாவில் ஒருபாகத்திற் பேசப்படுகிற பாஸ்க் என்னும் பாஷையை யும் ஒத்திருக்கிறது. இப்பாஷைகளெல்லாம் திராவிடமொழிகளோடு நெருங்கியசம்பந்த முடையன. சுமேரியர் கோபுரத்தோடுகூடிய கோயில் களைக் கட்டினர்கள். நிப்பூர் என்னும் இடத்திலே தமது பிரதான தெய்வமாகிய "எல்—வில்" என்னுஞ் சூரியதேவனுக்கு ஒருகோயிலைக் கட்டியிருந்தார்கள். பிளன்ற், ஹக்ஸ்லி இவர்கள் சொல்லுவது:— எகிப்தியரும் திராவிடரும் ஒரே குலமுறையில் வந்தவர்களாகவிருத்தல் வேண்டும். முன்னளிற் கறுப்பென்றும் வெள்ளையென்னுஞ் சொல்லக் கூடாத மங்கல்நிறத்தினராகியவரும் மிகவுஞ் சீர்திருத்தமெய்தியவரு மாகிய ஒருசாதியார் ஐரோப்பாவில் இங்கிலாந்து பிராஞ்சு ஸ்பானியா என்னுமிவற்றிலும், மத்தியதரைக்கடலின் இருபக்கத்திலும், எகிப்தி லும், இந்தியாமுழுமையிலும், சினதேசத்திற் பசிபிக் சமுத்திரக்கரையி லும், அமெரிக்காவிற் பிரு மெக்சிகோவாகிய இரண்டுநாட்டிலும் பரவி யிருந்தார்கள். இவர்கள் சூரியனையுஞ் சர்ப்பங்களையும் சமயக்கொள்கை களிற் சம்பந்தப்படுத்தியும், இன்றும் இந்தியாவில்வழங்குகிற சுவஸ்திக அடையாளத்தையு மங்ஙனே சமயக்கொள்கைகளிற் கொண்டும் வந்தவர் கள். இவர்கள் கிறிஸ்தவாப்தத்துக்குப் பதினாயிரம் ஆண்டுக்கு முற் பட்டவர்கள். அதுமுதல் கி. மு. ஆயிரம் ஆண்டுவரையும் அதாவது பதினாயிரவருடத்துக்கு இவர்களுடையராகரிகம் நிலைபெற்றிருந்தது; வடக்கிலிருந்துவந்த வெள்ளைநிறமுள்ள ஒருசாதியார் இவர்களைத் தாக்கிவிட்டார்கள். ஐரோப்பாவின் தெற்கு மேற்குப் பாரிசங்களிற் புதியகற்காலத்தினர் ஆகிய இவர்கள் குறைந்தபடி பத்தாயிரம் வருடங் களுக்குத் தமது பாஷையைப் பேசிக்கொண்டுவந்தார்கள். ஆரியபாஷை

வருதலும் இவர்களுடையமொழி அருகி மறைந்துபோயிற்று. சென்ற வருஷத்திற் கிறீற் என்னுந் தீவி லகப்பட்ட கற்சாசனங்களையாராய்ந்த ஸர். எச். எச். ஜான்ஸ்டன் என்னும் பண்டிதர் கிறிஸ்தவாப்தத்துக்கு மூவாயிரம்வருஷத்துக்குமுன்னுள்ள அச்சாசனங்களில் எழுதப்பட்ட மொழியும் திராவிடமொழியோடு சம்பந்தமுடைய தென்கிறார்.

3. உற்றுநோக்குப்போது 'எகிப்தின் பிரதானநதியாகிய நீலநதி, சுமேரியதலைநகராகிய நிப்பூர் எல், வேல் என்னுங் கடவுட்பெயர்கள் தமிழ்மொழியாகவிருக்கின்றன. பின்னும் யவனமொழி எழுத்துக்களின் வடிவம் தமிழெழுத்துக்களோடும் கிரந்தலிபியிலுள்ள எழுத்துக்களோடும் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. இதனை விரிவாக யவன நாகரிகத்தை யாராயுமிடத்து ஆராய்வாம். சுமேரிய அக்கேடிய சமயக் கொள்கைகளும் விசாரிக்கத்தக்கன. முதலிலே இவர்களது அரசியல் நாகரிகத்தைச் சுருக்கமாகச் சொல்லி அப்பாற்செல்வாம். எரேக் என்னும் சுமேரியபட்டணத்திலே கிறிஸ்துவுக்குமுன் இரண்டாயிரத்தெழுநூற் றைம்பதாம் ஆண்டிலே சார்கோன் என்னும் அக்கேடியசாதியானொரு வன் தன்னுடைய வல்லமையினாலே சக்காவர்த்திபாகிப் பாரஸீகவிரி குடாமுதல் மத்தியதரைக்கடல்வரையுமுள்ள தேசங்களை ஆண்டுவந் தான். இவன் திருத்தமுற்ற சுமேரியமொழியையே அரசபாஷையாகக் கொண்டு தனதுநாட்டைச் சுமேரியஅக்கேடியம் என்று வழங்கினான். சிலகாலத்திற்குப்பின் கிழக்கிலுள்ள ஏலம் என்னும் தேசத்தவரும் மேற்கிலுள்ள அமோர் தேசத்தவரும் இந்நாட்டை நெருக்கி யுத்தஞ் செய்தார்கள். அமோரியர் வெற்றிபெற்று கி. மு. ஆண்டு இரண்டாயிரத் திற் பாபிலோனிய நகரத்தை ஸ்தாபித்தார்கள். இவர்களது அரசன் பெயர் ஹம்முரபியென்பது.

(தொடரும்)

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை, சென்னை.

பண்டித-மயில்வாகனன்
B. Sc., (Lond.)

ஐயவினவுக்குவிடை.

கம்பராமாயணம் அயோத்தியாகாண்டம் கைகேசிசூழ்வினைப் படலத்திலுள்ள "மாதர்கள்கற்பின்மிக்கார்" என்ற செய்யுளில் 'ஒத்தார்' என்ற வினைமுடிபுகளுக்கு ஹேதுக்களெவையென்றும், 'சாதுகை'க்குப் பொருளியாதென்றும் ஸ்ரீமத் சி. சிவசங்கர ஐயர் சென்ற ஆனிமாதத்துச் "செந்தமிழ்"ப்பகுதியிற் கேட்டிருக்கிறார். அச்செய்யுளின் இரண்டாவதடியில்," "மாந்தரெல்லாம்" என்று ஸ்ரீமத் சிவசங்கரஐய ரெழுதியிருப்பது "மகளிரெல்லாம்" என்றிருக்கவேண்டும். திருமயிலைவித்வான் சண்முகம்பிள்ளை பவர்களின்பதிப்பிலும், சோடசாவதானம் தி. க. சுப்பராயசெட்டியாரவர்களின்பதிப்பிலும், "மகளிரெல்லாம்" என்ற பாடமே காண்கிறது. 'மாந்தர்' என்றதன்பொருள் ஆண்மக்களாதலால், 'மாந்தரெல்லாம் சீதையையொத்தார்' என்னல் தக்கவுவமமாகாது.

'சாதுகைமாந்தர்' என்றதொடர் சற்குணத்தையுடையபுருடர், சாந்தமிக்கமனிதர் என்று பொருள்படும். சாதுகை=சற்குணம், சாந்தம் சாது என்ற வடமொழியின்பொரு ளஃதே. வடமொழிவழக்கில் க, க:, (கன்) என்ற எழுத்துப் பதங்களினீற்றில் அகைநிலைபாகப் பொருளின்றிச் சேர்த்துப் பிரயோகித்தல் பின்கூறும் திருட்டாந்தங்களால் விளங்கும். உதாரணம் :—

அவிக=அவி=ஆடு, சூரியன் ;
மணிக=மணி=ஆபரணம் ;
பாலக=பால=சிறுவன்.

அவ்வாறே சாது, சாதுக என்றுய்ச் சாதுகை என்று நிரிந்தது.

பின்னர் இச்செய்யுளிலடங்கிய உதாரவணிஅயவிளக்க ஐயரவர்கள் வேண்டுகின்றனர். பாட்டிற்கூறிய ஒவ்வொரு இனத்தவர்க்குமுள்ள மகிழ்ச்சிமிகுதியைக்குறிப்பான் கூறிய ஒப்புமையைத், திருமயிலைவித்வான் சண்முகம்பிள்ளை யவர்கள் இப்பாட்டினுரையில் விரிவாய் விளக்கியிருக்கின்றார்கள். அது வருமாறு :—

கற்புடையார் கணவனைபன்றிமகிழாமைபாற் சீராமன் முடிபுனைவ தாகமகிழ்வது கோசலை தன்மக னரசுபெறுவதுபோல்வதாகலின், 'கற்பின்மிக்கார் கோசலைமனத்தை யொத்தார்' என்றும், அந்தணர் தம்

வேள்விக்கிடையூறில்லாமைமகிழ்தலின் வசிட்டனையும், ஏனையமகளிர் காதலா னுடி மகிழ்தலின் 'சீதையையும் ஒத்தார்' என்றும், அவள் திருவின் திருவவதாரமாகலின், 'திருவினையொத்தாள்' என்றும், நகர மாந்தரெல்லாம் தங்காதற்புதல்வன்போன்மகிழ்கின்றமையின், 'தயர தன்றன்னையொத்தார்' என்றும் கூறினர்.

கே. ஜி. சேஷையர்,
திருவனந்தபுரம்.

ஓர் ஐயநீக்கம்.

சென்ற ஆனிமாதச் செந்தமிழ்ப்பகுதியிலே, நண்பரொருவர் "மாதர்கள் கற்பின்மிக்கார்" என்னுங் கம்பராமாயணச் செய்யுளின் பொருளுணர்ச்சியிற் சிறிது ஐயப்பாடுற்று வினவியிருந்தார். அப்பாட்டின்கண் வேறுளமாந்தரெல்லாம் என்று எழுதியிருப்பது, வேறுள மகளிரெல்லாம் என்றும், சாதுகை மாந்தரெல்லாம் என்றிருப்பது சாதகை மாந்தரெல்லாம் என்றும் இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. எனவே அச்செய்யுள்,

"மாதர்கள்கற்பின்மிக்கார்கோசலைமனத்தையொத்தார்
வேதியர்வசிட்டனெனத்தார்வேறுளமகளிரெல்லாஞ்
சீதையையொத்தாரன்னள்திருவினையொத்தாண்மற்றைச்
சாதகைமாந்தரெல்லாந்தசரதன்றன்னையொத்தார்"

என்று படிக்கத்தக்கது. இனி அதன் பொருள் பின்வருமாறு காண்க.

இரவிடைநிகழ்ந்த கைகேயிசூழ்வினையறியாத நகரமாந்தர்கள் விடிவுகண்டெழுந்து இராமபிரான்முடிபுனைதிருநாளென்றுஉவகைகூர்ந்து பரபரப்புடையராய் அவரவர்புரிதொழில் நிகழ்ச்சி கூறுவான்றொடங்கிக் கீழிரண்டுபாட்டானும் முறையே மாதரும் மைந்தரும் மகிழ்வடைதல் பொதுவகையாற்கூறி மேற் சிறப்புவகையால் விரிக்கின்றார் மாதர்கள் கற்பின்மிக்கார் என்றுதொடங்கி.

மாதர்கள் கற்பின்மிக்கார் என்றது, மக்களைப்பெற்று மனையறத் தின்மாண்புமிக்க முதுமகளிரெல்லாரும் என்றவாறு. கோசலை மனத்தை யொத்தார் என்றது, தத்தம் புத்திரனுக்குத் திருமுடிசூட்டும் திருவிழாவாகநினைந்து இல்லங்களை அணிந்து,வந்தவந்த சுற்றத்தவர்க்கு நல்லவாவுகூறி விருந்துபடைக்கவேண்டுவனவும் பிறவும் புரிந்திருந்ததன் மையாற் கோசலைமனம்போலும் மனமுடையராயினர் என்றவாறு.

வேதியர் வசிட்டனெத்தார் என்றது ஒதியுணர்ந்தவராய வேதியர்க ளெல்லோரும் தம்மாணவற்குத் திருமுடிசூட்டும் திருநாள் விடிகிற தென்றெண்ணி நான்காம்யாமத்தே பள்ளியுணர்ந்தெழுந்து நன்னீர் தோய்ந்து காலைக்கடன்களித்துத் தூய்மையுடையாய் அரசிருக்கையிற் றடையின்றிச் சென்று ஆதனங்களிலமர்ந்து அபிடேகத்துக்குரிய மந்திரஜபங்களைச்செய்துகொண்டிருத்தலான் வசிட்டனெடாப்பாயினர் என்றவாறு.

வேறுள மகளிரெல்லாம் என்றது, இல்லறவொழுக்கம்பயில் வோரும் பிறருமாகிய இளமகளிரெல்லாரும் என்றவாறு. சீதையை ஒத்தார் என்றது, செல்வத்திற் குறைவிலாதலாற் சிறந்த திருநாளணி களாலும் ஆடைகளாலும் பொலிவுபெறச்சிங்காரித்துத் தனதுநாயக னுடைய முடிசூட்டு மங்கலநாளைக்காணும் விழைவுடையசீதையிற் சிறி தும் தாழாதுவிளங்கினரென்றவாறு.

அன்னாள் திருவினை ஒத்தாள் என்றது, அத்தகைய சீதைபோ வென்னில் இராமாபிடேகம்பொருந்துதற்கிருந்த நெருநலொருநாளைப்பிரி வாற்றாளாய் இராமபிரானைபடைதற்கு மிகவும்விதுப்புற்றிற்பதுபற்றி அவ்வாறிருக்குந் திருவினுக் கொப்பாயினளென்றவாறு. சண்டநெருந லொருநாளைப்பிரிவு என்றது, இராமன் வசிட்டரிடத்து அரசியல்பற்றிய உபதேசம்பெறுதற்பொருட்டுச் சீதையைப்பிரிந்து விரதவொழுக்கின் மேற்கொண்டதைக்குறித்தது. திருவென்றது இங்கு ராஜ்யஸ்ரீயை. அரசியற்றிருவும் தனக்கு நாயகனாக இராமபிரானை விரைவினடைதற் கவாவினள். அஃதேபோற் சீதையும் விரைவினில் இராமனுடன்வீற் றிருக்கும் முடிபுனைகடிகைபை முன்னுற அவாவினளனைனைப் பொருந்துமாறு நோக்கிக்கொள்க.

மற்றைச் சாதகமாந்தரெல்லாம் என்றது, சாவக்கடவ மூப்பான் முதிர்ந்து தளர்வெய்தி எழுந்து விழுந்து புறண்டு உருண்டு வருந்தும் மாந்தரனெல்லோரும் என்றவாறு. தசரதன்றன்னையொத்தார் என்றது, இராமனை முடிசூட்டிப்பார்க்கும் பாக்கியமில்லாமையை எண்ணி மன மொழிமெய்களால் வருந்துதலால் அத்தகைமையுடைய தயரதனுக்கு ஒப்பாயினர் என்றவாறு. தயரதன் அக்கிலையடைந்திருத்தலை சுந்தர் பத்தைநோக்க வெளிப்படை; பிறவும் அன்ன.

T. N. அப்பனையங்கார்,

மதுரை.

ஐயவினவுக்குவிடை.

———:(o):———

சென்ற ஆனிப்பகுதியில் ஸ்ரீமத். சி. சிவசங்கரையரவர்கள், திரி சிரபுரம் மஹாவித்வான் மீநாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றிய துறை சையந்தாதிச்செய்யுளொன்றுக்குப் பதவுரையெழுதும்படிகேட்டிருந்தார் கள். அச்செய்யுளும் அதற்குப் பதவுரையும் வருமாறு :—

வதனமைந்தான்குஞ்சியாகாய்ன்சேய்முனம்வந்தநம
வதனமைந்தான்குஞ்சிதையாவியமன்றன்வாழ்வுமைந
வதனமைந்தான்குஞ்சிசூழ்வயற்கோமுத்திமன்னினிய
வதனமைந்தான்குஞ்சிதபாதமேபல்வளத்திருவே.

(பதவுரை) வதனம் ஐந்தான்—ஐந்து திருமுகங்களையுடையவன் ; குஞ்சியாகாயன்—அண்ட்த்தையளாவிய சிகையையுடையவன் ; சேய் முனம்வந்த நமவதன்—மார்க்கண்டன்முன்வந்த நமனைக்கொன்றவன் ; நமைந்தான் கும் சிதையா இயமன்றன் வாழ்வு—ஆணவ இருள் நீங்காத இயமனென் னும் ஒருசூரியனது வாழ்வினைக் கெடுத்தவன் ; உமை நவ தனம் மைந்தான்—உமாதேவியினது புதுமையாகிய தனத்துக்குக் குழைந்தவன் ; குஞ்சிசூழ்வயற் கோமுத்தி மன் இனிய அதன் அமைந் தான்—பறவைக்குஞ்சுகள் சூழ்ந்திருக்கின்ற வயலையுடைய கோமுத்தி யாகிய நிலைபெற்ற இன்பத்தையுடைய அதனிடத் தமைந்தெழுந்தருளி யிருந்தவன் ; குஞ்சிதபாதமே பல்வளத்திருவே—அவனுடைய நடன பாதமே பலவளங்களையுந்தரும் பெருஞ்செல்வமாம்.—எ—று.

இங்ஙனம்,
திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்சைவநூற்பரிசோதகருமான
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

———

'நந்திக்கலம்பகம்'

சமீபகாலத்தில், தேசசரித்திரசம்பந்தமான ஆராய்ச்சி விருத்தி யடைந்துவருவது மிகவும் பாராட்டத்தக்கது. தென்னிந்திய பூர்வீக ஆசிர்களைப்பற்றியும், அவர்காலத்து நாகரிகத்தைப்பற்றியும் தமிழ் நூல்கள் விரிவாய்ப் புலப்படுத்துகின்றன. எனினும், சேரசோழபாண் டிய வம்சங்களைக்குறித்தமட்டில், தமிழில் வெகுவாக நூல்கள் அகப்படி

கின்றனவேயொழிய அவ்வம்சத்தைப்போற் பிரக்யாதிபெற்றிருந்த பல்லவ அரசர்களுக்குறிக்கும் தமிழ்நூல்கள் பல இல்லாதது வியப்பையும் துயரத்தையும் தருகிறது. பெரியபுராணத்திலும், தேவாரத்திலும், நாலாயிரப்பிரபந்தத்திலும் மட்டும் சிற்சிலஇடங்களிற் குறிப்பாகப் பல்லவ அரசர்களின் புகழும் கீர்த்தியும் வெளிவருகின்றனவேதவிரப் பழைய தமிழ்நூல்கள் ஒன்றிலும் பல்லவசக்ரவர்த்திகளின்பெருமையைக் குறிப்பிடக்காணேம்.

இதன்காரணம் என்னவென்று நிச்சயமாகச் சொல்லமுடியவில்லை. பல்லவசக்ரவர்த்திகளுக்குறிக்கும் பலநூல்கள் தமிழிலிருந்து அழிந்து போயினவோ அல்லது, சில சரித்திரக்காரர்கள்சொல்லும்வண்ணம், பல்லவர்கள் தென்னிந்தியாவிற் புதிதாகக்குடியேறினமையாலும், அவர்கள் இந்தியாவுக்குப் பாரசீகத்தையடுத்த பிராந்தியங்களிலிருந்து வந்த காரணத்தாலும் அன்னியரென்று அவர்களைக்குறித்து தமிழ்ப்புலவர்கள், பிங்கலந்தைநிகண்டைபோட்டிப் "பல்லவர் கயவர் பதகர் நீசர்" என்று ஒருவித இகழ்ச்சியால் நூல்கள் இயற்றுதொழிந்தனரோ அறியோம். எது எவ்வாறுயினுமாகுக. பல்லவசக்ரவர்த்திகளுடைய கீர்த்தியும் புகழும் அளவற்றன. மஹேந்திரவர்மன்காலத்தும், அவனது புத்திர பௌத்திரர்கள், நரசிம்மவர்மன், பரமேச்வரவர்மன், ராஜசிம்மன் முதலானோர்காலத்திலும் கட்டப்பட்ட கோவில்களும், ரதங்களும், தடாகங்களும், மலைக்குகைகளும் இற்றைக்கும், அவர்களின்பெருமையை நன்கு விளக்குகின்றன. இம்மன்னராற் பல்லவக்ஷேத்தத்திலும், புராதனத்தமிழிலும் எழுதப்பட்டிருக்கும் சாஸனங்கள், அவர்களின் தெய்வபக்தியையும், தருமசிந்தையையும், போர்வலியையும் வெகுநன்றாய்ப் புலப்படுத்துகின்றன. இவர்கீர்த்தியைக் "கலிங்கத்துப்பரணி", "விக்கிரமசோழனுலா" முதலிய தமிழ்நூல்கள் புகழாதொழிந்தமை மிகவும் வியப்பைத் தருகிறது.

ஆனலும், இற்றைக்குச் சுற்றேறத்தாழ 20, 30 வருஷங்களுக்கு முன்னர், "நந்திக்கலம்பக"மென்ற ஒருதமிழ்நூல் சென்னையில் அச்சிடப்பட்டது. இந்நூல் இப்பொழுது கிடைப்ப தருமையாயிருக்கிறது. இந்நூல் நந்தி என்னும் பல்லவஅரசனின் இளையகம்பியாற் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இவ்வரசன் கி. பி. எட்டாவது நூற்றாண்டின் இறுதியில் ஆண்டிருந்த "தெள்ளாறெறிந்த" நந்திவர்மன் என்று தெரிகிறது. இந்நூலிற் சுற்றேறத்தாழ 115செய்யுட்கள் உள. இது, கையெழுத்துப்பிரதிகளிலிருந்து அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது.

இந்நூலால் நந்திவர்மன் என்னும் அரசனைக்குறித்துத் தெரியக் கிடக்கும் விஷயங்கள் பின்வருமாறு:—

இவன் பல்லவவமிசத்தவன் (செ 1, பல்லவர்தோன்றல் பைந்தார் நந்தி) (பல்லவர்கோனந்தி, செ 15). இவனது தலைநகரங்கள் கச்சி, மல்லை, மயிலை என்பன என்பது 8, 10, 22, 1, 3, 46,–14, 69 செய்யுட்களால் விளங்குகிறது. இவனது ராஜ்யாதிகாரம், "காவிரிவளநாடன்" (செ 74) "கொங்கர்", (செ 41) "அளகைகாடன்" (செ 39) என்பனவற்றாலும் இன்னும், "குடக்குடைவேந்தன்" என்பதாலும், வெகுவிஸ்தாரமாயிருந் திருக்கவேண்டுமென்று தெரிகிறது. வடவேங்கடத்துமன்னரும் இவ னுக்குக் கீழ்ப்பட்டிருந்தனர் என்றும் (செய் 55, 67) தெரிகிறது.

நிற்க, இவ்வரசன் தெள்ளாற்றிலும், பழையாற்றிலும், வெள்ளாற் றிலும், நல்லாற்றிலும் (செ 2, 31, 23, 61) தனது பகைவரை முறிய அடித்ததாகப் புகழப்படுகிறான். இவற்றுள், தெள்ளாற்றில் அடைந்த வெற்றியே மிகவும் பெருமைவாய்ந்திருந்தபடியால் இவன் சிலாசாஸனங் களில், "தெள்ளாறெறிந்த" நந்திவர்மன் என்று குறிப்பிடப்பட்டிருக் கிறான். இவற்றுள், தெள்ளாறு என்பது வந்தவாசித்தாலுக்காவில் இருப்பதாகத்தெரிகிறது.

நிற்க; நந்திவர்மன் தமிழ்ப்புலவரைப் பெரிதும் ஆதரித்தானென்பது "பைந்தமிழை ஆய்கின்ற நந்தி" "செந்தமிழின் சாற்றைப்பிழிந்து செழுஞ்சீதச் சந்தனமென்றியாரேதடவினர்" (செய்–104) என்பதனால், தெரிகிறது.

இவ்வரசனுக்கு நந்திவர்மன் என்னும் பெயரைத்தவிர, "வாதுங் கன்", "உக்கிரமகோபன்", "அவனிநாரணன்" முதலான பல கௌரவப் பெயர்களும் இருந்தனவென்றும், இந்நூலைப்படிப்பதால், தெரிகிறது.

மேற்கூறியவற்றால், "நந்திக்கலம்பக" மென்னும் தமிழ்நூல், சரித் திரவாராய்ச்சி செய்பவர்க்குப் பெரிதும் உபயோகப்படுமென்பது நன்கு புலனும். எனவே, சரித்திரசம்பந்தமான அந்நூலைப் பிழையறப் பரி சோதித்து வெளிப்படுத்தத் தமிழபிமானிகளை வேண்டிக்கொள்கிறேன்.

125 Coral Merchant St.
G. T. Madras.

T. R. கோபாலசாமி.

திருச்சிற்றம்பலம்.

தமிழ்மொழிக்கு வடமொழி செவிலித்தாயாகுமா?

கடந்த 'செந்தமிழ்' 8-ஆம் பகுதிபிற் 'பாணினீயசூத்திரிகை' யென்னும் பொருள்பற்றித் திருவாங்தபுரத்துத் திருவாளர் வையாபுரிப் பிள்ளை B.A., B.L., அவர்கள் ஒரு கட்டுரை யெழுதியிருந்தார்கள். அதன்கண், ஆரியமென்னும் வடமொழியே தமிழ்க்குத் தாய்மொழியாகி, அற்றைநாண்முதலாக வின்றுகாறும் வளர்த்துவருகின்றதென்பது அவர்களுக்கு உடம்பாடாகின்றது. அதனை வலியுறுத்த அவர்கள் எடுத்துக்காட்டு மேதுக்கள் பின்வருவன:—

க. உலகியல்வழக்கானும் புலநெறிவழக்கானுந் தமிழ்மொழியின்கண் திகழ்கின்ற மொழிகளுட் பெரும்பான்மையவெல்லாம் வடமொழிச்சொற்களாதல்.

உ. 'இலக்கணக்கொத்து' நூலார் 'அன்றியுந் தமிழ்நூற் களவிலே யவற்று-ளொன்றே யாயினுந் தனித்தமிழுண்டோ' வென வினையது.

ங. தமிழ் கல்விசைப்புலவர் நூற்குரியபொருள்களென வெடுத்துக்கொண் டுரைத்தவெலாம் வடமொழிநூற்பொருள்களாதல்.

ச. அகத்தியர் தொல்காப்பியமுதலிய தமிழிலக்கணங்கட்குப் பாணினீயமும் ஐந்திரமும் முதனூலென்னும் 'பிரயோகவிவேகநூலா'ர் கூற்று.

ஞ. மாதவச்சிவஞானயோகிகள் 'வடமொழியுணர்ந்தார்க்கன்றித் தமிழியல்பு விளங்கா'தெனக் கிளக்கும் 'தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தி'க் குறிப்பு.

இவையன்றிப் பிறவுமுளவேனும் விரிவுக்கஞ்சி விடுகின்றேம்.

ஆதலின், தெய்வச்'செந்தமிழ்மொழிக்குச் செவிலித்தாயென வடமொழியைக்கூறுதலே பொருந்துவதாகு'மெனப் பிள்ளையவர்கள் கூறினு

மவர்கள் நூனுக்கவுரையின்கட் கருத்தொருப்படுகின்றிலேமாதலான், அஃது எம்மனோரால் றழுவப்படுவதன்றெனநிறுத்தியதனை நிரலே யாராய்ந்து பரிகரித்து எமது உண்மைக்கருத்து நிலையிடுவாம்.

முதற்கண், பாடல்சான்ற புலவராற்றுவழக்கினும் உலகவழக்கினு மாகத் தமிழிலுள்ளசொற்களில் ஒருபெரும்பகுதி வடமொழிப்பதங்க ளாம். இது, வடமொழியைச் செவ்வித்தாயெனற்குப் பொருந்துவதா மென வூகிக்கின்றார்கள்; பிள்ளையவர்கள். தமிழ்மக்கள்வழங்கிய தமிழ் மொழி மிகப்பழையதாகலும், அஃ தொரு தனித்த முழுமுதற்சொல்லா தலுங் கருதாதபிள்ளையவர்கள் பிற்றைஞான்றுதோன்றிய சிலதமிழ்நூல் களில் வடசொற்கள்சில வழங்குதல்பற்றித் தமிழுக்குச்செவ்வித் தாயென வடமொழியைக்கூற முன்வந்தார்கள். அங்ஙன மதுகொண்டு உரைத்தார், தமிழின்கணுள்ள வரியபெரியநூல்களெல்லாம் கி. பி. பதி னோராவது அல்லது பன்னிரண்டாவது நூற்றாண்டிலேதா மியற்றப் பட்டனவென் றுரையாததென்னைகொல்! இவ்வாறெழுந்த கூற்றுக்க ளெல்லாம் தருக்கநூன்முறைபிறழ்ந்துகூறப்பட்டனவாகலின் அவற் றின் ஒல்லாமை யீண் டறிதல்வேண்டுவதொன்றும். ஒருமொழி பிறி தொருமொழியோடு இனமுடைத்தோ வன்றே வென வறிதல், அம் மொழிகள் முதன்முதற் றோன்றுங்காற் பிறந்த சொற்களைவைத்து ஒத்துநோக்குமுறையான்மாத்திரம் பெறப்படுவதாம். மக்கள் தங்கருத் தைப் பிறர்க்குப்புலப்படுத்தல்வேண்டி இட்ட வொலிக்குறிகளே சொற்க ளென்று கொள்ளப்படும். ஒருவர் மற்றொருவரிடத்துப் பழகப்புகுந்த விடத்துப் பேசுகின்ற தம்மையும், முன்னின்றுகேட்போரையும், பேசப் படுகின்ற பிறரையுஞ் சுட்டுதற்குச் சொற்கள் வேண்டுவர்; அச்சொற்கள் நான், நாம்; நீ, நீர்; அவன், அவள், அவர்; அது, அவை என்பனவாம். இவை யொவ்வொருமொழியினும் முற்பிறந்தனவாமாகலின் அவற்றை ஒத்துநோக்குதலான் மொழி ஒற்றுமை நன்கு தெளியப்படும். வட மொழியில் அகம், வயம் என்பன முறையே தன்மையொருமைப்பன்மை யாகும்; த்வம், யூயம் என்பன முன்னிலையொருமைப் பன்மையாகும்; அஸௌ, அமூ:, அதः, அமூனி என்பன படர்க்கை உயர்திணை யஃறிணை யொருமைப்பன்மையாம். தமிழினும் வடமொழியினுமுள்ள இவ்விடப் பெயர்கள் தம்முட் பெரிதும் பொருந்துமாறு இன்மையால் அவை வேறு வேறுதல் துணியப்படும். இனி மக்கள் தம்மொடு இனவுரிமையுடை

யாரைக் குறிக்குஞ்சொற்களும் அவ்வாறே முற்பிறந்தனவாம். தமிழ் நன்மக்கள் தமக்கு உறவினராவாரை அம்மை, அப்பன், பிள்ளை, கணவன், மனைவி அண்ணன், தம்பி, அக்கை, தங்கை யென வழங்குவர். ஆரிய ரவரையெல்லாம் முறையே மாதா, பிதா, சுத அல்லது பால, பதி:, பார்யா, அக்ரஜா, ப்ராதா, ஸ்வஸா எனப் பெயரிட்டு வழங்குவர். இம்முறைப்பெயர்களுந் தம்மோடு இனப்படுதலின்மையால் இவையும் வேறுவேறென்பது துணிக. இன்னு மிவ்வாறே உணவுப்பெயர், எண்ணுப்பெயர், காலப்பெயர், இடப்பெயர், பூதப்பெயர், விலங்கின்பெயர், உறுப்புப்பெயர், வினைப்பெயர் முதலியனவும் இவ்விருமொழிகளினும் வேறுபடுதல் காண்க. அவையெல்லா மீண்டு விரிப்பிற் பெருகும்; வந்துழிக் காண்க. இவற்றினும் பிறவாற்றினும் இவ்விருமொழியுந் தம்முளொன்றோடொன் றியைபில்லாத் தனித்தனிமொழிகளாதல் நன்குபெறப்படும். இனித் தண்டமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளுவ, குறும்ப, இருள, எர்க்கலா, எனுமி முதலானமொழிகட்கெல்லா மிப்பத்து வகைச்சொற்களும் பொதுப்படநிற்றல் யாண்டுங் கண்கூடா யறியக்கிடத்தலின் இவ்வொன்பதுமொழிகளும் ஒன்றோடொன் றினப்பட்ட ஒருதொகுதியாமென்க. இனி வடமொழியைவழங்கு மாரியரும், தமிழ் மக்களும் பிற்றைஞான்று மிகநெருங்கி மருவிவாழ்ந்தனரென்பது காணப்படுதலின் வடமொழிக்குரிய சொற்கள் தீந்தமிழினும் நறுந்தமிழிலுள்ள சொற்கள் ஆரியத்தினுஞ் சென்று கலப்புற்றன. அவர் அங்ஙனம் நெருங்கிவாழாது வேறுயிருந்தகாலத்தே யெழுதப்பட்டநூல்களில் விரவிய சொல்வழக்குக் காணப்படுதல் சிறிதும் இல்லையென்க. சங்கச் செந்தமிழ்நூற்களில் ஓரோவோராரியச்சொற்கள் காணப்படுத லென்னெனின்:—ஆரியர் தமிழ்மக்களோடு அக்காலத்துத்தான் விரவுதற்குப் புகுந்தனராகலின் அச்சொற்கள் ஓரோவொன்று சுத்தச்செந்தமிழ்நூல்களினுங் காணப்படுவனவாயின. காணப்படினும் நூற்றுக்கு ஒன்றல்லது இரண்டுவிழுக்காடு மிக வருகிவந்ததேயன்றிப் பிற்றைஞான்றை நூல்களிற்போலப் பெருகியவரவினவாய் அவை வந்தில்லையென்க.

இனி அள், கள், கல், சு, சா, பண், பக், மின், வள், நல், மு முதலான சுத்தத் தனிச்செந்தமிழ்ப்பகுதிகளிற்பிறந்த ஆணி, அடவி, கடு, கலா, குடி, குண்டம், சூனி, குளம், கோட்டை, சவம், சாயா, பட்டினம், பாக்கம், மீனம், வனேயம், நாரங்கம், முகம் முதலான தனித்தமிழ்மொழிகள், வடநூல்களினும் ஆரியரது உலகவழக்கின்கண்ணும் வழங்குதல்

பற்றிப் பிள்ளையவர்கள் ப்ரதுகூறுவார்களோ? மாண்டமிழே வடமொழிக்கு நற்றுப் என்பார்கள்போலும்! ஒருமொழியின்கண் ணுள்ளசொற்கள் பிறி தொருமொழியகத்துவிரவிப்புகுதல், அம்மொழியினப்பயின்ற மக்க ளின்கூட்டுறவை விளக்குவதன்றி ஒன்றற்கு மற்றொன்று செவிலித்தா யெனவும், கோடாய் எனவும், தோழியெனவும் படுதல் நியாயநூற்கு ஒல் லாமையின் அது சாலாதென்க. என்னை? இற்றைஞான்று ஐரோப்பிய மக்கள் பலர் கூட்டுறவால் எமது செழுந்தமிழ்மொழியின்கண்ணே அவர் மொழிகள்சிலவும் அவர்மொழிகளுள்ளே நங் கன்னித்தமிழ்மொழிகள் சிலவும் விரவியமைகொண்டு தமிழிற்கு ஐரோப்பியமொழிகளே செவிலித் தாய்களெனல்வேண்டுமென் பார்க்கு இறுக்கலாம்வழியின்மையின், பிள்ளை யவர்கள்பொருத்துமாறு யாங்ஙனமென் றுழிக.

இனிச் சொல்வழக்கானேயன்றிச் சொல்லுச்சாரணமுறையானுந் தமிழ் மிகப்பழையதொன்றுதல் காட்டப்படும். தமிழில்வழங்கும் எல்லாச்சொற்களின்முதலினும் ட், ண், ர், ல், ழ், ள், ற், ன் என்னும் எட்டெழுத்துக்களும் நில்லாவென இலக்கணநூலில் ஒருவிதி காணப் படுதல் யாருமறிவர். 'டமருகம்,' 'ரகு,' 'ராமன்,' 'லம்பகம்,' முதலியன வாக ஆரியமொழிச்சொற்கள் அவ்வெழுத்துக்களை முதலிற்கொண்டு வருமாகவும், முதுதமிழ்மட்டு மங்ஙனம் அவற்றை முதற்கண்நிறுத்துக் கொள்ளாமையும், அப் பிறமொழிச்சொற்களைத் தானெடுத்துவழங்கும் போதும் இடமருகம், இரகு, இராமன், இலம்பகம் என உயிர்முத னிறுத்துவழங்குதலும் என்னையென்றுராய்கின்றுழி அதனியல்பு நன் குணரக்கிடக்கும். படைப்புக்காலத்தொடக்கத்திலேதோன்றியமக்களியல் பும் நம்மனுபவத்திற்காணுஞ் சிறுமகாரியல்புந் தம்மூட் பெரும்பான்மை யுஞ் சமமுடையனவாம். இஃ தெல்லார்க்கு மொத்ததாம். பிள்ளைப்பரு வத்திலே சொல் உச்சரித்தற்கு இன்றியமையாக்கருவிகளான இதழ், நா, பல், அண்ணங்கள் வேண்டியவாறியங்காமையின் அப்பருவத்தே யம் மகார் வழங்குஞ்சொற்கள் மிகவுஞ் சிதைவுபடும். சிறார் 'ராமா' என்பதனை 'ஆமா' வென்றழைப்பர்; இவ்வுண்மை நாடோறும் நம்மனுபவத்திலிருக் கின்றது. முன்னை மொழிக்குமுதலாகவெனப்பட்ட எட்டுமெய் யெழுத்துக்களும் நா மேலண்ணத்தைச்சென்றுதொடும் முயற்சியாற் பிறப்பனவாம். நாவை மேலேசேர்த்தியிச்சரிக்கு மம்முயற்சி பிள்ளைப் பருவத்தேதோன்றுமையின், அப்பருவத்தேபிறக்குஞ்சொற்களெல்லாம்

அவ்வெழுத்துக்களையுடையனவாகா. படைப்பாரம்பத்திற்றோன்றிய மக்களதியல்பும் பிள்ளைப்பருவத்தோடியைந்ததாகலின் அஞ்ஞான்று அவர் பிறப்பித்தசொற்களிலே அவ்வெழுத்துக்கள் காணப்படாவாயின. இதனால், தனித்தமிழ்ச்சொற்கள் மக்களுடைய முற்பருவத்திலே தோன்றி நிலவுதலுற்றனவென்பது எளிதிற் பெறப்பட்டது. வடமொழிமுதலான மற்றைமொழிச்சொற்கண்முதலிலெல்லாம் அந் நாவெழுத்துக்கள் நிற்றலறியப்படுதலினவை மக்களுடைய பிற்பருவத்திலே தோன்றியவாமென்பது துணிபொருளாம். இனி இப்போது நூல்வழக்காயுள்ள வடமொழி யெஞ்ஞான்றும் பேசப்பட்டதில்லையென்றும், இதற்குத் தாய்மொழியான ஆரியமே யங்ஙனம் பேசப்பட்டதொன்றுமென்றும் அம்மொழிவல்ல பண்டிதர்கள் உரைக்கின்றார்கள். இவ்வாற்றால் மக்களது முற்பருவத்திலேபிறந்த நந்தமிழ்மொழி அவரது பிற்பருவத்திலேதோன்றிய 'சமஸ்கிருத'மொழிக்கு மிகவும் முற்பட்டதாதல் முடிந்த உண்மையா மென்க.

இனி யடுத்ததாக, "எக்காலத்து முதன்முதற் றமிழ்நூல்கள் இயங்கத்தொடங்கினவோ அக்காலத்துத்தானே வடசொற்களுந் தமிழிற் பயின்றுவந்திருக்கின்றன. இதுபற்றியே, 'இலக்கணக்கொத்து' நூலாரும் "அன்றியுந் தமிழ்நூற் களவிலே யவற்று—ளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ" வெனக்கூறினர் என்கின்றார்கள் பிள்ளையவர்கள். இவ்விரண்டாமேதுவுக்கையைந்தன சிலபெற்றிகள் முன்னரே தெளிவிற் புகன்றுள்ளோம். அதனையும் நோக்குக.

மற்று, ஒருமொழியின்கண் பிறமொழிகள் பயின்றுவரல் அம்மொழியின் வளனையும், நாகரிகமுதிர்வையுங் காட்டுவதன்றி யம்மொழிக்குச் சிறுமையைப்பயத்தல் யாண்டுங் கண்டிலேம்.

இந்நிலவுலகிற் பழமைக்காலந்தொட்டு இன்றுகாறும் வழங்கிவரும் மொழி தமிழ் ஒன்றேயாமென்பது சான்றோரெவர்க்கும் இசைந்ததொன்றும். மற்றைமொழிகளிற்சில பன்னூற்றாண்டுகட்குமுன்னே யிறந்து போயின; பல சின்னூற்றாண்டுகளாகவே தோன்றி நடக்கின்றன. சில பழமையாகி யிறந்தன. சில புதுமையுற்றுப் பிறந்தன. பழமையும் புதுமையு மொருங்குடைய ஒரு மொழியை யவற்றினிடத்தேகாணல் இயலாது. மற்றுத் தமிழ்மொழியேயோ பழமைக்குப்பழமையாய்ப் புது

மைக்குப் புதுமையாய்த் தன்னியல்புபிறழாது, ஏறக்குறைய மூன்றாறு நூராயிரம் மக்களினிடையே உலாவிவருகின்றது. இங்ஙன மிது பண்டு தொட்டே உயிரோடு விளங்கிவருதலின் முற்காலத்துவழங்கிய மொழிச் சொற்கள்சிலவும் பிற்காலத்துநடைபெறும் மொழிச்சொற்கள் சிலவும் இதன்கண்ணே கலந்துகாணப்படுதல் இயற்கையாம் என்க. யாங்ஙன மெனின், நீண்டகால முயிரோடிருக்குமொருவன் பலநாடுகளினுஞ் சென்று முயலுந் தொழின்முபற்சியும் மிகுந்த சுருசுருப்புமுடையவனு யிருந்தால், அவன் றனதினமைக்காலத்திற் றன்னோடிருந் திறந்துபோ னவர் வைத்த பொருள்களிற்சிலவற்றையும், தனதுபிற்காலத்திற் றன் னோடிருப்பவர்வழங்கும்பண்டங்களிற் சிலவற்றையும் கையாளநேர்வதே போல உயிரோடு சுருசுருப்பாய் உலாவிவருந் தமிழ்மொழியுந் தான் வழங்கிய பண்டைநாளில் வழங்கியிறந்த ஆரியம், இலத்தீன் முதலான மொழிச்சொற்கள் சிலவற்றையும், இஞ்ஞான்று தன்னோடுசேர்ந்துலாவும் ஆங்கிலம், துலுக்கு முதலாம் மொழிச்சொற்கள் சிலவற்றையுந் தான் எடுத்துப் பயன்படுத்திவருகின்றது. பின்னு மிதனை விளக்கிக்காட்ட வேண்டின், உயர்ந்த மலைமுகட்டில் என்றும் நீருறும் ஒருசுனையிலிருந்து இடையறாது ஓடிவரும் ஓருவிநீருக்குத் தமிழை ஒப்பிடலாம். இவ் வருவிநீர் ஓடிவரும் வழியினிடையிடையே சுரப்பின்றிச் சேறும்நீருமாய் நிற்கும் குளங்குட்டைகட்கு வழக்கிலில்லாத வடமொழி, இலத்தீன் முத லாய மொழிகளையும், இன்னு மவ்வழியின்கீழே யிருபாலும் ஆங்காங்குப் புதிதுதோன்றித் தனித்தனியேயோடும் யாறுகளுக்கு ஆங்கிலம், துலுக்குமுதலாம் மொழிகளையும், இவ் யாறுகளிலிருந்து பிரிந்துவந்து அவ்வருவியோடுகலக்குஞ் சிறுசிறுகால்களின்நீருக்கு அம்மொழிகளி லிருந்து தமிழில்வந்துகலக்குஞ் சிலசொற்களையு மொப்பாகச்சொல்ல லாம். பன்னெடுங்காலமாக் வறளாது ஓடிவரும் தமிழருவியானது தான் வரும்வழியிலுள்ள ஆரியம்முதலான பழைய குளங் கூவல்களிற்சென்று அவற்றின் சொற்களாகியநீரையுந் தன்னோடுகலப்பித்துப் புதியவாக்கிப் பின்னும் இடையிடையே தன்கண்வந்துகலக்கும். பிற்றைக்காலத்துச் சொற்களாகிய சிறுகால்களின் நீரையுந் தன்னுருவாக்கித் தன்னைவழங் கும் நன்மக்கட்குப் பெரிதும் பயன்பட்டுவருகின்றது. இனி யொரு மொழிச்சொற்கள் மற்றொருமொழியில்வந்து கலக்கவேண்டுவதுதான் என்னையென்று வினவுமிடத்து, ஒரு மொழியினைப் பேசும்மக்கள் தம்

நாட்டையுந் தம்மினத்தாரையும் விட்டுநீங்காமலிருக்கும்வரையில் அவர் தாமிருக்கும்நாட்டின்கண்ணே பிறமொழிபயிலும் பிறநாட்டார்வந்து சேராதிருக்கும்வரையில் அவர்பேசும் மொழியில் அயன்மொழிச்சொற்கள் வந்து விரவுதற் கிடமேயில்லை. அங்ஙனமின்றி, அவர் பலநாடுகளையும், அந்நாடுகளிலுள்ள பலதிறப்பட்டமக்களையும் போய்க் கண்டும், அவர் நாட்டுப் பண்டங்களைத் தாம் விலைக்குக்கொண்டும், தம்நாட்டுப்பண்டங்களை யவர்க்கு விற்றும், அவர் தம் வழக்க வொழுக்கங்கள் சிலவற்றைத் தாம் பற்றியும், தமக்குரிய சிலவற்றை யவர் கைப்பற்றுமாறுதந்தும் ஒருவரது நாகரிகத்தை யொருவர்பின்பற்றியும் வொழுகும் உயர்ந்த அறிவும் விழுமியநடையும் வாய்ந்தவர்களாயிருந்தால் அவர்பேசும் மொழியில் மற்றமொழிச்சொற்கள்புகுந்து கலவாமலிரா. ஆகவே யிம்முறை கொண்டுநோக்கின், பல்லாற்றானும் உயர்ந்த நாகரிகவாழ்க்கையினையுடையராயிருந்த தமிழ்மூதுமக்கள் வழங்கிவந்த தமிழிற் பிறமொழிச்சொற்கள் சில வந்துகலத்தல் இயல்பேயாமென்பது உணரப்படும். அங்ஙனமாயின், பழையகாலத்துத் தமிழ்மக்கள் அயலாட்டவரோடுசென்று அளவளாவும் நாகரிகமுதிர்ச்சியுடையராயிருந்தாரென்பதற்குச் சான்று என்னையென்புழி, இற்றைக்கு ஐயாயிரவாண்டுகட்குமுன்னரே எழுதப்பட்ட தொல்காப்பியமென்னும் நூல் ஒன்றுமே யொரு பெருஞ்சான்றுமென்க. அருமைபெருமையிற் சிறந்த விவ்வொரு நூலை யொருசிறி துற்றுநோக்குவார்க்கும், இந்நூல் எத்துணைப்பழமையுடைத்தென்பதும், மிகப்பழையநாளிலே யிவ்வுயர்ந்தநூலையெழுதிய ஆசிரியரோ டொருங்கிருந்த தமிழ்மூதுமக்கள் எத்துணைச் சிறந்த அறிவும், நாகரிகமும் வாய்ந்து இருந்தனரென்பதும் பிறவு மவருள்ளத்திற் பதியாமற்போகா. இந்நூலின்கண்ணுள்ள வகத்திணையியலில்வரும் 'மூன்நீர்வழக்கம் மகடூவோடில்லை' என்னுஞ் சூத்திரத்தாற் பழந்தமிழ்மக்கள் பொருளீட்டும்பொருட்டுத் தம் மனைவி மக்களையும் நாட்டையும் விட்டுக் கடல்வழியே மரக்கலங்களிலேறித் தொலைவான் நாடுநகரங்களிற் சென்று சேர்வரென்பது புலனுகின்றது. தமிழர்கள் கடல்தாண்டிச்சென்று வேற்றுநாடுகளிற் பொருண்முயற்சி செய்ததுபோலவே வேற்றுநாட்டவருந் தமிழ்நாட்டிற்போந்து பலமுயற்சிகளை நடத்தினரென்பது "ஈபுரு"மொழியிலெழுதப்பட்ட பழைய விவிலியநூலினுல் விளங்குகின்றதல்லவோ? அந்நூலில் தமிழ்

நாட்டுக்கடற்றுறைப்பட்டினமான உவரியென்பது 'ஒபிர்' எனவும், அவர் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றிச்சென்ற பொருள்களான மயில், சந்தனம், அரிசி யென்பவற்றின்பெயர்கள் தோகை, அனுகம், அரிசியெனவும் அவ்விவிலியநூலில் எழுதப்பட்டிருக்கின்றன. 'சாலமன்' என்னும் வேந்தன் இற்றைக்கு மூவாயிரவருடங்களின்முன்னே செங்கோலோச் சினனென்பது சரித்திரநூல்வல்லாரெல்லார்க்கு மொப்பமுடிந்தமை யின் அவன் நாட்டார் தமிழ்நாடுபோந்து வாணிகம் நடாத்தினரென்ப தும், அவர்மொழியினுள் நமது தமிழ்ச்சொற்கள்பல சென்றுவிராயின வென்பதும், இற்றைக்கு மூவாயிரவாண்டுக்கு முன்னரேயும் மொழிக் கலப்பு ஆரியமல்லா வேனையமொழிகளோடும் நிகழ்ந்த தென்பதும் பிறவும் வெள்ளிடைவிலங்கல்போன்று தெள்ளிதிற் கிடக்கின்றது.

பின் னும், காவிரிப்பூம்பட்டினத்திற் கரிகாற்சோழனென்னும் வேந்தர்பெருமான் அரசியற்றினபோது பல வேறுமொழிகளை வழங்கிய பலவேறுதேயத்தாரும் அங்நகரத்தினிடத்தேபோந்து கலந்திருந்து பல தொழின்முயற்சி நடத்தினமையும், கடலுக்குஅப்பாலுள்ள நாடுகளி லிருந்து குதிரைகள் வந்தமையும், இமயம் மேருமுதலிய மலைகளிலிருந்து பொன்னும் மணியும், மேற்குக்கணவாய் மலைகளிலிருந்து சந்தனக்கட்டை, அகிற்கட்டைகளும், தென்கடலிலிருந்து முத்துக்களும், கீழ் கடலி லிருந்து பவளங்களும், கங்கையாற்றின்பொருள்களும், இலங்கை பர்மா வென்னும் நாடுகளின் விளைபொருள்களும் அங்நகரத்தில்வந்து விலையான மையும் இற்றைக்குச் சிறிதேறக்குறைய இரண்டாயிர மாண்டுகளுக்கு முன்னியற்றப்பட்ட பட்டினப்பாலையிலும் அதற்குச் சிறிதுபிற்பட்ட சிலப்பதிகாரத்திலும் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றனவல்லவோ? கிரேக்கநாட்டிலுள்ள யவனர்கள் தமிழ்நாட்டிற்போந்து தமிழாசரின் கீழ்ப் பல அலுவல்கள்பார்த்தமை பெருங்கதை, முல்லைப்பாட்டு முத லான பழந்தமிழ்ப்பாட்டுக்களில் நன்கு குறிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும், பண்டைநாளிலே தமிழ்நாட்டார் அயல்நாடுகளிலும் மயல் நாட்டார் தமிழ்நாடுகளிலும் போந்து ஒருவரோடொருவர் அளவளாவி யிருந்தமை யினிதுபுலப்படுதலின் வேற்றுநாட்டவர்மொழிச்சொற்கள் சில தொன்றுதொட்டே தமிழிற்புகுந்து வழங்குவவாயின வென்றுணர் தல்வேண்டும். இவ்வாறுபட்ட கலப்பின்றிநே யினிதாராய்ந்துணர் வார்க்குத் தமிழர் மிகவும் பழையதானகாலத்திலேயே நாகரிகத்திற்

சிறந்து முதன்மைபெற்றுவிளங்கினரென்பது • விளங்கும். அது சாலுமென்பீராயின், வேற்றுநாட்டுச்சொற்கள் தமிழிற்கலந்தது போலவே தமிழ்ச்சொற்களும் மற்றைத்தேயமொழிகளிற் கலந்துகாணப்படுதல் வேண்டுமே! அங்ஙனங்கண்டிலேமெனின், அற்றன்று; தமிழ்ச்சொற்கள் பல பழையமொழிகளிலும் புதியமொழிகளிலும் கலந்து வழங்கவேபடுகின்றனவென்பது கடைப்பிடிக்க. இவை சில முன்னுங் காட்டினும். பின்னும் ஆணி, மீனம், நீர், தாமரை, கலை, குடம் முதலான பலதமிழ்ச் சொற்கள் ஆரியமொழியினும்; அசை, அருகி, இரும்பு, ஈன், எல்லாம், மென்மை, முகில் முதலான பலதமிழ்ச்சொற்கள் ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கு முதலான ஐரோப்பியர்மொழிகளிலும்; அவா, இரு, ஊர், எருமை, சினம், செவ்வை முதலான பல சொற்கள் சாலடியமெனப்படும் கலிலேயம், ஈபுரு முதலிய மிகப்பழையமொழிகளிலும்; இன்னும் பல மற்றும் பலதேயமொழிகளிலும் ஒருங்கு கலந்து காணப்படுகின்றன. அவையெல்லாமிங்கெடுத்துக்காட்டப்புகின் மிகப்பல்குமாதலின், அவைதம்மை நுண்ணிய வாராய்ச்சியாற் பலநூலுதவிகொண்டு அறிந்துகொள்க. இவ்வாறு மொழிகளொன்றோடொன்றுகலக்கப்பெறுதற்கு அவற்றை வழங்கும் மக்களின் நாகரிகமே வழியாயிருத்தலால், நாகரிகம்வாய்ந்த வெந்தமொழியும் பிறமொழிக் கலப்பில்லாமலிருத்தலேற்புடைத்தாகாது. இது மக்களியற்கையினையும், அவர்வாழ்க்கையினியல்புகளையும் ஆழம்பெறவாராய்ந்துபார்க்கவல்லநர்க்கன்றி மற்றவர்க்கொருகிறிதும் புலப்படாதென்பது கடைப்பிடிக்க. தமிழ்மக்கள் பண்டுதொட்டே நாகரிகத்திற்சிறந்தவராயிருந்ததனால் அவரோடு பல மொழிபேசும் பலநாட்டவருங் கலந்து பழகவே மற்றைமொழிச்சொற்கள்சிலவுந் தமிழிற் கலப்பனவாயின. இங்ஙனம் காணப்படுதல் தமிழ்மொழியின் நாகரிகமுதிர்வினையும் அதன்வளனையும் தமிழ்நன்மக்களின் சிறப்பினையுங் காட்டுவதேயொழிய அதற்கு அதனாற் குழ்வு ஏற்படுதலைக் குறிக்கின்றதில்லையென்க. உண்மையிவ்வாறிருப்பவும், சுவாமிநாத தேசிகரென்பார் தமது இலக்கணக்கொத்தில் 'அன்றியுந் தமிழ்நூற்களவிலே யவற்று— ளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ' வெனக் கூறியது பொருந்தாதென்றெழுதிக.

இனி, நெடுங்கால முயிரோடிருந்துதிகழு மொருமொழியிற் பிறசொற்கள் வந்துகலத்தல்போலச் சின்னாளுயிரோடிருந்து பின்னை சிறந்து

படு மொருமொழியிற் பிறசொற்கள் மிகதுழைந்து நிலைபெறுதற் கிடமே யில்லை. இதனாலேதான் ஆரியமொழியிற் பிறமொழிச்சொற்கள் சேர்ந்து காணப்பட்டில. ஆரியம் பல்லாயிரமாண்டுகட்குமுன்னரே யெவராலும் பேசப்படாம லிறந்துபட்டமையின் அதன்கட் பிறசொற்கள்புகுதற்கு வாயில்காணுது ஒழிந்தன. இதுகொண்டு ஆரியமொழி உலகிற்குப் பயன்படாமையோடு அது நாகரிகவளர்ச்சிக்கு இசைந்ததாகாமையும் நன்குபெறப்படும். ஒருவர் ஒருமொழி பேசுகிறவராயிருந்தால்மட்டும் அவர் மற்றமொழிச்சொற்களையெடுத்தாளநேருமல்லது அவர் ஏதுமே பேசாதவராயிருந்தாற் பிறவற்றைக் கைக்கொள்ளச் சிறிது மிடமுண் டாகமாட்டாதென்க. ஆதலால் உலகவழக்கினின்றி யிறந்துபட்ட ஆரிய மொழி பிறசொற்களையேற்கவும் மக்கள்வாழ்க்கைக்குப் பயன்படவும் மாட்டாதாயிற்று.

இனி, ஏழெட்டு நூற்றாண்டுகளாய்ப் புதுநுழைத்தெழுந்து இப் போது ஆங்காங்குவழங்கிவரும் பலவேறுமொழிகளையும்போல்வதன்று நமது தமிழ்மொழி; இஃது இன்னகாலத்திலேதான் தோன்றியதென்று கட்டுரைத்துச்சொல்லமாளாத பழமையுடையதாய், இத்தனைகாலமாகியுந் தனது கன்னிப்பருவமும், இலக்கணவமப்பும் சிறிதும் மாறுபடாததா யுலாவிவருகின்றது. எஞ்ஞான்றுந் தமிழுண்டென்பதும், இலக்கண நெறிமாறாதுள்ளதென்பதும், பிற்றைக்காலத்துச் செந்தமிழ்ச் சான்றோர்க்கு மொருதலையாதல்,

> "நின்றவனேவந்தநெடியோனடிபணிந்தா
> னன்றவனுமன்பொடுதழீஇயமுதகண்ணு
> னன்றுரைசெயென்றுபலநல்லுரைபகர்ந்தா
> னென்றுமுளதென்தமிழியம்பியிசைகொண்டான்"

எனவருங் கம்பநாட்டாழ்வாரிராமாயணப்பாட்டானும்,

> "கண்ணுதற்பெருங்கடவுளுங்கழகமோடமர்ந்து
> பண்ணுறத்தெரிந்தாய்ந்தஇப்பசுந்தமிழ்வினை
> மண்ணிடைச்சிலஇலக்கணவரம்பிலாமொழிபோல்
> எண்ணிடைப்படக்கிடந்ததாஎண்ணவும்படுமோ"

எனவருந் திருவிளையாடற்புராணப்பாட்டானும் பெறுதும். தமிழைப் போலவே பழமையுடையனவெனச்சொல்லற்கியைந்த வடமொழி,

கிரேக்கு, இலத்தீன், ஈபுரு, அராபி, சீனம் முதலான பலதேயமொழிக ளெல்லா மிப்போது உலகவழக்கின்கண்ணின்றி யிறந்தொழிய நமது செல்வச்செந்தமிழ்மொழியொன்றுமே எல்லாம்வல்லஇறைவனைப்போல என்றுமிறவாத இளமைத்தன்மைவாய்ந்து, இன்னும் பலமொழிகளும் பிறத்தற்கு நிலைக்களமாகியு மிலங்குகின்றது. இவ்வுண்மை, மனோன் மணியமென்னும் நாடகநூலினும், சைவசித்தாந்தத் தமிழ்த்திருமிகுந்த சுந்தரம்பிள்ளையவர்கள்,

"பல்லுயிரும்பலவுலகும்படைத்தளித்துத்துடைக்கினுமோர்
எல்லையறுபரம்பொருண்முன்னிருந்தபடியிருப்பதுபோற்
கன்னடமும்களிதெலுங்குங்கவின்மலையாளமும்துளுவும்
உன்னுதரத்துதித்தெழுந்தேயொன்றுபலவாயிடினும்
ஆரியம்போலுலகவழக்கழிந்தொழிந்துசிதையாவுன்
சீரியலைமைத்திறம்வியந்துசெயன்மறந்துவாழ்த்துதுமே"

எனத் தமிழ்த்தாய்வணக்கஞ்செய்துசேறலால் வலியுறுத்தப்படும். இது கிடக்க;

மூன்றுவதாகச் செந்தமிழ்நல்லிசைப்புலவர் நூற்குரியபொருள்க ளெனக்கொண்டு உரைத்தவெல்லாம் வடமொழிநூற்குரியபொருள்களா மன்றித் தனித்தமிழ்க்கென ஒருபொருள் ஏற்பாடு இல்லையென்றார்கள் பிள்ளையவர்கள்.

தமிழ்நன்மக்களுள்ளே நிலவுகின்ற பொருளிலக்கணமென்பது, மக்களுயிர்க்குறுதியென நல்லறிவுடைய தொல்லாசிரியர் வகுத்தெடுத் துக்கொண்ட "முதல் கரு வுரியும் காட்சிப்பொருளுங் கருத்துப்பொருளும் அவற்றின்பகுதியாகிய வைம்பெரும்பூதமும் அவற்றினபகுதியாகிய இயங்குதிணையும் நிலத்திணையும் பிறவு" மாகிய பொருண்முழுவதனையும் ஒருங்கெடுத்துக்கொண்டவற்றைக் கூறுபடுத் துரைத்து விளக்கமுறுவதொருநூலாம். இதுதான் செந்தமிழ்த்தனி மொழியிலன்றி வேறு பிறபாடைகளி லித்துணைநுண்ணிதாக மதிவளம் பெருக்கியெழுதப்பட்டதுமின்று; அதனையாராயுநூல்களுங் கிடை யா; இதனுற் பண்டைக்காலத்துத் தமிழாசிரியர் நுட்பவறிவும் பரந்த வுணர்ச்சியும் உலகியலறிவும் நன்றறிவுறுக்கப்படுதல் காண்க. இனி அங் ஙனம்விரிந்துகிடப்பனவாகிய நுண்பொருட்பரவையெல்லாம் தமிழ்நூன் மரபுபற்றி யாராய்துமென மனவெழுச்சிகொண்டுபுகுவார்க்குச் சுருங்கிய

வாணுளும் பெருகியபிணியு முண்மையின், பெருந்தவத்தொல்லாசிரியர் அருட்குறிப்புநிகழ அவர்க் கவற்றைச் சுருங்கவறிவுறுத்துவார், அப் பொருட்பாவையை யிரண்டுகூறுபடுத்து அகத்திணை புறத்திணை யெனப் பெயர்நிறீஇ அப்பகுதியிரண்டனு ளுலகியற்பொருண்முழுவதூஉம் பிறவுஞ் செறியத்தழுத்து விளக்குவாராயினர். இங்ஙனம் பொருளியல் தெரிக்குமிலக்கணங்களெல்லாம் முடியவெடித்துக்கொண்டு முன்னெடு பின்மாறுகோளின்றி வரம்புகுறித்துரைக்குநூல் முற்றத்துறந்து முழுத் தவமெய்தி முழுமுதலறிவினாய்விளங்கிய ஆசிரியர் தொல்காப்பியனா லியற்றப்பட்டுள்ள தொல்காப்பியம் ஒன்றுமேயாம். உலகவியற்கையும் மனவியற்கையு மொருங்குவைத்துத் தமிழாசிரியரால் ஆராயப்பட்ட நூற்பம் வடமொழிப்பொருள்கட்குங் கிடையாவென்க.

இனித் தமிழ்நூல்களான் நுவலப்படும்பொருள்களெல்லாம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பாலில் அடங்கும். இவற்றின் செறிவையுந் தமிழ்நூல்களின் திட்பத்தினையும் உய்த்துணரமாட்டாதார் சிலர் இவை வடநூலான் நுவலப்படும்பொருள்களாமென்பர். அவை போலியுரைகளாதல் காட்டுதும். நூலான் நுவலப்படும்பொருள்கள் உலக வழக்கானும் வேதவழக்கானும் அறமுதலியவாக விரித்துக்கூறப்படும். அவையே பின்னும் விரிவுநோக்கி அகமும் புறமுமாகத் தொகுத்துக்கூற வும்படும். விரித்தும், தொகுத்தும் கூறும் மரபு தனித்தமிழிற்கே உரிய தொன்றுதல் தமிழ்க்குவரம்பாகிய திருவாரூர் வைத்தியநாததேசிகர் தா மியற்றிய இலக்கணவிளக்கத்து அகத்திணையியற் சூரைவிரிக்குமாற்று லினிதுபெறப்படுவதா மென்க.

இந்நண்பொருட்டிறன்களையெல்லாம் வருந்தியாராயாது பரிமே லழகருரையின்கட்பட்டுத் தாமும் மயங்குவாராயினர். அதுவுஞ் சாலாமை காட்டுதும். ஆசிரியர்திருவள்ளுவனார் செந்தமிழ்மொழியில் நூலி யற்றுகின்றாராகலின், தாம்மேற்கொண்ட செந்தமிழ்வழக்கிற்கேற்ப எல்லா வுறுதிப்பொருளையும் அறம் பொரு ளின்பம் வீடென அவ்வாறு பகுத்தோதினர். இப்பகுபாடு செந்தமிழ்மரபிற்கே உரித்தாமென்பது, "இன்பமும் பொருளு மறனு மென்றங், கன்பொடு புணர்ந்த வைந்திணை மரீஇவின்" என ஆசிரியர்தொல்காப்பியனாரும், "அறனும் பொருளு மின்பமு முன்று" மென உறையூர் முதுகண்ணன்சாத்தனாரும், "சிறப் புடை மரபிற் பொருளு மின்பமு–மறத்து வழிப்படுஉந் தோற்றம்

போல" வெனக் கோவூர்கிழாருங் கூறுமாற்றால், தெளியப்படும். இவை இங்ஙனமிருப்பவும், பரிமேலழகர் காமத்துப்பான் முகவுரையில் "இவர் பொருட்பாருபாட்டினை அறம்பொருளின்பமென வடநூல்வழக்குப்பற்றி ஓதுதலான்" என்று கூறுவது எவ்வாறுபொருந்தும். வடமொழியில் மனுமுதலான 'மிருதி'களெல்லாம் பிரமசரியம், இருகத்தம், வானப்பிரத்தம், சன்னியாசம் என நால்வகைநிலைபற்றியோதியதல்லது அறம் பொருளின்பவழக்குப்பற்றியோதாமையும் யாங்கூறியதே பொருளென்றலை வலியுறுத்தும். திருக்குறணூலாசிரியர் விரித்துக்கூறும் தமிழ்மரபு கொண்டு அறம் பொருளின்பம் வீடென விரித்துரைத்தாலென்றலே சாலும். என்னை? மக்களுக்கு வேண்டுவனவெல்லாம் தொகுத்துரைத்துக்கொண்டு அனைத்தழி இயொருநூலே செய்தனராகலின் என்பது.

இனி, வள்ளுவனார் தம்நூலை அறம் பொருளின்பமென மூன்றுறுப்படக்கியபிண்டமாய்க் கூறியதன்றி, வீடுகூறிற்றிலரெனக் கடாவொன் றெழுப்பினுரு மூளாலெனின்;—அற்றன்று; அறத்தையில்லறந் துறவறமெனப் பகுத்தெடுத்துப் பின்னையதான துறவறத்தில் வீடுபேறெய்தற்காம் நன்னெறி கடைப்பிடித்து இனிது விளக்கினராகலின் வீடுகூறினரென்றே துணிக. துறவறத்தின்வேறுகக் கூறப்படும் வீடுபேற்றியல் பிறிதின்மையின் இஃது அதனினடங்குமாறு வாய்வதேயாம் என்க. இதுதெரித்தற்கன்றே 'நக்கீரனார்' "தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்—ஆனவறமுதலா வந்நான்கு—மேனேருக், கூழினுரைத்தாருக்கு" எனவும், 'மாமூலனார்' "அறம்பொருளின்பம்வீடென்னுமந் நான்கின், நிறந்தெரிந்து செப்பிய தேவை" எனவும், 'நரிவெரூத்தலையனார்' "இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு, மூன்பறியச் சொன்ன முதுமொழிநூல்" எனவும், கொடிஞாழன்மாணிபூதனார்,

> "அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
> நிறனறிந்தேம் வீடு தெளிந்தேம்—மறனெறிந்த
> வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
> கேளா தனவெல்லாங் கேட்டு"

எனவுங் கிளந்துரைத்துப் பாயிரஞ்செய்திட்டார். இவையிங்ஙனமாகவும் பரிமேலழகரையுள்ளிட்டோரெல்லாம், வீடுபேற்றின்பம் இத்துணைத்து,

இத்தன்மைத்தென ஒருவாற்றும் உரைக்கப்படாமையினும் தொழித்து ஏனைமூன்றுமே நூல்களுட்சொல்லப்படுமென்று தத்தமக்குத்தோன்றியவாறே கூறுப. அஃது அங்ஙனமாமாயின் அன்பினைந்திணையொழுக்கம்பற்றிவரும் இன்பமும், யாண்டும் நுகர்வார்தமக்கேபுலனாவதல்லது, பிறர்க்கு இவ்வியல்பிற்றென விளங்கக்காட்டுதல் ஏலாமையின் அதுவும் நூல்களாற்கூறப்படாவெனல்வேண்டுமென்றே. அது பொருந்தாமையாற் பேரின்பவருவினதாம் வீடுபேற்றின்பம் உரைக்கவுங் கருதவுமாகாமைபற்றி அதனை எய்தற்காந்தாங்கூறுதல் நூல்களிடத்தில்லையாயிற்றென்றல் பொருந்தாதென வொதுக்குக. திருவள்ளுவனார் குறளில் மெய்யுணர்தலென்னுமதிகாரத்தில் ஒருவன் தத்துவஞானந்தலைப்படுமாறும் அது தன்னால் வீட்டுநெறி தலைக்கூடுமாறும் நன்குவகுத்துக்கூறுதலின் மேற் கடாவெழுப்பி நெறிழ்ந்துசேறல் என்கொலோவென்பது.

பின்னும், பிள்ளையவர்கள், கம்பர் இராமாயணத்து,

"தேவர் பாடையி லிக்கதை செய்தவர்
மூவ ரான்வர் தம்முளு முந்திய
நாவி னுருசை யின்படி நான்றமிழ்ப்
பாவி னாலிது ணர்த்திய பண்பரோ"

எனவரும் நூல்வரலாற்றுச்செய்யுளாலும் வடநூற்பொருள்பற்றித் தமிழ்நூல்கள் நடக்குமென்பது விளங்குகின்றதென்கின்றார்கள். அதுவும் ஒல்லாமைகாட்டுதும். இராமாயணம் பாரதமேபோல்வ பாரம்பரியமானகதையமைந்துவரும் இதிகாசங்களுள் ஒன்று. இதிகாசம் என்பது, அறமுதலியநான்குபொருள்களையும் திறம்படவிரித்துப் பழங்கதைகளுடன்சேர்த்து அறிவிக்கும்நூலாம். பாரம்பரியமான கதையமைந்து நடப்பனவற்றை வடநூலார் இதிகாசமென்பர். இதி-ஹ-ஆஸ=இதிகாஸ; 'அப்படியிருந்தது' என்பது பொருள். பிள்ளையவர்கள் தமக்குப் பற்றுக்கோடாக எடுத்துக்கொண்டசெய்யுளான் விளங்குவதியாதெனின், "நான் தமிழ்ப்பாவினு லிதனையுணர்த்தத்தொடங்கியபண்பு தேவர்பாடையில் இக்கதைசெய்தவர் மூவரெனப்பட்டார் அவர்தம்முள்ளும் முந்திய நாவலராகிய வான்மீகிமுனிவருடையநூலின்படியேயாமெ"ன்பது என்க. தேவர்பாடை—ஸம்ஸ்கிருதம்; மூவர்—வான்மீகி, போதாயனர், வியாதர்.

கம்பநாடர் வடமொழிக்கணிருந்து படியெடுத்துச் செய்தாராதலின் வட மொழியிலுள்ள இராமாயணங்கள்பலவுள்ளும் மூதன்மைபெற்ற வால்மீகி இராமாயணத்தைப் படியெடுத்துக் காதைகள்முறைபிறழாமற் செய்தார் என இதுமட்டுமே புலப்படுகின்றது; அன்றி, வடநூன்மரபு பற்றித் தமிழின்கண் நூலியற்றினரென்பது யாண்டும்பெறப்படாமை காண்க? வடநூன்முறையுந் தமிழ்நூன்முறையும் முன்னரேயுரைத்து வைத்தாம். ஆண்டுக் காண்க.

நான்காவதாகப் பிள்ளையவர்கள் காட்டுவது, அகத்தியந் தொல்காப் பியமென்னுந் தமிழிலக்கணங்கட்குப் பாணினீயமும் ஐந்திரமும் முத னூல்கள் மென்னும் பிரயோகவிவேகநூலார்கூற்று. ஞருகூர்ச் சுப்பிர மணியதீக்ஷிதரையு மவர்கூட்டத்தாரையும் அவர்க்கு வடமொழிக்கண் மட்டுமுள்ள அபிமான முதலியவற்றையும் கருதாது பிள்ளையவர்கள் கூறியவற்றையு மொருசிறி தாராய்ந்து செல்வாம்.

"இந்திர னெட்டாம் வேற்றுமை யென்றன"னென அகத்தியத்தின் கண்ணும், "ஐந்திர நிறைந்த தொல்காப்பிய"னெனத் தொல்காப்பியப் பாயிரத்தின்கண்ணும் ஒரோவொருபொருள்பற்றிவந்தமைகொண்டு, தமிழ்நூற்கு முதனூல் பாணினீயமும் ஐந்திரமுமா மென்றார், சுப்பிர மணியதேசிகர். அவை யங்ஙனமாகாமை தெளிவுபெறக்காட்டிய பின் னூலாரையும் ஆழுதவாயுடையரான நச்சினார்க்கினியாரையுள்ளிட்ட உரையாசிரியன்மாரையும், " தமக்குவேண்டியவாறேதினர், " "அது பொருளன்மையறிக" வெனவும் இகழ்ந்திட்டார்; அஃது அவர்தமக்குப் பெரியதோர் ஏதமாம் என்க.

அகத்தியந் தொல்காப்பியம் முதலிய செழுந்தமிழ்நூல்கட்குப் பாணினீயம் ஐந்திரம் முதலான வடமொழி வியாகரணங்களே முதனூல் கள் என்றல் சிறிது மிசையாத பொய்யுரைகளாமெனத் தெளிவுகாட்டி மறுத்து, அகத்தியந் தமிழ்க்கு முதனூலாமென மாபாடியகருத்தா வான மாதவச் சிவஞானயோகிகள் தமது தொல்காப்பியச்சூத்திரவிருத்தி யின்கண்ணே நிறுத்தியிருக்கின்றார்கள். ஆண்டுக் கண்டு தெளிக.

இனி, பாணினீயமுதலிய வடமொழிவியாகரணங்கட்குத் தொல் காப்பியம் முற்பட்டுள்ளதென்பதும், அதுவே சரித்திரநூல்வல்லாரெல் லார்க்கு மொப்புமுடிந்ததென்பதுஞ் சிறிதுகாட்டிச் செல்வாம்.

தொல்காப்பியமென்னும்நூல், வடமொழியிற் பாணினிமுனிவ ரியற்றிய அட்டாத்தியாயியென்னு மரியபெரிய லிலக்கணநூலுக்கும் முற்பட்டுள்ளதென்பது நாட்டவே யிதன்காலந் தமிழ்நூல்களுக்கெல் லாம் முற்பட்டதாதலும் நன்குபெறப்படும். ஆதலிற் பாணினிமுனிவர் காலம் ஈண்டுச் சுருங்கவகுப்பாம். பாணினிமுனிவர் தாமியற்றிய இலக்கணநூலில் இந்தியதேசத்தின்கணுள்ள இடங்கள் பலவற்றைச் சுட்டிக்காட்டி அவற்றின் பெயர்களுக்கெல்லா மிலக்கணம் வகுத் துரைத்திருக்கின்றார். பெரிது மவராற்குறிக்கப்பட்ட நாடுநகரங்களெல் லாம் 'பஞ்சாப்' தேயத்திலும் ஆப்கானிஸ்தானத்திலு மிருக்கின்றன. இந்தியாவின் தெற்குப்பிரதேசங்களில் அவராற் குறிக்கப்பட்ட இடங்கள் கச்ச, அவந்தி, கோசல, களிங்க முதலியனவாம். இவையெல்லாம் விந்தியமலைக்கு வடக்கேயுள்ளன. விந்தியமலைக்குத் தெற்கேயுள்ள நாடு நகரங்களி லொன்றேனும் அவ்ராற் குறிக்கப்பட்டதில்லை. ஆகவே, பாணினிமுனிவர்காலத்து ஆரியர் விந்தியமலைக்குவடக்கேயுள்ள நாடுக ளில் இருந்தாரென்பதும் அதனைக்கடந்து இப்பால்வந்திலரென்பதும் இனிது பெறப்படுவனவாம்.

இனிப் பாணினீயத்திற்கு வார்த்திகவுரையெழுதிய காத்தியாயனர் விந்தியமலைக்குத்தெற்கேயுள்ள நாடுநகரங்களைக் குறிப்பிடுகின்றார். ஓரி டத்தின் பெயர்பற்றி யவ்விடத்திற்பிறந்தமக்கட்குப் பெயர்வருமாற்றைச் சுட்டிப் பாணினிமுனிவர் விதிகூறிப் பாஞ்சாலத்திற்றோன்றியோன் 'பாஞ்சாலன்' சால்வத்திலுதித்தோன் 'சால்வேயன்' என்பனவாக உதா ரணமுங் காட்டியுள்ளார். ஈண்டு இச்சூத்திரத்திலே 'வேறுசிலவிடப் பட்டன'வென் றுரைத்துக் காத்தியாயனர் "'பாண்டியன்' என்னுஞ் சொல் பாணினியாற் சொல்லப்படவில்லை"; பாண்டுகுடியில் அல்லது பாண்டிநாட்டிற்பிறந்தோன் பாண்டியனெனப்படுவா னென்று புதியதோர் உரையுஞ் சேர்த்தெழுதினர். இன்னு மிவ்வாறே 'சோழர்' 'மகிஷ்மத்' எனப் பிறவும் அக்காத்தியாயனரால் ஆராய்ந்துரைக்கப்பட்டன.

இனிப் பாணினீயத்திற்கு மாபாடியமுரைத்த 'பதஞ்சலியார்' 'மஹிஷ்மதி' 'வைதர்ப்ப' "காஞ்சிபுர," 'கேரள' என்பன பிறவற்றையு மாராய்ந்துரைத்தார். அதுவேயுமன்றித் தம்முரையுட் காத்தியாயனர் வார்த்திகவுரையிற் பாடபேதங்கள் பலவுளவாதலு மெடுத்துக் காட்டினர்.

காத்தியாயனருரை பலபாடபேதங்களுடைத்தாய்த் திரிபெய்தற்குப் பல நூற்றாண்டுகள் செல்லுமாகலின், அப்பாடபேதங்களைத் தம்மூரையுட் குறித்த ஆசிரியர்பதஞ்சலியார்க்கு அக்காத்தியாயனர் சிலநூறுவரு டங்களின்முன்னே யிருந்தாராகற்பாலார். மற்றுப் பதஞ்சலியார் இற் றைக்கு இரண்டாயிரத்து ஐம்பத்தாறுவருடங்களின்முன்னிருந்தாரென வடநூற்சரித்திரபண்டிதர்கள் நிறுவினராகலின் அக்காத்தியாயனர் காலம் இரண்டாயிரத்து முந்நூற்று ஐம்பதுவருடங்களின்முற்பட்ட தென்பது பெற்றும்.

இனிப் பாணினிமுனிவராற் சொல்லப்படாத புதிய இலக்கண விதிகள்சில காத்தியாயனராற் சொல்லப்பட்டிருப்பதுகொண்டு அவ்விதி கள் பெறுதற்குரிய சில சொல்வழக்குகள் பாணினிமுனிவர்காலத்தில் இல்லையென்பதூஉம், அவை காத்தியாயனர்காலத்தேதான் தோன்றிய வென்பதூஉம் பெறப்படுகின்றன. அதுவேயுமன்றிப் பாணினிமுனி வர்காலத்து நடைபெற்ற சொற்கள்பல, காத்தியாயனர்காலத்து வழக்கு வீழ்ந் தொழிந்தன. இங்ஙனம் ஒருமொழி திரிபெய்துதற்குப் பல நூற்றாண்டுகள் செல்லுமாகலின், பாணினிமுனிவர்க்கும் காத்தியாயனர்க் கும் இடையில் விரிந்தகாலம் நானூறுவருடத்திற்குக் குறையாதாதல் தகுதிப்பாடுடைத்தாம். எனவே, பாணினிமுனிவர் இற்றைக்கு இரண் டாயிரத்து எண்ணூறுவருடங்கட்குமுன்னிருந்தனரென்பது பெறப் படும்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் 'சொல்லதிகாரத்தில் தமிழ்ச் சொல்லிலக்கணங்களெல்லாம் முற்றவுங்கூறாயினும் அச்சொற்க ளெவ் வாறு பிறந்தனவென்று ஆராய்ந்து அவைதம்மையெல்லாம் பகுத்துப் பகுதிகளாக அடக்கிக்காட்டினரில்லை. அங்ஙனமாயினும், ஒவ்வொரு சொல்லுங் காரணம்பற்றியே தோன்றினவென்றும், அக்காரண மறிவுடை யார்க்கன்றி மற்றையோருக்கு விளங்கித்தோன்றுவென்றும் குறிப்பிட்டு "மொழிப்பொருட்காரணம் விழிப்பத்தோன்று" எனச் சூத்திரித்தார்.

இவ்வாறு வருவனவற்றுற் றமிழ்ச்சொற்களோப் பகுதி விகுதி முத லியனவாகப் பகுத்து ஆராய்ந்துரைக்கும் நெறி தொல்காப்பியனுர் நூலெழுதியஞான்று தமிழாசிரியர்க்குத் தெரியாதிருந்ததென்றே கரு தப்படும்.

மற்றப் பாணினிமுனிவர் தாமியற்றிய அட்டாத்தியாயியில் தங் காலத்துவழங்கியபல்லாயிரமாரியமொழிகளையெல்லாம் பகுதி விகுதிமுத லியவாகப் பகுத்தாராய்ந்து அவற்றையெல்லாம் தாதுபாதத்திற் சில் லாயிரம்பகுதிகளிலே யடக்கியுள்ளார். தொல்காப்பியனுர் பாணினி முனிவர்காலத்திலேனும் அல்லது அதற்குப் பின்னரினும் இருந்தனரா யின் இலக்கணவாராய்ச்சிக்கு இன்றியமையாப்பெருஞ்சிறப்பினதான சொல்வரலாற்றுமுறையைத் தவறுதலுணர்ந்தே கூறியிருப்பர்.

பாணினிமுனிவருக்கு மிகவும்பிற்பட்டவரான பவணந்தியார் இச் சொல்வரலாற்றுமுறையைத் தமது நன்னூலிற் றழுவிக்கூறினமையறிய வல்லார்க்கு யாமுரைத்தது மிகவும்பொருத்தமுடைத்தாதல் தெற்றென விளங்கும். ஆகவே சொல்வரலாற்றுமுறை தெரிந்துரைத்த பாணினி முனிவர்க்கும் அம்முறை தங்காலத்திலில்லாமையால் அதனையுரையாது விடுத்த தொல்காப்பியமுனிவனுர்க்கும் இடையேபட்டகாலஞ் சாலப்பெரி தாதல்வேண்டும்: பாணினிமுனிவர்க்கு நானூறுவருடங்களின்முன்னே ஆசிரியர்தொல்காப்பியனுர் இருந்தனரெனக்கொள்ளும்வழி இற்றைக்கு மூவாயிரத்திருநூறுவருடங்கட்குமுன் அவர்காலங் கணிக்கப்படுமென்று கொள்க.

நிற்க; மற்றுமோராற்றுல், தொல்காப்பியனுர்காலமாயும்வழி அது நாலாயிரவருடங்கட்குமுற்பட்டதென்பது நாட்டப்படும். தொல்காப் பியம் பஃறுளியாறு கடல்கொள்ளப்படுமுன் னெழுதப்பட்டது. அக் காலத்தே குமரியாறு தென்றிசையி லோடிக்கொண்டிருந்தது. இது "வடவேங்கடந் தென்குமரியாயிடை" எனவரும் பனம்பாரனுர் பாயிர

வுரையானும், அதற்குரைகண்ட இளம்பூரணர்முதலான உரையாசிரிய ருரையானும் நன்குணரப்படும். இவ் யாறுகளு மிவற்றைச்சூழ்ந்நிலங் களும் கடல் கொள்ளப்பட்டது இற்றைக்கு நாலாயிரத்துமுந்நூறு வருடங்களின்முன்னென்பது, இலங்கைப் பௌத்தவம்சாவளியிலே குறிக்கப்பட்டிருக்கின்றது. இங்ஙனங்குறிக்கப்பட்டகாலமும் விவிலிய நூலிலேகுறிக்கப்பட்ட நோவாவென்பவர்காலமும் மிகவும் ஒத்தியல் கின்றன. எனவே தொல்காப்பியனர் நாலாயிரத்துமுந்நூறுவருடங் களுக்குமுன் னிருந்தாரென்பது பல்லாற்றானும் இனிதுபெறப்பட்டது.

இதுகாறுங்கூறியவற்றாற் றொல்காப்பியம் பாணினீயவடநூற்கு முற்பட்டுள்ளதென்பது விளக்கப்பட்டது. இங்ஙனமும் பிறவு மெல்லா மிருப்பவும், அவற்றினுண்மை பொருட்செறிவென் றிவை ஒருசிலவும் நோக்காது, தொல்காப்பியத் தெய்வச்செழுந்தமிழ்நூற்குப் பாணினீய முதலிய வடநூல்களே முதனூலாமென்பது, எங்ஙனம் பொருந்து மென்பது.

இனி யிறுதியாக, தமிழ்நூற்கடல், வடமொழிக்கடல் என்றிவற்றை நிலைகண்டுணர்ந்த மாதவச்சிவஞானயோகிகள் " வடநூலுணர்ந்தார்க் கன்றித் தமிழியல்புவிளங்கா"தென ஒன்றுபற்றி யொருவிடத்துக்கூறி யதுகொண்டு பிள்ளையவர்கள் வடநூல்வழீஇயது தமிழ்நூலெனக் குறித்தார்கள், சொல்லியைபுநோக்காமையால். வடநூலுணர்ச்சியுஞ் சாலப்பெற்றார்க்கும், ஏனைமொழிப்பயிற்சிகைவந்தார்க்குமட்டுமே தமிழ் நூற்றிட்பம் பெரிதும் புலப்படும் என்பதுகுறித்தே யோகிக ளங்ஙன மூரைக்கலானார்கள்.

தொல்காப்பியனர்க்கு வேனயமொழிப்பயில்வும் உண்மையானன்றே தமிழிலக்கணம் வகுக்கும்போதெல்லாம் அதன்மாட்டுமட்டுமே கிடக் கின்ற விழுப்பமெல்லாங்கண்டு வேண்டுமிடந்தோறும் அதன்பெருமை களைக் குறிப்பானும் வெளிப்படையானு மெடுத்துரைப்பாராயினர்.

அகத்திணை, புறத்திணை, செய்யுளியில் இவற்றை நோக்குக. இவைபோல் வன பிறவற்றையும் நன்குதெரித்தற்கன்றே பாயிரஞ்செய்திட்ட பனம் பாரனரும் "ஐந்திரநிறைந்த தொல்காப்பிய"னென வுங் குறித்திட்டார். பாணினீயம் முதலிய வடமொழி வியாகரணங்களுக்கில்லாத சிறப்புத் தமிழிற்குப் பெரிதும் உண்டென்பது வடமொழியுந் தமிழ்மொழியு மொருங்குதேறினர்க்கன்றி யேனையோருக்கு எங்ஙனம் புலப்படும். வட மொழியின்கண்ணே குறியீடுகள்பல காரணமின்றியும்வந்தன. தமிழின் கண்ணேயோ காரணம்பற்றுக்குறியீடுகள் ஒருசிறிது மில்லையென்க. இதனை வடநூற்புலமையும், தமிழ்நூலறிவும் ஒருங்குவிளங்கப்பெற்ற தனனன்றே சிவஞானயோகிகளும், தமது 'முதற்சூத்திரவிருத்தி'யின் கண்ணே "ஆசிரியர் (தொல்காப்பியனார்) யாதானுமோர்காரணம்பற்றியே குறியிட்டாரெனுதல்லது வடநூலார்போலக் காரணம்பற்றுதும் குறி யிட்டாரெனுதல் யாண்டுமில்லை யெனத் தெரித்தார்கள். ஆகலான், தெய்வச் செந்தமிழ்த்தொன்மையும், பெருமையும் உணர்ந்து இன்பமுறல்வேண்டு வார்க்கு வடமொழிப்பயில்வும் வேண்டப்படுவ தொருதலையாம்.

அன்றி, உலகியற்பொருளறிவும் பிறவும் கைவந்தவர்க்குத் தமிழ் நூலுணர்வொன்றுமே போதாது, வடநூலுணர்வும் வேண்டப்படும் என்பது சிவஞானயோகிகளுக்குங் கருத்தாகும் எனப்பிள்ளையவர்கள் உள்ளுதல், பெரியதோர் ஏதமாம் என்க. அதனை யோகிகள் இயற்றிய நூல்வல்லார்வாய்க் கேட்டுணர்க.

இதுகிடக்க; வடமொழிக்கணில்லாத பலவியல்களும், பொருள் வனப்பும், செந்நடையும் நஞ்செந்தமிழிற் காணப்படுதலை யாவரே யறியார். அன்றியும், தமிழின்கண் தோன்றல், திரிதல், கெடுதல் முதலிய புணர்ச் சிச்செய்கைகளும், குறியீடுகளும்; வினைக்குறிப்பு, வினைத்தொகை முத லிய சொல்லிலக்கணங்கள் சிலவும்; உயர்திணை, அஃறிணை, ஐம்பால் எனவருஞ் சொற்பாகுபாடுகளும்; அகம், புறம் எனவரும் பொருட்குறி

வகைகளும், அவற்றின் பகுதிகளாய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பொருந்தினை, வெட்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்டினை யென்பனவும், அவற்றின் துறைகளும், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்பனவும், அவற்றின் இனங்களும் இன்னோரன்னபிறவும் வடமொழிக்கண் இன்மையால் அவையெல்லாமெவற்றினின்றுந் தொடுக்கப்பட்டன? இன்னிசை வாய்ந்து உலகமெங்கணுந் தன்னிசைபரப்பிய கையிறந்தகடலன்ன நஞ்செந்தமிழ்க்கு, மதிவளம்பெருக்குஞ் சிறப்பியல்பு ஒருசிறிதுமில்லா வடமொழியைச் செவ்விலித்தாயெனல் பொருந்தாமையறிக.

இங்ஙனம்,
வவுனியவிளாங்குளத்து
சு. இராஜையனார்,
யாழ்ப்பாணத்து நல்லூர்.

ஸ்ரீ:

அநுதாபக்குறிப்பு.

———:(o):———

நம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகசபையங்கத்தினர்களுள் மதுரை வக்கீல் T. N. சுந்தரராஜையங்காரவர்களையும், திருநெல்வேலி வக்கீல் N. A. V. சோமசுந்தரம்பிள்ளையவர்களையும் இம்மதியில் இழக்க நேர்ந்தமைக்கு மிகவும் வியசனிக்கிறோம். இவருள் ஐயங்காரவர்கள், 1910-ம் வருடமுதல் சுமார் ஏழு வருடகாலம் இச்சங்கத்தின் கௌரவ காரியதரிசியாகவும் பின்பு சங்கத்தின் நிர்வாகச்சபை அங்கத்தினராகவு மிருந்து சங்கக்காரியங்களை நன்கு நடத்திவந்தவர். பிள்ளையவர்கள், 1914-ம் வருடமுதல் சங்கத்தின் நிர்வாகசபையங்கத்தினராயிருந்து சங்கத்தின் 16-ம் வருடக்கொண்டாட்டத்தைத் திருநெல்வேலியிற் சிறப்பாகநடத்திவைத்தார்கள். இவ்விருவர்சங்காபிமானமும் மிகவும் பாராட்டற்பாலது. இவர்களையிழந்துவருந்தும் இவர்கள் குடும்பத்தார்க்கு நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

——— பத்திராதிபர்.

1922-ஹ ஆகஸ்டுமீ 27உ (துந்துபி-ஹ ஆவணிமீ 11-உ) காலை 9-மணிக்குக்கூடிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் காரியநிர்வாகவபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜாஜேஶ்வரசேதுபதி மன்னரவர்கள்–அக்கிராசனாதிபதி.
2. மகா-ஶ்ரீ-ஶ்ரீ V. S. இராமஸ்வாமிசாஸ்திரியவர்கள் B.A., B.L.,
3. ,, T. C. ஶ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., M.L.C.
4. ,, M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A., B.L.,

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1922-ம்ஹ ஜூலைமாத வரவு செலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. சங்கத்தின் வருஷோத்ஸவகாலத்தில் வாசிப்பதற்காகத் தயாரிக்கலான சென்ற ஆண்டின் அறிக்கைப்பத்திரம் அங்கீகரிக்கலாயிற்று.

III. சங்கம் அச்சாபீஸில் செய்யவேண்டிய ரிப்பேர்கள், சீர்திருத்தங்கள் முதலியவற்றை எடுத்துக்காட்டும்பொருட்டு அச்சாபீசு அனுபவமுள்ள ஒருவரைக்கொண்டு நன்முகக் கவனிக்கும்படி ஏற்பாடு செய்யவேணுமென்று மகா-ஶ்ரீ-ஶ்ரீ T. C. ஶ்ரீநிவாஸையங்காரவர்களைக் கேடுக்கொள்ளலாயிற்று.

சங்கக்கட்டடத்திற்கு வடமேற்குமூலையிலுள்ள காலியிடத்தைச் சுற்றிக் காம்பவுண்டுச் சுவர் எடுக்கவும், சங்கக்கட்டடத்தின் காம்பவுண்டுச்சுவர் ரிப்பேர் பார்க்கவும், கட்டடத்தின் மேல்மாடியில் தாழ்வாரம் இறக்கவும் நீர்மானிக்கலாயிற்று. இவற்றிற்காகச் சங்கக்கட்டட பண்டிலிருந்து ரூ 2000 செலவுசெய்யும்படி சாங்ஷன் செய்யலாயிற்று.

IV. சங்கத்தின் பணவரத்து சம்பந்தமான ஆலோசனை விஷயம் தள்ளி வைக்கலாயிற்று.

V. சங்கக்கட்டடத்துக்கும் காலியிடத்துக்கும் கிரயசாதனம் பெறுவதற்கு ரெஜிஸ்டிரேஷன், ஸ்டாம்பு வகையரா செலவுக்காக ரூ. 800 சாங்ஷன்செய்யலாயிற்று.

VI. சங்கத்தின் நிர்வாகசபை அங்கத்தினராகிய மகா-ன-ன-ஸ்ரீ T. N. சுந்தரராஜையங்கார், N. A. V. சோமசுந்தரம்பிள்ளை இவ்விருவர்களும், வித்யாவிஷய ஆலோசனை சபை அங்கத்தினராகிய மகா-ன-ன-ஸ்ரீ அ. குமாரசுவாமிப்புலவரவர்களும் காலஞ்சென்றமையாற் சங்கத்துக்கேற்பட்ட பெரும் நஷ்டத்தைக்குறித்துச் சங்கத்தார் அநுதாபமொழிகூறும்படிக்கும், ஷையார்களின் குடும்பத்தார்களுக்குச் சங்கத்தாரின் அநுதாபத்தைத் தெரிவிக்கும் படிக்கும் சங்க நிர்வாகசபையார் தீர்மானித்திருக்கிறார்கள்.

மதுரை,
27-8-1922.

B. இராஜராஜேசுரவேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

புத்தக மதிப்புரை.

—o—

1. தமிழ் வியாசங்கள்:—இது, சென்னைக் கிறிஸ்தவகலாசாலையிற் றலைமைத் தமிழ்ப்பண்டிதராயிருந்த காலஞ்சென்ற வி. கோ. சூரிய நாராயணசாஸ்திரியார் B.A., அவர்கள் பலசமயங்களிற் பலபத்திரிகைகளி லெழுதி வெளியிட்ட பல அரிய வியாசங்களையுடையது. கலாசாலை மாணவர்க்குப் பாடமாகவைக்கத்தக்கது. இதில், தற்காப்புநியமம், பொய்த்தோற்றங்கள், ஜீவராசிகளின் நாகரிகவிதவர்ணங்கள், மனவமைதி, உயர்தனிச்செம்மொழி, பதினெட்டாநூற்றாண்டின் தமிழ்ப்பாஷாபிவிர்த்தி, சொற்பொருளாராய்ச்சி என்ற வியாசங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இதன் விலை அணா 5. வேண்டுவோர் வி. சூ. சுவாமிநாதன், புத்தகவியாபாரி, மேலைக்கோபுரத்தெரு, மதுரை என்ற விலாசதாரிடம் பெறலாம்.

2. சமரஸசித்தாந்தபோதினி என்னும் ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸர் உபதேசகவிமஞ்சரி (முதற்பாகம்):— இது, பொள்ளாச்சி முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் நா. கனகராஜையரவர்களால் இயற்றப்பட்டது. பரமஹம்ஸரது உபதேசவாக்கியரத்தினங்களை யமைத்துக் கருதியபொருளினிதுவிளங்குமாறுசெய்த இனிய செய்யுளடையுடையது. மஹதுபதேசவாக்கியங்களை மனனஞ்செய்துகொள்வார்க்கு மிகவும் பயன்படத்தக்கது. இதன் விலை அணா 4. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

3. பணம்:—இது, நாளிது ஆவணிமீ 16உ முதல், திருச்சியிலிருந்து வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு வர்த்தமானப்பத்திரிகை. இது, ஜாதிபேதம், கட்சிபேதமின்றி எல்லார்க்கும் பொதுவாக நடத்திவரப்படுமென்று தெரிகிறது. நெடுங்காலம் பத்திரிகைத்தொழிலிற் பழக்கமுள்ளவரான ஸ்ரீமத் S. G. இராமாநுஜலு நாயுடு அவர்கள் இதற்கு ஆசிரியராயிருக்கிறார். பல அறிவாளிகளும் உயர்ந்த பட்டதாரிகளும் இதற்கு விஷயதானஞ்செய்துவருகிறார்கள். இதில்வரும் விஷயங்கள் தெளிவான் நடையில் எல்லார்க்கும் விளங்குவனவாயுள்ளன. இது நன்கு வளர்ந்து தமிழ்நாட்டுக்கு மிக்கபயனை விளைவிக்குமென்று நம்புகிறோம். இதன் வருடச் சந்தா ரூபா ஐந்து. ஆறு மாதத்துக்கு ரூபா 2-12-0. தனிப்பிரதி அணா $1\frac{1}{2}$. வேண்டுவோர், ஸ்ரீமத் தி. கி. ராஜகோபாலன் அவர்கள், 281 பெரியகடைவீதி, திருச்சிக்கோட்டை என்ற விலாசதார்க்கெழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

உ
கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உ0.] துந்துபி-ஹேவிளம்பி-மீ [பகுதி கக.
Vol. XX. September-October-1922. No. 11.

பாணினீய லகுதீபிகை.

[திருவனந்தபுரம் S. வையாபுரிப்பிள்ளையும் G. ஹரிஹர சாஸ்திரியும் எழுதிவருவது.]

(நகசு-ம் பக்கத் தொடர்ச்சி.)

பாணினியாசிரியரைக்குறித்துச் சிறியதொருவரலாறு கூறப்பட்டு வருகின்றது. பூர்வத்தில் 'வர்ஷர்' என்றொரு ஆசாரியர் இருந்தார். அவர்பாற் கல்விபயின்றுகொண்டிருந்த அநேகசிஷ்யர்களுள், 'பாணினி' என்ற பெயருடைய ஒரு சிஷ்யர் இருந்தனர். இவர் பிறந்தவிடம் ஸாலாதுரம் என்னும் நகரமாகும். இவரது தாயார் தாக்ஷி யென்ற பெயருடையாள். இந்தச் சிஷ்யர் மிகவும் மந்தபுத்தி; ஆனால், கல்விமீது அளவுகடந்த ஆசையுடையவர். தமது ஆசிரியருக்கு எவ்வளவோ சுச்ரூஷைகள் செய்தும் அவற்றால் இவர் ஒருபயனும் எய்தவில்லை. கடைசியில் இவருடைய ஆசாரியபத்தினி யிவரை வெளியேபோய்விடும்படி கட்டளையிடநேர்ந்தது. பின்னர் வித்தியாவிருப்பத்தால் மனம் நலிவுற்று வருந்திய பாணினி ஹிமாலயத்திற்குச்சென்று அங்கே ஈச்வரனை நோக்கிக் கடுந்தவஞ்செய்தார். சந்திரசேகரப்பெருமானும் பாணினியின் தவத்திற்கு உவந்து எல்லாவித்தைகட்கும் ஆதாரமாகிய வியாகரணத்தை அவருக்கு உபதேசித்தருளினர். இங்ஙனம் வித்தைகளனைத்தையும் பெற்றுக்கொண்டபின்னர், பாணினி தம்முடன் ஒருசாலைமாணாக்காகிய காத்தியாயனரோடு வாதம் நிகழ்த்தினர். அது தொடங்கி யேழுநாளாகியும் முடிவுபெறவில்லை. எட்டாவதுநாளன்று பாணினி வெற்றியெய்தினர். அப்பொழுது சம்புமூர்த்தி ஆகாயத்தில் தோன்றி 'இவரால்

(பாணினியால்) ஐந்திரவியாகரணத்திற்குப் புவியில் அழிவுண்டாயிற்று' எனக் கூறி அந்தர்த்தானமாயினர். அன்றுமுதல் பாணினீயத்திற்குப் பிரசாரமேற்பட்டதென்பர்.

இவ்வரலாறு எவ்வளவுகாலத்திற்குமுன்புதொட்டுள்ளது என்று திட்டமாய் நிச்சயிக்கப்படவில்லை. ஆனால், கி. பி. 12-ம் நூற்றாண்டில் ஸோமதேவபட்டாரால் எழுதப்பட்ட கதாஸரித்ஸாகரத்திலும், அதற்கு மூதனூலாகிய பிருஹத்கதாமஞ்சரியிலும் அது காணப்படுகிறது. மேலும் கி. பி. 7-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவிற்குவந்த ஹ்யூன்த்ஸங் என்ற சீனயாத்திரிகரும் மேற்கூறியதுபோன்றதொரு கதையை யெடுத்துச்சொல்லுகின்றனர். ஆகவே கி. பி. ஏழாம்நூற்றாண்டின்தொடக்கத்திலிருந்தேனும் மேற்கூறியவரலாறு வழங்கிவருகிறதென்பது நாம் இங்கு அறிதற்குரியது.

பாணினியாசிரியர்பக்கல் நம்மவர்களுக்குள்ள நன்குமதிப்பினையும் பக்தியினையும் மட்டுமே இக்கதை தெரிப்பதாக நாம் கொள்ளுதல்வேண்டும். அவர் மந்தபுத்தியாயிருந்தாரெனக்கூறுதல், தவறென்பதற்கு அவரியற்றியருளிய பேரிலக்கணமே போதியசான்றாகும். உலகத்தில் அறிவானும் கல்வியானும் அழியாப்புகழ்நிறுத்திய பெரியோர்கள் அவர்களது இளமைப் பிராயத்தில் மூடர்களாயும் மந்தர்களாயும் இருந்தார்களெனச் சொல்லுதல் பெருவழக்காக இருந்திருக்கிறது. உதாரணமாகக் காளிதாஸமகாகவியின்வரலாற்றினைக் காண்க. இதுபோன்ற கூற்றுக்களெல்லாம் கதையழகிற்குவேண்டும் கற்பனைகளேயாம். ஆனால் இக்கதையில் இரண்டொன்றேனும் உண்மையில்லாமற்போகவில்லை. 'பாணினி தம் காலத்துள்ள வடமொழி இலக்கிய விலக்கணங்களிற் பரிபூர்ண பாண்டித்யம் உடையராயிருந்தாரென்பது யாவராலும் மறுக்கற்பாலதன்று. ஆனால் அவரது பாஷாபரிஜ்ஞானமொன்றே இங்கு எடுத்துக்கூறும் இயைபுடையது.

பாணினியார்காலத்தும், தற்காலத்தோடொப்ப, ஸம்ஸ்கிருதமொழி இரண்டு பெரும்பிரிவாகக்கிடந்தது. இந்துசமயங்களனைத்திற்கும் ஆதாரமாயிருக்கிற வேதத்தைப்பற்றி யறியாதார் நமதுநாட்டில் யாருமிரார் என்பது திண்ணம். அவ்வேதம் வடமொழியாலியன்றுள்ளது. எனினும் வடமொழியிலுள்ள காவ்யநாடக அலங்காரங்களில் நன்குபயின்ற விற்பந்நர்கள்தாமும் வேதத்தின் பொருளுணர்தற்கண் பெரிதும்

இடர்ப்பட்டு மயங்குவர். வேதம் என்று குறிப்பிட்டது மந்த்ர ப்ராஹ்மணங்களை யென்று கொள்க. இவ்விடர்ப்பாடு இருத்தற்குக் காரணம் யாதெனின் வேதத்தில்வழங்கும் ஸப்தங்களும் காவ்யாதிகளில் வழங்கும் ஸப்தங்களும் தம்முட் பெரிதும் வேறுபடுகின்றன. மந்த்ரங் களிலுள்ள சில ஸப்தங்களில் அவை வேறுபாஷைக்குரியனவோ என்று நினைக்கும்படி அத்தனை வேறுபாடு காணப்படுகின்றது. இது வட மொழியிற் காலக்ரமத்தில் ஏற்பட்ட உபசய-அபசயங்கள் காரணமாக வந்ததாகும். வேதத்தில் மட்டும் பயின்றுவரும் ஸப்தங்களை வைதிக ஸப்தங்கள் என்றும், மற்றை இதிஹாஸம் காவியமுதலிய வடமொழி நூல்களனைத்தினும் பயின்றுவரும் ஸப்தங்களை லௌகிகஸப்தங்கள் என்றும் வடமொழியாளர் கூறுவர். பாணினியாசிரியர் 'வைதிகவழக்கு' 'லௌகிகவழக்கு' என்ற இருவகை வழக்குகளையும் நன்குணர்ந்தவராவர். ஆனால் வைதிகம் என்றதனை 'சந்தஸ்' என்றும், லௌகிகம் என்றதனை 'பாஷை' என்றும் இவர் தமது வியாகரணத்தில் வழங்குவர். உதாரண மாக வேதத்திற்குரிய சொல்லிலக்கண வேறுபாட்டையுணர்த்தும் ஓரிடத்தில் 'சந்தஸிபுநர்வஸ்வோரேகவசநம்' (I. ii. 69) என்று பாணினி சூத்திரஞ் செய்திருக்கின்றார்.

தமிழிலும் இதுபோன்றதொரு வழக்குவேறுபாடு விவகரிக்கப் பட்டுள்ளது. தொல்காப்பிய நூற்சிறப்புப்பாயிரத்திலே 'தமிழ்கூறு நல்லுலகத்து-வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்' என்று கூறப்பட் டிருக்கின்றது. பாணினியாசிரியர் 'சந்தஸ்' என்று வழங்கியதனோடொப் பத் தமிழிலும் 'செய்யுள்' எனப்பட்டது. பிரயோகவிவேகவுரையிலே "வழக்காவது உலகவழக்கும் செய்யுள்வழக்கு மென இருவகைப்படும். அவற்றை வடநூலார் 'லௌகிகப்பிரக்ரியை' 'வைதிகப்பிரக்ரியை' என்பர்" என்று சுப்பிரமணியதீக்ஷிதரும் உரைத்துச்சென்றார். தொல் காப்பியர் இவ்வழக்கு—வேறுபாட்டினைச் சுமார் 33 சூத்திரங்களால் உணர்த்துகின்றார். பலவகைத்திரிவினையோவெனில், தொல்காப்பியர் காட் டியவற்றுட் பெரும்பாலனவற்றை நீக்கி, விஷயத்தை மிகவுஞ்சுருக்கி 5 சூத்திரங்களாற் கூறிமுடிக்கின்றார். இங்ஙனம் சுருக்கிமுடிப்பதனால் இவ்வேறுபாடு தமிழிலக்கணவுணர்ச்சிக்கு அத்தனை ஆவசியகமில்லை யென்பது நன்னூலார்க்குக் கருத்தெனின், அது பொருத்தமுடையதே யாகும்.

மேற்கூறியவாறு வைதிக லௌகிக பேதத்தால் இருவகைப்பட்ட தாய வடமொழியின் இலக்கணமனைத்தையும் பாணினியாசிரியர் நன்கூனர்ந்து அம்மொழிக்கு எல்லாவகையானுஞ் சிறந்த வியாகரணமொன்று செய்தருளினர். இவ்வியாகரணத்திற் சுமார் நாலாயிரஞ் சூத்திரங்கள் உள்ளன. நூல்முழுவதும் எட்டு அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது. இக்காரணத்தால் 'அஷ்டாத்தியாயி' என நூற் பெயர் வழங்குகின்றது. அத்தியாயங்களுள் ஒவ்வொன்றும் நான்கு பாதங்களால் கடைபெறுகின்றது. பேரிலக்கணமாகிய இந்நூலுக்கு ஐந்து அங்கங்கள் உள்ளன. அவை: (1) அக்ஷரஸமாம்நாயம் (2) ஶிக்ஷை (3) கணபாடம் (4) தாதுபாடம் (5) லிங்காநுஶாஸநம் என்பனவாம். இந்த அங்கங்கள் பொதுமுறையில் இன்ன இயல்பின என் றறிந்து கொள்ளுதல் நலமாகும்.

(1) அக்ஷரஸமாம்நாயம்:— இது வடமொழிக்குரிய எழுத்துக்களை உணர்த்துவது. ஸமாம்நாயம்=தொகுதி.

(2) ஶிக்ஷை:— இது எழுத்துக்களின் உச்சாரணமுறையை யுணர்த்தும் இயல். தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின்கண் உள்ள 'பிறப்பியல்' இந்த அங்கத்தோடு பலபடியானும் ஒத்துநோக்குதற் குரியது.

(3) கணபாடம்:— அஷ்டாத்தியாயியில் இன்னசொல் தொடக்கத்தன இன்னவாறுகும் என்று பல விடங்களிலும் விதிக்கப்பட்டன. உதாரணமாக, 'நிகாதிப்யோ யத்' (iv iii 54) என்ற சூத்திரத்தையெடுத்துக்கொள்க. இதன் பொருள்: 'உளதாவது' 'தோன்றுவது' என்ற பொருளோடு தத்திதப்பெயர் பெறவேண்டியக்கால், 'திக்கு' ஆதிய சொற்களுக்கு 'ய' என்ற விகுதி வரும் என்பதாம். திக்யம், கண்யம், பஷ்யம் முதலிய தத்திதப்பெயர்களைக் காண்க. இவ்வாறு சூத்திரஞ்செய்த வளவில் 'திகாதி' என்பதன்கண் அடங்கியசொற்க ளிவையெல்லாமென்று உணர்த்துங் கடப்பாடு ஆசிரியர்க்கு ஏற்பட்டது. அதனால் அச்சொற்களையெல்லாம் ஒருகணமாக ஆசிரியர் தொகுத்துவைத்தனர். இங்ஙனமே நூலின்கண் குறிக்கப்பட்டுள்ள கணங்களுள் ஒவ்வொன்றினும் அடங்கியசொற்க ளிவையென்று தெரிவிக்கும்பாடம் 'கணபாடம்' என்று பெயர் பெறும். 'உயிரீற்றன' 'மெய்யீற்றன' 'பன்புணர்த்துவன' 'பல

வெழுத்தின' என் றின்ன பொருத்தன்மை யொன்றினுல் முற்றும் அடக் கிக்கூறமுடியாத சொற்கள் பல ஒரே இலக்கணவிதிக்கு உட்பட்டு நிற்கும் போது அவற்றை யொருசோத் தொகுத்துக் கணங்களாய்ப் படித்து விடுதலே தக்கதாகின்றது. ஒரு கணத்தில் எந்தமொழி முதலாவதாகப் படிக்கப்படுகின்றதோ அந்த மொழியால் அந்தக்கணம் பெயர்பெறுவ தாகும். உதாரணமாக: ஸர்வ, விஶ்வ, உப, உபய என்று வருங் கணம் ஸர்வாதிகணமென வழங்கப்படுகின்றது.

(4) தாதுபாடம்:—இது வடமொழியிலுள்ள வினைப்பகுதிகளனைத் தையும் இத்துணையென்றறுதியிட்டு அவற்றை இலக்கணநெறியாற் பத்து வகையாக வகுத்துணர்த்துவது. வினைப்பகுதிகள் ஊ, வய, வ்யய-ஃ, கூ என வருவனவாகும். இப்பொழுதுள்ள தாதுபாடத்தில் ஊஸ்தாயாம்-வய வ்யஃ என தாதுவும் அதனையடுத்து அதன் பொருளும் காணப்படுகின்றது. பொருளுணர்த்தும் சொற்கள் பிற் காலத்தவொருவரால் சேர்க்கப்பட்டன என்பர்; பாணினியாசிரியர் கூறி யனவல்ல.

தாதுபாடத்தை யொத்த இலக்கணப்பகுதி தமிழ்மொழிக்கு இது வரை யேற்படவில்லை. இன்ன மொன்று வேண்டுமெனத் தொல்காப்பி யர் உணர்ந்திருந்தாரென்று கொள்ளுதற்குங்கூடச் சான்றில்லை. நன்னூ லார் இதன் ஆவசியகத்தை யுணர்ந்திருக்கின்றாரென அனுமானித்தற்கு இடமுண்டு. காலஞ்சென்ற வித்வான் அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்க ளும், குருமலை ஸ்ரீ சுந்தரம்பிள்ளையவர்களும் இவ்வழியிற் சிறிது உழைத்திருக்கின்றார்கள். ஆனல், தமிழ்மொழியிலுள்ள வினைப்பகுதி களையெல்லாம் முறைப்படுத்து வகுத்துக்கூறும் நூல் இனித்தான் வெளிவரவேண்டுவதாயிருக்கிறது.

(5) லிங்காநுஶாஸநம்:— இது வடமொழியிலுள்ள பெயர்ச்சொற் களையெடுத்து இன்ன சொல்லுக்கு இன்ன லிங்கம் (ஆண், பெண், அலி) என்று வியவஸ்தைசெய்து விதித்துக்கூறுவது. தமிழ்மொழியில் லிங்கம் பொருளின்தன்மைபற்றி யேற்பட்டுள்ளது. உதாரணமாக 'நம்பி வந்தான்' 'நங்கைவந்தாள்' என்ற இடங்களில் 'நம்பி' 'நங்கை' என்ற் சொற்கள் எப்பொருள்களை யுணர்த்துகின்றனவோ அப்பொருள்களின் தன்மை முறையே ஆண்பாலும் (புல்லிங்கம்) பெண்பாலு (ஸ்த்ரீலிங்கம்)

மாயிருத்தல்பற்றி, அீச் சொற்களும் முறையே ஆண்பாற்சொல்லும் பெண்பாற்சொல்லும் ஆயின. வடமொழியில் இங்ஙனம் வருதலில்லை; சொல்பற்றியே லிங்கவியவஸ்தை யேற்பட்டுள்ளது. உதாரணமாக 'மணிவி' யென்று பொருள்படும் ஹாரஃ என்ற சொல் புல்லிங்கமும் பகுவசனமும் (பன்மை) ஆகும். பொருட்டன்மையால், இது ஸ்த்ரீலிங்கமும் ஏகவசனமும் (ஒருமை) ஆமென்பது கூறவேண்டா. இங்ஙனமாதலின் வடமொழியிற் சொல்லியுணரும்போதே அதன் லிங்கத்தையும் அறிந்துகொள்ளுதல் ஆவசியகமாகின்றது. லிங்காநுபாஸநம் இக் காரணத்தாலேயே கூறப்பட்டுள்ளது.

இந்த ஐந்து அங்கங்களில் 'அகூஸாஸமாம்நாயம்' மஹேஶ்வரரால் அருளிச்செய்யப்பட்டதென்பர். மற்றைய நான்கும் பாணினிமுனிவர் தாமே இயற்றியனவென்பதிற் சந்தேகமில்லை.

அங்கங்களுள் 'கணபாடம்' 'தாதுபாடம்' என்றுவரும் பெயர்களுக் கேற்ப அஷ்டாத்யாயியைச் 'சூத்ரபாடம்' என விசேஷித்து வழங்குதலு முண்டு. இதற்குக்காரணம் நூல்முழுவதும் சூத்ரயாப்பினல் ஆக்கப்பட்டிருப்பதுவேயாம். ஆனல், 'சூத்ரம்' என்று கூறியமாத்ரத்தில் பாணினீயசூத்ரம் தொல்காப்பியம் நன்னூல் முதலியவற்றில் வருவனபோன்று இருக்குமென நினைத்தல் தவறு. தமிழாசிரியர்கள் சூத்ரத்தின் லக்ஷணத்தை நன்குணர்ந்தவர்களேயாவர். தொல்காப்பியர்,

'.....சூத்திரந் தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடிய வின்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே'

எனச் செய்யுளியலிலும்,

'மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை யெழுத்திற் செய்புட் டாகிச்
சொல்லுங் காலை யுரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த வொண்மைத் தாகித்
துளக்க லாகாத் துணைமை யெய்தி
அளக்க லாகா வரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்றெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்'

என மரபியலிலும் விரிவாகக் கூறியுள்ளார். பவ்ணந்திமுனிவர் மேலை யிரண்டுசூத்திரங்களினும் காணப்படுங் கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கி மிகச்சுருக்கமாகவும் தெளிவாகவும் அழகாகவும் சூத்திரத்தியல் பினை யுணர்த்தியிருக்கின்றார்:

'சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னுடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்' என்பது நன்னூல்.

இங்ஙனமாகத் தமிழாசிரியரிருவர்கருதிய சூத்திர லக்ஷணமும் வடமொழியாளர் தந்துள்ள லக்ஷணமும் தம்முள் முக்கியாம்சங்களில் வேறுபடுவனவல்ல. 'சூத்திரம்' என்ற கருத்தும் சொல்லும் வடமொழியினின்று தமிழிற் பெறப்பட்டனவேயாம். ஆண்டு,

'அல்பாக்ஷரம் அஸந்திக்தம் ஸாரவத் விஶ்வதோமுகம்
அஸ்தோப்யம் அநவத்யம்ச ஸூத்ரம் ஸூத்ரவிதோவிது:'

என லக்ஷணங் கூறப்பட்டிருக்கின்றது. இருமொழியினுங் கைக்கொண்ட சூத்திரவியல்பு ஒன்றேயாயினும் வடநூலாசிரியர்கள் சொற்சுருங்க யாத்திருப்பதுபோன்று தமிழாசிரியர்களும் செய்தமைத்திருக்கின்றார்களெனக் கூறமுடியவில்லை. தொல்காப்பியர் பெரும்பாலும் விரிவாகவே சூத்திரஞ்செய்வர். இதற்குக் காரணம், சூத்திரம் சம்பந்தமான அளவில், அடிப்பட்ட இலக்கியவழக்குத் தமிழில் இல்லாமையேயாமெனத் தோன்றுகிறது. ஆனல், தொல்காப்பியம் இப்பொழுது அமைந்திருக்கும் முறையே ஏற்றதாகுமெனக் கூறவேண்டும். மிகச்சுருங்கின சூத்திரங்களால் அவர் கூறுதுபோயினரென்று நாம் தற்காலத்தில் வருந்துதற்கில்லை.

வடமொழியாசிரியர்களுள்ளும், பாணினிமுனிவர்போன்று, சில்வகை யெழுத்திற் சூத்திரஞ்செய்தோர் மிக அருகியே காணப்படுகின்றனர். 'அரைமாத்திரையேனும் சுருங்கவுரைப்பதில் லாபம் பெறுதல் கூடுமாயின், அதனைப் பாணினீயர்கள் புத்திரப்பேறு லபித்ததுபோற் போற்றிப்பாராட்டுவர்' (அர்த்தமாத்ரா லாகவேந புத்ரோத்ஸவம் மந்யந்தே பாணினீயா:) என்று வழங்கும் முதுமொழி சொற்சுருக்கவிஷயத்திற் பாணினீயாசிரியர் எத்துணைச்சிரமம் எடுத்திருக்கவேண்டுமென்பதை யொருவாறு உணர்த்திநிற்கிறது. அநேக எழுத்துக்களை யொருங்

குணர்த்த வேண்டியவிடத்து 'ப்ரத்யாஹாரம்' என்றவழியைப் பாணினி கையாளுவர். 'ப்ரத்யாஹாரம்' இன்னதென்பது பின்னர் விளங்கும். உதாரணமாக 'ஐஜ்' என்பதனால் அநுநாஸிகாந்தஸ்தங்கள் (மெல்லின இடையினங்கள்) ஒழிந்த மெய்யெழுத்துக்களை யுணர்த்துவர்; 'ஸுப்' என்பதனால் வடமொழிவேற்றுமையுருபுகளனைத்தையும்ஒருங்குணர்த்துவர்; 'திங்' என்பதனால் வடமொழிவினைக்குரிய விகுதிகளனைத்தையும் உணர்த்துவர். இங்ஙனம் வரும் பிரத்தியாகாரங்கள் பல. மேலும் 'ஸம்ஜ்ஞை' பலவற்றைப் படைத்துக்கொண்டு அவற்றைப் பாணினியாசிரியர் தமது சூத்திரங்களிலமைத்துச் சொற்சுருக்கம் பேணுகின்றனர். உதாரணமாக பி என்ற குறியீட்டினால் உயிரீற்றுச்சொற்களில் இறுதியுயிரெழுத்தினையும் மெய்யீற்றுச் சொற்களில் இறுதிமெய்யெழுத்தோடு அதற்குமுன்புள்ள உயிரெழுத்தினையும் உணர்த்துகின்றனர். ஸம்ஜ்ஞைகளேயன்றி, பரிபாஷைகள் பல அமைத்துக்கொண்டு அவற்றாற் சொற்சுருங்கும்படி செய்திருக்கின்றனர். உதாரணமாக வ்ருத்திரெள டகிதௌ (I. i. 46) என்ற சூத்திரத்தால் ஆகமத்திற்கு டகார அநுபந்தமிருப்பின் முதலிலும் அதற்கு, ககார அநுபந்தமிருப்பின் இறுதியிலும் அவ்வாகமத்தைச் சேர்த்துக்கொள்க என்று விதிக்கப்பட்டிருக்கிறது. 'ராம' என்ற பதத்திற்கு ஆறும்வேற்றுமைப் பன்மையுருபு 'ஆம்' என்பது; இதற்கு நகார ஆகமம் வருமென்று கூறப்பட்டிருக்கின்றது; இவ் வாகமம் வருமென விதித்த இடத்தில் 'நுட்' என அது குறிக்கப்பட்டது; டகார அநுபந்தம் இங்கேயிருப்பதனால், 'ஆம்' என்ற வுருபின் முன்பாக நகாரம் தோன்றி 'நாம்' என்றுகிப் பின் 'ராம' என்ற அங்கத்தின் ஈற்றகரம் நீண்டு, 'ராமாணாம்' என வுருபொடு புணர்ந்து முடிகின்றது. இவ்வாறு அநுபந்த எழுத்துக்களாலே வியாகரண காரியங்களையும் அவை செய்யப்படவேண்டிய இடமுதலாயினவற்றையும் உணர்த்திவிடுதலினாலே பாணினீய சூத்திரங்கள் சாலவும் சொற்சுருக்கம் எய்தியுள்ளன.

இதுவரை விவரித்த சூத்திரபாடத்தாலும் கணபாடம் தாதுபாட முதலிய அங்கங்களாலும் பாணினியாசிரியரியற்றிய வியாகரணமானது எவ்வகையானுஞ் சிறப்புமிக்கநூலெனறே கொள்ளற்பாலது. உலகமெல்லாம் ஒருங்குபுகழும் முதல்தரமான பெருநூல். மக்களாய்ப் பிறக்காருள், பாணினியார்போன்று அத்துணை யறிவாற்றல் படைத்தவரென

மிகச் சிலரையே சுட்டிக் கூறுதல் கூடும். பாஷாத்துவங்களனைத்தையும் ஒருங்குணரும் அகன்ற பேறிவும், அவற்றை முறைப்படித்து வகுத்து தனுஷியாராயும் மதிநுட்பமும், ஆராய்ந்தவற்றை யொருநிலையிற்கொணர்ந்தியாண்டுந்தவறுத இலக்கணவிதிகள் அமைக்கும்போற்றலும் ஒருவராலும் அளவிடுந் தரத்த வல்ல. பலபடக்கூறியென்? ஒருவரது அறிவுவன்மையை மதிப்பதற்கு அவரியற்றிய நூலினையளவுகருவியாகக்கொள்ளல் தகுமெனின், பாணினிபகவிரசிதமாத வியாகரணமும் அவரை என்றும் அதிசயிக்கத்தக்க புத்திசக்திவாய்ந்த ஒரு மஹாபுருஷரேயென நிலைநாட்டுமென்பதிற் சந்தேகமில்லை.

எனினும், இரண்டு வகையால் பாணினீயமும் குறைபடுடையதாயிருத்தல்வேண்டுமென்று கருதுதல் தவறுகாது. முதலாவதாக 'முற்றுமுணர்ந்தவரில்லை' யென்னும் உண்மை யோரிடத்துப் பொய்த்து விடுவதில்லை. எவ்வளவு பெரியோராயினும்—எத்துணை யறிவாற்றல் படைத்தவரேயாயினும்—மக்களினத்திட்பிறந்த அவ்வொருகாரணத்தாலேயே, அவரது அறிவிற்சிறிதேனும் குறைபடிருத்தல்வேண்டுமென்று நாம் ஊகித்தற்கு இடமுண்டு. ஏனெனின், மக்கள் இயற்கையிலேயே அளவுபட்ட அறிவுடையவர். இக்கருத்தையே ஸ்ரீ சுவாமிதாதேசிகர் வேறொருமுறைபற்றி 'இம்முறை யெல்லாம் எவ்பதத் தறியினும்—அவத்தை வசத்தால் அலகுவர் நிடனே—அநிமந் நுட்பமோ டதிகலி கற்பினும்—விதியது வசத்தால் விதிவிலக் கயர்ப்பர்' என்று கூறினர். ஆகவே பாணினியாரது நுண்ணிய ஆராய்ச்சிக்கும் அகப்படாது புறத்தேமறைந்துகிடந்த சப்த சாஸ்திர தத்துவங்கள் சில சில இருந்தன என்று கொள்ளுவதில் அவ்வாசார்யசிரேஷ்டருக்கு யாதோரிழுக்கும் இல்லை. இரண்டாவதாக, இயற்கையுலகிலுள்ள ஜீவராசிகளோடொப்ப மக்கள் வழங்கும் பாஷைகளுக்கும் தோற்றம் வளர்ச்சி அழிவு என்பன வுண்டென்பதும் நாம் எப்பொழுதும் மனக்கொளவேண்டுவதோருண்மையாம். இவ்வுண்மையை அடிக்கடி மறந்துவிடுகிறோம். தொல்காப்பியரது நூலோடு மாறுபட்டு இக்காலத்து ஏதேனும் ஓரிலக்கிய வழக்குக் காணப்படுமாயின், அதனைப் பிழையென்றுதள்ளுவார் இன்றும் உளர். பாஷைகளின் இயல்பை யொருசிறிது ஞாபகத்தில் வைப்பேர்மாயின், இவ்வாறுசெய்யத்துணியோம். 'கடிசொல் லில்லைக் காலத்துப் படினே' எனத் தொல்காப்பியனுர்தாமும் மேலேசுட்டிய வுண்மையை

அறிவுறுத்தியிருக்கின்றார். பவணந்தியும் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்–வழுவல கால வகையி னானே' என்று கூறியுள்ளார். ஆகவே, வடமொழியிலும், பாணினியார்காலத்திற்குப்பிற்பட்டு, சில வழக்காறுகள் தோன்றியிருத்தல்வேண்டும்; சில அழிந்துபோயிருத்தலும் வேண்டும். இவ்வாறு ஏற்பட்ட உபசய—அபசயங்களுக்குப் பாணினீயத்தில் இலக்கணங் காணுதல் சிறிதும் ஏலாதென்பது கூறவேண்டா.

மேற்கூறிய இருவகையானும் பிறந்த குறைபாடுகளைக் காத்தியாயனர் என் றொரு மஹான் தோன்றிச் சில விவரணசூத்திரங்கள் இயற்றிச் சேர்த்துத் தம் ஆராய்ச்சிக்கு எட்டியவரை பாணினீயத்தைச் செப்பஞ் செய்தனர். வரருசி என்பதும் இவர்க் கொருபெயர். இவரது விவரண சூத்திரங்கள் 'வார்த்திகம்' என்னும் பெயரான் வழங்கும். கூறியன, கூறாதுவிடுத்தன, குன்றக்கூறியன: இவற்றை நிரப்பிப் பொருளை வியக்தமாக்குவது வார்த்திகமெனப்படும். உக்தாநுக்ததுருக்தார்த்த வ்யக்தி காரிதுவார்த்திகம்' என்பது லக்ஷணம். வார்த்திகஞ்செய்தமையாற் காத்தியாயனரை வார்த்திகாரர் என்னும் கூறுவர். (தொடரும்)

ஒரு குறிப்பு:-

செந்தமிழ்ப்பத்திராதிபரவர்கள் சமூகத்துக்கு வருவது.

ஐயா!

இதன்பின்சேர்த்திருக்கும் "விஞ்ஞானதீப" நூன்முகத்தில் யான் எழுதியிருக்கிற பொருண்முடிபுகளுள் ஒருசில ஆவணிமீ 'செந்தமிழி'ல் "தமிழ்மொழிக்கு வடமொழி செவிலித்தாயாகுமா?" என்னும் வியாசத்தினுங் காணப்படுதலானும், இனிப் பொருட்பாகுபாட்டினைப்பற்றி யானுரைத்த முடிபுகள்சில அவ்வியாசத்தையெழுதியவர் கொண்டமுடிபுகளோடு முரணுற்றுநிற்பதனாலும் எனதுரை குறித்தவியாசத்தோடு உடம்படல்கருதியோ மாறுகொளல் கருதியோ எழுந்ததென்று எண்ணுதற் கிடமுண்டு. ஆவணிமீ 'செந்தமிழ்' வெளியாதற்குமுன்னமே எனது வியாசந் தங்களுக்கு அனுப்பப்பட்டதென்னும் உண்மை வெளிவரின் அவ்வித ஐயப்பாடு நிகழாது. ஆதலினால் அவ்வுண்மையையுரைக்கும் இக் குறிப்பினை எனது வியாசமுடிவில் வெளியிடும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை.

பண்டித-மயில்வாகனன்.

விஞ்ஞான தீபம்.

(The light of science.)

நூன்முகம்.

1. செஞ்ஞாயிறும், வெண்டிங்களும், மண்ணும், வானும் உருப்பட்ட ஆதிக்காலத்து நான்முகக்கடவுளுக்கு உறுதுணையாயிருந்து வான்முதற் பூதங்களைத் தோற்றுவித்த மறைநூன்முதல்வியை, நந்தாவொளிபரப் புஞ் சிந்தாவிளக்கினை அன்புமலர்சூட்டி, உள்ளத்திருத்தி, ஐம்பெரும் பூதமும் அவற்றின்பகுதியாகிய இயங்குதிணையும் நிலைத்திணையும், பிற வும் எனப் படர்ந்துபட்ட பொருட்பகுதிகளுள் ஒரு சிலவற்றை ஆராயப் புகுந்தனம்.

2. இவ்வாராய்ச்சி பொருளிலக்கண மாபியலின்பாற்படும். நமது முன்னோர் இலக்கணநூலினுள்ளே தொகுத்துக்கூறிய பொருட்பகுதிக ளுட் பல பிறமொழியாளர்களால் மிகவும் விரித்துரைக்கப்பட்டிருக்கின் றன. உதாரணமாகத் தொல்காப்பியமாகிய தொல்லிலக்கணத்தில் எழுத் துக்களின் பிறப்பு (Phonetics) மொழியாக்கம் (Philology) சொல் லிலக்கணம் (Grammar) சொற்றொடர்மரபு, உவமவியல் (Rhetoric), செய்யுளிலக்கணம் (Prosody), "பண்ணைத் தோன்றிய் எண்ணென்கு பொருளும்" என்னுமாற்றானும் பிறவாற்றானும் நாடகவழக்கு (Dramaturgy), மாத்திரை, தொடைவகை, வண்ணம் இவை கூறுமாற்றான் இசை மரபு (Music), அரசியல்முறை (Politics and civics), போர்புரி மரபு (Military science), ஒழுக்கநிலை (Ethics), நால்வகைவருணத்தார்க் குந் தாபதர்முதலியோருக்கும் உரிய அறநெறி (Law), திணைநிலப் பகுப்பு (Physiography), மெய்ப்பாடு (Peychology of the emotions), வழுவமைதி, உத்திவகை (Logic and literary criticism), ஐம்பூதத்தியற்கை (Physical science), விலங்கு, மரம் இவற்றின் பகுப்பு (Zoology and botany), வனப்பின்வகை (Aesthetics), "பொய்யும் வழுவும்" என்னுஞ் சூத்திரம் போன்றனவற்றால் மக்கட் கூட்டநிகழ்ச்சி (Sociology), இன்னோன்ன பலபொருட்பகுதிகள் கூறப்பட்டிருக்கின்றன. நாம் மேலே இருதலைப்பிறையினுட் குறித்

திருக்கிற பொருட்பகுதிகளைப் பின்னும் வகுத்து விரிவாக இயற்றிய நூல்கள் எத்தனையோபல மேனாட்டுமொழிகளில் இருக்கின்றன. நாம் ஆராய எடுத்துக்கொண்ட பொருட்பகுதி "நிலத்தி நீர்வளி விசும்போ டைந்துங்-கலந்த மயக்க முலகம்" எனத் தொல்காப்பியனார் கூறுமாற் றுன் உணர்வது. இதனையே பிற்றைநாளில், தெய்வப்புலவரும் "சுவை யொளி யூறோசை நாற்றமென் றைந்தின், வகைதெரிவான் கட்டே யுலகு" என வற்புறுத்தினர். தலைச்சங்கத்து நூலாகிய பூதபுராணத்தின் பெயரைநோக்குங்கால் அது ஐம்பூதத்தினியற்கையைப் பெருக ஆராய்ந்தநூலென்று கருத இடமுண்டு; நமது தவக்குறைவினால் அது அழிந்துபோயிற்று. கழிந்ததற்கிரங்காமல் மூன்னேற்றமடைய முயல்வ தே தகுதியென்ப தொருதலை.

3. சொற்றொடர் கருவியாகியபொருள் உலகத்தோற்றமாயும் அதற் கப்பாலாயும் நிகழ்வுறுதலின் பொருளிலக்கணத்தின் எல்லையுட்படாத அறிவுநூல் பிறிதில்லையென்பது தெற்றெனப்புலப்படுகின்றது. 'ஆலின் கீழிருந்து இறைவன் நால்வர்முனிவருக்குப் பொருணன்கினையுந் தமிழ்மொழியானுரைத்தனன்; அவ்வுரையே மறைமொழி; அதனை இந் நாளில் இழந்தனம்' என இரங்குவார் அவ்விறைவன்றானேயருளிய அரு மறைமொழியாகிய அன்பினைந்திணையையும் அவனது அருள்பெற்ற முற்றுணர்வினராகிய தொல்காப்பியமுனிவரருளைத்த பொருளிலக்கணத் திணையும் உற்றுநோக்குவாராயின், தன்புறல் ஒழிவர். காய்தல் உவத்தல் அகற்றி ஆராய்வார்க்கு வடநூன்மறைமொழியும் தமிழ்நூலில் மேலே காட்டிய முழுமுதன்மைபடைத்த நூல்களிரண்டும் ஒத்தகருத்தினவா யிருத்தல் நன்கு புலப்படும். அன்பினைந்திணை அறுபதுசூத்திரங்களும் தொல்காப்பியத்தின் ஓரியிரத்து அறுநூற்றுப்பத்துச்சூத்திரங்களும் ஆகிய ஆயிரத்தறுநூற்றெழுபதுசூத்திரங்களில் உலகவறிவு அறிவினை யறியுமறிவு ஆகிய அனைத்தும் நிட்பநுட்பமாக உணர்த்தப்பட்டிருக் கின்றன. இத்தகைமைபண்பு பிறமொழிநூல்களுக்கில்லையென்பர். வட மொழி தென்மொழி யிரண்டினும் முதன்மைபடைத்துநிற்கும் நூல்க ளின் ஒப்புமையை நோக்குங்கால் வடநூன்மறைமொழி தனக் கொருவ சொப்பில்லாத்தலைவனது புறத்தோற்றத்தை இருசுடர், இயமானன், வான், நீர், தீ, வளி, மண் என வகுத்துக் கூறுவதும், அவன் வெளிப் படும் ஆற்றலைநோக்கி விண்ணவர்வேந்து, விரிகடற்கிறை, காவற்கடவுள்,

குமாரநாயகனெனத் துதிப்பதும், உண்ணேக்கியாராய்ந்து யாதொரு பற்றுக்கோடுமில்லாத கந்தழியெனக் கண்டதும் பிறவும் தமிழ்நூற் பொருளிலக்கணமரபுக்கு மாறுபடாதிருப்பது புலப்படும். புலப்படவே ஆரியநன்று தமிழ்தீது, தமிழ்நன்று ஆரியந்தீது, தமிழ்மொழிக்கட் டீலியாய ஒத்தது இல்லை, "எழுத்துஞ் சொல்லும் பொருளும் ஆராய்ந்து இம்மைப்பயன் தருதலின் அகத்தியந் தொல்காப்பியம் முதலிய தமிழ் நூல்கள் இடையாய ஒத்தது," அங்கிமுதலிய உயிரில்பொருள்களுக்கு வழிபாடுகூறுவதனால் ஆரியமறைமொழி இழுக்குடையது என்று இவ் வாறெல்லாம் பக்கம்பற்றிக் கூறுவாரது உரையினைத்தும் மாபுநீலகிரிந்த வெற்றுரையென்பது தெளிவாகும். இனி, நிறைமொழிமாந்தராகிய அகத்தியனுநர் தொல்காப்பியனுரும் வடமொழிநூலுரைத்தபெரியோர் வழிமுறைவந்தவராமென்பதையும் அவரையொப்பத் தவத்தினுற் பெரி யோரென்பதையும் யாவரும் மறுத்துரையார். ஆதலினால் மொழியினால் வேறுபாடெய்தினவெனினும் இருமொழிப்பெருநூலும் பொருளினால் ஒன்றுபட்ட தன்மையவாம். வடமொழிமுதனூற்கண்ணும் உலகிற் பரந்துபட்ட நூன்மூடிபுகள் அனைத்தும் உள்ளன. அங்ஙனமாயின் வழிநூல்கள் வேண்டுவதெதற்கு என்பார்க்கு, சில்வாழ்நாட் சிற்றறிவின் மாந்தராகிய நாம் தொகுத்துக்கூறியபொருளினை அறிந்துகொள்ளும் ஆற்றலிலேமாதலினால் விரித்துவிளக்கும்நூல்கள் வேண்டுமென்பது விடையாகும்.

4. இவ்வாராய்ச்சி பொருளிலக்கண மரபியலின்பாற்படுவதனை யுணர்த்துவதற்கு நூல்விரியுமுறையை அறியவேண்டுமாதலின் அம் முறையைச் சுருக்கமாக ஆராய்ந்து அப்பாற்செல்வாம். நூலின்வகை தமிழ்வழக்கின்படி அகம் புறம் என இரண்டு; வடமொழிமுறையின்படி தர்மம் (அறம்), அர்த்தம் (பொருள்), காமம் (இன்பம்), மோக்ஷம் (வீடு) என நான்கு. தமிழ்வகுப்பு உணர்வோனேநோக்கிய (Subjectively) வகுப்பு. வடமொழிவகுப்பு உணரப்படும்பொருளேநோக்கிய (Objectively) வகுப்பு. ஆகவே அகத்தின்பாலறம். அகத்தின்பாற் பொருள், அகத்தின்பாலின்பம், அகத்தின்பால் வீடு, புறத்தின்பாலறம், புறத்தின்பாற் பொருள், புறத்தின்பாலின்பம், புறத்தின்பால் வீடு என விரிந்தெட்டாகும். அங்ஙனமன்றி அறனையும், பொருளையும், வீட்டினையும் புறப்பொருளெனவும், இன்பத்தையே அக

மெனவும் தமிழ்மொழிமாந்தர் வகுத்த இலக்கணஞ் செய்தாரென்று சொல்லுகிற உரையாசிரியர்கிலரதுகூற்றுப் பொருத்தமுடையதன்று. இவர்கூற்று இறைவனருளிய கழிபெருஞ்சிறப்பின் வீட்டுநூலாகிய அன்பினைந்திணையை வாளா இன்பநூலாக்கிவிடும். சிந்தையு மொழியுஞ் செல்லாநிலைமைத்தாகிய வீட்டின்பத்தைத் "துறவறமாகிய காரணவகையினுல் உணர்த்தினர்" என்ப. இத்துறவு புறத்துக்குரியதுபோலவே அகத்துக்கு முரியது. "காமஞ் சான்ற கடைக்கோட் காலை, யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி, யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ், சிறந்தது பயிற்ற விறந்ததன் பயனே" என்னுங் கற்பியற்சூத்திரத்துக்கு "இல்லறத்தின்பின்னர் வானப்பிரத்தமுஞ் சன்னியாசமும் என்னும் இவற்றின்கண்ணேநின்று பின்னர் மெய்யுணர்ந்து வீடுபெறுப என்றார். இவ் வீடுபேற்றினை இன்றியமையாதது இவ்வில்லறமென்பது இதன்பயன். இது காஞ்சியாகாதோவெனின், ஆகாது; தங்குறிப்பினன்றி நிலையாமை தானேவருவதுதான் சிறந்து நிலைபெற்று நிற்குமெனச் சான்றோர்கூறுதலும் அது தானேவந்து நிற்றலுங் காஞ்சி; இது அன்னதன்றிச் சிறந்தவீட்டின்பவேட்கையாற் முமே எல்லாவற்றையும் பற்றறத்துறத்தலின் அகப்பொருட்பகுதியாம்" என்று நச்சினார்க்கினியர் உரைத்தாராதலின், துறவும் துறவுகாரணமாகிய வீடும் அகத்தின் பகுதியுமாம் என்பது புலப்படுகின்றது. இனி அனுபவிக்கும் வீட்டின்பத்தை வாதவூரடிகள்காட்டியவாறு அகத்தின்கூறுகிய திணை வகைப்பொருட்சார்புபற்றிய எடுத்துக்காட்டினுலும், உள்ளுறை பகை வரை எதிர்த்து அறைகூவி அகங்கார அரணத்தையிடித்து வாகை சூடித் துதிபெறுநிலைமையினுல் வெட்சிமுதலிய புறத்திணைச் சார்பாகிய எடுத்துக்காட்டினுலும் உணர்த்துதல்கூடுமாதலின் வீடு அகப்பொருள் புறப்பொருள் இரண்டனுக்கும் பொதுவாம். இனிக் கற்பியலினுள் இருமுதுகுரவரும், அந்தணரும், சான்றோரும், தலைமகனும், தலைமகளும் ஓரையும் நாளும் ஒப்பநோக்கி இதுசெய்தற்குரியர், இதுதவிர்தற்குரியர் என வரையறுத்து அறநெறிவழக்கங் கூறுதலின் அறம் அகத்துக்கு முரியது. பொருள் புறத்துக்கே சிறப்புரிமையெய்தியதெனினும் பொருள்வயிற்பிரிவுமுதலியவற்றுல் அகத்துக்கு முரியது. இன்பம் அகத்துக்கே சிறப்புரிமையெய்தியதெனினும் சிறுபான்மை புறத்துக்கு முரியது. ஆகவே அகத்தின்கண்ணே நாற்பொருளுமுள்ளன; புறத்தின்கண்ணேயும் நாற்பொருளும் உள்ளன வென்பது வெளிப்படை.

பொருணோக்கிவகுத்த நாலென்னும் பகுப்பினை ஆதாரமாகக்கொண்டு இவ்வாராய்ச்சி எப்பொருட் பகுதியின்பாற்பட்டதென்பதை ஆராய்வாம். ஆராயுமிடத்து மேற்றிசைமாந்தர்வழக்கினையும் அநுவதித்து இயைபு காணுவாம்.

5. மேனாட்டுக்கல்லூரிகளில் மதிப்புப்பட்டம்பெறுதற்கு வாசிக்கும் மாணாக்கர்கள் பகுத்துபட்ட பொருட்பகுதிகளுள் ஒன்றைத்தெரிந்து அதனைத் தீரத் தெளியப் படிட்பார்கள். நால்வகைப்பொருட்பகுதியினையும் பெருமட்டாகப் பிரவேசவகுப்பில் உணர்ந்துகொண்டமாணவன் நுணுகவாராயுமாறு ஒருபொருட்பகுதியைக் (Faculty) கைக்கொள்ளுவான். கைக்கொண்டு மூன்றுண்டிகற்றுத் தேறியவனுக்கு அறநூற் புலவன் (தர்மசாஸ்திரவிற்பன்னன் LL. B.) பொருணூற்புலவன் (அர்த்தசாஸ்திரவிற்பன்னன் B. Sc. Economics) இயற்கைப்பொருணூற்புலவன் (பௌதிகசாஸ்திர விற்பன்னன் B. Sc.) இன்பநூற்புலவன் (கலாசாஸ்திரவிற்பன்னன் B. A.), வீட்டுநூற்புலவன் (மோக்ஷசாஸ்திரவிற்பன்னன் B. D.), என்னும் பட்டங்கள் ஏற்றபெற்றி வழங்கப்படுவன. ஈராண்டெல்லே பின்னும் ஆராய்ந்து வன்மைகாட்டியவற்கு அறநூற்றலைவன் (தர்மசாஸ்திரநாயகன் LL. M.), என்றித்தொடக்கத்த பட்டங்களும், அதனினும் மிக்க ஆராய்ச்சிசெய்து நூலுரைமுதலியன புதியனவாகவும் அறிவுடையோரால் மதிக்கத்தக்கனவாகவும் இயற்றித் தந்தவற்கு அறநூலாசிரியன் (தர்மசாஸ்திரபண்டிதன் LL. D.) என்றித்தொடக்கத்த பட்டங்களும் வழங்கப்படும். இங்ஙனம் (arts, science, laws, divinity) இன்பம், பொருள், அறம், வீடு என்னும் நான்குகூறுக நூற்பாவையை வகுத்து மேனாட்டறிஞர் ஆராய்வாராயினர். வடமொழியில் மநுதர்மசாஸ்திரம், பராசரஸ்மிருதி முதலியனவும், தமிழில் திருவள்ளுவர் அறத்துப்பாலும் ஒழுக்கம், வழக்கு, தண்டம் இவற்றை விதிக்குமியல்பினவாதலின் அறநூல், தர்மசாஸ்திரம் என்னும் மொழிகளை (Laws) என்னும் ஆங்கிலமொழியோடொத்த பொருளினவாகக் கொண்டனம். இன்பநூலானது "காதலிருவர் கருத்தொப்ப ஆதரவுபட்ட" தெனினும் அகத்தின்பமாகிய அவ்வாதரவோடு ஒன்றுபட்டுநிற்கும் புறத்தின்பாலின்பமாகிய கவிநயம், இசை, ஓவிய நூல், (Poetry, music, painting) இவற்றையுந் தன்னகத்துக்கொண்டது; "கூத்தும் பாட்டுங் தூக்குந் தணிவும், பண்ணியாழ்க் கரணமும்

பாடைப் பாடலும், தண்ணுமைக் கருவியுந் தாழ்தீங் குழலும்..... வட்டிகைச் செய்தியு மலராய்ந்து தொடுத்தலும், காலக் கணிதமுங் கலைகளின் றுணிவும், நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த, ஓவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையுங், கற்றுத் தேறைபோகிய பொற்றொடி நங்கை" எனச் சித்தலைச்சாத்தனர் கூறுமாற்றா லுணர்க. இவற்றை யுள்ளடக்கிய (arts) என்னும் ஆங்கிலமொழியை இன்பநூல் எனவும், கலாசாஸ்திரம் எனவுங் கொண்டனம். அரசியல்முறையையும் பொருள் செய்முறையையுங் கூறுவன சுக்கிரநீதிமுதலிய வடமொழி அர்த்த சாஸ்திரங்களும் திருவள்ளுவர்பொருட்பாலும் போல்வன. இவற்றா லுணரும் பொருட்பாலவாகிய மேனாட்டுநூல்கள் (Political and economic science) என்று வழங்கப்படுவன. அர்த்தசாஸ்திர உணர்ச்சிக்கும் ஒரோவழி மோக்ஷசாஸ்திர உணர்ச்சிக்கும் இன்றியமையாத தாகிய பௌதிகசாஸ்திரம் (science) ஐம்பெரும்பூதத்தியற்கையையும் அவற்றின்பகுதியாகிய இயங்குதிணை, நிலைத்திணை முதலியவற்றையும் ஆராய்வது. வீட்டுநூல் (divinity) சடப்பொருட்டத்துவம் (Metaphysics), மனோதத்துவம் (Psychology), ஒழுக்கநிலை (ethics) முதலியவற்றை யுள்ளடக்கியது. இவ்வாறு பாகுபடுக்கும் நூற்பாப்பில் நமது ஆராய்ச்சியினுட்படுவன ஐம்பெரும்பூதத்தியற்கையும் அவற்றின்பகுதிகளுட் சிலவுமாம். [மேற்றிசைநூல்வல்ல தமிழ்மொழிமாந்தரது பெயரோடு அவர்பெற்ற மதிப்புப்பெயரைச் சேர்த்தெழுதுங்கால் அறநூலாசிரியர் சுப்பிரமணியஐயர், தர்மசாஸ்திர கலாசாஸ்திரநாயகர் சுப்பிரமணியபிள்ளை, இன்பநூ லறநூற்புலவர் வையாபுரிப்பிள்ளை என்று இவ்வாறு எழுதுவது தகவுடைத்து; அஃதன்றி பி. ஏ. பி. எல். என்பது பொருந்தாது].

6. பிறமொழிமாந்தரிடமிருந்து ஒன்றும் பெறலாகாதென்று வாதிப்பாரொருசாரார் மேலைநாட்டாரது "ஸயன்ஸ்" எம்மிடமிருந்தது, அழிந்துபோயிற்று என்பர். அங்ஙனமாயின் அதனைப் புதிதாக ஆக்கிக் கொள்வது அவசியந்தானே என்போம். தொல்காப்பியனாரையும் அவரினைய பெரியோரையும் ஆசிரியராகக்கொண்ட நாம் ஹக்ஸ்லி, டார்வின், தொம்சன், கெல்வின் முதலியோரை ஆசிரியராகக்கொள்ளுவமோவெனின் அறிவுடையோரைச் சாதி சமயபேதம்பாராது ஏற்றுக்கொள்ளுதல் கடனென்போம். அங்ஙனமன்றியும், இந்நூல் இயற்றப்பொரு

ஞணர்ச்சியாகிய பிரயோகவிஞ்ஞானத்தின்பாலதாதலின் அ வ் வி ஞ் ஞானத்தைப்பெறுதற்குரிய வாயிலாகின்ற மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் என்பவற்றுற் புலங்கொளற்பாலது. இவ்வாராய்ச்சியினுற் பெறப்படும் முடிபுகளின் உண்மையை நிச்சயித்தற்குக் காட்சியளவையு ங் கருத்தளவையும் அவற்றோடுசார்ந்துநின்ற சம்பவவளவையும் வேண்டப்படுவனன்றி ஆகமவளவை வெண்டப்படுவதொன்றல்லவென்பாம். கோட்டுநீறும் மஞ்சளுங் கூடியவழிச் செந்நிறம் பிறக்குமென்று சொன்ன னொருவன், அவனுரையின் உண்மையை யாராய்வதற்கு அவனது குலங் கல்வி முதலியவற்றை விசாரித்தலன்றிக் கோட்டுநீற்றையும் மஞ்சளையுந் தருவித்து ஒருங்குகூட்டிச் செந்நிறம் பிறக்கின்றதா என்ப தைக் காட்சியளவைகொண்டு நிச்சயித்தலே மரபாகும். ஆதலினல், இவ்வாராய்ச்சியினல்வரும்பயனை முழுதுமடையவிரும்புவோர் குறிக் கப்பட்ட பொருள்களையுங் கருவிகளையுஞ் சேகரித்து விவரிக்கப்பட் டிருக்கிறமுறைப்படி செய்கைசெய்து அவ்வழிப்பெற்றமுடிபுகளை வேண் டியவழி அநுமானித்து உண்மையையறிந்துகொள்ளுதல் மரபாகும். ஐம்பூதத்தைப்பற்றிய அறிவு எம்மிடத்துள்ள அளவிற் போதாதோ விரித்துரைக்கவேண்டுமோவெனில், வேண்டும் என்போம். பஞ்சபூத வியற்கையை நுணுகவாராய்ந்த வலிமையினலன்றே மேலைநாட்டார் நில மிசை விரைந்துசெல்லும் எந்திரவூர்திகளையும், நீர்மிசை மிதந்துசெல் வனவும் நிரையெறிகடலினுட் குளித்துச்செல்வனவுமாகிய பலவகை இருப்புக்கலங்களையும், தீயின்வேகத்தா லுந்தப்பட்டு வளிமேற்கிளர்ந்து செல்லும் வானவூர்திகளையும், விசும்புபுறுக மின்னியக்கமே தூதுவனு கச் செய்தியனுப்பும் மார்க்கங்களையும் அறிந்திருக்கிறார்கள். நமக்கு இனியாரது உருவப்படத்தை நாம் பார்த்து இன்புறுதற்கும், இன் னிசையோடு பாடுவாரது கீதங்களை அவர் கழிந்தபிறகும் நாம் கேட் டின் புறுதற்கும், தூரத்தில்நடந்த செய்திகளை நடந்தவாறே நாம் கண்டு இன் புறுதற்கும், பிறநாட்டுச்சென்றிருக்கும் அன்புடையாரோடு வசனித் தின்புறுதற்கும், கருவியாகவமைந்த படிமக்கருவி, பாடற்கருவி, நடன விளக்கு, வாய்த்தந்திமுதலியன ஐம்பெரும்பூதத்தியற்கையை யுணர்ந்த அறிஞரால் ஆக்கப்பட்டனவாமன்றே. அன்றியும், பகைவராவார் நாட்டினுட்புகாது அரண்செய்துகாத்தற்குப் பயன்படுவனவும் 'யவன ரியற்றியபலவனகப்பொறி' என நம்முன்னோராற்குறிக்கப்பட்டனவுமாகிய யந்திரங்களையமைத்தற்குங் கருவியாய்நின்றது ஐம்பூத ஆராய்ச்சியாகும்.

மேற்குறித்த கருவிகளுட் படிமக்கருவி நடனவிளக்கு இவற்றினமைப்பும் தூரதரிசனி, அணுதரிசனி, நிறதரிசனி என்பவற்றி னமைப்பும் இவ் வாராய்ச்சி ஒளியியலுட்கூறப்படும். பாடற்கருவியினமைப்பு இசையிய லுட் கூறப்படும்; வாய்த்தந்திினமைப்பு மின்னியக்கவியலுட் கூறப் படும்; எந்திரவூர்தியமைப்பு அனலியலுட் கூறப்படும்.

7. படர்க்கைபட்ட இப்பொருளை எம்முறையாக ஆராய்வமெனின் உற்பத்திவிளக்கம், தத்துவவிளக்கம், பதார்த்தவிளக்கம் என மூன்று பிரிவுவகுத்து முதற்பிரிவை 4 அதிகாரமாக்கி, சூரியசந்திரோற்பத்தி (வானநூல், astronomy), மலைகடலுற்பத்தி (பூமிநூல் Geology), தாவரசங்கமோற்பத்தி (தாவரநூல் Botany, விலங்குநூல் Zoology, சீவநூல் Biology) மானிடசரீரோற்பத்தி (Physiology, anatomy) எனவும், அப்பால் தத்துவவிளக்கத்தினுள் இயக்கத்தினியல்பையும் பொருளின் பொதுவியல்பையும் ஓதிகாரமாக்கிப் பொதுவியல் (Dynamics and properties of matter) எனவும், பின்னும் ஐந்தி காரங்களை முறையே இசையியல் (sound), ஒளியியல் (light), அனலியல் (Heat and radiant energy), காந்தவியல், மின்னியல் (Magnetism and electrostatics), மின்னியக்கவியல் (Dynamic electricity) என வும், இரசாயனவியல் கூறும் இரண்டதிகாரங்களைப் பதார்த்தவிளக்கம் எனவுங் கொண்டு ஒருவாறு கூறிமுடிப்பாம்.

8. இவ்வாராய்ச்சிக்கு ஆதாரமாயுள்ள வடமொழி தென்மொழி நூல்கள் எவையோவெனின், ஒல்காப்பெருந்தவத் தொல்காப்பியனார் "மாற்றருஞ் சிறப்பின் மரபியல் இளப்பின்" என்பது முதலாக "நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங், கலந்த மயக்க முலகம்" என்ப தீறுகச் சொன்ன என்பத்தொன்பது சூத்திரங்களுள் "நூலேகாகம்" என்பது முதல் "அன்னராயினும்" என்ப தீறுகச் சொன்ன பதினைந்துசூத்திரங்க ளொழித்து ஒழிந்த எழுபத்துநான்கு சூத்திரங்களும், சங்கச்சான்றோர் நூல்களுண் மரபியற்பொருண்மையவாய் மேலேசுட்டிய சூத்திரங்க ளுணர்த்தும் பொருளெல்லைபுட்பட்டனவாய் வருகிற செய்யுட்பகுதிக ளும், முப்பொருளிலக்கண ஆராய்ச்சிசெய்யும் முதனூலாகிய சிவஞான போதமும், வைண சித்தாந்தசாஸ்திரங்களும், தமிழ்மொழியினும் வட மொழியினும் பலவாகவிருந்த வேதாந்தநூல்களும், கபிலருரைத்த சாங் கியநூல், கணாதருளிய வைசேடிகநூல், பதஞ்சலிமுனிவர்தந்த யோக

சூத்திரம் எனப் பரந்துபட்ட தத்துவநூல்களும்; சிவகசிந்தாமணிமுத்தியிலம்பகம், மணிமேகலையி னீற்றினின்ற மூன்றுகாதைகள், திருவள்ளுவப் பயனுட் சிலபாகங்கள், வைத்தியநூல்களுட்சில, வடமொழிரசாயனதாதுட்சிலவும் இவ்வாராய்ச்சிக்கு ஏற்றபெற்றி ஆதாரமாவன. இவ்வாதாரநூல்களில் வழங்குஞ் சிறப்புமொழிகளுள் இவ்வாராய்ச்சிக்கு வேண்டுவனவற்றை எடுத்தாளுவோம். ஆங்கிலநூல்முகமாக யாம்ஆராய்ந்துணர்ந்த கருத்திணையுரைத்தற்கு ஏற்புடைய தமிழ்ச்சொல் வடசொல் இல்லாதவழிப் பொருத்தமுள்ள புதியசொற்களை ஆக்கிக்கொள்வோம். யவனபுரமொழி (Greek) ரோமபுரமொழி (Latin) ஆங்கிலமொழி யிவற்றுளிருந்து தக்கசொற்களைத் திசைச்சொற்களாக எடுத்தாள்வோம். இவ்விஷயத்தைப்பற்றி மொழித்திறத்தின்முட்டறுத்தல் எனலுந் தலைப்பெயர்க்கீழ் விரிவாக ஒருவியாசமெழுதுவாம்.

9. மேலைத்தேசத்தார் நன்கனமாராய்ந்த இயற்கைப்பொருணூற்றுறைகள் பலவற்றை யொருங்குதிரட்டியுரைக்கும் இந்நூற்கு விஞ்ஞானதீபம் என்னும்பெயர் ஏற்புடைத்தாமாறு:- ஆங்கிலமொழியில் "ஸயன்ஸ்", என்னும் பதம் மெய் வாய் கண் மூக்கு செவி மனம் என்னும் ஆறுவாயிலானும் எய்தப்பெற்று நாமரூபத்துக்குக் காரணமாய்க் காட்சியளவை கருத்தளவை சம்பவவளவையினுட்பட்டு நிற்கும் உணர்ச்சிபறிவினைக் குறிப்பது. இதற்கு நேர்மொழிபெயர்ப்பு விஞ்ஞானமாகும் (மணிமேகலை பவத்திறமறுதெனப் பாவைநோற்றகாதையைப் பார்க்க) இவ்வெல்லைக்கப்பாற் பிறஅளவைகொண்டு அறியப்படும் பொருளில்லையென்று மேற்றிசைநூலோர்சிலர்தாமபுபற்றிச் சாதிப்போமெனின் இந்நூல் விஞ்ஞானவாதம் எனப்படும். அங்ஙனஞ் சாதித்தல் செய்பாமையினாலும், உண்மையறிவுவிளக்கத்துக்குக் காரணமாய்நிற்றலினாலும் இந்நூல் "விஞ்ஞானதீபம்" எனப்படும். தமிழ்மொழியால் "உணர்வுச்சுடர்" என்பதனினும்பார்க்க 'விஞ்ஞானதீபம்' என்பதே பொருத்தமுடைத்து. அன்றியும், தமிழ்நூற்பரவைபுள் வடமொழிப்பெயர்ந்தப்பெற்றநூல்கள் மிகப்பல.

"மூப்பொருளினுண்மைதருஞ்சிவஞானபோதமெனுமுதனூறந்த
அப்பனருண்மெய்கண்டான்றன்னூற்குவடமொழிப்பேரறைதலேனே
செப்புசித்திதேவாரம்வாசகமேகலிசிந்தாமணியென்றின்ன
தப்பில்வடமொழிப்பெயரைச்சார்ந்துநின்றமரபெதுவோ"

எனநினைந்து,

"முன்னுளினூலுரைத்தமுழுதுணர்ந்தோர்வழிநின்றுமொழிதல்வேண்டி
இன்னாளுமாரியத்திலியைவனகொண்டுரைத்தனலமென்னுமெண்ணம்
என்னாளுமுளத்துடையேன்"

ஆதலினால், தமுவுவனதழுவி எழுதினேன். நூலின் உள்ளும் தமிழ்நூல் வடநூன்முடிபுகள் பலவற்றை யாராய்ந்துகொண்டுபோவேனுதலால் இந்நூலின் முதற்பிரிவாகிய உற்பத்திவிளக்கம் உயர்நடையினதாகிப் பள்ளிக்கூடச்சிறுவர்க்குப் பயன்படாததாகும். தத்துவவிளக்கமும் (Physics), பதார்த்தவிளக்கமும் (chemistry), எளியநடையினவாய்க் கல்லூரிப் பிரவேசபரீக்ஷை (மெற்றிக்குலேஷன்)க்கு வாசிக்கும் ஆறுவது மத்தியதரவகுப்பு மாணவர்க்கு உபயோகமாவனவாம். பதார்த்தவிளக்கம் சிலேப்பொருள் (Inorganic) தசைப்பொருள் (Organic) இவை இரண்டதிகாரங்களாக ஆராய்ந்து வகுக்கப்படினவெனினும் பல உட்பிரிவுகளையுடையனவாய்விளங்கும். கல்லூரிச்சட்டத்திற்கியைய அடக்கவேண்டிய பொருளனைத்தையும் அடக்கிநிற்கும். "ஸயன்ஸ்" இல்லாதது தமிழ்மாதுக்கு ஒருகுறையென்று பலகாற்சொல்லிக்கொள்ளுகிற ஆங்கிலவிற்பன்னரது பழிமொழி இதனோடு தீர்ந்துவிடக் கருணைசெய்யுமாறு சங்கப்புலவர்களினின்றுநடம்புரியுந் தண்டமிழ்த்தாயை இளமைவனப் பென்றுமகலா இன்றமிழ்த்தெய்வத்தை மனமொழிமெய்களால் வணங்கி இந்நூன்முகத்தை முடிப்பாம்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
மயிலாப்பூர்,
சென்னை.

பண்டித-மயில்வாகனன்,
B. Sc. (Lond.)

களப்ரரும் சங்ககாலமும்.

வேள்விக்குடிச் செப்பேடுகளின்முன்னுரையில், களப்ரரைக் குறித்து நான் எழுதியவற்றை மறுத்து ஸ்ரீ. கி. ரா. ஸுப்ரஹ்மண்யம் சில கூறுகிறார். அவற்றை இங்கு ஆராய்வேன்.

அளவரிய ஆதிராஜரை அகலநீக்கி என்பதற்கு அளவரிய பாண்டியரை அவர்களில் கடையோனுல் அகலநீக்கி என்று பொருள்கூறி இருந்தேன். இவ்வாறுகூறுவது பிற்காலத்திற்கே ஒவ்வுமென்கிறார். ஒரு அரசனை அவன்முன்னவர்செயல்களால் ஏற்றுவது சங்கநூல்களிலும் காணப்படுவதை அறியார்போலும்.

பாண்டியரைப் பாடும்புலவன் அவர்களைக் களப்ரன் நீக்கிய செய்தியைக்கூறுன் என்கிறார். இவ்வாறுகூறுவது அவனையும்வென்ற கடுங்கோனையே பெருமைப்படுத்தும் என்பது தெளிவாம். தன் அரசனை உயர்த்த அவன் பகைவனையும் புகழ்வது நம்நூல்களில் எங்கும் காணலாம். ராவணனை வால்மீகி ஏற்றுவதும், கர்ணனை வ்யாஸர்புகழ்வதுமே இதற்குச் சான்றும்.

களப்ரர்வேறு கர்ணடர்வேறு என்றதற்கு நான்கூறிய காரணங்கள். (1) பாண்டியரைநீக்கின களப்ரனையே கடுங்கோன், வென்றான். பெரிய புராணத்திற்குறிக்கப்படும் கர்ணடவரசனை தோல்வியுறுமலே இறந்தான்; (2) களப்ரனைநீக்கி ஆண்டவன் கடுங்கோன்; கர்ணடன் இறந்தபின் ஆண்டவன் பாண்டியனல்ல; மூர்த்திநாயனர்; (3) களப்ரன் நீக்கப்பட்டகாலை பாண்டியரிருந்தார். கர்ணடன் இறந்தகாலை அவர் அற்றுப்போயினர்; (4) ஓரிடத்திலும் களப்ரரும் கர்ணடரும் ஒருவராகக் குறிக்கப்படவில்லை.

இவற்றை ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யம் மறுக்கமுயன்றார். முதலில், களப்ரர் ஆதிக்யம் இறக்கப்பட்டபின்னரே, கடுங்கோன் வெளிப்பட்டான். அதற்குமுன் பாண்டியரே இல்லை என்றார். இல்லாதவர் எவ்வாறு வெளிப்பட்டார் என்று கூறவில்லை. மூலத்திலும் களப்ரன் கைக்கொண்டது இறக்கப்பட்டபின் என்றில்லை. களப்ரன் கைக்கொண்டதை இறக்கியபின் கடுங்கோன் வெளிப்பட்டான் என்றே இருக்கிறது. இறக்கியவன் வேறு என்று குறிக்கப்படாதவரை கடுங்கோனே என்று கொள்வதே செம்பொருளாம்.

பின்னர், பல்லவனைக் காடவர் என்பதுபோல், களப்ரரைக் கர்ணாட ரே என்று கருதாவிட்டால் சடையன்வென்றவர் வேறு என்றுகொள்ள வேண்டிவருமென்றார். பல்லவரும் காடவரும் ஒருவரே எனப் பல இடங் களிலும் காணலாம். களப்ரரும் கர்ணாடரும் ஒருவரே என எங்காவது கூறப்பட்டிருக்கிறதா? களப்ரர் கர்ணாடராகக் கூடுமாயின் அவர் சளுக்யரு மேனகார்? சடையன் வென்றவர் வேறு என்று கொள்வதிற் பிசகென்ன? ஒருவம்சத்திற் பலரும் ஒருவரையே வென்றிருக்கவேண்டுமா? இவ் வாறு ந்யாயப்போலிகளில் இடர்ப்படாமல், களப்ரரும் கர்ணாடரும் ஒருவ ரே என்று குறிக்கப்பட்டிருக்கும் இட மொன்றைக் காட்டினால், நானே ஒத்துக்கொள்வேன்.

களப்ரன் தாநத்தை இறக்கினன், கர்ணாடனும் சமணன் என்னு மோர் ந்யாயம் கூறுகிறார். தாநத்தை இறக்கியவர் எல்லாரும் சமணராக வேண்டுமா? சமணரெல்லாம் ஒரேவம்சத்தார் ஆகவும் வேண்டுமா?

பாண்ட்யநாடு ஒரேமுறைதான் கி. பி. 10-ம் நூற்றாண்டிற்குமுன் பிறர்வசப்பட்டதென்றார். இதை எவ்வாறுணர்ந்தார். சங்ககாலத்தின் இறுதியில் ஒரு ஆக்ரமணமும் சங்ககாலத்திற்குமுன் ஒரு ஆக்ரமணமும் என்றும் மூர்த்திநாயனார் சங்ககாலத்திற்குமுன் இருந்தார் என்றும் கொள்வதிற் பிசகென்ன?

களப்ரன் ஒருவனேயானால், அவனை நீக்கியதும் வேள்விக்குடி என் திரும்பக்கிடைக்கவில்லை என்றார். அக்காலத்து அம்மரபினன் இலையோ ராகவே, பிறநாட்டிலோ, ஸ்திரீயாகவோ இருந்திருக்கலாம் என்று பல காரணங்கள் கூறலாம். இதைக்கொண்டே ஒன்றும் முடிவுகூறலாகாது.

மேலும், வேள்விக்குடிச்செப்பேடுகளின் ப்ரசஸ்தியை எழுதியவன் முன்காலசரித்திரத்தை நன்குணர்ந்தவனல்ல வென்றார் இது பிசகென் பது இப் பிரசஸ்தியில் கூறப்படும் பாண்ட்ய அரசர்களின் மெய்க்கீர்த்தி களே விளக்கும்.

பின்னும் சில ஆதாரமற்ற தமதுகொள்கைகளையே களப்ரர்து சரித்ர மென்று கூறுகின்றார். காரணங்கள் கூறப்படாமையால், இவற்றை நான் ஆராயவேண்டியதில்லை.

மேற்கூறிய ஆக்ஷேபங்களுக்கும் தக்க ஸமாதாநம் என் நண்பர் கூறுவாராயின், என் கொள்கைபைமாற்றி உண்மை அறிவதில் எனக் குத் தடை ஒன்றுமில்லை. —— கே. ஜி. சங்கரன்.

வேள்விக்குடிச்செப்பேடுகளில் காணப்படும் பாண்டிவம்சம்.

எண்	பெயர்.	பட்டமேற்றிய காலம்.	முன்னவனுக்கு உறவு.	பட்டங்கள்.	சரித்திரக் குறிப்புகள்.
(1)	முதுகுடுமி ...	சுமார் கி. பி. 450	.....	பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி.	வேள்விக்குடியை முதலில் அளித்தவன் தலையாலங்கானம்வென்ற நெடுஞ்செழியனின்முன்னவன்.
(2)	களப்பான் ...	600	ஆக்ரமித்தவன்.	.....	பாண்டியரை இறக்கித் தாநத்தைக் கைப்பற்றியவன்
(3)	கடுங்கோன்	615	குடுமியின் தோன்றல்	.....	களப்பரை ஓட்டியவன்.
(4)	மாறவர்மன்	640	மகன் ...	அவனிசூடாமணி ...	.....
(5)	சேந்தன் (ஜயந்தன்)	665	மகன் ...	செழியன், வானவன் ...	.....
(6)	மாறவர்மன்	690	தோன்றல் ...	அரிகேஸரி, அஸமஸமன், நெடுமாறநாயனார்.	ஹிரண்யகர்ப்பமும் துலாபாரமும் இயற்றி, பாழியிலும் செந்நிலத்தும் வென்று, நெல்வேலியில் வில்வேலியைப் புறங்கண்டு, குறுநாடரை அழித்து, கோளரை (குலசேகராழ்வாரையா?) வென்று, கோழியைக் கைக்கொண்டு, சங்கமங்கையிலும் வென்றவன்; களவியலுரையில் புகழப்பட்டவன்; சம்பந்தரால் சைவன் ஆக்கபெற்றவன்; சேந்தனுக்குப்பிற்காலம் பாண்டிய நாட்டைக் குலசேகரர்கைக்கொண்டிருக்கலாம்.

(7)	சடையன் ...	715	மகன் ...	ரணதீரன், தென்னவானவன், செம்பியன் சோழன், மதுரகரு நாடகன், கொங்கர்கோமான்		மருதூரில்வென்று, ஆய்வேளை அழித்து மங்கலபுரத் தில் மேலைச்சளுக்யரை வென்றவன்.
(8)	மாறவர்மன்	740	மகன் ...	ராஜஸிம்ஹன்	...	நந்திவர்மன் பல்லவமல்லனைப் புறங்கண்டு, ஹிரண்ய கர்ப்பமும், துலாபாரமும், கோஸஹஸ்ரமும் இயற்றி, கொங்காசன் கங்காஜன் மழவன்மகள் பூஸுந்தரியைமணந்து, நெடுவயல், குறுமடை, மன்னிகுறிச்சி (உதயசந்த்ரன்வென்ற மண்ணைக் குடியா?), திருமங்கை, பூவலூர், கொடும்பாளூரி லும் வென்று, குழும்பூரில் பல்லவனைப் புறங் கண்டு, பெரியலூரில்வென்று, மழகொங்கம் கீழ்ப் படுத்து, கூடல், வஞ்சி, கோழி என்று பெயர்க ளிடப்பட்ட மதில்களைப் புதுக்கியவன்; வெண் பையில் 2-வது விக்ரமாதித்யனை மாறன்காரி புறங் கண்டான்.
(9)	ஜடிலன் ...	765	மகன் ...	நெடுஞ்சடையன், மாறஞ்சடை யன், தென்னவானவன், ஸ்ரீவரன், ஸ்ரீமநோஹரன், சினச்சோழன், புனப் பூழியன், வீதகல்மஷன், விநயவிச்ருதன், விக்ரமபாரகன், வீரபுரோகன், மருத்பலன், மாந்யசாஸநன், மதூபமன், மர்தவீரன், கிரிஸ்திரன், கீர்திகி கரன், க்ருபாலயன், க்ருதாபதாநன், கலிப்பகை, கண்டகநிஷ்டுரன், கார்ய தக்ஷிணன், கார்முகபார்த்தன், பராந்தகன், பண்டிதவத்ஸலன், பரிபூர்ணன், பாபபீரு, குணக்ராஹ்யன், கூடநிர்ணயன்.		பெண்ணாடத்துப் பல்லவனைவென்று, ஆய்வேளை யும் குறும்பரையும் நாட்டுக்குறும்பில் புறங்கண்டு, தன் 3-ம் ஆண்டில் (கி. பி. 770 சுமார்) முதல் தாம் பெற்றவனது தோன்றலுக்கு இவ்வுரை மீண்டும் அளித்தவன்.

கே. ஜி. சங்கரன்.

ஸ்ரீ:

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

21-ஆம் வருடக்கொண்டாட்டம்.



நிகழும் துந்துபி-ஐப் புரட்டாசிமீ 7, 8 உகளில் மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் இருபத்தோராம்வருடக்கொண்டாட்டம் இம்மதுரைமாநகரில், ஸேதுபதி உயர்தரக்கலாசாலைக்கட்டடத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 7உ மாலை 4-மணிக்கு ஸபைகூடியது. அதற்கு இராமநாதபுரம் ஜில்லா நீதிபதி ஸ்ரீமான் R. கோபாலராவ் M.A., B.L., அவர்கள், மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள், மதுரையிலுள்ள இராமேசுவர தேவஸ்தானபாடசாலைத்தலைவர் வித்தியாநிதி ர. கிருஷ்ணமாசாரியர் M.A., அவர்கள், ரெவரெண்டு J. S. சாண்டிலர் துரையவர்கள், திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்கத்தம்பிரான் அவர்கள், தருமபுராதீனம் ஸ்ரீலஸ்ரீ ஷண்முகத்தம்பிரான் அவர்கள், ஸ்ரீமான்களான போஸ்டல் சூப்பரிண்டெண்டெண்டு மாரிமுத்துப்பிள்ளையவர்கள், போலீஸ்சூப்பரிண்டெண்டெண்டு சற்பகவிநாயகம்பிள்ளையவர்கள், மதுரை வக்கீல்கள் K. ராமையங்காரவர்கள், T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள், V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்கள், R கணபதி ஐயரவர்கள், R. S. நாராயணஸாமி ஐயரவர்கள், S. சோமசுந்தரபாரதியவர்கள், N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், V. முத்துஸாமி ஐயர் M.A., L.T., அவர்கள், காரைக்குடி மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள், திருநெல்வேலி இந்துகலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் மே. செர். சுப்பிரமணியக்கவிராயரவர்கள், திருச்சி நேஷனல்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ம. கோபாலகிருஷ்ணையரவர்கள், செந்தமிழ்ப்பத்திராதிபர் திரு. நாராயணையங்காரவர்கள், சங்கத்துச் சைவநூற்பரிசோதகர் சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள், மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள், தமிழ்ச்சங்கக்கலாசாலை உபாத்தியாயர் பண்டித சு. ஹரிஹரையரவர்கள், சு. நல்லசிவன்பிள்ளையவர்கள், சோதகுடி M. K. M. அப்துல்காதிறாவுத்தரவர்கள், திருவையாற்று ஸம்ஸ்கிருதகலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் சந்தானமையங்காரவர்கள்,

மதுரை அமெரிக்கன்கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஆ. கார்மேகக்கோனவர்கள், மதுரை ஸ்காட்டிஷ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் பண்டித அங்கராமானுஜபிள்ளையவர்கள், மதுரை ஸௌராஷ்டிர ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் P. சிதம்பரபுன்னைவனநாதமுதலியாரவர்கள், பசுமலை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் கே. ரா. சுப்பிரமணியசர்மா அவர்கள், பொள்ளாச்சி முனிஸிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் நா. கனகராஜையரவர்கள் முதலிய உள்ளூர்வாசிகளும் வெளியூர்வாசிகளும் விஜயம் செய்திருந்தனர்.

முதலிற் சங்கத்தின் கெளரவகாரியதரிசி ஸ்ரீமான்- T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் ஸபையிலுள்ள பெரியோர்களை இராமநாதபுரம்ஜில்லா நீதிபதி ஸ்ரீமான்- R. கோபாலராவ் அவர்களுக்கு அறிமுகம்செய்து வைக்க, ஸ்ரீமத்- சந்தானமையங்காரவர்கள் கடவுள்வாழ்த்துப் பாடினர்கள். பின்னர், சங்கக்கலாசாலையுபாத்தியாயர் பண்டித சு. ஹரிஹரையரவர்கள், சங்கத்துச் சைவநூற்பரிசோதகர் ஸ்ரீமத்- சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களும், சங்கக்கலாசாலையுபாத்தியாயர் ஸ்ரீமத்- சு. நல்லசிவன்பிள்ளையவர்களும் இயற்றிய மங்களவாழ்த்துப்பாடல்களைப் படித்தார்கள்.

அதன்மேல், ஸபையாரின்சார்பாக மதுரை வக்கீல் ஸ்ரீமான்- K. இராமையங்காரவர்கள், இராமநாதபுரம்ஜில்லாநீதிபதி ஸ்ரீமான்- R. கோபாலராவ் M.A., B.L., அவர்களை அக்கிராஸனராயிருக்குமாறு வேண்டிக்கொள்ள, அவர்கள் அக்கிராஸனத்தமர்ந்தார்கள். பின்னர், ஸ்ரீமத்- M. K. M. அப்துல்காதிறுாவுத்தரவர்கள் மங்களவாழ்த்துக் கூறச் சங்கத்தின் கெளரவகாரியதரிசி ஸ்ரீமான்- M. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள் அக்கிராஸனர்க்கு மாலைசூட்டினர்கள். அக்கிராஸனர் சுருக்கமாகவும் அழகாகவும் முன்னுரைகூறியபின் சங்கத்தின் கெளரவகாரியதரிசி ஸ்ரீமான்- T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் வருடக்கொண்டாட்டத்துக்கு வரமுடியாத அங்கத்தினரிடமிருந்தும் அபிமானிகளிடமிருந்தும் வந்த தந்திகளையும் கடிதங்களையும் தமிழ்ச்சங்கத்தின் இருபத்தோராம்வருட அறிக்கைப்பத்திரத்தையும் படித்தார்கள்.

அதன்பின்னர், வந்திருந்தகனவான்களில் மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள் சங்கத்தார் அக்கிராஸனரைத் தேர்ந்தெடுத்ததைப் பாராட்டியும், சங்கக்கலாசாலையின் அபிவிருத்தியை நன்கு

மதித்தும், வித்தியாவிஷயஆலோசனைஸபையை விருத்திசெய்ய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியும், ஸ்ரீமத்- மே. சொ. சுப்பிர மணியக்கவிராயரவர்கள் சங்கக்கலாசாலைமாணவர் அடைந்துள்ள அபி விருத்தியைப் பாராட்டியும், ரெவரெண்டு ஜெ. எஸ். சாண்டிலர்துரை யவர்கள் சங்கத்தகாதி உலகத்துக்கு மிகவும் பயனளிக்குமென்றும், தாம் லெக்ஸிகன்கமிட்டியில் தலைவர்யிருந்தகாலத்து லெக்ஸிகன்கமிட்டி யார் அகராதியாரிப்பதற்குச் சங்கத்தகாதி பேருதவியாயிருந்த தென்றும், அதன் எஞ்சியபாகமும் விரைவில்வெளிவரவேண்டுமென்றும், மதுரை வக்கீல் ஸ்ரீமான்- சோமசுந்தர்பாரதியவர்கள் தமிழின்பெருமை யைவிளக்கி, டாக்டர் ரவீந்திரநாதடாகூர் ஏற்படுத்தியுள்ள விசுவபாரதி என்ற சங்கம்போலத் தமிழிற்கும் ஒரு ஸர்வகலாசங்கம் ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியும், வித்தியாநிதி ர. கிருஷ்ணமா சாரியர் M.A., அவர்கள் அக்கிராஸனர்நியமனத்தைப் பாராட்டியும், வட மொழிக்குப் பித்ருபாஷையென்றும் தமிழுக்கு மாத்ருபாஷையென்றும் பெயருண்டென்று அவை அவ்வாறு வழங்கப்படுதற்குக் காரணங்காட்டி விளக்கி, அவ்விரண்டையும் போற்றவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி யும், திருக்குறளின்பெருமையை விளக்கியும், சென்னைச் சருவகலாசங் கத்தார் தமிழ் ஸம்ஸ்கிருதம் என்ற இரண்டுபாஷைகளிலும் தேர்ச்சி யுள்ளவர்களுக்கே வித்வான் என்ற பட்டமளிப்பதைக் கண்டித்தும், இரண்டுபாஷைகளிலும் தேர்ச்சிபெறுபவரைக்காட்டிலும் ஏதேனும் ஒரு பாஷையில் மிக்கதேர்ச்சியுள்ளவர்களுக்கும் வித்வான் என்ற பட்டம் கொடுக்கவேண்டுமென்பதை வற்புறுத்தியும் அபிப்பிராயங்கூறினர்கள்.

பின்னர், அக்கிராஸனரவர்கள் சங்கப்பரீக்ஷைகளிற் றேறியவர்க்குப் பரிசு முதலிய அளித்து, தமிழ் தெய்வத்தன்மையுள்ளபாஷையென் றும், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு என்னும் நான்குபாஷை களும் தமிழிலிருந்தே பிறந்தன என்றும், மேற்கண்ட நான்குபாஷை களும் வழங்கும் நாடுகளும்முன்பு தமிழ்நாடாயிருந்தனவென்றும், விந்திய மலைக்குத்தெற்கேயுள்ள நாடுமுழுவதுக்கும் திராவிடம் என்ற பெயர் என்றும், அதில்வாழும் மக்களெல்லாம் திராவிடர் என்ற பெயர் வழங்கப் படுவர் என்றும், வடமொழி தென்மொழி இரண்டும் தொன்றுதொட்டே ஒற்றுமைப்பட்டுள்ளனவென்றும், தமிழர்க்கு ஸம்ஸ்கிருதபாஷாஞானம் அவசியம்வேண்டுமென்றும், பொன்னும் மணியும்போலத் தென்மொழியும்

வடமொழியுஞ் சேர்ந்தாற் சிறப்படையுமென்றும், பாரதகாலம்வரை வடமொழி தாய்ப்பாஷையாக (பேசும் பாஷையாக) இருந்ததென்றும், பின் வேறுபாஷைகள் அதிலிருந் தண்டாயினவென்றும், பாரதகாலத் துக்குப்பின் வடமொழியிலும் தென்மொழியிலும் முதனூல்கள் இயற் றப்படவில்லையென்றும், சங்கத்தார் வேளிர்வரலாறுபோன்ற ஆராய்ச்சி நூல்கள் பலவற்றைத் தக்க புலவர்களேக்கொண்டு எழுதி வெளியிடுவித்து அவர்களுக்கு விசேஷ சம்மானம்செய்யவேண்டுமென்றும், தமிழில், பௌதிகசாத்திரமுதலியவற்றைச் சங்கத்தார் இராமேசுவர தேவஸ்தான பாடசாலையாருடனும் உவாத்திமைச்சங்கத்தாருடனும் கூடி யாராய்ந்து விருத்திசெய்யவேண்டுமென்றும், பிறபாஷைகளிலிருந்து அரியநூல்களே இன்னும் அதிகமாய்த் தமிழில் மொழிபெயர்க்கவேண்டுமென்றும், அரிய விஷயங்களே யாவருமுணரும்படி எளியநடையில் எழுதிப் பிரசுரம் செய்யவேண்டுமென்றும், புதியவுரைநடைப் புத்தகங்களே எளியநடையில் எழுதிவெளியிடும்படி சம்மானத்துடன் ஒரு பரீக்ஷை ஏற்படுத்த வேண்டுமென்றும், தமிழ்ப்பாஷையை வளர்த்தற்குத் தனியே ஒரு ஸர்வ கலாசாலை ஏற்படவேண்டியது அவசியமென்றும், அதனே மதுரையி லேயே ஸ்தாபிக்கவேண்டுமென்றும், அதனேயமைக்கும்விஷயமாய்ப் பத் திரிகைகளிற் பிரசுரஞ்செய்து எல்லாருடைய அபிமானத்தையும் ஒத் துழைப்பையும் பெறவேண்டுமென்றும், தமிழும் ஸம்ஸ்கிருதமும் ஒற் றுமைப்பட்டிருக்கும்படி ஸர்வகலாசாலை ஏற்படுவது அவசியமென்றும், அதில், தமிழ் தாய்ப்பாஷையாதலால் அதனே முதலிற் சிறப்பாகப் போற்றவேண்டுமென்றும், இவற்றையெல்லாஞ் செய்வதற்குச் சங்கத் தாரே தகுதியுள்ளவர்களென்றும், தமிழ்ச்சர்வகலாசாலையை ஏற்படுத்து வதில் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டுமென்றும், மதுரையிலுள்ள ராமேசுவரதேவஸ்தான பாடசாலையாரும் சங்கத்தாரும் ஏககாலத்தில் வருட்க்கொண்டாட்டத்தை நடத்தவேண்டுமென்றும், அவ்விருபாஷாவிற் பங்கர்களும் ஒருநாளாவது கலந்து உபன்யாசம் செய்யவேண்டுமென்றும், அவ்வாறு செய்வதனால், பல அரியவிஷயங்களே உலகத்துக்கு எளிதில் வெளியிடச் சமயம்வாய்க்குமென்றும், சங்கத்திற் சென்ற ஆண்டு நீ விபத்தால் நேர்ந்த நஷ்டத்துக்கு இரங்கி, அதனே விரைவில் நிவர்த்திக்க வேண்டிய தவசியமென்றும், தமிழைவளர்த்தற்குத் தமிழ்த்தோர்ச்சி யுள்ளவர்களுக்குத் தக்க சம்பளத்துடன் வேலைகள் அமைத்துக்கொடுப்

பதும் ஒரு வழியென்றும் கூறிச் சங்கத்தாபகர்க்கும் அதனையாதரித்து வருவார்க்கும் நன்றிபாராட்டிச் சங்கம் தமிழை வளர்த்து நீடுழிவாழ அருள்புரியுமாறு இறைவனைப் பிரார்த்தித்துச் ச பை யோர் வியந்து கொண்டாடுமாறு தமது பிரசங்கத்தை முடித்தார்கள்.

பின்பு, பொள்ளாச்சி முனிஸிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். நா. கனகராஜையரவர்கள் 'தாமியற்றிய மங்களவாழ்த்துச்செய்யுளைப் படித்தார்கள். திருச்சி நேஷனல் காலேஜ் த மிழ்ப் பண் டி தர் ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் எல்லோரையும் சங்கத்தில் அங்கத்தினராகச் சேருமாறுவேண்டி, தமிழபிவிருத்தியின்பொருட்டு மிக்க ஊக்கததோடு உழைத்துவரும் சங்கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களுக்கும், அன்று ஸபையை நன்கு நடத்தி வைத்தும் அரிய உபந்நாசஞ்செய்தும் சங்க வருடக்கொண்டாட்டத்தை நன்கு சிறப்பித்த அக்ராஸனரவர்களுக்கும் ஸபையாரின் சார்பாக நன்றி பாராட்டி வந்தனஞ் செலுத்தினர்கள்.

பின்னர், காரைக்குடி ஸ்ரீமான் மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் அடுத்த வருடக்கொண்டாட்டத்தைக் காரைக்குடியில் நடத்த அநுமதிவேண்ட, சங்கத்தின் கௌரவ காரியதரிசி ஸ்ரீமான். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் இவ்விஷயத்தை மகாஸபையார்க்கு அறிவித்து அவர்கள் செய்யும் நிர்மானத்தைத் தெரிவிப்பதாகக் கூறினர்கள். பின்பு, ஸ்ரீமத். சந்தானமையங்காரவர்கள் கடவுள்வாழ்த்துப் பாடவும், சங்கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமான். மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள் ஆக்ராஸனர்க்கும் சபையோர்க்கும் மாலைசூட்டவும் முதல்நாள்விழா இனிது நிறைவெய்தியது.

இரண்டாநாள் விழா

8ஆ காலை 8½ மணிக்கு ஸபை கூடியது. ஸபைத்தலைவரான மாட்சிமைதங்கிய R. கோபாலராவ் அவர்கள் வேறு காரியமாகச் சென்றிருந்தமையால் மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள் ஸபையார் வேண்டுதற்கிசைந்து ஸபைத்தலைவராயிருந்தார்கள். ஸ்ரீமத். சந்தானம் ஐயங்காரவர்கள் கடவுள்வாழ்த்துப் பாடினர்கள்.

பின்னர், மதுரையிலுள்ள இராமேசுவர தேவஸ்தானபாடசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் T. N. அப்பனையங்காரவர்கள்

கம்பர்கவிநுட்பமென்ற விஷயமேற்கொண்டு "வானின்றிழிந்து" என்னும் மூதற்குறிப்புள்ள செய்யுளில் அமைந்துகிடக்கும் நயங்களை விளக்கியுபந்யசித்தார்கள். அக்கிராஸனரவர்கள் உபந்யாசகரையும் அவர் கூறிய கம்பர்கவிநுட்பங்களையும், பாராட்டியும், அக்கவியில் அமைந்துள்ள வேறுவிசேஷங்களை எடுத்து விளக்கியும் அபிப்பிராயங்கூறினர்கள்.

அதன்பின், சபையார்விருப்பத்துக்கிணங்கிச் சங்கத்துச் சைவ நூற்பரிசோதகரும் திருவாவடுதுறையாதீன வித்துவானுமான ஸ்ரீமத். சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் ஸபைத்தலைவராயிருந்தார்கள். ஸ்ரீமான். வே. முத்துஸாமி ஐயரவர்கள் 'கம்பரதுசிறு நூல்கள்' என்ற விஷயமேற்கொண்டு சடகோபரந்தாதி, சடகோபரந்தாதி, ஏரெழுபது என்ற நூல்களிலிருந்து இடையிடையே பலசெய்யுட்களைப்படித்து அவற்றில் அமைந்துள்ள நயங்களை இனிதாக விளக்கினர்கள். சபைத் தலைவரவர்கள் உபந்யாசத்தைப்பாராட்டிக் கல்வியின் சிறப்பை மேற் கோள்களுடன் நன்கு விளக்கினர்கள்.

பின்னர்க் கவிராயரவர்கள் அக்கிராஸனராகச் சங்கத்தின் காரியநிர் வாகஸபை கூடிற்று. அதில் நிறைவேறிய தீர்மானங்கள் இதனிறுதியிற் காட்டப்பட்டுள்ளன. இதனுடன் காலைக்கூட்டம் 11½-மணிக்கு நன்கு நிறைவெய்தியது.

அன்று பிற்பகல் 4-மணிக்கு மறுபடியும் ஸபைகூடிற்று. ஸ்ரீமத் சந்தானமையங்காரவர்கள் கடவுள்வாழ்த்துப்பாடினர்கள். அக்கிராஸன ரான ஸ்ரீமான் R. கோபாலராவ் அவர்கள் 5-மணிக்கு விஜயம்செய்வதா யிருந்தமையால் ஸபையார்கள்வேண்ட இசைந்து மஹாமஹோபாத்தி யாய உ. வே. சாமிநாதையரவர்கள் ஸபைத்தலைவராயிருந்தார்கள். தமிழ்ச் சங்கக்ரஹாலயுபாத்தியாயர் ஸ்ரீமத்-பண்டித. சு. ஹரிஹரையரவர்கள், சிதம்பரம் மீநாக்ஷிகலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் சர்க்கரை இராம சாமிப்புலவரவர்களும், இலங்கைமாவிட்டபுரம்ஸென்ட்ரல்காலேஜ்தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் K. S. நவநீதகிருஷ்ணபாரதியவர்களும் அனுப்பிய மங்களவாழ்த்துப்பாடல்களைப் படித்தார்கள். அதன்பின், சோதகுடி. ஸ்ரீமான் M. K. M. அப்துல்காதிறாவுத்தரவர்கள் தாம் எழுதிய வீடு என்னும் வியாசத்தைப்படித்தார்கள்; இந்த வியாஸம் படித்துக்கொண் டிருக்கும்பொழுது அக்கிராஸனரான ஸ்ரீமான் R. கோபாலராவ் அவர்கள்

விஜயம்செய்து அக்கிராஸனத்திலமர்ந்தார்கள். பின்னர் மதுரை வக்கீல் ஸ்ரீமான் R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள் 'யாப்பியல்' என்ற விஷய மேற்கொண்டு வடமொழி தென்மொழிகளிலுள்ள ஒற்றுமையை விளக்கி யுபந்யஸித்தார்கள்.

அதன்பின், திருநெல்வேலி ஹிந்துகலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். மே. சொ. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் 'சிவஞானசுவாமிகள் கற்பனை' என்ற விஷயமேற்கொண்டு, அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்க் காப்புப்பருவம் செங்கீரைப்பருவங்களிலிருந்து சில செய்யுட்களைப் படித்து அவற்றிலமைந்துள்ள கற்பனை நயம் முதலியவற்றை விளக்கினார்கள்.

பின்னர், ராஜமகேந்திரபுரத்திலிருந்து ஸ்ரீமான். K. C. வீரராகவையர் M.A., அவர்கள் அனுப்பிய 'ஒரு வேண்டுகோள்' 'கோனசீமைத் திராவிடப்பிராமணர்கள்' என்ற வியாசங்கள் ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்களாற் படிக்கப்பட்டன.

பின்னர், மதுரை அமெரிக்கன்கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். ஆ. கார்மேகக்கோனரவர்கள் 'கோசர்' என்ற விஷயமேற்கொண்டு, தமிழ் நாட்டைச் சேர சோழ பாண்டியரேயன்றி, வேறுசிலரும் ஆண்டுவந்துள்ளனரென்றும், அவர்கள் வேளிர், மழவர், கோசர். என்பவர்களென்றும், இவர்களிற் கோசரது ஊர் பொதியமலையையடுத்துள்ள நல்லூரென்று குறுந்தொகைப்பதிற்றைந்தாஞ்செய்யுளிற் கூறப்பட்டுள்ளதென்றும், இவர்கள் வாய்மையிற் சிறந்தவர்களென்றும், மதுரைக்காஞ்சி, குறுந்தொகை முதலியநூல்கள் இவரைப்பற்றிக்கூறுகின்றனவென்றும், இவர், நான்கு பிரிவாக இருந்தனரென்றும், கோசர்புத்தூர் என்பது கோயம்புத்தூர் என்று வழங்கியிருக்கலாமென்றும், இவர்கள் நன்னன் என்ற அரசனேடும் வேறு பல அரசரோடும் பொருதவர் என்றும், இவர்களைப்பற்றி ஆராய்ச்சிசெய்து ஒரு கட்டுரை எழுதி வெளியிடவேண்டுமென்றும் கூறினார்கள்.

அதன்மேல், பொள்ளாச்சிமுனிலிபல்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். நா. கனகராஜையரவர்கள், ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸருபதேசமொழிகளிற்சிலவற்றை எடுத்து விளக்கி அவ்விஷயமாய்த் தாமியற்றிய செய்யுட்களிற் சிலவற்றைப் படித்தார்கள்.

பின்னர், திருச்சி நேஷனல்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் 'பழந்தமிழரசர்கள்' என்ற விஷயமேற் கொண்டு அவர்களது கலைத்தேர்ச்சியையும், நியாயம்வழங்கும் முறை யையும், வாய்மையையும், கொடைமுதலியவற்றையும் புறநானூறு முதலிய பழைய சங்கத்தமிழ்நூன்மேற்கோள்களால் நன்குவிளக்கி யுபந்ய ஸித்தார்கள்.

அதன்பின், ஸ்ரீமத். கிருஷ்ணஸ்வாமிநாயுடு அவர்கள் 'திருக்குறளின் பெருமை' என்ற விஷயமாய்ப் பேசத்தொடங்கித் திருக்குறளைக் கீதை யுடன் ஒருவாறு ஒப்பிடலாமெனினும், சிலசில இடங்களிற் குறள் கீதை யினும் மேம்பட்டு நிற்கிறது என்றும், அதற்குதாரணம் ஸ்ரீகீதையில் 'பாபயோனிகள்' என்று கூறியிருக்கக் குறளிற் 'பெண்ணிற் பெருந்தக்கயாவுள' என்று சிறப்பித்துக்கூறப்பட்டிருப்பதும் பிறவு மென்றும், குறள் இதுவரை 43-பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட் டிருக்கின்றதென்றும் கூறிச் சிலகுறள்களில் அமைந்துள்ள விசேடங்களை விளக்கினார்கள்.

அதன்மேல், மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள் 'நடந்த உபந்யாசங்களைப் பாராட்டி, 'கோசர்' என்றவிஷயமாய்க் குறுந் தொகைப் பதிணைந்தாம்பாடலிற்கூறிய பொதியில் என்பது பொதியமலை யன்றென்றும், அது மன்றமென்றும், மூற்கலத்தில் ஒவ்வொரு ஊரிலும் கோயிலுக்குள்ளும் வெளியிலும் ஸபைகள் இருந்தன என்றும், கோயிலுக்குள்ளிருந்தஸபைகளுக்குத் 'திருவுண்ணாழி' என்று பெய ரென்றும், வெளியிலுள்ளவற்றுக்கு 'மன்ற' மென்று பெயரென்றும், அக்காலத்தும் நியாயவாதிகள் இருந்தனரென்றும், அவர்களுக்கு மன் றுடிகள் என்று பெயரென்றும், திருக்குறள்விஷயமாய், திருக்குறளை சரபோஜிமகாராஜர்காலத்தில் தஞ்சையில் ஒரு பெரியபுத்தகசாலையை யுண்டாக்கிற்றென்றும் அபிப்பிராயங்கூறி, மேலும் நூலாராய்ச்சி என்ற விஷயமாய்ப் பேசத்தொடங்கி, முன்பு மலையாளமும் தமிழ்நாடாயிருந்த தென்றும், அந்நாட்டரசர்களும் தமிழில் நூலியற்றுமாற்றலுடையரா யிருந்தனரென்றும், அவ்வரசரியற்றப்பட்டநூல்கள் 'சேரமான்பெரு மாள்கைலாசத்தலா' முதலியனவென்றும், மலையமான திருமுடிக்காரி மிகவும் பெருமையுடையவனென்றும், மலையமானுக்குத் திருமுடிக்காரி

என்ற சிறப்புப்பெயர் அரசரால்டப்பட்டதென்றும், மூன்னளிற் பெண் டிரும் படித்துக் கவியியற்றுமாற்றலுள்ளவர்களாயிருந்தார்களென்றும், ஔவையார் சில அரசரிட்த்துத் தூதுசென்று அரியபெரியசெயல்களைச் செய்திருக்கிறரென்றும், பதிற்றுப்பத்தென்ற பழஞ்சங்கநூல் மிகவும் போற்றத்தக்கபெருமையுடையதென்றும், இதனால், பழந்தமிழரசர்கள் புலவர்களை மிகவும் போற்றி ஆதரித்துவந்தமை நன்கு விளங்குமென் றும், பதிற்றுப்பத்துப்பாடல்களிற் சிலவற்றுக்கு அப்பாடல்களுள்வந்த சொற்களாலேயே (தசும்புதுளங்கிருக்கை என்பது போல) பெயரிடப் பட்டுள்ளனவென்றும், பழந்தமிழ்நூற்செய்யுள்களிற் றன்மைநவிற்சியணி பெரும்பாலும் காணப்படுமென்றும், புறநானூறு, பதிற்றுப்பத்து, சிந்தாமணி முதலிய சங்கநூல்களிலிருந்து மேற்கோள்காட்டிச் சபை யோர் நன்குமதிக்குமாறு உபந்யசித்தார்கள்.

அதன்மேல், அக்கிராஸனரவர்கள், நடந்தவுபந்யாசங்களைப்பாராட்டி யும், திருக்குறளைப்பற்றிப்பேசியவர் கீதையில் ஸ்திரீகளைப் 'பாபயோநி கள்' என்று கூறியிருப்பதாகச் சொல்லியதைக் கண்டித்துக் கீதையில் பாபயோநிகள் என்று கூறியது ஸ்திரீகளையல்ல வென்று விளக்கியும், சுருக்கமாகவும் விளக்கமாகவும் பேசிமுடித்தார்கள்.

பின்னர், மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள், அக்கிராஸனர்க்கு மாலைசூட்ட, தருமபுரவாதீனம் ஸ்ரீலஸ்ரீ ஷண்முகத்தம்பிரானவர்கள் தமிழ்த்தெய்வவணக்கங்கூறினர்கள்.

அதன்மேல், மதுரை வக்கீல் ஸ்ரீமான் K. இராமையங்காரவர்களும், சங்கத்தின் கெளரவகாரியதரிசி ஸ்ரீமான். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர் களும், அக்கிராஸனர்க்கும் வித்வான்களுக்கும் சபையோர்க்கும், சங்கக் கொண்டாட்டம் நடத்துவதற்கு வேண்டிய இடம் பொருள் முதலிய வற்றை உதவியவர்க்கும் வந்தனோபசாரஞ் செலுத்தினர்கள். வேம்பத் தூர் ஸ்ரீமத். பாலசுப்பிரமணிய ஐயரவர்கள் வாழ்த்துக்கவி கூறவும், ஸ்ரீமத். சந்தானமையங்காரவர்கள் கடவுள்வாழ்த்துப்பாடவும் இரவு 8½ மணிக்குச் சங்கத்தின் இருபத்தோராம் வருடக்கொண்டாட்டம் இனிது நிறைவெய்தியது. சுபம். சுபம். சுபம்.

உதவிப்பத்திராதிபர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

இருபத்தோராம்வருடக்கொண்டாட்ட

மங்களவாழ்த்து.

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்
சைவநூற்பரிசோதகரும் திருவாவடுதுறையாதீனவித்துவானுமான
ஸ்ரீமத். சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் பாடியது.

ஆண்டுநாலேந்துடனொன்றுனசாட்சங்கத்தார்
வேண்டவருடவிழாத்தலைமை—பூண்டிங்கு
நண்ணுகோபாலராவேன்னும்நலமிகுசீர்
அண்ணல்வருகைநலமாம்.

அண்ணல்கோபாலராவாம்பெரியோனுற்சங்கம்
நண்ணுவிழாவும்நனிசிறக்க—எண்ணருஞ்சீ
ரிப்பெரியோனுஞ்சங்கத்தாருமிருந்தமிழும்
எப்பொழுதும்வாழ்கஇனிது.

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலே உபாத்தியாயர்
ஸ்ரீமத். சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் பாடியது.

பூத்த தாமரைப் புனிதனும் விண்டுவும் புவனம்
ஏத்து மூக்கணெம் மிறைவனு மமரரும் யாருங்
காத்து நேத்திர மெனக்கொளுங் கடவுளாந் தன்மைச்
சோத்த மிக்கசெந் தமிழ்மக ளெமக்குறு தூணையே. (1)

பொன்னி யாதிய நதிகளு மெய்திடாப் புதுமை
மன்னு வையையின் வளம்பெறு மதுரைமா நகரங்
கன்னி நாட்டிலெத் தலத்தினுங் கவினுறக் கதிர்த்துச்
சென்னி யாமெனத் திகழ்வது பலநலஞ் சிறந்தே. (2)

இன்ன தன்மைசேர் கூடலம் பதியினி லெவர்க்கும்
அன்னை போற்றமி ழமுதினை யருத்தியத் தமிழ்ச்சொல்
முன்னை நாளெனத் தலைசிறந் தோங்கிட முயலும்,
தன்னை நேரிலாத் தகவுறு தண்டமிழ்ச் சங்கம் (3)

தரையெ லாம்புகழ் தமிழர செனத்தரும் பாண்டித்
துரையெ னும்பெயர்த் தூயனு லிங்கர்த் தோன்றி
யுரைபெ றும்பல புலவருக் குறையுளா யுலகில்
வரையின் மீதுறு மணிவிளக் காமென வயங்கி, (4)

மீது லாவரு வெண்கதி ராமென விளங்கும்
ஓது தண்குடை நீழலி லுலகெலாம் புரப்போன்
மாது பாகனை மனமொழி மெய்களால் வழுத்துஞ்
சேது காவல னுயிய செந்தமிழ் வள்ளல் (5)

ஏந்து பொன்முடி ராஜரா ஜேச்வர வியற்பேர்
வேந்து தன்குல பரம்பரை விழைந்திடு மேன்மை
வாய்ந்த செந்தமி ழினையவ ரினுமிக வளர்ப்பான்
சாந்த மேவுறு தலைவனுத் தாங்கிடத் தழைத்து, (6)

வளரும் வான்பிறை நிகர்த்திட நாடொறும் வளர்ந்தே
யுளம கிழ்ந்திவ் வயதிரு பானுட னெண்ணுப்
கிளரிவ் வான்டெழில் விழாவினுக் கதிபனுக் கீர்த்தித்
தளவ மோலியன் றிருவடிக் கன்புசெய் தூயோன் (7)

ஆரி யச்சொலுங் கருநட மொழியுநன் காய்ந்தோன்
பாரி லாங்கில மொழியினிற் சிறப்புமேற் படைத்தோன்
வாரி யாமென வாழ்ந்தபல் பொருணயம் வழங்கும்
நேரி லாத்தமிழ் மொழியினுஞ் சிறந்தநன் னிலையோன் (8)

சேது காவல ராட்சிசெய் திருநக ரெனவே
யோது ராமந தபுமென் றுரைபெறுஞ் சில்லா
நீதி மன்றத்தி னுயர்வுறு தலைவனு நிலவும்
வேத வேதியர் புகழுமாத் துவகுல மேலோன் (9)

ஈன்ற மேலவ ரென்னினு நொதுமல ரெனினும்
ஆன்ற நூல்வழி நடுநின்று முறைபுரி யறவோன்

தேன்ற ழ்ம்பிய மலரவன் றிருமா புதித்தோன்
சான்ற வர்க்குண்மே லோனெனப் புவிபுகழ் தக்கோன் (10)
பாரி லங்குகோ பாலரா வெனப்பெயர் படைத்தோன்
சீரி லங்கவந் தருளின னந்தமிழ் சிறக்க
ஏரி லங்குமிவ் வரவுநல் வரவதா யிசைக
பேரி லங்குமிப் பெருந்தகை வாழிய பெரிதே. (11)

செங்கண் மாலெனச் செகத்தையுந் தமிழையும் புரக்குந்
திங்கள் வெண்குடைச் சேதுகா வலர்திரு மரபுந்
தங்கண் மாநிதி யெனத்தமிழ் தழைத்திட வுதவும்
புங்க மேயிய புதுவைமன் னவர்திரு மரபும் (12)
பாரி யாநிப் வள்ளல்போற் பாவலர் தமக்குஞ்
சீரி தாகிய செந்தமி ழினுக்குநன் குதவு
தாரி யானபெத் தாச்சிநா மம்பூனை தனதன்
நேரி தாகிய மரபுமிந் நிலத்துவா ழியவே. (13)

இங்கு வந்துநற் சபையைநன் கலங்கரித் திருக்குங்
குங்கர் யாவரும் வாழிய தூயநந் தமிழின்
சங்கம் வாழிய தமிழ்மறை வாழிய தரும
மெங்கும் வாழிய வாழிய விருநில மினிதே. (14)

சக்கரவர்த்திவாழ்த்து.

மாமணி மகுடந் தாங்கி வையக மொருகோ லோச்சுங்
கோமகன் ஐந்தாம் ஜார்ஜுக் கோற்றவன் செங்கோல் வாழ்க
காமரு முலக வேந்துங் காவலன் குடியு மொன்றித்
தோமறு முயிர்மெய் மானத் துணையுடன் வாழ்க மாதோ. (15)

சோதகுடி மகா-ள-ள-ஸ்ரீ

எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தரவுகள் பாடியது.

மன்காயும்விழிக்கலைமான்வாழ்மதுரை
மாநகரில்மாண்புற்றேங்கும்
கான்காயதமிழ்ச்சங்கத்திருபானென்
றும்வருடநல்விழாவில்

வான்காயுங்கொடைக்கரன்கோ
பாலராவ்தலைமையினவகித்திஞ்ஞான்று
தேன்காயும்படியினிக்கும்பிரசங்க
மழைபொழிந்ததிறந்தானென்னே. (1)

போசனிகர்தருமுத்துராமலிங்கசேதுபதிப்பூமான்மெச்சிப்
பேசவுயர்பிரசங்கம்பிரசங்கம்பொழிந்ததெனும்பெற்றிவாய்ப்பத்
தேசுதிகழ்தருமனிகர்கோபாலராவிறைவன்செய்தான்கூடல்
மூசுதவமோசங்கமுதுதவமோநந்தவமோமொழிகுவீரே (2)

ஓதுமீ ராடை யுடுத்தமா நிலத்தின் ஒள்ளிய நல்லற மோர்ந்து
வாதுசெய் பவர்கள் வழக்கியல் உணர்ந்து வகைசெயுங் கோபாலராவின்
மேதகு தலைமை யதினடை பெறுமிச் சங்கமும் மேன்மையாய்ப் புரக்கும்
கோதறு சேது பதிமனும் குணஞ்சால் ஜார்ஜு சேங் கோலும் வாழியவே.

போள்ளாச்சி முனிஸிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமத்-நா. கனகராஜ ஐயரவர்கள் பாடியது.

செந்தமிழ்ச் செல்வஞ் செகத்திற் களித்தருளுங்
கந்தனைப் பெற்ற கருணைவளச்—சுந்தரனைப்
போற்றிப் பணிவாம் புலவோர் கழகமிஃ
தேற்ற முறுமா றினிது.

1. பொன்னெங்கு தெய்வப் புலன்ம லமோங்கு
மன்னெங்கு பாண்டி வளநாட்டிற்—றென்னெங்கு

2. கூடற் றிருநகரிற் கோதின்மணி வாசகர்தம்
பாட்டற் குருகும் பரமசிவ—னுடன்

3. மணவழகன் றெய்வ மறையழகன் பூண்ட
பணவழகன் பத்தர் பராவும்—குணவழகன்

4. நாற்பொருளின் மேற்பொருளா நம்புமடி யார்க்கருளு
மாற்கருணை வள்ளல் மதிக்கண்ணி:—யேற்புடைய

5. வேணிப் பெருமான் விபுதர்பெரு மான்சிறுமான்
பாணிப் பெருமான் பலிப்பெருமான்–காணற்

6. கெளியநிலை மேவி யெழிற்பாண்டி நாட்டி
னளிசிறந்த வேந்தா யறிந்தோர்–தெளியவரு

7. தொல்லுருவ மாயமறை சொல்லுருவ நீத்திசைகொ
ணல்லுருவங் கொண்ட நரபதியா–யல்லுருவக்

8. கன்னி தடாதகையைக் கைப்பிடித்தா னூலியற்றி
முன்னி நிலைநிறுத்து முத்தமிழ்த்தாய்–நன்னர்ப்

9. பொழிய மறுத்த புயலெவிலங் கிட்ட
வழுதி வளர்க்க வளர்ந்தாள்–எழுதா

10. மறையின் பொருளறிந்த மாமுனிவர் பல்லோர்
முறையின் மதித்து முறைகள்–கறைதவிரச்

11. செய்தளிக்க வுன்னதநற் சிங்கா தனஞ்சேர்ந்து
மெய்தளிர்க்க வல்லரசாய் மேவினாள்–ஐதமைத்த

12. சிந்தா மணியுஞ் சிலம்புமணி மேகலையும்
பைந்தார் வளையா பதியுமணிந்–தெந்தாய்

13. சிறந்திருந்தாள் கம்பர் திருவள் ளுவர்தம்
அறந்திறம்பா நற்பூ ணணிந்தாள்–பிறந்திறவாப்

14. பேறீந்தாள் மைந்தர்க்குப் பீடார் பணியாங்கைம்
மாறீந்தார் மற்றம் மகார்கங்கை–யாறேய்ந்த

15. வித்தரநாட் டிற்சிறப்புற் றோங்கிவள ராரியத்தின்
மித்திரமும் பூண்டி விளங்கினாள்–புத்தமுதம்

16. போன்ற வடுகுதெலு பொற்புநிறை கன்னடம்பின்
றோன்றுமலை யாளஞ் சுவைசிறக்கத்–தான்றன

17. பொருளு மொழியும் புலமைத் திறமும்
அருளு நலமு மளித்தாள்–பொருளறிந்த

18. சுந்தார் சம்பந்தர் சொற்கரையர் இம்மூவர்
தந்தளித்த தேவாரந் தாங்கினாள்–பந்தமறு

19. மாறன் றமிழ்வேத மால்சித்த ராயிரமும்
வீறன் கலியன் வியன்மொழியு–மாறன்

20. மனைவிளக்க மாகமலர் மாலைதமிழ் மாலை
தனைவிளக்கச் சூட்டியதாய் சந்தம்–புனைகவியுஞ்

21. சேந்தனார் சேக்கிழார் செய்த திருப்பணியும்
வாய்ந்தனவே யாக மதித்தேற்றுள்–வந்திசைகொள்

22. பட்டினத்துப் பிள்ளை பணிமொழியு மெய்ப்பொருளை
யெட்டிநத்தி நின்ற விபற்குரவர்–கட்டறுத்த

23. தாயுமா னுர்கவிதைத் தண்டார் புனைந்தாள்தாய்
தேயுமானர் பிணிக்கச் சேர்ந்துபினைச்–சேயருளாற்

24. றெய்வத் திருப்புகழைச் செப்பு மருணகிரி
மெய்வைத்த பொற்பணியு மேவினுள்–உய்வடைந்த

25. தில்லை இராமலிங்க தீர்த்தர் அருட்பாவுங்
கல்லை யுருக்குமெனக் கண்டணிந்தாள்–வல்லவர்சொல்

26. தேம்பா வணியுமணி சீறுப் புராணமுகன்
ரும்பா வணியெனவே யாதரித்தாள்–சோம்பாத

27. வுக்கமுடை யார்பலரு முன்னதவாழ் வற்றிடவே
யாக்க மளித்தா ளடிபணிந்து–தேக்குபுகழ்த்

28. தென்னர் வயச்சோழர் சேரெனு மூக்குலத்தோர்
நன்னயமாய் முச்சங்க நாட்டிவளர்த்–தன்னையெனப்

29. போற்றியுயர் வாக்கப் பொருந்தினுள் அன்னியரைத்
தேற்றியுயர் வாக்கிச் சிறப்பளித்தாள்–ஈற்றிசையும்

30. வாழ்ந்தபல சிற்றாசர் வல்லரசர் போற்றமதாய்
தாழ்ந்தழியா தென்றுந் தலையெடுக்கச்–சூழ்ந்தனரால்

31. வேளாண்மை பூண்டவிறல் வேளிர்பலர் பன்னுடும்
தாளாண்மை பூண்டு தனிச்சென்று–தோளாண்மை

32. வேந்தர் மதிக்க விலங்கற் பொருளீட்டு
சாந்தகுணம் வாய்ந்த தனவணிகர்–மாந்தர்

33. உயிர்வாழ்க்கைக் கேற்ற வுணவுதர நின்ற
பயிர்வாழ்க்கைச் செல்வர் பலருஞ்–செயிர்தீர

34. மூன்னின்று கைகொடுத்து முன்னிலையாக் கத்தணிந்தார்
பின்னின்ற சீர்த்தி பெறவிழைந்தார்–பொன்னின்ம

35. கோசலரா டாண்ட ருணக்கடலாந் தாசரதி
மாசகலத் தந்த வழிவந்தோன்–றேசுத்ரு

36. சேதுபதி காவல்செயுஞ் சேதுபதி நாமமுள
கோதுபதி யாத குலத்தோன்றல்–மாதுபதி

37. செஞ்சரணப் போது திகழ்சித்தான் றெவ்வணுக
வஞ்சரணஞ் சூழ்ந்த வணிநகரான்–பஞ்சவர்க்குஞ்

38. சேரலர்க்குஞ் செம்பியர்க்குஞ் சேவற் கொடியோன்போற்
போரியற்ற நாற்படையும் பூண்டிருந்த–வீரர்

39. மரபுடையான் பைந்தமிழ்நா வல்லோ ரிசைக்கும்
வரமுடையான் பாற்நா வள்ளல்–அரமபில்வேற்

40. பாண்டித் துரையுக்ர பாண்டியன் பெத்தாக்கியென
வீண்டிப் புகழ்படைத்த வின்னவர்கள்–தூண்டிப்

41. பிறப்பித்த சங்கமிசை பீடுறவே வாழச்
சிறப்பித்தார் பத்திரண்டு சேரொன்–றுறப்பெற்ற

42. வாண்டுடைய சங்க மறிவினலம் பண்பினலம்
மீண்ட வரசினல நேயநலம்–பூண்டமர்ந்த

43. போஜனே ராகப் புலவோர்க் களித்திசைகொள்
ராஜரா ஜேச்வ ராதிபனும்–ராஜன்

44. தலைமைகொள வோங்கித் தலைமைபெற வோங்கி
நிலைமைகொள வீங்கு நிலைத்துப்–புலமையுளார்

45. வாழ்த்து நிலையடைந்தாள் வண்டமிழ்த்தாய் மீற்றவர்கள்
தாழ்த்து நிலதவிர்ந்தாள் சான்றோர்கள்–காழ்த்தவருள்

46. மேவி மதுரைநகர் மேவி யுயர்வொப்பில்
ஆவி யனைய வருந்தமிழ்த்தாய்க்–கோவில்

47. நிலைக்களமாய் நின்ற நிறையவையா நான்காம்
புலக்களமாஞ் சங்கத்தின் பொற்புத்–தலக்கமுறப்

48. பற்பலர்கண் முன்னரிரு பத்தொன்றும் வற்சரத்தின்
உற்சவத்தைக் கொண்டாட வுற்றுளார்–மற்றிவ்

49. வவைத்தலைமை பூண அமைந்தான் புவிமேல்
நவைத்தொழிலோர்த் தண்டித்து நன்ன–ரவப்புரியும்

50. மேலோன்தமிழோர் விபக்குஞ் சிறப்பார்ந்த
நூலோன் குசையி னுனிபோன்ற–மேலாம்

51. அறிவுடையான் பன்னுட் டறிவுடையார் கூற்றின்
அறிவுடையான் ஆரிய மாமென்–றறைபுகழார்

52. வாஞட்டி ளார்மொழியும் மண்ணுட்டுப் பன்மொழியும்
தாஞட்டித் தன்னுட் டழைத்தோங்க–மேஞட்டில்

53. எண்ணற்ற நூல்கட் கிடமளித்து மீதோங்கு
பண்ணுற்ற வாங்கிலமும் பன்மொழியும்–எண்ணிப்

54. பயின்றுகலா நாயக பட்டமும் வேந்தர்க்
கியன்றநெறி மக்கணெறி யென்றுந்–துயின்றிடா

55. நீதிநெறி யோர்ந்துயர்ந்த நீதி குமாரனென
வோதுபத மும்பெற்ற வுத்தமனுப்–தீதிலாச்

56. செங்கதிரோன் அத்தகிரி சோத நாட்டரசென்
றெங்கணுள காவலரும் ஏத்திசைக்கும் துங்கமுறு

57. செங்கோற் றிறஞ்சிறக்கச் செய்பு மவயவியாய்
நங்கோன் பணிபூண்ட நல்லோனும்–பொங்கோதப்

58. பாற்கடலிற் சேடனெனும் பாயற் படைகொண்ட
மாற்குரிய கோபாலமாற்பெயரான்–ஏற்குமிவற்

59. இப்பதவி யென்றளித்தார் ஈடில்தொல் காப்பியத்தைச்
செப்பமுறக் கேட்ட திருச்சபையில்–ஒப்பில்

60. அதங்கோட்டி ஞசான் அமர்ந்ததற் கொப்பாமென்
றிதங்கூட்டி யெண்ண வியைத்தார்–பதம்பெறவே

61. முன்வந்த செந்தமிழ்த்தாய் முன்னேற வின்னோர்செய்
தன்மந் தழைக்கவெனச் சாற்றியே–கன்மங்

62. கெடுத்துமுத்தி யீர்த்தருளுங் கேடில் பொருளை
யடுத்து வணங்குது மான்றோர்–தொடுத்த

63. தமிழுந் தமிழ்வளருஞ் சங்கமுஞ் சங்கத்
தமிழ்த்தம் பிரது மவரும்–இமிழ்கடல்சூழ்

64. மேதினியில் வாழிபுகழ் மிக்கவைத்தாம் ஜ்யாரிஜாசன்
தீதிலா சோங்க செழித்து.

சிதம்பரம் ஸ்ரீ மீனாக்ஷி காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத்-சர்க்கரை இராமசாமிப் புலவரவர்கள் பாடியது.

பூங்காவிக்குடையாளன்புரவலர்கோளரிமுகவைபுரக்கும்வேந்தன்
தேங்காதகாறுமுல்லத்திண்டோளான்முத்தமிழ்க்குஞ்செவிலியாளேன்
பாங்காயித்தமிழ்ச்சங்கம்பரிபாலித்திசைநாட்டும்பாரிபேரி
தூங்காதமுகவைழத்துராமலிங்கேந்திரன்செங்கோல்தலங்கநன்றே.

வற்றுதபுனல்வேகவதிநாடன்பாவலரைவறுமைநீக்கி
கற்றுய்போலாதரித்துநான்காஞ்சங்கத்தபிஷேகமேவுங்
கற்றூர்கண்மணிகூடற்கடவுளடிமறவாகருணைவாரி
செற்றூர்கள்பணிராஜராஜேசுவரன்செங்கோல்சிறக்கநன்றே.

புண்ணியமெல்லாந்திரண்டோர்புருஷவடிவாய்முகவாபுரியிற்றோன்றிக்
கண்ணியமெல்லாம்பெறுபாற்கமுகில்செம்பொன்மழையாறாக்குமென்ன
வெண்ணியபாண்டித்துரைவேளியற்றுதமிழ்ச்சங்கத்தையென்றும்போற்றுந்
தண்ணியவெண்கவிகைழத்துராமலிங்கேந்திரன்செங்கோல்தழைகமாதோ.

வாசவன்கற்பகஞ்சிந்தாமணிகாமதேனுவெள்கவாணர்க்கெல்லாங்
காசணியீந்திசைபடைத்தகனகமிகுவணிகேசன்கருவூர்மேவு
மீசனடிமறவாதாஞண்டிபட்டிக்காதிபதியிச்சங்கத்தை
யாசையுடனுதரிக்குந்திவான்ப்ஹதூர்ப்பேத்தாசியண்ணல்வாழி.

ஒருமொழியான்றிருபிறப்பான்மூன்றாலானன்மறைதேருளத்தானேன்தாய்
வருபுலனேயடக்கியறப்பகையினெவென்றெழுபுகழான்வளர்மேஞட்டார்
தருமொழியிற்றேர்ந்துஜட்ஜுஸ்தானமுறுங்கோபாலத்தருமவானிற்
கிரவிமதியுளவரையிலிச்சங்கப்பைங்கூழ்காத்திருக்கமாதோ.

ஆங்கிலத்தேர்ந்துயர்பதவியடைந்துநிதிபடைத்திடினும்அருண்மேற்கொண்டு
மாங்குயிலினிசைபடைத்ததமிழ்ச்சங்கம்வளர்ந்தோங்கும்வண்ணஞ்செல்வன்
தாங்கியறம்புரிவார்பாற்சார்ந்தனமீட்டியசருங்கொண்டாடத்
தேங்குபுகழ்பெறு டி. ஸி. சீநிவாசப்பெருமான்சிறக்கமன்னே.

இரவியொளியிரவுபகலிடையுறுநிலகுபுவியெல்லாங்காத்து
வருகுரிசிலாம்ஜார்ஜுமன்னர்பிரான்வாழிதமிழ்வளர்ச்சிக்காகப்
பெருநிதியீவோர்வாழிபுலவரெலாம்வாழிதமிழ்ப்பெருமைகோக்கி
யருமையுடனிச்சபையையலங்கரிப்போர்வாழியிறையருளான்மன்னே.

யாழ்ப்பாணத்து மாவிட்டபுரம் ஸெனட்ரல் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத்-K. S. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள் பாடியது.

பல்லிய மியம்பும் பாலோர் தமக்குங்
கூத்தர் தமக்குங் கூத்தியர் தமக்கும்
பாணர் தமக்கும் வீணர் தமக்குந்
தனிசுபெற் றேனுந் தாம்பல வளிக்குநர்
வேத்தவை யுறப்பின் மேஎய் வீளங்கவும்
பட்டம் பெற்றுப் பார்மதிப் பெய்தவுந்
கட்டூர நிறீஇக் காமுற்ற வெய்தவுந்
தம்மையும் விற்றுத் தாம்பெற விழைகுநர்
தம்முறூஉ மடிமை வாழ்க்கையும் வறுமையு
மெம்மூறு தமிழி னேற்றச் செயலுக்
கென்றுங் காட்டிக் கொன்று களைகுநர்
இவர்தாம்,
எண்ணு மெண்ணமும் புறநாட் டதுமன்
உண்ணு முணவும் புறநாட் டதுமன்
உடுக்கு முடுக்கையும் புறநாட் டதுமன்
உரைக்கு முரையும் புறநாட் டதுமன்
ஊரு மூர்தியும் புறநாட் டதுமன்
உவக்கு முவப்பும் புறநாட் டதுமன்
தமவுடை தமவுரை தமவென யாண்டும்
பேணுர் பிறர்பொருள் பேணுவர் பேணுத
லிரப்பென வெள்குத லென்றுமிவர்க் கில்லை
தமிழ்மொழி யின்றெனிற் றமிழரு மில்லை
யென்னுமிவ் வருமறை யென்னுமறி வில்லார்
கண்ணெளி யற்றுக் கல்குறு மாக்கட்

கொண்ணிழற் கண்ணே யுதவிய தென்னத்
தமசெய லறியாத் தமிழர் தமக்கெலாங்
தம்மொழி முதல தாய்விழைந் தீவுறப்
பண்டைய முறையெலாம் பாங்குறக் கொண்டு
தண்டமிழ் மன்ற மொண்டமிழ்க் கூடலி
னுட்டிவைத் தோனே நம்மூறு நிலையெலாங்
கூட்டிவைத் தோனே குலவுபுக ழழியா
தீட்டிவைத் தோனே யின்றமிழ்ப் புலவர்க்கு
வேண்டிய தரூஉம் பாண்டித் துரையே
அதனால்,
சிதட்குண வாகிய செழுந்தமிழ்ப் பனுவல்கள்
செவிக்குண வாகித் திகழ்ந்து சிறந்தன
புலவர்தம் மிடையிற் பொதிபுரை யறுவை
மறைந்த வாங்கே வணிதுகி லெல்லாஞ்
சிறந்து விளங்கின செயிரறு மிவன்சீர்
பரந்தோங்கி வளர்ந்து பயன்பல தருக
மொழிக்கு மொழிதேர் புலவோர் தமது
வழிக்குமுயிர் கொடுத்து வாழ்த்தின னதனுன்
முன்னர்த் தோன்றிய செவி தன்னிலும்
பின்னர்த் தோன்றிய கோடு பெரிதெனும்
வழக்கினைப் புதுக்க வவன்மாபு வந்த
தேவை யாளுந் திருவோன் செழுந்தமிழ்ப்
பாவை யாளும் பண்போன் வேந்தர்தம்
வேந்தர் செல்வ மேந்தி யோனெனும்
வடமொழிப் பெயரோ னம் மன்றத்தி
னிடமுயர் தலைமையை யேற்றினிது காப்போன்
றேவையறங் கூறுந் திருமன் முத்தி

நேறிமுறைத் தலைமை நேர்ந்தவா பூறந்தரூஉஞ்
செல்வனு வடமோழி தனிற்சோல் பெயரனை
ஒன்றுடை யிருபா ஞட்டை விழாவை
நடாத்துகென் றுரைப்ப நடாத்தி மகிழ்ந்தனனே.

வாழி தமிழ்மக்கள் வாழி தமிழ்ப்பனுவல்
வாழி தமிழ்ப்புலவோர் வாழிமழை—வாழிகங்கைச்
சென்னிமது ரைச்சிவனுர் சீர்கொண்டு வாழியரோ
கன்னிமது ரைத்தமிழ்ச்சங் கம்.

வேம்பத்தூர் ஸ்ரீமத்.

ஆ. சு. சுப. பாலசுப்பிரமணிய ஐயரவர்கள் பாடியது.



செந்தமிழார் செல்வர் செழிப்புற் றகமகிழ
நந்தமிழ்ச் சங்கத்தை நாட்டிவைத்த—சுந்தரஞ்சேர்
துங்கமிகு சேதுபதித் தூயோ னிலவுலகில்
மங்களமா வாழ்க மகிழ்ந்து.

கங்கை வேணியன் வாழி கருணைசேர்
செங்கை வேலவன் வாழி செழுந்தமிழ்
நங்கை வாழுமிச் சங்கமும் நற்றிரு
மங்கை கேள்வனும் மன்னரும் வாழியே.

திருச்சிற்றம்பலம்.

தமிழ்த்தெய்வவணக்கம்.

———:(o):———

1. வல்லின மாறுந் திருமுடியாக வளருமீ ரிரண்டெனு முயிரும்
நல்லிடல் விழியாய் நண்ணிட வென்றும் நவில்மெலி யிடையின மிரண்டுஞ்
சொல்லிய காங்கள் பன்னிரண் டாகத் துலங்குமா யுதவெழுத் தொன்றும்
புல்லிய வேலாப் பொருந்திநந் தமிழே போற்றிய குமரனைப் பணிவாம்.

2. இறையவன் வதனப் பூவி னிருந்தறு முகப்புத் தேனென்
றறையளி கொணர்ந்து சங்க விருளினி லமைத்துக்காக்க
முறையினிற் புலவர் கொண்டு முத்தமிழ்க் கலத்தி னீந்தித்
தறையினில் வந்த தேனுந் தமிழினைப் போற்றல் செய்வாம்.

தென்மொழி வடமொழி யிரண்டும் தாய்தந்தை மொழியென்றும், இவ்விரண்டுங்கூடியே மற்றைய மொழிகள் தோன்றினவென்றுங் கூறியதும்.

கட்டளைக்கலித்துறை.

3. போற்றும் வடமொழி தாயாகி வந்து புணரவதைத்
தேற்றுஞ் சுகமுடன் றந்தையிற் கூடிச் செகதலத்தி
லாற்றும் பலமொழி யாமக வீன்றவை யாடல்செய
லூற்றுங் கருணைத் தமிழே யெவர்க்கு முயிர்த்துணையே.

இங்ஙனம்,

தரு. ஞா. சண்முகத்தம்பிரான்,
தருமபுரவாதீனம்,
திருக்கைலாயபரம்பரை,
மாயூரம்.

1922-ஆவது செப்டம்பர்மீ 24உ (துந்துபி-ஆவது புரட்டாசி மீ 8-உ) ஞாயிற்றுக்கிழமை காலை மதுரைச் சேதுபதி ஹைஸ்கூலில் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்க மகாஸபை யோரால் ஆலோசித்துத் தீர்மானிக்கப்பெற்ற விஷய விவரக்குறிப்பு.

1. மகா-ள-ள-ஸ்ரீ ரா. சுப்பிரமணியக்கவிராயர் அவர்கள்—சபைத் தலைவர்.
2. ,, மஹாமஹோபாத்யாய வே. சாமிநாதையரவர்கள்
3. ,, V. முத்துசாமிஐயரவர்கள் M.A., L.T.,
4. ,, M. K. M. அப்துல்காதிறுாவுத்தர் அவர்கள்
5. ,, ம. கோபாலகிருஷ்ணையரவர்கள்
6. ,, திரு. நாராயணையங்காரவர்கள்
7. ,, R. S. நாராயணஸாமிஐயரவர்கள் B.A., B.L.,
8. ,, மு. நல்லசாமிநாடார் அவர்கள்
9. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., M.L.C.,
10. ,, M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A., B.L.,
11. ,, R. கணபதிஐயரவர்கள் B.A., B.L.,
12. ,, மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள்
13. ,, மே. சொ. சுப்பிரமணியக்கவிராயரவர்கள்
14. ,, V. S. இராமஸ்வாமிசாஸ்திரியவர்கள் B.A., B.L.,
15. ,, N. R. கிருஷ்ணஸாமிஐயங்காரவர்கள் B.A., B.L.,
16. ,, மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள்
17. ,, ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்
18. ,, N. R. சுப்பிரமணியசர்மா அவர்கள்

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1. சங்கத்தின் நிர்வாகசபைக்கு, காலஞ்சென்ற மகா-ள-ள-ஸ்ரீ N. A. V. சோமசுந்தரம்பிள்ளையவர்கட்கும், T. N. சுந்தராஜையங்காரவர்கட்கும் பதிலாக மகா-ள-ள-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி M.A., B.L., அவர்களையும், மகா-ள-ள-ஸ்ரீ N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார் B.A., B.L., அவர்களையும் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளும்படி மகா-ஸ-ள-ஸ்ரீ M. கோபாலகிருஷ்ணையரவர்கள் பிரே ரேபிக்க மகா-ள-ள-ஸ்ரீ R. கணபதி ஐயரவர்கள் ஆமோதிக்கச் சபையார் அங்கீ கரித்தார்கள்.

2. சங்கத்தின் வித்யாவிஷய ஆலோசனைஸபையங்கத்தினராக, காலஞ் சென்ற மகா-ன-ன-ஸ்ரீ அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கட்குப்பதிலாக, திருநெல் வேலி ஹிந்துகாலேஜ் தலைமைத்தமிழ்ப் பண்டிதர் மகா-ன-ன-ஸ்ரீ மே. சொ. சுப் பிரமணியக்கவிராயரவர்களைச்சேர்த்துக்கொள்ளும்படி மகா-ன-ன-ஸ்ரீ M. கோ பாலகிருஷ்ணையரவர்கள் பிரேரேபிக்க மகா-ன-ன-ஸ்ரீ N. R. சுப்பிரமணியசர்மா அவர்கள் ஆமோதிக்கச் சபையார் அங்கீகரித்தார்கள்.

3. மகா-ன-ன-ஸ்ரீ N. கிருஷ்ணசாமிநாயுடு அவர்கள், எக்ஸல்ஸியர் பவர்ப்பிரஸ்; மதுரை.

,, நா. கனகராஜையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், முனிஸிபல் ஹைஸ்கூல், பொள்ளாச்சி.

இவ்விருவர்களையும் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளும்படி தீர் மானிக்கலாயிற்று.

4. காரைக்குடி மகா-ன-ன-ஸ்ரீ.மெ.செ.மெ.மெ. சொக்கலிங்கஞ்செட்டியா ரவர்கள், நேற்றுநடந்த சங்கவருஷோத்ஸவக்கொண்டாட்ட சமயத்தில், சங் கத்தின் அடுத்த வருஷோத்ஸவத்தைக் காரைக்குடியில் நடத்தவேணுமென்று தான் அபிப்பிராயங்கொண்டு சங்கத்தை அழைத்த விஷயத்தைச் சங்கத்தின் நிர்வாகஸபையாருக்குத் தெரிவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

5. சங்கக்கலாசாலை மாணவர்போஷணைக்காக மாதந்தோறும் ரூ 10 உதவி ஒருவதாக வாக்களித்தும், ஒருவருஷச்சந்தா ரூ 120-யும் முதலிலே கொடுத் துதவியுமுள்ள காரைக்குடி மகா-ன-ன-ஸ்ரீ மு. ராம. பெரியணன்செட்டியாரவர் கட்குச் சங்கத்தார் வந்தனமளிக்கின்றார்கள்.

மதுரை,
24—9—22.

ரா. சுப்பிரமணியக்கவிராயர்,
சபைத்தலைவர்.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஎ.] துந்துபி- ஹேவிளம்பி- ஐப்பசி-மீ [பகுதி கஉ.
Vol. XX. October–November–1922. No. 12.

மேற்றிசைச்செல்வம்.

(The Wealth of the West.)

(ந.கூஎ—ஆம்பக்கத் தொடர்ச்சி.)

இரண்டாம் அதிகாரம்.

நாகரிகவரலாறு.

ஹம்மூறுபியரசன் செங்கோல்நடாத்தியகாலத்துப் பாபிலோனியம் மிகவுஞ் சீர்திருத்தமுற்றிருந்தது. சூசா என்னும் இடத்திற்குச் சமீபத்திலே மோர்கன் என்பவரால் இற்றைக்கு இருபத்தொருவருஷங்களுக்குமுன்பு கண்டெடுக்கப்பட்ட சிலாசாசனம் இதற்குப் போதிய சான்றாகும். எட்டடியுபரமாகிய இக்கல்லிலே இருநூற்றெண்பத்திரண்டு பிரிவுகளாலமைந்த ஒரு சட்டம் வரையப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தின் தன்மையை யாராயுமிடத்து இதனைக் கைக்கொண்டுநடந்தசாதியார் மிகவும் நாகரிகம்படைத்தவர்களாயிருக்கவேண்டுமென்னுமுண்மை புலப்படுகின்றது. யவனபுர ரோமபுர நாகரிகம் மேனாட்டுநாகரிகத்தை எவ்வாறு வழிப்படுத்திற்றோ அவ்வாறு பாபிலோனியநாகரிகமானது யவனபுராகரிகத்துக்கு முதலாகின்றது. எபிரேயநாகரிகமும், எகிப்திய ஆசூரேய பாபிலோனிய பினீசிய நாகரிகங்களின் வழிவந்ததன்றித் தனக்கென ஒரு பற்றுக்கோடு இல்லாதது. நமது தாய்நாடாகிய பரதக்கண்டத்தின் நாகரிகமோ இவையெல்லாவற்றுக்கும் முற்பட்டது. செல்வச்செருக்கினல் அறிவுமூடுண்டுகிடக்கிற மேற்றிசைப்பிரபுக்கள் இதனை யுறிந்தாலும் வெளியிடுவதில்லை. நமது நாகரிகத்திலீடுபட்ட மேனாட்டு

அறிவுடையார்சிலர் நமதுமுன்னோருடைய பெருமையைப் பெருக்கூறிப் பின்னோராகிய நம்மை இழிவுபடுத்துவர். இனி நாமே நமது முன்னோருடையபெருமையைப்பற்றி வாய்ப்பறையற்ற வெளிப்படுமிடத்து அச்செயல் அன்னியருக்கு நகையையேவிளைக்குமன்றி நம்பால்மதிப்புண்டாக்காது. என்னே, ஆண்மைகுன்றிச் சிறுமையடைந்திருக்கிற வறியவனொருவன் செல்வர்பாற்சென்று தன்முன்னோர்பெயரைச்சொல்லி யிரக்கின்ற செய்கையை இழிதொழிலாக உலகம் மதிக்குமாதலின். பின்னர்ச் செய்யவேண்டுவதென்ன? நம்முடைய சிறுமைக்கெல்லாம்காரணமாயிருக்கிற பொறுமையையும் பிரிவினையையும் ஒருங்கே கழன்றுவிட்டு உடல் பொருள் ஆவி மூன்றையுந் தேசசேவைக்கே ஒப்புக்கொடுத்து நமது தேசத்தையும் மொழியையும்· பெருக்கமுறப்பண்ணுவோமாயின் நாமும் பெருமையடைவோம்; நம்முன்னோரும் பெருமையடைவர்.

4. பாபிலோனியம் சிறப்புற்றிருந்தகாலத்தில் வடக்கே தைகிரிஸ் நதிக்கரையிலேயுள்ள ஆசூர், நினிவே என்னும் நகரங்களிலே ஆசுரேயர் என்னும் செமித்தியகுலத்தார் வசித்துவந்தார்கள். இவர்களது நாட்டுக்கு மேற்கிலுள்ள தேசத்தில் இத்தியர் என்னும் ஒருசாதியார் இருந்தார்கள். இவர்கள் ஆரியமொழியும் ஆரியமதக்கொள்கையும் உடையவர்களென்பது சில ஐரோப்பியபண்டிதர்களுடையதுணிபு. இத்தியருக்கும் ஆசுரேயருக்குமிடையிற் சச்சரவுகள் இருந்தன. ஆங்ஙனமே தெற்கேயுள்ள பாபிலோனியருக்கும் ஆசுரேயருக்குமிடையிற் சிறுசண்டைகள் நடந்துகொண்டிருந்தன. சார்கோன் என்னுஞ் சுமேரிய அக்கேடியஅரசன் ஆசுரேயரைவென்று சிலகாலம் அவரதுநாட்டைக் கைப்பற்றியிருந்தான். பின்னர் மித்தானிநகரத்தி லரசபுரிந்த துஷ்ரட்டன் என்னும் இத்திய அரசன் நினிவேநகரத்தைப் பிடித்துச் சிலகாலம் தன்னாணைசெலுத்திவந்தான். கி. மு. ஆயிரத்தொருநூறும் ஆண்டுவரையில் ஆசுரேயர் திக்லாத்பிலேசர் என்னும் தமது அரசனுடைய சேனாதிபத்தியத்தின் கீழ்ப் படையெடுத்துச்சென்று பாபிலோனியத்தை வென்றார்கள். விவிலியநூலிற் பேர்குறிக்கப்பட்டிருக்கிற மூன்றும் திக்லாத்பிலேசர் கி. மு. எழுநூற்றுநாற்பத்தைந்தாண்டுவரையில் இருந்தவன். இவனது புத்திரனாகிய நான்காம் சால்மனேசர் சமாரியாவில் நடந்த ஒரு யுத்தத்தில் இறந்துபோக உரிமையில்லாத பிறனொருவன் இராச்சியத்தைக் கைப்பற்றி இரண்டாம் சார்கோன் என்னும் பெயரோடு அரசபுரிந்தான்.

இரண்டாஞ் சார்கோனுடைய மகன் சினக்கிரிபு ஏன்பவன். இப்பெயரை ஆங்கிலமொழியிற் சிலர் சென்னுச்செரிப் என உச்சரித்து வழங்குவர். சினக்கிரிபு என்னும் பெயர் சின் என்னும் பாபிலோனியதெய்வப்பெயரினின்று வந்தது. இந்தச் சினக்கிரிபுதான் எகிப்துக்குப் படையெடுத்துச்சென்றவன். சைனியம் நோய்வாய்ப்பட்டமையால் மீண்டுவந்து விட்டான். இவனது பௌத்திரனுகிய ஆசர்வனிபாலன் என்பவன் பின்னுளிற் படையெடுத்துச்சென்று எகிப்தின் ஒருபகுதியைக் கைப்பற்றினன். யவனர் இவன்பெயரைச் சார்டானுப்பாலஸ் என்று வழங்குவர். இரண்டாஞ்சார்கோனுடையகாலத்துக்குப்பின் நூற்றைம்பது வருஷத்துக்குத்தான் ஆசுரேயராச்சியம் நிலைபெற்றிருந்தது. இதன்பின் செமித்தியகுலத்தாராகிய காலதேயர் ஆரியகுலத்தாராகிய மீதியர் பாரசீகருடையஉதவியைக்கொண்டு கி. மு. அறுநூற்றுமூன்றுவரையிற் பாபிலோனியத்தைக் கைப்பற்றினர்கள். அதுமுதல் கி. மு. ஐஞ்ஞூற்றுமுப்பத்தொன்பதாம்ஆண்டுவரையும் காலதேய அதிபதிகளின்கீழ்ப் பாபிலோனியராசரீகம் நடைபெற்றுவந்தது. இவ்வதிபதிகளுட் சிறப்புவாய்ந்தவன் இரண்டாம்நேபுகாத்நேச்சார். பாரசீக சக்காதிபத்தியத்தை நிலைநிறுத்திய சைறஸ் அரசன் காலதேயமன்னனை வென்று கி. மு. ஐஞ்ஞூற்றுமுப்பத்தொன்பதாமாண்டிற் பாபிலோனியத்தைக் கைப்பற்றினன்.

5. சமயநிலை நாகரிகநிலையை மதிப்பிடுவதோராளவுகோல் ஆதலினுல், பாபிலோனிய ஆசுரேய சாதியாரது சமயக்கொள்கைகளைப்பற்றிச் சிறிதாராய்ந்து அறிப்பற்செல்லுவாம். பரிசுத்தநகரம் எனப் பொருள்படும் எரிது என்னும் பழம்பதி பாபிலோனியநாட்டாருடைய விசேஷஸ்தலமாக விருந்தது. இது ஊர் என்னும் நகரத்துக்கு இரண்டரை யோசனை தெற்கே பாரசீகக்குடாக்கரையி லிருந்ததாகத் தெரியவருகிறது. இந்நாளில் உள்நாட்டிலிருக்கிற இந்த நகரத்திலே எயா எனனும் சடற்றெய்வத்துக்கு ஒரு கோயி லிருந்தது. தத்திப்பாயுந் திரையொலியில் அத்தெய்வத்தினது வாசகமும் பிற்பகலிற் கடற்புறத்தினின்றுவீசும் மந்தமாருதத்தில் அவரது இனிபசுவாசமும் புலப்பட்டனவாயினும் அன்பர்கள் அவர் உருவினைக் கண்டுகொள்ளவில்லை. அறிவுடையோர் சமுத்திரக்கரையைநோக்கினர்; தினந்தினஞ் சமுத்திரத்தினின்று உதித்து அவிரொளிப்பரப்பி இருளினையகற்றிப் பகற்காலம் முழுவதும்

மனிதவர்க்கத்தினரிடையேபிருந்து எற்படுகாலையில் இல்லத்திற்கேகுஞ் செங்கதிர்மண்டிலத்தின் இயல்பினைக் கண்டார்கள். கண்டு, செஞ்ஞாயிறு கடற்றெய்வத்தின்புதல்வனுயிருத்தல்வேண்டுமென நிச்சயித்துப் பரிசுத்தபுதல்வன் என்னும் பொருளினதாகிய மார்துக் என்னும் பெயரிட்டு வழங்கினார்கள். மார்துக் என்னுஞ் மொழி பிற்காலத்திற் சிதைந்து மெரொடக் ஆயிற்று. இந்தப் பரிசுத்தபுதல்வர் தமது தந்தைக்கும் மனிதவர்க்கத்தினருக்கு மிடையில் மத்தியஸ்தராக ஏற்பட்டார். இவர் மனிதரைத்துன்புறுத்திய சர்ப்பத்தின்சிரத்தைக் காலால் மிதித்து வெற்றிபெற்றார். இச்சர்ப்பந்தான் எத்தன்மையதோ வென்றால் ஏழு தலைகளையும் ஏழுவால்களையுமுடையதாய் இருளுக்கும் பாபச்செயல் களுக்கும் அரசாயிருப்பது. கிரணங்களாகிய அம்புகளைச் செலுத்தி மார்துக் இச்சர்ப்பத்தைக் காயப்படுத்த அதனினின்று ஒழுகிய குருதி திசைகளைச் சிவக்கப்பண்ணிற்று. அந்திப்பொழுதில் இச்சர்ப்பம் உயிர் பெற்று மார்துக்கின் குதிகாலைக் கடித்து அவரை மேற்கொண்டது. இங்ஙனே தினந்தோறும் நடக்கும் கடற்றெய்வத்தின்புதல்வனுகிய மார்துக்கினுடைய வழிபாடு சிறந்துவந்தகாலத்தில் இவரது தந்தை யாகிய எயாவின் லக்ஷணங்களும் ஜகத்காரணனென்று பாபிலோனியராற் கருதப்பட்ட வேல் என்னுந் தெய்வத்தின் லக்ஷணங்களும் இவர்மேல் ஏற்றப்பட்டு இவர் வேல்மெரொடக் என்னும் பெயரினைப் பூண்டார். ஹம்மூரபியரசனின் வம்மிசத்தவர்கள் இத்தெய்வத்துக்குப் பலகோயில் களைக் கட்டினர்கள். இக்காலத்தில் எபிரேயராகிய யூதசாதியார் பாபி லோனியராற் சிறைப்படுத்தப்பட்டிருந்தார்கள்; பாபிலோனியத்தின் கடைசியரசனகிய நபொநிதன் என்பவன் தனது சுகானுபவத்தைப் பெரிதுங் கருதிக்கொண்டிருந்தமையால் ஆலயசேவையெல்லாம் குறை பாடுற்றது. இவனது புதல்வனுகிய வேல்சாசர்மீதும் புரோகிதர்களுக்கு விருப்பமில்லாமலிருந்தபடியால், பாரசிக அரசனுகிய மாற்றரசனை உவந் தேற்று அவனகையிற் புரோகிதர்கள் அரசை ஒப்புவித்தார்கள். வனந் தரத்திலிலிருந்து திரிந்த யூதசாதியார் நாகரிகமுறையைப் பயின்றுகொள்வ தற்குப் பாபிலோனிபநாட்டுச் சிறைவாசம் காரணமாயிருந்தது. யூதரது ஸ்மிருதியாகிய தல்முத் என்னும் நூல் பாபிலோனிய சட்டமுறைகளைப் பின்பற்றி யெழுதப்பட்டது. பாபிலோனியநாட்டிற் கல்விச்சாலைகள் பல இருந்தன. அயல்நாடுகளிலிருந்தவர்கள் பலரும் இங்குவந்து கல்வி பயின்றார்கள்.

6. இனி ஆசுரேயசாதியாரது சமயநிலையைப்பற்றி யொருசிறிது ஆராய்வாம். இவர்களது சக்காதிபத்தியம் அநேகதேசங்களைத் தன்னுளடக்கியிருந்தது. ஒருகாலத்திற் பாரசீகம், மீதியம், பாபிலோனியம், ஆர்மீனியம், சீரியம், பினீசியம், பலஸ்தீனம், எகிப்தின் சில பாகங்கள் ஆகிய எல்லாம் ஆசுரேயசக்காதிபத்தியத்தின்கீழிருந்தன. இந்நாட்களில் எகிப்தின் நாகரிகத்தினும்பார்க்க ஆசுரேயநாகரிகம் மேம்பாடுற்றுவிளங்கியது. பாபிலோனியத்தில் எல், ரு, மார்துக் என்னும் பெயர்களைக்கொண்ட சூரியதேவன் ஆசுரேயத்தாரால் ஆசூர் என்னும் பெயரினுற் குறிக்கப்பட்டான் [ஆசூர் என்னும்பதத்திற் சூரியனென்னும் பதத்தின் பிராதிபதிகந் தோற்றுவதும், ரு என்னும்பதத்தில் ரவி தொனிப்பதும், எல் என்னும்மொழி தமிழிற் பரிதியங்கடவுளுக்குரிய பெயராதலும் உற்றுநோக்கற்பாலன] இச்சூரியதேவனோடு ஒப்புடைய மூவர் தேவர்களுளர். இவர் அது, வேல், எயா என்னும் பெயரினர். மேலும் சின், ஷாமஸ், உல் என வேறு திரிமூர்த்திகளும் உளர். சின் மற் றெல்லாத்தேவர்களினுஞ் சிறந்துவிளங்கினர். இவருக்கு ஊர், போர்சிப்பா, பாபிலோன், கலா, தூர்சர்க்கினு முதலிய இடங்களிலெல்லாம் பெரியகோயில்க ளமைந்திருந்தன. ஆண்டின் மூன்றும்மாதமாகிய சிவன் என்னும் மாதம் இவருக்கு உரியதாகவிருந்தது. இளம்பிறைச்சந்திரன் இவருடைய இலச்சினை. இவ்வடையாளத்தினுற் குறிக்கப்படுவர். அன்றேல் நீண்ட அங்கியணிந்த மானிடவுருவமும் சிரசில் மும்முடியும் முடியின்மீது பிறைச்சந்திரனும் உள்ள உருவம் இவருடைய உருவமாகும். ஆசுரேய பாபிலோனிய காலதேயமனத்தினும் படைத்தற்கடவுளுக்கு வேல் என்னும் பெயருண்டு.

7. இவ்வாறெல்லாம் மேலைத்தேசசான்றிரிக ளாராய்ந்துகண்டிருக்கிற முடிபுகளை நமது புராணேதிகாசமுடிபுகளோடு ஒட்டியுக்திகொண்டு ஊகிக்கக்கிடக்குஞ் சித்தாந்தங்கள் சில உள். அவற்றுள் ஒருசிலவற்றைக் குறிப்பிடுவாம். அவற்றை முடிந்தமுடிபுகள் என்று கொள்ளுதற்குப் போதியசான்றில்லையாதலால் 'இருத்தல்கூடும்' எனனுப்படியிற்கொண்டு ஆராய்வது அறிஞர்கடன். ஸ்காந்தத்திற் சிங்கமுகாசுரன் வடமேற்குத் திசையிலுள்ள ஆசுரம் என்னும்நகரிலிருந்துவந்தான் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆசுரம் அந்த ஆசுரந்தானேவென்று எண்ணக்கிடக்கின்றது. சிங்கமுகன் சிவபத்தியுடையவன். ஆதலால் ஆசுரத்

தாரது பிரதானதெய்வமாகிய பிறைச்சந்திரனைமுடியிற்சூடிய சின் என்னுந்தெய்வம் சந்திரனைபுருவப்படுத்திய தெய்வமோ அன்றேல்,சந்திர சேகரன்முதலே வென்று ஐயுறவேண்டியிருக்கின்றது. எல், வேல், ஆசூர், எயா (அயன்), ஊர் என்னும் மொழிகளும் ஆராயற்பாலன.

8. தற்காலத்திலுள்ள பெரிய நகரங்களோடு ஒத்தசிறப்பின வாகிய நகரங்கள் எரிது, பாபிலோன், ஆசூர், நினிவே, நிப்பூர் என்னும் இடங்களிலிருந்தனவென்றும் இவற்றில் வசித்த மனிதர்கள் மிகவும் நாகரிகம் பொருந்தியவர்களாயிருந்தார்கள் என்றும் அறியவே இத்தேயங் களுக்கும் முந்தி நாகரிகமுற்றிருந்த வேறுபலதேயங்கள் இருந்திருக்க வேண்டுமென்னும் உண்மை புலப்படுகின்றது. புலப்படவே மனித சாதியாரது தோற்றத்துக்கு எல்லைகூறுவதும், ஆறுயிரவருஷத்துக்கு முன் உலகமில்லையென்று சொல்வதும் மூடவாக்கியமாமென்பது வெளிப் படையாகும். மிகப் பழமைபொருந்தியனவும் எகிப்திய யவனபுர ரோம புர நாகரிகங்களுக்கு உற்பத்திக்காரணமாயிருந்தனவும், இயூபிறூட்டஸ் தைகிரிஸ் என்னும் நதிகளின் கரையில் வளர்ந்தனவுமாகிய சுமேரிய அக்கேடிய, பாபிலோனிய, ஆசுரேய, காலதேய நாகரிகங்களைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லிமுடித்தாம். இனி இவற்றையும் எகிப்தியநாகரி கத்தையும் பின்பற்றியதாகிய எபிரேயநாகரிகத்தைப்பற்றிச் சில கூறி, அப்பால் நீலநதிக்கரையில் வளர்ந்த எகிப்துநாட்டின் நாகரிகத்தை ஆராயப்புகுவாம்.

9. கற்பகக்காநீழலில்வைகுவாரேனும் அமராவதிநகரத்தாரது வாழ்க்கை அவ்வளவு சிறந்ததாகக் காணப்படவில்லை. எகிப்தேச சரித் திரங்களை ஆராய்வதுபோல விண்ணவர்நாட்டுச் சரித்திரத்தை யாராய்ந்து எழுதுவோமாயின் அங்குள்ளார் அமிழ்துண்டு அழியாதிலேபெற்றிருக் கும்வாழ்நாளிற் பெரும்பாகத்தை அடிமைத்தனத்திலும் சிறைவாசத்தி லுங் கழித்ததாக எழுதவேண்டிவரும். ஆண்டன்மைபடைத்த சூர பதுமன் இராவணேசுரனுதியோர் பெருந்தவஞ்செய்து எல்லாரையும் ஒப்பநோக்கும் இறைவனிடத்துப் பெற்ற அரியவரங்களினால் வான நாடரை அடிமைப்படுத்த அவரது துன்பத்திற்கு இரங்கிய காவற் கடவுள் மண்ணிடைபுகுந்து அசுரரைமடக்கியகதைகளைக் கூறுநூல் களே நமது புராணேதிகாசங்களாகும். இவற்றையொப்ப எபிரேய சாதி யாரின்புராணமாகிய விவிலியபூர்வபாகம் அச்சாதியாரின் அடிமைத்

தனத்தையே பெருகக்கூறுகிறது. இந்நூலே ஆதாரமாகக்கொண்டு ஆராயுங்கால் எபிரேயச்சாதியார் எகிப்தியராலும், பாபிலோனிய ஆசுரேயராலும், பிலிஸ்தினியராதியோராலும் அடிமைப்படுத்தப்பட்டார்களென்றும் தம்மை அடிமையாக்கிய சாதியாரிடமிருந்து நாகரிகமுறையைப் பயின்று கொண்டார்களென்றுந் தெரியவருகிறது. சுருக்கமாகிய இவ்வாராய்ச்சியில் இச்சாதியாரது சரித்திரத்தைப் பெருக ஆராய இடமில்லையாதலின் இவர்களுடைய அரசருள் மிக்சிறந்த சாலோமோன் அரசனுடைய காலத்தைப்பற்றி ஒருசிறிது கூறிமுடிப்பாம்.

10. பிலிஸ்தினியர் என்னுஞ் சாதியாருக்கு யூதர் அடிமைப்பட்டிருந்தகாலத்தில் சவுல் என்னும் ஒருவீரன் யூதசேனாதிபதியாக ஏற்படுத்தப்பட்டு அம்மோனியர், மோவாபியர், ஏதோமியர், அமாலெக்கியர் முதலியசாதியார்களை வென்றுனெனினும் பிலிஸ்தினியரை வெல்லவில்லை. அக்காலத்தில் இளம்பிராயத்தில் ஆட்டிடையன்றொழில்புரிந்தவரும் ஆண்டவன்மேல் அளவிறந்த அன்பின்பெருக்கத்தால் இசைப்பாக்களை யியற்றி அவற்றை யிசைக்கருவிகளிற்சேர்த்திப் பாடுமியல்பினரும் ஆகிய தாவீதென்னும் அரசர் பிலிஸ்தினியரை வென்று மணிமுடிசூடிப் பெருமையுற்றார். இவரதுபுதல்வரே சாலோமோன் அரசர். இவர் நீதிமன்னரும் ஞானவானுமாகவிருந்தார். இவருடையகாலத்தில் எருசலேம்பட்டணத்தின் தேவாலயம் பெரும்பொருள்செலவிட்டுக் கட்டப்பட்டது. இவ்வரசர் எகிப்துமுதலிய பிறநாடுகளோடு வியாபாரத்தொடர்பு உடையவராயிருந்தார். தமிழ்நாட்டாரோடும் கொடுக்கல் வாங்கல் செய்தார். நமது மொழிகளில் எபிரேயபாஷையிற் கலந்திருப்பது இதற்கு ஒருசான்றாகும். தமிழ்அகில் எபிரேயமொழி அஹல்; தமிழ்தோகை (மயில்) எபிரேயமொழி துகிம்; வடமொழி கவி (குரங்கு) எபிரேயமொழி கொவ். வடமொழி இபம எபிரேயமொழி ஹபின். சாலோமோன அரசனுடைய காலத்திற் பினீசியதேசத்தாருக்குத் தலைவனாகத் தயர் என்னும் நகரத்தில்வசித்த அரசனுக்குப் பெயர் ஹிராம் என்பது. பினீசியர் கப்பலோட்டுமாலுமித்தொழிலிற் சிறந்தவர்கள். இவர்களைத் துணைக்கொண்டு சாலோமோன அரசனுடையகப்பல்கள் மூன்றுண்டுகொருமுறை கிழக்குத் தேசங்களுக்குப்போய் ஓபீர் எனனும் தூரமுகத்திலிருந்து பொன், வெள்ளி, யானைத்தந்தம், மயில், குரங்கு, நவமணி முதலியவற்றை ஏற்றிக்கொண்டுபோயினவென்று தெரியவருகிறது. ஓபீர் இலங்கைத்தீவாக இருத்தல்வேண்டுமென்பது பலரது துணிபு. பினீசியருடையநாகரிகமுஞ் சிறப்புற்றிருந்தது. இதனை டவனபுராகரிகத்தைஆராயும்போது ஆராய்வாம்.

(தொடரும்)

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை, சென்னை.

பண்டித-மயில்வாகனன்
B. Sc., (Lond.)

ஸ்ரீ:

புரூரவசரிதை.

(ரூசு-ஆம்பக்கத் தொடர்ச்சி)

சந்திரகிரிப்படலம்.

விடமெழுந்தனவீங்கிருட்பிழம்பெழும்வேலை
யிடம்வலந்தெரியாதெறியூடுசென்றெதிர்த்தா
ரடையலாருயிரடையுமிதுவெனவகல்வான்?
றடைசெய்கின்றபொற்புரிசைசூழ்சந்திரகிரியே. (1)

புரந்தரன்பொருமன்னவனங்கர்புகுந்தே
யரந்தையுற்றிடமக்களுக்கருத்துவானடிசில்
இரந்துகொண்டுவந்தீந்தனனென்னின்மற்றெவர்க்கு
நிரந்தரம்பெறநிற்குமோவாழ்வெனுநீத்தம். (2)

அப்பதிக்கணைரம்பலத்தாரிருட்போதில்
வெப்பமைத்திடுமேதினிப்பள்ளியின்மீதே
முப்புவிக்குமோர்முதல்வனுமன்னனுழருகின்
றுப்பமைந்தவாய்த்தோகையுமைந்தருந்துயின்றார். (3)

கங்குல்பாதியிற்காவலர்க்கரசனுங்கமல
மங்கைபோலியமங்கையுமுணர்ந்தனர்மகாரைப்
பங்குவானவாவிளமையில்வருகெனப்பணித்த
துங்கள்பால்வரவோவெனவிழிப்புனலுகுத்தார். (4)

நின்றகங்குலின்பாதியுமுழமையுநிறைந்த
வென்றிவெந்திறல்வேந்தர்கோன்முகமதிநோக்கி
மன்றலோதிகட்காவியுங்காவியாய்மலர
வென்றுவானவனெழும்வரையிருந்தனரிப்பால். (5)

நாகத்தெழும்பரியேழுடைவெய்யவனைஞ்ஞூ
சாகத்தெழுந்திடத்தருமமுங்கருமமுந்தழைப்ப
மாகத்தெழுந்திடும்பிரணவச்சுடர்ந்தமன்ன
னாகத்தெழுந்தனவெழுர்தனன்கடலகத்தன்றே. (6)

புலரிபோயினவா தவம்வந்தனபொருவி
லலரிவான்முகட்டாயினயாமிவணமர்ந்தாற்
பலரும்யாரெனவினவுவர்பலவெனப்பண்ணேழ்
மலரியாழ்மொழிமடவரலியம்பிடமன்னன். (7)

நீனவருங்குழல்வனிதைகேண்மக்கொருசெயலு
நினைதலின்படிமுடிதலுமுளதினினியேல்
வினைவரும்பயனுகியசூறையின்மெய்யை
யினையர்தம்வயத்தாக்குமோபோக்குமோவின்னம். (8)

யாரிடத்தினிற்புகுத்துமோவெத்தொழில்தருமோ
வோரிடத்தினிலெவையெவையூட்டுமோவூழின்
பாரிடத்தினிலியற்றியவினையினிற்பவ்வ
நீரிடத்தினிற்றிரணமொத்தலேவதேநெஞ்சம். (9)

ஊட்டுவானுளனொருவனிங்கொருவனையுறவா
யீட்டுவானெனிற்செல்லுதும்மின்னமுமின்னல்
பூட்டுவானெனிற்பூணுதுமெனச்சிறைப்பொறிவண்
டாற்றுவார்குழல்வனிதைக்குமன்னவனறைந்தான். (10)

வேறு.

ஆனவனின்னணமறையவாயிழை
மேன்மொழியுரைத்திடாதிருந்தவேலையில்
வானளவியபுகழ்வணிகனீணிகிக்
கோனெனும்விச்சுவகுபுத்தன்றேன்றினான். (11)

தோன்றியவணிகர்கோன்றுணைக்கைவாளனம்
போன்றுயர்மன்னவன்முன்னம்போந்துதீ
தான்றியமனையொடுந்தனயர்தம்மொடு
மேன்றிவணிருந்தனையாவனீயென்றான். (12)

நிதிவணிகேசர்கோனினைவநிசுத்தலு
மதிகுலமன்னவன்மாற்றங்கூறுவான்
விதிவலியானகர்வெறுத்தப்போந்தனோம்
பதிசிறிதுதவுவார்தம்மைப்புரக்கின்றோம். (13)

மைந்தர்கள்சிறார்களிம்மகட்குநிற்குங்கை
வந்தகற்கருமமென்வழங்குவாயென
விந்தனவாணன்யானிவருங்கூலிகெற்
றந்தவர்க்குதவுவாராளத்தண்டுலம்.? (14)

ஆமெனினென்மனைக்கடைதிரோவேனக்
கோமகனன்றெனக்குறித்தெழுர்தனன்
ருமவார்குழலியுந்தனையர்தம்மொடுந்
தோமறுகுரிசில்பின்றொடர்ந்துபோயினள். (15)

ஆடகவணிகனுமவன்மனைக்கணேர்
வீடகங்கொடுத்திடவேந்தர்வேந்தனும்
பாடகமெல்லடிப்பதுமவாய்ச்சியுந்
தேடருமைந்தருஞ்சிறந்துவைகினர். (16)

வேறு.

வேலைநிலமும்பாதலமும்விண்ணேருலகும்விரிந்தபுகழ்ச்
சீலமுடையவருர்திதியிற்றெய்வக்கற்பிற்றிருவனைபாள்
சாலும்வணிகன்பெரும்பதியிற்றையலார்கடருஞ்சாலிக்
கூலிபெறுவாடன்மையுமக்குமார்செயலுங்கூறுவாம். (17)

அண்டருலகும்பாதலமுமாழியுலகுமளந்தொருகோல்
கொண்டவிசயத்தனித்திகிரிக்கோமான்கற்பிற்குலமனைவி
புண்டரீகப்பதந்தேயப்பொற்றுள்வருந்தக்காஞ்சேப்பப்
பண்டைவிதியாற்கூலிபெறச்சாலிதுவைப்பாள்பலநாளும். (18)

அழுதளாயமதிவதனம்வெயர்வாலழியவுள்ளழியு
மூமியளாவுநெற்கொழிக்குமுன்னியெழுந்தவ்வுலக்கைபற்றுந்
தமியளாகிப்புலம்புறுமெய்த்தனயருந்தத்தவிடளிக்குங்
குழுதவாயார்குழாங்காணின்முகம்பார்த்துரைக்கக்கூசுமால். (19)

சேனையாசன்பெருந்தவத்துச்செல்வப்புதல்வரிருவருமூன்
ருனைபிடித்தீர்த்திடச்சலித்துத்தள்ளுமெடுத்துத்தழீஇக்கொள்ளும்
பானல்விழிகணீர்தழும்பப்பலகாற்றுடைக்கும்பருமிதத்த
பீனமுலையாள்படுந்துயரம்யாரேகாணும்பெற்றியார். (20)

மையார்வரிதோய்மதர்நெடுங்கண்மடந்தைவணிகன்மனைமாட்டே
இவ்வாறிருந்துகூலிபெற்குற்றேவலெதிர்ந்தவிகல்வென்தார்

அவ்வானடையப்பொருகூர்ங்கோட்டலறுகரடக்கடாக்களிற்ரு
னெவ்வாக்கானில்விறகெடுப்பதாதியாகவோதுவாம். (21)

வீரக்கழல்சேர்பூங்கழலில்விசித்தகருந்தோற்கழல்வணைந்து
பாரைப்பரிக்குஞ்செங்கோலைப்பரித்தகரத்தோர்கோலேந்தித்
தாரிற்பொலியுமுடியிலொருகொடியுந்தாங்கித்தமரமிகுந்
தூரக்கடன்மாநிலஞ்சுமந்ததோளான்விறகுஞ்சுமக்குமால். (22)

சாருந்துணைகள்யாவமொடுஞ்சாராதேகித்தனிசாரு
மாருஞ்செல்லாவனம்புகுதுமாங்கணைருசார்பமர்ந்திருக்கு
மூரும்பதியுமிகவெண்ணியுள்ளியுள்ளியுள்ளழியும்
பாரும்விசும்புமொருகுடைக்கீழ்ப்பரிக்கும்பாளிப்படைவேந்தே (23)

அகருவார.....:வேங்கைகோங்கமாமலகந்
தகரங்குளிர்குங்குமந்திலகஞ்சரகஞ்சாதியிலவங்கம்
பகரும்பலவின்தனம்பிறக்கும்பற்றிக்கொடியாற்சுமைசெய்யு
நிகரின்முடிமேற்றனியெடுத்துநடக்குநிற்குநிழல்காணில். (24)

ஏதினெடுங்கைத்திறல்வேந்தனினியவிறகுகொண்மினென
வீதிதோறும்போய்விலைகண்மேவாதென்னின்மீண்டேகுந்
தீதுமொழிகள்சிலர்சொல்லிற்செவிடர்போலச்சிரித்தேகு
மோதும்விலைபெற்றிடின்மடிமேலேற்குங்களிப்பினுடனெய்தும் ()

திறைநின்றரசன்றனக்குரிதிகொணருஞ்சேனைத்திறல்வேந்தன்
மூறைகொண்டிசையமுடிமீதுமூடிந்துகிடந்தசெந்நெல்மா
யறைவண்டுகழ்ந்துதாதுமுக்குமந்தார்முடிமேற்சிந்தாது
விறகுஞ்சுமந்துவருங்கோலங்கண்டாள்கமலமின்னன்னாள். (26)

மழவேறனையபெருந்திறலான்மறியுந்திசைநீருலகேழு
நிழலாய்நின்றகயிகையானிதிபெய்கரத்தானேரார்தாள்
தொழுவாழரசன்வருங்கோலங்கண்டாளுள்ளந்துணைன்றாள்
தழல்வாய்ப்பெய்தமெழுகென்னவுருகியினியசாற்றினாள். (27)

வேறு.

பொன்னுமணியுநறும்போதும்புனைந்தரசர்
சென்னிவணங்குஞ்செறிகழற்காற்சேவகனே
மின்னுமுடிமேல்விறகுஞ்சுமப்பதுகண்
டின்னுமுயிர்கொண்டிருந்தேனேயிழையேன். (28)

அண்டருலகி னுருப்பசியுன்னம்புயம்பாத்
துண்டமயலாற்றொடர்ந்தவுரவோனே
தொண்டையிதழாரத்தொனித்துவிறகுவிற்கக்
கண்டவிழியைக்கழியாதொழிவேனே. (29)

புண்குடைந்து .....பொன்னனையார்
கண்குடைந்ததோண்மீதுகாலைசைக்குஞ்சாமரையோ
விண்குடையும்வெய்யோன்வெயின்மறைக்கமேன்மறைக்குந்
தண்குடையுமிந்தவிறகோதாபதியே. (30)

என்றழுதுவிம்மியிரங்குமடமானைக்
குன்றனையதோளான்வருந்தலைனைக்குறுகி
முன்றமியேன்செய்தவினைப்பயனைமுன்னுதே
நின்றழுவதென்னேவிதியையெவர்நீக்குவார். (31)

கண்ணிருந்தநெற்றிக்கறையிருந்தகண்டத்துப்
பெண்ணிருந்தபாகன்பலியொருகாற்பெற்றிலனே
தண்ணிருந்தகஞ்சத்தலைவிதலைவனும்பேய்ப்
மண்ணிரந்தானென்றுல்விதியையெவர்மாற்றுவார். (32)

என்னமடமயிலேத்தேற்றியிகல்வேந்தன்
பின்னும்விறகெடுப்பான்கானிற்பெயர்ந்திடலு
மன்னுதவத்தில்வந்தமக்களிருவோரு
மன்னையெமதையனெஞ்சொல்லுதும்யாமென்றறைந்தார். (33)

வேண்டலெனவன்னைவிலக்குவதுங்கேளாமல்
மாண்டவரசன்றனைத்தொடர்ந்தமைந்தர்தமை
யாண்டகையுமக்களாதேயருகணைத்துத்
தீண்டரியகானகத்துச்சென்றுன்விறகெடுப்பான். (34)

மன்னர்தொழுங்கழற்கான்மன்னவனுமைந்தருமாய்ப்
பின்னும்விறகெடுப்பான்கானிற்பெயர்ந்திடலு
மின்னலுழந்துதனியேயிருந்தயருங்
கன்னியருந்தியின்றன்மையினைக்கட்டுரைப்பாம். (35)

சந்திரகிரிப்படலம் முற்றும்.

———— உதவிப்பத்திராதிபர்.

கோனசீமைத் திராவிடப்பிராமணர்கள்.*

"சான்றோர்கவியெனக்கிடந்த கோதாவரி" அரபிக்கடலின் அண்மையின்கட்டோன்றி, இன்றளவும், "புவியினுக்கணியாய்ப் புலத்திற் றுகிப்" பல நாடும் காடும் மலையும், எழுநூறுமைல்நீளம்கிடந்து, தன் பெயர்கொண்டஜில்லாவில்நுழைந்து, ராஜமகேந்திரத்துக்கண்மையி லுள்ள தௌளேஷ்வரத்திற் பலபடப்பிரிந்து, "அவியகத்துறைகள் தாங்கி, ஐந்தீணெறியளாவிச் சவியுறத்தெளிந்து, தண்ணெண்றெழுக் கந்தழுவி" வங்காளக்கடலிற் கலக்கின்றது. அது மழைகாலங்களில் ஒருநிமிஷத்துக்கு மூன்னூறுலக்ஷம் கனஅடி ஜலத்தைப் பெருக்கிக் கொண்டுசெல்லுகிறதாம்; அதாவது மிகப்பிரசித்திபெற்ற லண்டன்வழி யாய்ஓடும் தேம்ஸ்நதியிற்செல்லும் நீரைப்பார்க்கிலும் இருநூறுபங்கு மிகையென்றும், ஈஜிப்டுதேசத்தில் ஓடும் நீலநதி, கெய்ரோநகரத்துக் குக்கொண்டுவரும் ஜலத்தைப்பார்க்கிலும் மூன்றுபங்கு இது பெரிதென் றும் கணக்கிடப்பட்டிருக்கின்றது. நம் இந்தியாவில், கங்கைநதிக்கும் ஸிந்துநதிக்கும் மஹிமையில் அடுத்ததாகச்சொல்லப்படுகிறது. இவ் வளவுபெருமையுற்ற கோதாவரி, தௌளேஷ்வரத்திற் கிழக்குப்பக்க மாகக் கௌதமிகோதாவரியென்றும், மேற்குப்பக்கமாக, வஸிஷ்டகோதா வரியென்றும் பிரிந்துசெல்லுகின்றது. இவ்விரண்டுக்கும் நடுவேயுள்ள பூமி, அமலாபுரம் என்றும், நகரம் என்றும் இரண்டு தாலூகாக்களாக ஏற்பட்டிருக்கின்றது. அவற்றுள், முன்னது, பாஞ்சாலநாடென்றும் "கோனசீமை" யென்றும், வழங்கப்படுகிறது. கோன என்பது, தெலுங்குபாஷையில் "மூடிவு இறுதி" எனப் பொருள்படுமாம்; ஆகவே, 'கோனசீமை' என்பதற்கு, கடைத்தலம் என்று கொளல் வேண்டும். கோதாவரி கடலுடையாகப்புகுமிடமை யதுவேயாதலின். இக்கோனசீமையில், "பேரூர்" என்று ஒரு கிராமம் உளது. அதில் இக்காலத்தில் வசித்துவரும் ஐந்நூறுவீட்டுக்காரர்கள் "கோனசீமைத் திராவிடர்கள்", என்று சொல்லப்படுகிறார்கள். அவர்களைப்பற்றித் தெரிந்த சிலவரலாறுகளை ஈண்டு எழுதியுள்ளேன்.

இவர்கள் எந்தக்காலத்தில் இந்தஜில்லாவிற் குடியேறினார்கள் என் பது தெரியவில்லையாம்; ஆனால் அவர்கள் ஆயிரம்வருடங்களுக்குமுன்

* இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபத்தோராம்வருடக்கொண்டாட்டத் திற் படிக்கப்பட்டது.

வந்திருக்கலாமென ஊகிக்கப்படுகிறது. அவர்களில் ஒருவருடன் நான் உரையாடிக்கொண்டிருந்தபொழுது அவர்கள் "முப்பது தலைமுறைக்கு முன், இவ்விடம் குடியேறினதாகக் கேள்வி" என்று அவர் சொன்னார். அதாவது, ஒருதலைமுறைக்கு முப்பதுவருடம்வீதம் கணக்கிட்டுப்பார்த்தால், தொள்ளாயிரம்வருஷமாகின்றது. ஆகவே, பதினோராம்நூற்றுண்டில் அவர்கள் இவ்விடத்துக்கு வந்திருக்கலாம். அக்காலத்திற்றான், தஞ்சையைப் பிரதானமாகக்கொண்டு, சோழசாம்ராஜ்யத்தை நிலைநாட்டிய மகா புஜபலபராக்கிரமசாலியான முதல்ராஜராஜன் குணதிசைச் சாளுக்கியமன்னன்மேல் 999ல் படையெடுத்து, அவனைத் தோற்கடித்துத் தன்கொடியைக் கோதவரிவரை பறக்கச்செய்தான். பின்னர் அவனது புத்திரன் ராஜேந்திரசோழனும் (1011—44) படையெடுத்துத் தன்கொடியைக் கஞ்சம்ஜில்லாவிலுள்ள மகேந்திரகிரியில் ஒரு ஜயஸ்தம்பத்தில் நாட்டினனும். இன்னும், 1095—96ல், குலோத்துங்கசோழன் (முதலாமவன்) கலிங்கத்தின்மேற் படையெடுத்தான். இம்மன்னர்கள் யாரேனும் ஒருவர்காலத்தில் இக் கோனசீமைத்தராவிடர்கள் குடியேறியிருக்கலாம்.

வடமர்களில் ஏழுகோத்திரத்தைச்சேர்ந்தவர்களும், பிரஹச்சரணர்களில் ஐந்துகோத்திரத்தைச்சேர்ந்தவர்களுமாகிய பதினேந்துகுடும்பத்தார்கள் ஆதியிற் சும்பகோணத்துக்கடுத்த வலங்கைமான்கிராமத்திலிருந்து, இக் கோதாவரிப்பக்கம் வந்தார்களாம். முதலாவது, இவர்கள், வஸிஷ்டகோதாவரிக்கரையிலுள்ள ராலி என்னும் கிராமத்தில் தங்கினார்களாம்; ஆனால் அனேக இடர்ப்பாடுகள் உண்டாயினவாம். ஆதலினாலே அவ்விடத்தைவிட்டகன்றனராம். பிறகு ஒரு ராஜாவின் அனுமதியின்பேரில், ஒருயானை குறிப்பிட்ட ஒருகாலத்தில் எவ்வளவுதூரம் செல்லுமோ அவ்வளவுபூமியைத் தங்களுக்கு உரித்தானதாகக்கொண்டார்கள். அதுவே இக்காலத்தில் பேரூர் என வழங்குகிறது. அவர்கள் ஒருதரம் ராலி என்னும் ஊரில் இருந்ததற்கு அடையாளமாக, இன்றும் அவ்வூரில் ஒருவீதி "அரவவீதி" (தமிழர்வீதி) என வழங்கப்படுகிறதாம்.

அவர்கள் பேரூரில் தங்கிக் கிராமநிர்மாணம்செய்ய ஆரம்பித்தார்கள். சோழதேசத்தில் தங்களுக்கு அனுபவமாகவுள்ளகிராமங்களிற் போலவே, இங்கேயும் வீதிகளையும் தறைகளையும் கட்டினர்கள். தெருக்

களும் சந்ததிகளும் அப்படியே அமைந்தன. இப்பொழுதும் சோழ நாட்டுத் தஞ்சாவூரானெருவனைக் கண்ணைக்கட்டித் திடீரென அவனை இப் பேரூர்க்கிராமத்தின்மத்தியில் விட்டுவிட்டால், அவன் அதைத் தன்னூர் என்றே சாதிப்பான் என்று தெரிந்தோர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் நாளடைவில் தங்கள் சுயபாஷையை அறவே மறந்து தங்கள் சுவீகாரபாஷையையே உபயோகித்துவருகிறார்கள். நாட்பட நாட்பட அவர்கள் எண்ணிக்கையில் விருத்தியானார்கள். பலர் இவ்வூரைவிட்டு இன்னும் அயலிடங்களுக்குப் பரவலானார்கள். கஞ்சம், விசாகபட்டணம் ஜில்லாக்களில் இவர்கள் மரபினர்கள் "பேரூர்த்திராவிடர்கள்" என வழங்கப்படுகிறார்களாம். இவர்கள் "அரவவாடு" (தமிழர்) ஆனதினாலே, ஆந்திரர்கள் இவர்களை அவ்வளவாகநேசிப்பதில்லை என்று சொல்லப் படுகிறது. இற்றைஞான்று சென்னையிற் பெரியவக்கீல்களாகவிளங்கும், பெரி நாராயணமூர்த்திகாருவும், கண்டி லக்ஷ்மண்ணகாருவும் இவ்வகுப் பைச்சேர்ந்தவர்களாவர்.

இனி, வஸிஷ்டகோதாவரிசங்கமமாகும் இடத்தில், "அந்தர்வேதி" என்ற திவ்வியவைஷ்ணவக்ஷேத்திரம் ஒன்று உளது. அதில் திருக் கோயில்கொண்டிருக்கும் சுவாமி, லக்ஷ்மீநரசிம்மஸ்வாமியாகும். இவ் விடத்தில் வஸிஷ்டருடையவேண்டுகோளின்பேரில் அஸ்வரூடாம்பாள் என்னும் அம்மன் உதவிகொண்டு, நரசிம்மஸ்வாமி ரக்தவிலோசனன் என்னும் மகா அசுரனையும் கொன்றனராம். இந்தக்ஷேத்திரத்தில் மகமா சத்தில், சுவாமியின் திருக்கல்யாண உத்ஸவம் நடக்கும்வழக்கம் இருந்து வருகிறது. அது ஒருவாரஉத்ஸவமாகும். சாதாரணமாக எண்பதினா யிரம் ஜனங்கள் அந்தக்காலத்தில் அங்கு தரிசனத்துக்காகக் கூடுவார்கள். இந்தக் கோதாவரிஜில்லாவில் நடக்கும் பெரியஉத்ஸவம் அதுவே.

இந்த உத்சவகாலத்தில் "பேரூர்க் கோனசீமைத் திராவிடப்பிரா மணர்" களுக்குப் பெரிய மரியாதை காட்டப்படுகிறது. முன்னொருகாலத் தில், நரசிம்மசுவாமியின் ஸ்ரீசக்ரம், சமுத்திரத்திற் புகுந்து மறைந்து விட்டது. சுவாமியின்பக்தர்கள், பலபாடுபட்டும், கிடையாமல் தவித்த னர். அச்சமயத்தில், பேரூர்த் திராவிடப்பிராமணர் ஒருவர், தமது மந்திர சக்தியினாலே அச்சக்கரத்தைச் சமுத்திரத்தினின்றும் வெளிப்படுத்தி, அந்தர்வேதிவைஷ்ணவர்களுக்கு அளித்தனராம். அந்தநாட்கொண்டு அவ்வைஷ்ணவர்கள், பேரூர்த் தமிழ்ப்பிராமணர்மரபினர்களுக்குத் தங்கள் மனமுவந்த நன்றிமறவாமையைக் காட்டிவருகிறார்கள்.

திருக்கல்யாணஉற்சவகாலத்தில் உள்ளூர்வைஷ்ணவர்கள் மாப் பிள்ளைவீட்டுக்காரர்கள்போலவும் பேரூர்த்தமிழ்ப்பிராமணர்கள், பெண் வீட்டுக்காரர்கள்போலவும், பாவிக்கப்படுவருகிறார்கள். உற்சவத்துக் கடைநாளுக்குமுதனாள், இத்தமிழ்ப்பிராமணர்கள், வைஷ்ணவதிருநாமம் தரிப்போட்டுக்கொண்டு, கல்யாணகாலங்களில் சம்பந்திமார்கள் சம்பந்திப்

பாட்டுப் பாடுவதுபோல, அவ் வைஷ்ணவர்களைப்பற்றிப் பல ஏச்சுப் பாட்டுப் பாடுவார்களாம். அத் தலவைஷ்ணவர்களும் இவை யெல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்துத் தங்களது என்றும் நன்றி மறவாத்தன்மையை வெளியிட்டுவருகிறார்களாம்.

இன்னும், இரண்டாம்நாள், சுவாமிபின்ரதம் ஊர்வலம்வருவதுவழக்கம். விஜயவருஷத்தில் (அதாவது 1893–94ம் வருஷத்தில்) வழக்கம்போல் ஜனங்கள் ரதம்இழுக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் எவ்வளவோ சிரமப்பட்டுப்பார்த்தும் அதை இழுக்கமுடியவில்லை. காரணத்தைவிசாரிக்கும்பொழுது, பேரூரிலிருந்து ஒருதமிழ்ப்பிராமணனும் அவ்விடம் வராததைக்கண்டு, அதுவே காரணமாக இருக்குமென்று ஊகித்தார்களாம். உடனே அந்தஊருக்குத் தக்கமனிதர்களை அனுப்பி, அவ்விடமிருந்து சிலரைக் கூட்டிக்கொண்டுவந்து, ரதத்தின்கயிற்றைத்தொட்டு இழுக்கும்படி அவர்களை வேண்டிக்கொண்டார்கள். உடனே ரதம் இழுபட்டதாம். அன்றுதொட்டு . இவ்வுற்சவகாலத்தில், அந்தர்வேதிக் கோவில்விசாரணைக்கர்த்தாக்கள் முதலிலேயே பேரூரிலிருந்து சில திராவிடப்பிராமணர்களை அழைத்துவைத்துக்கொள்ளுகிறார்களாம்.

நம்மவர்களுக்கு இச்சம்பவத்தில் நம்பிக்கையில்லாமலிருக்கலாம். ஆயினும் எனக்குத்தெரிந்த வேறு ஒருசம்பவத்தைச் சொல்லி இவ்விஷயத்தை முடித்துவிடுகிறேன். ஐந்துவருஷங்களுக்குமுன் பிரசுரமான திருநெல்வேலிஜில்லா கெஜட்டியரில் 469ம் பக்கத்தில் பின்வரும் விவரம் காணப்படுகிறது. தென்காசிப்பட்டணத்திற் பல சதிக்கல்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஆறுகற்கள் தென்காசியில்வேஸ்டேஷனில் வைக்கப்பட்டிருக்கின்றன. இவை ரயில்பாதைபோடும் இடத்தில் முதலில் இருந்தன். வேலையாட்கள் அவைகளை அப்படியேபாதைக்கடியில் தோண்டிப் புதைத்துவிட்டார்கள். 1903ம் வருஷத்தில் செங்கோட்டைவரைக்கும், முதலாவதாக ரயில்வண்டித்தொடர்சென்றபோது, தென்காசியில், இந்தஇடத்தைத்தோண்டி, வண்டித்தொடர் நகரமுடியாமற்போய்விட்டதாம். என்னசெய்தும் பயன்படவில்லை. கடைசியில் அச் சதிக்கல்களை மறுபடியும் தோண்டிஎடுத்து வெளியில்வைத்தபிறகுதான், வண்டித்தொடர் அவ்விடத்தைவிட்டு அசைந்ததாம். அக்கல்களை நாம் கவனிபாவிட்டாலும், அவைகளை அவமரியாதைப்பண்ணித் துன்பப்படுத்தக்கூடாதாம். இது ஸ்ரீமான் பேட் துரை எழுதியுள்ளது.

குறிப்பு :— கோனசிமைத்திராவிடர்களைப்பற்றி எற்கனவே தமிழ்நூல் எவற்றிலாவது காணப்பட்டிருந்தாலும், அல்லது தமிழறிஞர்கள் தெரிந்திருந்தாலும், அதனைச் செந்தமிழ்வாயிலாக அறிவிக்குமாறு வேண்டுகிறேன்.

K. C. வீரராகவையர்.

ஸ்ரீ:

பிந்துமதி.

பிந்துமதியென்பது சித்திரக்கவிமாலையுள் ஒருவகையின்பாற்படும். அது பிந்துவையுடையதாயிருப்பதெனப் பொருள்படும். பிந்து புள்ளி யென்பன ஒருபொருட்சொற்கள்.

தமிழ்மொழியிற் புள்ளிபெறுவன உயிரொழுத்துக்களுள் எகர ஒகரங்களும் ஏனைய மெய்களு மாகும்.

"மெய்யினியற்கை புள்ளியொடு நிலைபல்"

"எகர வொகரத் தியற்கையு மற்றே" என்பது தொல்காப்பியம் இதற்கிணங்கவே நன்னூலாரும்,—

"தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர மொகரமெய் புள்ளி" என்று கூறினர். நன்னூல் மயிலைநாதருரையேட்டுப்பிரதிகளிற் பழமையுற்ற சிலவற்றில் உயிரும் உயிர்மெய்யுமாகிய எகரவொகரங்கள் புள்ளியுடன் வரையப்பெற்றிருந்தன, என்னும் அப்பதிப்பின் முகவுரைவாக்கியங்களும் இதனைத் தெளிவுறுத்தும். ஆகவே பண்டைக்காலத்து எகர வொகரங்களும் புள்ளியுடன் வழங்கியமை போதரும். ஆயினும் அஃ திக்காலத்தில் வழக்கொழிந்த தன்காரணம் புலப்படவில்லை.

இது நிற்க; சித்திரக்கவிகளுள் ஒன்றாகிய பிந்துமதி யென்பது புள்ளியுடையனவாய எழுத்துக்களானே யமையச்செய்யும் செய்யுளா மென்பது முன்னரே கூறப்பட்டது. யாப்பருங்கலநூலிலே, "மாலை மாற்றே சக்கரஞ் சுழிகுளம்" என்னுஞ் சூத்திரத்துள், "வடநூற்கடலு, ளொருக்குடன் வைத்த வுதாரணநோக்கி, விரித்து முடித்த மிறைக்கவிப் பாட்டு" என வருகின்றது. ஆண்டு விருத்தியுரைகாரர், "ஆரியமென் னும் பாரிரும் பௌவத்துக் காட்டிய அக்கரச்சுதகமும், பிந்துமதியும், பிரேளிகையும் முதலாகவுடையனவும் இப்பெற்றியே தமிழாகச் சொல்லு மிறைக்கவிகளும் அறிந்துகொள்க" என வுரைகூறி அவை ஒவ்வொன் றிற்கும் உதாரணங்களுங் காட்டிச்சென்றனர்.

இனி, இஞ்ஞான்று வெளிப்போந்துலவாநின்ற யாப்பருங்கல விருத்தியுரைப்பதிப்பின்கண்ணே அவ்வுதாரணங்களிற் சில வழுவினுட்பட்டுக் கிடக்கின்றன.

அவற்றுளொன்று, மாத்திரைச்சுதகத்துக் குதாரணமாகற்பாலது 'இது, பிந்துமதி' என்னுங் கீழ்க்குறிப்போடு காணப்படுவதாகும். உரையுள் மாத்திரைச்சுதகத்துக்கு மூன்றுதாரணங்கள் காட்டப்பட்டன. அவை,—

"வாம மணிமே கலையார் மயிர்குறுகி
ஞமவர் பெய்யு மணி"

"வண்ணத்தி னொன்றேதி மாத்திரையிற் குன்றுமேற்
கண்ண னுமிழ்ந்த பொருள்"

"மயிர்நிறுவி மற்றதற்கோர் புள்ளி கொடுப்பிற்
செயிர்தீர் மாமாகுஞ் சென்று" என்பன.

ஆனால், அச்சுப்புத்தகத்தில் மூன்னவையிரண்டையும் உள்ளவாறு பதித்து,"இவை மாத்திரைச்சுதகம் அளவுச்சுருக்கமெனவும் அமையும்; கூழை, குழை, நீலம், நிலம் எனக் கொள்க" என்ற உரைவாக்கியத்தை அவற்றையடுத்து அமைத்தும், மூன்றுவதான 'மயிர்நிறுவி' எனவரும் அடிகளை யவற்றின்கீ முச்சிட்டு, "இது பிந்துமதியென்பது, ஓதி, ஓதி" என்னும் பிழைபட்ட உரைவாக்கியத்தைப் பொருத்தியும் காட்டப்பட்டிருக்கிறது.

ஈண்டு, "மயிர்நிறுவி மற்றதற்கோர் புள்ளி கொடுப்பிற், செயிர்தீர் மாமாகுஞ் சென்று" எனவரு மடிகள் பிந்துமதிக்குக் காட்டாதலில்லை. அஃ தெங்ஙனமெனிற் கூறுவேன். ஓதி யென்னும் மயிர்ப்பெயரை நிறுவி ஓகாரத்திற் புள்ளி கொடுக்க அது ஒநியென மாத்திரையிற் சுருங்கி ஒருவகை மாத்தின்பெயராகு மென்பதே அதன்பொருள். எனவே அது மாத்திரைச்சுதகம்; அல்லது அளவுச்சுருக்க மெனப்படுவதன்றிப் பிந்துமதியாகுமா றில்லை. ஆகவே யவ்வடிகளின்கீழ், 'இது பிந்துமதி' என்றிருப்பதை நீக்கி மாத்திரைச்சுதகத்துக்குக் காட்டிய மற்றையிரண்டுதாரணங்களோடும் சேர்த்துப் படித்துக்கொள்ளவேண்டும். மாத்திரைச்சுதக மெனினும் மாத்திரைச்சுருக்க மெனினு மொக்கும். தண்டியலங்காரவுரையிலே மாத்திரைச்சுருக்க மேற்கோளாக வுள்ள,—

"நேரிழையார் கூந்தலினேர் புள்ளிபேற நீண்மரமாம்
நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாம்" என்பதையும் நோக்க இத் திருத்தம் வலிபெறுவதாகும்.

இஃதன்றியும், "ஒன்றெழிபொதுச்சொல்" என்னு ந ன் னூற் சூத்திரத்து, 'இன்னபிறவும்' என்பதனுரையில், மயிலைநாதர்:—

"வாம மணிமே கலையார் மீயிர்குறுகி
ணுமவர் பெய்யுமணி குழை—வம
மயிர்நிறுவி மற்றதற்கோர் புள்ளி கொடுப்பிற்
செயிர்தீர் மரமாகுஞ் சென்று"

என் றெருசெய்யுளை யெடுத்தோதி, "கூழை, குழை, ஓதி, ஓதி இவ்வாறு மாத்திரைச்சுருக்கமாய்வருவனவும், இன்னபிறவும் குறிப்பாற் பொருளுணர்த்துவனவாமெனக்கொள்க" எனவும் உரைகூறிப்போந்தார். ஆதலின் 'மயிர்நிறுவி' யென்னுமடிகளா லுணர்த்தப்பட்ட 'ஓதி, ஓதி' என்பது மாத்திரைச்சுதகத்துக்குக் காட்டாவதன்றி எவ்வாற்றானும் பிந்துமதியாகாதென்ப தினிது விளங்கிற்று.

இனி மயிலைநாதர்காட்டிய இச்செய்யுள்தானே யாப்பருங்கல விருத்தியுரையுள் இரண்டாகப்பிரிக்கப்பட்டதன்காரணம் அறியக்கூட வில்லை. இங்குள்ளவாறே அவ்விடத்தும் அவற்றை ஓரேசெய்யுளாகத் திருத்திப்படித்தலும் தகுதியுடைத்தாகும்போலும்.

இவையொருபுறமிருக்க யாப்பருங்கலவிருத்தி யச்சுப்புத்தகத்திலே,

"நெய்கொண்டேன் நெற்கொண்டேன் எட்கொண்டேன் கொட்கொண்டேன்
செய்கொண்டேன் செம்பொன்கொண்டேன்."

"எல்லாவெழுத்தும் புள்ளியுடையனவே வந்தமையால் இதுவும் பிந்துமதி" என்று காணப்படுகிறது. இதனுள், 'எல்லாவெழுத்தும் புள்ளியுடையனவே வந்தமையால்' என்று கூறியிருப்பது மேற்கோளாகவுள்ள அடிகளை யச்சிட்டிருக்குமுறையோடு பொருந்துமாறில்லை. என்னை? 'நெய்கொண்டேன்' என்பதில், எகரவொகர மெய்புள்ளிபெய்து மென்பதற்கேற்ப நெ, கொ இவ்வீரெழுத்துக்களும் புள்ளியுடையனவாக்கருதப் பெறுமேயெனினும் அதிலுள்ள ஈற்றயலாகிய 'ஏகாரம்' புள்ளி

யுடையதாகாமையி னென்பது. அது 'நெய்கொண்டேன்' என்றிருக்கிற பொருந்தும். மேலுள்ளனவற்றிற்கு மிங்ஙனமே கொள்க. கொள்ளவே அவ்வடிகள்,—

"நெய்கொண்டெ னெற்கொண்டெ னெட்கொண்டென் கொட்கொண்டென்
செய்கொண்டேன் செம்பொன்கொண்டென்."

என்று திருத்தப்படுதல்வேண்டும். இத்திருத்தமான பாடம் பெரியோரான் முன்னரே மேற்கொள்ளப்பட்டதென்பதை நன்னூல் மயிலைநாதருரைப்பதிப்பின்முகவுரைநோக்கி யுணர்க. அன்றியும், அவ்வுதாரணத்தின்கீழ்க் குறிப்பிட்ட 'இதுவும் பிந்துமதி' என்னும் உரைவாக்கியத்தின்கண்ணுள்ள உம்மை நீக்கற்பாலதாகும். ஏனெனில் உம்மையாற்றழுவிக்கோடற்குப் பிந்துமதிக்குக்காட்டிய உதாரணம் வேறொன்றில்லையாகலினென்க.

இத்துணையும் மாணாக்கரிடர்ப்பாடுநோக்கி யீண்டு வெளியிடலாயிற்று.

T. N. அப்பனையங்கார்,
மதுரை.

வடமொழி முதுமொழியன்று?

வடமொழியே எம்மொழிக்கும் முதுமொழியென்று பல ஆன்றோர் கூறப், பல ஆன்றோர் அவ்விருமொழியு மொரேகாலத்தன வென்றும், இரண்டற்கு மிலக்கணஞ் சொன்னவரு மொருவரே என்றுங் கூறுகின்றார்கள். இற்றைக்கு ஐயாயிரமாண்டுக்குமுன்னிருந்தவராகியதிருமூலரும்,

"மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்
தாரியமுந் தமிழு முடனே சொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே" எனவும்,

"அவிழ்கின்ற வாறு மதுகிட்டு மாறுஞ்
சிமிட்டலிப் பட்டியிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொ லெனுமிவ் விரண்டும்
உணர்த்து மவனை யுணர்த்தலு மாமே"

எனவுங் கூறினர். கம்பரும்,

"உழக்குமறை நாலினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவினி னும்மாபி ஞடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்"

எனக் கூறுவர். சிவஞானசுவாமிகளும்,

"இருமொழிக்குங் கண்ணுதலார் மூத்தற்குரவ ரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் மூனிவேந்த ரியல்வாய்ப்ப,
இருமொழியு மான்றவரே தழீஇயினு ரென்றுலிவ்
விருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ"

எனக் கூறுவர். சங்கச்சான்றோர்களிய நரிவெரூத்தலையாரும்,

"இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழி நூன்—மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்"

எனக் கூறுவர். (முதுமொழி—வடமொழி) இங்ஙனமெல்லாம் கம் சங்கச் சான்றோரும் மற்றைச்சான்றோரும் மொழிந்திருப்பவும், வவுனியவிளாங் குளத்து இராஜையனர் என்பவர் தமிழபிமானங்கொண்டு தாமுஞ் சில வடமொழிப்பகைஞர்போற் றோன்றி, வடமொழி பிற்காலத்துமொழி என்று இரண்டேயிரண்டோடுக்கொண்டு சென்ற ஆவணிமாதச் செந் தமிழ்ப்பத்திரிகையில் "தமிழ்மொழிக்கு வடமொழி செவிலித்தாயாகு மா? என்னும் விஷயத்தினகத்தே யுரைத்தார். அவர் உரைத்த அவ் வேதுக்களிரண்டும் அவர்கருத்தை நிலைநிறுத்த வல்லனவோவென ஆராய்வாம். அவர்காட்டிய வேதுக்க ளிரண்டும் வருமாறு:—

க. எழுத்துச்சாரண முறையை நோக்குமிடத்து வடமொழி பிற் காலத்து மொழியாதல்.

உ. வடமொழி எழுத்தில் வழங்கிய பாஷையன்றிப் பேச்சில்வழங்கியதன்மை.

இவ்விரண்டனுள்ளும், உச்சாரணமுறையைநோக்குமிடத்து வடமொழி பிற்காலத்துமொழியாதல் என்னு மேதுவை முதல் ஆராய்வாம்.

க. எழுத்துக்களுள், ட், ண், ர், ல், ழ், ள், ற், ன், என்னு மெட்டெழுத்துக்களும், நா மேலண்ணத்தைச் சென்றுதொடும் முயற்சியாற் பிறப்பனவாதலிற் சிறுவரா லுச்சரிக்கப்படாதன எனவும், அதனால் அவை மொழிமுதலிற் றோன்று எனவும், படைப்புக்காலத்து முற்பருவத்தே தோன்றிய மனுஷர் சிறார்க்கு ஒப்பாவர் என்றும், அதனாற்றான் அவர்கள் தோற்றுவித்தபாஷையிலே, அவ்வெட்டெழுத்துக்களும் மொழிக்கு முதலாகாவாயின என்றும், பிற்பருவத்திலுள்ள மனுஷரால் றோற்றுவிக்கப்பட்டபாஷையாதலின், வடமொழியிலே ட, ற முதலியன மொழிக்கு முதலாக வருகின்றன என்றும் இராஜையனார் உரைத்தார். அங்ஙனமாயின், அவர்கூறியவாறு, நா மேலண்ணத்தைச்சென்றுதொடுதலாற்பிறக்குமெழுத்தெல்லாம் சிறுவரா லுச்சரிக்கப்படாதனவாயும், மொழிக்குமுதலாகாதனவாயு மிருத்தல்வேண்டும். அங்ஙனமாயின், நா மேலண்ணத்தைச்சென்றுதொடுதலாற்பிறப்பனவாய இ, ஈ, எ, ஏ, ஐ, த, ந முதலியன சிறுவரா லுச்சரிக்கப்படுவனவாயும், மொழிக்கு முதலாவனவாயும்வருதலானும், மொழிக்குமுதலாவனவற்றுள்ளும் சகர யகர வகர ஞகாங்கள் சிலவுயிர்களோடு மொழிக்குமுதலாகாமையானும் மொழிமுதலாதற்குக்காரணம் பிறிதொன்றுவதன்றி உச்சாரணமுறையன்று என்பதே தேற்றம். அன்றி, உச்சாரணமுறையே காரணமேனும், படைப்புக்காலத்தின் முற்பருவத்தேதோன்றியமனுஷருக்குச் சிறுரையும், பிற்பருவத்தேதோன்றியமனுஷருக்கு முதியோரையும் உவமை கூறல் பொருந்தாது. என்னின்? முற்பருவத்துமனுஷரினும் பிற்பருவத்து மனுஷர் அறிவு மாற்றலுங் குறைந்தவர்களாதலின். அஃதேல், அவர் அதற்குத் திருட்டாந்தங்காட்டல்வேண்டும். சங்கப்புலவர்களைப் போலச் செய்யுள்செய்யவல்லவரொருவரை அவர்கள்காலத்தின்பின் இருந்தவராகக் காட்டுவாரா? கம்பர் காளிதாசர்களைப்போலக் கவியியற்ற வல்லவரொருவரை அவர்கள்காலத்தின்பின் இருந்தவராகக் காட்டுவாரா? தொல்காப்பியரைப்போல இலக்கணஞ்செய்யவல்லாரொருவரை அவர் காலத்தின்பின் இருந்தவராகக் காட்டுவார்? பரிமேலழகரைப்போல

உரையுரைக்கவல்லாரை அவர்காலத்தின்பின் இருந்தவராகக் காட்டுவாரா? காட்டல் கூடாதன்றே? அங்ஙனமாக இராஜையருக்குத் திருட்டாந்தமும் மின்றே. ஆதலின், இராஜையனர் தாங்கூறிய உவமையை மாறிக் கூறிற் பொருந்துமன்றி மற்றுப் பொருந்தாதென்க.

மனுஷர் அறிவினு மாற்றலினு மிகுங்காலத்தை உற்சர்ப்பிணி என்றும், குறையுங்காலத்தை அவசர்ப்பிணி என்றும் நூல்கள் கூறும். சங்கச்சான்றோராகிய நரிவெரூத்தலையார் கூறிய "இன்பம் பொருளறம் வீடென்னு மிக்நான்கு-முன்பறியச் சொன்ன முதுமொழி நூன்-மன்பதைகட்-குள்ள வரிதென்று" என்னுஞ் செய்யுளுக்குத் திருத்தணிகைச் சரவணப்பெருமாளையர் உரைத்த உரையிலே "முன்பறியவெனவே உற்சர்ப்பிணியாகலின், அக்காலத்தோர்க்கு உணர்தற்கேற்ற ஆயுணீட்சியும், உணர்வுவலியு மிருந்தன வென்பதூஉம், அவசர்ப்பிணியாகலின் இக்காலத்தோர்க்கு அவைபில என்பதும் பெறப்பட்டன என உரைத்ததும், பிற்காலத்தோர் அறிவு மாற்றலுங் குறைந்தவர்களென்பதை வலியுறுத்தும். இன்னும் மூன்னூல்கள் கடினமானவையாதலின், அவைகள் மெல்லியமொழிகளாலாக்கப்படல்வேண்டுமென்றும், செய்யுணூல்களெல்லாம் வசனநூல்களாக ஆக்கப்படவேண்டுமென்றும் பலர் இப்போது விரும்புவதும் இக்காலம் அவசர்ப்பிணி என்பதை வலியுறுத்தும். ஆதலின், அவர்கூறிய சொல்லுச்சாரணமுறையென்னும் ஏதுச் சிறிதும் பொருந்தாது என்க.

இனி அவர்கள்கூறிய இரண்டாவது ஏது வடமொழி ஒருதேயத்தாலேபேசப்பட்டுவந்தபாஷையன்று என்பது. அதனை நாமும் ஒப்புக்கொள்ளுகின்றும். வடமொழி தேவபாஷையன்றி மனுஷபாஷையன்மையின், ஒருதேயத்தாலே பேசப்பட்டுவந்ததன்றுயிற்று. அற்றேல், அதனை வடமொழி என்ற தென்னையெனின், வடக்கிலக்கணிருந்து ஆரிடர்களாலே பரிபாலிக்கப்பட்டு அத்திசைக்கண் வளர்ந்தமையானென்பது. கம்பரும் "தேவபாடையி னிக்கதை செய்தவர் மூவர்" என வடமொழியைத் தேவபாடையெனக் கூறுதல் காண்க. இங்ஙனமே சரவணப்பெருமாளையரும், தம செய்யுளுரையில், "தேயவழக்கிற்படாதூஉம், வருந்திக்கற்போர்க்குமாத்திரம் புலப்படுவதூமாய் எல்லா மொழிகட்கும்முற்பட்டுக் கடவுண்மொழியாய்நிற்றலின் 'முதுமொழி' என்றார்" என்றும், சிவஞானமுனிவரும், "தென்றமிழ்க்கெதிரியது

கடவுட்சொல்லாகிய ஆரிய மொன்றுமே" யென்றும், "ஆரியச்சொல் எல்லாத்தேயத்திற்கும் விண்ணுலகமுதலியவற்றிற்கும் பொதுவாகலான்" என்றும், "வடசொல் என்றது ஆண்டுப் பயிற்சியிருதிபற்றி" என்றும், சேனவரையரும் "வடசொற்கிளவி" என்னுஞ் சூத்திரவுரையில், வடமொழி எல்லாத்தேயத்திற்கும் பொதுவாகலானும் என்றும் கூறுதலானும், சங்கச்சான்றோராகிய வெள்ளிவீதியாரும், "செய்யாமொழி" எனக் கூறுதலானும், அஃது நூல்வழக்கில் வந்த பாஷையன்றி, ஓருதேயத்தாராலே பேசப்பட்டுவந்த பாஷையன்மையறிக. ஆதலின், அவர்கள் கூறிய மற்றைய ஏதுவும் பொருந்தாமையறிக.

இங்ஙனம் இராஜையனுர் காட்டிய இரண்டேதுவும் பொருந்தாமையின் அவர் இவற்றை ஏதுவாகக்கொண்டு வடமொழியைப் பிற்காலத்து மொழி என்றதூம் பொருந்தாது, பயனில்கூற்றும் அபிமானம்பற்றிக் கூறியகூற்றும் முடிந்தவாறு காண்க.

இன்னும், வடமொழி முதுமொழி என்பது இராஜையனுர்க்கும் உடன்பாடாதல், "தமிழைப்போலவே பழமையுடையவெனச் சொல்லற்கியைந்த வடமொழி, கிரேக்கு, லத்தீன், ஈபுரு, அராபி முதலிய மொழிகளெல்லாம்" என அவரே "ஈன்மறக்கினும்சொல்லுர" என்றபடி சொல்லுதலானு மறியப்படும்.

இனி, இராஜையனுர் பொருளிலக்கணம் தமிழுக்கு விசேடம் என்றும், திருவள்ளுவர், பொருளே அறம், பொருள், இன்பம் எனப் பகுத்தது வடநூன்முறைபற்றியன்று, அப்பகுப்புத் தமிழ்நூல்களுக்கு இயல்பென்றும் பரிமேலழகர் பொருளே வடநூன்முறைபற்றி அறம் பொருளின்பமெனப்பகுத்தார் என்றது பிழை என்றும் உரைத்தார்கள். பொருளிலக்கணந் தமிழுக்கு விசேடமே. ஆயினும், இறையனுர் 'களவெனப்படுவது—அந்தண ரருமறை மன்ற லெட்டனுட்—கந்தருவ வழக்கம்' எனக் கூறுதலானும், தொல்காப்பியரும், 'மறையோர் தேஎத்து மன்ற லெட்டினுட், கந்தருவ வழக்க மென்மனர் புலவர்' எனக் கூறுதலானும், வடமொழிக் காந்தமுதலியவற்றுள்ளுங் கூறப்படுதலானும் வடமொழிக்கண்ணும் அப்பொருளிலக்கணஞ் சுருக்கிக்கூறப்பட்டுளதென்பதூம், திருவள்ளுவர் வடநூன்முறையையுந்தழுவி நூல்செய்தாரென்பதை, அந்நூற்

சிறப்புப்பாயிரத்திலேதானே, சங்கப்புலவர்பலர், "நான்மறையின் மெய்ப் பொருளே முப்பொருளா" எனவும், "சாற்றிய பல்கலையும் தப்பா வரு மறையும்–போற்றி யுரைத்த பொருளெல்லாம்––தோற்றவே–மூப்பான் மொழிந்த" எனவும், "மெய்யாய வேதப் பொருள்விளங்கப்–பொய்யாத நந்தான்" எனவும், "மூப்பாலிரண்டுதப்–தருமமுதனான்கும் சாலும்" எனவும் கூறுதலானே, வேதமுதலியவற்றிலே சொல்லப்பட்ட தரும முதலிய நான்கினையுமே வள்ளுவனார் முப்பாலாக விரித்துச் செய்தார் என்பது அறியக்கிடத்தலின், வடமொழிவழக்குப்பற்றித் திருவள்ளுவர் பொருளே முப்பாலாக வகுத்தார் எனப் பரிமேலழகர்கூறியது வழுவன்மையும் உணரப்படுதலின் இராஜையனார் உரைத்தது ஈண்டும் பொருந்தாமையுணர்க. இன்னும் அவருரைத்தனபல பொருந்தாமை யுள்ளன. அவற்றையாம் இங்கேயெடுத்து மறுக்கப்புகின் விரியுமென் றஞ்சி விடுக்கின்றும். அறிஞர்கள் நோக்கியுணர்க.

இதுகாறும் கூறியவாற்றால் தமிழ்மொழிக்கு வடமொழி பிந்திய மொழியன்றென்பதூம், வடமொழியைப் பிற்காலத்துண்டானமொழி யென்று இராஜையனார் உரைத்தது பொருந்தாது என்பதூம் பொரு ளிலக்கணம் வடமொழிக்கண்ணும் சுருக்கிக்குறிப்பிக்கப்பட்டுளதென்ப தூம், திருவள்ளுவனார் அறம்பொருளின்பமெனப் பொருட்பாகுபாடு செய்தது வடமொழிபற்றி என்பதூம் அறியக்கிடந்தமை காண்க. (தமிழ்ப்பாஷையை வளர்க்கவிரும்புவோர் அதனை வளர்க்கமுயலுவதை யொழித்து வடமொழியை இகழ்வதுதான் என்னையோ? அதனாற் றமிழை வளர்க்கலாமா? ஆதலின் அதனையொழித்துத் தமிழைச் சங்கச்சான்றோர்போல வளர்க்கமுயலுவாராக)

இங்ஙனம்,

சி. கணேசையர்,

புன்னாலைக்கட்டுவன்.

"தொல்காப்பியவாராய்ச்சி."

[உசுஅ-ம் பக்கத் தொடர்ச்சி.]

அவற்றுள்,

நிறுத்த சொல்லி னீறு கெழுத்தொடு
குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்
பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலுந்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலுந்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலு
மூன்றே திரிபிட னொன்றே யியல்பென
வாங்கந் நான்கே மொழிபுண ரியல்பே. (சு)

இது முன்னர்க்கூறிய நிறுத்தசொல்லுங் குறித்துவருகிளவியும் இன்னபகுதியினவென்றும், இவை புணருங்காலத்து இன்னவை நிகழப் பெறுமென்றும் உணர்த்துகின்றது.

(இ-ள்) அவ்விருவகைமொழிகடம்முள்ளே முதற்கண் நிறுத்தப் பட்டசொல்லினது ஈறுகுகின்ற எழுத்தோடு அதன்பொருண்மையை முடித்தலைக்குறித்துவருகின்றசொல்லினது முதலெழுத்துப்பொருந் தப் பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லைப் புணர்க்குமிடத்தும், பெயர்ச் சொல்லோடு வினைச்சொல்லைப் புணர்க்குமிடத்தும், வினைச்சொல்லோடு பெயர்ச்சொல்லைப் புணர்க்குமிடத்தும், வினைச்சொல்லோடு வினைச்சொல் லைப் புணர்க்குமிடத்தும் அச்சொற்கள் கூடும் இலக்கணம், திரியுமிட மூன்றும், இயல்பு ஒன்றும் என்ற அவ்விடத்திலுண்டாகிய அந்தநான்கு மே யாகும்.

திரிபிடன் மூன்றே, இயல்பு ஒன்றே, என நான்கு; ஆங்கு அந் நான்கு மொழிபுணர் இயல் என்பதுவே கருத்து.

விகாரம் வந்தவிடத்து இயல்பும், இயல்புவந்தவிடத்து விகாரமும் தோன்றப்பெறு என்பது போதர "ஆங்கு" என்று கூறினர். "மூன்று திரிபு என்னுது "திரிபிடன்" என்ற விசேடனே ஒரு புணர்ச்சிக்கண் ஒன்றேயன்றி இரண்டு மூன்றும் வரப்பெறும் என் றறிந்துகொள்க.

அவ்விரண்டனுண் முதற்கண் நிற்பதீ நிறுத்தசொல் என்பது போதர "அவற்றுள், நிறுத்த சொல்லி னீரு கெழுத்தொடு–குறித்து வருகிளவி முதலெழுத் திசைய" என்றார்.

அவ் விருசொற்களும் அங்ஙனம் புணர்தற்குக் காரணம் பெயரொடு பெயரையும், பெயரொடு தொழிலையும், தொழிலொடுபெயரையும், தொழி லொடுதொழிலையுங் கூட்டுதலே யென்க.

இரண்டுபொருளை வரிசையாகவைத்துச் சேர்க்கின் முதற்கண் ணுள்ளதின் ஈற்றுப்பாகமும் அதன் பக்கத்துள்ளதின் முதற்பாகமும் ஆகிய அவ்விரண்டுமே சேர்ந்தனவென்றும் அவ்விருபொருள்களும் தம் மூட் சேரவில்லையென்றும் கருதுதல் தருக்கமுறையும் வழக்காறும் ஆகாது. ஆதலின் அவ் விரண்டுபொருள்களும் தம்மூட் சேர்ந்தன வென்பது இலக்கணமாகும்.

இவ்வாறே நிறுத்தசொல்லின் ஈற்றின்கண்ணும், குறித்துவரு கிளவியின் முதற்கண்ணும் உள்ள எழுத்துக்களும் சேரப்பெறின் அவ் வெழுத்துக்களே ஒன்றுசேர்ந்தனவென்று எண்ணுதல் சாலாது. அவ் விருசொற்களும் தம்மூட்சேர்ந்தன வென்றெண்ணுதலே ஆசிரியர் கருத் தென்று கருதுக.

ஓரெழுத் தொருமொழிக்கு ஈறும் முதலும் அதுவேயென் றறிந்து கொள்க.

பெயரின் இன்றியமையாமைதோன்ற அது முற்கூறப்பட்டது. "பெயரொடுதொழிலைப் புணர்க்குங்காலும்" என்னும் இதற்குப்பின்னர்த் "தொழிலொடு தொழிலைப் புணர்க்குங்காலும்" என்னு மிதனையே கூறு வது தாம் எடுத்துக்கொண்ட மாலைக்கு இயல்புடைத்தாயிருக்கவும் அங் ஙனங் கூறுது "தொழிலொடு பெயரைப் புணர்க்குங்காலும்" என்னும் இதனையே கூறியதை உற்றுநோக்கின் மேற்கூறியவுண்மை செவ்விதிற் புல னாகும். அன்றியும், பெயரியல்கூறியபின்னர் வினையியல்கூறும் வைப் பும் இதனையே வலியுறுத்துமென்க.

இனிப் "புணர்க்குங்காலும்" என்று அடிதோறும் கூறியதுகுற்றம். "பெயரொடும் வினையொடும் பெயர்வினை தம்மைப்—புணர்க்குங்காலும்"

என்றுங்குரைத்தலே சுருங்கக்கூறலாகுமெனின்? ஒன்றனெடு ஒரேமுறையிற் பலவும் புணர்தலுங்கூடுமெனப் போதருதலினுலும், வரிசைப்படுத்தி மனசிற் பதியவும், படித்தவுடனே பாடமாகவும் யாக்கவேண்டியதுவே நூற்பாவின் இன்றியமையாவிலக்கணமாதலினுலும், மேற்கூறியாங்கு அமையப்பெறுதவற்றை எவரும் விரும்பிக் கற்கமாட்டாராதலினுலும், பிறவாறு கூறுவனவெல்லாம் நாளடைவில் இறந்துவிடும் ஆதலினுலும், அன்னபிறவற்றினும் அங்ஙனங் கூறுதது குற்றமாகாதென்றறிந்துகொள்க;

இந்நுணுக்கங்களை அறியமாட்டாத பிற்காலத்தார் "மெய்யுயிரிவற்றை முதலீறுபடைத்த–பெயர்வினை தம்மொடும் பிறவொடும் புணர்வழி–விகார மூன்றே டொன்றியல் பென்பவே" என்று ஆசிரியர் ஏழடியானும், ஒன்பதடியானும் இயற்றிய இரண்டுசூத்திரங்களையும் சுருக்கிக் கூறுவார்போன்று பாழாக்கி உலகினை நலியவைப்பர் என்க.

இனி, அவ்விருசொற்களும் விகாரவகையாற் புணருங்காலத்து அவற்றின் முதலீறுகள் சிதையப்பெறிற் புணர்ச்சியென்பது எவ்வாறுண்டாகுமெனின் ஆமாறு கூறுதும்.

இருபொருள்கள் தம்மூட்பொருந்துவதற்கு முரணுமேல் அம்முரணை அழித்தும், பொருந்துமாறு ஏனையவற்றைப் பெய்தும், பிறவாறுபுரிந்தும் அவற்றைப் பொருத்துதல் உலகவழக்கமன்றே? அங்ஙனமே விகாரவகைகளைப்புரிந்து அவ்விருசொற்களையுந் தம்மூட்பொருந்துமாறு செய்தலிற் பொருந்துமென்க.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'மூன்றுதிரிபு' என்னுது இடனென்றதனுல் ஒருபுணர்ச்சிக்கண் மூன்றும் ஒருங்கேயும்வரப்பெறுமென்றுணர்க எனறமை பாராட்டற்பாலது.

அவை முதலீறுகளின்வகையாலும் பெயர் வினை முதலாய சொல்வகையாலும் பதினைறாகும் என்க.

அவைதாம்,

மெய்பிறி தாதன் மிகுதல் குன்றலென்
றிவ்வென மொழிப திரிபு மாறே.

இது மூற்கூறிய மூன்று திரிபுகளையும் இவையென உணர்த்துகின்றது.

(இ-ள்) அத்திரிபுகடாம் நின்றமெய் வேறுபடுதல், மிகுதல், குன்றுதல் என்னும் இம்மூப்பிரிவினையுடையவென்று ஆசிரியர் கூறுவர்.

இனித் தோன்றல், திரிதல், கெடுதல் என்னுது இங்ஙனங் கூறியது என்னையோவெனிற் கூறுதும். உயிர்தோன்றுதல் யாண்டுமின்மையினும், கெடிற் பின்னர் விரித்தவிடத்து உண்டாவது கூடாது ஆதலினும் பிறவாற்றானும் அங்ஙனங் கூறுதல் சாலாது என்ப.

இவ்விகாரங்கள் அல்வழி, வேற்றுமைதம் புலப்பாடெருதியும், மெய்ம்மயங்குநிலையின் இயல்புபற்றியு முண்டாகுமென்ப. அவை முன்னர்க் கூறப்படும்.

"அவைதாம்" என்றது பன்மைக்ளவியாதலின் "மூன்றேதிரிபிடனென்றே பியல்பெனவாங்கந் நான்கே" எனப் பிரித்துரைத்தவற்றுள் "மூன்றேதிரிபிடன்" என்றதனையே குறிக்கும். "மூன்று", "ஒன்று" என்பனவற்றிற்கு ஏகாரங்கொடுத்ததூஉம், "ஆங்க" என்னுமிதனை நான்குக்குப் பெய்துரைத்தமையும் அவ்வுண்மையை நன்குபுலப்படுத்துவனவாகும்.

ஆதலின் "ஆங்க" என்னுமிதற்குப் பழமையைநாடிப் பொருள் கூறுதல் பொருந்தாதென்க. இங்ஙனமே பிற்காலத்தார் தத்தங்கோளை நிறுவுவான்வேண்டிப் பலப்பலவற்றையும் இடையிடையே செருகிவைத்திட்டார் என் றறிந்துகொள்க.

திரிபுகடாம் இவையென்று விதந்தோதினமையின் இவையல்லாதனவெல்லாம் இயல்பென்று அறியப்பெறுதலின் இயல்பு இதுவாகுமென்று சூத்திரித்தன் மிகைபடக்கூறுதல் என்னுங் குற்றத்திற் கிடனாகும்.

இன்னோரன்ன இயல்புகளையறியாத பிற்காலத்தார் இந்நூற்குச் சொற்பஞ்சுதல் என்னுங் குற்றத்தை யேற்றுவர். அவர்கூற்றெல்லாம் அறியாமைமேலீட்டாற்றோன்றியவென்று விடுக்க.

நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியு
மடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய. (அ)

இஃது இவ்விருசொற்களும் அடையடுத்துவருங்காலத்துப் புணருமியல்பு இதுவெனக் கூறுதலின் எய்தியதன்மேற் சிறப்புவிதியாயிற்று.

(இ-ள்) முன்னர் நிறுத்தப்பட்டசொல்லும், அதன் பொருண்மை யை முடித்தற்பொருட்டுக் குறித்துவருகின்றசொல்லும், தாமே வராது அடைபடைத்துவரினும் புணரும் நிலைமைக்குரியனவாகும்.

வேந்தன் விண்ணிடைப் பறந்தொளிரும் ஓர் அழகிய பறவையைக் கண்டான். என்னும் இவ்வாக்கியத்துள்ளே வேந்தன் என்பது நிறுத்த சொல். கண்டான் என்பது குறித்துவருகிளவி.

குறித்துவருகிளவியாகிய 'கண்டான்' என்பது பல அடைகளைக் கொண்டுள்ளதாயினும் அது புணர்நிலைக்குரியது. குறித்துவருகிளவி யின் அடைகளும் தம்மொடுதாமும் நிறுத்தசொல்லொடு அவை தாமும் அங்ஙனமே புணர்தற்குரியன. நிறுத்தசொல்லுக்கும் இவ்வாறே பெய் துரைத்துக்கொள்க.

இங்ஙனம் புணர்வது முறையோவென்னின் முறையே. எங்ஙனம் என்னிற்கூறுதும். ஓரரசன்முன் மற்றையோரரசன் வந்தகாலத்து அவ் வரசர் தமக்கு முன்னும் பின்னும் பலர் இருப்பினும் அவரெல்லாம் காணற்குரியராயினுற்போல் இவைதாமும் புணர்தற்குரியனவென்க.

இவற்றையெல்லாம் இடைப்பிறவரல் என்று பிற்காலத்தார் அடக்கு வர். அவர் இட்ட பெயர் பொருந்தாதென்றலையும் உய்த்துணர்ந்து கொள்க.

முன்னோர் உரைத்த உரைவிகற்பங்களெல்லாம் இக்கூறியவற்றுள் அடங்குமென்க. (தொடரும்)

இங்ஙனம்,

நவநீதகிருஷ்ணன்.

பெரியபுராணச்செய்யுட்டொகையாராய்ச்சி.

சென்ற ஆனிமாதப்பகுதியிலே (தொகுதி 20–பக். 331) அளவிலாத பெருமையாகிய சைவத்திருத்தொண்டர்களதுபெருமையைக் கூறும் திருத்தொண்டர்புராணமெனும் பெரியபுராணச்செய்யுட்டொகையை ஆராய்ச்சி செய்தவிடத்து V-வது பகுதியின்கீழ், போதபெருங்காதற்றிருவுள்ளப்பரிவுடனே செம்பொன்மலைவல்லியார்தரு வள்ளத்தமுதுண்ட சம்பந்தப்பெருமான் கருகாவூர் முதலிய கோத்திரங்களைத் தரிசனம்செய்துகொண்டு, திருவலஞ்சுழியடைந்து, மாதொர்கூறன் வலஞ்சுழிமருவிய மருந்தாம் கற்பகநாதனையும் பெரியநாயகியாரையும் பணிந்து,

"என்னபுண்ணியம்செய்தனெஞ்சமேயிருங்கடல்வையத்து
முன்னநீபுரிந்வினைப்பயனிடைமுழுமணித்தரளங்கண்
மன்னுகாவிரிசூழ்திருவலஞ்சுழிவாணனேவாபாப
பன்னியாதரித்தேத்தியும்பாடியும்வழிபடுமதனுலே"

என்று பரவிப் பாடினர். அங்ஙனம் பாடிய சண்பைவரும்பிள்ளையார் சடாமகுடர்வலஞ்சுழியை யெண்பெருகத் தொழுதேத்திப் பழையாறையையடைவதற்காக ஆறைமேற்றளிசென்றெய்தினர்; என்று கதைத் தொடர்புடமையையும், நடுவில்வருகின்ற வேனிலின்வருணனை இடைச்செருகல் என்பதையும் காட்டினேன்.

உதவிப்பத்திராதிபரவர்கள் 392-ம் செய்யுளால் இவ்வேனிற்கால வருணனை இடைச்செருகலன்றென்று தோன்றுகிறது. திருச்சத்திமுற்றத்திலிருந்து நாயனர் திருப்பட்டீச்சுரஞ்செல்லுங்கால் வேனிலால் உண்டாகிய வெப்பத்தைத்தணிக்கும்படி நாயனர்க்குப் பட்டீச்சரமுடையார் முத்துப்பந்தரளித்தனரென்று கூறியிருக்கின்றனரன்றே? முன்பு வேனிற்காலத்தைப்பற்றிக் கூறுவிட்டால் இங்கு வேனிலால்வரும்வெப்பத்தைத்தணிக்க முத்துப்பந்தரளித்தனரென்பது எங்ஙனம் பொருந்தும் என்று ஒரு வினாவை யெழுப்பியுள்ளார்கள். இவ்வாறு எழுப்பிய வினாவிற்குப் பெரிதும் கடப்பாடுடையேன். சண்பைவரும்பிள்ளையார் சடாமகுடர் வலஞ்சுழியைத் தொழுதேத்திப் பழையாறையெய்துதற்கு நண்

புடையவடியார்களுடன்போத நடந்தருளி விண்பொருசீண்மதிளாறை சென்றெய்தினரன்றே. பிள்ளையார்செய்தியைக்கூறிய சேவைகாவலர் வேனில் வெப்பமிகுதி யிருந்திருக்குமாயின் ஆறைமேற்றளியைவிட்டுத் திருச்சத்திமுற்றம் சென்றபோது கூறியிருக்கலாம். இவ்விரண்டு தலங்களையும் கடந்து திருப்பட்டீச்சரம்புகுந்தாற்றான் வெம்மைதரு வேனிலிடை வெயில்வெப்பந்தணிப்பதற்கு மும்மைசிலைத்தமிழ்விரகர்தமையழியாதபடி தண்டாளப்பந்தர் வந்ததென்றார். உதவிப்பத்திராதிபரவர்கள் 'வெம்மைதரு' 'வெப்பம்' என்ற அடைகளைச் சுட்டி இவ்வேனிற்கால வருணனை இயல்புக்கொருகலன்றென்றார் எனத் தோற்றுகிறது. அங்ஙனமாயினும் அவ்வேனிற்காலவருணனை முற்செய்யுளில் (391) மேவுங்கால் என்ற எச்சத்திற்குப் பின்னர் இருந்திருக்குமாயின், பொருத்தமுடைய தாகக்கூறல் தகும். அங்ஙனம் காணப்படவில்லை. முன் 382-வது செய்யுளில், பரவிப் பாடியவர் பின்னர் என்செய்தார் என்றவினை எழுவ தல்லது வேறவினை எழக் காரணமின்றும். அவ்வினைவிற்குத் தொழுதேத்திப்(389) பழையாறை எய்தி தற்கு நடந்தருளினர் என்று விடையிறுத்தற்கமையுமேனும் புறத்தினிலிருந்து வலஞ்சுழிப் பெருமான்றொண்டர்தம்முடன் மகிழ்ந்தார் என்று விடையிறுக்க வமையாது.

"மகிழ்ந்ததன்றிலைவாழுமங்ஙாளிடைவானிற்
றிகழ்ந்தளாயிறதுணைப்புணரோரையுட்சேர்ந்து
நிகழ்ந்தன்மையினிலவுமேழ்கடனீர்ழைகுன்ற
வெகுண்டுவெங்கதிர்பாப்பலின்முதிர்ந்ததுவேனில் (384)

என்று காணப்படுகிறது. துணைப்புணர் ஓரையாவது மிதுனம்; ஆனி மாதமென்ப. முதுவேனில் இவ்விதமிருந்ததென்று இப்பாட்டிற்கூறிய சேவைகாவலர் 'சுடர்வானில், வெயிலொடுங்கா வெம்மைதரும் வேனில் விரிதருநாளில்' என்பது கூறியது கூறலாகும் என்று சொல்ல அடியேன் அஞ்சுகிறேன். இரண்டாவதாக, ஆறைமேற்றளி, திருச்சத்திமுற்றம் என்ற இரண்டு ஊர்களிலும் சென்றபொழுது அவ்வெப்பம் தோன்றவில்லையர் என்ற வினை வெழும். பிள்ளையார் வெயில்வெப்பம் தீரவேண்டுமென்ன யாண்டும் விரும்பியதாகக் காணப்படவில்லை. அருள்வள்ளல் கருணையின்றிறன்காணும்படி 'உரையும்' மணிமுத்தின் பந்தரும் ஆகாசமெழுந்ததென்று காணப்படுகிறது. முன்னர், திருவதிர்

துறையில் முத்துச்சிவிகைகொடுக்குங்காற் பாலறுவாயர் தந் தந்தையார் தூக்கிச் செல்லத் தாம்செல்வது தகுதியன்றென்றெண்ணி முன்னடந் தாராக; 'தாதையரும் பரிவுறப் பாததாமரை நொந்தனபைப்ப' என்று காணப்படுவதன்றி அங்கிலத்தியல்பு கூறப்பட்டிலது. இதுபோன்றே நம்பியாரூரர் பேரூரினின்றும் திரும்பியபொழுது அங்ஙகன்று காருறும் மலைநாடு கடந்தருளிக் கற்சுரமும் நீரூறுங்காண்யாறும் நெடுங்கானும் பல கழியத் திருமுருகன்பூண்டியடைந்தார் என்று காணப்படுகிறது. அங்கும் நிலவருணனை யில்லை.

இனி, இமையவர்கோனடிக்கட் டிறம்பயில் ஞானசம்பந்தனும் பெரியார் திருநனுவைத் தரிசனம்செய்து செங்குன்றூரிடத்து வதியுகாளின் கண்,

.....

தூங்குதுளிமுகிற்சூல்கள்சுரந்தபெயலொழிகாலை
வீங்கொலிநீர்வைப்பெல்லாம்வெயில்பெறுவிருப்புவரப்
பாங்கர்வரையுங்குளிரும்பனிப்பருவமெய்தியதால் ரூ உஅ.

அளிக்குலங்கள்சுளிந்தகலவரவிந்தமுகம்புலரப்
பளிக்குமணிமாகதவல்லியிற்கோத்தபான்மையெனத்
துளித்தலைமெல்லறுகுபனிதொடுத்தசையச்சூழ்பனியாற்
குளிர்க்குடைந்துவெண்படாம்போர்த்தணையகுன்றுகளும் ரூ உக.

மொய்யொளிசூர்குளிர்வாடைமுழுதுலவும்பொழுதேயாய்க்
கொய்தளிர்மென்சோலைகளுங்குலந்தசையக்குளிர்க்கொதுங்கி
வெய்யவனுங்கரநிமிர்க்குநாட்டான்போல்வீசுமம்பினிடை-
யைதுவெயில்விரிப்பதுவுமடங்குவதுமாகுமால் ரூ ரு0.

நீடியவப்பதிகளெலாநிரைமாடத்திறைகடொறும்
பேடையுடன்பவளக்காற்புறவெடுங்கப்பித்திகையிற்
றோடலர்மென்குழன்மடவார்துணைக்கலசவெம்முலைபுள்
ஆடவர்தம்பணைத்தோளுமணிமார்புமடங்குவன ரூ ருக.

அரிசனமுங்குங்குமமுமரைத்தமைப்பாரயலெல்லாம்
பரியவகிற்குறைபிளந்துபுகைப்பார்கள்பங்கெல்லாம்,
எரியுமிழ்பேழ்வாய்த்தோணியிரும்பீர்ப்பாரிடையெல்லாம்
விரிமலர்மென்புறவணிந்தமீப்புலத்துவைப்பெல்லாம் ரூ ருஉ,

அந்நாளிற்கொடிமாடச்செங்குன்றூரமர்ந்திருந்த
மெஞ்ஞானப்பிள்ளையாருடன்மேவும்பரிசனங்கள்
பன்னுநமந்நாட்டிற்பயின்றதனுற்பனித்தகுளிர்
முன்னனிணிவந்துழுள்வதுபோன்முதுதலும் ரூரூரூ,

அந்நிலைமையாளுடையபிள்ளையார்க்கவர்களேலா
முன்னறிவித்திறைஞ்சுதலுமுதல்வனருடொழுதே
பிந்நிலத்தினியல்பெனினுமக்கெய்தப்பெறுவென்று
சென்னிமதியணிந்தாரைத்திருப்பதிகம்பாடுவார் கூருசு.

என்று காணப்படவில்லையா? பனிக்காலவியல்புகூறிய உத்தமசோழப் பல்லவர் முதுவேனிற்காலவியல்புகூறல் தகுதியன்றேவெனின், ஈண்டுப் பிள்ளையார் தம்பரிசனங்களின்வேண்டுகோள் ஏற்றுப் பாடினரென்பதையும், அக்காலத்தும் அவை நம்மை யெய்தப்பெறுவென்று சொல்லியிருத்தலையும் நோக்கல்வேண்டும். இன்னும் பாக்களின்போக்கும் காலவியல்புக் குத்தக்கவாறிருத்தலையும் ஊன்றிநோக்கல்வேண்டும்.

இதுவன்றி, மருதநிலத்தில் ஆனிமாதத்தில் ஆற்றுப்பெருக்குண் டாகையால் வேனில்வெப்பம். தெரிவதில்லையென்பதை மறுக்கவொண் ணாது இன்றும் கண்கூடாகக்காண்பதாரு செய்தியாம். இளவேனிற் பருவமுதிர வெப்பமும் அதிகரித்த லியல்பு. ஆற்றில் வெள்ளம்வரப் பூமி குளிர்ந்து வெப்பம்தணிவது இயற்கை.

அன்றி, முதுவேனிற்பருவம் கிரீஷ்மருதுவென்றுகொண்டு, "ஸஉளஉதாணஃாஜஉதாஂஸாவிஷ்டிதாஹவிஉஃாஜாஂயூஉதா வஸாயூஓ" என்றும், "தயாலிதவ்வஸவிதாஸுஉஹவிஷிதிஃாவஜஜீயஂகூஉஷிஸ்யஂஷயள" என்றும் காண்படவில்லையா எனின் அவை மலைநாட்டுச்செய்திகளாம். மலைநாட்டில் முதுவேனிற்பருவம் தாங்கமுடியாததாகவே இருக்கும். மலைகளிலும் பாறைகளிலும் படும் வெயில் திரும்பச் சமதரையிற்பட வெப்பம் அதிகரிக்கும். குளிர்ந்த பூமியில்விழும் வெப்பம் தெரிவதில்லை.

இவைகள் ஒருபுறமாக முதுவேனிற்பருவவருணனையைநோக்கின் வசந்தகாலவருணனையாகக் காணப்படுகிறதேயன்றி வேறுகக் காணப்பட வில்லை. சந்தனத்தேய்வைக் கொள்ளுவதும், வாசமென்மலர் அணிவ தும், பொதிபனிநீரில் மூழ்குவதும், நீண்மிலமாளிகைமேலும் நிலாமுன் றின்மேலும் சோலையிலும் மலர்வாவிக்கரைமாடும் பூங்குழலார்முலைத் தடத்தும் மகிழ்ச்சியின்மலர்ந்து மாந்தருறையுநா ளெங்ஙனோ! குயி லொடுங்காதுகூவுதல் வெள்ளம்வருமுன்னனன்றே? இவைகள் பூனறி நோக்கினும் இவை இடைச்செருகலென்றே தோன்றுகிறது. ஆயினும் பெரியார் ஏற்ற சமாதானம்சொல்லுவார்களாயின், சிற்றறிவினையுடையேன் மறுக்க முற்படுபவனல்லன். ஆராய்ச்சிசெய்தற்கென்றே மீண்டும் எழு தத் துணிந்தேன்.

இலக்கணவிளக்கபாடம்பரை,

திருவாரூர். சோமசுந்தரதேசிகன்.

ஸ்ரீ:

சிற்ரராய்ச்சி.

I. ஆசிரியர் இளம்பூரணவடிகள் தொல்காப்பிய உரைச்சிறப்புப்பாயிரம்.

தண்கட லசைவளி யுறுப்பத் திரைபிதிர்ந்
தூங்கலின் பொருட்குவைப் புணரியி லியுற
வலிவமன் மயரிகை யகற்ற லெழுத்தா
றிணைமுறை யுட்கோ ளியற்றிற னறியாக்
கவர்பொருண் மாக்கண் மயக்கிலுக் கிரங்கி
பாயிருங் காப்பியச் சுவைபல வுணர்ந்தகந்
தோய மடுத்தோர் தொல்காப் பியனுரை
முத்திற வோத்திலுக் கொத்தசிர்க் காண்டிகை
சொன்னிலை மேற்கோள் தொகுபொரு ணிரைபுட
னியலுறப் பாமுடி பிணைத்தடி காட்டி
நலிசடை கூட்டித் தந்தனன் பண்டே
கோங்குவேண் மாக்கதை குறிப்புரை கண்டோன்
தன்னறி யளவையி னல்லுரை தேவர்
பன்மணிக் குறட்பான் மதிப்பிடப் பொறித்தோன்
குணகடற் செல்வூர் மணக்குட புரியான்-
தண்புலி முகையென வெண்ணூல் சூடி
யந்தணன் முறவோ னருமறை யுணர்ந்த
விளம்போதி பயந்த புனித
னிளம்பூரணனுரை யினிதுவாழ் கென்கென.

[திருவருளால் தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கு உரையாசிரியர் உரைமுற்றிய ஏடு ஒன்று எனக்குச் சேந்தன்மங்கலத்திற் கிட்டிற்று. ஆதனை ஆராய்ந்து அச்சிற்கு இலக்காக்கிமுடிக்கச் சென்னை ஸ்ரீமான். கா. நமச்சிவாயமுதலியாரவர்கள் ஏற்று, வெளிப்படுத்திவருகிறார்கள். அவ்வேட்டின் தலைப்பிற் பொறிக்கப்பட்டிருக்கும் இச்சிறப்புப்பாயிரத்தினால் ஆராய்ச்சியாளர்பலர்க்கும், பல உட்கோள் புலனும் என எண்ணி விரைந்து செந்தமிழ்க்கு அனுப்பலாயிற்று. நூன்முழுதும் இவ்வாண்டிறுதியில் வெளிவரும்.]

II. திணைமொழிஐம்பது முதற்பாட்டடிகள்.

திருவருளாற் காணக்கிடைத்த "திணைமொழிஐம்பது" என்னும் நூல் கண்ணன்சேந்தனார் என்னும் புலவர் ஒருவரால் இயற்றப்பெற்றுக் கடைச்சங்கத்தினாற் பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நூல் ஸ்ரீமான். சோமசுந்தரதேசிகர் என்னும் பெருந்தகையாளர் ஒருவரால் அச்சிடப்பெற்றிருக்கின்றது என்று என் நண்பர் ஒருவர் பிரதி ஒன்று அனுப்பித்தருளினர். அதனை, சிலதிங்கட்குமுன் எனக்குக் கிடைத்த ஸ்ரீமான். சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் ஓலேபேட்டுப்பிரதியோடும், என். நெல்லையம்பலப்பிரதியோடும் ஒப்பிட்டுப்பார்த்ததில் எத்தனையோபிழைகள் புலனுயின. எனினும் சிரமப்பாராட்டாது முதன்முதல் வெளியிட்ட தேசிகரவர்களுக்குத் தமிழுலகம் நன்றி பாராட்டுமென்றல் ஒருதலை. நிற்க [இவ்விடம்பதிப்பாக எவரேனும் இந்நூலை வேளியிடவநவரேற் சுத்தநூல் உரை, பாடங்கள் தந்துதவலாகும்]

இந்நூலின் முதற்பாட்டு அச்சிட்டபுத்தகத்திலும் கிடைத்த ஓலேபேட்டுச்சுவடிகளிலும் காணப்படவில்லை. அதன், உபயோகமான நெல்லையம்பலத்து என்பிரதியிற் காணப்படுபவை-¶ ஏனலைக்காக்கின்றவருடையபாணி.....

.....ணடர்துகள் பொருகின்ற வானளவு முயர்ந்த வேற்படனே இரவின்கண்வருதல் வேண்டா யானைவருகின்ற சுரங்களாதலான்.

என்பது இவ்வுரையின் பிற்பகுதிக்குரிய அடிகளை நச்சினார்க்கினியர் தொல்காப்பியச்செய்யுளியல் சூசை-ம் சூத்திரவுரைபேற்கோளாக எடுத்துக்காட்டியிருக்கின்றனர். அவர் காட்டியிருக்குமாறு:—

"வானுயர்வேற்பவிரவின்வரல்வேண்டா
யானையுடையசுரம்"

இது கட்டளைவருக்கவெதுகை-என்பது.

ஆகவே இங்கிலையில் திணைமொழி ஐம்பதன், முதற்பாட்டின் பின்னிரண்டடிகள் இவையெனக் கருதலாகும்.

பெயர்விழையான்,
தச்சநல்லூர்.

¶ அச்சிடப்பட்டுள்ள பிரதியில் உரைவித்தியாசப்படுவனைநோக்கி ஒப்பிட்டுக்கொள்க.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1921-ஆவ ஆகஸ்டுமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1921 August			வரவு 1920 August			விவரம்	செலவு 1921 August			செலவு 1920 August		
I General Section:							I General Section:						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	90	...	...				(1) Establishment:— (a) மானேஜ்மெண்டு ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	131	...	...			
(2) பாங்கியில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டி வகையில்வரவு ...	4	8	9				(b) கலாசாலேஉபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	107	...	..			
(3) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு.	78	9	...				(c) கலாசாலே மாணவர்கட்குப் போஷணைக்காகச்செல் ...	124	...	6			
(4) Miscellaneous வரவு...		14	8				(d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	53	6	3			
மொத்தம் ...	174	...	5	4225	14	...	(2) Stationery, contingencies வாங்கியவகையிற்செல் ...	18	15	6			
							(3) பாண்டியன் புத்தக சாலேக்கு வாங்கியபுத்தகங்கட்குக் கிரயமும், பத்திரிகைக்குச்சந்தாவும் செல் ...	2	12	...			

II Editorial Section:						(4) தபால், தந்திவகையில் செலவு ...	29	2	3			
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவரவு	17	...	...			(5) சங்க நில்லரைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலிபைண்டிங் கூலிவகையிற் செல் ...	2	10	...			
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தாவரவு ...	16	2	...			மொத்தம் ...	468	14	6	1244	3	6
(3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	19	14	...			II Editorial Section:						
மொத்தம் ...	53	...	...	51	4	(1) பிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	35	...	...			
III Press Section:						(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கப்பதிப்புப்புத்தகங்கள் சம்பந்தமாக காகிதம் அச்சுக்கூலி வகையரா செலவு ...	128	12	...			
(a) Printing Office:						(3) தபால், தந்திவகையில் செலவு ...	10	13	9			
(1) சங்கம்அச்சாபீசில் நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	192	7	...			மொத்தம் ...	174	9	9	261	3	3

(2) வேலைகட்காகக் காசி தக்கிரயம் வரவு ...	40	1	...							
(3) Miscellaneous வரவு...	4	4	...							
(b) Binding Office:										
(1) சங்கம் பைண்டிங் ஆபீசில் கடக்க வேலைகளுக்குப் பைண்டிங்சார்ஜ் வரவு ...	53	...	...							
மொத்தம் ...	289	12	...	872	8	8				
III Press Section:										
(a) Printing Office:										
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...							137	12	6	
(2) Stationery Contingencies வகையிற் செலவு ...							48	6	11	
(3) Miscellaneous செலவு ...							1	8	...	
(b) Binding Office:										
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...							20	5	2	
(2) Stationery Contingencies வகையில் செலவு ...							17	1	1	
(3) Miscellaneous செலவு ...							...	12	...	
மொத்தம் ...							225	13	8	723 13 11

ஆகமொத்தம் வரவு ரூ ...	516	12	5	5140	10	8	ஆக மொத்தம் செலவு ரூ ...	869	5	11	2229	4	8
மாத ஆரம்பத்திலிருந்த ஐக்கியரூப்புத்தொகை ரூ ...	852	15	2	176	10	11	மாத முடிவுல் மீதி இருப்புத் தொகை ரூ ...	* 500	5	8	3097	...	11
ஆகமொத்தம் ரூ ...	1369	11	7	5326	5	7	ஆகமொத்தம் ரூ ...	1369	11	7	5326	5	7

*By C Pass Book 204—8—9
Cash on hand 295—12—11
500—5—8

Audited and found correct,
V. S. RAMASWAMI,
AUDITOR,
9—11—21.

LAKSHMINARAYANAN,
Manager,
MADURA TAMIL SANGAM.
5—9—21.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1921ஆம் செப்டம்பர்மாத வரவு செலவு கணக்கு

விவரம்	வரவு 1921 September			1920 September			விவரம்	செலவு 1921 September			1920 September		
I General Section:							I General Section:						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	1149	...	...				(1) Establishment:— (a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	128	12	8			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	101	3	6				(b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	107	...	...			
(3) சங்கத்தின் காரியதரிசி மகா-ன-ன-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸை யங்காரவர்களிடமிருந்து கட்டிய வரவு ...	100	...	...				(c) கலாசாலைமாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ...	137	11	10			
(4) Miscellaneous வரவு ...	1	...	...				(d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	65	...	...			
							(2) Stationery, contingencies வாங்கியவகையில் செல் ...	64	6	2			
							(3) பாண்டியன் புத்தக சாலைக்கு வாங்கிய புத்தகங்கட்குக் கிரயமும் பத்திரிகைக்குச்சந்தாவும்செல்	4	4	...			
மொத்தம் ரூ ...	1351	3	6	2073	7	...	(4) தபால்,தந்திவகையில் செல்	13	15	...			

II Editorial Section:							(5) முனிசிபாலிட்டிக்கு வரி வகையிற் செல் ...	62	7	5		
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிட மிருந்து சந்தா வரவு ...	14	10	...				(6) சங்கச் சில்லரை வேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலி வகையிற் செலவு ...	99	6	0		
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தா வரவு ...	16	12	...				(7) சங்கப்பரீக்ஷைகளிற்றேறிய மாணவர்கட்கு வெகுமதி அளித்த வகையிற் செல் ...	55	...	...		
(3) விளம்பரசார்ஜ் வரவு ...	4	...	...				(8) சங்க வருஷோத்ஸவ சம்பந்தமாகச்செல் ...	728	15	7		
(4) செந்தமிழ்ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு	9	5	...				(9) Miscellaneous செலவு ...	3	13	6		
மொத்தம் ரூ ...	44	11	...	41	6	...	மொத்தம் ரூ	1470	12	2	1035	1 10
III Press Section:							**II Editorial Section:**					
(a) Printing Office							(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	35	...	...		
(1) சங்கம் அச்சுயீல்கடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	147	2	...				(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கப்பதிப்புப் புத்தகங்கள் சம்பந்தமாக காகிதம், அச்சுக்கூலிவகையாக செல் ...	116	3	6		

(2) ஒப்பேலைகட்காகக் காசுதக் கிரயம் வரவு ...	19	...	...						
(b) Binding Office									
(1) சங்கம் பைண்டிங் ஆபீஸில் நடந்த வேலைகளுக்கு, பைண்டிங் சார்ஜ் வரவு ...	68	10	6						
(2) Miscellaneous வரவு ...		3							
மொத்தம் ரூ ...	234	15	6	270	8	...			
(3) தபால், தந்திவகையில் செல்	3	1	...						
மொத்தம் ரூ ...	154	4	6	185	9	2			
III Press Section:									
(a) Printing Office.									
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	179	12	6						
(2) Stationery Contingencies வகையிற் செலவு ...	39	10	6						
(b) Binding Office									
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	18	11	5						
(2) Stationery Contingencies வகையிற்செலவு ...	93	13	2						
மொத்தம் ரூ. ...	331	15	7	2131	7	4			

ஆகமொத்தம் வரவு ரூ. ...	1630	14	/	2385	5	...	ஆக மொத்தம் செலவு ரூ.	1957	...	3	3352	2	4
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத் தொகை ரூ. ...	500	5	8	3097	...	11	மாத முடிவில் மீதியிருப்புத் தொகை ...	* 174	3	5	2130	3	7
ஆகமொத்தம் ரூ. ...	2131	3	8	5482	5	11	ஆக மொத்தம் ரூ. ...	2131	3	8	5482	5	11

*By C. Pass Book 4—8—9
Cash on hand 169—10—8
174—3—5

Audited and found correct.

V. S. RAMASWAMI,
AUDITOR.
9—11—21.

LAKSHMINARAYANAN,
Manager.
MADURA TAMIL SANGAM.
4—10—21

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1921வது அக்டோபர்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1921 October			1920 October			விவரம்	செலவு 1921 October			1920 October		
I General Section:							I General Section:						
							(1) Establishment:—						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	126	1	...				(a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	131	...	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	141	8	9				(b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	107	...	...			
(3) கொத்தமங்கலம், மகா-ள-ள-ஸ்ரீ சி. தாம. மு. அண்ணுமலைசெட்டியாரவர்களிடமிருந்து கடனுக வரவு ...	350	...	...				(c) கலாசாலைமாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ...	175	6	4			
(4) Miscellaneous வரவு ...	9	8	...				(d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	65	...	...			
							(2) Stationery, contingencies வகையிற் செலவு ...	14	10	6			
							(3) சங்கக்கலாசாலை உபயோகத்திற்குவாங்கியபுத்தகங்கட்குக்கிரயமும் பத்திரிகைக்குச்சந்தாவும்செல்	41	15	...			
மொத்தம் ரூ ...	627	1	9	1122	14	...	(4) தபால், தந்திவகையில் செல்	15	8	...			

II Editorial Section:							(5) சங்கத்துச்சில்லரை வேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலி வகையிற் செலவு					
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு ...	16	...	...					9	...	...		
(2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தா வரவு ...	34	8	...				(6) சங்க வருஷோத்ஸவ சம்பந்தமாகச்செல் ...	5	...	...		
(3) செந்தமிழ்ப் பழையதொகுதிகள் விற்ற வகையில் வரவு	44	14	...				(7) கடன்வகைக்குச்செல் ...	10	4	...		
							(8) Miscellaneous செலவு ...	12	14	...		
மொத்தம் ரூ ...	95	6	...	46	5	...	மொத்தம் ரூ	537	9	10	1184	13 2
III Press Section:							II Editorial Section:					
(a) Printing Office							(1) பிப்பர்திகட்குச் சம்பளம் செல் ...	35	...	...		
(1) சங்கம் அச்சாபீஸில்நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	277	15	...				(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கப்பதிப்புப் புத்தகங்கள் சம்பந்தமாக காகிதம், அச்சுக்கூலிவகையாகச்செல் ...	129	3	9		

(2) ஆ வேலைகட்காகக் காசி						(3) தபால், தந்திவகையில் செல்	10	7	...		
தக் கிராயம் வரவு ...	37	13	...			மொத்தம் ரூ ...	174	10	9	223	9 7
(3) Miscellaneous வரவு ...		10	...			III Press Section:					
(b) Binding Office						(a) Printing Office.					
(1) சங்கம் பைண்டிங் ஆபீ						(1) அச்சுக்கட்டுச் சம்பளம்					
ஸில் நடந்த வேலைகளுக்						செல் ...	164	10	2		
கு, பைண்டிங் சார்ஜ்						(2) Stationery Contingen-					
வரவு ...	119	13	...			cies வகையிற் செலவு ...	61	12	3		
						(b) Binding Office					
மொத்தம் ரூ ...	436	3	...	243	13 ...	(1) அச்சுக்கட்டுச் சம்பளம் செல் ...	20	5	4		
						(2) Stationery Contingen-					
						cies வகையிற்செலவு ...	41	12	...		
						மொத்தம் ரூ. ...	288	7	9	502	2 3

ஆகமொத்தம் வரவு ரூ. ...	1158	10	9	1413	...	...	ஆக மொத்தம் செலவு ரூ.	1050	12	4	1910	9 ...
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத் தொகை ரூ. ...	174	3	5	2130	3	7	மாத முடிவில் கீழேயிருப்புத் தொகை ...	* 282	1	10	1632	10 7
ஆக்மொத்தம் ரூ. ...	1332	14	2	3543	3	7	ஆக மொத்தம் ரூ ...	1332	14	2	3543	3 7

*By C. Pass Book 4—8—9
Cash on hand 277—9—1

282—1—10

Audited and found correct.

V. S. RAMASWAMI,
AUDITOR.
9—11—21.

LAKSHMINARAYANAN,
Manager.
MADURA TAMIL SANGAM.
2—11—21

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1921-ஆம் நவம்பர்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1921 நவம்பர்			வரவு 1920 நவம்பர்			விவரம்	செலவு 1921 நவம்பர்			செலவு 1920 நவம்பர்		
I-General Section:							I General Section:						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	90	...	...				(1) Establishment:— (a) மானேஜ்மெண்டு ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	86	...	...			
(2) சங்கப்பரீக்ஷைகள் கட்டணத் தொகை வரவு ...	5	...	...				(b) கலாசாலஉபாத்தியாயர் கட்குச் சம்பளம் செல் ...	27	...	...			
(3) சங்கத்தில் அச்சிட்ட புத்தகங்கள் விற்ற வகையில் வரவு. ...	113	1	3				(2) Stationery, contingencies வகையிற்செல் ...	8	7	9			
(4) Miscellaneous வரவு...	2	15	7				(3) பாண்டியன்புத்தசாலை, கலாசாலை இவைகட்குப் புத்தகங்கள் வாங்கிய வகையிலும், பத்திரிகைக்குச் சந்தாச் செலுத்திய வகையிலும் செலவு. ...	38	5	9			
மொத்தம் ...	210	15	10	902	4	6							

II Editorial Section:						(4) சங்கக்கட்டிட மராமத்து வகையிற் செலவு ...	3	4	...
(1) சங்கத்தின் அங்கத்தினர் களிடமிருந்து சந்தாவரவு	11	...	...			(5) தபால், தந்திவகையிற் செலவு ...	16	12	6
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக் குச் சந்தாவரவு ...	20	2	...			(6) சங்கம் சில்லரைவேலைகள் சம்பந்தமாகஅச்சுக்கூலிபைண்டிங் கூலிவகையிற் செலவு ...	5	2	...
(3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	40	...	...			(7) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்த மாகச் செலவு ...	2	8	...
						(8) Miscellaneous செலவு ...	4	8	...
மொத்தம் ...	71	2	...	27	7 6	மொத்தம் ...	192	...	... 848 6 2
III Press Section:						II Editorial Section:			
(a) Printing Office:						(1) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கப்பதிப்புப்புத்தகங்கள் சம்பந்த மாகக் காகிதம் அச்சுக்கூலி வகை யிற் செலவு ...	175	9	...
(1) சங்கம்அச்சாபீசில் நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	191	14	...			(2) தபால், தந்திவகையிற் செலவு	10	...	...
						மொத்தம் ...	185	9	... 453 2 3

(2) ஷிவேலேகட்காகச் காஜி தக்கிரயம் வரவு	...	10	7	...					
(b) Binding Office:									
(1) சங்கம் பைண்டிங் ஆபீசில் நடந்த வேலைகளுக்குப் பைண்டிங்சார்ஜ் வரவு	...	77	...	...					
மொத்தம்	...	279	5	...	1006	15	...		

III Press Section:									
(a) Printing Office:									
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல்	...	167	9	10					
(2) Stationery Contingencies வகையிற் செலவு	...	30	11	6					
(b) Binding Office:									
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல்	...	30	10	10					
(2) Stationery Contingencies வகையிற் செலவு	...	50	11	10					
மொத்தம்	...	279	12	...	736	5	6		

ஆகமொத்தம் வரவு ரூ ...	561	6	10	1936	11	...	ஆக மொத்தம் செலவு ரூ ...	657	5	...	2037	13 11
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ ...	282	1	10	1632	10	7	மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ரூ ...	* 186	3	8	1531	7 8
ஆகமொத்தம் ரூ ...	843	8	8	3569	5	7	ஆகமொத்தம் ரூ ...	843	8	8	3569	5 7

*By C Pass Book 4—8—9
Cash on hand 181—10—11
186—3—8

Audited and found correct,

V. S. RAMASWAMI,

AUDITOR,

26—3—22.

LAKSHMINARAYANAN,

Manager,

MADURA TAMIL SANGAM.

2—12—21.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1921ஆம் டிசம்பர்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1921 டிசம்பர்			வரவு 1920 டிசம்பர்			விவரம்	செலவு 1921 டிசம்பர்			செலவு 1920 டிசம்பர்		
I General Section:							I General Section:						
							(1) Establishment:—						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	80	...	...				(a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	174	...	...			
(2) பாங்கியில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டி வகையில் வரவு ...	1625	5	2				(b) கலாசாலே உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	187	...	...			
(3) சங்கப்பரீக்ஷகர்கள் கட்டணத் தொகை வரவு ...	7	4	...				(c) கலாசாலேமாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ...	256	6	7			
(4) சங்கத்தில் அச்சிட்ட புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	82	14	6				(d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	122	10	8			
(5) கடன்வாங்கிய வகையில் வரவு	128	7	6				(2) Stationery, contingencies வகையிற் செலவு ...	2	15	2			
(6) Miscellaneous வரவு ...	...	8	9				(3) கலாசாலேக்குப் புத்தகங்கள் வாங்கிய வகையிலும் பத்திரிகைக்குச் சந்தாச் செலுத்திய வகையிலும் செலவு ...	7	4	...			
மொத்தம் ரூ ...	1924	7	11	958	1	6							

II Editorial Section:							(4) Furniture சிப்பேர்வகையிற் செலவு ...	40	...	...		
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு ...	46	...	...				(5) தபால், தந்திவகையிற் செல்	10	11	...		
(2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தா வரவு ...	12	...	...				(6) சங்கத்துச்சில்லரை வேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு	25	10	...		
(3) செந்தமிழ்ப் பழையதொகுதிகள் விற்ற வகையில் வரவு	16	2	6				(7) சங்கப்பரீக்ஷைகளிற்றேறிய மாணவர்கட்கு வெகுமதி அளித்த வகையிற் செலவு ...	230	13	...		
							(8) சங்கத்துக்கு வாங்கியிருந்த கடன்கள் தீர்த்த வகையிற் செலவு	461	12	...		
							(9) (a) அங்கீகரியாத உண்டியல் ஒன்றுக்கு அசலும் வட்டியும் திருப்பிக்கொடுத்தவகையிற்செல்.	128	7	6		
மொத்தம் ரூ ...	74	2	6	23	5	...	மொத்தம் ரூ	1647	9	11	664	10 4
III Press Section:							II Editorial Section:					
(a) Printing Office							(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	70	...	...		
(1) சங்கம் அச்சாபீசில்நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	292	1	...				(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கத்தில் அச்சிடும்புத்தகங்கள் சம்பந்தமாகக் காகிதம், அச்சுக்கூலி வகையிற் செலவு. ...	273	10	...		

(2) ஷே வேலைகட்காகக் காகி தக் கிரயம் வரவு ...	63	4	...						
(3) Miscellaneous வரவு ...	4	11	...						
(b) Binding Office									
(1) சங்கம் பைண்டிங் ஆபீ வில் கடந்த வேலைகளுக் குப் பைண்டிங் சார்ஜ் வரவு ...	92	7	...						
மொத்தம் ரூ ...	452	7	...	513	12	...			
(3) தபால், தந்திவகையில் செல்				14	...	...			
மொத்தம் ரூ ...				357	10	...	80	4	9
III Press Section:									
(a) Printing Office.									
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...				154	14	5			
(2) Stationery Contingencies வகையிற் செலவு ...				111	3	1			
(3) Miscellaneous செலவு ...				4	1	9			
(b) Binding Office									
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...				29	11	6			
(2) Stationery Contingencies வகையிற்செலவு ...				33	5	...			
மொத்தம் ரூ. ...				333	3	9	369	7	10

ஆகமொத்தம் வரவு ரூ. ...	2451	1	5	1495	2	6	ஆக மொத்தம் செலவு ரூ.	2338	7	8	1114	6	11
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ. ...	186	3	8	1531	7	8	மாத முடிவில் மீதியிருப்புத் தொகை ...	* 298	13	5	1912	3	3
ஆகமொத்தம் ரூ. ...	2637	5	1	3026	10	2	ஆக மொத்தம் ரூ ...	2637	5	1	3026	10	2

*By C. Pass Book 4—8—9
Cash on hand 294— 4—8

298—13—5

Audited and found correct.

V. S. RAMASWAMI,

AUDITOR.

26—3—22.

LAKSHMINARAYANAN,

Manager.

MADURA TAMIL SANGAM.

2—1—1922.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தி

1922-வது ஜனவரிமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1922 ஜனவரி	வரவு 1921 ஜனவரி	விவரம்	செலவு 1922 ஜனவரி	செலவு 1921 ஜனவரி
I General Section:			I General Section:		
(1) Donations, Contributions வகையில் வரவு ...	100		(1) Establishment:—		
(2) சங்கப்பரீக்ஷைக் கட்டணத்தொகை வரவு ...	108 10 ...		(a) மானேஜ்மெண்டு ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	121	
(3) சங்கத்தில் அச்சிட்ட புத்தகங்கள்விற்றவகையில் வரவு. ...	68 7 ...		(b) கலாசாலேஉபாத்தியாயர் கட்குச் சம்பளம் செல் ...	107	
(4) Miscellaneous வரவு...	4		(c) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல். ...	45	
மொத்தம் ...	281	449 11 1			

II. Editorial Section:						(2) Stationery, contingencies வகையிற்செல் ...	6	4	3	
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவரவு	115	...	...			(3) பாண்டியன்புத்தகாலேக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தாச் செலுத்தியவகையிற் செலவு ...	5	8	...	
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தாவரவு ...	196	14	...			(4) தபால், தந்திவகையிற் செலவு ...	16	9	...	
(3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	32	13	...			(5) சங்கம் சில்லறைவேலைகள் சம்பந்தமாகஅச்சுக்கூலிபைண்டிங் கூலிவகையிற் செலவு ...	10	...	...	
						(6) Miscellaneous செலவு ...	1	1	6	
மொத்தம் ...	344	11	...	27	9 ...	மொத்தம் ...	312	6	9	573 4 4
III Press Section:						II Editorial Section:				
(a) Printing Office:						(1) சிப்பந்திகட்குச்சம்பளம்செல்	35	...	...	
(1) சங்கம்அச்சாபீசில் நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	263	2	...			(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கப்பதிப்புப்புத்தகங்கள் சம்பந்தமாகக் காகிதம் அச்சுக்கூலி வகையிற் செலவு ...	64	14	...	
						(3) தபால், தந்திவகையிற்செலவு	32	4	...	
						மொத்தம் ...	132	2	...	146 3 3

(2) ஷிவேலைகட்காகக் காசு தச்சிரயம் வரவு ...	63	...	...			III Press Section:				
(3) Miscellaneous வரவு ..	...	15	...			(a) Printing Office:				
(b) Binding Office:						(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	159	9	11	
(1) சங்கம் பைண்டிங் ஆபீசில் சடந்த வேலைகளுக்குப் பைண்டிங்சார்ஜ் வரவு ...	36	2	...			(2) Stationery Contingencies வகையிற் செலவு ...	101	15	6	
						(3) Miscellaneous செலவு ...	...	5	...	
						(b) Binding Office:				
						(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	29	9	7	
						(2) Stationery Contingencies வகையிற் செலவு ...	68	12	3	
மொத்தம் ...	363	3	...	205	10	மொத்தம் ...	360	4	3	464 13 10

ஆகமொத்தம் வரவு ரூ ...	988	15	...	682	14	11	ஆக மொத்தம் செலவு ரூ ..	804	13	...	1184	5	5
மாத ஆரம்பத்திலிருந்த கையி ருப்புத்தொகை ரூ ...	298	13	5	1912	3	3	மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ரூ ...	* 482	15	5	1410	12	9
ஆகமொத்தம் ரூ ...	1287	13	5	2595	2	2	ஆகமொத்தம் ரூ ...	1287	12	5	2595	2	2

*By C Pass Book 4—8—9
Cash on hand 478—6—8
482—15—5

Audited and found correct,
V. S. RAMASWAMI,
AUDITOR,
26—3—22.

LAKSHMINARAYANAN,
Manager,
MADURA TAMIL SANGAM.
2—2—1922.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1922ஆ பிப்ரவரிமாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1922 பிப்ரவரி			வரவு 1921 பிப்ரவரி			விவரம்	செலவு 1922 பிப்ரவரி			செலவு 1921 பிப்ரவரி		
I General Section:							I General Section:						
							(1) Establishment:—						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	60	...	...				(a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	118	7	9			
(2) சங்கப்பரீக்ஷைக் கட்டணத் தொகை வரவு ...	26	...	...				(b) கலாசாலே உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	107	...	...			
(3) சங்கத்தில் அச்சிட்ட புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	93	11	8				(c) கலாசாலேமாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ...	62	6	9			
(4) Miscellaneous வரவு ...		4	...				(d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	65	...	...			
மொத்தம் ரூ ...	179	15	3	15417	9	11	(2) Stationery, contingencies வகையிற் செலவு ...	6	...	6			

II Editorial Section:							(3) பாண்டியன் புத்தகசாலைக்கு வரும்பத்திரிகைகுச் சந்தாவும், புத்தகத்திற்குக் கிரயமும் செல்லாக்கியது.	3	4	...		
(1) சங்கத்தின் தங்கத்தினின்றுவரிடமிருந்து சந்தா வரவு ...	103	14	...				(4) தபால், தந்திவகையிற் செல்	27	...	...		
(2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தா வரவு ...	250	10	...				(5) முனிஸிபாலிட்டிக்கு வரி செல்லாக்கியது ...	49	8	...		
(3) செந்தமிழ்ப் பழையதொகுதிகள் விற்ற வகையில் வரவு	16	...	9				(6) சங்கத்துச் சில்லறைவேலைகள சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு	66	12	...		
							(7) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு ...	80	13	3		
							(8) சங்கத்துக்கு வாங்கியிருந்த கடன் வகைக்குச் செல்லாக்கியது.	38	...	...		
மொத்தம் ரூ ...	370	8	9	461	3	...	மொத்தம் ரூ	624	4	3	15297	12 10
III Press Section:							II Editorial Section:					
(a) Printing Office							(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	35	...	...		
(1) சங்கம் அச்சாபீஸில்நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	179	5	...				(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கத்தில் அச்சிடும்புத்தகங்கள் சம்பந்தமாகக் காகிதம், அச்சுக்கூலி வகையிற் செலவு. ...	20	...	...		

(2) வேலைகட்காகக் காசுத் தொகையம் வரவு ...	114	12	...			(3) தபால், தந்திவகையிற் செல்வு	1	12	...			
(3) Miscellaneous வரவு ...	2	4	...			மொத்தம் ரூ ...	56	12	...	159	1	...
(b) Binding Office						III Press Section:						
						(a) Printing Office.						
(1) சங்கம் பைண்டிங் ஆபீஸில் நடந்த வேலைகளுக்குப் பைண்டிங் சார்ஜ் வரவு	115	5	...			(1) சிப்பந்திகட்குச் சம்பளம் தீசல் ...	175	3	3			
						(2) Stationery Contingencies வகையிற் செலவு ...	122	8	6			
						(b) Binding Office						
மொத்தம் ரூ ...	411	10	...	292	15	... (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	34	...	6			
						(2) Stationery Contingencies வகையிற்செலவு ...	14	4	3			
						மொத்தம் ரூ. ...	346	...	6	237	2	8

ஆகமொத்தம் வரவு ரூ. ...	962	2	...	16171	11	11	ஆக மொத்தம் செலவு ரூ.	1027	...	9	15694	...	6
மாத ஆரம்பத்திலிருந்த கையி ருப்புத்தொகை ரூ. ...	482	15	5	1410	12	9	மாதமுடிவில் மீதியிருப்புத் தொகை ...	* 418	...	8	1888	8	2
ஆகமொத்தம் ரூ. ...	1445	1	5	17582	8	8	ஆக மொத்தம் ரூ ...	1445	1	5	17582	8	8

*By C. Pass Book 4—8—9
Cash on hand 413—7—11

418—0—8

Audited and found correct.

V. S. RAMASWAMI,

AUDITOR.

26—3—22.

LAKSHMINARAYANAN,

Manager.

MADURA TAMIL SANGAM.

2—3—1922

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1922ஆம் மார்ச்சுமாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1922 மார்ச்சு			வரவு 1921 மார்ச்சு			விவரம்	செலவு 1922 மார்ச்சு			செலவு 1921 மார்ச்சு		
I General Section:							I General Section:						
							(1) Establishment:—						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	702	8	...				(a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	112	10	3			
(2) சுவத்தில் அச்சிட்ட புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	114	9	...				(b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	107	...	...			
(3) Miscellaneous வரவு ...	1	7	9				(c) கலாசாலைமாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ...	87	13	8			
							(d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	45	...	...			
மொத்தம் ரூ ...	818	8	9	2044	8	3	(2) Stationery, contingencies வகையிற் செலவு ...	13	7	6			

II Editorial Section:							(3) பாண்டியன் புத்தகசாலைக்கு வரும்பத்திரிகைக்குச் சந்தா செல்	2	12	...	
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிட மிருந்த சந்தா வரவு ...	21	...	...				(4) தபால், தந்திவகையிற் செல்	15	7	6	
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தா வரவு ...	20	10	...				(5) சங்கத்துச் சில்லறைசெலவு கள் சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு	77	8	...	
(3) செந்தமிழ்ப் பணமயதொகு திகள் பிற்ற வகையில் வரவு	33	11	...				(6 சங்கப்பரீக்ஷைகள் சம்பந்த மாகச் செலவு ...	65	8	..	
							(7) Miscellaneous செலவு ...	...	6	...	
மொத்தம் ரூ ..	75	5	..	238	8	...	மொத்தம் ரூ	527	8	11	1690 12 8
III Press Section:							II Editorial Section:				
(a) Printing Office							(1) பிப்பற்றிகட்குச் சம்பளம் செல் ...	35	...	...	
(1) சங்கம் அச்சாபீஸில்கடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	234	15	...				(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங் கத்தில் அச்சிடும்புத்தகங்கள் சம்பந் தமாகக் காகிதம், அச்சுக்கூலி வகை யிற் செலவு. ...	98	12	...	

(2) வேலைகட்காகக் காசுத் திரயம் வரவு ..	49	5	..				(3) தபால், தந்திவகையிற் செல்	20	13	6		
							மொத்தம் ரூ ...	154	9	6	96	6 9
(b) Binding Office							III Press Section:					
							(a) Printing Office.					
(1) சங்கம் பைண்டிங் ஆபீஸில் நடந்த வேலைகளுக்குப் பைண்டிங் சார்ஜ் வரவு ...	64	4	...				(1) அச்சுப்பிகட்குச் சம்பளம் செல் ...	148	11	11		
							(2) அச்சாபீஸ் உபயோகத்திற்கு Types வாங்கிய வகையிற் செலவு	150	15	..		
							(3) Stationery Contingencies வகையிற் செலவு ...	60	5	3		
(2) Miscellaneous வரவு	...	4	...				(b) Binding Office					
							(1) பிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	33	6	4		
							(2) Stationery Contingencies வகையிற்செலவு ...	50	...	3		
மொத்தம் ரூ ...	348	12	...	285	15	...	மொத்தம் ரூ. ...	443	6	9	1387	7 8

ஆகமொத்தம் வரவு ரூ. ...	1242	9	9	2568	15	3	ஆக மொத்தம் செலவு ரூ.	1125	9	2	3174	11	1
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ. ...	418	...	8	1888	8	2	மாதமுடிவில் மீதியிருப்புத் தொகை ...	* 535	1	3	1282	12	4
ஆகமொத்தம் ரூ. ...	1660	10	5	4457	7	5	ஆக மொத்தம் ரூ ...	1660	10	5	4457	7	5

*By C. Pass Book 4—8—9
Cash on hand 530—8—6

535—1—3

Audited and found correct.

V. S. RAMASWAMI,
AUDITOR.
24—6—22.

LAKSHMINARAYANAN,
Manager.
MADURA TAMIL SANGAM.
2—4—1922

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1922-ஆ ஏப்பிரல்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1922 ஏப்பிரல்			வரவு 1921 ஏப்பிரல்.			விவரம்	செலவு 1922 ஏப்பிரல்			செலவு 1921 ஏப்பிரல்		
I General Section:							I General Section:						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	115	...	...				(1) Establishment:—						
(2) சங்கத்தின் சாசுவத அங்கத்தினரிடமிருந்து சந்தா வரவு...	100	...	...				(a) மானேஜ்மெண்ட் ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ..	131	7	5			
(3) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டி வகையில் வரவு ...	68	4	...				(b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ..	107	...	...			
(4) சங்கத்தில் அச்சிட்ட புத்தகங்கள் விற்றவகையில் வரவு. ...	155	4	...				(c) கலாசாலை மாணவர்கட்குப்போஷணைக்காகச்செல் ...	109	12	6			
							(d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல். ...	45	...	...			

(5) (a) பாங்கில் வட்டிக்குப் போடப்பட்டுள்ள மூலதனத் தொகை withdraw செய்தது வரவு 1050—0—0						(2) Stationery, contingencies வகையிற்செல்	13	8			
(b) Miscellaneous வரவு ... 2—3—3						(3) பாண்டியன்புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைகளுக்கு சந்தாச் செலுத்தியவகையிற் செலவு	2	12	...		
ஆகூ 1052—3—3	1052	3	3			(4) தபால், தந்திவகையிற் செல்	14	8	...		
						(5) முனிசிபாலிடிக்கு வரி செலாக்கியது ..	4	15	9		
மொத்தம் ...	1490	11	3	130	1 ...	(6) சங்கம் சில்லறைவேலைகளுக்கு சம்பந்தமாகஅச்சுக்கூலிபைண்டிங கூலிவகையிற் செலவு ..	11	4	..		
II Editorial Section:						(7) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு ..	1	12	...		
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவரவு	1	...	...			(8) பாங்கில் withdraw செய்த மூலதனத்தொகையை மறுபடியும் deposit செய்தது ..	1050	..	...		
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தாவரவு ...	20	6	..			மொத்தம் ...	1491	15	11	441	12 10
(3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	42	14	...			II Editorial Section:					
மொத்தம் ...	74	4	...	33	12 ...	(1) சிப்பந்திகட்குச்சம்பளம்செல்	35	...	...		
III Press Section:						(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கப்பதிப்புப்புத்தகங்கள் சம்பந்தமாகக் காகிதம் அச்சுக்கூலி வகையிற் செலவு ...	111	10	...		
(a) Printing Office:						(3 தபால், தந்திவகையிற்செலவு	1	4	...		
(1) சங்கம்அச்சாபீஸில் நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	285	9	9			மொத்தம் ..	147	14	..	83	4 9

(2) ஒழிவேலைகட்காகக் காதி தக்ரயம் வரவு ...	30	12	...			
(3) Miscellaneous வரவு		12	...			
(b) Binding Office:						
(1) சங்கம் பைண்டிங் பீசில் நடக்த வேலைகளுக்குப் பைண்டிங்சார்ஜ் வரவு ...	73	12	...			
(2) Miscellaneous வரவு...	...	4	...			
மொத்தம்	391	1	9	406	5	6

III. Press Section:						
(a) Printing Office:						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	162	...	...			
(2) Stationery Contingencies வகையிற் செலவு ...	85	4	10			
(3) அச்சாபீசுத் தொழில்வரி செல்லாக்கியது ...	9	...	...			
(b) Binding Office:						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	29	6	3			
(2) Stationery Contingencies வகையிற் செலவு ...	35	13	...			
மொத்தம் ...	321	8	1	487	14	7

ஆகமொத்தம் வரவு ரூ ...	1956	1	..	570	2	6	ஆக மொத்தம் செலவு ரூ ...	1961	6	..	1013	.. 2
மாத ஆரம்பத்திலிருந்த கையி							மாத முடிவில் மீதி இருப்புத்					
ருப்புத்தொகை ரூ ...	535	1	3	1282	12	4	தொகை ரூ ...	* 529	12	3	839	14 8
ஆகமொத்தம் ரூ ...	2491	2	3	1852	14	10	ஆகமொத்தம் ரூ ...	2491	2	3	1852	14 10

*By C Pass Book 4—8—9
Cash on hand 525—3—6
529—12—3

Audited and found correct,
V. S. RAMASWAMI,
AUDITOR,
24—6—22.

LAKSHMINARAYANAN,
Manager,
MADURA TAMIL SANGAM.
2—5—1922.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1922-ம்வரு மேமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1922 மே			வரவு 1921 மே			விவரம்	செலவு 1922 மே			செலவு 1921 மே		
I General Section:							I General Section:						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	95	...	...				(1) Establishment:—						
(2) பாங்கில் போடப்பட்ட நிலை தொகைக்கு வட்டி வகையில் வரவு ...	1	2	10				(a) மானேஜ்மெண்டு ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	131	...	...			
(3) சங்கத்தில் அச்சிட்ட புத்தகங்கள்விற்றவகையில் வரவு. ...	69	13	...				(b) கலாசாலேஉபாத்தியாயர் கட்குச் சம்பளம் செல் ...	107	...	...			
(4) Miscellaneous வரவு ..	...	9	...				(c) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல். ...	45	...	...			
மொத்தம் ...	166	8	10	139	11	...							

II Editorial Section:										
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவரவு	7	...	...							
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தாவரவு ...	17	...	...							
(3) விளம்பரி சார்ஜ் வரவு...	1	7	6							
(4) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	5	13	...							
மொத்தம் ...	31	4	6	103	1	...				
III Press Section:										
(a) Printing Office:										
(1) சங்கம் அச்சாபீஸில் நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	191	5	...							

(2) Stationery, contingencies வகையிற்செல் ...		3	...	2						
(3) புத்தகங்கள் வாங்கிய வகையிலும், பத்திரிகைக்குச் சந்தா செலுத்திய வகையிலும் செலவு ...		4	2	...						
(4) தபால், தந்திவகையிற்செல்		16	9	...						
(5) சங்கம் சில்லறைவேலைகள் சம்பந்தமாகஅச்சுக்கூலிபைண்டிங் கூலிவகையிற் செலவு ...		21	12	...						
(6) Miscellaneous செலவு ...		...	5	...						
மொத்தம் ...		328	12	2	553	12	3			
II Editorial Section:										
(1) அச்சுப்பந்திகட்குச்சம்பளம்செல்		35	...	...						
(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கப்பதிப்புப்புத்தகங்கள் சம்பந்தமாகக் காகிதம் அச்சுக்கூலி வகையிற் செலவு ...		49	1	...						
(3) தபால், தந்திவகையிற்செலவு		10	...	...						
மொத்தம் ...		94	1	...	162	10	6			

(2) வேலைகட்காசக் காவி தக்கிரயம் வரவு ...	10	10	...						
(b) Binding Office:									
(1) சங்கம் பைண்டிங் ஆபீசில் கடந்த வேலைகளுக்குப் பைண்டிங்சார்ஜ் வரவு ...	93	...	...						
மொத்தம் ...	294	15	...	366	7	...			
III Press Section:									
(a) Printing Office:									
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...							172	14	5
(2) மெஷீன் வகையறா ரிப்பேர் வகையிற் செலவு ...							21	...	...
(3) Stationery Contingencies வகையிற் செலவு ...							33	10	1
(b) Binding Office:									
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...							32	3	4
(2) Stationery Contingencies வகையிற் செலவு ...							57	2	3
மொத்தம் ...							316	14	1
								366	12 ...

ஆகமொத்தம் வரவு ரூ ...	492	12	4	609	3	...	ஆக மொத்தம் செலவு ரூ ...	739	11	3	1083	2	9
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ ...	529	12	3	839	14	8	மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ரூ ...	* 282	13	4	365	14	11
ஆகமொத்தம் ரூ ...	1022	8	7	1449	1	8	ஆகமொத்தம் ரூ ...	1022	8	7	1449	1	8

*By C Pass Book 15—0—0
Cash on hand 267—13—4

282—13—4

Audited and found correct,

V. S. RAMASWAMI,

AUDITOR,

24—6—22.

LAKSHMINARAYANAN,

Manager,

MADURA TAMIL SANGAM.

2—6—1922.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1922-ம்வரு ஜூன்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1922 ஜூன்			வரவு 1921 ஜூன்			விவரம்	செலவு 1922 ஜூன்			செலவு 1921 ஜூன்		
I General Section:							I General Section:						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	85						(1) Establishment:— (a) மானேஜ்மெண்டாபீஸ் செப்பத்திகட்குச்சம்பளம் செல் ...	129	12	11			
(2) சங்கத்தில் அச்சிட்டபுத்தகங் கள் விற்றவகையில் வரவு ...	107	3					(b) கலாசாலைமாணவர்கட் குப் போஷணைக்காகச் செல் ...	8	6	2			
							(2) Stationery, contingencies வகையிற் செலவு ...	8	4	4			
மொத்தம் ரூ ...	192	3		51447	6	9							

II Editorial Section:							(3) புத்தகங்கள் வாங்கிய வகையிலும், பத்திரிகைக்குச் சந்தா செலுத்திய வகையிலும் செலவு ...	18	12	...		
(1) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தா வரவு ...	24	10	...				(4) தபால், தந்திவகையிற் செல்	9	10	...		
(2) செந்தமிழ்ப் பணியதொகுதிகள் விற்ற வகையில் வரவு	10	2	...				(5) சங்கத்துச் சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு	53	...	...		
மொத்தம் ரூ ...	34	12	...	107	5	...	மொத்தம் ரூ	227	13	5	50520	8	6
III Press Section:							II Editorial Section;					
(a) Printing Office							(1) சிப்பிரிகட்குச் சம்பளம் செல் ...	35	...	...		
(1) சங்கம் அச்சாபீஸில்நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	176	8	...				(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கத்தில் அச்சிடும்புத்தகங்கள் சம்பந்தமாகக் காகிதம், அச்சுக்கூலி வகையிற் செலவு. ...	41	4	...		

(2) வே வேலைகட்காகக் காசுத் தக் கிரயம் வரவு ...		14	9	...					
(b) Binding Office									
(1) சங்கம் பைண்டிங் ஆபீஸில் நடந்த வேலைகளுக்குப் பைண்டிங் சார்ஜ் வரவு ...		112	6	...					
(2) Miscellaneous வரவு ...		...	4	...					
மொத்தம் ரூ ...	303	11	...	298	...	...			
(3) தபால், தந்திவகையிற் செல்		10	12	...					
மொத்தம் ரூ ...		87	...	...	299	5	...		
III Press Section:									
(a) Printing Office.									
(1) அச்சுக்கட்குச் சம்பளம் செல் ...		147	15	2					
(2) அச்சாபீஸ் உபயோகத்திற்கு Types வகையரா அச்சுவேலைகட்குரிய சாமான்கள் வாங்கிய வகையிற் செலவு ...		17	4	...					
(3) மெஷீன் வகையரா ரிப்பேர் வகையிற் செலவு ...		11	...	...					
(4) Stationery Contingencies வகையிற் செலவு ...		50	12	3					
(b) Binding Office									
(1) அச்சுக்கட்குச் சம்பளம் செல் ...		29	7	7					
(2) Stationery Contingencies வகையிற்செலவு ...		50	3	9					
மொத்தம் ரூ. ...		306	10	9	317	8	...		

ஆகமொத்தம் வரவு ரூ. ...	530	10		51852	11	9	ஆக மொத்தம் செலவு ரூ.	621	8	2	51137	5	6
1917 ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ. ...	282	13	4	365	14	11	மாதமுடிவில் மீதியிருப்புத் தொகை ...	191	15	2	1081	5	2
ஆகமொத்தம் ரூ. ...	813	7	4	52218	10	8	ஆக மொத்தம் ரூ ...	813	7	4	52218	10	8

Audited and found correct.

V. S. RAMASWAMI,

AUDITOR.

7—7—22.

LAKSHMINARAYANAN,

Manager.

MADURA TAMIL SANGAM.

2—7—1922.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1922-ம்வரு ஜூலைமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1922 ஜூலை			1921 ஜூலை			விவரம்	செலவு 1922 ஜூலை			1921 ஜூலை		
I General Section:							I General Section:						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	100	...	...				(1) Establishment:—						
(2) பாங்கில் போடப்பட்டின்ன தொகைக்கு வட்டி வகையில் வரவு ...	1969	2	6				— (a) மானேஜ்மெண்ட் ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	130	9	7			
(3) சங்கத்தில் அச்சிட்டபுத்தகங்கள்விற்றவகையில் வரவு. ...	210	11	6				(b) கலாசாலேஉபாத்திரியர்கட்குச் சம்பளம் செல் ...	214	...	...			
(4) (a) பாங்கில் வட்டிக்குப் போடப்பட்டின்ன மூலதனத் தொகை withdraw செய்தது							(c) கலாசாலே மாணவர்கட்குப்போவஷணக்காகச்செல் ...	58	7	8			
							(d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல். ...	90	...	...			

வரவு ரூ. 50011-5-0						(2) Stationery, contingencies வகையிற்செல் ...		11	...	2	
(b) Miscellaneous வரவு ... 6—7—0											
ஆக ரூ. 50017-12-0	50017	12	...			(3) புத்தகங்கள் வாங்கிய வகையிலும், பத்திரிகைக்குச் சந்தா செலுத்திய வகையிலும் செலவு ...		39	8	6	
மொத்தம் ...	52297	10	...	170	10	6	(4) சங்கக்கட்டடத்தின் முன் பக்கம் காம்பவுண்டுகேட்டுக்குக் கதவுகள் செய்துபோட்ட வகையில் செலவு ...		29	10	3	
II Editorial Section:											
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவரவு	10	8	...			(5) தபால்-தந்திவகையிற் செல்		19	9	...	
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தாவரவு ...	22	4	...			(6) சங்கம் சில்லறைவேலைகள் சம்பந்தமாகஅச்சுக்கூலிபைண்டிங் கூலிவகையிற் செலவு ...		46	12	...	
(3) விளம்பர சார்ஜ் வரவு...	4	...	...								
(4) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	8	1	...			(7) (a) பாங்கில் withdraw செய்த மூலதனத்தொகையை மறுபடியும் deposit செய்தது ரூ. 50011-5-0					
மொத்தம் ...	44	13	...	61	6	...	(b) Miscellaneous செலவு ரூ. 6-0-0				
III Press Section:							ஆக ரூ. 50017-5-0	50017	5	...	
(a) Printing Office:							மொத்தம் ...	50656	14	2	401 1 11
(1) சங்கம்அச்சாபீசில் கடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	472	4	...								

(2) வேலைக்காகக் காகி தக்கிரயம் வரவு	...	59	11	6						
(3) Miscellaneous வரவு ..	...		8	...						
(b) Binding Office:										
(1) சங்கம் பைண்டிங் ஆபீசில் நடக்த வேலைகளுக்குப் பைண்டிங்சார்ஜ் வரவு	...	135	9	...						
மொத்தம்	...	668	...	6	259	9	...			

II Editorial Section:										
(1) சிப்பந்திகட்குச்சம்பளம்செல்					35	...	...			
(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கப்பதிப்புப்புத்தகங்கள் சம்பந்தமாகக் காகிதம் அச்சுக்கூலி வகையிற் செலவு	...				47	4	...			
(3) தபால், தந்திவகையிற்செலவு					11	12	...			
மொத்தம்	...				94	...	...	79	5	6
III Press Section:										
(a) Printing Office:										
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல்	...				160	13	8			
(2) Stationery Contingencies வகையிற் செலவு	...				42	9	9			
(b) Binding Office:										
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல்	...				30	5	4			

						(2) Stationery Contingencies வகையிற் செலவு	...	58	5	6	
						மொத்தம்	...	292	2	3	239 8 1
ஆகமொத்தம் வரவு ரூ	...	53010	7	6	491 9 6	ஆக மொத்தம் செலவு ரூ	...	51013	...	5	719 15 6
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ	...	191	15	2	1081 5 2	மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ரூ	...	* 2159	6	3	852 15 2
ஆகமொத்தம் ரூ	...	53202	6	8	1572 14 8	ஆகமொத்தம் ரூ	...	53202	6	8	1572 14 8

*By C Pass Book 1400—0—0
Cash on hand 759—6—3
2159—6—3

Audited and found correct,
V. S. RAMASWAMI,
AUDITOR,
24—8—22.

LAKSHMINARAYANAN,
Manager,
MADURA TAMIL SANGAM.
18—8—1922.

T.1142